

நோத் முதல்
கோபல்லவா வரை

இலங்கையின் அண்மைக் கால
(1798–1962)
அரசியல் வரலாறு

முதலாம் பாகம்
(1798 – 1947)

ஆக்கியோன் :

க. சி. குலரத்தினம்

வெளியிடுவோர் :

ஆசீர்வாதம் அச்சகம் - புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

1966.

From North To Gopallawa

Volume One

First Edition 1966.

All Rights Reserved by the Author.

ASIRVATHAM PRESS
32, Kandy Road,
Jaffna.

விலை ரூபா: 8-50

முதலாம் பாகம்

From Nhrd Ilm Gopallawa
Volume One
First Edition 1966

ப்சாப ப்ரஜுப

All Rights Reserved by the Author

ASIRVATHAM PRESS
[illegible] Kandy Road
Jaffna

[illegible] $ 50

From NORTH To GOPALLAWA

The History of Political Science Of The Island of Ceylon From 1798 to 1962

VOLUME ONE
1798—1947

By

C. S. Kularatnam

Publishers :

Asirvatham Press & Book Depot
Jaffna.

1966

சமர்ப்பணம்

என்னை வளர்த்துக் கல்வி கற்பித்து ஆளாக்கிய
என்னருமைத் தமையனும்

இலங்கை அளவையாளர் திணைக்களத்தில்
படவரைவாளராய் இருந்தவருமாகிய

காலஞ்சென்ற
திரு. க. சி. குலசேகரம் அவர்கள்
நினைவுக்கு:



அண்ணல் க. சி. குலசேகரம் அவர்கள்

27-10-1898—16-5-1957



அணிந்துரை

கலாநிதி அ. ஜெயரத்தினம் வில்சன்
B. A. (Hons.) Ph. D
அரசியல் விரிவுரையாளர்.
இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

1796 இல் பிரித்தானிய படைப்பற்றுட்சியுடனேயே உண்மையில் ஆரம்பமாகும் இலங்கையின் இக்கால வரலாற்றை எழுதுவோர், தம்முன்னுள்ள பணி இலகுவானதொன்றென்று எண்ணவொண்ணாது. அஃது, ஆட்சிமுறை (பரிபாலன) நடவடிக்கைகளின் அல்லது தனித்தனித் தேசாதிபதிகளின் சாதனைகளின் தொகுதி அன்று; அது, பொருளாதார முன்னேற்றம், கல்வி அபிவிருத்தி, சமுதாய வளர்ச்சி, அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஆகிய எல்லாவற்றினதும் சுருக்கமாகும். சுருங்கக்கூறின், இக்கால இலங்கை வரலாறு, நிதைவுற்றுக் கொண்டிருந்த சமுதாய அரசியல் அமைப்பு, இலங்கை ஒரேநீவு என்ற கருத்தினடிப்படையில் ஆக்கப்பட்ட ஒன்றரை நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியில் விளைந்த பிண்டமாகிய தேசிய ஒருமைப்பாடாக வலுப்படுத்தப்பட்ட கதையேயாகும். பிரித்தானியரின் வரலாற்றேட்டில் (அ) ஒருங்கிணைக்கப்பட்ட தனி ஆட்சி முறை அமைப்பில், கண்டி மாநிலங்களை இணைத்த கோல்புறூக்-கமறூன்விசாரணைக் குழுவின் முடிவுகளின் பின்னர் செயலாக்கப்பட்ட பரிபாலன ஒருமைப்பாடும், (ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அதுவரை நாட்டின் ஏனைய பகுதிகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த போக்குவரத்து வசதிகள் இல்லாமலிருந்த வடமாநில நகரங்களுக்கு உளதாய இருப்புப்பாதை இணைப்பும், அற்ப சாதனைகள் எனக் கருதப்படமாட்டா. இருப்புப் பாதைகள், ஏனைய இணைப்பு வழிகள், புதிதாயுள்ள இயற்கை வள வாய்ப்புத் தொகுதிகளைப் பொருளாதார சுபீட்சத்துக்குப் பயன்படுத்துதல், பரிபாலனச் சீர்திருத்தம் முதலிய அனைத்தும் சமுதாயக் கூட்டுவாழ்வையும் அரசியல் ஒருமைப்பாட்டையும் மேலும் உயர்த்தத் தூண்டியும் சமன்படுத்தியும் பணிபுரிந்தன. துல்லியமாக, இலங்கை வாழ் நற்குடி மக்களுக்கும் கற்றறிந்தோருக்கும் பிரித்தானிய ஆட்சி செய்தது இதுவேயாகும். பிரித்தானிய வரலாற்றேட்டில் கரிய கறைகளும் இல்லாமலில்லை; ஆயினும் பிரித்தானிய ஆளுகையின் விளைவினால் மறைமுகமாக உண்டாகிய இந்நலன்கள் பிறர் நலன் கருதிய நோக்கங்களால் உண்டாக்கப்பட்டன என்று, பிழையான கருத்துக் கொண்டுள்ள கட்சிக்காரன் கூடக் கூறமாட்டான்.

திரு. க. சி. குலரத்தினம் ஈட்டியுள்ள இழையும்பிசகாத வெற்றியும் இதுவே. அறிவொளி வீசும் இவ்வாராய்ச்சி ஏட்டிதழ் களிலே உண்மை நிகழ்ச்சிகளை அவற்றின் சரியான தோற்றங்களிலே வெளிப்படுத்த முனைந்துள்ளார். இத்துறையில், ஏனைய வரலாற்று சிரியர்களும் எழுத்தாளர்களும் சஞ்சரித்துப் பழகிப்போன வழிகளிலே தாமும் செல்ல இவ்வாசிரியர் விழையாதது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர் தமது ஆராய்ச்சி நூலை, ஒவ்வொன்றும், தற் கால இலங்கையின் வளர்ச்சியோடும் முன்னேற்றத்தோடும் நேரடித் தொடர்புகொண்டுள்ள வரையறைவான பல தலைப்புக்களில் தம் ஆய்வு முடிவுகளை வகுத்துள்ளார். இவையனைத்தும் ஒருமித்து, இத் தீவின் 1796 தொடக்கம் 1947 வரையுமுள்ள, வரலாற்றைப்பற்றிய ஒரு நடுநிலை தவறுததும் நுண்ணுய்வுடையதுமான சுற்றுய்வாக அமைந் துள்ளன. இந்நாட்டின் அரசியற் சீர்திருத்த இயக்கத்திற் பெருந் தொண்டாற்றித் திகழ்ந்த மிகச் சிறந்த பெரியார்களைப் பற்றித் திரு. குலரத்தினம் தந்துள்ள அதிகாரங்கள் மிக விளக்கமாக அமைந் துள்ளன; அவை இதுவரை ஒருகாலமும் அதிக விபரமாக வெளியிடப் படவில்லை; டொனமூர்க் காலத்திய முன்னேற்றப் பதிவுக் குறிப்புப் பற்றிய அன்னரது அதிகாரங்கள், இத்தீவு தேசிய நிலையை நோக்கி வளர்ந்து வந்த தொடக்க காலத்தில் எம் அரசியல் தலைவர்கள் ஈட்டிய வெற்றிகளை முதன் முறையாக மாணவருக்கு அறிவுறுத்து கின்றன.

இந்நூல் தமிழ்வழி மாணவர்களுக்குப் பெரிதும் பயனுடைய தாக இருக்கப் போகின்றது. எளிய இனிய செவ்விய நடையில் எழுதப்பட்ட இவ்வாய்வுநூல், ஆதி தொடக்கம் அந்தம் வரை வாசிப்போரின் அவதானத்தைப் பற்றிக்கொள்ளும். இந்நூல் வர விருக்கின்ற பல ஆண்டுகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுமுள்ள தற்கால இலங்கை வரலாற்று மாணவரனைவருக்கும், அத்துறையில மர்ந்த ஒரு பூரண நூலாக அமைவதோடமையாது பொது வாசகர் களுக்கும் அளவிலாப் பயனையுண்டாக்கும். திரு. குலரத்தினம் கண்ட வெற்றி ஒப்பற்ற தனிச்சிறப்புடையது; வரலாற்றுப் பாடத்தைக் கற்கும் தமிழ்வழி மாணவரனைவரின், சிறப்பாக ஆங்கில மொழி யிலுள்ள மூலப் பொருள்களைப் பெற்றுப் பயனடையும் வாய்ப்புக் களைப் பெறுதவர்களின், நன்றிக் கடப்பாட்டைப் பெறுவதற்குத் திரு. குலரத்தினம் எல்லா உரிமையும் தகுதியும் உடையவராகின்றார்.

அ. ஜெயரத்தினம் வில்சன்

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை. 24-10-66

Forword

Dr. A. Jeyaratnam Wilson.
B A. (Hons) Ph.D.
Lecturer in Political Science.
University of Ceylon

No one claiming to write the modern History of Ceylon and the modern History of Ceylon really begins with the British —Occupation in 1796–can pretend to have an easy task before him. It is a record not merely of administrative activities or the achievements of individual Governors but a synopsis of economic progress, educational advancement, social development and constitutional reform. The Modern History of Ceylon in short is the story of the consolidation of a disintegrating social and political structure into a cohesive national entity borne of a century and a half of development based on a one island concept Not the least of the British record was (a) the administrative unification enforced after the findings of the Colebrooke-Cameron Commission of Inquiry when the Kandyan Provinces became part of a single unified administrative structure and (b) the opening of a railway line towards the end of the nineteenth century to the towns of the Northern Province which had up to this time had no adequate means of communication with the other parts of the country. Railways, Communications, Economic exploitation of virgin natural resources and administrative reform all act as levellers and incentives towards the better promotion of social intercourse and political oneness And this is precisely what the British occupation did for the Ceylonese gentry and intelligentsia. The British record is not without its dark patches and these indirect benefits that accrued as a consequence of the British proconsulship cannot be said to have been influenced by altruistic motives even by the most misguided partisan.

Mr. C. S. Kularatnam's success has been precisely this. In the pages of this illuminating study he has sought to present facts in their proper perspective. Refreshingly he has

not made any effort to follow the beaten track covered by other historians and writers on the subject. He has divided his study into definitive headings each of which has a direct bearing on the progress and development of a modern Ceylon. Together these form an impartial and critical survey of the Island's history from 1796 to 1947 Mr Kularatnam's chapters on some of the more important figures of the political reform movement in this country are particularly informative and complete a story which had not been unfolded in very much detail up to date. His chapters on the record of progress during the Donoughmore period brings to the student for the first time the achievements of our political leaders dnring the formative stages of the Island s growth to a national stature

This book is going to be of tremendous benefit to the Tamil medium student Written in a simple and interesting style, it will hold the attention of the reader from start to finish. It will not be merely the last word on the subject to students of Ceylon modern history in every school for many more years to come but should also be of immense benefit to the general reader. Mr. Kularatnam's achievement is singular and he deserves the thanks of all Tamil medium students of the subject specially those who are ill-equipped to have a proper access to material in the English Language

University of Ceylon
Peradeniya
24-10-66

A. Jeyaratnam Wilson

அணிந்துரை

திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்கள்
B.A., B.Sc. London Dip in Ed.
அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல்வேலி

இன்று உலக நாடுகளனைத்தும் அரசியல் துறையில் விழிப் புணர்ச்சி கொண்டுள்ளன. இலங்கை இதற்கு விதி விலக்கல்ல. இந் நாட்டுமக்கள் அரசியலில் ஆர்வங்கொண்டுள்ளனர். அவர் தம் ஆர் வத்திற்கேற்ப அறிவையும் ஆற்றலையும் அவர்க்களித்துவிட்டால் இந் நாட்டில் மக்களாட்சி செழித்து வளர்ந்துவிடும். அத்தகைய அறிவை அளிக்கவல்லவை அரசியல் வரலாற்றைக் கூறும் நூல்களே.

மக்களாட்சி அரசியல் முறையை எமக்குதவியவர் ஆங்கிலேயர். இலங்கையில் இன்றைய அரசியல் நிலையின் அத்திவாரமாக அமைவது ஆங்கிலேயராட்சிக் காலமே. எனவே இலங்கையின் அரசியல் வர லாற்றை அறிய விரும்பும் அனைவரும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அரசியல் வளர்ச்சியை அவதானிக்க வேண்டும்.

இதுவரை காலமும் ஆங்கிலேயர் காலத்தின் அரசியல் வளர்ச் சியை விரிவாகக் கூறும் நூலெதுவும் இலங்கையில் எம்மொழியிலும் தோன்றவில்லை. அக்குறை இன்று தமிழில் தீர்ந்துவிட்டது. ஆசிரியர் க. சி. குலரத்தினம் அவர்களது ''நோத்முதல் கோபல்லவா வரை'' என்ற நூல் இக்குறையைப் போக்கியதோடல்லாமல், எவரும் குறை கூற முடிய தபடி மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் எழுதப்பட் டுள்ளது.

இலங்கையின் அரசியல், வரலாறு ஆகிய துறைகள் பற்றி முன்பு எழுந்த நூல்கள் பெரும்பாலும் பாடசாலைப் பாடத்திட்டத் திற்கமையவே எழுதப்பட்டு வந்தன. ஆனால் இந்நூல் அத் தகைய கட்டுப்பாட்டுக்குள் குறுகிநிற்காது, பரந்து, விரிந்து வளர்ந் துள்ளதால், மாணவர் மட்டுமன்றி, இலங்கையின் அரசியல் வர லாற்றில் ஆர்வங்கொண்ட அனைவரும் படித்துப் பயன் பெறக் கூடிய தாக உள்ளது.

ஆசிரியர் தமது ஆற்றலாலும் இத்துறையில் தமக்குள்ள ஆர். வத்தாலும் பல நுண்ணிய விஷயங்களைக் கற்றுணர்ந்து ஆழ்ந்த அனுப வத்தைப் பெற்றுத் தம்மைச் செழுமைப் படுத்தி, நூலையும் வளம் படுத்தியுள்ளார் என்பது அவர் நூலை ஆக்கிய முறையிலிருந்து புலப் படுகின்றது.

இந்நூலை ஆழ்ந்து கற்பவர் இதனை ஒரு கலைக் களஞ்சியமாகவே கருதுவர். அரசியல், வரலாறு, இலக்கியம் ஆகிய சமூகவியல்களைக் கூறும் நெடுங்கதையாகவும், இந்நாட்டில் அரசறிவு நிறை முது பெருங் கிழவராகவிருந்தவர் தம்அரசியலாற்றல் கூறும் வாழ்க்கை வரலாறுகவும் காண்பர்.

இந்நூலாசிரியரின் பொருள் நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன் பெறும் பல கல்விச்சாலைகளுள் எமது பாடசாலையும் ஒன்று. இந்நூலினூடே செல்லும்போது அவர் எம்முன் நின்று பிரசங்கஞ் செய்யும் காட்சி உள்ளத்தில் பிரசன்னமாகின்றது.

இந்நூல் இரு பாகங்களாக அமைகின்றது என அறிகின்றேன். முதற்பாகம் ஆங்கிலேயர் வரவு தொடக்கம் அவர்தம் பிரிவு வரை எம் நாட்டின் அரசியல் வளர்ச்சியைக் கூறுவதாக அமையும். ஆகவே அரசியல் அரிச்சுவடியில் நிற்கும் ஆரம்ப மாணவர் தொடக்கம் ஆராய்ச்சி மாணவர் வரை நின்று இந்நூல் இனிய பயன்தரக் கூடியது என்பதனை உறுதியாகக் கூறலாம். ''பயில் தொறும் நூல் நயம்' என்ற தெய்வத் தமிழ் மறையின் திறமையை இந்நூல் விளக்கி நிற்கின்றது.

இந்நூல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டால் யாம் பெற்ற இன்பத்தினை அவரும் பெறுவர்.

நா. கணபதிப்பிள்ளை

செங்குந்தா இந்துக்கல்லூரி
திருநெல்வேலி.
26-10-66

அணிந்துரை

திரு. வி. சிவசாமி,
B.A. (Cey.) B A. (Hons) (London)
விரிவுரையாளர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

ஆரம்பப்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை தாய்மொழி போதனு மொழியாகிச் சிறப்புற்ற ஈழநாட்டிலே புத்தம் புதிய நூல்கள் தமிழ் மொழியிலே வெளிவரவேண்டும். இவை பலவிட யங்களைப் பற்றிப் பல தரங்களிலும் பெருவாரியாகக் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கு அமைவனவாக மட்டுமன்றிப் பொதுவான முறையிலும் வெளிவருதல் பயன்தரும். இத்தகைய பணியிலே ஆசிரியத் தொழிலநுபவமுள்ள திரு. குலரத்தினம் அவர்கள் ஈடுபட்டு, ''நோத் முதல் கோபல்லவா வரை'' என்ற நூலினை வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்நூல் பொதுவான வாசகர்களுக்கு மட்டுமன்றிப் பொதுத் தராதர (சாதாரண, உயர்தர)ப் பத்திரப் பரீட்சைக்கான வகுப்புகளிலே இலங்கைவரலாறு, அரசியல் ஆகியன கற்கும் மாணவர்களுக்கும் பொதுவாகப் பயன்படும் முறையிலமைந்துள்ளது.

இந்நூலிலே ஏறத்தாழ இருநூற்றாண்டு கால இலங்கையின் வரலாறு, சிறப்பாக, அரசியல் துறையும், தேசத்தொண்டர் சிலரின் வாழ்க்கையும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. இது மொழி பெயர்ப்பு நூலாக அன்றி, முதன் நூலாக இனிய செந்தமிழ் நடையிலமைந்துள்ளது. இடையிடையே நூலாசிரியர் தமிழிலக்கிய மேற்கோள்களும் காட்டித் தாம் கூறும் பொருளை விளக்குகின்றார்.

தமிழகத்திலிருந்து பல நூல்கள் வெளியிடப்படினும், ஈழம் பற்றிய நூல்கள் ஒரு சிலவே தமிழில் வெளிவந்துள்ளன. ஆனால், ஈழத்திலிருந்து, ஈழம் பற்றிய நூலொன்றினை எழுதியுள்ள இவ் ஆசிரியர் இக்குறையினை நிவிர்த்தி செய்ய முற்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. எனவே, இந்நூலாசிரியரின் பணிக்குத் தமிழ் பேசும் மக்கள், சிறப்பாக ஈழத்திலுள்ளோர் ஊக்கம் அளித்தற்குக் கடமைப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.
26-10-66.

வி. சிவசாமி

பதிப்புரை

ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் அவர்களுக்கு இன்று ஐம்பது வயது நிரம்புகின்றது. அவர் 1934 ஆம் ஆண்டில் நடை பெற்ற அரசாங்கசபை உபதேர்தற் காலமுதலாக அரசியல் சம்பந்த மாகத் தாம் அறிந்தவற்றைக் குறித்து வைத்திருந்தார். எப்போ தாவது இக் குறிப்புக்கள் எதிர்காலத்துச் சந்ததியினருக்குப் பயன் படுந்தானே எனக் கருதி அவற்றைப் பொன்னேபோற் பேணி வந்தார். நாங்கள் எங்கள் அச்சகத்தின் மூலம் 'விவேகி' என்னும் திங்கள் ஏட் டைப் பிரசுரித்து வந்த காலத்தில் அன்னர் நலந்தரும் அரசு என்னும் தலையங்கத்தில் பிரித்தானிய அரசயாப்புச் சம்பந்தமாக இருபத்தேழு கட்டுரைகள் எழுதியுதவினர். பின்னர் எங்கள் இலங்கை சம்பந்தமாக நோத்முதல் கோல்ஸ்புறூ வரை என்னும் தலைப்பில் இல ங்கை அரசியல் வரலாற்றை எழுதியுதவினர் இக் கட்டுரைகள் யாவும் திங்கள் தோறும் விவேகியில் ஒழுங்காக வெளிவந்தன இவற்றைப் பாராட்டிய ஆசிரியரும் மாணவரும் இவை நூல் வடிவாக வெளி வந்தால் பயனுள்ளனவாகும் என விரும்பினர். ஆசிரியர் அவர்கள் தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது இவற்றைத் திருத்தி யுதவினர்கள். நூலுக்கு வேண்டிய படங்களை உடனுக்குடன் தீட்டி யுதவிய அன்னருடைய நண்பர் சித்திர ஆசிரியர் திரு. க. இராசரத் தினம் (மேடம்) அவர்களுக்கும், ஆசிரியர் இந்நூலை எழுதுவதற்கு அவருக்கு ஊக்கமளித்த செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியருக்கும் மாணவருக்கும் நாம் நன்றியுள்ளவராவோம்.

இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் போன்ற அணிந்துரைகளை எழுதி உதவிய கலாநிதி அ. ஜெயரத்தினம் வில்சன் B. A. (Hons) Ph. D அவர்களுக்கும், செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் திரு. நா. கணபதிப்பிள்ளை B. A. B.Sc. அவர்களுக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் திரு. வி. சிவசாமி B.A.Cey. B.A. (Hons.)Lond. அவர்களுக்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நூல் வெளிவருவதில் ஆர்வங் காட்டியவர் இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் விரிவுரை யாளர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் B.A (Hons) M. Litt. அவர் களாவர். இவர்கள் எல்லோருக்கும் நாம் நன்றியுள்ளவராவோம்.

இந் நூலின் இரண்டாம் பாகமும், ஆசிரியர் எழுதிய நலந்தரும் அரசு என்னும் பிரித்தானிய அரசியல் யாப்பும் மிக விரைவில் வெளி வரும் எனப் பெருமையோடு கூறி எம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

32, கண்டி வீதி
யாழ்ப்பாணம்
26-10-66.

—பதிப்பகத்தார்

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
1.	எங்கள் இலங்கை	...	1
2.	ஆங்கிலேயர் இலங்கையைப் பிடித்தமை	...	10
3.	இரட்டை ஆட்சிமுறை	...	20
4.	ஆள்பதி நோத் அவர்கள்	...	29
5.	இலங்கை ஒரு முடிசார் குடியேற்றம்	...	37
6.	ஆங்கிலேயரும் கண்டியரசனும்	...	45
7.	ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தமை	...	56
8.	சமவாய சம்பந்த மகாநாடு	...	67
9.	ஓர் எதிர்க்கிளர்ச்சி	..	74
10.	தனியாட்சி முறை	...	83
11.	கோல்புறூக் கெமறன் அரசியற்றிருத்தம்	...	91
12.	கோல்றூக் கெமறன் திருத்தத்தின் பின்	...	102
13.	இலங்கையில் நடந்த எதிர்க்கிளர்ச்சி	...	112
14.	கிளர்ச்சியாளர்...விலகற் கடிதம்	...	123
15.	இலங்கையர் சங்கம் செய்த கிளர்ச்சி	...	130
16.	இடைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்	..	139
17.	நடுவகுப்பார் செய்த கிளர்ச்சி	...	151
18.	சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள்	...	163
19.	இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்	...	172
20.	ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்	...	184
21.	முதலாம் மகாயுத்த காலம்	...	198
22.	மனிங் காலத்து முதற்றிருத்தம்	...	211
23.	பொறுப்பில்லாத சட்டசபை	...	222
24.	சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்	...	235
25.	திருத்தப்பட்ட சட்டசபை	...	251
26.	சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்கள்	...	263
27.	டொனமூர் யாப்புத் திருத்தம்	...	273
28.	டொனமூர் திருத்தம் பற்றிய விவாதம்	...	286
29.	டொனமூர் கண்ட அரசாங்கசபை	...	296
30.	சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்	...	310
31.	முதலாம் அரசாங்க சபை	...	321
32.	முதலாம் அரசாங்க சபையின் போக்கு	...	333
33.	இரண்டாம் அரசாங்கசபை	...	346
34.	இரண்டாம் அரசாங்க சபையின் போக்கு	...	357
35.	இரண்டாம் மகாயுத்த காலம்	...	371
36.	ஆள்பதிகளும் அவர்தம் அதிகாரமும்	..	384

பிரசுர விவரம்

நோத்முதல் கோபல்லவா வரை

அத்தியாயம் 1

எங்கள் இலங்கை

பொங்கியெழும் வெள்ளித் திரைகளையுடைய இந்து சமுத்திரத்திலே மங்காப் புகழுடன் அன்று தொடக்கம் இன்று வரை புலவர் நாவில் பொருந்திய புகழுடன் விளங்குவது எம் தாய்த் திருநாடாகிய இலங்கை. இஃது இந்து சமுத்திரத்திலே உள்ள ஒரு முத்து. இதற்கு ஈழம் முதலாக ஸ்ரீலங்கா இறுதியாக எத்தனையோ திரு நாமங்கள் வழங்குகின்றன. இந்தியர், சீனர், யவனர், அராபியர், டேனியர், போத்துக்கீயர், ஒல்லாந்தர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் இலங்கையின் கவின்பெறு வனப்பையும் வளப்பத்தையும் கண்டு, தம் இதயத்தைக் கொள்ளைகொண்ட இப்பொன்நாட்டுக்கு எத்தனையோ பெயர்களை வழங்கியுள்ளார்கள்.

இலங்கா, நித்தில துவீபம், பதுமராக துவீபம், மாணிக்க துவீபம், சிங்கதுவீபம், தாமிரவருணி, தாபிரபனி, தபோவனம் என்பனவாகிய பெயர்களை நோக்கிய எங்கள் செந்தமிழ்ச் சோம சுந்தரப் புலவர் அவர்கள்,

"செம்மை சேர்திருத் தாமிர வர்ணியே
ரிதை தங்கு தபோவனைச் சூழலே
மும்மை யுந்தரு மாணிக்க தீவமே
முடிவி லாதுறை சிங்கள தேசமே
வெம்மை விற்கொடி சோன்று வீபமே
வேதங் கூறி விடுமிடை நாடியே
இம்மை யேவரு மிந்திர லோகமே
ஈழ மேயெம் மிலங்கையின் நாமமே"

என அழகாகப் பாடியுள்ளார்கள்.

பல நாடுகளில் அரச தூதுவராயிருந்த K. P. S. மெனன் என்ற இந்திய இராசதந்திரி இலங்கையைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்துள்ளார். "இலங்கை அழகுள்ள நாடு. இலங்கைக்கு எல்லா

வளங்களும் அழகுகளும் நிரம்ப உண்டு. மலைகள், குன்றுகள், சோலைகள், காடுகள், பள்ளத்தாக்குகள், புன்னிலங்கள், சமவெளிகள், புற்றரைகள் ஆகிய இத்தியாதி வேலைப்பாடுகள் அமைந்த நாடு வெள்ளி அலைமோதும் கடலிடையுள்ளது.'' என்பது அவருடைய புகழுரையின் ஒரு பகுதியாகும்.

இலங்கையின் சிறப்பியல்புகளை 45 ஆண்டுகளுக்கு முன் இந்தியா, மர்மா, இலங்கை ஆகிய நாடுகளின் கிறித்தவ இளைஞர் சங்கப் பொதுக் காரியதரிசியாயிருந்த வணக்கத்துக்குரிய E. C. டேவிக் M A. அவர்கள் ''இலங்கையைப் போன்ற கவின்பெறு வனப்பும் வளப்பமும் பொருந்திய இன்னொரு நாடு உலகில் எப்பாகத்திலும் இல்லை. இலங்கையின் பசுமைக்கும், அதன் பழைய நகரங்களின் வெண்மைக்கும் வானுற வளர்ந்த மரங்களடர்ந்த கானகங்களுக்கும், செவியுற ஓடும் ஆறுகளுக்கும், குளிர்மையான குளங்களுக்கும், கம்பீரமான தகோபாக்கள் கோயில்களுக்கும் இணையாக எவற்றைக் கூறலாமென எனக்குத் தெரியவில்லை.

பொலனறுவை வாடிவீட்டு உப்பரிகையில் நின்று எதிரேயுள்ள கடல்போன்ற அரசக் குளத்தையும் அதற்கப்பால் கவினுறக் காட்சியளிக்கும் மலைத்தொடர்களையும், இப்பால் இடிந்து கிடக்கும் பழைய அரண்மனையாதிய கட்டடங்களையும் காணும்தோறும் இலங்கையின் பழைய மாட்சிமை மிக்க நாகரிகம் கண் முன்னே புலப்படுகிறது. இன்னும் சிகிரியா, மிகிந்தலை, அநுராதபுரம், திசைமாரூமை ஆகிய இடங்களின் வனப்பும் மனத்துக்கு இனிமையாகவே உள்ளன. காலி, மாத்தறை, தங்காலை, திருக்கோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் ஆகிய கரையோர நகரங்களின் கண்கவர் கோட்டைகளும் கட்டடங்களும் ஒல்லாந்தரின் கைவன்மையைக் காட்டுவனவாயுள்ளன.

கண்டியின் கவின்பெறு வனப்பைக் காணாத கண்களும் கண்களோ? கண்டியின் பெரகரா விழாவும், ஆனைகளின் பவனியும், இன்னிசை வாத்தியவொலியும், வெளிநாட்டாராய எங்களுக்குக் குதூகலத்தை விளைவிப்பனவாயுள்ளன. மிகவுயர்ந்த சிவனொளிபாதமலைப் பாகங்களில் இலங்கையின் அழகு பூரணப் பொலிவு பெற்றுப் பூத்துக் குலுங்குகின்றது. சிவனொளிபாதமலையில் சூரிய உதயமும் அதே நேரத்தில் அதன் நிழற்படிவும் பார்ப்பவருக்குப் பரவசமூட்டும் ஒப்புயர்வற்ற அற்புதக் காட்சி என்றே கூறவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

வெனிஸ் வர்த்தகராய மாக்கோ போலோ தாம் எழுதிய பிரயாண நூலில் இலங்கையைப்பற்றிக் குறிப்பிடும் பகுதியை இங்கே குறிக்கின் மிகையாகாது. ''இலங்கையின் அளவினதான தீவுகளில் இலங்கையைப் போன்ற அழகான தீவு இவ்வுலகில் எங்கும் இல்லை. முன்னொருகாலத்தில் மிகப் பெரியதாக இருந்த இத்தீவு கடற்கொந் தழிப்பால் மிகவும் சிறிதாகிவிட்டது. இந்நாட்டை முடி சூடிய ஓரரசன் ஆளுகின்றான். அவன் எந்நாட்டவர்க்கும் திறை கட்டு வதில்லை. இந்நாட்டு மக்கள் நெற்ருனியத்தை அதிகம் விளைவு செய்கிறார்கள். இன்னும் எள்ளை விளைவித்து அதில் எண்ணெய் வடித்து உபயோகிக்கிறார்கள். இந்நாட்டில் பாலும், தேனும், இறைச்சியும், கள்ளும் அதிகமாய் உண்டு.

இவை எல்லாவற்றையும் விட இந்நாட்டில் இரத்தினக்கற்கள் உண்டு. இரத்தினங்களுள் மிக மேலானதும் அதிக விலையுள்ளதுமான ஓரிரத்தினக் கல் இந்நாட்டு மன்னனிடம் உண்டு. அதனைப் பெறு வதற்குச் சீன தேசத்தரசன் வெகுவாக ஆசைப்பட்டு முயன்றான். சீன தேசத்தின் மிகப் பெரிய மாகாணம் ஒன்றின் பெறுமதியளவு பொன்தரலாம் என்று கேட்டபோதிலும் ஈழத்தரசன் இரத்தினக் கல்லைக் கொடுக்க மறுத்துவிட்டான்.

இலங்கை வாசிகள் விக்கிரக வணக்கம் செய்பவர்கள். அவர்கள் போர்ப்பயிற்சி இல்லாதவர்கள். அவர்கள் அரையில் மாத்திரம் ஆடைதரித்துள்ளார்கள். இலங்கையில் உள்ள சிவனொளிபாதமலை மிகவும் புனிதமானது. அதனை மக்கள் சிரமப்பட்டு ஏறி அதன் சிகரத்தில் வணக்கஞ் செய்கிறார்கள்.'' என்பன மாக்கோபோலோ வின் பிரயாண நூலிற் கண்ட குறிப்புக்களாகும்.

நீர் வளமும் நிலவளமும் மலைவளமும் நிரம்பிய எங்கள் நாட் டிலே தீங்கனிச் சோலைகளும் பெருமரக்கா பலவும் பறவையினங் களும் மிருகவகைகளும் அதிகமாக உண்டு. அதனாலேயே பிறநாட் டினர் உல்லாசப் பிரயாணஞ் செய்வதற்கு இங்கே ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் வருகிறார்கள். இத்தகைய சிறப்புக்களைவிட பொன் னும் மணியும் முத்தும் அதிகமாயுள்ளது எங்கள் நாடு. மணி கொணர்ந்து மணி விளக்கேற்றிடும் மாவலிகங்கை நாடெங்கள் நாடே எனச் சின்னத்தம்பிப் புலவர் புகழ்ந்து பாடியமையும் இதன் சிறப்பை நோக்கியே என்க.

இராமாயணம் முதலாய இதிகாசங்களில் மாத்திரமன்றிப் பிற நாட்டு யாத்திரிகளின் நூல்களிலும் எங்கள் நாட்டின் பெருமை கூறப்பட்டுள்ளது. இவற்றைவிட எங்கள் நாட்டுக்கே உரிய மகர

மிசம் சுளுவமிசம் போன்ற நூல்களும் இதன் வரலாற்றுச் சிறப்பைக் கூறுகின்றன ஐரோப்பியர் பல நூற்றுக்கணக்கான நூல்களில் எங்கள் நாட்டின் பெருமையை வியந்து எழுதியுள்ளார்கள்.

முன்னொரு காலத்திலே–இங்கிலாந்திலே ஓரரசு நிறுவப்படு முன்னரே முடியுடை மன்னர்களால் கண்ணெனப் போற்றிப் புரக்கப் பட்ட இப்பொன் நாட்டை 500 ஆண்டுக் காலம் அந்நியராகிய ஐரோப்பியர்–போர்த்துக்கீயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் அகப் படுத்தி ஆண்டார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே பலவாய புதிய முறைகள் இந்நாட்டிலே காலந்தோறும் புகுத்தப்பட்டன. அவற்றுள் அல்லாதவை பலகால வெள்ளத்தால் அள்ளுண்டுபோக நல்லவை, சில எஞ்சியுள்ளன. அவை எமக்கு இன்றியமையாதவை போலும்

இலங்கைக்கு ஏனைய சிறப்புக்கள் போலவே வரலாற்றுச் சிறப்பும் அதிகமாக உண்டு. இலங்கையின் பழைய வரலாற்றைக் கூறும் நூல்களுள் இராமாயணம், மகாவமிசம், ராசாவலி, ராச ரத்தினாகர என்பன சிறந்தவையாகும். இலங்கையில் காலத்துக்குக் காலம் மோரியர், லம்பகர்ணர், சோழர், பாண்டியர், நாயக்கர் முதலானோரின் நாகரிகங்கள் பரவி நிலைபெற்றன. புத்தசமயத்தில் மகாயானப் பிரிவு இலங்கையில் பரப்பப்பட்டு நிலைபெற்று விளங்கு வதாயிற்று. சைவசமயத்தவரின் மகோன்னதக் காலத்திலே கோயில் கள் யாவும் தேவாரம் பாடப்பட்ட காலத்திலே இலங்கையில் உள்ள ஈசுவரங்களுள் திருக்கேதீசுவரமும் திருக்கோணேசுவரமும் தேவார முதலிகளால் பாடப்பட்டனவாயின. முருகன் தலங்களுக்குத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் கதிர்காமத்தையும் பாடித் துதித்துள்ளார்.

பிற்காலச் சோழருள் பெருங்கீர்த்தியுடன் விளங்கியதோடு கடல் கடந்த நாடுகளையும் தன்னடிப் படுத்திச் சோழப் பேரரசை நிலைநாட்டிய இராசராசன் இலங்கை முழுவதையும் கைப்பற்றித் தன் பேரரசில் ஒரு மாகாணமாக வைத்து அரசாண்டான். இராச ராசன் தஞ்சாவூரிலே பெருங் கோயிலைக் கட்டியமை போலவே இலங்கையிலும் பொலநறுவையில் ஒரு சிவாலயத்தைக் கட்டிச் சோழருடைய கட்டடக் கலையை ஈழமண்டலத்திலும் மிளிர வைத் துள்ளான். அவன் கட்டிய சிவாலயம் வானவன் மாதேவி ஈசுவர முடையார் திருக்கோயில் என வழங்குவதாயிற்று. இராசராச னுடைய மைந்தன் இராசேந்திரன் காலத்தில் பொலநறுவை என்ற பெயரே மாற்றப்பட்டு சனநாதமங்கலம் என்றும் சனநாதபுரம் என்றும் வழங்குவதாயிற்று. சோழராட்சிக் காலத்திலே பொலநறுவை யின் புகழ் கீழைத்தேசங்கள் எங்கும் பரந்தது

இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள பழைய பெருமை வாய்ந்த பாரதமெனப்படும் இந்திய நாட்டின் பண்பாடும் கலாசாரமும் இலங்கையில் வெகுவாகக் கலந்துள்ளன. பாரதநாடு இலங்கைக்கு இரு மதங்களை உபகரித்தமையோடமையாது, அறிவாளிகளையும் அரசர்களையும் இராணிகளையும் சேனுதிபதிகளையும் காலத்துக்குக் காலம் தந்துள்ளது. முன்னர் கௌதம புத்தர் காலத்திலும் பின்னர் குப்தர், மோரியர், சோழர், பாண்டியர் செல்வாக்குற்றிருந்த காலத்திலும் இந்திய நாகரிகம் இலங்கையில் அதிகங் கலந்துள்ளது. வடக்கே வங்கம் முதலாகத் தெற்கே சங்கம் இருந்த தமிழ் நாடுமுகவுள்ள இந்தியக் கலைகள் இலங்கையில் இரண்டறக் கலந்துள்ளன. எங்கள் கலாசாரம் இந்திய கலாசாரமே எனில் மிகையாகாது.

இலங்கைக் கரை நாடுகளை ஆண்ட போர்த்துக்கீயர் கறுவா வியாபாரத்தில் கவனஞ் செலுத்தியமையோடு இந்து சமுத்திரத்தில் தங்கள் பேரரசை நிறுவுவதற்கு இலங்கையை அரண் செய்தார்கள். அன்றி கத்தோலிக்க மதத்தையும் உரோமானிய கட்டடக் கலையையும் இங்கே பரப்பினர்கள். அவர்களுடைய மொழிச் சொற்கள் இலங்கையின் பழைய மொழிகளில் கலந்து நிலையாக வழங்குவனவாயின. அவை: கதிரை, மேசை, அலுமாரி, வாங்கு, சோபா, கடுதாசி, சாவி, திருங்கு, அலவாங்கு, பிக்கான், லாந்தர், கோப்பை, பீலிஸ், போத்தல், பீப்பா, விசுக்கோத்து, பாண், கருவாடு, கோவா, கர்ம்பு, கொய்யா, அன்னசி, பப்பா, மங்குஸ்தான், கசுக்கொட்டை, வத்தாலை, வத்தகை, வினுகிரி, சப்பாத்து, லேஞ்சி, கம்பிசை, மேஸ், துவாய், கழுசான், ரேந்தை, தீதாள், மேஸ்திரி, யன்னல், விருந்தை, கிருதி, வாணிஸ், வெந்தீஸ், வத்தை, நத்தார், தவறணை, கரத்தை, ரோதை, பீரங்கி, பகா என்பனவும் பிறவுமாம்.

போர்த்துக்கியருக்குப் பின்வந்த ஒல்லாந்தர் 138 ஆண்டுகள் இலங்கைக் கரை நாடுகளை ஆண்டார்கள். அவர்கள் ஆட்சியின்போது கறுவா, பாக்கு, சங்கு ஆகியவற்றை அவர்கள் இலங்கையில் எடுத்தும், நெசவுவேலை, சாயமூட்டல், ஆகிய தொழில்களைப் பழக்கியும்; மிளகு, கோப்பி கரும்பு, புகையிலை ஆகிய பயிர்களை அபிவிருத்தி செய்தும், கோட்டைகள், வீதிகள், பாலங்கள், வாய்க்கால்கள், கச்சேரி, நீதி மன்றம், தேவாலயம் போன்ற கட்டடங்களைக் கட்டியும் பல அலுவல்களைச் செய்தார்கள். அவர்கள் மொழியில் உள்ள லாச்சி, தாச்சி, வக்கு, கக்கூசு, பிஸ்கால், நொத்தாரிசு, சக்கடத்தார், உலாந்தர், துட்டு, போஞ்சி, கலாவரை, ஏர், பரோ, வீறு முதலிய பல சொற்கள் இலங்கையில் வழங்குகின்றன.

இலங்கை ஒரு குடியேற்ற நாடாய் இருந்தது உண்மைதான். அப்படி அஃது இருந்த காலத்திலே அது முடிக்குரிய குடியேற்றமாய் இருந்தது. ஆங்கிலேயர் இலங்கையில் குடியேறி இங்கே நிரந்தரமாய் வாழவும் ஒரு காலத்தில் விரும்பியதும் உண்டு. அவர்கள் இலங்கைக்குத் தனி மதிப்புக் கொடுத்தார்கள் என்பது பல அலுவல்களிலிருந்து புலனுகின்றது. ஏனைய குடியேற்ற நாடுகளிலமர்ந்து பரிபாலனஞ் செய்து நிரம்பிய அநுபவம் பெற்ற ஆள்பதிகளேயே ஆங்கிலேய அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியது. ஏனைய ஆசிய நாடுகள் சர்வசன வாக்குரிமை பெறுவதற்கு முன்னரே இலங்கையர் அதனைப் பெற்றுவிட்டனர். ஆங்கிலேயருக்குச் சொந்தமான ஆசிய ஆபிரிக்க நாடுகளில் இலங்கையே முதன் முதலாகச் சட்டசபையைப் பெற்றது. குடியேற்ற நாடுகளில் இலங்கையே முதன் முதலாகச் சுதந்திரம் பெற்றுப் பிரித்தானிய பொதுநலவாயச் சுய அரசியல் நாட்டுத் தொகுதிகளில் ஒரு நாடாக ஒப்புயர்வற்று விளங்குகின்றது. இலங்கை பொன் நாடாகவே என்றென்றும் விளங்கியது.

ரோமப் பேரரசை ஆண்ட குளோடியஸ் காலத்தில் அவருடைய அத்தாணி மண்டபத்தில் அநுரதபுரத்து மன்னனின் அரச தூதுவர் அரசோலக்கத்தில் அணிபெற வீற்றிருந்தார் என்று சரித்திர ஆசிரியர் பிளினி நயம்பட எழுதியுள்ளார். அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் நிலையான அரசாங்கமோ, பாரம்பரிய அரசரோ, தேசிய அமைப்போ இருக்கவில்லை என்பதும் சரித்திரம் கூறும் உண்மையாகும்.

பரந்துபட்ட பிரித்தானிய பேரரசின் நாற்பதுக்கு மேற்பட்ட குடியேற்றங்களுள் இலங்கை மதிப்புக்குரியதாயே கணிக்கப்பட்டிருந்தது. குப்பை கூழங்களைப் போட்டு நிரப்பும் பள்ளம் எனவும் குடியேற்றங்கள் இருந்தமையும் உண்டு. ஆனல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஆள்பதிகள் முப்பது பேருள் இரண்டொருவரைத் தவிர ஏனையோர் தகுதிவாய்ந்தவராயே இருந்தனர். அவர்கள் குடியேற்றக் கந்தோரில் நல்ல அறிக்கைப் பத்திரம் பெற்றவராயும் தேர்ச்சி உள்ளவராயும் இருந்தனர். நோத், கோடன் போன்ற ஆள்பதிகள் பிரித்தானிய பிரதம மந்திரிகளின் பிள்ளைகள். சாமேஸ், அண்டர்சன், தோம்சன் ஆகியோர் உயர்ந்த சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று உத்தியோகம் பார்த்துப் பழுத்த அனுபவம் பெற்றவர்கள். மெயிற்லாந்து, கோடன், மக்கென்சி, வாட், கிரகரி, கோடன், சோல்பிப்பிரபு ஆகியோர் பிரித்தானிய பாராளுமன்றத்திலே பிரதிநிதிகளாய் இருந்து அனுபவம் பெற்றவர்களாவர். இன்னும் ஆள்

பதிகள் பலர் முன்னர் இலங்கையிலேயே பிரதம காரியதரிசி எனப் படும் குடியேற்ற அலுவலாளராய் இருந்து இந்நாட்டின் அனுபவம் பெற்றுப் பின்னர் ஆள்பதிகளாயும் நியமிக்கப்பட்டவராவர்.

நாம் இருக்கும் நாடு இலங்கை. நாம் எல்லோரும் இலங் கையர். இலங்கையின் குடிசனத்தொகை என்ன என்று கேட்டால் இத்தனை எண்ணிக்கையினர் என்று சொல்லுவது மரபு. அதை விடுத்து ஆங்கிலேயர் மிக நுட்பமாக இலங்கையரை இனம் பிரித்து எழுதியுள்ளார்கள். அவர்கள் இனம் பிரித்தவகையில் இன்று இலங் கையில் கரை நாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், சோனகர், பறங்கியர் எனப் பல இனத் தவர் வாழுகின்றார்கள். இவர்களுள் கரைநாட்டுச் சிங்களவர் மேல் மாகாணம், தென் மாகாணம், வட மேல் மாகாணம் ஆகிய பகுதி களில் அதிகமாய் வாழுகிறார்கள். கண்டிச்சிங்களவர் மத்திய மாகாணம் வடமத்திய மாகாணம். வடமேல் மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகிய பகுதிகளில் அதிகமாக வாழு கிறார்கள். இலங்கைத் தமிழர் வட மாகாணம், கீழ் மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய இடங்களில் அதிகமாக வாழுகிறார்கள். இந்தியத் தமிழர் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகிய இடங்களில் அதிகமாக வாழுகிறார்கள். சோனகர் கீழ் மாகாணம், வட மாகாணம், தென் மாகாணம் ஆகியஇடங்களில் அதிகமாக வாழுகிறார்கள். ஆகவே இனவாரியாக இலங்கையில் மாகாணங்களைப் பிரிப்பது இயலாத காரியம் என்பர். ஒரு மாகாணத்தில் ஓர் இனம் தனியாக வாழுகிறது என்று கூற இயலாது. இதனை ஓர் உதாரணத்தால் விளக்குவதானால் பதினைந்துலட்சம் தமிழர் வாழுகிற எங்கள் நாட்டில் அதில் அரைப் பங்கினர் தமிழ் மாகாணங்களல்லாத பகுதிகளிலேயே வாழுகிறார்கள் என்பர். இங்ஙனமே முஸ்லிம்கள் இலங்கை முழுவதிலும் செறிந்து வாழுகின்றார்கள்.

பிரித்தானியர் தென் கிழக்காசிய நாடுகளில் தங்கள் பேரரசு நலனுக்காக இலங்கையில் அதிக பற்று வைத்திருந்தார்கள். அதன் கேந்திரத்தானம் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தமை போலவே இலங்கைவாழ் மக்களின் இனவாதமும் அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. இனவாதமும் அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற வரப் பிரசாதமே.

இரண்டாவது மகாயுத்தத்தின் போதும் பிரித்தானிய — அமெரிக்க படைகளுக்கு இலங்கை அரிய தளமாய் இருந்தது. அதற்கு முன்னதாகவே இலங்கையின் பொருளாதாரப் பிடியும் பிரித்தானியர்

கையிலேயே இருந்தது. இலங்கையில் 1933-ம் ஆண்டளவில் 193 ஐரோப்பிய கம்பெனிகள் இருந்தன. இவற்றுள் பெரும்பாலானவை வெள்ளைக்காரருடையவையாகும். இவை 70 கோடி ரூபாவுக்கு மேற் பட்ட மூலதனத்தைக் கொண்டு நடத்தப்பட்டவை. இத்தொகையில் 50 கோடி ரூபா வரையில் தோட்டப் பகுதிகளில் முதலீடு செய்யப் பட்டிருந்தது. இவற்றை விட அமெரிக்க மூலதனமும் இலங்கைப் பொருளாதாரத்தில் முதலீடு செய்யப் பட்டிருந்தமையும் ஈண்டுக் குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.

பிரித்தானிய பேரரசுவாதம் இலங்கையைப் பெரும்பாலும் மூலப் பொருள் உபகரிக்கும் களஞ்சியமாகவும், ஓரளவுக்கு விவசாய நாடாகவும் மட்டந்தட்டி வைத்திருந்தது என்றே கூறவேண்டும். அன்றி இலங்கை வாசிகளின் அபிலாசைகள் முற்றாக நிறைவேற்றப் படாமலே இருந்தன. பிரித்தானியர் தமது யந்திரசாலைகளில் உற் பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையான பண்டங்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் இலங்கையைப் பழக்கி வைத்தார்கள்.

வெள்ளைக்காரர் தமக்கு வேண்டிய தேயிலை, றப்பர், தெங்குப் பொருள்கள் என்பனவற்றை இயன்ற மட்டும் பெறுவதற்காக ஏனைய விவசாயத் துறைகளை உண்டாக்காமலும் உதவி செய்யாமலும் காலங் கழித்தார்கள். உணவுத் தானியங்களும் ஏனைய பொருள்களும் இந் தியா முதலாய பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அன்றி இந்தியாவிலிருந்து மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்ய வல்ல இந்தியத் தொழிலாளரையும் ஆசைவார்த்தை கூறி அழைத்து இறக்குமதி செய்தார்கள். அதனால் உள்ளூர் வாசிகள் அத் தொழிலைச் செய்யும் வாய்ப்பும் வசதியும் இல்லாது போயினர். இலங்கையில் விளையும் பொருள்கள் யாவும் பிரித்தானியாவுக்கும் அதன் பேரரசில் உள்ள நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்யப்பட்டன.

இன்னும் ஒரு காரியத்தை இந்நிலையில் ஆராய்ந்தால் 150 ஆண்டுகளாக இலங்கையைப் பரிபாலித்த பிரித்தானியர் இலங்கை யில் கைத்தொழில் வளத்தை என்றுவது எங்காவது எது விதத்திலா வது பெருக்கவும் இல்லை, பெருக்க நினைக்கவும் இல்லை. இது மாற் றாந்தாய் பிள்ளை வளர்த்த மாதிரி எனக் கூறப்படுவது முற்றும் உண்மை என்றே கூறவேண்டும்.

ஆனால் இரண்டாவது யுத்த நெருக்கடியினால் கைத்தொழில் முறைகள் இங்கிலாந்திலே செய்து கொள்ளுவது இயலாத போதும், ஏற்றுமதி செய்வதற்குப் போக்குவரத்து வசதிகள் வாய்ப்பற்ற போதும் இலங்கையில் சில கைத்தொழில் அபிவிருத்திகளைச் செய்யப்

பிரித்தானியர் முற்பட்டனர். அப்பொழுது புடைவை, பாதரட்சை முதலியன முதலாளிகளின் முதலீடுகளில் செய்யப்படலாயின. அதனால் செல்வந்தருக்கே வருமானத்தில் பங்கு பிரித்தப்பட வாய்ப்பும் ஏற்பட்டது. அதே சமயத்தில் ஏழைத் தொழிலாளர் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிற்று. அவர்கள் சாதாரண வாழ்க்கை வாழவே இயலாதவராயினர்.

ஆகவே பிரித்தானியர் தமது பரிபாலனத்தின் இறுதிக்காலத்தில் செய்ய முற்பட்ட தொழிலபிவிருத்தி ஒருமுக பலனையே அளித்தது. பணக்காரரை மேலும் பணக்காரராக்கியதோடு ஏழைகளை மேலும் ஏழைகளாக்கியது என்றுதான் கூறவேண்டும். வாழ்க்கைத்தரம் உயர உயர ஏழைகள் நிலைமை மேலும் பரிதாபகரமாயிற்று.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது இலங்கையில் நடை பெற்ற பொருளாதார மாற்றம் அல்லது முன்னேற்றம் இலங் கையின் அரசியல் நிலைமையில் ஒரு மாற்றத்தையே உண்டு பண்ணக் கூடியதாயிற்று. அதனால் வர்க்கத் தொடர்பும் தேசிய விடுதலை இயக்கமும் வளரஆரம்பித்தன. தொழிலாளர் அதிகரிப்பும் அவர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் ஒன்று திரண்டமையும் அரசியல் பலத்தை உருவாக்குவதாயிற்று. அதனால் ஏற்பட்ட பலம் பரதேச முதலா ளித்துவத்தையும், உள்ளூர் நிலக்கிழாரையும், இடை வகுப் பினரையும் எதிர்க்க ஆயத்தமானது.

இவ்வேலையிலே தான் இலங்கையில் இடது சாரிகள் இயக்கம் தலைநிமிர்த்தியதோடு முதலாளித்துவத்தை முறியடிப்பதற்குக் கூக் குரல் இடுவதுமாயிற்று. பிரித்தானிய முதலாளிகளின் தோட்டங்கள், வங்கிகள், ஆலைகள் தேசியமயமாக்கப்படல் வேண்டும். இலங்கையில் உள்ள பிரித்தானிய படைகள் யாவும் உடனடியாக வெளியேற்றப்படல் வேண்டும். இலங்கையில் உள்ள இராணுவ கூடற்படைத்தளங்கள் யாவும் முகாம்களை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். அரசியல் அதிகாரம் சாதாரண தொழிலாளிகள் கைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் உலக தொழிற்சங்க சம்மேள னத்தில் அங்கத்துவமும் பெற்று இதற்கு ஆதரவாயிருந்தது

———

அத்தியாயம் 2

ஆங்கிலேயர் இலங்கையைப் பிடித்தமை

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஐக்கிய ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தைப் போல வியாபாரம் மாத்திரம் செய்ததல்ல. பிரித்தானிய வர்த்தகர் திரை கடலோடித் திரவியஞ் சம்பாதித்துக் கொண்டே கடல் கடந்த நாடுகளில் தமது பேரரசை நிறுவிக்கொள்ள நிலங்களையும் பிடித்து வந்தனர். இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட தமது பொருள்களுக்கு வசதியான வெளி நாட்டுச் சந்தைகளே அவர்கள் முதலில் தேடியவை. சந்தை களைக் கைப்பற்றி அவற்றைச் சாம்ராச்சியமாக்கி விட்டமை அவர் களுடைய சாமர்த்தியப் பண்பு.

எத்திசையும் புகழ் மணக்க இனிதிருந்த இந்தியாவின் இக் கரையில் இருந்த இலங்கையின் கறிச்சரக்குகள், மருந்துச்சரக்குகள், வாசனைச் சரக்குகள் ஐரோப்பிய வியாபாரச் சந்தைகளில் அராபிய வர்த்தகருக்கு அளப்பரிய ஆதாயத்தைக் கொடுத்தன. அவர் களுடைய மரக் கலங்கள் இலங்கைக்குப் பொன்னெடு வந்து பொரு ளொடு போன காலம் அக்காலம். இச்சரக்குகளை எல்லாம் தாமே நேரிற் சென்று வாங்கினாலோ என்று ஐரோப்பியர் வாழ்ந்திய காலமும் அது. அதனாலே இந்தியாவிலே பல பாகங்களிலும் போட் டியாக வியாபார நிலையங்களை அமைத்துக் கொண்டு பிரான்சும் இங்கிலாந்தும் போரிட்டும் வந்தன. வியாபாரச் சலுகையோடு சந்தை நிறைவு பெறுத அவர்கள், சிறிது சிறிதாக அரசியலிலும் தம் செல்வாக்கைச் செலுத்திச் சுவை கண்டனர். நெய்ப் போத் திலில் வாலியிட்டு நக்கிச் சுவை கண்ட எலிகள் போல அவர்கள் நாட்டையே உறிஞ்சிக் கொள்ளவும் தலைப்பட்டனர். தராசு பிடித்த கையாலே துப்பாக்கியையும் பிடித்துச் சுதேசிகளை அச்சுறுத்தினர். ஏழாண்டு யுத்தத்தில் நாடு பிடிப்பதில் ருசி கண்ட ஆங்கிலேயர், இந்தியாவுக்கு அண்மையில் தமக்கு ஒரு துறைமுகம் கிடைத்தாலோ எனத் தவித்தனர். இலங்கை அக்காலத்தில் ஒல்லாந்தர் கையில் இருந்தது.

இந்தியாவில் தங்கள் நாட்டாசையை நிறை வேற்றுவதற்கு இலங்கை கேந்திரத்தானமாய் அமையும் என்பதை ஐரோப்பிய நாடுகள் நன்கறிந்தன. அமெரிக்க சுதந்திரப் போரிலே ஒல்லாந்தர் அமெரிக்கருக்கு உதவியாய் இருந்தனர். அதனால் ஒல்லாந்தருடைய நாடுகளை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அந்தக் காலத்திலே தான்

ஒல்லாந்தருக்குச் சொந்தமான திருக்கோணமலையையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். அதனை நிரந்தரமாகத் தமதாக்கிக் கொள்வதற்கு எண்ணிய ஆங்கிலேயர் தமக்கு உதவியாயிருக்கும் வண்ணம் கண்டியரசனைக் கேட்டார்கள். இதற்குள் பிரஞ்சுக்காரர் திருக்கோணமலையைக் கைப்பற்றி அதனை ஒல்லாந்தரிடம் மீளக் கொடுத்துவிட்டனர். ஆங்கிலேயர் தமது கைக்கெட்டிய பழம் வாய்க்கு எட்டாதமையை எண்ணி வருந்தினர்.

இதன்பின் நிலைமை வெகுவாக மாறியது. ஐரோப்பிய நாடுகளையெல்லாம் அடிப்படுத்திய நெப்போலியனுக்கு எதிராக ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் மகத்தான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை எழுதிக் கொண்டனர். இவர்கள் நேயபான்மையோடிருந்த காலத்திலே நெப்போலியன் ஒல்லாந்தை அடிப்படுத்திவிட்டான். அதனால் ஒல்லாந்தின் அரசியற்றலைவனான உவிலியம் மன்னன் நாட்டை விட்டோடி இங்கிலாந்தில் தலைமறைவாய் இருந்தான். ஒல்லாந்தை அடிப்படுத்திய பிரஞ்சுத் தளபதி பிச்சேகுரு என்பான் ஒல்லாந்தில் பட்டேசியன் குடியரசை நிறுவினான்.

இங்கிலாந்தில் புகலடைந்த ஒல்லாந்த மன்னனான வில்லியத்திடம் ஆங்கிலேயர் ஒரு தந்திரோபாயத்தைச் சொல்லிக் கொடுத்தார்கள். அதனை வேலை செய்தவர் பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியாராயிருந்த கிறன்வில் பிரபுவாகும். அவர் ஒல்லாந்துக்குச் சொந்தமான கேப்மாகாணம், இலங்கை, யாவா ஆகிய இடங்களைப் பிரஞ்சுக்காரர் கைப்பற்றுமுன் தாங்களே கைப்பற்ற முயற்சி செய்தார். அதன்படி ஆபத்துக் காலத்தில் அம்மூன்று இடங்களையும் பிரித்தானியர் பாதுகாத்து யுத்தம் முடிந்தபின் ஒல்லாந்தரிடம் திருப்பிக் கொடுப்பதாகத் திட்டமிட்டார்.

அதன்படி ஒல்லாந்து மன்னன் இலங்கையில் இருந்த தனது ஆள்பதியாய J. P. வான் எஞ்சல் பிக் என்பானுக்கு ஓர் உத்தரவுக் கடிதம் எழுதினான். அதில் ''நம்பிக்கைக்கும் எனதன்புக்கும் உரிய அன்பனே! உமது பரிபாலனத்தில் உள்ள இலங்கையில் திருக்கோணமலையிலாவது வேறெங்காவது மாட்சிமை மிக்க பிரித்தானிய மன்னர் பிரானின் படைசுளை, கடற்படைகளைக் கப்பல்களை அநுமதித்து அவர்களை நேயர்களாகக் கருதிப் பிரஞ்சுக்காரர் எங்கள் குடியேற்றத்தைக் கைப்பற்றாதிருக்க அவர்கள் உதவியையும் பெறுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். அங்ஙனமே கடவுள் எங்களைக் காப்பாற்றுவாராக.''

கியூ, உமதன்புள்ள நண்பன்
7-2-1795. W. PR. V. ஒறேஞ்

இக்கடிதத்தோடு பிரித்தானிய அரசாங்கத்தின் பிரமுகர்களான கென்றி டன்டாஸ், வில்லியம் பிற், கிரன்வில் ஆகிய பெரியார்களும் வங்காளம் பம்பாய் ஆகிய இடங்களில் இருந்த தங்கள் ஆள்பதிகளிடம் இலங்கைக்கு உதவி செய்யுமாறு உத்தரவுக் கடிதங்கள் எழுதினர்கள். இந்த உத்தரவின் வண்ணம் சென்னையில் இருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்க அரசாங்கம், கேணல் பிறத்வெயித், கொமோடோர் றெயினியர் ஒரு படையை 7-7-1795 இல் இலங்கையில் உள்ள திருக்கோணமலைக்கு அனுப்ப முடிவு செய்தனர். அப்படைக்குத் தலைவராக கேணல் ஸ்ரூவாட் நியமிக்கப்பட்டான் முதலில் ஆங்கிலேயர் படையை அநுமதிக்குமாறு ஒல்லாந்த ஆள்பதிக்கு ஒரு பிரகடனத்தை விடுத்தார்கள்.

சென்னையில் இருந்த கோபாட்பிரபு இலங்கைக்குப் பாதுகாப்புப் படைகளை அனுப்புவதற்கு ஒழுங்கு செய்தார். கேணல் ஸ்ரூவாட், மேஜர் பிறேசர், மேஜர் டல்றிம்பிள், கப்ரின் டிக்சன், கப்ரின் களிஸ்லி முதலாய சேனைவீரரும், 2600 படை வீரரும் கிப்பாய்களும் ஸ்ரூவாட் தலைமையில் 26-7-1795 இல் புறப்பட்டனர். அவர்கள் 1-8-1795 இல் இலங்கையை அடைந்தார்கள்.

படைகள் புறப்படுமுன் கோபாட்பிரபு இலங்கையில் ஒல்லாந்த ஆள்பதியாய் இருந்த வான் ஏஞ்சல்பிக் அவர்களுக்கு நிலைமையை விளக்குமாறு மேஜர் அஜிநியூ என்பானை முன்னதாகவே கடிதங்கள் கொடுத்து அனுப்பினர் மேஜர் அஜிநியூ கடிதங் கொடுத்த நேரத்திலே ஒல்லாந்த ஆள்பதிக்குப் பல பிரச்சினைகள் உண்டாயின.

இதற்குள் இலங்கைக் கரைநாடுகளிலிருந்து ஒல்லாந்தரைக் கலைத்துவிட்டு இலங்கை முழுவதையும் ஒரு கொடிக்கீழ் ஆள்வதற்குக் கண்டியரசன் முயற்சி செய்தான். சென்னையில் இருந்த ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாருடன் தன் கருத்தைத் தெரிவித்தான். வர்த்தக சங்கத்தார் பைபுஸ் என்பானைக் கண்டியரசனிடம் தூதுவனுய் அனுப்பினர்கள். கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கறுவா வியாபார உரிமையும், இலங்கைக் கரைநாடுகளில் ஒரு துறைமுகமும் கொடுப்பதாகவும், ஆங்கிலேயர் இலங்கையிலிருந்து ஒல்லாந்தரைக் கலைக்க உதவிசெய்தல் வேண்டும் என்றும் கேட்டான். ஆனல் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இப்போது உடன்படிக்கை எழுதிக் கொண்டதை அறிந்ததும் கண்டியரசன் தன் மனக்கோட்டை தவிடுபொடியானதால் மனமுடைந்திருந்தான். அது நிற்க,

மேஜர் அஜிநியு கொடுத்த கடிதத்தைப் பெற்ற ஒல்லாந்த ஆள்பதி வான் ஏஞ்சல் பிக் என்ன செய்வது என்று யோசித்தான். ஆங்கிலேயரின் உதவியைப் பெறுவதா விடுவதா? இலங்கையைப் பொறுத்த அளவில் நிலைமை சீராய் இல்லை. நிதி நிலைமை உணவு நிலைமை, பாதுகாப்பு நிலைமை எல்லாம் வெகுவாகக் குறைந்திருந்தன. கொழும்பு, காலி, திருக்கோணமலை ஆகிய இடங்கள் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டாலும், யாழ்ப்பாணம், மன்னார் முதலிய இடங்கள் போதிய பாதுகாப்பில்லாமலே இருந்தன. யாழ்ப்பாணத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினால் அதற்கூடாக அவர்கள் இலங்கையில் அதிகாரஞ் செலுத்துவதோடு தமக்குச் சாதகமாக நிலைமையைத் திருத்திக கொள்வார்கள்.

இந்நிலையில் நாட்டுக் கூத்தில் திரௌபதி கூறும் நியாயமும் நினைவுக்கு வருகிறது. அவள் துச்சாதனனிடம் ''தருமர் தம்மைத் தோற்றபின் என்னைப் பணயம் வைக்கச் சுதந்திரம் இல்லாதவர்'' என்றாள். அதுபோல் ஒல்லாந்த மன்னன் நாட்டை விட்டோடிய பின் அவன் எழுதியனுப்பியவை பெறுமதியுடையவையாகுமா என்பது வான் ஏஞ்சல் பிக் அவர்களுக்குப் பிரச்சினையாயிற்று.

இந்த நிலையில் என்ன செய்யலாம் என ஒரு பகலெல்லாம் யோசனை செய்த தளபதி ஏஞ்சல்பிக் தனது ஆலோசனைச் சபை யாரோடு கலந்தாலோசித்து ஒரு முடிபுக்கு வந்தான். அதன்படி இரண்டு பக்கத்தாருக்கும் குறை நிறையில்லாமல் அலுவலைச் செய்தான். சென்னையிலிருந்து உதவிக்கு வந்த படைகளில் 800 வீரரை மாத்திரம் அநுமதிக்கவும், அவர்கள் சென்னையில் சேவை செய்தமை போல இலங்கையில் சேவை செய்து சம்பளம் பெறவும் இவர்களுள் 300 பேர் திருக்கோணமலையிலும், 300 பேர் நீர் கொழும்பு களுத்துறை ஆகிய இடங்களிலும், 200 பேர் மாத்துறை யிலும் கடமையாற்றவும் வேண்டுமென்றான். அவன் ஒல்லாந்தின் பழைய மன்னனே தமக்குத் தலைவன் என்றும் ஆங்கிலேயர் தமக்கு நண்பர்கள் என்றும் அவர்கள் உதவி தமக்கு தேவையில்லை என்றும் எழுதினான். தளபதி ஏஞ்சல் பிக் அவர்களுடைய அடிமனம் ஆங்கிலேயரைப் பகைக்காமல் பழைய ஒல்லாந்த மன்னருக்குப் பணிவுள்ளவனாய் இருப்பதேயாம்.

எனவே ஏஞ்சல் பிக் தனது கருத்தைக் கடிதத்தில் எழுதி அஜிநியு அர்களிடம் கொடுத்தான். அஜிநியு மூன்று தினங்களில் திருக்கோணமலையை அடைந்து நிலைமையை அறிவித்தபோது அங்கே இருந்த தளபதி மறுப்புத் தெரிவித்தான். ஆங்கிலேயர் வெளி

வெளியாக இலங்கையைப் பிடிப்பதற்கு யுத்த நடவடிக்கை எடுப்பதாக நாக பட்டினத்திலிருந்து செய்தி கிடைத்துள்ளது. அவ்வாறுயின் நான் ஆங்கிலேயர் படைகளைத் திருக்கோணமலையில் அநுமதிப்பது எப்படி'' என எதிர்த்தான்.

இவ்வாறுக ஆங்கிலேய படைத் தலைவர்கள் திருக்கோண மலைத் தளபதியுடன் இதமாகப் பேசுவாராயினர். நாங்கள் ஒல்லாந் தரின் பழைய நண்பர்கள் என்ற முறையில் வந்துள்ளோம் எங்களை அநுமதிக்குமாறு கொழும்பில் உள்ள தளபதி ஏஞ்சல்பிக் உங்களுக்கு எழுதியுள்ளார். நாங்கள் பகை உணர்ச்சி இல்லாமல் நாட்டில் இருந்து உங்களைக் காத்து யுத்த முடிவில் உங்கள் பிரதேசங்களை உங்கள் கையில் தந்துவிட்டு அமைதியாக மீளுவோம். இவ்வாறு செய்தல் எங்கள் கடமை என்று கூறினர்.

திருக்கோணமலைத் தளபதி, ஆங்கிலேயர் படைகளில் 300 பேரை அநுமதிப்பதில் தடை கூறியதோடு வான் ஏஞ்சல் பிக் தள பதியின் கடிதத்திலும் முறை பிழை எனச் சுட்டிக் காட்டினான். முன்னர் சென்னையில் இருந்த தலைவர் கோபாட் அவர்கள் மாத்திரம் கையெழுத்திட்டமையை வான் ஏஞ்சல் பிக் முறை பிழை என்று மறுத்தமை போல, இப்போது வான் ஏஞ்சல் பிக் அவர்கள் மாத்திரம் கையெழுத்திட்டமை முறை பிழை என்றும், சங்கத்தாரின் கையொப்பமும் அதிலிருத்தல் வேண்டும் என்றும் திருக் கோணமலைத் தளபதி கூறினான். இவ்வாறு கூறிய பின் ஆங்கிலேயர் படையை அநுமதிப்பது சம்பந்தமாகத் தான் ஆலோசித்துச் சில தினங்களில் பதில் கூறுவதாகவும் தான் நேர்மையை இழக்க விரும்ப வில்லை எனவும் கூறினான்.

இவ்வாறு அவன் மறுத்ததைக் கேட்ட ஆங்கிலேயர் மேலும் தாமதமேற்படின் தாம் பொறுமையை இழக்க நேரிடும் என்றும், தளபதி உடனடியாகத் தங்களை அனுமதிக்கா விட்டால் ஆங்கிலேயர் தங்கள் படைவலிமையைக் காண்பிக்க நேரும் என்றும் கூறினர். ஆங்கிலேயரின் மிரட்டலுக்குத் திருக்கோணமலைத் தளபதி இணங் காமையால், அவர்கள் திருக்கோணமலையின் நான்கு மைல் வடக்கே உள்ள இடத்தில் இறங்கித் துறைமுகத்தைப் பிடிப்பதற்கு யுத்த நடவடிக்கையை மேற் கொள்வாராயினர்.

இதற்குள் கொழும்பிலிருந்த தளபதி வான் ஏஞ்சல் பிக் அவர்கள் கொள்கையிலும் நிலைமையிலும் மாற்றம் ஏற்பட்டது. அவன் ஐரோப்பிய நிலைமைகளைப்பற்றி நன்குறிந்து கொண்டான். ஒல்லாந்தின்

பழைய அரசாங்கத்துக்குத்தான் விசுவாசமாய் இருப்பதில் பிரயோசனம் இல்லையென்றும் புதிய அரசாங்கமாய பாட்டேவியன் குடியரசுக்கே தாம் ஊழியஞ்ச இருத்தல் வேண்டும் என்றும் அவன் உணரப் பெற்றான். அதனால் ஆங்கிலேயர் படைகள் தமக்குப் பகைவர்தானே எனக்கருதி அவர்களைத் தீவிரமாக எதிர்க்கவாரம்பித்தான். அவனுடைய ஆலோசனைச்சபை அவனுக்கு ஆதரவளித்தது.

இதற்குள் திருக்கோணமலையில் இறங்கிய ஸ்ரூவாட் படைகள் 18–8–1795 இல் திருக்கோணமலைக் கோட்டையைத் தாக்கினர். அதனால் பிரடறிக் கோட்டை 26–8–1795 இல் பிடிக்கப்பட்டது. ஒல்லாந்தர் தம் படைகளைக் கொழும்புக்காயினும் யாழ்ப்பாணத்துக் காயினும் கொண்டு செல்ல முயன்றனர். ஆனால் ஸ்ரூவாட் அவர்களை அநுமதிக்கவில்லை. யுத்தத்தில் இறந்தவர் தொகை திட்டவட்டமாகத் தெரியவில்லை என்றாலும் ஆங்கிலேயர் பக்கத்தில் 15 பேர் இறந்தனர் என்றும் 54 பேர் காயப்பட்டனர் என்றும் திருக்கோணமலையைக் காத்து நின்ற டிமோறன் படைகளில் 30 வீரர் இறந்தனர் எனவும் அறியக்கிடக்கின்றது

திருக்கோணமலையைக் கைப்பற்றியதால் ஸ்ரூவாட் அவர்களுக்குப் பெரிய கௌரவம் ஏற்பட்டது. இந்த உலகத்திலேயே திருக்கோணமலையைப்போன்ற ஒரு கேந்திரத்தானம் இல்லை என்று பெரிய யுத்தமந்திரியாய விலியம் பிற் அவர்களே பிரித்தானிய பாராளுமன்றத்தில் பேசினார். ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினர் ஸ்ரூவாட் அவர்களை வெகுவாகப் பாராட்டி இலங்கையின் கிழக்கு வடக்குப் பாகங்களில் உள்ள ஏனைய கோட்டைகளையும் கைப்பற்றுமாறு வேண்டினார்கள். அவர்களுக்கு மண்ணைசை உண்டாயிற்று.

மேஜர் பிறேசர் தலைமையில் 15-9-1795 இல் மட்டக்களப்பைக் கைப்பற்றுவதற்கு ஒருபடை அனுப்பப்பட்டது. பிறேசர் 17-9-1795 இல் மட்டக்களப்பையடைந்து முற்றுக்கையிடுவதன் முன் அங்கு நின்ற ஒல்லாந்தரின் சுதேசிப் படைகள் ஓடிவிட்டார்கள். எனவே பிறேசர் மட்டக்களப்பை இலகுவில் கைப்பற்றினான். அவ்விடத்தைக் காவல் செய்யுமாறு தனது படைகளிற் சிலரை நிறுவிவிட்டு அவன் திருக்கோணமலைக்கு மீண்டு பருத்தித்துறையைப் பிடிக்க ஒழுங்கு செய்தான். பருத்தித்துறையைப் பிடிப்பதற்குச் சென்ரூரியன் என்ற கப்பலில் 24–ந் திகதி புறப்பட்டு 27–ந் திகதி அவ்விடத்தை அடைந்தான். பருத்தித்துறையைப் பிடித்தபின் அங்கிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றான். மூன்று மணிநேரத்தில் யாழ்ப்பாணம் சரணாகதியடைந்தது. யாழ்ப்பாணத்தின் சரணாகதி ஒப்பந்தம்

28-9-1795 இல் ஒரு மணியளவில் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் காவல் காரணமாக 55 ஐரோப்பியரும் 97 சுதேசிகளும் 22 அதிகாரிகளும் இருந்தார்கள். ஊர்காவற்றுறையில் உள்ள கமின்கீல், பூநகரிக் கட்டடம், கச்சாய்த்தீவு, வல்வெட்டித்துறை என்பன காவலிழந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து ஸ்ரூவாட் மன்னாரைப் பிடிக்க ஒழுங்கு செய்தான். கேணல் பாபற் தலைமையில் படைகள் 30-9-1795 இல் புறப்பட்டனர். அவர்கள் 6-10-1795 இல் மன்னாரை மிக இலகுவில் போரிடாமலே கைப்பற்றினர். இதற்குள் பருத்தித்துறையில் இருந்து திருக்கோணமலைக்கு மீண்ட படைகளில் ஒரு பகுதியினர் வழியில் உள்ள முல்லைத்தீவைப் பிடித்தனர். அதனால் வன்னியர் நாடும் கைப்பற்றப்படலாயிற்று. மன்னாரில் இருந்த கப்பின் புவசார் கற்பிட்டியை 13-11-1795 இல் கைப்பற்றினான். இவ்வாறாக மட்டக்களப்பு, திருக்கோணமலை, வன்னி, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய இடங்கள் யாவும் 1795 ஆம் ஆண்டு கழியுமுன் ஆங்கிலேயர் வசமாயின. ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் ஆனந்தமடைந்தனர். அவர்கள் நீண்டகாலங் கண்டு வந்த கனவு நனவாயிற்று.

இவ்வாறாக இனி கொழும்பை எவ்விதம் கைப்பற்றலாம் என ஆங்கிலேயர் யோசித்தார்கள். கொழும்பில் இருந்த ஒல்லாந்த தளபதி வான் ஏஞ்சல்பிக் எது வந்தாலும் வரட்டும், ஆங்கிலேயரை இறுதி வரை எதிர்ப்பேன் என வீரம்பேசி நின்றான். அவனுக்குஉதவியாக டிமோறனுடைய கூலிப் படைகள் அங்கே இருந்தனர். டிமோறன் படைகள் சரித்திரப் பிரசித்தி பெற்ற வராதலால் அவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

கவுண்ற் சார்ல்ஸ் டானியல் டிமோறன் என்பார் ஒரு சுவிற்சர்லாந்து வாசி. அவரிடம் கூலிப் படைகள் இருந்தனர். அவர் அப்படைகளை 1881 ஆம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தரின் தேவைக்குப் பணித்து வந்தார். அப்படைகளை ஒல்லாந்தர் 1886 ஆம் ஆண்டு தொடக்கமாக நிரந்தரமாக இலங்கையில் வைத்திருந்தனர். மோறன் தனக்குச் சொந்தமான படைகளை இலங்கையில் தனது தம்பியார் கேணல் பியறி பிரடரிக் டிமோறன் பொறுப்பில் விட்டு ஐரோப்பாவுக்கு மீண்டார். அங்கே ஸ்கொத்லாந்து வாசியாகிய கூகிளேகோன் என்ற பேராசிரியரின் நட்பு அவருக்கு ஏற்பட்டது. கிளேகோன் அவர்கள் மோறனுடைய படைகளை ஆங்கிலேயருக்குச் சேவை செய்ய மாற்றி விட்டார். மோறனும் மிக மகிழ்ச்சியோடு சேவை

மாற்றத்தைச் செய்து கொண்டார். புதிய மாற்றத்தின்படி மோறன் படைகளுக்கு ஒல்லாந்தர் கொடுக்கவேண்டிய நிலுவைப் பணத்தை ஆங்கில அரசாங்கம் கொடுக்கவும், அப்படையினரின் பழைய சேவைகளையும் ஆங்கிலேயர் தமக்குச் செய்த சேவையெனக் கணித்துக் கொள்ளவும், டி மோறன் கிளே கோனுடன் இந்தியாவுக்கு ஒப்பந்தம் எழுதுவதற்குப் போகவும், அவருடைய செலவுகளை ஆங்கிலேயர் பொறுத்துக் கொள்ளவும் அவருக்கு வேதனமாக £ 500 பொன் கொடுக்கவும் ஆங்கிலேயர் உடன்பட்டனர்.

கிளே கோன் செய்த படை மாற்றமும் தந்திரோபாயமும் ஆங்கிலேயருக்குச் சாதகமாயிருந்தன. எனவே ஆள்பதி கோபாட் பிரபு அஜிநியூவை மீண்டும் கொழும்பில் இருந்த வான் ஏஞ்சல் பிக் தளபதியிடம் அனுப்பினர். இம்முறை சாதகமான ஒப்பந்தங்களும் கடிதங்களும் பலவாக இருந்தன. அஜிநியுவிடம் ஒப்பந்தங்களும் உத்தரவுக் கடிதங்களும் எத்தன்மையாக இருந்தபோதிலும் இலங்கையில் இருந்த ஒல்லாந்த சங்கத்தின் பணிக்காயர்கள் ஒன்பது பேரில் ஆறுபேர் ஆங்கிலேயர் படைகளை வரவேற்க மறுத்தனர். ஆள்பதி வான் ஏஞ்சல் பிக் அவர்களும் அந்த ஆறுபேர் பக்கமே தமது வாக்கையும் அளித்தான். இதனால் அஜிநியூவின் தூது இரண்டு முறை பயனளியாமையால் சென்னையில் இருந்த ஆள்பதி இனிப் பேச்சுவார்த்தையில் பயனில்லை பலப்பிரயோகம்தான் ஏற்ற வழி எனக் கூறினர்.

வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று ஓய்ந்தபின் கொழும்பைத் தாக்குவதாகத் திட்டமிட்டார்கள். கொழும்பை எதுவித தத்திலும் கைப்பற்றி விடுவதாக முனைந்து நின்ற ஸ்ரூவாட் பலவித படைகளோடும் உபபடைகள் கருவிகளோடும் புறப்பட்டுத் திருக்கோணமலையை 16-1-1796 இல் அடைந்தான். அங்கிருந்து 2236 ஐரோப்பிய வீரரும் 1649 சுதேச வீரரும் புடைசூழக் கொழும்பை நோக்கிச் சென்றான். வங்காளத்திலிருந்து வந்த படைகள் நீர்கொழும்பில் ஸ்ரூவாட்டின் படைகளோடு சேருவார்கள் என எதிர்பார்த்தனர். ஸ்ரூவாட் முன்னர் கண்டி மன்னனுடன் செய்து கொண்ட உடன் படிக்கையின் வண்ணம் கண்டி மன்னன் ஆங்கிலேயருக்கு உதவியாய் இருப்பதாக வாக்களித்திருந்தான்.

ஸ்ரூவாட் நீர்கொழும்பை அடைந்தபோது அவனுக்கு வாக்களித்த உதவிகள் கிடைத்தன. ஸ்ரூவாட் கொழும்பை அடைந்து ஒல்லாந்தர் கோட்டைமீது தாக்கினான். ஒல்லாந்தர் கோட்டைக்குள் இருந்தார்கள். அவர்கள் சரணடையாவிட்டால் யுத்தம் மூளலாம்

என ஸ்ரூவாட் உடன் கொண்டுசென்ற கடிதங்களைக் காட்டியும் வான் ஏஞ்சல் பிக் இணங்கவில்லை. அவன் தனக்கு பட்டேவியாவிலிருந்து உதவி கிடைக்கலாம் என்றும், பிரஞ்சுப் படைகள் உதவிக்கு வரலாம் என்றும், இந்தியாவில் திப்புசுல்தான் ஆங்கிலேயரை இடைமறிக்கலாம் என்றும் எதிர்பார்த்தான். இவையாவும் அவன் எண்ணியபடியே நடக்கவில்லை. வான் ஏஞ்சல் பிக் உள்நாட்டில் எதிர்பார்த்த உதவிப்படை கிடைக்கவில்லை. அவனிடம் இருந்த படைகளிலேயே பலர் இறந்தும் காயப்பட்டும் போயினர். எஞ்சியவருள் பலர் அஞ்சி ஓட்டமெடுத்தனர். எஞ்சியவர்களையும் வான் ஏஞ்சல் பிக் விசுவாசமுள்ளவராகக் கருத இயலவில்லை.

இவ்வாறாகக் கொழும்பிலே வான் ஏஞ்சல் பிக் பக்கத்திலே 584 ஐரோப்பிய வீரரும், 772 மலாய வீரரும் 124 ஐரோப்பிய பீரங்கி வீரரும், 118 கடற்படை வீரரும் இருந்தார்கள். ஆனால் எதிரிகளாய ஆங்கிலேயர் பக்கத்தில் 10000 வீரரும் கடற்படையினரும் இருந்தார்கள். அவர்களிடம் பல கப்பல்களும் பிற வசதிகளும் இருந்தன. ஏஞ்சல் பிக் அவர்களின் ஆலோசனைச் சபையினர் சரணடைதலே முறை, ஒல்லாந்தரின் கோட்டை ஆங்கிலேயரின் தாக்குதலை மூன்று நாள்களுக்குத்தானும் தாங்கமாட்டாது என்றனர். தோல்வியின்பின் ஏற்படும் நிபந்தனைகள் கௌரவக் குறைவாக இருக்குமாதலால் யுத்தத்துக்கு முன்னதாகவே கௌரவமாகச் சரணடைந்து நிபந்தனைகளை எழுதிக்கொள்வது மேலான காரியம் என ஏஞ்சல் பிக் அவர்களின் ஆலோசனையாளர் கூறினர்.

சரணடைதலே செய்யக்கூடிய காரியம் என ஆலோசனைச் சபையார் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். அதனை அநுமதித்த வான் ஏஞ்சல்பிக் சமாதான நிபந்தனைகளை எழுதினான். அவற்றை மேஜர் அஜிநியூ படித்துத் தமது கருத்தையும் தெரிவித்தான். இந்நிபந்தனைகள் ஆலோசனைச் சபையினரால் படிக்கப்பட்டன. அவர்கள் அவற்றை 15–2–1796 இல் ஏற்றுக்கொண்டார்கள். எனவே 16–2–1796 காலை ஆங்கிலேயர் கொழும்பிற் பிரவேசித்தார்கள். சில மணி நேரமாவதற்குள் களுத்துறை, காலி, மாத்துறை ஆகிய இடங்களிலும் ஆங்கிலேயர் புகுந்தனர். எனவே கொழும்பு, களுத்துறை, காலி, மாத்துறை ஆகிய இடங்களிலிருந்து ஒல்லாந்தர் இளைப்பாறினர்.

ஒல்லாந்தருடைய தோல்விக்குப் பல காரணங்கள் உண்டென்பர். படைத்தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் ஒற்றுமைக்குறைவும் ஒத்துழைப்பின்மையும் முயற்சியின்மையும் நிலவியதால்

ஒல்லாந்தர் தோற்றார்கள் என்பர். ஆங்கிலேயர் படைகள் அங்கே போகாதிருந்தால் ஒல்லாந்த வீரராலேயே தளபதி வான் ஏஞ்சல்பிக் கொலைசெய்யப்பட்டிருப்பான் என்றும் கூறுவர். ஆங்கிலேயரின் முற்றுக்கையையும் எதிர்ப்பையும் சமாளிக்கக்கூடிய வசதிகள் ஒல்லாந்தரிடம் இருக்கவில்லை. ஒல்லாந்தருக்குத் தாய் நாட்டிலிருந்து எவ்வித உதவியோ உற்சாகமோ கிடைக்கவில்லை. அவர்களுடைய வர்த்தக சங்கம் சீர்குலைந்து போயிருந்தது. பண்டசாலையில் பொருள்கள் விலைப்படாமற் கிடந்தன. உத்தியோகத்தர் பல மாதங்களாக வேதனம் பெறாமல் மனஞ்சலித்திருந்தனர். படையிற் கூலியின் பொருட்டுச் சேர்ந்திருந்த சுதேசிகள் கூலி பெறுமையால் உற்சாகங் குன்றியிருந்தனர். பலர் படையை விட்டு நீங்கினர். எல்லைப்புறங்களில் கண்டியரசன் இடையூறுகளைச் செய்வித்தான். இவ்வித துன்பங்களுக்கிடையே யுத்தநெருக்கடியுஞ் சேரவே ஒல்லாந்தர் நிலைமையைச் சமாளிக்க இயலாமை காரணமாக வெற்றிகரமாக இலைப்பாறிப் பின்வாங்குவாராயினர்.

ஆங்கிலேயர் ஒல்லாந்தருக்குக் கௌரவமான நிபந்தனைகளை அளித்துச் சரணாகதியை ஏற்றுக்கொண்டனர். ஒல்லாந்த உத்தியோகத்தர் ஆங்கிலேயரின் அரசாங்கத்தில் கௌரவமாக வாழவும், விரும்பினோர் சுயமரியாதையுடன் வெளியேறவும், படைவீரர் கைதிகளாகிச் சென்னைப் பட்டினத்துக்குப் போகவும், ஒல்லாந்தரின் சமய பரிபாலன குருமார் கௌரவத்துடன் தம் பணியைத் தொடர்ந்து ஆற்றவும், திணைக்கள உத்தியோகத்தர் புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் சம்பளம் பெறவும், ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த வழக்குகள் யாவும் அவர்களுடைய சட்டப் பிரமாணங்களுக்கு அமையவே ஆங்கிலேயர் விசாரித்துத் தீர்ப்பளிக்கவும், ஒல்லாந்த அரசாங்கம் அச்சிட்ட 650000 ரூபா பெறுமதியான தாள்களின் பெறுமதியை ஆங்கிலேயர் கொடுக்கவும், ஒல்லாந்தர் தமது பரிபாலனத்தில் இருந்த இலங்கைக் கரை நாடுகளை ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கவும் கையொப்பம் இட்டனர். இதனால் இதுகாறும் 138 ஆண்டுகளாக ஒல்லாந்தர் இலங்கைக் கரை நாடுகளில் செலுத்திய அதிகாரம் நீக்கப்பட்டது.

அத்தியாயம் 3

இரட்டை ஆட்சி முறை

இங்கிலாந்தின் பிரதம மந்திரியாய் இருந்த மூத்த பிற் என்ற சாதாம் பிரபு, இலங்கையை இங்கிலாந்தின் பரிபாலனத்தில் நேரடியாகத் தொடர்பு செய்ய விரும்பினர். ஆனல் பொதுமக்கள் சபையில் இலங்கையைப் பற்றி விவாதித்தபோது பல பிரதிநிதிகள் வேறு விதமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இலங்கையைக் கைப்பற்றுவதில் அதிக பங்கு கொண்டதாலும், அவ்வர்த்தக சங்கமே இலங்கையைப் பரிபாலிக்க விரும்பியதாலும், நெப்போலிய மகாயுத்தங்கள் முடிவுற்றதும் இலங்கையை மீள ஒல்லாந்தருக்கே கொடுப்பதற்கு உத்தேசித்திருந்ததாலும், இலங்கையைத் தற்காலிகமாக வர்த்தக சங்கமே பரிபாலிக்க விடலாம் என்ற கருத்து நிலவியது.

ஆனல் பாராளுமன்றத்து மந்திரிமாரே இலங்கையைக் கைப்பற்றும் முயற்சியில் அதிக பங்கு கொண்டனர். அவர்களே ஒல்லாந்த மன்னனிடம் உத்தரவுக் கடிதம் பெற்றவர்கள். அவர்களுடைய முயற்சியாலேயே டிமோறன் படை மாற்றப்பட்டு ஆங்கிலேயர் இலங்கையை இலகுவில் பிடிக்க வழி வகுக்கப்பட்டது. ஆனல் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்து திட்டங்களை நடை முறையில் கொண்டு வந்தவர் என்பதும் உண்மையே.

எனவே இலங்கை இந்தியாவுடன் இணைக்கப்பட்டுச் சென்னைப் பட்டின ஆள்பதி கோபாட் அவர்களின் பரிபாலனத்தில் விடப்பட்டது. அச்சங்கத்தார் ஆங்கிலேய அரசாங்கத்தின் பிரதியாளராயிருந்து இலங்கையைப் பரிபாலிக்க ஒழுங்குகள் அவசரமாகச் செய்யப்பட்டன. சென்னையில் இருந்த ஆள்பதி வர்த்தக சங்கத்தாரின் தகவுரையின் வண்ணம் ரேபேட் அண்றூஸ் அவர்களையே இலங்கை அரசிறை அதிகாரியாக 27–10–1795 முதலாக நியமித்தார். அண்றூஸ் அவ்வேளையில் இலங்கையிலேயே இருந்தார். அவர் கண்டி யரசவையின் நிரந்தர தானிகராவும் நியமனம் பெற்றார். அவருக்கு உதவியாக யோன் யேவிஸ், ரேபேட் அலெக்சாண்டர், கரே ஆகிய உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மாதச் சம்பளத்தோடு திரட்டப்பட்ட வரியில் 1% வருமானமும் பெற்றார்கள்.

கொழும்பு கைப்பற்றப்பட்டதும் 6—3—1796 முதலாக யோசப் கிறீன்கில் என்பார் வர்த்தக அலுவலாளராக நியமிக்கப்பட்டுக் கொழும்பில் இருந்தார். இவர்கள் எல்லோருக்கும் மேலாக மேஜர் ஜெனறல் யேம்ஸ் ஸ்ரூவாட் அதிகாரியாக நியமனம் பெற்றார். இவ்வாறான நியமனங்களால் அதிகாரிகளின் அதிகார எல்லை வரையறுக்கப்படாதமையால் இடையிடை முரண்பாடுகள் ஏற்படலாயின.

அண்றூஸ் அதிவிவேகியாய் இருந்த போதிலும் ஆளுந்திறனில்லாதவராய் இருந்தார். வியாபாரத்துக்கு வந்தவர் அரசியற் றுறையில் செல்வனே கடமை புரிவது சாத்தியமாக இருக்கவில்லை. சென்னைப் பட்டின வர்த்தக சங்கத்தின் நிர்வாகமே நல்ல முறையில் நடை பெறவில்லை என்றால் அவர்கள் அரசியற் பரிபாலனஞ் செய்தல் எவ்வாறாகும். வர்த்தக சங்கத்தார் இராணுவ உத்தியோகத்தரையே அரசியற் பொறுப்புக்களில் விட்டனர்.

சென்னையிலிருந்து வந்தவர்கள் ஆராயாமல் சிங்கள உத்தியோகத்தர் பலரை வேலையினின்றும் நீக்கிவிட்டு அவ்விடங்களில் தமிழரை நியமித்தனர் சென்னை வாசிகளின் பரிபாலன முறைகள் குரூரமுள்ளதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் இருந்தன. அவர்கள் பல விதமான வரிகளை விதித்தது மன்றி அவற்றை அநியாய வழிகளில் அறவிட்டும் வந்தார்கள். அண்றூசின் உதவி உத்தியோகத்தர் நடந்து கொண்ட முறையைப் பொதுமக்கள் அறவே வெறுத்தனர்.

இவர்கள் பரிபாலனத்தின்போது இலங்கைக் கரை நாடுகள் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. திருக்கோணமலைப் பிரிவில் மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரிவுகள் இருந்தன. யாழ்ப்பாண பிரிவில் மன்னார் கல்பிட்டியா முதலிய இடங்கள் இருந்தன. கொழும்புப் பிரிவில் சலாபம் தொடக்கம் மாத்துறை வரையும் உள்ள இடங்கள் இருந்தன. இவற்றின் காரியாலயங்கள் கச்சேரிகள் எனப்பட்டன. கச்சேரி உத்தியோகத்தர் பெரும்பாலும் சென்னையிலிருந்து வந்த வராகையால் அவர்கள் அந்நியராகவே கருதப்பட்டனர். அவர்களின் நடை முறையும் பரிபாலன முறையும் இலங்கைக்கு அந்நிய முறையாகவே இருந்தன.

ஒல்லாந்தரின் பரிபாலனத்தில் நடை பெற்ற முறைகள் பெரும் பாலும் பழைய சிங்கள அரசர் காலத்தனவாயிருந்தன. ஒல்லாந்தர் இலங்கைக் கரை நாடுகளைக் கைப்பற்றியபோது அவர்களுக்குப் பழைய சிங்கள மன்னரின் கபடகம் என்ற நிலங்களும் உரித்தாயின. அந்நிலங்களில் பொது மக்கள் வேலை செய்து அனுபவித்து வந்தார்கள். அந்நிலத்தில் விளைவு செய்த பொதுமக்கள்

ஒல்லாந்தருக்கு ஊழிய முறையில் வேலை செய்தும் வந்தார்கள். பழைய நிலங்களில்பல சிங்களப் பெரியார்களுக்கு உபகாரமாயுங் கொடுக்கப்பட்டன. அவை நிந்தகம் எனப்பட்டன. நிந்தக நிலத்திலும் பொது மக்கள் வேலை செய்து சீவித்தார்கள்.

அரசாங்க நிலத்தை விளைவு செய்த பொதுமக்கள் அரசாங்கத்துக்குப் பல வித ஊழியங்களைச் செய்தனர். கறுவா உரித்தல், காடு வெட்டல், நாடாக்கல், வீதிகட்டுதல், காவல் புரிதல், வர்த்தக சங்கத்தில் குற்றேவல் செய்தல் ஆதியவை அவர்கள் செய்த வேலைகளில் சில. இவ்வூழியங்களைச் செய்வித்த உத்தியோகத்தர் முதலியார்கள் எனப்பட்டனர்.

இது இவ்வாறுகச் சென்னைப்பட்டினத்தார் தங்களுடன் ஏராளமான வரி திரட்டும் உத்தியோகத்தரைக் கொண்டு வந்து பழைய முதலியார்களை வேலையினின்றும் நீக்கிவிட்டு, ஊழியத்துக்குப் பதிலாக பொதுமக்களிடம் வரிப்பணம் திரட்டுவதை மேற் கொண்டனர். வரிதிரட்டும் உத்தியோகத்தருக்கு வேதனமளிப் பதற்காகவே பொதுமக்களிடம் மேலதிகவரிகள் சுமத்தப் பட்டன. மேலதிக வரிகளுள் தென்னை வரி என்பதும் ஒன்று. அது ஒவ்வொரு தென்னைமரத்துக்கும் இரண்டு பணம் கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டதாகும். சில இடங்களில் இரண்டு பணம் வருமானந்தராத தென்னைகளுக்கும் பொதுமக்கள் வரி கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

மத்திய காலந்தொடக்கம் ஊழிய முறையில் பழகி வந்த பொதுமக்களுக்குச் சென்னைப் பட்டின முறைகள் பிடிக்கவில்லை. அவர்கள் போர்த்துக்கீயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் பழைய முறைப்படியே வாழ்ந்துவந்தவர்கள். ஆனல் ஆங்கிலேயர் பழைய முறைகளை இருந்தாற்போல் முற்றுக மாற்றியமையை அவர்கள் விரும்பவில்லை. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் ஒரு குறித்த இடத்துக்கு உரிய தொகையை ஒருவரிடம் மொத்தமாகப் பெற்றுக் கொண்டு அக்குத்தகைக்காரனைப் பொதுமக்களிடம் அதிக வரி திரட்ட அதிகாரம் கொடுத்தனர். குத்தகைக்காரர் வரி திரட்டுதலையே நோக்கமாகக் கருதினராகையால் அவர்கள் குரூரமாகவே நடந்தார்கள். போர்த்துக்கீயரும் அவரின் பின் ஒல்லாந்தரும் இலங்கைக் கரை நாடுகளைக் கறுவா மிளகு ஆகிய சரக்குகளுக்காகவே கைப்பற்றினர்கள். அவர்களைப் போலவே ஆங்கிலேயரும் சரக்குகளின் ஏற்றுமதி செய்வதிலேயே முதலில் கவனஞ் செலுத்தினர்கள். அதனைத் அவர்கள் தானிய வரியையும் விதித்துப் பொருள் வருவா

யைப் பெருக்கவும் வழி தேடினர். வர்த்தக சங்கத்தினர் பொருளீட்டும் அவாவில் கொழும்பு முதல் மொறட்டுவா ஈறுகக் கறுவாத் தோட்டங் களைக் கவனித்தனர். அதனால் 1797 ஆம் ஆண்டு தொடக்கம் 1802 ஆம் ஆண்டு வரை வருடந்தோறும் 30000 பொன் பெறுமதி யான கறுவாவை ஏற்றுமதி செய்தனர். பத்தொன்பதாம் நூற் றாண்டின் ஆரம்ப காலத்தில் நான்கு லட்சம் ரூத்தல் கறுவாப் பட்டை விளைவு தரக்கூடியதாய் இருந்தது என்பர்.

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் உடன் ஆதாயம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் விளைவு வருமானத்தில் குடியானவரிடம் பெருமளவு தானியவரி திரட்டுவாராயினர். அதனோடு புகையிலை, வேட்டையாடுதல், தென்னை ஆகியவற்றில் வரி விதித் தனர். அவற்றைவிட மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், மதுபானம் வடித்தல், ஆகியவற்றைக் குத்தகையில் விட்டுப் பணந்தேடவாரம் பித்தனர். இத்தகைய வரிதிரட்டல் குத்தகைகளை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை நடத்தச் சென்னையிலிருந்து பல உத்தியோ கத்தரை வரவழைத்தனர். அவர்கள் அமில்தார் எனப்பட்ட குத் தகைக்காரன், கொத்வால் எனப்பட்ட பொலிசுக்காரன், குமாஸ்தா எனப்பட்ட (கிளார்க்) எழுதுவினைஞன் ஆகிய பல உத்தியோகத்தரா வர். அமில்தார் என்ற குத்தகைக்காரன் பெரிய மதிப்புள்ளவனாய் வரிதிரட்டல் நீதி வழங்கல் முதலிய உத்தியோகங்களையும் கவனித் தான். அவனுக்கு அக்காலத்தில் 75 ரூபா மாதச் சம்பளமாம் இருந்தது. அவனைப்போல ஏனையோரின் சம்பளத் திட்டத்தையும் இங்கே குறிப்பிடல் பொருத்தமாகும்.

எழுத்துக்காரன்	ரூ. 13–50 சதம்
மணியகாரன்	ரூ. 8–25 சதம்
ஆராய்ச்சி	ரூ. 8–00 சதம்
கணக்கன்	ரூ. 8–00 சதம்
கொத்தவால்	ரூ. 8–00 சதம்
கண்காணி	ரூ. 4–00 சதம்
சேவகன்	ரூ. 2–75 சதம்
பறையன்	ரூ. 1–50 சதம்

இத்தகைய உத்தியோகத்தர் புடைசூழ ஒரு மாகாண அதிபர் பரி பாலனஞ் செய்தார். உதாரணமாக வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் அங்கே கேணல் பாபற் என்பார் மாகாண அதிபராய் இருந்தார். அவரின் கீழ் வரிதிரட்டும் பணிசெய்த உதவியாளரான அமில்தார் உத்தியோகத்தர் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா,

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இருந்தார்கள். இவற்றுள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் பொலிசுக் கோடு எனப்படும் சிறு நீதிமன்றங்கள் 100 ரூபாவுக்குட்பட்ட சிறு வியாச்சியங்களையும் சிறிய பழி வழக்குகளையும் விசாரித்தன.

இன்னும் யாழ்ப்பாணம் வலிமேற்கு, வலிவடக்கு, வலிகிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, தீவுப்பற்று என்பன மணியகாரன் பிரிவுகளாயிருந்தன. மணியகாரன் பிரிவுகள் உடையார் விதானைப் பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டிருந்தன. அமில்தார்கள் வரிதிரட்டிய முறை மிகவும் வருந்தக் கூடியதாயிருந்தது. அவர்கள் குடிமக்களை மிகவும் துன்புறுத்தி உடம்பில் ஊறுசெய்தும் தண்டித்தும் கொடுமையியற்றி வரி திரட்டினர்கள்.

இந்நிலைமை வேறும் பல காரணங்களால் திருப்தியையோ அமைதியையோ நிலைநாட்டப் போதியதாக இருக்கவில்லை. அவசரமாகத் தயாரிக்கப்பட்ட இந்த அடிப்படையில் குடியியற் பரிபாலனத்துக்கும் படைப்பாலனத்துக்கும் இடையில் ஆளெல்லை என்ன வென்பனவாதியவை குறிக்கப்படாமையால் நீதி வழங்கல் முதலிய துறைகளில் இரு பகுதியாருக்கும் பெரிய முரண்பாடு ஏற்படலாயிற்று. குடியியற் பரிபாலனம் நல்ல முறையில் அமைக்கப்படாமையால் வருமான உத்தியோகத்தரே குடியியற் பாலனத்தையும் பார்த்து வந்தனர். மாகாண வரி திரட்டும் அதிகாரி எனப்பட்ட (கலெக்டர்) அதிபர் பொலிசுக்காரருக்கும் அதிபராயிருந்தார். முன்னர் முதலிமார்கள் தலைமைக்காரர் என இருந்தவர்களின் அதிகாரங்கள் யாவும் 12-8-1796 இல் அறிவிக்கப்பட்ட பிரசித்தத்தால் நீக்கப்பட்டு அவ்வதிகாரங்கள் வரிதிரட்டும் சிறிய உத்தியோகத்தருக்கு வழங்கப் பட்டன. முதலியாரின் கடமைகளை அமில்தார் பார்த்து வந்தார். அதனால் முதலிமார்கள் மனமுடைந்து அம்முறைகளை வெறுத்திருந்தார்கள்.

இத்தகைய சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வெளிவெளியாக அரசாங்கத்தை எதிர்க்கவாரம்பித்தார்கள். தமிழ்ப் பேசும் மாகாணங்கள் சிங்களம் பேசும் மாகாணங்கள் என்ற வரையறையின்றி இலங்கையர் என்ற முறையிலேயே எதிர்ப்புக்கள் ஏற்பட்டன. கொழும்பின் அண்மையில் உள்ள றயிகம் கோரளை வாசிகள் வரிகொடுக்க மறுத்தமையோடு வரி திரட்டச் சென்ற வரிக் காரனையும் பிடித்துக் கட்டிவைத்தார்கள். அதனை அறிந்த அண்றாஸ்

படைகள் புடைசூழச் சென்று, வரிக்காரனை மீட்டுக் குற்றவாளி களைத் தண்டித்து, அவ்வளவில் கலகம் தீர்ந்து விட்டதென எண்ணி வெற்றிகரமாக மீண்டார்.

இவ்வாறுக 1-1-1797இல் மேஜர் ஜெனரல் வெல்போர் எலிஸ் டொயிலி என்பான் ஸ்ரூவாட் மாற்றம் பெற்றுப்போக அவனிடத்துக்கு வந்தான். இக்காலத்தில் மட்டக்களப்பு, வன்னி ஆகிய இடங்களிலும் வரி மறுப்புக் கலகங்கள் ஏற்பட்டனவாயின. வன்னியில் சுயவாட்சி நடத்திய பண்டாரவன்னியன் கனன்றெழுந்து அரசாங்க உத்தியோகத்தனை அமில்தாரை வாளால் வெட்டிக்கொன்றான். யாழ்ப்பாணத்தாரும் வரி கொடாமல் கலகஞ் செய்தமையால் என்ன செய்வது என அதிபர் யேவிஸ் மேலதிகாரிகளுக்கு எழுதினான்.

சிங்கள நாடுகளில் றயிகம், சியன்னே, கேவகம், சல்பிட்டி கோறளைகள் பெரிதும் ஆர்ப்பரித்து எழுந்தபோது வரிக்காரனைக் காப்பாற்றுவதற்கு டொயிலி ஓர் இந்தியத் துப்பாக்கி வீரனை அனுப்பினான். ஆனால் அவ்வூர்வாசிகள் கத்திகள் பொல்லுகள் வாள்கள் ஈட்டிகள் ஆகிய ஆயுதங்கள் ஏந்தியவராய்க் கச்சேரியைச் சூழ நிற்பாராயினர். கேவகம், சல்பிட்டி கோறளைகளில் எழுந்த கலகக் கூட்டப் படைகளின் உதவிகொண்டு ஆங்கிலேயர் அடக்கிய போதிலும் கலகக்காரரின் மனவெழுச்சி உணர்ச்சி வயப்பட்டே இருந்தது. எனவே அவர்கள் தென்னவரி முதலான அநியாய வரிகளை எதிர்த்து மனுச் செய்வாராயினர். உத்தியோகமிழந்த முதலியார்கள் பின்னணியில் நின்று பொதுமக்களை ஏவினர்கள். பொதுமக்கள் ஆங்கிலேயர் ஆட்சி தங்களுக்கு அறவே வேண்டாம் எனக் கூறிநின்றார்கள்.

கலகம் ஏற்பட்ட சமயத்தில் கண்டியரசனும் பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயருக்குத் தீராத தொல்லை கொடுத்தனர். அதனால் ஆங்கிலேயர் படைகள் அங்கும் இங்கும் அனுப்பப்பட்டன. இவ்வித அல்லோல கல்லோல நிலைமை யாவும் அண்றூஸ் அவர்கள் ஆராயாமல் செய்த மாற்றங்களால் உண்டானவை என அறிந்த சென்னை பட்டினை ஆள்பதி கோபாட் பிரபு 1797 ஆம் ஆண்டு யூன் மாதம் 9 ஆம் நிகதி இலங்கை அரசியற் பரிபாலன முறைகளை விசாரிப்பதன் பொருட்டு ஓர் ஆராய்வுச் சபையை நியமித்தார். இச்சபையில் டி மோறன், மேஜர் அஜிநியூ, ரேபேட் அண்றூஸ் ஆகிய பெரியார்கள் இருந்தார்கள். இவர்கள் கலகத்தின் காரணங்களை ஆராய்ந்து கொண்டிருந்தபோது கலகம் மேலும் இலங்கையில் பல பாகங்களிலும் பரவலாயிற்று. சென்னைப் பட்டின உத்தியோகத்தர் எங்கும் அவமதிக்கப் பட்டார்கள்.

இவ்வாறாக, ஐரோப்பாவில் நிலைமை மாறிற்று. நெப்போலிய மகாயுத்தங்கள் ஓய்ந்தன. இலங்கையை ஆங்கிலேயரே நிரந்தரமாக ஆளுதல் வேண்டும் என்ற குரலும் எழுந்தது. எனவே வர்த்தக சங்கத்தாரிடமிருந்து இலங்கையைப் பெறுவதற்கு ஆங்கில அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் வர்த்தக சங்கத்தார் அத்தீர்மானத்துக்கு இடங்கொடுக்கவில்லை. வர்த்தக சங்கத்தார் வியாபாரத்தின் பொருட்டுத் திருக்கோணமலையில் தாம் அதிக பணம் செலவு செய்துவிட்டதாகக் கூறி மறுத்தனர். இவ்வித தொந்தரவுகளுள் தலையிட விரும்பாத ஆங்கில அரசாங்கம், வர்த்தக சங்கத்தோடு ஒத்துழைத்து இருதரப்பாருக்கும் அதிகாரமுள்ளதான ஓர் அரசியல் முறையில் இலங்கையைப் பரிபாலித்துக்கொள்ள வழி வகுக்க முற்படுவதாயிற்று.

இரு பகுதியாரும் தமக்குள் செய்து கொண்ட ஓர் உடன் படிக்கையின்படி, இங்கிலாந்திலிருந்து மேல் உத்தியோகத்தரை ஆங்கில அரசாங்கம் அனுப்பவும், அவர்களுக்கு உதவியாகச் சென்னைப் பட்டின உத்தியோகத்தர் இருந்து அலுவல்களைச் செய்யவும் தீர்மானித்தனர். இதனால் குடியேற்ற மந்திரியார் பொறுப்பில் இலங்கை பரிபாலிக்கப்படவும், பரிபாலனப் பொறுப்புள்ள ஓர் ஆள்பதி இங்கிலாந்திலிருந்து வரவும் ஒழுங்கு செய்தனர்.

இவ்வித இரட்டை ஆட்சி முறையில் வர்த்தகம், வருமானம் முதலிய அலுவல்களை வர்த்தக சங்கம் பார்க்கவும், அரசியல், நீதி வழங்குதல், பாதுகாப்பளித்தல் முதலிய அலுவல்கள் ஆள்பதியின் அதிகாரத்தில் இருக்கவும் ஒழுங்கு செய்தனர். இன்னும் ஆள்பதி அவர்கள் குடியேற்ற மந்திரியாருக்குக் கட்டுப்பட்டும், வர்த்தக சங்கத்தாரின் பிரமாணங்களையும் அவர்தம் ஆலோசனையையும் ஏற்று நடக்கவும் வேண்டியவரானார். இதனால் இலங்கை ஆங்கில மன்னனின் முடிக்குரிய நாடாகவும் மாட்சிமை தங்கிய மூன்றாம் ஜோர்ச் மன்னன் இலங்கைக் கரை நாடுகளுக்கு அரசனாகவும் நிலைமை ஏற்பட்டது.

இஃது இங்ஙனமாகக் கலகத்தைப் பற்றி விசாரித்த குழுவினர் பல மாறுதல்களைச் செய்யுமாறு அறிக்கை எழுதிச்சமர்ப்பித்தனர். தென்னை வரி நீக்கப்பட்டு ஏற்றுமதியாகும் தெங்குப் பொருளில் மாத்திரம் சிறுவரி விதிக்கப்பட்டது. முதலிமார்கள் மீண்டும் உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டார்கள். கறுவாச் செய்கையை விருத்தி செய்யவும், உப்புச் செய்கையில் அரசாங்கம் தனி உரிமை பெறவும்,

ஊழியர் முறை மீள நடைமுறையில் இருக்கவும், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஊழியத்துக்குப் பதிலாக வரிபெறவும், சாராயம், புகையிலை முதலியவற்றில் தீர்வை பெறவும் தகவுரை கூறப்பட்டது.

இதற்குள் ஜெனரல் டொயிலி இறந்து போகவே இடைக் காலத்தில் வர்த்தக சங்கத்தின் நன்மையைக் கவனிப்பதற்கு டி மோறன் மேலதிகாரியாக நியமிக்கப்பட்டார். டி மோறன் பொறுப் பேற்றதும். 6-8-1797 இல் பொதுமக்கள் தங்கள் குறைகளைத் தன்னிடம் முறையிடுமாறு பிரசித்தஞ் செய்தார். அதனைடு வரிக்காரர் பொதுமக்களை வருத்தாதவாறு கவனிக்குமாறும் அண்ரூஸ் அவர்களுக்கு ஆணையிட்டார். கண்டியரசன் தலையிடுமுன்னே கலகக்காரரைச் சமன் செய்வதற்கு டி மோறன் அதிக பிரயாசையெடுத்தார். ஆனால் அவர் முயற்சி பயனளிக்கவில்லையென்றே சொல்லவேண்டும்.

கலகக்காரர் அவர் செய்த பிரசித்தத்தை நம்பியதாகத் தெரிய வில்லை. அவர்கள் அமைதியை நிலைநாட்டவும் இல்லை. அவர்கள் அவருக்கு முன் தங்கள் குறைகளைப் பற்றிச் சொல்லப் போகவும் இல்லை. ஆனால் அவர்கள் குடிமக்களின் கையொப்பமிட்டு மனு வோலைகளை மாத்திரம் சமர்ப்பித்தார்கள். நாங்கள் தங்கள் குறை களைத் தங்கள் தலைமைக்காரர் மூலமே கூறியிருக்கலாம் என்றும், அவர்களிடத்தில் இப்போதிருக்கும் அமில்தார்கள் மூலம் தாம் என்ன செய்யமுடியும் என்றும், அமில்தார்கள் தங்களை அடக்கி ஒடுக்கும் உத்தியோகத்தவராயே இருந்தார்கள் என்றும் குறிப்பிட்டனர். நாங்கள் எத்தனையோ முறை அமில்தாரிடம் தங்கள் குறைகளைக் கூற முனைந்தபோது அவர்கள் தங்களை ஏமாற்றிப் புறக்கணித்தமை யைக் கூறினர்கள்.

இவ்வேளையில் சின்னே அப்பு சியன் கோறளையில் கலகஞ் செய்ய முயன்றபோது யங் என்ற படைத்தலைவனால் கலைக்கப்பட்டான். ஏனைய கலகக்காரரும் ஆங்கிலேயப்படை வீரரால் பணிய நேர்ந்தது. இதற்குள் சின்னே அப்பு கண்டிக்கு ஓடியபோது அங்கே கண்டியரால் ஆதரிக்கப்பட்டான். கண்டியரசன் சின்னே அப்புவைக் கொழும்புப் பகுதிக்குத் திசாவையாக நியமித்தான். சின்னே அப்பு கரை நாடு களில் கலகத்தைத் தூண்டுவதும் ஆங்கிலேயரால் தூரத்தப்படுவது மாகப் பல தரம் அங்குமிங்கும் திரிந்தான். இதற்குள் 1798 ஆம் ஆண்டின் மார்ச் மாதமாவதற்குள் கலகக்காரர் பலரும் கைப்பற்றப் பட்டுத் தூக்கிலிடப்பட்டார்கள்.

இதற்குள் முன்னர் விசாரணைசெய்ய ஆரம்பித்த ஆணைச்சபையினர் 4-8-1797 முதலாக விசாரணைகள் ஆராய்ச்சிகள் செய்து அதன் அங்கத்தவரின் தகவுரைகளைக் கேட்டு 16-8-1797 அளவில் ஒரு முடிவான திட்டத்தைச் சமர்ப்பித்தார்கள். அதன்படி (1) ஒவ்வொரு கோரளையிலும் ஒரு நீதிபதி சுதேசிகளின் உதவிகொண்டு அவ்வூர் குடிவழக்குகளை விசாரிப்பர் என்றும் (2) இலங்கையின் பழைய சம்பிரதாயத்தின் படி நீதிபதிகள் முதலியார் என அழைக்கப்படுவர் எனவும் அவர்களுக்கு மூன்று திரங்கள் ஆராய்ச்சிகள் உதவியாய் இருப்பரென்றும் அவரெல்லாம் உயர்ந்த வேளாண் வகுப்பினருள் இருந்து தெரியப்படுவர் என்றும், (3) இம் முதலியார்களை அரசாங்கத்தின் பிரசித்தங்களாகிய அறிவித்தல்களைப் பொதுமக்களுக்கு அறிவிப்பர் என்றும் கூறப்பட்டது.

ஆய்வுக்குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையைச் சென்னைபட்டினவர்த்தக சங்கத்தார் ஏற்றுக்கொண்ட போதிலும் அதில் கூறியவற்றை உடனடியாக நடை முறையில் கொண்டுவர இயலவில்லை. அவர்களுடைய புது நிதிவருடம் அடுத்துவர இருந்ததால் அன்று தொடக்கம் அதனை நடைமுறையில் செய்யலாம் என இருந்தபோது ஆங்கில அரசாங்கம் ஆள்பதி நோர்த் அவர்களை நியமனஞ் செய்துவிட்டது. எனவே அறிக்கையில் கண்டவற்றுள் இரண்டு அலுவல்களையே அவர்கள் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர முயன்றனர். அவை ஊழிய முறையும், முதலியார்மாரை மறுபடியும் நியமனஞ் செய்வதுமாகும்.

இதற்குள் வர்த்தக சங்கத்தின் பிடியிலிருந்து இலங்கையைத் தவிர்த்து முடியின் கீழ் பரிபாலிக்க டன்டாஸ் முயன்றார். ஆனால் சமாதானப் பேச்சின்போது பெரியவர்கள் இலங்கையை என் செய்வார்களோ என்ற சந்தேகமும் நிலவியது. அப்படியாயின் சமாதான வேளையில் இலங்கை ஆங்கிலேயருக்கே என நிச்சயம் செய்யப்பட்டால் இலங்கையை வர்த்தக சங்கத்தார் வசம் ஒப்புவிப்பதாக டண்டாஸ் உறுதி கூறினர். ஆனால் இறுதியில் இலங்கை முடியின் பரிபாலனத்திலேயே விடப்படலாயிற்று. எனவே 1797 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் கௌரவ பிரடறிக் நோர்த் அவர்கள் இலங்கைக் கரை நாடுகளின் ஆள்பதியாய் நியமிக்கப்பட்டார்.

அத்தியாயம் 4

ஆள்பதி நோத் அவர்கள்

பிரடறிக் நோத் என்பார் அவசரமாக எதனையும் செய்ய முற படும் இயல்புடைய ஓர் இளைஞன். அவருடைய தந்தையார் முன் நாள் இங்கிலாந்தின் பிரதமராயிருந்து தமது அவசர புத்தியால் அமெரிக்க நாடுகளை இழக்கக் காரணராயிருந்தவர். இளைஞரான பிரடறிக் நோத் நல்ல படிப்பாளி, இலக்கிய காவிய விற்பன்னர், யேமன், பிரஞ்சு, ஸ்பானிஸ், இத்தாலியம், ரசியன் ஆகிய மொழி களில் புலமை படைத்தவர். தமது நாட்டின் பாராளுமன்றத்திலே தமது 24 ஆம் ஆண்டுப் பராயத்திலேயே பிரதிநிதியாகத் தெரியப் பட்டிருந்தவர்.

நோத் அவர்களின் பதவி நியமனப்பத்திரம் 26-3-1798 இல் எழுதப்பட்டது. அதில் எழுதப்பட்ட வாசகங்கள் இங்கே குறிக்கற் பாலன. ''இலங்கைக் கரைநாடுகளின் ஆள்பதியாக நியமனம் பெறும் நீங்கள், சென்னையிலிருக்கும் கிழக்கிந்திய வர்த்தக சங்கத் தினரின் இயக்குனரின் குழுவினரோடும், லண்டனில் உள்ள குடியேற்ற மந்திரியாரவர்களோடும் உங்கள் உத்தியோகம் சம்பந்தமான அலு வல்கள் காரணமாகத் தொடர்பு கொள்ளுதல்வேண்டும். வர்த்தக சங்கத்தினரின் நிர்வாகக் குழுவினர் அல்லது சென்னை ஆள்பதி, அல்லது பம்பாய் ஆள்பதி, அல்லது இந்தியாவில் உள்ள ஆள்பதி நாயகம் ஆகியவரின் தொடர்பும் உங்களுக்கு அத்தியாவசியமாகும் எவ்வாறுயினும் நீங்களே இலங்கைக் கரைநாடுகளின் படைப்பாலனம் குடியியற்பாலனம் ஆகிய அலுவல்களுக்குப் பொறுப்பாளியும் தலை வருமாவீர். இலங்கையின் அரசியல் காரணமாகவோ, பரிபாலனர்த் தங் காரணமாகவோ நடைபெறும் அலுவல்கள் யாவும் உங்கள் பெயரி லேயே நடைபெறும். நீங்களே அவற்றுக்கெல்லாம் மேலான அதி காரி. ஆனல் இலங்கையின் வருமானம் சம்பந்தமான அலுவல்கள் யாவும் வர்த்தக சங்கத்தவர் பொறுப்பிலேயே இருக்கும். வருமானப் பகுதியில் வேண்டிய திருத்தங்களோ மாற்றங்களோ செய்வதற்கு வர்த்தக சங்கத்தாருக்கே பூரண அதிகாரம் உண்டு.''

நோத் அவர்கள் 1-2-1798 இல் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு 4-6-1798 இல் பம்பாய்த் துறைமுகத்தை அடைந்து, தமது பதவி நியமனப் பத்திரம் உரிய வேளையில் கிடைக்காமையால் இலங்கைக்கு உடனடியாக வர இயலாமல் பம்பாயிலேயே சிலகாலந்

தங்கி, அங்கிருந்து 1-10-1798 இல் புறப்பட்டு 12-10-1798 இல் கொழும்பில் இறங்கினர். கொழும்பில் இருந்த படைப்பாலன ஆள்பதி பிரகாடியர் ஜெனரல் பியரி பிரடறிக் டி மோறன் அவர்கள் முன்னிலையில் நோத் அவர்கள் ஆள்பதியாக விசுவாசப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

ஆள்பதி நோத் அவர்கள் இங்கிலாந்தின் மன்னனுக்கும், ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்துக்கும் விசுவாசமுள்ளவராய்த் தமது உத்தியோகத்தோடு தளபதியாயும் இருத்தல் வேண்டும் எனக் குறிக்கப்பட்டது. அவர் தளபதியெனினும் அவருக்கு முன் தளபதியாக—பிரதம படைத்தலைவராக டி மோரன் இருந்தார். அவர் ஆள்பதி நோத் வந்திறங்கியதும் இலங்கையை விட்டுப் போனபோது அவருடைய இடத்துக்கு கேணல் யோசியா கம்பெயின் என்பார் நியமிக்கப்பட்டார். கம்பெயின் இதுகாறும் திருக்கோணமலையில் தளபதியாயிருந்தவராவர். திருக்கோணமலையில் இப்போது மேஜர் ஜெனறல் மக்டோவல் அவர்கள் தளபதியாய் நியமிக்கப்பட்டார்.

ஆள்பதி நோத் அவர்களுக்குப் படைப்பாலனஞ்சம்பந்தமாய்ச் சில சிக்கல்கள் ஏற்பட்டன. தாமே படைத்தலைவர் என இருந்தும் இந்திய படைத்தலைவரின் மேலதிகாரம்தமக்கு எவ்விதத்தில் வேலை செய்யும் என அவர் அங்கலாய்த்ததும் உண்டு. தமது படைப்பாலனத்தின் உறுதியை முன்னிட்டு ஆள்பதிநோத் அவர்கள் தமக்கு ஒரு படைப்பாலன சங்கத்தை ஏற்படுத்துவாராயினர். அது 13-3-1799 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன்தலைவராக கொழும்பில் இருந்த படைத்தலைவரும், உபதலைவராக படைப்பாலன சுணக்காய் வாளரும் பிறரும் இருந்தனர்.

ஆள்பதியாக நோத் அவர்கள் நியமிக்கப்பட்டபோதே அவருக்கு உதவியாக ஒரு பிரதம காரியதரிசியும் நியமிக்கப்பட்டார். இலங்கைக்கு முதன்முதல் நியமிக்கப்பட்ட ஆள்பதி நோத் அவர்களை என்றுற்போல இலங்கைக்கு முதன்முதலாக நியமிக்கப்பட்ட பிரதம காரியதரிசி ஹூகிளே கோன் அவர்களாவர். இப்பெரியாரே முன்னர் ஒல்லாந்தர் காலத்தில் கொழும்பைக் காத்து நின்ற டி மோறன் படைகளை ஆங்கிலேயருக்குச் சேவை செய்ய மாற்றிக் கொடுத்தவராவர். இவ்விதஉதவிக்குப் பிரதியுபகாரமாகப் போலும் இவருக்குப் பிரதம காரியதரிசிப் பதவியையும், ஆண்டு வேதனமாக £ 3000 பொன்னும், இவர் உதவிக்குக் கைமாறுக 6500 ரூபா பரிசம் பிற சிறப்புகளுஞ் செய்து கௌரவித்தார்கள்

இலங்கை அரசியற் பரிபாலன அலுவல்கள் யாவும் பிரதம காரியதரிசி மூலமே நடைபெறவும், இவர் மூலமே சகல பத்திரங்களும் ஆள்பதியின் மேலொப்பத்துக்கும் ஆணைக்கும் அனுப்பப்படவும் ஒழுங்குகள் நிலவின. இவருக்கு உதவியாக வேறொரு காரியதரிசியும் நியமிக்கப்பட்டார். இவர்களிலிவிட அரசாங்க அலுவல்களுக்கு ஒரு கணக்காளர் திணைக்களமும் கணக்காய்வாளர் திணைக்களமும் ஏற்படுத்தப்பட்டன. இத்திணைக்களங்களை நல்ல முறையில் ஏற்படுத்தச் சென்னையிலிருந்து சிசில் சிமித் என்ற நிபுணர் £ 1600 பொன் வேதனத்தில் நியமிக்கப்பட்டு இங்கே வந்தார்.

இரட்டையாட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட திணைக்களங்களுள் கறுவா வியாபார அலுவலகமும் ஒன்றாகும். அதன் அதிபராய் யோசேப் கிறீன்கில் நியமிக்கப்பட்டுச் சிலகாலஞ் சென்றபின் அக் காரியாலயம் கறுவாத்தோட்டத் துரையாய யோசேப் யோயின்வில் அவர்களிடம் விடப்படலாயிற்று.

ஆனால் நோத் அவர்கள் செய்த பரிபாலனத் திருத்தங்களுள் தலையாய திருத்தம் வருமானத் திணைக்களம் அமைத்தமையேயாம். முன்னர் இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய முறை நல்லது எனக்கண்டு அதனைத் தழுவித் தமது புதிய முறையைத் தயாரித்து அமைத்தார். சென்ற மூன்று ஆண்டுகளாக நீக்கப்பட்ட முறைகளால் மக்கள் வெகுவாக நலிந்தமையை ஓரளவுக்குச் சமன் செய்யவே பழைய முறைகளை மீள நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அவற்றுள் மக்களின் சட்டங்கள். வழக்கங்கள், பாதுகாப்பு, வசதிகள் என்பன பேணப்படும் என்றார். ஆகவே வர்த்தக சங்கத்தாரின் வரிக்காரரிடத்தில் அழிவழக்குகளும் பழிவழக்குகளும் குறிக்கப்பட்ட ஆள் எல்லை இல்லாமல் விடப்பட்டமை பிழை என்றும், அவர்கள் அதிகாரத்தை நீக்கிப் பழைய ஒல்லாந்தர் காலத்து முறையில் அவற்றை அமைத்தார்.

எனவே 28–10–1798 இல் அண்றூஸ் அவர்களின் அலுவலகம் நீக்கப்படும் என்றும், இலங்கை நான்கு அதிபர்களின் பரிபாலன எல்லைகளாகப் பிரிக்கப்படும் என்றும், அதிபர்கள் ஒருவர் மற்றவருக்குக் கட்டுப்படாமல் ஆள்பதியின் பிரதம காரியதரிசிக்கே கட்டுப்பட்டவராய் இருப்பர் என்றும் அவரிடமே அவர்கள் பரிபாலனங் காரணமாகத் தொடர்புகொள்ள வேண்டும் என்றுங் கூறினர்.

எனவே அண்றூஸ் அவர்கள் வருமானப் பகுதியின் தலைவர் என்ற பதவியை 4-12-1798 இல் விலகல் செய்தார். முன்னர் வருமானப் பகுதியின் வேலையில் யாழ்ப்பாணத்தில் பாபற் என்பாரும்,

கொழும்பு, காலி, மாத்துறைப் பகுதிகளுக்குக் கொழும்பில் அலெக் சாண்டரும், மட்டக்களப்பு முல்லைத்தீவுப் பகுதிகளுக்குக் கரே என் பாரும் இருந்தார்கள். இப்போதைய நிலைமையில் கொழும்பு தனிப் பிரிவாக்கப்பட்டு அதில் அதிபராக யோன் மக்டோவால் நியமனம் பெற்றார். அதன் கோரளைப் பிரிவுகள் யாவும் பழைய முதலியார் மாரிடம் பொறுப்பாகவிடப்பட்டன. முதலியார்மாருக்கு உதவி யாகத் தலைமைக்காரர் நியமனம் பெற்றார்கள். முதலியார்களுக்கு மேலாக அட்டப்பற்று முதலியார் என ஒருவர் இருந்தார். அவரை விட இராசவாசல் மகாமுதலியார் எனச் சிங்களவருக்கு ஒருவரும் தமிழருக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டார்கள். சிங்கள மகா முதலி யாராக நியமனம் பெற்றவர் யோகனீசு. டி. சேரம் என்றும், தமிழ் மகா முதலியாராக நியமனம் பெற்றவர் சேர் இராமநாதனின் தாயாரின் தந்தையாரான ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலி யார் என்றும் அறியக் கிடக்கின்றது. இம்முதலிமார்களுக்கு உதவி யாக வேறு முதலியார்களும் தலைமைக்காரரும் நியமிக்கப் படுவாரா யினர். வன்னி நாடுகளில் முதலியார்களுக்குப் பதிலாக வன்னியர்கள் நியமனம் பெற்றனர். வன்னியர்கள் அரசாங்கப் பிரசித்தங்களை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதோடு, அரசாங்கத்துக்குத் தேவையான கூலியாள்களைத் திரட்டுதல், பொது மக்களுள் ஏற்படும் சிறு வழக் குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுதல் முதலிய கருமங்களைச் செய் தார்கள். வன்னி நாட்டில் நடை பெறும் இறக்குமதிகளில் அவர் களுக்கு 2% ஆதாயப் பணமும், செம்படவர் அவர்களுக்குத் தேவை யான மச்சங்களை இலவசமாகக் கொடுத்தலும், ஆகிய சலுகைகள் எல்லாம் இப்போது நிறுத்தப்படலாயின. அவர்களுக்குக் குறிக்கப் பட்ட சம்பளம் நிர்ணயிக்கப்படலாயிற்று.

இத்தியாதி திருத்தங்களை முரண்பாடின்றி நடைமுறையிற் கொண்டுவர ஆள்பதியால் இயலவில்லை. குழுக்களும் கட்சிகளுமாய் உத்தியோகத்தர் இருந்தமை ஒரு காரணமாகும். 'சென்னை வர்த்தக சங்கத்தாரை விரும்பாத ஆள்பதி அவர்கள் சென்னை வாசிகளைச் ''சென்னைக் குழுவினர்'' என வெறுப்பாகப் பேசிவந்தார். சென்னை வாசிகள் ஆள்பதியை இடையில் நுழைந்தவன் என இகழ்ந்து கூறி வந்தனர்.

நீதிபரிபாலனத்தில் திருத்தஞ் செய்வதற்காக ஆள்பதி அவர்கள் 1798 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாத யூலை மாதமீறாக சென்னையில் இருந்தார். அவருக்காக கம்பெனியின் அவர்கள் பதி லாள்பதியாகக் கடமையாற்றினர். அக்காலத்தில ஏவாட் என்பவர்

படைகளின் மருத்துவராக நியமிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கையில் இருந்த படைகள் மலிவான குடிவகைகளைப் பருகி உடம்பு சுகங்கெட்டிருந்தனர் என அறிக்கையில் எழுதினர். முன்னர் ஆள்பதி அவர்கள் அரசாங்க உத்தியோகத்தர் சந்தைகளிலும் கடைகளிலும் சகாயமாகப் பொருள் பண்டங்களை வாங்கி வந்த வழக்கத்தையும் நிறுத்தி விட்டாராகையால் அவருக்கு அவர்களிடத்தும் எதிர்ப்பு இருந்தது. கிளே கோன் அவர்களும் பரிபாலனத்தில் நிலவிய ஊழல்களைப்பற்றி டண்டாஸ் அவர்களுக்கு அதிகமாக எழுதியமையும் வெளியாயிற்று

கிளே கோன் பிரதம காரியதரிசியாகத் தமக்குக் கிடைத்தமை தமக்குப் பெருமை என்றே ஆள்பதி முதலிற் கூறினர். கிளே கோன் அவர்களும் வெகுதிறமையாகத் தமது உதவியாளரைக் கூட நெருக்காமல் தாமே பாரிய வேலைகளைச் செய்துவந்தார். சிலகாலஞ் செல்ல ஆள்பதி அவர்களுக்குக் கிளே கோன்மீது சந்தேகம் ஏற்படலாயிற்று. அவர் சென்னை வர்த்தக சங்கத்தாருடன் சேர்ந்து தம்மை வஞ்சிக்க முனைந்தார் என ஆள்பதி கருதினர். ஆராயாமல் ஒரு வரை நம்புவதும், நம்பிக்கை வைத்தபின் அவர் மேற் சந்தேகப்படுவதும் நீங்காத துன்பத்தைத் தரும் என்பது திருவள்ளுவர் கருத்து. அதனை அவர்

''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
நீரா இடும்பை தரும்''

என்னும் குறளில் கூறியுள்ளார்.

கிளே கோனுக்கும் தமக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதும் கிளே கோனைக் கண்டியரசவையில் தானிகராக நியமிக்கவும் ஆள்பதி எண்ணினர். ஆனால் கிளே கோன் அந்நியமனத்தை அறவே வெறுத்தார். அதனால் அவர் மீது மேலும் சந்தேகங் கொண்ட ஆள்பதி அவர்கள் கிளே கோனை வேலையிலிருந்து தடுத்து வைத்தார். அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிளே கோன் வேலையை விலகல் செய்துவிட்டு வெளியேறி விட்டார்.

ஆள்பதி அவர்கள் திருக்கோணமலையில் இருந்த கறே அவர்களோடு அவர் நடத்தை காரணமாகவும், கம்பெனியின் அவர்களோடு சாராயக் குத்தகை காரணமாகவும் முரண்பட்டார். கொழும்பிலிருந்த அதிபரின் உதவியாளரான மக்டோவல் முத்துக் குளிப்பாலும் அரிசி இறக்குமதியாலும் கொள்ளை இலாபம் அடைந்தார் என்று கண்டு அவரையும் வேலையிலிருந்து நிறுத்திவைத்தார். அவருடைய

குற்றங்கள் அதிகமெனக் கண்டு அவரை வேலையினின்றும் விலத்தி அவர் உத்தியோகத்தை பொயிட் என்பாருக்கு வழங்கினர். இவ் வாறே பெரிய உத்தியோகத்தர் பலரும் பொருள் தேடும் ஊக்கத் தால் பல பிழைகள் செய்வாராயினர். இவர்கள் செய்த பிழைகளை ஆராயும் நோக்கமாக நியமிக்கப்பட்ட ஆணைச் சபை கிளே கோன் முதலானோரை வேலையினின்றும் நீக்கும் வண்ணம் தீர்ப்பளித்தது. என்வே கிளே கோனின் பிரதம காரியதரிசிப் பதவி பொயிட் அவர் களுக்கே வழங்கப்படலாயிற்று.

முத்துக் குளிப்பால் பணந் தேடிய குற்றத்துக்கு அண்றூஸ் அவர்கள் விலக்காக இருக்கவில்லை. அவர் மீது குற்றம் உண்டென்று ஆள்பதி எழுதியதும் சென்னை வர்த்தக சங்கத்தார் அண்றூஸ் அவர்களை வேலையினின்றும் விலத்தி விட்டனர். இவ்வாறுக விலத் தப்பட்டவரும், விலகிப் போனவரும், இயற்கை மரணமடைந்தவரு மாகச் குற்றவாளிகளான உத்தியோகத்தர் போயகல ஆள்பதி அவர்கள் தமது திருத்தங்களை நல்ல முறையிற் செய்வாராயினர்.

இலங்கையின் வருமானத்தையும் வர்த்தகத்தையும் கண்காணிப் பதற்கு நோத் அவர்கள் 28-4-1801 இல் ஒரு சங்கத்தைத் தாபித் தார். அதில் பிரதம காரியதரிசி, உதவிக் காரியதரிசி, கொழும்பு, காலி ஆகிய இடங்களின் வரி அதிபர், கணக்காளர் முதலாய உத்தி யோகத்தர் இருந்தார்கள். கலெக்டர் எனப்பட்ட வரி அதிகாரிப் பதவிகள் நீக்கப்பட்டு மாவட்ட அதிபர் பதவிகள் ஏற்படுத்தப் படலாயின. அதிபர்கள் வருமானத்தையும் வர்த்தகத்தையும் மேற் பார்வையிடவும், அவர்களுக்கு மாதாந்தம் குறிக்கப்பட்ட வேதனம் வழங்கவும் அதனோடு அவர்கள் திரட்டும் வரியில் 2% கழிவு பெறவும் திட்டமிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நியமனம் பெற்ற பாபற் அவர்கள் சங்கத் தில் இடம் பெறவில்லை. அவருடைய பரிபாலனத்தில் புத்தளம், மன்னார், யாழ்ப்பாணப் பட்டினம், முல்லைத்தீவு, வன்னி முதலாய மாவட்டங்கள் அடங்கின.

முன்னர் 2-8-1800 இல் செய்யப்பட்ட பிரசித்தத்தின் வண்ணம் ஓர் அளவையாளர் திணைக்களம் நிறுவப்படலாயிற்று. அதன் நாயகமாக யோசேப் யோயின் வில் முதன் முதலாக நியமிக் கப்பட்டார். அவருக்கு உதவி நாயகங்களாக நீர்கொழும்பு, கொழும்பு, மாத்துறை, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அளவையாளர் நியமனம் பெற்றனர். இன்னும்

வீதிகள் பாலங்கள் முதலிய போக்குவரத்து வசதிகளைக் கவனிப் பதற்குப் பகிரங்கவேலைத் திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டது. அதன் தலைவராய் எஞ்சினியர் கொற் கிறேவ் நியமிக்கப்பட்டார். இன்னும் 1-3-1801 இன் பிரசித்தத்தின் வண்ணம் காணிப்பதிவு அலுவலகமும் நிறுவப்பட்டது. அக்காலத்தில் பெரியம்மை நோய் இலங்கையில் அதிகமாகப் பரவியதால் வைத்தியப் பகுதியினரால் கொழும்பு, யாழ்ப்பாணம், திருக்கோணமலையாதிய இடங்களில் வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து காலி யிலும் ஒரு வைத்தியசாலையை நிறுவிய போது இலங்கையில் பன்னி ரண்டு வைத்தியசாலைகளை நிறுவ முயன்றனர். இலங்கையில் அக்கா லத்தில் சுகாதாரத்தின் பொருட்டு வருடச் சராசரி £9000 பொன் செலவாயிற்று, ஜென்னர் கண்ட முறையில் ஊசியேற்றுதல், பால் கட்டுதல் முதலிய தடை முறைகள் இலங்கையில் நல்ல பயனளித்தன. அவற்றுல் இலங்கைக் குடிசனத் தொகையில் 33000 மக்கள் பால் கட்டப்பட்டனர். அதனால் பலர் சாதலிலிருந்து தப்பினர்கள் என வைத்தியர் அதிகாரி எழுதியுள்ளார்.

சுகாதாரப் பகுதியோடு தர்மச்சபையும் நிறுவப்படலாயிற்று. அதன் மூலம் ஏழைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. கிறித்தவ கோயில்களில் உண்டியல்களில் சேர்ந்த பணமும், ஆள்பதி அவர்கள் விதித்த குற்றப் பணமும் ஏழைகளுக்கு உதவின. இலங்கையில் 1802 ஆம் ஆண்டில் மக்டோவல் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மச்சபையின் கிளைகள் நீர்கொழும்பு, சிலாபம், காலி, மாத்துறை, யாழ்ப்பாணம், களுத்துறை, திருக்கோணமலை, கற்பிட்டி, புத்தளம், மன்னர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, தங்காலை ஆதிய இடங்களில் நிலவின.

தர்மச்சாலை போலவே வித்தியாசாலையும் மக்களுக்குச் சேவை செய்யவாரம்பித்தன. பலர் கிறித்தவ சமயத்தில் சேர்ந்து கல்வி கற்கவாரம்பித்தனர். ஒல்லாந்தர் நிறுவிய கோவிற்பற்றுகளும் அவற்றைச் சேர்ந்த பாடசாலைகளும் ஆங்கிலேயருக்கு உபயோக மாயின. ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் அரசாண்ட பகுதி மாநிலப் பகுதிகளாகவும் அவை கோயிற்பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சிறு பிரிவிலும் ஒரு கோயிலும் அதனைச் சேர்ந்த பாடசாலையும் நிறுவப்பட்டன. கிறித்தவ சமயத்திற் சேர்ந்தவர் பெயர்களும், அவர்கள் கோயில்களில் திருமணஞ் செய்த தம்பதி களின் பெயர்களும் கோயில்களில் உள்ள பேரேடுகளில் பதியப்பட்டன.

இத்தகைய நல்ல முறைகள் வர்த்தக சங்கத்தாரின் பரிபாலன காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்ததை ஆள்பதி நோத் அவர்கள் வருத்தத்துடன் கவனித்தார்.

ஆள்பதி அவர்கள் ஒல்லாந்தர் முறையில் குருவாயங்களை நிலவச் செய்து அவர்களுக்கு வேதனமும் குறித்தார். அவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, மாத்துறை, காலி, களுத்துறை ஆகிய பிரிவுகளில் கடமையாற்றினர். கோயிற்பற்று பாடசாலைகளில் வாசிப்பு, எழுத்து, எண், கிறித்தவ சமய விஞ்ஞவிடை, வழிபாட்டுப் பாடல்கள், விவிலியநூல் என்பன போதிக்கப்பட்டன. இவற்றோடு சிறிதளவு ஆங்கிலமும் போதிக்கப்பட்டது.

இவற்றைவிட உயர்தர பாடசாலைகளை நிறுவிப் பறங்கிப் பிள்ளைகளுக்கு மேற்படிப்பு வசதி செய்யவும் ஆள்பதி அவர்கள் முயன்றார்கள். இவற்றில் சுதேசிகளான முதலியார்மாரின் பிள்ளைகளும் மேலுத்தியோகம் பெறத்தக்க படிப்பைப் பெற வசதியேற்பட்டது. இத்தகைய பாடசாலைகள் 30–10–1799 இல் பணியாற்றத் தொடங்கின. இரண்டு ஆண்டுகளாவதற்குள் முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கருக்கும் பாடசாலைகள் நிறுவப்படலாயின. பாடசாலைப் பரிபாலன மேற்பார்வை வணக்கத்துக்குரிய யேம்ஸ் கோடினர் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டது. சில காலஞ் செல்ல இங்கிலாந்திலிருந்து வேறும் பல கல்வி நிபுணர் இலங்கைக்கு வந்தார்கள்.

———

அத்தியாயம் 5

இலங்கை ஒரு முடிசார் குடியேற்றம்

மேன்மை பொருந்திய பிரடரிக் நோத் அவர்கள் ஆள்பதிப் பொறுப்பேற்றதும் அரசியல் சம்பந்தமாகப் பல திருத்தங்கள் செய்வாராயினர். அவர் அரசாங்கம், இராணுவம், நீதிபரிபாலனம், வைத்தியம், வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய பல துறைகளில் திருத்தங்களை ஏற்படுத்தினர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, காலி, கொழும்பு ஆகிய இடங்களில் வருமானத்தை அறவிடுவதற்கு அதிகாரிகளை நியமித்தார். இவ்வதிகாரிகள் குடியேற்றக் காரியதரிசி எனப்பட்ட பிரதம காரியதரிசி மூலம் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டவராய் இருந்தார்கள். இவ்வித நிலைமையில் சென்னபட்டின உத்தியோகத்தர் ஆள்பதியின் கீழ் சிறிய உத்தியோகங்களைப் பார்ப்பதற்கு விரும்பவில்லை. எனவே அவர்களிற் பலர் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டார்கள். இவ்வுத்தியோகத்தர் நீக்கப்பட்டதும் வரியறவிடுதற்குக்கென மாகாணந்தோறும் மாகாண அதிபர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் காலத்துக்குக் காலம் பல மேலதிக பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டன.

இவ்வாருக நோத் அவர்கள் மேலும் பல திருத்தங்கள் செய்ய வசதியேற்பட்டது. வைத்தியம், கல்வி, தபால், அளவை ஆகிய அலுவல்களைச் செவ்வனே செய்வதற்குத் திணைக்களங்களை ஏற்படுத்தினர். நீதிபரிபாலனத்துக்கு இது காறும் நிலவிய நீதிமன்றங்கள் காலதேச வர்த்தமானமெனப்படும் பலவித நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல வெவ்வேறாக இருந்தன. அவற்றை நல்ல முறையில் திருத்தி அமைப்பதற்கு எட்மன் காரிங்கரன் என்னும் சட்ட கலாநிபுணரைக்கொண்டு அவற்றை நல்ல முறையில் அமைப்பித்தார். பழைய ஒல்லாந்தர் முறைக்கிணங்க நீதிபரிபாலனம் புதுப்பிக்கப்பட்டது. இந் நீதிமன்றங்களுக்கு மேலான உயர் நீதிமன்றம் ஒன்று ஆள்பதி, பிரதம தளபதி, குடியேற்றக் காரியதரிசி ஆகிய மூவரைக் கொண்டதாய் நிறுவப்பட்டது. அதன் தலைவராக ஆள்பதி அவர்களே கடமை மேற் கொண்டார். கீழ் நீதிமன்றங்களினின்றும் அனுப்பப்பட்ட வழக்குகளை ஆறுமாதத்துக்கு ஒரு முறை விசாரிப்பதே உயர் நீதிமன்றத்தின் அலுவலாய் இருந்தது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு திருக்கோணமலை, மட்டக்களப்பு, மாத்துறை, காலி, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு, சலாபம், மன்னார் ஆகிய இடங்களில் சிறு நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

நாட்டிலே திருத்தங்களைச் செய்து புகழ்பெற்ற ஆள்பதி அவர்கள் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்வதற்கு அவசரப்பட்டார். 1800 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் ஆபரண வரி என்னும் புதிய வரியை விதித்தார். இதனல் முன்னர் தென்னை வரிக்காலத்தில் ஏற்பட்ட நிலைமை போலக் கலகங்கள் ஏற்படலாயின. இவை அடக்கப்பட்ட போதிலும் மக்கள் மனதில் திருப்தியீனம் குடி கொண்டதால் அவர்கள் எந்த நேரத்திலும் ஆங்கிலேயரை எதிர்க் கலாம் என எண்ணவேண்டியிருந்தது.

இலங்கை முடிக்குரிய நாடானதும் ஆள்பதி நோத் அவர்களுக்கு மேலாகச் சென்னபட்டின வர்த்தக சங்கத்தாருக்கிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. முன்னர் ஆள்பதி நோத் அவர்களின் நியமனத்தை அறவே வெறுத்த வர்த்தக சங்கத்தார் அவரை வெளியேற்றப் பல தந்திரோபாயங்களைக் கையாண்டதும் உண்டு. சென்னையாளரைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு ஆள்பதி மீது தனிப்பட்ட பகை மையும் நிலவியது. வர்த்தக சங்கத்தைச் சார்ந்த உத்தியோகத்தர் இலங்கையிற் சேவைசெய்ய நேர்ந்தால் அவர்கள் ஆள்பதியிடம் சேவை நலச்சான்று பெற்றுல் ஒழிய உத்தியோக உயர்வோ வேதன உயர்வோ பெறவியலாது என இராசப் பிரதிநிதியாய் இருந்த கிளைவ் அவர்கள் சுற்றறிக்கை விட்டிருந்தார். அதனேடு வர்த்தக சங்கத் தாரின் பொறுப்புக்கள் எவை என்பதை வரையறை செய்து விடு மாறும் ஆள்பதி அவர்கள் தம் மேலதிகாரிகளுக்கு எழுதியுமிருந்தார்.

எனவேதான் இலங்கையின் பரிபாலனத்தில் வர்த்தக சங்கத் தாரின் தொடர்பை அறவே நீக்குதல் வேண்டும் என்றும், அங்ஙனம் நீக்குவதால் இலங்கைக்கும் வர்த்த சங்கத்தாருக்கும் நன்மையுண் டாகும் என்றும் டண்டாஸ் அவர்கள் தகவுரை எழுதியுமிருந்தார். டண்டாஸ் அவர்கள் மன்னர்பிரானுக்குத் தம் தகவுரையைப்பற்றி வர்த்தக சங்கத்தாருக்கு வெளி வெளியாக அறிவித்தும் இருந்தார் அன்றி இலங்கையின் வர்த்தக அலுவல்கள் இலங்கை அரசாங்கத்துக் குள்ளதிலும் பார்க்கச் சென்னை வர்த்தகசங்கத்துக்கே சாதகமாக இருப்பதைத்தாம் விரும்புவதாகவும் எழுதியிருந்தார்.

ஆகவே 18-2-1801 இல் ஆள்பதி நோத் அவர்களுக்கு ஒரு புதிய ஆணைப்பத்திரம் அனுப்பப்பட்டது. அதன்படி இலங்கை, வர்த் தக சங்கத்தின் பிடியிலிருந்து நீக்கப்பட்டதென்றும், குடியியற்பாலன படைப்பாலன, பிற பரிபாலன அலுவல்கள்யாவும் ஆள்பதியவர் களிடமே பொறுப்பாக விடப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

எனவே 1801 ஆம் ஆண்டு தொடக்கம் ஆள்பதியின் அதிகாரங்கள் வெகு வலுவுள்ளனவாக்கப்பட்டன. அவர் விசுவாசப் பிரமாணம் செய்ய ஏவவும், படை திரட்டவும், இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தவும், குற்றவாளிகளை விசாரிக்கவும், அவர்களை மன்னித்துவிடவும், சட்டமியற்றவும், சட்டத்தை நிறைவேற்றவும் வலுவுள்ளவராயினர்.

அவர் நினைத்த மாத்திரத்தில் கொழும்பில் உள்ள அரசாங்க அதிபரை மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள அதிபரைக் கொழும்புக்கும் மாற்றவும், மாகாண அதிபரை நீதிபதியாகவும், நீதிபதியை மாகாண அதிபராகவும் மாற்றி நியமிக்க அதிகாரமுள்ளவராயிருந்தார். அக்காலத்தில் இலங்கைக் கரைநாடுகள் பரிபாலனங் காரணமாக எட்டு மாவட்டப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன

ஐரோப்பாவிலே யுத்த நெருக்கடிகள் ஓரளவுக்குக்குறைந்தன. மூத்த பிற் பிரித்தானிய முதன் மந்திரப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். எனவே சமாதானப் பேச்சுகள் ஆரம்பித்தன. பிரஞ்சுக்காரர் இந்தியாவில் கண்வைத்திருந்தனர் என்பது அவர்கள் எகிப்து மீது படை எடுத்ததனால் புலனாயிற்று. இந்தியாவில் தாம் அமைக்கக் கனாக்கண்ட பேரரசைக் காப்பாற்றுவதற்கு இலங்கை இன்றியமையாது வேண்டப்படும் என ஆங்கிலேயர் கண்டனர். எனவேதான் தாங்கள் இலங்கையை நிரந்தரமாக ஆளவேண்டும் என்ற நிபந்தனையை 1802 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஏற்பட்ட அமியன்ஸ் சமாதானத்தில் பெற்றுக்கொண்டனர். அன்று தொடக்கம் தமக்கு முட்டுக்கட்டையாயிருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரின் தொடர்பையும் நீக்கிவிட்டு இலங்கையை ஒரு குடியேற்ற நாடாகப் பதிந்து கொண்டனர்.

ஆங்கிலேயர் கிழக்கு நாடுகளுக்குப் போய்வரும்போது ஏடின், பம்பாய், சிங்கப்பூர் எங்ஙனம் அவர்களுக்கு இன்றியமையாத துறை முகங்களாயும் தானங்களாயும் இருந்தனவோ, அவற்றிலும் பார்க்கப் பிரதானமாய் இலங்கையில் உள்ள திருக்கோணமலைத் துறைமுகம் இருக்கும் என்றும், இலங்கையைத் தானமாகக்கொண்டு தாங்கள் தங்கள் பிரித்தானியப் பேரரசை வலுப்படுத்தலாம் என்றும் எண்ணினார்கள். எனவே அவர்கள் 1-2-1802 தொடக்கம் இலங்கையைக் குடியேற்ற நாடாகப் பதிந்து அன்று தொடக்கம் 3-2-1948 இன் நள்ளிரவு வரை 146 ஆண்டுக்காலம் முடிசார் குடியேற்றமாக அரசாண்டார்கள்.

இலங்கை முடிக்குரிய நாடாகப் பதியப்பட்டபின் ஆள்பதி அவர்களுக்கு அதிக பொறுப்பும் அதிகாரமும் ஏற்பட்டன. அவ்ரே எல்லாக் காரியங்களுக்கும் முதல்வரானர். அவர் இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற மந்திரியார் ஒருவருக்கே ஆட்பட்டவர். அவருக்கு இலங்கையிலுள்ள சகல குடியியல் அலுவலாளர்களும், படையாளரும் பணிவு, ஒத்துழைப்பு, உதவி செய்தல் வேண்டும் என அவருடைய நியமனப்பத்திரத்தில் குறிக்கப்பட்டிருந்தது. அவர் அதிகாரமுள்ள முடியின் பிரதிநிதியாகவே, அவர் முடியின் பேரால் சகல காரியங் களையும் செய்து கொள்ள வலுவுள்ளவரானர். அவர் பிரித்தானிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர். அவர் இலங்கையின் பிரதம அதிகாரியாகவும், சட்ட நிறைவேற்றதிகாரியாகவும், நீதி வழங்கும் பிரதமராயும் சட்டஞ்செய்யும் பிரதம உத்தியோகத்தராயும் இருந் தார்.

கொலனி எனப்படும் குடியேற்றத்தில் அதன் உள்ளூர்ச்சட்ட சபை அதன் பரிபாலனத்தின் பொருட்டுச் சட்டங்களை நிறைவேற் றலாம். ஆனல் அவை மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் வேத் தியல் அனுமதியைப் பெற்றல் ஒழிய அவை நடைமுறையில் வாரா. வேத்தியல் அனுமதிக்குப் பதிலாக அன்னர் பெயரால் ஆள்பதி அவர்களே அனுமதி ஒப்பம் இடலாம். ஆகவே மாட்சிமைதங்கிய முடியே சகல அதிகாரமும் உடையது.

குடியேற்றப் பிரமாணம் என்னுதலிற்றேவெளின் அஃது ஆள் பதியின் அதிகாரம் கூறிற்றென்க. ஆள்பதி அவர்கள் உயர் அதிகாரம் வாய்ந்தவர், அவர் மாட்சிமை தங்கிய மன்னருக்கே பொறுப்பாளி யான அன்னர் பிரதியாளராவர். அவர் அவர்தம் உத்தியோக நியமன வலுவின் பெயரால் குடியேற்றத்தின்உதவி, ஒத்தாசை, கீழ்ப்படிவு என்பவற்றைப் பெறுவதோடு நாட்டின் படைகளின் பணி வையும் பரிபாலனப் பகுதியாரின் கீழ்ப்படிவையையும் பெறத் தகுதி வாய்ந்த மேலதிகார உத்தியோகத்தராவர்.

அவர் முடியின் பெயரால் கடமையாற்றுபவரேயாகினும் முடி யளவு அதிகாரம் உள்ளவரல்லர். அவர் முடியுமல்லர். அவருக்கு அதிகார எல்லையுண்டு. அவர் அதனை அத்துமீறிப் போதலாகாது. அவர் முடியின் பெயரால் குடியேற்ற மந்திரியார் மூலம் பெறும் ஆலோசனை யின் வண்ணம் நடக்கவேண்டியவராவர்.

டண்டாஸ் அவர்கள் செய்த திருத்தத்தின்படி ஆள்பதி அவர்கள் ஐவருக்குமேற்படாமல் ஓர் ஆலோசனைச் சபையைக் கூட்டவும், தாம் விரும்பினல் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கவும், விரும்பா

விட்டால் அதனை நிராகரிக்கவும் அதிகார வலுவுள்ளவராயிருந்தார். அவருடைய ஆலோசனைச் சபையிலே பிரதம நீதிபதி, பிரதம படைத் தலைவர், குடியேற்றக் காரியதரிசி, இறைசேரித் தலைவர் ஆகியோருடன் இன்னும் வேறொருவரையும் அவர் சேர்த்துக்கொள்ளலாம் என்ற நியதி இருந்தது. இதனால் கழகத்தமர்ந்த மேன்மை தங்கிய ஆள்பதி அவர்களே அரசியல் அலுவல்களுக்கு அதிபதியாயினர். ஏனெனில் ஆள்பதி அவர்களின் ஆலோசனைச் சபையினருக்குச் சட்ட நிரூபண அதிகாரமோ, சட்ட நிறைவேற்றதிகாரமோ வழங்கப்படவில்லை என்பதனால் என்க. ஆள்பதி அவர்களின் ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டம் 4-2-1802இல் நடைபெற்றது. அதன் காரியதரிசியாகப் பிரதம காரியதரிசியின் உதவிக்காரியதரிசி கடமையாற்றினர்.

இக்காலத்தில் ஏற்பட்ட திருத்தங்களில் இன்னுமொன்று இலங்கையின் பரிபாலனத்தின் பொருட்டு உயர் உத்தியோகத்தரைத் தெரிவதற்காக ஏற்படுத்தப்பட்ட சிவில் சேவை எனப்படும் குடியியற் சேவைப் பரீட்சையும் தெரிவுமாம். முன்னர் ஆள்பதி நோத் அவர்கள் இலங்கைக்கு வந்த காலத்தில் அவருடன் வந்த அவருடைய பொறுக்கு மணிகளான உத்தியோகத்தர் எண்மரைவிட இப்போது 24 மேலுத்தியோகத்தர் இங்கிலாந்திலிருந்து வந்தார்கள். இங்ஙனமமைந்த சேவையாளர் மத்தியில் ஏற்பட்ட வெற்றிடங்களில் இலங்கையில் உள்ள பறங்கிக்காரர் முதலிய படித்தவர்கள் பணி புரிவாராயினர். அவர்களைப் போலவே இருமொழிப் புலமை பெற்ற முதலியார்களும் சேவைகளில் இடம் பெறலாயினர். படைப்பாலனத்தில் இருந்தவர் குடியியற் பாலனத்தில் எழுத்தாளராக நியமனம் பெறும் வழக்கம் நீக்கப்பட்டது. இக்காலத்திலேயே இலங்கை அரசாங்கப் பத்திரிகையான ''கசற்'' எனப்படும் செய்திமடல் 1802 ஆம் ஆண்டு முதலாக வெளியிடப்படலாயிற்று.

டண்டாஸ் அவர்கள் தகவுரையின் வண்ணமே வருமானச்சபை நிறுவப்பட்டது. அதற்கு முன் ஆள்பதி அவர்கள் தாம் நிறுவிய சபையை இப்போது குடியேற்ற மந்திரியாரின் ஆணையின் வண்ணம் மாற்றியமைத்தார். அதில் பிரதம காரியதரிசி தலைவராகவும், உதவியாளராக இறை சேரி உதவித் தலைவர் முதலானோரும் இருந்தனர்.

இன்னும் மேன்மை தங்கிய அதி உத்தம ஆள்பதி அவர்கள் இராணுவத்தையும், பரிபாலனத்தையும், நீதித்துறையையும் கொண்டு நடத்துவோராயிருந்தார். இராசகாரிய முறையினால் அவர் எவரையும், ஊழியஞ் செய்யும் வண்ணம் நிர்ப்பந்தப்படுத்தவும், அவர்க

ருக்குரிய வேதனத்தை நிர்ணயிக்கவும், அதனை விரும்பினால் கொடுக்கவும், விரும்பாவிட்டால் மறுக்கவும் உரிமையுள்ளவராயிருந்தார். இந்த நிலைமையை அக்காலத்தில் வாழ்ந்த முத்துக்குமார கவிராச சேகரம் என்னும் புலவர் இவ்வாறு பாடியுள்ளார்:

மருக்கட்டு மாலை முடி மன்னர்
கட்டளை வந்தபடி
தெருக் கட்டட் டாங்கன் மலைப்பாரை
யொப்பனை செய்தடித்து
நருக்கட்டு மாமறுத் தாற்குற்றம்
ஆக்கினை நம்பிக்கையென்
றிருக்கட்டு மாமிதற் கென்செய்கு
வேன் சுன்னை யேரம்பனே !

ஆள்பதி அவர்கள் அரசாங்கத்தின் பேரில் வியாபாரத்தின் ஏகபோக உரிமையும், மிதமிஞ்சிய செல்வாக்கும், அதிகாரமும், எந்த நீதிமன்றத்திலும் எவராலும் எக்குற்றத்தின் பேரிலும் குற்றஞ் சாட்டப்பட முடியாத அதி உன்னத கௌரவ மேன்மை நிலைமையும் உள்ளவராயிருந்தார். இவையேயன்றி அரசாங்கம் என்றால் ஆள்பதியெனவும், அவர் ஓர் அரசனிலும் பார்க்க அதிகமான அதிகாரங்கள் உள்ளவராயும் இருந்தார். அமெரிக்க குடியரசுத் தலைவரிலும் பார்க்க அவருக்கு அதிகாரமிருந்தது. அவருக்குக் கொழும்பில் இராணிமாளிகை என்ற உறைவிடமும், கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வாடகையோ வரியோ இல்லாத வாசத் தலங்களும் இருந்தன. அவருக்குப் பிரயாண வசதிகள் அரசாங்கப் பொறுப்பில் இருந்தன. அவர் நாட்டைச் சுற்றிப் பார்க்குங்கால் வலிமை வாய்ந்த மெய்காப்பாளரும், 160 பல்லக்குச் சுமப்போரும், 400 ஏவலாளர்களும், 50 படைவீரரும் கூடப்போவார்கள். அவர்களுடன் 6 குதிரைகளும் 2 யானைகளும் அணிவகுத்துப் போவது வழக்கம்.

ஆள்பதி அவர்களுக்கு விருதுகள், கட்டியம், பல்லாண்டு கூற மணியகாரர், முதலிமார்கள் விதானைமார் இருந்தார்கள். அவருக்கு ஆண்டுதோறும் £ 10,000 பொன் வேதனமும், மேலதிகப்படியும், நாளொன்றுக்கு 80 ரூபாவுக்குக் குறையாத வத்தாவும் பிறவருமானமும் இருந்தன. அவருடைய அந்தரங்கக் காரியதரிசிக்கும் அரசாங்கச் செலவில் ஆண்டுதோம் £ 500 பொன் அளிக்கப்பட்டது.

ஆள்பதி நோத் அவர்கள் 1805 ஆம் ஆண்டில் இலங்கையை விட்டுத்தம் தாய் நாட்டுக்கு மீண்டபோது அவருக்கு நாற்பது வயது ஆகவில்லை. அவரின் பின் சேர் தோமஸ் மெயிற்லண்ட என்பார் 17-7-1805 இல் ஆள்பதியாக நியமிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தார்.

இராணி அப்புக்காத்தாக இதுகாறும் கடமையாற்றிய அலெக்சாண்டர் யோண்ஸ்ரோன் இப்போது 1805 ஆம் ஆண்டில் பிரதம நீதிபதியாக உயர்த்தப்பட்டார். அவருடைய அளப்பரிய சேவை இலங்கையருக்கு அரியதாகவே இருந்தது. அன்னர் ஆள் பதியின் ஆலோசனைச் சபையில் அங்கத்தவராயும் இருந்தார். அவர் 1809 ஆம் ஆண்டில் குடியேற்ற மந்திரியாருக்கு இலங்கையை பற்றியும் இலங்கையரின் தேவைகள் சம்பந்தமாயும் இலங்கை அரசியல் சம்பந்தமாயும் அரிய தகவுரைகளை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்றில் இலங்கையில் உடனடியாக ஒரு சட்டசபை நிறுவப் படல் வேண்டும் என எழுதினர். அவர் எழுதிய வண்ணம் சட்ட சபை உடனடியாகத் தாபிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அக்காலத் தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட பாராளுமன்றத் தேர்தல் காரண மாக மாற்றரசாங்கம் நிறுவப்பட்டமையால் வேறு மந்திரியார் குடி யேற்ற அலுவல்களைப் பார்க்க வந்தமையால் அலெக்சாண்டர் யோண்ஸ்னின் தகவுரைகளை அவர்கவனத்தில் கொள்ளவில்லை. அத் தகவுரைகளும் நினைவேடுகளும் குடியேற்ற மந்திரியாரின் அலுவலகத் தில் இன்றும் "அலெக்சாண்டர் யோண்ஸ் ரோனின் பத்திரங்கள்" என்ற பெயரில் சேமிக்கப்பட்டுள்ளன.

சேர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரோன் அவர்களைப் பற்றி மேலும் சில வாக்கியங்கள் குறிக்கின் மிகையாகாது. அவருடைய தந்தையார் சென்னையில் மக்காட்னி பிரபுவின் கீழ் பெரிய உத்தி யோகத்தமர்ந்தவர். அவர் மதுரையிலே நெடுங்காலம் வாழ்ந்த வராகையால் தமிழ், தெலுங்கு, இந்துஸ்தானி முதலிய பிற மொழி களையும் பயின்று புலமை பெற்றார். அவர் சுவாற்ஸ் என்ற பாதிரி யாரிடமும் சேர் தோமஸ் மொன்ரோ அவர்களிடமும் கல்வி கற்றார். அவருக்கு இந்திய கலாசாரத்தின் அருமை நன்கு விளங்கிற்று.

அவர் சட்ட வாதியாகச் சான்று பெற இங்கிலாந்துக்குப் போன காலத்தில் கீழைத் தேசங்களில் சேவை செய்யுமாறு வேண் டப்பட்டு இலங்கையின் வழக்குரைஞர் நாயகமாக நியமிக்கப் பட்டார். அப்பதவியில் இருந்து திறமையாகச் சேவை செய்த அவர் 1805 இல் பிரதம நீதியரசராக உயர்த்தப்பட்டார். அவர் இலங்கையின் இரண்டாவது பிரதம நீதியரசர் என்ற சிறப்பும் அவருக்குண்டு. அவர் தமது உத்தியோக அலுவல்களோடு இலங் கையின் கலாசாரம் வரலாறு ஆகியவற்றையும் நன்கு அறிந்து மற்றவர்களும் அவற்றை நன்கறிய அரிய பணி செய்துள்ளார். அதனாலேயே ஆங்கிலேய அரசாங்கத்தார் அவரை 1809 ஆம் ஆண்டில்

இங்கிலாந்துக்கு அழைத்து இலங்கையின் அரசியல் சம்பந்தமாக அவரிடம் ஆலோசனைகேட்டனர். அவருக்கு நைற் பட்டம் அளித்துக் கௌரவித்து மேலும் உத்தியோக உயர்வு கொடுத்தார்கள்.

சேர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரோன் அவர்கள் ஆலோசனையின் வண்ணமே இலங்கையில் எல்லோருக்கும் உபயோகமான கல்வி முறையும், சமய சுதந்திரமும், அடிமை வியாபார நீக்கமும், யூரிமார் எனப்படும் நடுவர் மத்தியில் வழக்குகள் விசாரிக்கும் முறையும் ஏற்பட்டன. இத்திருத்தங்கள் யாவும் அவருடைய பெருமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

யோண்ஸ்ரோன் அவர்கள் 1819 ஆம் ஆண்டில் இளைப்பாறி இங்கிலாந்துக்கு மீண்டதும் இராசாங்க ஆசிய சங்கத்தைத் தாபித்தார். அவருடைய சட்ட அறிவைப் பாராட்டிய அரசாங்கம் அவரைக் கோமறைக் கழகத்தில் அங்கத்தவராய்ச் சேர்த்தது. கோமறைக் கழகத்தின் நீதிக் குழுவில் இருந்து யோண்ஸ்ரோன் அவர்கள் செய்த பணியினாலேயே குடியேற்ற நாடுகள் நல்ல முறையில் மேன்முறையீடுகள் செய்து நீதி வழங்கப்படலாயின.

யோண்ஸ்ரோன் அவர்களுடைய அறிக்கைகள், நிலைவேடுகள், மனுக்கள் ஆகியவற்றை ஆராய்ந்த எல்லீஸ்துரை முதல், நீதியரசர் கலாநிதி தம்பையா அவர்கள் ஈறாக உள்ள பெரியார்கள் அவற்றை வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளார்கள். இலங்கைச் சரித்திரம், தமிழர் தேசவழமை, இந்துக்கள் சட்டம் என்பனவாதியவை சம்பந்தமாக யோண்ஸ்ரோன் செய்த ஆராய்ச்சியும், தேடிவைத்த குறிப்புக்களும் அளவில்லாதன என்பர், இவ்வாறே கண்டியர் சட்டம், முகமதியர் சட்டம் என்பன சம்பந்தமாகவும் அவர் அரிய குறிப்புக்களைச் சேகரித்துவைத்துள்ளார்.

இன்னும் ஒல்லாந்தருடைய இலங்கைக் கரையோரப்பகுதிகளை ஆங்கிலேயர் கைப்பற்றிய வரலாறு சம்பந்தமாக டீ மோறன் எழுதியவை, ரூமன் டச் சட்டங்கள் சம்பந்தமானவை, இலங்கைக் கரை நாடுகளைப் பரிபாலித்த ஒல்லாந்த ஆள்பதிகளின் அறிக்கைகள், பார்சிக்காரனின் சட்டங்கள் வழக்கங்கள் வன்னிநாட்டார் வரலாறுகள் என்பன சம்பந்தமாக யோண்ஸ்ரோன் எழுதியும் எழுதுவித்தும் மொழி பெயர்ப்பித்தும் சேகரித்துவைத்த அருஞ்செல்வங்கள் எண்ணிறந்தனவாகும். அவர் ஒரு மகா விவேகி.

———

அத்தியாயம் 6

ஆங்கிலேயரும் கண்டியரசனும்

கயல்வ ரைந்த துவசன் பணிநவ
கண்டி மன்னன் வராச சிங்கன்
இயல்பு டன்திருச் செங்கோ லோச்சிய
சழ மண்டல நாடெங்கள் நாடே.

—சின்னத்தம்பிப்புலவர்

இங்ஙனம் புலவர் நாவில் பொருந்திய பெருமை வாய்ந்த வற்றாத வளமுள்ள மாவலிகங்கையினால் வளம்படுத்தப்படும் கண்டி நாட்டின் வரலாறே தனிக் கதையாய் உள்ளது. அது செங்கடகல் நகரின் பூர்வ இதிகாசய எனச் சிங்களத்திலும் உள்ளது. கந்த உடரட்ட எனப்படும் மலைநாடு மாண்பு மிக்கதாகவே முற்காலத்தில் விளங்கியது.

இங்கிலாந்தில் 1485 இல் ஏழாவது கென்றி மன்னன் முடி சூடுவதற்கு முதல் வருடத்தில் கண்டியில் வீரவிக்கிரமன் என்பான் மன்னனாக முடிசூடினான். அவன் ஸ்ரீசங்கபோதியின் மரபில் வந்தவன் என மகாவமிசம் கூறும். செங்கடகல என முற்காலத்தில் வழங்கப்பட்ட கண்டி வளம் நிறைந்த நகராகவே நிலவி வந்தது. மகாவலி கங்கையால் வளம்படுத்தப்பட்ட கண்டி, மலைநாடுகளின் பிரதான நகரம். அது காவல் நிறைந்த கவின்பெறு நகரம்.

முதலாவது இராசசிங்கன் 1587 இல் போர்த்துக்கீயரை முறியடித்த பெருமை உள்ளவன். போர்த்துக்கீயரைக் கொழும்பிலும் காலியிலும் அடக்கியதோடு அவர்கள் பிரதிநிதியாய டொனகதறீனாவை இராணியாக்கி விமலதர்மன் தனி அரசாண்ட இடம் கண்டி. விமலதர்மனுக்குப் பிறகு கண்டியில் அரசுசெய்த செனரதன் ஒல்லாந்தர் உதவியுடன் போர்த்துக்கீயரின் சதிகளைச் சிதற அடித்தான். அம்முயற்சி நடைபெறுதிருந்தால் போர்த்துக்கல் மன்னனை முதலாவது பிலிப் இலங்கைக்கு அரசனாகி, இலங்கை போர்த்துக்கீய குடியேற்றமாய் மாறியிருக்கும்.

செனரதனுக்குப் பின்னர் டொன் கொன்ஸ்ரன்ரைன் டிசா கண்டிமீது படையெடுத்து வெள்ளவாயாவில் 1630 இல் படுதோல்வி அடைந்தமை கண்டி மக்களின் வீரத்தைக் காட்டுகிறது. இரண்டாவது இராசசிங்கன் காலத்தில் கண்டியைத் தீக்கொளுவி எரித்த

டயகோடி மெல்லோ முதலானவர்களைப் பேராதனையில் அடித்து நொருக்கி வீழ்த்திய வீரமும் கண்டியருக்கு இருந்தது. ஒல்லாந்தர் இலங்கைக் கரைநாடுகளைப் பிடித்தபோது இராசசிங்கன் கரைநாடு களிலேயே இருந்தான்.

விமலதர்மசூரியனுடைய வாழ்க்கையே ஒரு வீரன் வரலாறுகும் அவனுடைய இளமைப் பெயர் கோணப்பு பண்டாரன். அவன் டொன்யுவான் என்னும் கிறித்தவ மதப்பெயரைத் தாங்கிப் போர்த் துக்கீயரின் போர்முறைகளையும் தந்திரோபாயங்களையும் அந்தரங்கங் களையும் ஒருகாலத்தில் அறிந்தவன். அவன் கண்டியைப் போரிட் டுக் கைப்பற்றியவன். அல்லாமலும் தன் ஆளுரிமையைப் பலப் படுத்தவே பழைய கண்டி மன்னனை கரளியட்ட பண்டாரனின் மகளாகிய டொனகதரினவை முறைப்படி மணந்து இராணியாக்கி யவன். அன்றி கண்டிமீது படையெடுத்த இராசசிங்கனை முற்றுக முறியடித்துப் பெருவெற்றி வாகை சூடியவன். கண்டிப் பொதுமக் களினதும் சங்கத்தாரதும் ஆதரவைப்பெறவே அவன் புத்தசமயத்தை மேற்கொண்டு விமலதர்மசூரியன் எனப் பெயரும் பூண்டான். தனக்கு மாறுக இருந்த போத்துக்கீயரை கன்னெறுவா என்னுமிடத்தில் முறியடித்து வெற்றிபெற்றான். இப்போரிலேயே போத்துக்கீய தள பதி டீ சூசா உயிர் துறந்தான்.

விமலதர்மனை அடக்கவே போத்துக்கீயப் பெருவீரனை அசி விடோ ஆளுநராக இலங்கைக்கு வந்தான். அவனையும் விமலதர்மன் ஒல்லாந்தருடைய நட்பைப் பெற்று வெற்றிபெற்றான் என்பது சரித் திரம். தர்மபாலன் (1551–1597) தனது கரைநாடுகளைப் போத் துக்கீய மன்னனுக்குத் தத்தஞ் செய்து கொடுத்த கொடையை மல்வான மகாநாடு முறையேற்புச் செய்தமையால் இலங்கைச் சரித் திரத்திலே ஒரு புதிய திருப்பம் ஏற்படலாயிற்று. அன்று தொடக்கம் கண்டி மன்னனையே சிங்களவர் பெரிதும் அபிமானிக்கத் தொடங் கினர்கள். கந்தஉடரட்ட இராச்சியம் பிரபலிக்கமுறுவதாயிற்று.

இவ்வாறுகப் பகைமையுள்ள கோட்டை சீத்தவாக்கை அரசு கள் இரண்டும் பதினேழாம் நூற்றாண்டில் மறைந்தபின் கண்டி அரசு ஒன்றே சிங்கள அரசின் இராசதானியாக விளங்கிற்று. இலங்கைக் கரைநாடுகளில் அதிகாரம் பெற்ற போத்துக்கீயர் கிறிஸ்த சமயத்தை அங்கே பரப்புவதில் முனைந்தார்கள். எனவே கரைநாட்டுச் சிங்கள வரில் பலர் தங்கள் சாதி சமயம் அழியாமல் இருப்பதற்காகக் கண்டிநாடுகளில் குடியேறுவாராயினர். அவர்களுக்குச் சாதியிலும் சமயமே பெரிதாயிருந்தது.

கண்டியை ஆண்ட இரண்டாவது இராசசிங்கன் ஒல்லாந்தர் உதவியைப்பெற்று இலங்கையின் கரைநாடுகளிலிருந்து போத்துக்கீய ரைக் கலைக்க முயன்றான். மட்டக்களப்பில் அல்லது கொட்டியாரத் தில் ஒரு கோட்டை கட்டுவதற்கு ஒல்லாந்தருக்கு அநுமதி கொடுத் தால், தான் இலங்கை முழுவதற்கும் அரசனாய் இருக்கலாம் என எண்ணினான். எனவே ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவன் வெஸ்ரர் விவால் இராசசிங்கன் உதவியுடன் 18-5-1638 இல் கோட்டையைக் கைப்பற்றினான். அதன்பின் 23-5-1638 இல் கண்டியரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது.

அதன்படி கண்டி நாட்டு விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும் ஏகபோக உரிமையை ஒல்லாந்தர் பெறவும், அவர்கள் கண்டியர சனுக்குப் பொருளுதவி படையுதவி முதலியன செய்யவும் உடன் பாடு தெரிவித்தனர். அதன் பின் படிப்படியாக இலங்கைக் கரை நாடு களில் செல்வாக்குப்பெற்ற ஒல்லாந்தர், போத்துக்கீயரின் கோட்டை களையும் வலுநிலையங்களையும் ஒவ்வொன்றாகக் கைப்பற்றி அவர்களை 1658 ஆம் ஆண்டு யூன் மாதத்துள் இலங்கையை விட்டு அகற்றி விட்டனர்.

ஒல்லாந்தர் கைப்பற்றிய இடங்களைத் தன்னிடம் கொடுப் பார்கள் என இராசசிங்கன் எண்ணினான். தான் அவர்களுக்கு ஓரிடம் கோட்டை கட்டக் கொடுப்பதாகவே வாக்களித்தான் ஆனால் ஒல் லாந்தர் நாடுகளைக் கொடுக்காமல் இருந்தபோது அவனே அவற்றைக் கேட்டான். அதற்கு அவர்கள் தங்கள் படைச் செலவை இராச சிங்கன் கொடுக்கவேண்டும் என்றார்கள். இராசசிங்கனால் செலவைக் கொடுக்க இயலவில்லை. அவன் அவ்வாறு கொடுப்பதை விரும்பவு மில்லை. அதன் பெறுபேறாக ஒல்லாந்தரைக் கருவியாகவும் தான் கருத்தாவாகவும் இருக்க எண்ணிய இராசசிங்கன் இப்போது ஒல் லாந்தர் கையில் கருவியானான். ஒல்லாந்தர் இலங்கைக் கரைநாடு களைத்தாம் கைப்பற்றியதால் அவை தங்களுடையதென்றனர். ஆனால் இராசசிங்கன் ஒல்லாந்தர் தனக்கு உதவிக்குவந்த பாதுகாவலர் என்றே கூறினான். இருபக்கத்தாருக்கும் உள்ள உறவு வியாபாரத் தால் ஏற்பட்ட இணைப்புத்தானே.

வர்த்தகத்தை விரும்பிய ஒல்லாந்தர் சமாதானத்தையே விரும் பினர். அவர்கள் விரும்பிய கறுவா, பாக்கு ஆகிய சரக்குகள் கண்டி யரசனுக்குச் சொந்தமான நிலங்களிலேயே அதிகமாக விளைந்தன. அன்றிச் சிலாபம், புத்தளம், கொட்டியாரம் ஆகிய துறைமுகங்கள் கண்டி மன்னனுக்குரியனவாகவே இருந்தன. ஆனால் திருக்கோணமலை,

மட்டக்களப்பு, கல்பிட்டி ஆகிய துறைகள் ஒல்லாந்தர் பிடியில் இருந்தன. இந்நிலையில் இருதிறத்தாரும் ஒருவரை ஒருவர் பகைக்கக் காரணங்கள் ஏற்பட்டன.

கண்டியை அரசாண்ட நாயக்க மன்னர் பரம்பரையின் முதலாவது மன்னன் ஸ்ரீ விஜயராசசிங்கன். அவன் 1739 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாண்டான். அவன் திறமையுள்ள மன்னனாய் இருந்தது மாத்திரமன்றிப் பகைவரை அஞ்சாதவனாயும் இருந்தான். அவன் காலத்திலே ஒல்லாந்தரின் மிரட்டலுக்கு அவன் பணியவில்லை. அவன் தன் இராச்சிய எல்லைகளை அகலிப்புச் செய்தும், ஒல்லாந்தர் செய்த மதமாற்றத்தைப் பொருதும் இருந்தான். கண்டியரசனைப் பகைத்தல் ஆகாது என ஒல்லாந்தருக்கு மேலிடத்து ஆணை கிடைத்தமையால் அவர்கள் மன்னனை எதிர்க்காது இருந்தார்கள். இவ்வாறான வேளையிலேதான் 1761 ஆம் ஆண்டில் கரைநாடுகளில் விவசாயிகள் சம்பந்தமாக ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதனை வாய்ப்பாகக்கொண்டு கண்டியரசன் கீர்த்தி ஸ்ரீ இராசிங்கன், கரைநாடுகள் மீது படையெடுத்தான். ஒல்லாந்தர் கண்டிப் படைகளைத் தீவிரமாக எதிர்த்தபோது கண்டியரசன் ஆங்கிலேயரின் உதவியை நாடினான். அது நிற்க.

ரோபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயன் 18 வயதுச் சிறுவனாய் இருந்த காலத்தில் இராசசிங்கனுடைய அரண்மனையில் இருத்தப்பட்டான். அவன் அங்கே 20 ஆண்டுகளுக்கு அதிகமாக உறைந்து கண்டியைப் பற்றி எழுதியுள்ளான். ''இந்த இராச்சியம் 21 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பெரும் பிரிவுகள் திசாவனிகள் எனவும், சிறு பிரிவுகள் ரட்டைகள் எனவும் அழைக்கப்படும். பெரும் பிரிவுகள் பன்னிரண்டைத் திசாவைகள் பரிபாலிப்பர். சிறு பிரிவுகள் ஒன்பதையும் றட்ட மகாத்மயா என்ற தலைவர்கள் கண்காணிப்பர். கண்டியரசன் அளப்பரிய அதிகாரம் உள்ளவன். கண்டி மன்னர் பொதுவாகப் பிடிவாதக் குணம் உள்ளவர் அவர்கள் விடாக் கண்டர்கள். அரசனுக்கு உதவியாக உதகம்பக, பல்லகம்பக என இரு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதி பரிபாலனம் புரியவும், நிறைகளைத் திரட்டவும், படைகளை நடத்தவும் அதிகாரமும் உரிமையும் உண்டு. அவர்களுக்குக் கீழே உள்ள திசாவை முதலிய உத்தியோகத்தர் நத்தம் பிரிவுகளில் படை நடத்துதல் முதலிய பணிகளைச் செய்வர். கண்டியரசின் பரிபாலன அலுவல்கள் பல உத்தியோகத்தரால் திறம்பட நடத்தப் படுகின்றன'' என்பன நொக்ஸ் எழுதிய வாசகங்கள்.

கண்டியரசு மிகப் பரந்துபட்ட நிலப்பரப்பைக் கொண்டு நிலவியது. அதிலே (இக்காலத்துப்பிரிவுகளாயுள்ள) மத்திய மாகாணம் ஊவாமாகாணம், கீழ் மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய பகுதிகளோடு அம்பாந்தோட்டை மாவட்டமும் சேர்ந்திருந்தன. கண்டி மக்கள் பெரும் பாலும் கிராம வாழ்க்கையே வாழ்ந்தார்கள். அவர்களுடைய கிராமங்கள் ஏறக்குறைய 4000 என்றும் அவை கண்டி மாவட்டத்தில் 1328, மாத்தளை மாவட்டத்தில் 605, நுவரெலியா மாவட்டத்தில் 578, பதுளை மாவட்டத்தில் 1376 என அறியக் கிடக்கிறது.

இரண்டாவது விமலதர்ம சூரியன் ஆட்சிக் காலத்திலே தான் (1687–1701) கண்டிப் பிரதானிகள், அதிகாரிகள் அதிக செல் வாக்குப் பெற்றார்கள். அவன் புத்த சமய சூழலிலே வளர்ந்தமையால் புத்தருடைய பற்கோயிலை நல்ல முறையில் அதிக பொருள் செலவு செய்து கட்டினான்.

ஸ்ரீ நரேந்திரசிங்க என்ற மன்னன் 1706 தொடக்கம் 1739 வரை கண்டியை ஆண்டான். அவனே கண்டியை ஆண்ட சிங்கள வம்ச மன்னருள் கடைசி மன்னன். அவனுக்குப் பிள்ளையில்லா மையால் அவன் தனக்குப் பிறகு தன் நாயக்க மனைவியின் தம்பியா ரையே அரசனாய் நியமித்தான். அந்த இளைஞனே ஸ்ரீ விஜய ராசசிங்கன் என்ற மகுடப் பெயரோடு 1739 முதல் 1747 வரை அரசாண்டான். அவனுக்குப் பின்னர் அரசாண்ட கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் 1747 முதல் 1780 வரை அரசியற்றினான். அவனே சீயம் நாட்டுக்குத் தூதுவரை அனுப்பி குருமாரை இங்கே வரவழைத் தான். அவர்கள் மகாவம்சத்தை மறுபடி திருத்தி எழுதினார்கள் என்பர். அவனுடைய காலத்திலிருந்த மதிப்புக்குரிய வெலிவித்த ஸ்ரீ சரணங்கர தேரு என்பாரே புத்த சங்கத்தின் இறுதிச் சங்கராசா எனப் பெயர் பெற்றவராவர். இவன் காலத்துப் பௌத்த இலக் கியமும் முந்திய தம்பதேனிய, சீத்தவாக்கை காலத்து மதிப்புக்குரிய இலக்கியங்கள் போன்றன எனப் புலவர் போற்றுவர்.

கண்டியரசன் ஆங்கிலேயரின் உதவியை நாடியமை காரண மாகவே ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திலிருந்து பைபுஸ் கண்டியரசனிடம் தூது சென்றான். யோன் பைபுஸ் தூது சென்ற கதை மிகவும் பெரியது. அது கண்டி மன்னனுக்குப் பயனளிக்க வில்லை. ஆனால் கண்டி மன்னன் ஆங்கிலேயருடன் சேர்ந்து தங்களை விரட்டச் சதி செய்தான் என்பதை ஒல்லாந்தரால் சகிக்க முடியவில்லை. இந்த நேரத்திலே தான் வான் எக் என்பான் ஒல்லாந்தரின் புதிய

ஆள்பதியாய் இலங்கைக்கு வந்தான். அவனுடைய கட்டளையினால் கண்டியரசனுக்குச் சொந்தமான சிலாபம் புத்தளம் ஒல்லாந்தரால் பிடிக்கப்பட்டன. அத்துடன் நில்லாத ஒல்லாந்தர் கண்டி மீது படை எடுத்து 1765 ஆம் ஆண்டில் அங்கே வெற்றிச் சங்கொலித்தனர்.

ஒல்லாந்தரால் கண்டியைப் பாதுகாக்க இயலவில்லை. அவர்களால் அங்கு தங்கவும் இயலவில்லை. எனவே அவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கி விட்டார்கள். ஒல்லாந்தர் கண்டியைவிட்டு நீங்கிய பின் கண்டியருக்கும் நிலைமை பாதகமாகவே இருந்தது. வயல்கள் விதைக்கப்படாமலும், உப்பு விநியோகம் இல்லாமலும், இன்னோரன்ன குறைகளால் கண்டி வாழ் மக்கள் இன்னலடைந்தார்கள். இவற்றோடு ஒல்லாந்தர் மூன்று கோரளை, நாலு கோரளை, ஏழு கோரளை, விந்தனை மாத்தளை ஆகிய இடங்களில் கண்டி மன்னனுக்கு இடையூறு விளைவித்தார்கள். இருபக்கத்தவரும் சமாதானத்தை விரும்பினராகவே 14-2-1766 இல் ஒரு சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டது.

கண்டி மன்னர் வரலாற்றில் 14-2-1766 இல் ஏற்பட்ட சமாதானம் மகத்தானது. அதன் வண்ணம் இலங்கைக் கரைநாடுகள் ஒல்லாந்தருக்கு உரியதெனவும், அவர்கள் புதிதாகக் கண்டி மன்னனிடம் கைப்பற்றிய நிலங்களுக்குத் திறை கொடுக்கவும். இருபக்கத்துப் பிரதியாளர் ஒன்று சேர்ந்து எல்லைகளை நிச்சயிக்கவும், ஒல்லாந்தர் கண்டி மன்னனுடைய மலை நாட்டு ஆள் இறைமையைக் கணிக்கவும், தாங்கள் கைப்பற்றிய அவன் நிலங்களை அவனிடம் திருப்பிக் கொடுக்கவும், கண்டியர் அம்பாந்தோட்டை புத்தளம் ஆகிய உப்பளங்களுக்குத் தடையின்றிப் போய்வரவும், அங்கே வரியின்றி உப்பெடுக்கவும், அங்ஙனமே ஒல்லாந்தர் மலை நாட்டின் தாழ்பூமியில் கறுவா உரிக்கவும், அதற்குக் குறிக்கப்பட்ட விலை கொடுக்கவும், அத்துடன் யானைத் தந்தம், மிளகு, கோப்பி, பாக்கு, தேன்மெழுகு ஆகியவற்றைக் குறிக்கப்பட்ட விலையில் ஒல்லாந்தர் வாங்கிக் கொள்வதை ஏகபோக உரிமையாகக் கொடுக்கவும், இரு அரசுகளின் குடிகள் சுதந்திரமாய் மற்றவர் நாட்டில் வியாபாரஞ் செய்யவும், மன்னனுக்குத் தேவையான வெளிநாட்டுப் பொருள்களை ஒல்லாந்தர் கொடுக்கவும், ஒல்லாந்தருக்குத் திருக்கோணமலையாதிய இடங்களில் தேவையான மரங்களைக் கண்டி மன்னன் கொடுக்கவும், ஒரு நாட்டிலிருந்து மற்றநாட்டுக்கு ஓடித் தலைமறைவாய்த் திரியும் குற்றவாளிகளையும் அடிமைகளையும் அவரவர் பிடித்து உரிய நாட்டினரிடம் ஒப்படைக்கவும், ஒல்லாந்தர் கண்டியரசைப் பிறநாட்டினரிடமிருந்து காப்பாற்றவும், கண்டியரசன் ஒல்லாந்த அரசாங்கத்துக்குப் பணமும்

கூலியாட்களும் உதவவும், பிறநாட்டினரைக் கண்டியரசன் உபசரித்து ஒப்பந்தம் எழுதாதிருக்கவும், இவ்வாறே கண்டியரசனுக்கு எதிராக ஒல்லாந்தர் பிறநாட்டினருடன் ஒப்பந்தம் எழுதாமல் இருக்கவும், உப்பு, கருவாடு, கறுவா ஆகிய பொருள்கள் சம்பந்தமாக இரு பக்கத்துத் தூதுவருங் கூடி ஆலோசித்து முடிவு காணவும் ஒப்பந்தம் எழுதப்பட்டது.

இவ்வொப்பந்தம் கண்டியரை வெகுவாகக் கட்டுப்படுத்தியது என்றுதான் கூறவேண்டும். கடல் சூழ்ந்த ஒரு தீவுபோல ஒல்லாந்தரின் கரைநாடுகளால் சூழப்பட்ட ஒரு சிறு இராச்சியமாகவே கண்டி விளங்கியது. கண்டியருக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாதவாறு துண்டிக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட வண்ணம் நாடுகளின் எல்லை நிர்ணயிக்கப்படவில்லை. அரசனுக்கு அதிக சேதம் ஏற்பட்டமையால் அவன் ஒல்லாந்தரிடம் முத்துக் குளிப்பிலும் யானை வியாபாரத்திலும் பங்கு கேட்டான். அத்தோடு கரைநாடுகளிலும் தனக்குச் சாதகமான பாகங்களைத் தருமாறு நெருக்கினான்.

அவை கிடையாதமையால் விரக்தியடைந்த கண்டியரசன் ஐரோப்பிய நாடுகளோடு தொடர்பு கொண்டான். எவர் உதவியைப் பெற்றேனும் எதுவிதத்திலும் ஒல்லாந்தரை இலங்கைக் கரைநாடுகளை விட்டுத் துரத்துவதே அவன் நோக்கமாக இருந்தது. இதனால் 1782 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் திருக்கோணமலையைக் கைப்பற்ற வசதியாயிருந்தது. ஆனால் பிரஞ்சுக்காரர் அதனைக் கைப்பற்றி மறுபடியும் ஒல்லாந்தரிடம் கொடுத்துவிட்டனர். முன்னர் பைபுஸ் தூது பயனளிக்காது போனமைபோல இப்போ பொயிட் தூது பயனளிக்காமையால் அரசன் பிரஞ்சுக்காரரின் உதவியை நாடினான். அதனால் கண்டியரசனுக்கும் கரைநாட்டில் ஒல்லாந்தருக்கும் பழையபடி கலகங்கள் ஏற்படலாயின.

இராசாதி இராசசிங்கன் என்பான் 1780 ஆம் ஆண்டு முதல் 1798 ஆம் ஆண்டு வரை அரசாண்டான். அவன் ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியிலே ஆங்கிலேயர் திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய செய்தியை அறிந்தான். இராசாதி இராசசிங்கனுக்கு ஐந்து மனைவியரிருந்தும் ஒருவருக்கேனும் பிள்ளையில்லாதமையால் அவன் தனக்குப்பின் பட்டத்துக்குப் பிள்ளையில்லாக் குறையால் வருந்தினான். அதனிற்போலும் கண்டியில் இருந்த

அதிகாரிகள், பிரதானிகள், திசாவைகள் அதிக செல்வாக்குப் பெற லாயினர். அவர்களுள் முதலாவது மந்திரியாயிருந்த பிலிமைத் தலாவை நயவஞ்சகமும் சுயநலப் போக்கும் உள்ளவனாயிருந்தான்.

இராசாதி இராசசிங்கன் தனக்குப் பிறகு தன் மூத்த மனைவியின் தம்பியார் முத்துச்சாமியே முடிக்குரிய இளவரசன் என நியமனஞ் செய்திருந்தான். ஆனால் பிலிமை எதுவிதத்திலும். தானே அரசனாய் வருதல் வேண்டும் என்ற வேணவா வீணாவாகப் போகாதிருப்பதற் காக அந்த நேரத்தில் ஒரு சதி செய்தான். இராசாதி இராசன் இறந்ததும் இரண்டாவது மனைவியின் சகோதரன் கண்ணசாமியை ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்ற மகுடாபிடேகப் பெயரிட்டு முடி சூட்டி மன்னனாக்கினான். மன்னனைத் தன் கைப்பொம்மை போல ஆட்டித் தனக்கு விருப்பமான காரியங்களைச் செய்து வந்தான்.

இறந்த மன்னனின் மூத்த மனைவியாலும் அவளுடைய சகோதரனா லும் தனக்கும் விக்கிரமராசசிங்கனுக்கும் இடையூறு வராதிருப்பதற்காக அவர்களை நாட்டை விட்டுத் துரத்தியும் அவர்களுக்கு ஆதரவாயிருந் தவர்களைச் சிறையிலிட்டும் பாதுகாப்புத் தேடிக்கொண்டான். அவனால் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட மூத்த இராணியும் தம்பி முத்துசாமியும் ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தனர். ஆங்கிலேயர் அவ்விருவரையும் ஏற்று யாழ்ப்பாணக் கோட்டையில் பாதுகாத்து வந்தார்கள். இவ்வேளையில் அதிகாரத்தை நன்கு சுவைத்த பிலிமைத் தலாவை மேலும் தாமதியாது தனது கைப்பொம்மையாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கனை நீக்கிவிட்டுத் தானே மன்னனாய் முடி சூடத் திட்டம் வகுத்தான் தனது கருத்தை ஆங்கில ஆள்பதிக்குத் தெரி வித்து ஆங்கிலேயருடைய உதவியையும் கோரினான். ஆள்பதி அவர்கள் பிலிமையின் வேண்டுகோளுக்கு இணங்க மறுக்கவே, பிலிமை கண்டியரசனையும் ஆங்கிலேய ஆள்பதியையும் பகைக்கச் செய்து பல சூழ்ச்சிகளைச் செய்தான்.

இலங்கைக் கரை நாடுகளில் தமது அதிகாரத்தைப் பல படுத்திய ஆங்கிலேயர் கண்டியருடன் நாளது வரையில் வியாபாரத் தொடர்பு மாத்திரமே கொண்டிருந்தனர். குடியேற்றக் காரியாலயம் கண்டி மீதும் செல்வாக்குப்பெற முனைந்த போது ஆள்பதி நோத் அவர்கள் முதலாம் அதிகாரி பிலிமையோடு இரகசியத் தொடர்பு கொள்ளலானார். இதனை அறிந்த கண்டியரசன் தனது அதிகாரியின் நயவஞ்சகத்தனத்தை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் சூரர நடவடிக்கைகளைக் கையாண்டான். அதனால் ஆங்கிலேயருக்கும் கண்டி மன்னனுக்குமிடையில் போர் உண்டானது. தளபதி மக்

டோவல் 3000 படைகளுடன் சென்று கண்டியை அடைந்தான். திருக்கோணமலையிலிருந்து சென்ற கேணல் பாபட். கண்டி நகரம் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்ததைக் கண்டான். ஆங்கிலேயரின் ''ஸ்கோச்ட் ஏத் பொலிசி'' என்ற நெருப்பிட்டுப் பின்வாங்குகிற வழக்கம் அவர்களுக்கு முன்பே கண்டி மன்னரின் வழக்கமாயிருக்கக் கண்ட ஆங்கிலேயர் வெட்கினர். ஆள்பதி நோத் அவர்களின் மக்கியாவலி இராசதந்திரம் பயனளிக்கவில்லை. அவர் நம்பியிருந்த அதிகாரியே ஆங்கிலேயரைத் துன்புறுத்தவும் ஆயத்தமானான்.

ஆங்கிலேயர் கண்டியை நோக்கிப் படை எடுத்தமையைக் கேட்ட கண்டியரசன் அங்குறுங்கட்டையில் மறைந்திருந்தான். இதற்குள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஆங்கிலேயர் பாதுகாப்பளித்து வந்த முத்துச்சாமியை 8-7-1803 இல் கண்டி மன்னன் என மக்டோவல் தளபதி ஆள்பதி அவர்கள் அநுமதியுடன் பிரகடனஞ் செய்தான். இதனை அறிந்த பிலிமை, ஆள்பதிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அதிலே தானும் ஆங்கிலேயரும் ஏதாவது ஓர் உடன் படிக்கைக்கு வருதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டான். அவனுக்கு விடை எழுதிய ஆள்பதி அவர்கள், பிலிமையைக் கண்டி அரசனாக்குவதானால் பின்வரும் நிபந்தனைகளைக் குறிப்பிட்டார்.

1. கண்டியரசனாய் இருக்கும் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனைப் பாதுகாப்புக்காக ஆங்கிலேயர் வசம் ஒப்புவித்தல் வேண்டும்.

2. முத்துச்சாமியை வன்னிப் பகுதிக்கு அரசனாக்குதல் வேண்டும்.

3. கண்டி அரசை அவாவும் பிலிமை ஆங்கிலேயருக்கு ஏழு கோறளை நிலங்களையும், மக்டோவல் கோட்டையையும், கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்கு ஒரு வீதி அமைக்கத் தேவையான நிலத்தையும் கொடுத்தல் வேண்டும் என்றும், முத்துச்சாமிக்கு ஆண்டு தோறும் 30000 காசு கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்த நிபந்தனைகள் நிறைவேறவில்லை.

இதற்குள் அங்குறுங்கட்டையில் மறைந்திருந்த ஸ்ரீ விக்கிரமராசசிங்கள் கண்டி அதிகாரிகளையும் மக்களையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். பிலிமையின் சூழ்ச்சிகளும் அம்பலமாயின. அரண்மனைக்கு மீண்ட அரசனுக்கு நற் செய்திகள் கிடைத்தன. ஆங்கிலேயருடைய படைகள் பலர் நோய்வாய்ப்பட்டும் இறந்தும் பேரயினர். எஞ்சிய வீரரைக் கண்டிப் படையினர் தீவிரமாக எதிர்த்து எதிரிகளைச் சிதற அடித்தனர். ஆங்கிலேயர் பக்கத்தில் கூலிக்குப் போர்புரிந்த மலாயர் படை கண்டியரசன் பக்கஞ் சார்ந்தது

ஆங்கிலேயரால் நிலைமையைச் சமாளிக்க இயலவில்லை. அவர்கள் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் வீரப்பிரதாபங்களை அறிந்தனர். பிலிமை எழுதியதற்கு முற்றும் மாறுக அவன் வீரம் இருந்தமையைக் கண்டு வியந்தனர். மேலும் போர்புரிய இயலாமல் தவித்து இறுதியில் யர்ரோ ஒரு வீரனின் தலைப்பாகையை சூலத்து அதனை மூங்கில் தடியில்கட்டி வெள்ளைக்கொடியெனத் தூக்கிச் சரணாகதி அடைந்தனர். சரணாகதியடைந்ததும் யுத்தம் ஒய்ந்தது. கண்டியர் பக்கலில் இருந்து பிலிமையும் ஆங்கிலேயர் பக்கலில் மேஜர் டேவியும் சமாதானப் பேச்சுப் பேசினர். மேஜர் டேவியுடன் சென்ற நூர்டின் என்ற மலாயர் படைத் தலைவன் இருவருக்கும் மொழி பெயர்ப்பாளனாயிருந்தான்.

1. மேஜர் டேவியும், தேக சுகமுள்ள வீரரும் திருக்கோணமலைக்கு மீளவும், அவர்கள் மருந்தில்லாத வெறுந் துவக்குகளை மாத்திரம் கொண்டு போகவும், அவர்களுடைய பண்டங்களை அவர்கள் கண்டியில் விட்டுப் போகவும், காயப்பட்ட படைகளைப் பிலிமை வைத்தியசாலையில் வைத்துப் பராமரிக்கவும், ஆங்கிலேயர் பிரகடனஞ் செய்த முத்துச் சாமியை ஆங்கிலேயர் அழைத்துக் கொண்டு போகவும், மகாவலிகங்கையைக் கடப்பதற்கு வேண்டிய ஓடங்களைக் கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கொடுத்து உதவவும் உடன்படிக்கை செய்யப்பட்டது.

மழையில் நனைந்து கங்கைக்கரையை அடைந்த படையினர் அங்கே ஓடங்கள் இல்லாமையைக் கண்டனர். அவர்கள் மரங்களின் கீழ் தங்கி மழைக்கு ஒதுங்கி இரவு முழுவதும் குளிரால் நடுங்கினர். அடுத்தநாள் காலையில் இரு ஆங்கிலேயர் மெதுவாக நடந்து அங்கே வந்து படைகள் கலங்கும் வண்ணம் தங்கள் அநுபவத்தைக் கூறினர். வைத்தியசாலையில் தங்கிய அத்தனை வீரரையும் கண்டிப் படையினர் தலையில் அடித்துக் கொன்றதாயும் தாம் இருவரும் படுக்கைகளின் கீழ் பதுங்கிக் கிடந்து அடுத்தநாள் அதிகாலையில் மறைந்து வெளியேறியதாயும் கூறினர். இவ்வாறு ஆங்கிலேயர் படைகள் மகாவலி கங்கைக் கரையிலே மறுநாள் இரவும் மழையில் நனைந்து மனம் நொந்திருந்தனர். அடுத்த நாள் அரசனுடைய தூதுவர் அங்கே சென்று ஆங்கிலேயர் படைகள் ஆயுதங்களோடு அரசன் முன் சரணாகதியடைந்து புதிய நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்றனர். தளபதி டேவி வேறொன்றும் செய்ய இயலாமல் முத்துச்சாமியை அரசனிடம் கொடுத்தான். தனது படைகளை மன்னன் முன் அனுப்பினான். அனுப்பப்பட்ட படைகள் வழியில் உள்ள மல்லர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். அடி பெற்று விழுந்தவர்களுள் பாண்ஸ்லி என்ற வீரனும் ஒருவன். அவன் இறந்தவன் போலப் பாசாங்கு

செய்து கிடந்து, நடு இரவில் காடுகளுள் நுழைந்து, மகாவலிகங்கையை நீந்தி, மறுகரை சேர்ந்து மாத்தலேயை அடைந்து, மக்டோவல் கோட்டையை அடைந்தான். அங்கே இருந்த தலைவன் மாட்கே என்பானிடம் நடந்தவற்றைக் கூறி, உடனடியாகத் திருக்கோண மலைக்குப் போனார்கள். இவ்வாறு ஆங்கிலேயரின் முதலாவது படை எடுப்பால் ஒரே ஒருவனைத் தவிர எல்லோரும் இறந்தனர். மேஜர் டேவியின் படைகள் நிர்மூலமாக்கப்பட்ட தினம் 26-5-1803 என்று ஒரு நடுகல்லில் எழுதப்பட்டுள்ளது. மேஜர்டேவி கண்டியில் சிறையிடப்பட்டு அங்கே இறந்தான் என்பர். இப்படை எடுப்பால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பொருட் செலவு, படைக் செலவு, அழிவுகள் அளவிட முடியாதவை என ஆள்பதியவர்களே அழாத குறையில் எழுதியுள்ளார்கள்.

அத்தியாயம் 7

ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தமை

கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் ஏனைய மன்னர்களைப் போலன்றி அதிகாரிகளின் மிரட்டலுக்கு அஞ்சாது தனது சுயாதீனப் போக்கில் வல்லாளனே அரசாண்டான். அவனைக் கைப்பொம்மையாக்கவைத்து ஆட்டலாம் என்கனவுடன் அதிகாரியின் சூழ்ச்சிகள் யாவும் அம்பலமாக்கப்பட்டன. சிங்கள மன்னரவையில் இருந்த சில் லோராட்சி சிதறடிக்கப்பட்டது. பிலிமைத்தலாவை ஸ்ரீ விக்கிரமராச சிங்கனைக் கட்டியாளலாம் எனக்கருதித் தன் அரும்மருந்தன்ன பெண் ணையும் அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து அவன் அவளை இராணி யாக்குவான் என எதிர்பார்த்தான். ஆனால் அரசன் வேறு ஒருத்தி யையே பட்டத்துத் தேவியாக்கி அவளை அந்தப்புரத்துப் பெண்ணு கவே வைத்திருந்தான். அதனாலும் பிலிமைக்கு மனவருத்தம் உண் டாயிற்று. அன்றி மன்னன் தன் நாயக்க வம்சத்தவரோடேயே அந் தரங்க அலுவல்களைப்பேசி வந்தமை பிலிமைக்குக் கசப்பாகவே இருந்தது. அதனால் அவன் அரண்மனைக்குப் போகாமலே இருந்ததும் உண்டு.

இவ்வாறாக இரண்டாவது அதிகாரி மிகத்தாணி இறந்ததும் அப்பதவி எகிலப்பொல திசாவைக்குக் கொடுக்கப்பட்டது. இறந்த திசாவையின் ஆள்நிலங்கள் எகிலப்பொலவுக்கும் மொலிகொடவுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. இந்தப் பிரித்தல் நாட்டில் கலவரத்தை உண்டாக்கிவிட்டது. ஏழுகோரளை மக்கள் பிரிவினையை விரும்பாத மையே காரணம் என்றும், ஆள் நிலங்களை தனக்கும் தன் மருமகன் ரத்வத்தைக்குமிடையில் பிரித்துவிட்டால் கலகம் நடைபெறுதென் றும் பிலிமை கூறினான். அங்ஙனமே செய்யப்பட்டவுடன் கலகமும் தணிந்தது. ஆனால் அரசனுக்குப் பிலிமை மீது சந்தேகம் அதிகரித்தது.

தன் ஆலோசனைகளை அரசன் புறக்கணிப்பதைப் பிலிமை வருந்தி மன்னனிடம் முறையிட்டபோது, வல்லாளனை மன்னன் என்னிடம் நீ ஆணை பெறுவதைவிட்டு உன்னிடம் நான் ஆலோசனை பெறுவதைப் பெரிதாக மதிக்கிறாய் எனக்கூறினான். பின்னர் பிலிமை தன் மகனை மாம்பிட்டிய பண்டார என்பானின் மகளுக்கு விவாகஞ் செய்ய முனைந்தான். மாம்பிட்டிய பண்டார என்பவன் கீர்த்தி ஸ்ரீ யின் மைந்தன் என்ற முறையால் பிலிமை தன் மகனுக்கு அரசுப் பட்டம் பெற முனைந்தான் என அரசன் கருதினான். முன்னர்

பிலிமை செய்த தவறுகளையும் சதிகளையும் நினைவிற் கொண்டு அவனை அரண்மனைக்கு அழைத்து ஏனைய மந்திரிகள் பிரதானிகள் முன் அவனை எள்ளளமாக வைது அவனுக்கு மேலும் பல உபகாரங்கள் கொடுத்து அதிகாரிப் பதவியை நீக்கி இளைப்பாறிய வாழ்க்கை மேற்கொள்ளும் படி கூறியனுப்பினன்.

இவற்றைப் பொறுக்கமாட்டாத பிலிமை அரசனைக் கொல்லச் சதி செய்தான். அரசனின் படுக்கையறைக் காவலாளிகளான ஐம்பது மலாயரிடம் கொலைசெய்யும் பொறுப்பை விட்டு, உடுநுவர, யட்டி நுவர மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிட்டான். மலாய முகாந் திரத்தால் உரியவேளையில் மன்னனைக் கொலைசெய்ய இயலவில்லை. கொலை நடைபெறுமுன் உடுநுவர யட்டிநுவரவில் கலகங்கள் கிளம் பியதால் அரசன் அவற்றை அடக்கிவிட்டான். கொலைச் சதியைப் பற்றி அறிந்த அரசன் மேலுந் தாமதியாது பிலிமையையும் அவனைச் சேர்ந்த ஆறு தலைவர்களையும் அத்தாணி மண்டபத்தில் விளங்கி 1812 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் கொலைத்தண்டனை விதித்தான். கொலையுண்ட தலைவர்களின் பொருள் பண்டங்கள் யாவும் அக்கால வழக்கப்படி அரசனுக்காயின.

பிலிமை கொலைசெய்யப்பட்டதும் எகிலப்பொல மேலதிகாரி யாகினன். இரண்டாவது அதிகாரிப்பட்டம் உமாம்புவைக்குக் கிடைத் தது. உமாம்புவை இறந்தபின் அப்பட்டம் மொலிகொடை ஏன் யானுக்குக் கிடைத்தது. மொலிகொடை அதிகாரியாக வந்தமையை எகிலப்பொல அறவே வெறுத்தான். மந்திரி பிரதானிகளின் செல் வாக்கைக் குறைப்பதற்காக மன்னன் அவர்களின் உத்தியோகங்களை அடிக்கடி மாற்றியும் பிரித்தும் வலுவைக் குறைத்தான். அவன் குறைந்த சாதியினரையும் மேலுத்தியோகங்களில் நியமித்து மேல்தி காரிகளின் சாதித் திமிரைக் குறைக்க வழிசெய்தான். இன்னும் தனக் குச் சாதகமாக அரண்மனைக் குழுவொன்றை ஆதரித்தும் அதிகாரி களிடையே பிளவையுண்டாக்கியும் வந்தான். அதனால் எகிலப்பொல வின் குழுவும் மொலிகொடவின் குழுவும் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்வாராயினர்.

எகிலப்பொல பேராசையுள்ளவனாயிருந்ததுமன்றி 1811 ஆம் ஆண்டுச் சதியிலும் பங்குபற்றியிருந்தான். எனவேதான் அரசன் எகிலப்பொலவை எள்ளளவும் நம்பவில்லை. எனவேதான் கரவுள்ளம் கொண்ட எகிலப்பொல முன்னர் பிலிமை செய்ததுபோல ஆங்கிலே யருடன் தொடர்பு கொண்டான்.

ஆங்கிலேயரும் அந்த நேரத்தில் வாழாவிருக்கவில்லை. ஆள்பதி மெயிற்லன் அவர்களுடைய இராணிமாளிகையில் டொயிலி என்ற வெள்ளைக்காரன் இருந்தான். அவன் சிங்களமொழியை நன்கு கற்று அதனை ஓலையில் எழுதவும் வாசிக்கவும் நன்றாகப் பேசவும் அறிந்திருந்தான். ஆகவே அவன் இராணிமாளிகையில் மொழிபெயர்ப்பாளனாய் இருந்தான் அவனுக்குக் கண்டிநாட்டில் பல ஒற்றர்கள் இருந்தார்கள். அவர்கள் புத்தபிக்கு வேடத்திலும் சில்லறை வியாபாரிகள் வேடத்திலும் பிச்சைக்காரர் வேடத்திலும் உளவும் களவும் உற்றபுதினமும் அறிந்து டொயிலிக்கு அறிவித்தவண்ணமாயே இருந்தார்கள். அவர்கள் மூலம் டொயிலி கண்டிப் பிரதானிகளின் தொடர்பையும் தொண்டிருந்தான். எகிலப்பொல, எக்னெலிகொட, புஸ்வல்லை ஆகிய தலைவர்கள் டொயிலியின் நண்பர்களாயிருந்தனர். அதற்கு முன் பிலிமையுடனும் டொயிலி தொடர்பு கொண்டிருந்தான். பிலிமைக்கும் டொயிலிக்குமிடையில் வேறு திட்டங்களும் இருந்தன. ஆள்பதி மெயிற்லன் சுகவீனமுற்றுப் போனபின் பதிலாள்பதியாகக் கடமையாற்றிய வில்சனும் கண்டியருடன் தொடர்புகொண்டதுண்டு.

ஆள்பதி மெயிற்லன் சுகவீனமுற்றுப் போனபின் சேர் ரோபேட் பிறவுண்றிக் அவர்கள் ஆள்பதியாக 11-3-1812 தொடக்கம் நியமனம் பெற்றார். ஆள்பதி அவர்களுக்குக் குடியேற்ற மந்திரியாரின் ஆலோசனை அவர் கண்டி மன்னனுடன் எவ்வித முரண்பாட்டுக்கும் போகாதிருத்தல் வேண்டும் என்றும், கண்டி மன்னன் யுத்தஞ்செய்ய வந்தால் தற்பாதுகாப்புக்காக ஏதாவது செய்வதல்லது கண்டியை நோக்கிப் படையெடுத்தலாகாது என்பதே. ஆங்கிலேயருடைய கரைநாடுகளுக்குப் புதிய நாடுகளைச் சேர்க்கக்கூடாது என்பதே மந்திரியாரின் திட்டவட்டமான கட்டளையுமாகும். இயன்றளவு கண்டியருடன் நட்புறவோடிருக்க முனைதல் வேண்டும் எனவும் மந்திரியார் ஆலோசனை கூறிவிட்டார்.

இவ்வாறுகக் கண்டி மன்னன் நிலைமையும் அமைதியாக இருக்கவில்லை. அதிகாரிகளின் நம்பிக்கைத் துரோகச் செயல்கள் அவனைப் பெரிதும் பாதித்தமையால் அவனுக்கு மனத்திலும் உடம்பிலும் பெலவீனமேற்பட்டது. அவன் நித்திரையின்றியும் வருந்தியதோடு சயன அறைகளையும் காவல்களையும் இடையிடை மாற்றிக்கொண்டான். தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பையும் அவனுக்குப் பொருத்தமாயிருந்தன. முஸ்லிம்களிலும் புத்தபிக்குகளிலும் அவனுக்குச் சந்தேகம் ஏற்படலாயிற்று. தனக்குப் பணிவுள்ள மாகாணங்களிடையே உள்ள மக்களோடு பகையுள்ள மாகாண மக்கள்தொடர்பு கொள்வதைத் தடுத்தான். எகிலப்பொலவின் நடபடிக்கைகள் அவனுக்குத் தீராக் கோபத்தை உண்டாக்கின.

இவ்வாருகக் கண்டியரசனுக்கு அவனுடைய மனைவியாரிருவரிடத்தும் பிள்ளையில்லாமையால் அவன் மேலும் இரு அரச கன்னியர்களை மதுரையிலிருந்து வரவழைத்து 1813 ஆம் ஆண்டு தைமாதத்தில் மணஞ்செய்தான். மணவிழாவுக்கு எல்லோரும் சமுகமளித்துப் பெரிய பரிசுகள் கொடுத்தார்கள். எகிலப்பொல, உமாம்புவ, மொலிகொட, கொபகடுவ, புஸ்வாலி முதலாய அதிகாரிகள் 10000 காசு பெறுமதியான உபகாரப் பொருள்கள் கொடுத்து மன்னனை வாழ்த்தினார்கள். எகிலப்பொல நடந்து கொண்டமுறையில் தவறு கண்ட மன்னன் அவனை வைது மன்னித்து அனுப்பினன். அதனால் எகிலப்பொலவுக்குப் பெரிதும் அவமானமுண்டாயிற்று. அவன் மனவருத்தத்தோடு தனது உத்தியோக மாகாணமாகிய சப்ரகமுவா திசாவைக்கு மீண்டான். அந்தத் திசாவை வாசிகள் வரிகட்டுவதும் மன்னனை மதிப்பதும் குறைவாய் இருந்தது. அவ்வூர் வாசியொருவன் தன்னை எகிலப்பொல ஏமாற்றிப் பெருந்தொகை பணம் வாங்கியதாக முறையிட்டான்.

எகிலப்பொல மீது இப்போது குற்றத்தின் மேல் குற்றம் சுமத்தப்பட்டது. அவற்றை விசாரிப்பதற்கு அவனை 1814 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரண்மனைக்கு வருமாறு மன்னன் கட்டளையிட்டான். இவ்வாருன நிலைமையில் செய்வதென்ன எனத் தயங்கிய எகிலப்பொல ஆங்கிலேயரே தனக்குத் தஞ்சம் என எண்ணினன். அவன் டொயிலியிடம் பல கடிதங்கள் எழுதி அனுப்பினன். தனக்கு அரண்மனையில் இருக்கும் பகைமையையும், தன்மீது அரசன் சுமத்திய குற்றங்களையும், அரசன் தனக்குச் செய்த அநீதிகளையும் எழுதி ஆங்கிலேயர் கண்டி மீது படை எடுத்தல் வேண்டும் என்றும் தான் கண்டியரை ஆங்கிலேயருக்குச் சாதகமாகத் தூண்டிவிடுவதாகவும் எழுதினன். எகிலப்பொலவுக்கு இருந்த அவசரம் டொயிலிக்கு இருக்கவில்லை. அவன் எகிலப்பொலவுக்கு வர்த்தகத்தைப் பற்றியே எழுதிவந்தான்.

அரசனுடைய கட்டளைக்குப் பணிய மறுத்த எகிலப்பொல அரண்மனைக்கு ஏகவில்லை. அவனுக்கு அங்கே என்ன நடக்கும் என்று தெரியும். எனவே ஆங்கிலேயரிடம் இறுதியாகச் ''சரண் உமைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்'' என முன்னர் விபீடணன் இராமனிடம் சரணுகதியடைந்தமை போலச் சரணடைய வழிவகுத்தான். தனது அந்தரங்க நண்பனை எக்னெலிகொட என்பானை டொயிலியிடம் இரகசியமாகத் தூதுவிடுத்தான். எக்னெலிகொட 1814 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4, 5 ஆகிய தினங்களில் டொயிலியைக்கண்டு எகிலப்பொலவுக்காகப் பரிந்துபேசி மன்னனுடைய கொடுங்கோலியல்பையும் அவன் குடிகளை வருத்தும் வகையையும்

கூறி ஆங்கிலேயர் கண்டிமீது படை எடுத்தவுடன் சப்பிரகமுவா, ஏழுகோரளை, நாலுகோரளை, மூன்றுகோரளை, உடுநுவர, எட்டி நுவர ஆகிய இடங்களில் உள்ள பொதுக்கள் அவர்களை முழுமன தோடு வரவேற்பார்கள் என்றும் நன்றே செய்யின் இன்றே செய்மின் என்றும் கூறிநின்றனன். எக்னெலிகொட என்னதான் கூறியபோதிலும் நாடறிந்த பொய்யிலி உணர்ச்சிவசப்படவில்லை. அவன் கண்டியில் தாம் பிரவேசிக்கத் தருணம் ஆகவில்லை என்றே கூறினான்.

எகிலப்பொல ஆங்கிலேயருடன் தொடர்புகொண்ட வரலாற்றை அரசன் அறிந்துகொண்டான். அரசன் தன்னை அவதானித்துக்கொண்டான் என்பதை எகிலப்பொலவும் அறிந்து கொண்டான். எகிலப்பொல அரசனுடைய கட்டளையை மீறியதும் இராசதுரோகங்கள் செய்ததையுங் காரணமாக மன்னன் அவனை முதலதிகாரி என்ற உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டு அவனுடைய எதிரியாய மொலிகொடையை முதலதிகாரியாக நியமித்து அவனுக்கே மூன்றுகோரளை, நாலுகோரளை, சப்பிரகமுவா ஆகிய இடங்களையும் கொடுத்தான். இதைஅறிந்த எகிலப்பொல சப்பிரகமுவாப் பகுதிகளில் கலகத்தை உண்டாக்கிவிட்டு ஏனைய திசாவைகளையும் கலகஞ் செய்யுமாறு தூண்டினான்.

கலகங்கள் உண்டானதை அறிந்ததும் கண்டி மன்னன் உடனடியாக அவற்றை அடக்க முயற்சிசெய்தான். தென்மேற்குப் பகுதிப் போக்குவரத்தை மூடிவிட்டு, கலகம் நடைபெற்ற இடங்களை விட்டுக் கரைநாட்டு வியாபாரிகளை வெளியேறும் வண்ணம் கட்டளை யிட்டான். எகிலப்பொல தன் கட்டளைக்குப் பணிந்து தன்னிடம் வரும்வரை பிணையாளராக அவனுடைய மனைவி மக்களைச் சிறை செய்து காவலில் வைத்தான். கலகக்காரரை அடக்கிவருமாறு முதலதிகாரியாய மொலிகொடையை அனுப்பினன். மொலிகொடை மீது பொதுமக்களுக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது. எகிலப்பொலவுக்கு ஆங்கிலேயரி உதவியே சமயசஞ்சீவியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்வே எகிலப்பொல மிகவும் உருக்கமாகவும், விநயமாகவும் டோயிலிக்கு எழுதினன். "ஐயா நீங்கள் எங்கள் நாட்டில் கருத்து வைத்திருந்தால் எதனையும் உடனடியாகச் செய்வதே நல்லது. இது நல்ல தருணம். இத்தருணம் தப்பினால் இனி ஒருவேளை இதுபோலக் கைகூடமாட்டாது."

இவ்வாறு எழுதிய எகிலப்பொல இறுதியில் ஆங்கிலேயரிடம் தானே சென்றனன். ஆள்பதி பிறவுண்றிக் அவனைத் தகுந்த மரியாதையோடு வரவேற்றார். அவன் ஆள்பதியைக் கண்டவுடன்

தாரை தாரையாகக் கண்ணீர்விட்டு "எனக்கு இந்த உலகத்தில் இனி உற்றார் உறவினர் இல்லை. ஆள்பதி அவர்களே என் தந்தை. சீமாட்டி பிறவுண்ரிக் அவர்களே என் அன்னை. நீங்களே என்னைப் பெற்றவர்கள்" எனக் கூறிச் சிறுபிள்ளைபோல அழுதான். அவன் அழவேண்டிய சந்தர்ப்பமும் கண்டியில் நிகழ்ந்தே விட்டது. அவனுக்காகப் பிணையாளராகக் கண்டிமன்னன் அகப்படுத்தி வைத்திருந்த அவனுடைய மனைவி மக்களை மன்னன் எள்ளளவும் இரக்கமின்றி வாளால் எறிந்து கொலை செய்வித்தான்.

இந்தவேளையில் மாத்துறை வாசிகளான பத்து வியாபாரிகள் கண்டியில் வேவுகாரர் எனச் சந்தேகத்தின் நிமித்தம் மன்னன்முன் நிறுத்தப்பட்டார்கள். கரைநாட்டு வியாபாரிகளை வெளியேறுமாறு முன்னமே கட்டளை விதித்திருந்த மன்னனுக்கு அவர்களைக் கண்டதும் கோபாவேசம் உண்டானது. அவன் தண்டக்காரரை ஏவி வியாபாரிகளின் மூக்கு, காதுகளை அறுத்து மாலையாக அவர்கள் கழுத்தில் இட்டு அனுப்புமாறு உத்தரவிட்டான். அதனால் வியாபாரிகளுள் எழுவர் வழியில் இறந்துபோக மூவர் உயிர்தப்பி மீண்டு கொழும்புக்குச் சென்று ஆள்பதி பிறவுண்ரிக் அவர்களிடம் முறையிட்டு அழுதார்கள். இவ்வினையும் எகிலப்பொலவின் சூழ்ச்சியால் நடைபெற்றது என்றும் அவன் ஆங்கிலேயரை ஆத்திரமூட்டிக் கண்டி மீது படையெடுக்கச் செய்யவே அங்ஙனம் செய்வித்தான் என்றும் சிலர் கருதுவர்.

நெப்போலிய யுத்தங் காரணமாக ஆங்கிலேயர் தமது முழுப் படைப் பிரயோகத்தையும் முதலாவது கண்டி யுத்தத்தில் காண்பிக்க முடியவில்லை. இப்போது நெப்போலியன் முற்றாக முறியடிக்கப் பட்டதோடு இலங்கையை ஆங்கிலேயரே நிரந்தரமாக ஆள்வார் என்பது அமியன்ஸ் சமாதானத்தாலும், வியன்னா மகாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடுகளாலும் அறியக்கிடந்தன. எனவே ஆங்கிலேயர் கண்டிமீது தமது பலத்தைக் காட்டுவதற்குத் தகுந்த காலமும் காரணமும் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தமைபோலவே கருவிகளும் கருத்தாக்களும் சாதகமாக இருந்தது என்பர். கண்டி மன்னனுடன் ஆங்கிலேயர் செய்த முதலாவது யுத்தத்துக்கு எங்ஙனம் பிழிமை மூலகாரணமாய் இருந்தாலே அவ்வாறே ஆங்கிலேயர் இப்போது படை எடுப்பதற்கு எகிலபொல மூலகாரணமாய் இருந்தான் என்பது மிகையாகாது.

முன்னர் யென்கின் என்ற ஆங்கிலேயனின் காதை ஒரு ஸ்பானிய மாலுமி அறுத்துவிட்டான் என்பதால் 1739 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஸ்பெயின் நாட்டினரோடு யுத்தப் பிரகடனஞ் செய்

தார்கள். இப்போது பத்துப் பேருடைய காதுகள் மூக்குகள் அறுபட்டதோடு எழுவர் இறந்துபோனமை யுத்தத்துக்குப் போதிய சாட்டாக இருக்குமா இல்லையா? முன்னமே கண்டியரசனுடைய படைகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கரைநாடுகளில் புகுந்து சூறைபாடிவந்தார்கள் என்பதுவும் ஒரு காரணமாயிருந்தது. இவற்றையெல்லாங் கேட்ட ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் தமது படைப் பயிற்சியைக் கண்டியரசனுக்குக் காண்பிக்கத் திடமாகத் தீர்மானித்தார். அவருடைய ஆலோசனைச் சபையார் சொன்ன ஆறுதல் மொழிகளை அவர் கேட்கவில்லை. அவர் தாமே படைத்தலைமைதாங்கி 10-1-1815இல் கண்டியை நோக்கிச் சென்றார். பிறவுண்றிக் படையெடுத்துச் சென்றார் என்பதைப் பார்க்கிலும் அவர் பவனியிற் சென்றார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

படை எடுப்புக்கு வேண்டிய சகல இரகசியங்களையும் எகிலப்பொல ஆங்கிலேயருக்குச் சொல்லிக் கொடுத்ததோடு தானே அவர்களுடன் போகவும் முன்னின்றான். கண்டியைப் பிடிக்க 1485 ஐரோப்பிய வீரரும் 2259 சுதேச வீரரும் எட்டுப்பிரிவினராகப் பிரிக்கப்பட்டுக் கொழும்பு, காலி, மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய தானங்களிலிருந்து கண்டியை நோக்கிப் புறப்பட்டனர்.

ஆங்கிலேயர் படை எடுத்தமையை அறிந்த மன்னன் பாதுகாப்புக்கான நடபடிக்கைகளை முதலில் செய்தான். தனது நம்பிக்கைக்குரியவரான 700 தமிழ் வீரரையும் சிங்களவரில் பலரையும் காவலமைத்தான். மூன்று கோரளை, நான்கு கோரளை, ஏழு கோரளையாகிய இடங்களில் உள்ள தலைவர்களை உள் நாட்டுக்கு அனுப்பிவிட்டு நம்பிக்கையுள்ளவர்களை அவ்விடங்களில் நிறுவினான். இச் செயலை விரும்பாத மூன்று கோரளையின் திசாவை (மொலிகொடையின் தம்பி) அரசனுக்கு எதிராகக் கலகஞ்செய்து ஆங்கிலேயர் பக்கம் சார்ந்தான். அதனை வாய்ப்பாகக்கொண்டு ஆங்கிலேயர் அந்த இடத்துக்கு டொயிலி, கூக் ஆகிய பெரியார்களை அனுப்பினர்கள். கூக் தலைமையில் சென்ற படைகள் றுவான்வல பிரதேசத்தை எவ்வித எதிர்ப்பும் இன்றிக் கைப்பற்றினர்கள். அதனைக்கண்ட மொலி கொட புறங்கொடுத்தோடினான்.

பிறவுண்றிக் செய்த யுத்த பிரகடனம் வசீகரமான முறையில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. சிங்கள மக்களைத் தமிழ் மன்னனிடமிருந்து மீட்கவும், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கவும், பௌத்தமக்களின் சமயத்தையும் பொருளையும் பாதுகாக்கவும் தாங்கள் படை எடுத்தார்கள் என்று கூறிய பிறவுண்றிக்

கண்டிப் பிரமுகர்களின் மதிப்புக்குரிய உத்தியோகங்களை மீள அவர்களுக்கே வழங்குவதாகவும் உறுதி கூறினர். அன்றிப் பிரித்தானிய முடியின் பாதுகாப்பில் கண்டிமக்கள் பாதுகாப்போடும் சமாதானத்தோடும் அமைதியாக வாழலாம் எனப் பிரசாரமும் செய்தனர். ஆங்கிலேயர் படைகள் கண்டி நாட்டை ஒவ்வொரு பகுதியாகப் பிடித்தார்கள். இதுகாறும் கண்டி மன்னனுக்கு உறுதுணையாயிருந்த மொலிகொடவுடன் டொயிலி தொடர்பு கொண்டான். அதன் பயனாக 8-2-1815இல் மொலிகொட தனது கொடி குடை ஆலவட்ட விருதுகளோடு ஆங்கிலேயரிடம் சரணடைந்து அவர் பக்கஞ் சார்ந்தான். அவனுடைய சரணாகதியை ஏற்பதற்காக பிறவுண்றிக் கண்டிக்குப் புறப்பட்டார். இதற்குள் பிரதானிகள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராய் ஆங்கிலேயர் பக்கஞ் சார்ந்தனர். ஆங்கிலேயர் 14-2-1815 இல் கண்டியை அடைந்தார்கள். படைகளைக் கண்ட அதிகாரிகள் தூரகலித்தார்கள். ''அதிகாரிகளின் அழைப்பை ஏற்று வந்த எம்மைப் பொதுசனங்களும் வரவேற்றார்கள்'' என்றே ஆள்பதி பிறவுண்றிக் ஆனந்த பரவசத்தில் எழுதினார்.

நிலைமை தனக்குப் பாதகமாக இருந்ததைக் கண்ட அரசன் தலைநகரைவிட்டு மெதமகாநுவர என்ற இடத்துக்கு ஓடினான். அது தும்பறையில் உள்ள கலிவத்தை எனவும் கூறுவர். மன்னர் மறைந்திருந்த இடத்தை அறிந்துஅவனைச் சிறைசெய்ய ஆங்கிலேயர் படைகள் நாலுபக்கமும் சென்றனர். மொழி பெயர்ப்பாளர் டயஸ் அவர்கள் வழிகாட்ட 800 படைகள் ஒரு வழிச் சென்றனர். அவர்களுள் மலாய்க்காரர், வங்காளியர், ஆங்கிலேயர் முதலிய இனத்தவரும் சென்றனர். மெதமகாநுவரவில் மன்னன் இருப்பதாக அறிந்தவர்கள் தெனிதனியாவில் உள்ள முற்றவெளியில் கூடாரமடித்து அங்கே உறைந்து மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை ஆலோசிப்பாராயினர்.

அவ்வேளை வயலுக்கூடாக ஒரு சிறுவன் ஓடிப்போவதைக் கண்ட படைகளிற் சிலர் ஓடிச்சென்று அவனைப் பிடித்து வந்து கூடாரத்தில் அதிகாரிகள் முன் விட்டனர். அவன் நடுநடுங்கி தன்னை ஒன்றுஞ் செய்ய வேண்டாமென்றும் தான் அரசனிருப்பிடத்தைக் காட்டிக் கொடுப்பதாகவும் இறைஞ்சினான். அவன் ஓடிப்போகாதவாறு அவனுடைய அரையில் நீண்ட கயிறுகட்டி அவனை முன்னே நடக்கவிட்டுப் படைகளிற் சிலர் அவன் பின் சென்றனர்.

சிறிது தூரஞ் சென்ற சிறுவன் ஆங்கொரு திசையில் உயர்ந்து வளர்ந்து நின்ற ஒரு மரத்தைக் காட்டி அதன் கீழ் உள்ள வீட்டில் அரசன் மறைந்து வாழ்வதாகக் கூறினான். அவ் வீட்டை அடைந்த

ஆங்கிலேயர் அதன் வாசலில் இரு பெண்கள் காவல் இருந்தமையைக் கண்டார்கள். எறி வேலைக் கையில் ஏந்திய மெய்காப்பாளன் அவ்விடத்தைக் காவல் செய்வதையும் அவர்கள் கண்டார்கள். அவன் ஆங்கிலேயர் மத்தியில் நின்ற எக்னெலிகொடையைக் கண்டு ''நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டபோது அவன் 'நாங்களும் இங்கே தான் வந்துள்ளோம்' என்று கூறியதும் காவற்காரன் கோபங் கொண்டு தன் எறிவேலை எக்னெலிகொடமீது எறிந்தான். அது நிலத்தில் வீழ்ந்து முரிந்தது. படைகளிற் சிலர் காவற்காரன்மீது பாய்ந்து அவனைக் கட்டி வைத்தனர்.

எக்னெலிகொட மன்னன் இருந்த அறையிற் கதவைத் தட்டி அதனைத் திறக்குமாறு மன்னனைக் கேட்டான். கதவு திறக்கப்படாமையைக் கண்ட படையினர் மன்னனை ஆயுதங்கள் இருந்தால் எறியுமாறு அதிகாரத்தோடு கூறினார்கள். அவ்வளவில் வெள்ளிப்பிடி போடப்பட்ட கைத் துப்பாக்கிகளும், உடைவாள்களும் வெளியே வீசப்பட்டன. மன்னன் வைத்திருந்த பொன்வாளை எறியுமாறு படைகள் சத்தமிட்டனர். ஆனால் மன்னன் அதனை எறியவில்லை.

கதவு திறக்கப்படாமையால் கோபங் கொண்ட எக்னெலிகொட அங்கே கிடந்த உரல்களைக்கொண்டு கதவை அடித்து உடைக்குமாறு கட்டளையிட்டான். கதவு உடைக்கப்பட்டதும் படையினர் உள்ளே சென்றனர். அங்கே இருந்த இராணிகளின் ஆபரணங்களை ஆத்திரத்தோடு பிடுங்கினர். அவர்கள் அணிந்திருந்த பட்டுச் சேலைகளையும் உரிந்து சாதாரண உடையில் இருக்கச் செய்தனர். ஓர் இராணியின் காதிலிருந்த வைரத் தோடுகளை அவர்கள் பிடுங்கிய அவசரத்தில் அவள் காதிலிருந்து இரத்தம் வடிந்ததைக் கண்டும் படைகளின் மனம் இரங்கவில்லை. யாரோ இளகிய மனமுள்ளவன் பச்சிலை மருந்திட்டு இரத்தம் வடிவதைத் தடுத்துச் சிகிச்சை செய்தான்.

இதற்குள் கிரிண்டிக் கொடிகளால் மன்னனைக் கட்டுமாறு எக்னெலிகொட உத்தரவிட்டான். இவ்வித சித்திரவதைகளைக் கண்டு சகிக்காத ஒருவர் நிகழ்ச்சிகளை அதிகாரியாய டொயிலிக்கு அறிவித்தார். அதனைக் கேட்ட டொயிலி உடனடியாக காடி, கூக் முதலாய பெரிய உத்தியோகத்தரையும், குதிரைப்படைப் பொலிசாரையும், பல்லக்குகளையும் பல்லக்குச் சுமப்பவரையும் அனுப்பி அரசனை இராச மரியாதையோடு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டான்.

குதிரையில் வந்த பெரிய உத்தியோகத்தர் குதிரையை விட்டிறங்கித் தொப்பிகளைக் கழற்றி முழந்தாள்வரை குனிந்து மன்னனுக்குத் தமது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொடிக



கண்டி மன்னன்
ஸ்ரீ விக்கிரமராசசிங்கன்



மொனறவில
கெபிற்றிப்பொல
திசாவை

ளால் ஏற்பட்ட கட்டுகள் தளைகளை நீக்கி மரியாதைசெய்து ஆறுதல் கூறி அவனுடைய பசி தாகம் முதலிய தேவைகளை அன்புடன் விசாரித்தார்கள். பருகுவதற்கு என்ன இருக்கிறது என்று மன்னன் கேட்டபோது கேணல் காடி ''எங்களிடம் பிறண்டி, வைன், மதேரு, நிளறற், பீர் என்பனவும் நல்ல கோதுமை அப்பமும் உண்டு'' என்று கூறினான். மன்னன் நீர் கலந்த மதேரு பருகித் தாகத்தைத் தீர்த்தான்.

மன்னனும் தேவிமார்களும் தங்களை நன்முக உடுக்குமாறு வசதிகளைச் செய்து கொடுத்த உத்தியோகத்தர், அவர்களைப் பல்லக்குகளில் ஏற்றித் தாம் குதிரைமேல் ஏறிக் காவல் சென்றனர். முன்னேயும் பின்னேயும் காலாட்படைகள் துப்பாக்கி ஏந்திச் செல்ல அவர்களுக்கு இடையில் குதிரைப்படைகள் வாள் ஏந்திச் செல்லப் பல்லக்குகளில் மன்னனும் தேவிமாரும் எடுத்துச் செல்லப்பட்டனர். சூரியாத்தமன வேளையில் அவர்கள் டொயிலியின் இருப்பிடத்தை அடைந்தார்கள். டொயிலி இராச மரியாதையோடு மன்னனையும் தேவியரையும் வரவேற்றுபசரித்து அன்றிரவு அவர்களைக் கூடாரத்துள் சகல வசதிகளுடனும் பாதுகாப்புடனும் கண்துயில வழிவகுத்தான்.

மன்னனின் வீரத்தையும் இராச களையையும் டொயிலிகண்டு வியந்தான். ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் தன் தாயையும் தேவியர்களையும் டொயிலிக்கு முறையாக அறிமுகஞ் செய்துவைத்தான். அவர்களுடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் நிகழமாட்டாது என டொயிலி வாக்குறுதி கூறினான். மன்னனும் அவன் உறவினரும் மேஜர் கூக் தலைமையில் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்கள் வசதியாக வசிப்பதற்குக் கொழும்பிலே ஒரு வீடு ஒழுங்குசெய்யப்பட்டது. மன்னன் எவ்வித குறையுமின்றி அங்கே வசித்த காலத்தில் முகமலர்ச்சியோடு காணப்பட்டான். அவன்தான் முன்னர் விதித்த தண்டனைகள் யாவும் கண்டி அரசின் தண்டக்கோவையின் வண்ணம் அமைந்தவை என்றும் அதில் தன்செயல் எதுவும் இல்லை என்றும் கூறினான்.

ஆங்கிலேயர் கண்டியரசனைச் சிலகாலம் கொழும்பில் வைத்திருந்தபின் 24-1-1816 இல் அவன் குடும்பத்தாருடன் கோன்வாலிஸ் என்ற கப்பலில் ஓபிரையின் தலைமையில் சென்னைக்கு அனுப்பினர்கள். அங்கே வேலூரில் திப்புசுல்தானின் மைந்தன் இருந்த அரண்மனையில் அவனை இருத்தினர்கள். அங்கே அவன் பலவசதிகளோடும் வாழ்ந்து வந்த காலத்தில் நீர்வீக்க நோயினால் 30-1-1832 இல் இறந்தான். அதுநிற்க.

கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியைக் கேட்டதும் ஆள்பதி பிறவுண்றிக் தமது இராப்போசன மேசையருகே எழுந்து நின்றாராம். அவர் எதுவுமே பேசுமுன் அவருடைய கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் அருவிபோல வடிந்ததாம். இலங்கை முழுவதற்கும் ஆங்கிலேயரே ஆளுரிமை பெறுவதற்குத் தமக்குத் திருவருள் கிடைத்தமைக்கு அவர் துதி கூறினர். அரசாண்டவருக்கும் ஆளப்பட்டவருக்குமிடையில் இன, மத, மொழி பழக்க வழக்க அபிப்பிராய பேதங்கள் இருந்தமையால் அவர்கள் ஒற்றுமைப் படுவதற்குப் பொதுவான ஓர் அம்சமும் இருக்கவில்லை என ஆள்பதி கருதினர். அவர்களுக்கு இடையில் இருந்த பலவாய வேற்றுமைகள் அவர்களை ஒன்றுபட விடாமற்றடை செய்தன என்றார்.

அத்தியாயம் 8

சமவாய சம்பந்த மகாநாடு

ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றியதும், அந்நகரத்தைத் தமது கடைசித் தலைநகராகக் கொண்டு அரசு செய்துவந்த சிங்கள மக்களின் 2357 ஆண்டுச் சுதந்திரம் நீங்கியது. கண்டியில் முடி சூடிய மன்னன் இங்கிலாந்தில் ரியூடர் வமிசத்து ஏழாவது ஹென்றி யிலும் முந்தி முடி சூடினன் என்பது சரித்திரம். கண்டியைக் கைப்பற்றிய ஆள்பதி பிறவுண்றிக் அவர்களுக்குப் பெரிய வெற்றிப் பவனி ஊர்வலங்களும், விருந்துபசார வைபவங்களும், வரவேற்பு விழாக்களும் விமரிசையாக நடைபெறலாயின. கண்டியைப் பிடிக்கச் சென்ற 3744 படை வீரருள் ஒருவருக்கேனும் எத்துணைச் சிரமமும் இன்றிக் கண்டி பிடிக்கப்பட்டதால் ஆள்பதி அவர்களுக்குத் தனிச் சிறப்பும் பெருமையும் உண்டாயின.

கண்டியைக் கைப்பற்றிய ஆங்கிலேயரின் முதலாவது பொறுப்பு அதற்கு ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தலாயிற்று. கண்டியில் இருந்த தலைவர்கள் எல்லோரும் ஆங்கிலேயருக்கு முறையாகப் பணிந்து விட்டமையால் அவர்களை ஒன்று கூட்டி ஆலோசிப்பதற்கு ஆள்பதி விரும்பினர். அதற்கான வழி வகைகளை டொயிலி செய்வாராயினர் அதன்படி 2-3-1815 இல் கண்டியில் நடைபெற்ற சமவாய சம்பந்த மகாநாடு எனப்படும் பிரமுகர்கள் கூட்டத்திலே ஆங்கிலேயர் ஏன் கண்டியைக் கைப்பற்றினர்கள் என்பதற்கு முதலில் காரணங் கூறினர்கள். அவை டொயிலி அவர்களால் தயாரிக்கப்பட்டுப் படிக்கப்பட்டன. அதில் கண்டிப் பிரதானிகள் தங்களைக் கண்டியைக் கைப்பற்றுமாறு அழைத்தார்கள் என்றும், தாங்கள் படை எடுத்துச் சென்றபோது அவர்கள் தங்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள் என்றும், மாட்சிமை தங்கிய பிரித்தானிய மன்னர் பிரானின் ஆட்சி கண்டியில் நடை பெறத் திருவருள் உதவி செய்தது என்றும் டொயிலி கூறினன். இன்னும் கண்டியரசன் நாட்டு மக்களுக்குச் செய்த முறையீனங்களும் குரூரச் செயல்களும் மேலும் நடை பெறாது தடை செய்யவே தாங்கள் நாட்டு மக்கள் மீது இரங்கியதாகவும் கூறினன். கண்டி மன்னனின் அழகிய அத்தாணி மண்டபத்தில் எல்லாப் பிரதானிகளும் கூடியிருந்தனர்.

மகாநாட்டு வைபவத்திலே மாட்சிமை தங்கிய மூன்றாம் யோர்ச் மன்னரின் அரசாங்கத்தின் பிரதி நிதியாய மேன்மை தங்கிய பிறவுண்றிக் ஆள்பதி ஒரு புறமாகவும், கண்டி நாட்டு அதிகாரிகள்

திசாவைகள் பிரமுகர்கள் ஆகிய பெரியார்கள் கண்டிப் பொது மக்களின் சார்பாக மறு புறத்திலும் இருப்ப, ஏராளமாக அங்கே கூடிய பொது மக்கள் சமூகத்திலே கௌரவமானஉடன் படிக்கை எழுதிக் கையொப்பமிடப்பட்டது.

உடன்படிக்கை பன்னிரண்டு பிரமாணங்களைக் கொண்டதாய்ப் பல வழிகளிலும் ஆங்கிலேயருக்கும் கண்டியருக்குமிடையில் அந்நியோன்னிய நட்பை உண்டாக்கக் கூடியதாய் விளங்கிற்று. முதலாவது இரண்டாவது பிரமாணங்களின் வண்ணம் ஸ்ரீ விக்கிரமசிங்கன் தன்னுடைய குரூர கொடுங்கோல் வல்லாட்சி காரணமாகப் பிரதானிகளின் உரிமைகளை மறுத்துத் தீமை செய்தமையால் தன் அரச போகத்தைத் துறந்தானுகவும், அதனால் அவன் வம்சாவழியின் முற்சந்ததியினராயினும் சரி பிற்சந்ததியினராயினும் சரி கண்டியில் ஆளுரிமை யற்றவராளுர்கள் என்றும், மலபார் அரசபரம்பரை கண்டியில் ஆளுரிமையை இழந்ததென்றும் வரையறை செய்யப்பட்டது. எனவே அவர்கள் மூன்றும் பிரமாணத்தின் வண்ணம் எதிரிகளாகவே கருதப்பட்டார்கள் என்றும், அவர்களுள் எவரேனும் ஆங்கிலேயரின் உத்தரவில்லாமல் கண்டிப் பிரதேசங்களில் புகுந்தால் அவர்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் எழுதப்பட்டது. நாலாவது பிரமாணம் கண்டி பிரித்தானிய மன்னரின் பரிபாலனத்தில் விடப்பட்டதாயும், அவருடைய பிரதிநிதியாக இலங்கையில் ஆள்பதி அவர்கள், கண்டியில் உள்ள அதிகாரிகள், திசாவைகள், கோறளைகள், றட்ட மகாத்மயாக்களின் உதவியுடன் அதனைப் பரிபாலிப்பார் எனவும் நுதலிற்று.

ஐந்தாவது பிரமாணம் கண்டிப் பொதுமக்களின் மதிப்புக்குரிய புத்தசமயமும் குருமாருடைய கௌரவமும், அவர்களுடைய பழைய கலாசார அநுட்டானங்கள் சம்பிரதாயங்கள் யாவும் மதிப்புடன் பேணப்படும் எனக் கூறிற்று. ஆருவது ஏழாவது பிரமாணங்கள் நாட்டில் சரீரத்தண்டனை, குரூரச் செயல் என்பன நீக்கப்பட்டதென்றும் கொலைத்தண்டனை முறையாக விசாரணை செய்யப்பட்டபின் ஆள்பதி அவர்களின் ஆணையின் வண்ணம் மாத்திரம் விதிக்கப்படும் எனவும் கூறின. எட்டாவது பிரமாணம் மேலே கூறியவற்றுக்கு முரணில்லாத வகையில் சிறிய அழி வழக்குகளும் பழி வழக்குகளும் பழைய முறைப்படி விசாரித்து நீதி வழங்கப்படும் என நுதலிற்று. ஒன்பதாவது பிரமாணம் கண்டியரல்லாதாருக்குக் கண்டியில் நீதி வழங்கும் அதிகாரம் ஆள்பதியின் அநுசரணையில் இருக்கும் என்பதைக் கூறிற்று. பத்தாம் பிரமாணம் இச்சமவாய சம்பந்த மகாநாட்டின் தீர்மானங்கள் பிரமா

ணங்கள் முந்திய பிரகடனங்கள் ஆணைகள் ஆகியவற்றை விட மேலான அதிகாரம் உடையவை என்பது நுதலிற்று. பதினெராவது பிரமாணம் கண்டி நாட்டு வரிகள் வருமானங்கள் புதிய அரசாங்கத்தில் சேர்க்கப்படும் என்றும், அது கண்டிநாட்டைத் திருத்துவதற்கு முதற் பயனுகும் என்றும் கூறிற்று. பன்னிரண்டாம் பிரமாணம் நாட்டு மக்களுக்கு வசதியான முறையில் கண்டி நாட்டுவர்த்தகஞ் சம்பந்த மான முறையை ஆள்பதி அவர்கள் மாட்சிமை தங்கிய மன்னருக்குத் தகவுரை எழுதுவார் என்றும் அவ்வண்ணமே தாம் மேற்கொள்வார் என்றும் கூறிற்று. இவை யாவும் அரசாங்க மொழி பெயர்ப்பாளர் டொயிலிக்கும், அரசாங்க உதவிக் காரியதரிசி யேம்ஸ் சதர்லன் அவர்களுக்கும் முன்னிலையில் ஆள்பதி ரூபேட் பிறவுண்றிக் அவர் களாலும் கண்டிப் பிரமுகர்களாலும் கையொப்பம் இடப்பட்டன. பிரமுகர் சார்பில் எகிலப்பொல, மொலிகொட, பிலாமை மொனற வல, றத்வத்தை, துலவி மிலாவை, கலகம், கலகொட ஆகிய பெரியார்கள் ஒப்பமிட்டனர்.

கண்டியின் பரிபாலன அலுவல்களைக் கண்காணிப்பதற்கு டொயிலி தானிகராக நியமிக்கப்பட்டான். அவனுக்கு உதவியாக நியாய விசாரணை ஆணையாளர், நிதி அலுவல் ஆணையாளர், படைத் தலைவர் ஆகிய உத்தியோகத்தர் இருந்தார்கள். உள்நாட்டு அலுவல் களைக் கவனிப்பதற்குப் பழைய முறையிலமைந்த அதிகாரியாக மொலி கொடை நியமிக்கப்பட்டான்.

அதிகாரி நியமனம் ஆங்கிலேயருக்குப் பெரிய பிரச்சினையாயி ருந்தது. எகிலப்பொல தான் மனைவி மக்களை, உற்றார் உறவினரை இழந்து இன்னல்களுக்கு ஆளாகியதையும் பொருட்படுத்தாது படை எடுப்பின் போதும், மன்னனைச் சிறை செய்த போதும், ஆங்கிலேய ருக்கு அருந்துணையாய் நின்றதைக் கூறி நின்றுன்.

மொலி கொடை தான் கண்டியரசனின் கீழ்க் கடமையாற்றிய காலத்திலும் கூட ஆங்கிலேயருக்கு அந்தரங்க ஆப்த நண்பனாய் இருந் தமையையும், மறைமுகமாகப் பல உதவிகள் செய்தமைமையும், ஆங்கிலேயர் படை எடுத்துக் கண்டிக்குப் போன போது அவர்கள் பட களுக்குப் பெருஞ்சோறளித்த பெற்றியையும் கூறி நின்றுன். இரு அதிகாரிகளும் ஆளுக்கு ஆள்விரோதியாய் இருந்தமையால் ஏற்றத் தாழ்வான உத்தியோகத்தைப் பெறவும் விரும்பவில்லை. கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கடைசியாகச் சொன்ன வசனமும் ஆங்கிலேயருக்கு ஞாபகத்துக்கு வந்தது. ''எகிலப்பொலையையும் மொலிகொடையையும் நம்பாதீர்கள். அவர் ள் என்னை ஏமாற்றி

யவர்கள். உங்களை ஏமாற்றுவதற்குத் தயங்கமாட்டார்கள்'' மொலி கொடை முதலதிகாரியாக நியமிக்கப்பட்டதால் எகிலப் பொல தனக்கு வேறொரு உத்தியோகமும் வேண்டாம் என விரக்தியோடு விலத்தியிருந்தான்.

ஸ்ரீ விக்கிரமராசசிங்கனை அரசுக்கட்டிலில் இருந்து நீக்கவேண்டும் என்பதில் புத்தபிக்குகளும், பிரதானிகளும், பொதுமக்களும் கொண்டிருந்த ஒற்றுமையிலும் பார்க்க, ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்துதல் வேண்டும் என்பதில் அவர்கள் அதிக ஒற்றுமையுடையவராயிருந்தார்கள். ஆள்வோராய ஆங்கிலேயருக்கும் ஆளப்படுவோராய சிங்களவருக்கும் இன, மொழி, மத பாரம்பரிய பழக்கவழக்க சிந்தனை வேறுபாடுகள் அதிகம் இருந்தன.

கண்டியைக் கைப்பற்றிய பிறவுண்றிக் அவர்களுக்கு ஆங்கிலேய அரசாங்கம் பரன் பட்டம் அளித்துக் கௌரவித்தது. அவர் கண்டியை அடக்கி ஆள்வதற்கான முறைகளை ஆரம்பத்திலேயே செய்வாராயினர். கரைநாடுகளின் பிரதான நகரங்களோடு கண்டியை வீதிகளால் இணைத்து வழிகளில் பாதுகாப்புக் கோட்டைகளையும் கட்டிக் கவின் பெறுகாவல்களையும் அமைத்தார். சுவாத்தியத்தாலும் நோய்களாலும் படைகள் நலிவுறுதிருப்ப வைத்திய வசதி விடுதிகளையும் ஆங்காங்கே அமைத்தார்.

பிரபுக்களும் பொதுமக்களும் ஆங்கிலேயரை வெறுத்தமையிலும் பார்க்கப் புத்தசங்கத்தவர்களை ஆங்கிலேயரின் முறைகளை அதிகமாக அறவே வெறுத்தார்கள். அவர்கள் வேற்று மதமாய கிறித்தவம் தங்கள் நாட்டில் தங்கள் மதமாய பௌத்தத்திலும் மேலாக மதிக்கப்பட்டதை விரும்பவில்லை. புத்தமத அரசனிருந்த இடத்திலே கிறித்தவமத அரசாங்கம் இருப்பது பொருத்தமற்றது எனவே சங்கத்தார் கருதினர். முன்னர் மன்னர்கள் தங்கள் தலைநகரங்களை மாற்றியமைத்த போதெல்லாம் உடன் கொண்டுசென்ற புத்தரின் புனிதப்பல்லை ஆங்கிலேயர் மீளவும் கண்டியிலேயே தாபிக்கக் கொடுத்த போதிலும் அதில் திருப்தியடையாத பௌத்தர்கள் மேலும் கிளர்ச்சியில் ஈடுபடுவாராயினர். அவர்களும் பௌத்தமதத்தைச் சேர்ந்த பொதுமக்களும் 300 ஆண்டுக்காலமாக ஐரோப்பியரைப் பிறதேசத்தவரென்றும் பிற மதத்தவர் என்றும் மிலேச்சர் என்றுங்கருதி அவர்களை வெறுத்து வாழ்ந்த சூழலிலேயே பழகி வளர்ந்தவர்கள் தானே. அவர்கள் கரைநாட்டினரைப் போலத் தாங்கள் சொந்த நாட்டிலே பிற நாட்டினருக்கு அடிமைப்படாமல் வாழ்ந்த பெற்றியை நினைந்து இப்போது தங்களை நலியச்செய்யும் ஆங்கிலேயரை உள்ளும் புறத்தும்

வெறுத்தார்கள். இலங்கைக் கரைநாடுகளிலும் பார்க்கக் கண்டி நாடே பல வழிகளிலும் சிறந்ததும் பெரியதுமாகும். டேவி அவர்கள் மதிப்பின் வண்ணம் கண்டிநாடு 12360 சதுரமைல் பரப்பு என்றும் சைமன் காசிச்செட்டியின் அளவின் வண்ணம் அது 14144 சதுரமைல் பரப்பு என்றும் அறியக்கிடக்கிறது. எவ்வாறுனும் அது கரைநாடுகளை விடப்பெரியது என்பதே துணிபு

இனி கண்டிப் பொதுமக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சிங்களவராயினும் சரி தமிழராயினும் சரி அவர்கள் பழைய முறையிலேயே ஊறிப்பழகியிருந்தார்கள். அரசன் என்றால் அவர்களுக்குத் தெய்வம்போல இருப்பவன் என்பது அவர்கள் நினைப்பு. திருவுடைய மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே என்றும். ராஜகம்பீர நாடாளும் நாயகன் என்றும் அவனைத் தொழுவதும் அவன் முன் மண்டியிட்டு வணங்கி முறைப்பாடு செய்வதும் நீதி பெறுவதும் அவர்கள் வழக்கம். அப்படியிருக்க இப்போது 7000 மைல்களுக் கப்பால் உள்ள இங்கிலாந்தில் தங்கள் புதிய அரசன் இருக்கிறார் என்றும் அவருடைய பிரதிநிதியாக ஆள்பதி இருக்கிறார் என்றும் புதிய அரசியல் முறை அப்படியானது என்றும் அவர்களுக்கு எளிதில் விளங்க வில்லை. தாங்கள் பாரம்பரியமாகப் பணிந்து ஏவல் கேட்டு வந்த அதிகாரிகளை விடுத்துப் புதிய ஐரோப்பிய உத்தியோகத்தரைப் பணி வதை அவர்கள் அறவே வெறுத்தனர்.

சமவாய சம்பந்த ஒப்பந்தம் எழுதப்பட்டு இரண்டு மாதங் களாவதற்குள்ளாகவே பிரபுக்கள் புதிய அரசாங்கத்தை எதிர்த் தார்கள். ஆனால் அவர்கள் அக்காலத்தில் ஏகோபித்த ஒற்றுமை கொள்ளாமையால் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வில்லை. எதிலப்போல தனக்கு உத்தியோகம் எதுவும் வேண்டாம் என ஒதுங்கியிருந்தமையை ஆள்பதி அவர்கள் சந்தேகக் கண்கொண்டு கவனித்தார். புத்தபிக்குகளில் ஒருசாரார் கண்டியைப் பழைய முறைப்படி ஆளவல்ல ஓரரசனைத் தேடித்திரிந்தனர்.

சிங்கள அரசவமிசம் அற்றபோது நாயக்கவமிசம் கண்டியில் வேரூன்றியதை விரும்பாத அதிகாரிகள், இப்போது ஆங்கிலேயர் ஆட்சியை அறவே வெறுத்தனர். ஆங்கிலேயர் கண்டியைப் பிடித் துத் தமது கையில் தந்துவிட்டுப் போவார்கள் என்றே அதிகாரிகள் கனாக்கண்டார்கள். நாயக்க மன்னனை நீக்க உதவிக்கு வந்த ஆங் கிலேயர் தலைச்சுமையாய் இருந்ததை மக்கள் வெறுத்தனர். முன் னர் கரையோரப் பகுதிகள் ஐரோப்பியரால் பரிபாலிக்கப்பட்டுப் பழைய மரபுகள் மாறியபோது தாம் பழைய பண்பாட்டோடு பெரிய

வர்கள் என இருந்த கண்டியர் இப்போது அந்தப் பெருமையை இழந்துவிட விரும்பவில்லை. ஆங்கிலேயர் எல்லோரையும் சமமாக நடத்த முற்பட்டதைக் கண்டியர் விரும்பவில்லை. கண்டிப் பகுதிக்கும் கரையோரப் பகுதிக்கும் இடையில் நடைபெற்ற வியாபாரத்தின் தடைகள் எல்லாம் இப்போது நீக்கப்பட்டதால் அத்தடைகளில் திசாவைமார் பெற்ற சுங்கவரி ஆதாயங்கள் இல்லாது போனதை அவர்கள் விரும்பவில்லை. இராசகாரியம் போன்ற பழைய சம்பிரதாயங்கள் நீக்கப்பட்டதைக் கண்டிப் பிரமுகர்கள் விரும்பவில்லை. அரசனை நீக்குவதற்கு உதவி செய்யவே தாம் ஆங்கிலேயர் உதவியை நாடியதாகவும் அது நிறைவேறியதும் ஆங்கிலேயர் கண்டியைவிட்டு வெளியேறுவதுமே செய்யவேண்டிய கருமம் எனக் கண்டியர் கூறினர். ஆங்கிலேயர் கண்டியைப் பரிபாலிப்பது எருமைக்கடாவையும் பசு மாட்டையும் ஒரு நுகத்தில்பூட்டி வண்டியிழுக்கவைத்தது போலாகும் என்றனர்.

ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்த காலத்தில் அவர்களுக்கு அந்தரங்கமாகப் பல இன்றியமையாத உதவிகளைச் செய்து கொடுத்தவர் சோனகர். சோனகர் கரைநாட்டுப் பொருள்களைக் கண்டியில் வியாபாரஞ்செய்து பெரிய சம்பத்துள்ளவராயிருந்தனர். அவர்கள் தங்கள் பொதிமாடுகள் மூலம் ஆங்கிலேயரின் போர்க்கருவிகளைக் கண்டிக்குச் சுமப்பித்தும் கொடுத்தனர். சோனகருள் வட்டவிதானை போன்ற சின்னஞ்சிறு தலைவர்கள் இருந்தார்களேனும் அவர்களுள் பெரிய தலைவர்கள் இருக்கவில்லை. ஆதலால் அவர்கள் கண்டிப் பிரதானிகளுக்கு அடங்கியே வாழவேண்டியவராயினர். இப்போது ஆங்கிலேயருக்குத் தாம் செய்த நன்மை காரணமாகத் தமக்குள் ஒரு தலைவரையாவது நியமித்துத்தரல் வேண்டும் என்று அவர்கள் கேணல் காடி மூலம் ஆள்பதிக்கு விண்ணப்பித்தார்கள்.

வெல்லாசி என்ற இடத்தில் சோனகர் அதிகமாய் இருந்தனர். அங்கே கச்சிமரைக்காயர் என்றொரு முஸ்லிம் இருந்தார். அவர் மெக்காவுக்கும் யாத்திரை செய்து வந்தவர். அவரை வெல்லாசிப் பகுதிக்குக் கிராமாதிகாரியாய் ஆங்கிலேயர் நியமித்தனர். இதனைக் கண்டியர் விரும்பவில்லை. இந்நியமனம் ஆங்கிலேயர் செய்த உடன்படிக்கைக்கு மாறுனதாகும் எனக் கண்டியர் கருதினர்—எதிர்த்தனர்.

இங்ஙனமாக 1817 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பத்தாந்திகதியிலன்று பதுளைப் பகுதியில் மாகாண அதிபரின் உதவி உத்தியோகத்தராய்க் கடமையாற்றிய உவில்சன் என்பாருக்கு ஒரு செய்தி கிடைத்தது. நாடு கடத்தப்பட்ட விக்கிரமராசசிங்கனின் மைத்

துனன் துரைசாமி என்பான் தன் ஆதரவாளருடன் கண்டி அரசுரி மைக்கு ஆயத்தமாய் வந்துள்ளான் என்பதே அச்செய்தி கலகக் காரரை அடக்கி வருமாறு கிராமாதிகாரியாய கச்சிமரைக்காயரை வில்சன் அனுப்பினன். கலகக்காரர் கச்சியைப் பிடித்துக் கட்டி வைத்தனர் என்ற செய்தியை அறிந்த வில்சன் தானே நேரில் கலகக்காரரை அடக்கச் சென்றான். காடுகளில் மறைந்திருந்த கலகக் காரர் அம்புகளை விரைவாகச் செலுத்தி வில்சனைக் கொன்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் மேலதிகாரியாய டொயிலி தனது நண்பனைய எகிலப்பொலவை அழைத்து கலகக்காரர் வேண்டுவது என்ன என அறிந்து வருமாறு அனுப்பினன். எகிலப்பொல தனது செல்வாக்கைக் காண்பிப்பதற்குப் போலும் பெருந்தொகையான மக்கள் புடைசூழச் சென்றான். வழியில் மாத்தளைப் பகுதியின் திசாவையான றத்வத்தையைக் கண்டான். றத்வத்தை அந்த நேரத்தில் திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டுச் சென்ற ஆள்பதி அவர்களுக்கு மரியாதை செய்யப் புறப்பட்டுச் சென்றான் மேலதி காரியாய் இருந்த எகிலப்பொலவை திசாவை உரிய மரியாதை செய்யாதமையினால் அவனுடைய விருதுகளைப் பறிமுதல் செய்து அவனுடைய திசாவை உத்தியோகத்தையும் தடைசெய்து வைத்தான். எகிலப்பொலவின் சனக்கூட்டத்தைக் கண்டு அஞ்சிய திசாவையின் பந்தக்காரர் திசாவையை நடுவழியில் தவிக்கவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

திருக்கோணமலையில் இருந்து தமது சுற்றுலாத்தில் புறப்பட்ட ஆள்பதி பிறவுண்றிக் கந்தளாயில் வந்தபோது கண்டியில் கலகம் எனக் கேள்விப்பட்டார். அவர் மேலும் தொடர்ந்து பிரயாணமாகி நலந்தா என்ற இடத்தை அடைந்த போது, அங்கே எகிலப் பொல யானைகளும் 3000 மக்களும் புடை சூழ ஆள்பதியை எதிர் கொண்டு உபசரித்துத்தான் மாத்தளை திசாவையை மானபங்கஞ் செய்தமையை மன்னிக்குமாறு வேண்டினன்.

மானபங்கஞ் செய்யப்பட்ட திசாவை முதலதிகாரியாய மொலி கொடையின் மாமனார் என்பதும் ஆள்பதிக்குத் தெரியும் என்றாலும் அவர் உடனடியாக எதுவும் சொல்லாமல் எகிலப் பொலவைக் கண்டிக்கு மீளுமாறு கூறினர். இதற்குள் கலகம் நடந்த வெல்லாசிப் பகுதியின் திசாவையாய் இருந்த மலாவை என்பான் மூப்பும் தளர்ச் சியும் அடைந்தமையால் அவனால் அக்காரியங்கள் செய்ய இயலா மையால் அவனை நக்கிவிட்டு, ஊவாப் பகுதியின் திசாவையான கெபிற்றிப் பொலயை நியமித்தார்கள்.

அத்தியாயம் 9

ஓர் எதிர்க் கிளர்ச்சி

மொனறவில கெபிற்றிப்பொல என்பான் எகிலப் பொலவின் மைத்துனன். அவன் ஆங்கிலேயருக்கும் கண்டியருக்கும் இடையில் நடைபெற்ற சமவாய சம்பந்த மகாநாட்டின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பெரியார்களுள் ஒருவன். அவன் ஊவாப் பகுதியில் திசாவையாய் இருந்து அரிய சேவைசெய்தவன். அவன் தீவிர புத்தியும் முற்போக்குக் கொள்கையும் உள்ளவன் என்று மார்சல் தமது சரித்திர நூலில் எழுதியுள்ளார். அவன் நேர்மையாகப் பேசுவதிலும் நடப்பதிலும் நல்லவன் எனப் பெயர் பெற்றமையால் பொதுமக்கள் அவனைப் பெரிதும் அபிமானித்தனர். கண்டிப் பிரமுகர்கள் அம்மைப்பால் கட்டிக்கொள்ளப் பின் தயங்கியபோது கெபிற்றிப் பொல தன்குடும்பத்தாரோடு முன்வந்து பால்கட்டிக் கொண்டான் என்று மார்சல் எழுதியுள்ளார்.

முன்னர் 1815 ஆம் ஆண்டில் நடைபெற்ற கண்டி மகாநாட்டில் ஆங்கிலேயர் வாக்களித்தவண்ணம் நடந்து கொள்ளவில்லை என் பதைக்கண்ட கெபிற்றிப் பொல வெளிவெளியாக ஆங்கிலேயர் பிழைகளைக் கூறினான். ''இலங்கைக்கு ஒரு நலன்புரி அரச அமைப்பு வேண்டுமாகின் முதலில் ஒரு சிங்கள மன்னனைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஆங்கிலேயர் நன்மை செய்வார்கள் என்று நாம் இனி மேலும் எதிர்பார்த்திருக்கலாகாது. அவர்கள் ஆட்சிக்கு ஒரு முடிவை நாம் உடனடியாகத் தேடவேண்டும்'' என்றான். தமது பரிபாலனப் பகுதியில் இருந்த சில தலைமைக்காரர்கள் வெள்ளையராய மாகாண அதிபருக்குப் பணிந்து பந்தம் பிடித்தமையைப் பொறுமல் அவர்களைத் தண்டித்தான். அதனால் ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் கெபிற்றிப் பொலவின் செய்கை மாட்சிமைமிக்க ஆங்கிலேய மன்னரை நிந்தித்ததாகும் என்றார்.

ஊவாப் பகுதியில் எதிர்க் கிளர்ச்சி எழுந்தபோது ஆங்கிலேயர் அதன் காரணத்தைத் திரித்து அது ஒரு கலகந்தானே. அதனை அடக்கிவருக எனக் கெபிற்றிப் பொல திசாவையை ஆயுதங்களுடனும் படையுடனும் அனுப்பினர். கரவறியாத கெபிற்றிப் பொல ஊவாவுக்குப் போனபோது அது வெறுங்கலகமல்ல அது வெள்ளையரை வெளியேற்ற வேண்டுமென எழுந்த ஓர் எதிர்க்கிளர்ச்சி என அறிந்தான். உடனே தான் கொண்டுசென்ற வெள்ளையரின் ஆயு

தங்களை அவர்களிடம் திருப்பி அனுப்பிவிட்டு எதிர்க் கிளர்ச்சியாள ரிடையே புகுந்து அவர்களால் தலைவராகத் தெரியப்பட்டார். தலைவரான கெபிற்றிப்பொல இலங்கை சுதந்திரமடைய வேண்டிய வழிகளை வகுப்பாராயினர்.

மொலிகொடையும் எகிலப்பொலவும் ஆங்கிலேயர் பக்கத்தில் இருந்த காலத்திலேயே கெபிற்றிப் பொல கலகக்காரருக்குத் தலைவரானார். அவருக்கு கொடகெதர. அதிகாரம் ஆகிய பெரியார்களும் வேறு 17 தலைமைக்காரரும் உதவியாயிருந்தனர். அவர்கள் எல்லோரும் ஆங்கில அரசாங்கத்தின் பிரகடனத்தால் 1-1-1818 முதல் அடங்காப்பிடாரிகள் என அறிவித்தல் செய்யப் பட்டனர். அவர்களுடைய பொருள் பண்டங்கள் ஆதனங்கள் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆங்கிலேயர் மட்டக்களப்பு முதல் பதுளை வரையுள்ள வீதியை நன்கு பாதுகாத்து வழியில் முஸ்லிம்கள் அதிகமுள்ள கொட்ட போவா என்ற இடத்தில் படைகள் தங்கும் கூடம் அமைத்து முஸ்லிம்களுக்கு ஆசைவார்த்தைகூறி அவர்களுடைய ஆதரவையும் பெற்றார்கள். அம்பாந்தோட்டை, மாத்துறை, மட்டக்களப்பு, பதுளை, கண்டி முதலிய இடங்களிலிருந்து ஊவாப் பகுதிக்கு வேண் டிய படைகளை அனுப்பினர்கள். எதுவிதத்திலும் கிளர்ச்சியாளரை முற்றுக முறியடிப்பதே அவர்களின் முதல் நோக்கமாக இருந்தது.

நிலைமை மிகமோசமாக இருந்ததையும் அதுவெறுங் கலகம் அல்ல என்றும் உணர்ந்த ஆள்பதி அவர்கள் அத்தாணி மண்டபத்திலே அதிகாரிகள் தலைவைகள் அனைவரையும் அழைத்து ஆத்திரத்தோடு பேசினார். அவர் பேசியவற்றை வெகு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அதிகாரிகள் அன்றைய கிளர்ச்சி பெரும்பாலும் பொதுமக்களிடையேதான் உண்டானதென்றும் அது வெகுவிரை வில் தணிந்துவிடும் என்றும் கூறியதோடு விஞ்ஞான ரீதியில் ஓர் உதாரணமும்கூறி விளக்கினர்கள். நீரைக் காய்ச்ச உண்டாகும் உப்பு மீண்டும் நீரில் கரைந்து விடுவதுபோல பொதுமக்களிடையே எழுந்த கலகம் அவர்களிடையே விரைவில் தணிந்துவிடும் என்றனர்.

கிளர்ச்சியாளருக்குச் சாதகமாகப்போலும் கண்டியில் கனத்த மழைபெய்தது. நிலச்சரிவுகளும் பெருவெள்ளமும் ஏற்பட்டன. ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து படைகளை அனுப்ப இயலாத வகை யில் கழனிகங்கை பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதற்குள் கலகம் பன்மடங்காகப் பெருகியது. மொலிகொடையைத் தவிர ஏனைய

பெரியார்கள் கலகக்காரர் பக்கம் சார்ந்து நின்றனர். ஆங்கிலேயர் மனஞ்சலித்துக் கண்டியை விட்டுப்போகவும் யோசித்தனர். அவர்கள் 1803 ஆம் ஆண்டில் கண்டியரிடம் அநுபவித்த துன்பங்களை எண்ணிக் கவலைப்பட்டனர். இச்சமயத்தில் வேறென்றுஞ் செய்ய இயலாது கண்டிப்பகுதியில் இராணுவ ஆட்சியைப் பிரகடனஞ் செய்தனர்.

ஆங்கிலேயர் எவ்வளவு முயற்சிகள் எடுத்தபோதிலும் கிளர்ச்சி மேலும் பரவுவதாயிற்று. மூன்றுகோறளை நான்கு கோறளை, உடுநுவர, எட்டிநுவர, ஆகிய இடங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெள்ளையனே வெளியே போ'' என்ற குரல் ஒலித்தது அதனால் எகிலப்பொல மீது சந்தேகங்கொண்ட ஆங்கிலேயர் அவனைச் சிறைப் படுத்தினர். ஆள்பதி அவர்கள் எகிலப்பொலவைத் துரோகி `என அறிக்கையில் எழுதினர்.

இதற்குள் நிலைமை ஓரளவுக்கு மாறியது. ஏப்ரல் மாதத் தில் சென்னையில் இருந்து 2000 படைகளும், வங்காளத்திலிருந்தும் சென்னையில் இருந்தும் 5000 படைகளும் வந்திறங்கினர். அதனால் கண்டி மக்களுக்குத் தேசாபிமானம் தலைக்கேறியது. துரைசாமி கண்டியரசனுகவும் கெபிட்டிப்பொல முதலாவது அதிகாரியாகவும் இருத்தல் வேண்டும் எனத் தீவிர நடவடிக்கை எடுத்தனர்.

கெபிட்டிப்பொல படைத்தலைமையூண்டு,துரைசாமி சமேதனுய்ப் பரணகம என்ற இடத்தில் மேஜர் மக்டொனல்டைத் தாக்கினர். அதுமுதலாக ஆங்கிலேயருடைய கோட்டைகளைத் தாக்கி வெற்றிப் பெருமிதத்தோடு போன நேரத்திலே ஆங்கிலேயருடைய படைகள் திருக்கோணமலையில் இருந்து கண்டியைக் காப்பாற்றுவதற்கு விரைந்து சென்றனர். எதுவிதத்திலும் கலகத்தை அடக்க முனைந்த ஆங்கி லேயர் கெபிட்டிப்பொலவைப் பிடித்துத் தருபவருக்கு 2000 வெள் ளிக்காசு பரிசு தருவதாக பறையறைந்தனர். நாட்டபிமானம் நிறைந்த கெபிற்றிப்பொலவைக் காட்டிக்கொடுக்கக் கண்டியர் விரும்ப வில்லை. அவர் கண்டியரின் அபிமானத்தலைவர் அல்லவா? இதற்குள் நாட்டபிமானங்கொண்ட தும்பறை மக்களின் தலைவன் மடுகல்ல கெபிற்றிபொல பக்கஞ் சார்ந்தான். அவனுக்கு இரண்டாவது அதிகாரிப்பதவி கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் அவன் துரை சாமியை இராசமரியாதையோடு பாதுகாத்து வந்தான். ஆங்கிலே யரை நாட்டை விட்டுத் துரத்திவிட்டுக் கண்டியரசின் கீழே ஒரு கொடியின்கீழ் இலங்கை முழுவதையும் ஓரரசாகப் பரிபாவித்தல் வேண்டும் எனத் தலைவர்கள் கருதினர்கள்.

மொலிகொடை மாத்திரம் ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ள வனுய் இருந்தான். அதனல் கொழும்பிலிருந்து நாலுகோறனேக் கூடாகக் கண்டிநாட்டுக்குப் படைகளையும் ஆயுதங்களையும் ஆங்கிலேயர் கொண்டுபோனர்கள். மொலிகொடையைப் பின்பற்றி எக்னெலிகொடையும் விசுவாசமாய் இருந்தான். கண்டிநாட்டிலிருந்த முஸ்லிம்களுக்கு ஆங்கிலேயர் அபயமளித்தமையோடு அவர்களுக்கு ஏற்படும் நட்டங்களையும் ஈடுசெய்வதாக வாக்களித்தனர். எனவே முஸ்லிம்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர்.

ஆங்கிலேயர் என்னதான் செய்தபோதிலும் கண்டியரை அடக்க வெகுவாகச் சிரமப்பட்டனர். அவர்களுடைய படைகள் வெகுவாகச் சேதப்பட்டன. படையில் இருந்த ஐரோப்பியர் ஆயிர மாயிரமாகக் கொல்லப்பட்டனர். எனவே அவர்கள் கண்டியை விட்டு வெற்றிகரமாகப் பின்வாங்கவும் யோசித்தனர். கெபிற்றிப் பொல 5000 வீரருடன் மக்டனுட் தளபதியின் பல்லாயிரம் படைகளை எதிர்த்து நிர்மூலமாக்கியதையும் கெபிற்றிப்பொலவின் படை வீரருக்கு எவருக்கேனும் சேதம் ஏற்படாமையையும் டேவி கண்டு எழுதியுள்ளான். கெபிற்றிப்பொலவின் அபார மூலோத்திறனையும் செயற்றிறனையும் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர்.

இதற்குள் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயருக்கு உதவியாகப் படைகள் வந்தனர். அப்படைகள் கண்டி நாட்டின் நாலாபக்கங்களிலும் பரவி ஆங்காங்கு வீடுகள் வயல்கள் கடைகள் கட்டடங்கள் என்பவற்றை நெருப்பிட்டு அழித்தும், வழியில் கண்ட நின்ற பொது மக்களை வெட்டிக் கொன்றும் சுட்டுக் கொன்றும் அசுரவேலை செய்தனர். மேலும் கலகத்தை ஆதரித்த தலைவர்களின் மனைவி மக்களை இரக்கமின்றித் தண்டித்தும் பழிவாங்கினர்கள். பழியொன்றும் அறியாத பாமர மக்களிடத்தும் படைகள் பாதகச் செயல்களைச் செய்தார்கள். நாட்டிலிருந்த ஆயுதங்கள் எல்லாவற்றையும் பறி முதல் செய்தும் உணவுப் பொருள்களைச் சூறையாடியும் பொது மக்களைத் துன்புறுத்தினர்.

இந்தியாவிலிருந்து மேலும் படைகள் வந்தனர். இலங்கையிலும் விசுவாசமுள்ள இடங்களில் படை திரட்டினர்கள். படைகள் செய்த சித்திரவதைகளைத் தாங்க இயலாமல் கலகத்தில் ஈடுபட்டவர்கள் பலர் மனைவி மக்களைப் பணயமாகவும், உணவுப் பொருள்களைக் கப்பமாகவும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துச் சரணடைந்தார்கள். கண்டியர் தங்கள் பழைய காலத்து ஆயுதங்களைக் கொண்டு வலிமை வாய்ந்த

ஆங்கிலப்படைகளை நிரந்தரமாக வெற்றி கொள்ள இயலவில்லை. ஆங்கிலேயருக்கு மேலும் மேலும் படைகள் இந்தியாவிலிருந்து வந்தனர்.

ஆங்கிலேயருடைய படைகள் வெற்றிகரமாக உள்நாடுகளுள் புகுந்து கலகக்காரரையும் காடுகளில் இருந்த அவர் தம்குடும்பங்களையும் பணியவைத்தனர். நாறன் கோவா என்ற இடத்தில் கெபிற்றி பொலவின் குடும்பத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர். இதற்குள் ஊவா, வெல்லசா ஆகிய கலக உற்பத்தி நாடுகள் கைப்பற்றப் பட்டன. இப்போது மாத்தளை, தும்பறை, நுவரகலாவிய ஆகிய இடங்களிலேதான் கலகம் நிலவுவதாயிற்று.

இந்நிலையில் கலகத்தின் மூச்சுக்குறையவாரம்பித்தது. தலைவர் களிடையே அபிப்பிராயபேதமேற்பட்டது. சுண்டியரசன் எனத் தாங்கள் கொண்டு திரிந்த துரைச்சாமி உண்மையில் தமிழனுமல்ல இராசவமிசத்தவனுமல்ல என்றும், உண்மையான துரைச்சாமி மதுரை யிலே இருந்தான் என்றும் போவித் துரைச்சாமி முன்னர் புத்த பிக்குவாயிருந்த வில்லபா என்றும், அவன் ஏழு கோறளை வாசி என்றும் எல்லோரும் அறிந்து கொண்டனர்.

இதற்குள் பிலிமைத் தலாவை மன்னரிலிருந்து வீரவாகு என்ற ஒரு தமிழ் இளைஞனைக் கண்டிமன்னன் எனப்பிரகடனஞ் செய்து கொண்டமையால் ஏனைய தலைவர்கள் கூற்றும் இவன் கூற்றும் பொய் யாயின. தும்பறை, மாத்தளை ஆகிய இடங்களை ஆங்கிலேயர் கைப் பற்றிக் கொண்டமையால் கலகத் தலைவர்கள் நுவரகலாவியாவில் மறைந்திருந்தனர். இவர்களிருப்பிடத்தை அறிந்த ஆங்கிலேயர் இவர்களைப் பின் தொடர்ந்து சென்று பிலிமையையும் கெபிற்றி பொலவையும் 28-10-1818 இல் பரவககம என்ற ஊரில் கைப்பற் றினர். மடுகல்லை அவ்விடத்தை விட்டு மறைந்தானேனும் அவனை ஆங்கிலேயர் 1-11-1818 இல் கைப்பற்றினர். கலகத் தலைவர்களுள் கிவுலேகெதர என்பான் அகப்படாமல் ஓடிமறைந்தான் எனினும் அவன் பிச்சைக்காரன் வேடத்தில் விந்தனை வேடர் மத்தியில் சிறை செய்யப்பட்டான். பிலிமைத் தலாவை மன்னன் எனப் பிரகடனஞ் செய்த வீரவாகுவை பிளாக்கவுஸ் என்ற சுங்க அதிகாரி மன்னரில் சிறை செய்தமையோடு கலகக் காரரின் தலைவர் எல்லோரும் அகப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறுகச் சற்றேனும் எவரும் எதிர்பாராத வண்ணம் 2-11-1818இல் புத்தரின் புனிதப்பல்லு ஆங்கிலேயரின் கைக்கெட்டியது. அதனை அறிந்த பொதுமக்கள் ஆங்கிலேயரே தங்களை ஆள்வேண்டிய

வர்கள் என உணரத் தொடங்கினர். அவர்களுடைய சம்பிரதாயப் படி புத்தரின் புனிதப் பல்லு யார் கையிலே இருக்கிறதோ அவரே ஆள உரிமை உள்ளவர் என்பதாகும். எனவே கலகம் ஓய்ந்து அமைதி நிலவுவதாயிற்று. ஆகவே ஆங்கிலேயர் முன்னர் பிரகடனஞ் செய்த இராணுவ ஆட்சியை 21-11-1818 இல் மாற்றுத்தாவு செய்தார்கள் எனினும் அதன் நீக்கம் 11-11-1820 வரையில் தான் ஏற்பட்டது.

இப்போது கிளர்ச்சியாளர் தலைவர்கள் எல்லோரும் யுத்த காலக் கைதிகளாயினர். எகிலப்பொல முதலில் விசாரிக்கப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். கெபிற்றிப் பொல, மடுகொல்ல, பிலிமைத்தலாவை, இபகம முதலானோர் விசாரிக்கப்பட்டுக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டனர். இவர்களுள் கெபிற்றிப் பொலவும் மடுகொல்லவும் கொலைத்தண்டனைபெற்றனர். ஏனையோரின் குற் றங்கள் கொலைத்தண்டனைக்கு உரியன வல்ல எனக் கண்டபின் அவர்கள் மோறிற்றஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர். கலகத்தில் பங்கெ டுத்த வேறு கிராமாதிகாரிகள் பலரும் மோறிற்றஸ் தீவுக்கு அனுப் பப்பட்டார்கள். இங்ஙனமாகக் கலகங்காரணமாக நடை பெற்ற படை மன்றினுல் எல்லாமாக 47 தலைவர்கள் தண்டனைக் காளா னர்கள். இவருள் 28 பேர் கொலைத்தண்டனையும், 10 பேர் நாடு கடத்தலும், 8 பேர் மன்னிப்பும்பெற்றனர். ஒருவர் இயற்கை மர ணம் எய்தினர். கலகத்தில் பங்கெடுத்த புத்தபிக்குகள் யாழ்ப்பா ணக் கோட்டைக்குள் சிறையிடப்பட்டார்கள். உரியகாலத்தில் ஆங்கிலேயரிடம் மீண்டு சரணடையாத 75 தலைவர்களின் காணி பூமிகள் பறி முதலாக்கப்பட்டன. இந்தியப் படைகள் நாளடை வில் இலங்கையை விட்டுப் போனபோதும் அவர்களால் இலங்கை அரசாங்கத்துக்கு £ 232675 பொன் செலவாயிற்று என்பர்.

கலகந் தணிந்தபின் ஆள்பதி பிறவுண்றிக் அவர்களால் 21-11-1818 முதலாக ஒன்றன்பின் ஒன்றுக 56 பிரசித்தங்கள் செய்யப்படலாயின. அவையாவும் ஆங்கிலேய அரசாங்க உத்தியோகத்தருக்கு அதிகாரம் வழங்குவனவாய், கண்டிப் பெருமக்களின் செல்வாக்கைக் குறைப் பனவாய், பரிபாலன அலுவல்களை இலகுப்படுத்துவனவாய், மீளவுங் கலகங்கள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பனவாய் விதிக்கப்பட்டன என்பர். அவை கண்டிநாட்டு அரசாங்க அலுவலாளர் ஜியோ லூசிக்னன் என்பவனுல் எழுதி வாசிக்கப்பட்டன.

அப்பிரசித்தங்களைப் பொதுவாகப் பார்க்கும்போது முதல் ஆறு பிரசித்தங்களும் 1815 ஆம் ஆண்டு முதலாகக் கண்டிநாட்டின் நிலையைச் சுருக்கியுரைத்தும், அக்காலத்தில் பிரித்தானியர் தண்ண

ளியுடன் அரசு செய்தனர் என்றும் அவ்வாறிருந்த போதிலும் கண்டியில் கலகம் உண்டாகிவிட்டது என்றும் அது கண்டி அதிகாரிகளின் சுயநலப்போக்காகவே இருந்தது என்றும் இனிமேல் கலகம் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறின.

ஏழாம் எட்டாம் பிரசித்தங்கள் பிரித்தானிய அரசாங்கத்தின் பேரதிகாரம் ஆள்பதி அவர்கள்மூலம் அங்கே நிலவும் என்றும், அவ்வதிகாரம் அநுட்டானத்தில் ஓராணையாளர் குழுவிடம் விடப்பட்டுள்ளதென்றும், கண்டியில் ஓர் அதிபர் அதற்கென உறைவார் என்றுங் கூறின. கண்டியில் உள்ள சகல மக்களுக்கும் ஒரே மாதிரியான உரிமைகள் உண்டு என்றும் ஏற்றத் தாழ்வான நிலைமைகள் எவையும் இனிமேல் இடம்பெறுவென்றும் பொதுமக்கள் அரசாங்க அதிகாரிகளுக்கே பணிவு காட்டுதல் வேண்டும் என்றும் கூறின.

ஒன்பது தொடக்கம் பதினேந்தாவது வரையில் உள்ள பிரசித்தங்கள் அரசாங்கத்தில் இடம்பெறும் அதிகாரிகள் கிராமத்தலைவர்களின் நியமனம், கடமை, உரிமை, பொறுப்பு ஆகியவற்றையும், அவர்கள் ஆணைக்குழுவுக்குக் கட்டுப்பட்டு அலுவல் செய்தல்வேண்டும் என்பதையும் மன்னருக்கும் ஆள்பதிக்கும் அதிகாரிக்கும் அவ்வத்நியோகத்தர் கௌரவஞ் செய்யவேண்டிய முறைகளையுங் கூறின.

பதினேழாவது பிரசித்தம் மிகமுக்கியமானது. அது முன்னர் 1815 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமவாயசம்பந்த மகாநாட்டில் ஆங்கிலேயர் புத்தசமயத்துக்குக் கொடுத்த பாதுகாப்புறுதியை மேலும் வலியுறுத்துவதாயும், பிற சமயங்களுக்கும் பாதுகாப்பும் சகிப்புத்தன்மையும் அளிப்பதாயும் உள்ளது.

பதினேழாவது தொடக்கம் இருபத்தைந்தாவது வரையுமுள்ள பிரசித்தங்கள் புதிய வரிமுறையைப் பற்றிற் கூறுவன. முன்னர் கண்டி மன்னன் காலத்தில் இருந்த ''அரமுதல்'' என்பனவாதிய வரிகள் நீக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலாக நெற்காணிவரி விதிக்கப்பட்டது. அது விளைவிலே பத்தில் ஒன்று என விதிக்கப்பட்டபோதிலும் வாரம்பட்ட இடங்களில் பதினைன்கில் ஒன்றுகவும் கோபங்கொண்ட இடங்களில் ஐந்திலொன்றுகவும் சில இடங்களில் அதுவுமில்லாமலும் நிலவிற்று என்பர். இதில் உள்ள வேடிக்கையொன்றையும் இங்கே குறிப்பிடுவது மிகையாகாது. அது வேடரிடம் தேன்மெழுகாக வரிவிதிக்கப்பட்டமையாகும்.

இருபத்தாறு தொடக்கம் இருபத்தொன்பது வரையுள்ள பிரசித்தங்கள் கண்டிப் பிரபுக்களுக்கு விதிக்கப்பட்ட வருமானத்தைப் பற்றிக் குறிப்பனவாகும். பிரபுக்களுக்கு வரி இல்லை என்ற சலுகையோடு அவர்களுக்குச் சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டது.

முப்பது தொடக்கம் முப்பத்திரண்டாவது பிரசித்தங்கள் அரசாங்கம் குடிமக்களை சாதியடிப்படையில் ஊழியஞ் செய்யக் கட்டளையிடும் உரிமையைப் பற்றிக் கூறுவன. இதுகாறும் உபயோகமற்ற முறையில் நடைபெற்ற ஊழியங்கள் இனிமேல் உபயோகமான முறையில் செய்யப்படும் எனக் கூறின.

முப்பத்துமூன்றுவது பிரசித்தம் அரசாணைச் சபையினர் கண்டிப் பிரமுகர்களுக்குத் தண்டனை விதிக்கும் உரிமையையும் அதிகாரத்தையும் வகையையும் கூறிற்று. அதில் தலைமைக்காரர் முதலியோரின் நியமனம், உத்தியோக உயர்ச்சி, உத்தியோக நீக்கம், தண்டனை என்பனவாதியன கூறப்பட்டன.

முப்பத்துநாலாவது தொடக்கம் ஐம்பத்தைந்தாவது வரையில் உள்ள பிரசித்தங்கள் நீதிக்கோவை, சட்டக்கோவை, தண்டக்கோவை என்பனவற்றைக் குறித்தன. அன்றி அரசாங்க பரிபாலனத்தின் இறுதி அதிகாரம் ஆங்கிலேய அரசாங்கத்திடமே இருந்தது எனநுதலின.

இப்பிரசித்தங்கள் முந்திய சமவாய சம்பந்தமாக நாட்டுக் கட்டுப்பாடுகளைப் போலன்றிக் கண்டி மக்களை வெகுவாகப் பந்தித்து நின்றன. அதனால் கண்டி நாட்டு அரசியல் விவகாரமே வேறுக அமைவதாயிற்று. இவையாவையும் ஒழுங்கு செய்தபின் ஆள்பதி பிரவுண்றிக் கொழும்புக்கு மீண்டார். அவர் பதினைந்து மாதகாலம் கண்டியில் வாழ்ந்தார் என்பர். டொயிலி செய்த சேவையைப் பாராட்டிய பிரித்தானிய அரசாங்கம் அவருக்குப் பெரிய பிரபுப் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

அரசியற் பரிபாலனத்தின் பொருட்டு கண்டி பதினைரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் ஆங்கில உத்தியோகத்தரே நிர்வாகிகளாய் நியமிக்கப்பட்டார்கள். திசாவைகள் பழைய செல்வாக்குகள் நீக்கப்பட்டவராய்ச் சம்பளம் பெறும் உத்தியோகத்தராயே இருந்தார்கள். மகாதிசாவை எனவழங்கிய கெபிற்றிபொல 26-11-1818 இல் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டார். கொலைஞன் அவருடைய தலையைத் துணிக்குமுன் அவர் புத்தரின் புனிதப் பல்லுக்குத் துதி கூறிவிட்டுத் தானமும் செய்துவிட்டுப் புன் முறுவலோடு மரணத்தை வரவேற்றார். அவருடைய மூளையை ஆராய விரும்பிய ஆங்கிலேயர் அவர் மண்டையைத் தமது மூளையாராய்ச்சிச் சாலைக்குக் கொண்டுசென்றனர் என்பர். ஸ்கொத்துலாந்தில் அவருடைய அபார மூளை ஆராயப்பட்டபின் அவருடைய மண்டையோடு தகுந்த

மரியாதையோடு கண்டியில் வீரருக்குரிய நடுகல் நினைவுத்தூணின் கீழ் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. தலைசிறந்த தேசிய வீரராய கெபிற்றிப்பொல மகா திசாவைக்குப் பெரிய சிலையெழுப்ப வேண்டும் என்பதே கண்டி மக்களின் பெருவிருப்பமுமாகும்.

கண்டியில் நடந்த எதிர்க் கிளர்ச்சியைப் பற்றிப் பிற்காலத்தில் குறிப்பிட்டு எழுதிய உயர்நீதிமன்ற நீதியரசர் லோறிஸ் அவர்கள் எழுதியவை இங்கே குறிப்பிடத்தகுந்தவை. ''ஆங்கிலேயர் 1818 ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்து கொண்டமைக்கு வெட்கப்படாமல் இருக்க இயலாது. கண்டிப் பிரமுகர்களின் குடும்பத் தலைவர் எனக் கணிக்க ஓர் ஆண்மகனையாவது விட்டுவைக்காமல் அவர்கள் குரூரமாகக் கொன்றார்கள். அவர்களுடைய வாளுக்கும் துப்பாக்கிக்கும் தவறியவர்களைக் கொள்ளை நோயும் பிளேக்கும் கொன்றுவிட்டன. அதனால் கண்டியருள் பெரியவர்கள் இல்லாது போனார்கள். எஞ்சிய வகுப்பினர், படிப்பு வசதியில்லாமலும், பொருளாதார வசதியில்லாமலும் பற்றுக்குறையால் வாடிவதங்கினர்கள்.''

அத்தியாயம் 10

தனியாட்சி முறை

இலங்கை அரசியல் வளர்ச்சியைப்பற்றி எழுதும் அரசியற் பண்டிதர்கள், இலங்கையில் ஆங்கிலேயர் அரசு நிலைபெற்ற காலத்தை —1796 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தை ஏழு பிரிவாகப் பிரித்துள்ளார்கள். முதலில் 1796 ஆம் ஆண்டு முதலாக 1798 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைப் படைப்பாலன காலம் என்பர். இரண்டாவது 1801 ஆம் ஆண்டு முதல் 1833 வரையுள்ள காலத்தை அரசாங்கக் குழுவின் ஆலோசனையுடன் ஆள்பதி அரசாண்ட காலம் என்பர். மூன்றுவதாக 1833 தொடக்கம் 1920 வரை சட்ட சபையில் உத்தியோக அங்கத்தவர் பெரும்பான்மையினராய் இருந்த ஆட்சிக்காலம் என்பர். நான்காவது 1920 தொடக்கம் 1924 வரை சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவரும் தெரியப்பட்டவருமான பிரதிநிதிகள் பெரும்பான்மையினராய் இருந்த ஆட்சிக்காலம் என்பர். அதுவே பொறுப்பில்லாத செல்வாக்குக் காலம் எனவும் பேசப்படுவது.

ஐந்தாவது 1931—1947 அரசாங்க சபைக்காலத்து இரட்டை ஆட்சி. ஆறுவது 1947—1948 பாராளுமன்றத்தின் உள்ளூர் அலுவல்களில் பூரண பொறுப்பாட்சி.

ஏழாவது 1948 தொடக்கம் பொது நல வாயத்துள் பூரண சுதந்திரவாட்சி.

இவற்றுள் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அரசாங்கக் குழுவுடன் ஆள்பதி அவர்களின் ஆட்சிக் காலத்தைத் தனியாட்சி என்றும் கூறலாம். ஏனெனில் ஆள்பதி அவர்கள் தமக்கு ஆலோசனை கூறிய அரசாங்க உத்தியோகத்தர் குழுவின் கருத்துக்களுக்குச் செவிமடுக்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கவில்லையாதலால், ஆள்பதியவர்களுடைய தனியாட்சியே இக்காலத்தில் நடை பெற்றதெனலாம். இக்காலம் பல வேறு நிகழ்ச்சிகளால் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஆள்பதி நோத் அவர்களுக்குப் பின்னர், சேர் தோமஸ் மெயிற்லன் அவர்கள் ஆள்பதியாக இங்கே வந்தார். அவர் இலங்கைக்கு வருமுன் நல்லபடைப் பயிற்சிபெற்று இந்தியா முதலாய இடங்களில் போர் முகங்களைக் கண்டு அனுபவம்பெற்றவர். இந்தியா

விலே கல்கத்தாவிலே கைதர் அலியோடு போரிட்டு இராசப் பிரதி நிதியாய கோன்வாலிஸ் பிரபுவால் பாராட்டப்பட்டவர். அவரது அரிய சேவைக்குப் பிரதியுபகாரமாக அவரைக் கோமறைக் கழகத்தில் அங்கத்தவராக்கி ஆண்டு தோறும் £1500 பொன் படிகொடுத்துக் கௌரவித்துக் கிழக்கிந்திய வர்த்தக சபையில் இயக்குநராகவும் நிய மித்துப் பெரிய வருமானத்துக்கு வழிசெய்தார்கள்.

ஆள்பதி மெயிற்லன் அவர்களுக்கு வாழ்க்கை என்றுல் வேலே என்றதே லட்சியமாய் இருந்தது. எனவே அவர் இலங்கையின் நிலே மைகளே நன்கறிதற்பொருட்டு ஆங்கிலேயருக்குச் சொந்தமான கரை நாடுகளேச் சுற்றிப்பார்த்துத் தமக்குத் தேவையான முன்னறிவைப் பெற்றுக்கொண்டார். அவர் படைநுணுக்கந் தெரிந்தவராயிருந்த போதிலும் கண்டி மீது படை எடுக்கத்துணியவில்லே. பரிபாலனத்தை நல்ல வழியில் நடத்துவதற்கு இன்ன இன்ன செய்தல் வேண்டும் என்று கூறும் பெரியதோர் அறிக்கையில் பல காரியங்களே எடுத்துத் தகவுரைகூறி குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பினர். அவர்காட்டிய வழிகளால் இலங்கை அரசாங்கத்துக்கு ஆண்டு தோறும் £300000 பொன் மிச்சம் ஏற்பட்டது என்பர்.

ஆள்பதி என்ற கௌரவத்தால் தமக்குப் பல காரியங்களேச் செய்வதற்கு அதிகாரம் உண்டு எனக்கூறிய மெயிற்லன் அவர்கள், உண்மையில் தீவிரமாகப் பல காரியங்களேச் செய்யவாரம்பித்தார். ஆள்பதி நோத் அவர்கள் ஆராய்வின்றி நீக்கிய வழிய முறை இலங் கைக்கு இன்றியமையாதது என மெயிற்லன் கருதி அதனே மீள நடை முறையில் கொண்டுவந்தார். அவருக்கு உதவியாயிருந்த அலெக் சாண்டர் யோண்ஸ்ரன் அவர்கள், சுதேசமொழிகளே நன்கறிந்து, பரிபாலனத்துக்குத் தேவையான அலுவல்களேச் செய்வதில் பெரும் பங்கெடுத்தார். அவர் சுதேசிகளும் மேலுத்தியோகத்தில் அமர்த்தப் படவேண்டும் என்று தகவுரை கூறினர். இக்காலத்திலேதான் இங்கி லாந்தில் ஒரு குற்றவாளி நீதிமன்றத்தில் விசாரிக்கப்படாமல் சிறை யிடப்படக்கூடாது என்ற சட்டம் நடைமுறையில் வந்தது. அச்சட்டம் இலங்கையிலும் நடைமுறையில் இருத்தல் வேண்டும் என வழிவகுத் தவர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் அவர்களே. இன்னும் விசா ரணையின் போது யூரிகள் எனப்படும் நடுவர் முன்னிலேயில் வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் யோண்ஸ்ரன் வழிவகுத்தார்.

ஆள்பதி மெயிற்லன் அவர்கள் ஆள்பதிப் பொறுப்பேற்குமுன் இங்கிலாந்திலே குடியேற்ற மந்திரியாரின் அலுவலகத்திலே முன்னர் ஆள்பதி நோத் அவர்கள் இலங்கை அரசியல் சம்பந்தமாக எழுதிய அறிக்கைகள் குறிப்புக்கள் என்பனவற்றைக் கருத்துடன் படித்து

வந்தார். அவர் இயற்கையாகவே எதனையும் நுணுகியாராயும் மெய்யுணர்வாளராய் இருந்தபடியால் நாட்டின் நிலைமைகளை நேரிற் சென்று கண்டு அநுபவம் பெற்றார். அவர் ஆங்கிலேயர் ஆட்சியை இலங்கையில் நிலைபெறச் செய்வதற்கு வழிவகுத்தபோது முதலியார்களின் அதிகாரம் இடையூருய் இருந்ததை உணர்ந்தார். முதலியார்கள் பரிபாலனத்துறையிலும், வருமானத் துறையிலும், நீதி வழங்குந்துறையிலும் பொலிசுக்காரர்போல் நாட்டைக் காவல்செய்யும் துறையிலும் தோம்புகள் என்ற பதிவேடுகளைப் பாதுகாக்கும் துறையிலும் பிரதான பங்குள்ளவர்களாய் மிக வலுவுள்ள அதிகாரம் உள்ளவராய் இருந்தார்கள். அவர்களுடைய அதிகாரம் ஆள்பதி அவர்கள் வசனத்தில் கூறப்படின் அரசாங்கத்துள் ஓர் அரசாங்கமாகவே இருந்தது. அவர்கள் சிவில் சேவையாளரான உயர் உத்தியோகத்தர் மேலும். பொதுமக்கள் மேலும் அதிக செல்வாக்குள்ளவராய் இருந்தார்கள். அவர்களுடைய இருமொழிப் புலமை அவர்களை அதிகாரத்தில் இருத்தியதோடு அரசாங்கத்தின் திரமான அமைப்புக்கு இடையூருகவும் இருந்தது.

எனவே ஆங்கிலேயர் அதிகாரத்தை இலங்கையில் வேரூன்றச் செய்வதையே பிரதான வேலையாகக் கருதிவந்த மெயிற்லன் அவர்கள் முதலியார்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைப்பதற்கே முதலில் வழிவகுப்பாராயினர். அவ்வாறு செய்வதும் சாவதானமாக முரண்படாமல் பகைக்காமல் செய்யவேண்டுமென எண்ணினர். எனவே முதலில் உயர்தர உத்தியோகத்தரைச் சிங்களம் அல்லது தமிழ்மொழியைக் கற்றுப் பொதுமக்களுடன் நேரில் தொடர்பு கொள்ளச் செய்தார். அவர்களை நாடுகளுள் சென்று மக்களோடு நேரில் தொடர்புகொண்டு அவர் பிரச்சினைகளை அறியச்செய்தார். இதுகாறும் சின்ன விதானைமாரையும் வட்டவிதானைமாரையும் முதலியார்களே நியமிக்கும் பொறுப்பை நீக்கித் தாமே அந்நியமனங்களை மேற்பார்வை செய்தார். பறங்கியருள் படித்தவர்களை சிறு நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமித்தார். அதனால் முதலியார்கள் நீதி வழங்கும் அதிகாரத்தை இழக்க வேண்டியவராயினர். இன்னும் பொலிசு விதானைமார் என்ற உத்தியோகத்தரை நியமித்து முதலியார்களின் செல்வாக்கைக் குறைத்தார். விதானைமார் சிவில் உத்தியோகத்தரின் கீழ் வேலை செய்யவும், முதலியார்கள் சம்பளம் பெறும் உத்தியோகத்தராய் அரசாங்கத்துக்குப் பணிவுள்ளவராய்க் கடமையாற்றவும் வழி வகுத்தார்.

இன்னும் புத்தசமயத்தவர் குருமாரும், பிராமணக் குருமாரும் நாட்டில் செல்வாக்குப் பெற்றால் முறைதவறுகும் எனக்கருதி; அது காறும் ஒல்லாந்த அதிகாரிகளால் கத்தோலிக்கர் மேல் விதிக்கப்பட்டி

ருந்த தண்டச்சட்டங்களை நீக்கிக் கத்தோலிக்கருக்குச் சுதந்திரம் வழங்கினார். அதனால் கத்தோலிக்கப் பெரியார் தமது அரசாங் கத்தை ஆதரிக்க வழிவகுத்தார்.

நல்ல அரசாங்கத்தை நிலை நிறுத்த முனைந்த ஆள்பதி மெயிற் லன் திறமைசாலிகளான உத்தியோகத்தரை நியமிப்பாராயினர். உத்தியோகத்தர் திறமையாகக் கடமையாற்றும் வண்ணம் அவர்க ளுக்கு நல்லசம்பளமும், நல்ல முறையில் சலுகைப்பணமும் உத்தி யோக உயர்வும், ஓய்வு வழிகளும் வகுத்தார். அவர்கள் மக்களின் தேவைகளை அறிந்து தமக்குக் காலத்துக்குக்காலம் அறிக்கை தயா ரித்தல் வேண்டும் எனவும், அவ்வறிக்கைகளைத்தாமே நேரில் படிப்ப தாகவும் ஒழுங்குசெய்தார்.

மேலும் குடியியற் சேவையை மூன்று வகுப்பாகத் தரம் பிரித்து நல்ல முறையில் வகுப்புயர்வும் வகுத்தார். குடியியற் சேவையாளர் வர்த்தகத்திலீடுபடுதலைத் தடை செய்து, விவசாயத்தில் ஈடுபட வழி வகுத்து, அரசாங்கக் காணிகளை அவர்கள் மலிவாக வாங்கிக்கொள்ள உதவிசெய்தார். அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் உயர் நீதிமன்றத்துக் குத் துணை நீதிபதியாக மாற்றப்பட்டதும், பிரதம நீதியரசராய் வந்த லூசிங்ரன் மெயிற்லன் ஆள்பதியோடு ஒத்துப்போகாதமையால் லூசிங்ரனுக்கு மாற்றம் உண்டாகி அவர் இங்கிலாந்துக்குப் போக நேர்ந்தது. இதனால் ஆள்பதி நிரம்பிய அதிகாரத்தோடு தன் விருப் பத்தின்படி ஆட்சியை நடத்தினர்.

பின்னர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் அவர்கள் உதவியால் ஒரு புதிய நீதிக்கோவையைத் தயாரித்து வழங்கச் செய்தார். இதன் பின் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் அவர்களே £6000 பொன் வேதனத்தில் புதிய பிரதம நீதியரசராகப் பதவியேற்றார். இம் முறைகள் நல்ல முறையில் நடைபெறுமையால் இவை நான்கு மாநிங் களின் பின் மாற்றியமைக்கப்படலாயின. மெயிற்லன் காலத்தில் குற் றங்கள் வெகுவாகக் குறைந்தன. அதற்குக் காரணம் வேலையற்றி ருந்தவர்களுக்கு நிலங்களை வழங்கி அவற்றைத் திருத்தி விளைவுசெய்யு மாறு ஆள்பதியவர்கள் வழிகாட்டியமையும், நாட்டில் ஒழுங்கு முறைகள் நிலவச் செய்யப்பட்டமையுமாகும்.

நல்ல காரியங்களைச் செய்த ஆள்பதி மெயிற்லன் அவர்கள் இடையில் 1807 ஆம் ஆண்டில் கடை வரி என்ற ஒரு வரியையும் விதித்தார். அதனால் கடைக்காரர் அரசாங்கத்துக்கு 2% வரி கொடுக்க வேண்டியவராய் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். முன்னர் தென்னை

வரியை எதிர்த்தமை போல மக்கள் இந்த வரியை எதிர்த்தார்கள் எனவே இவ்வரி நீக்கப்பட்டு இறக்கு மதியான பொருள்களில் தீர்வை யாக விதிக்கப்படலாயிற்று. இன்னும் மெயிற்லன் அவர்கள் பரிபா லனத்தில் நீதி வழங்கலில் திருத்தஞ் செய்தாரேனும் பிரித்தானியப் படைக்கருவிகளின் மாசைப் போக்கவில்லை எனச் சரித்திராசிரியர் பேக்மன் கூறியுள்ளார்.

படைத்தலைவன் வெல்லிஸ் அவர்களின் போக்கு அரசாங்கத் திற்குப் பாதகமாக இருப்பதைக் கண்ட மெயிற்லன் படைக் கழகத்தை குலைத்து விட்டு அதற்குரியகாரணத்தைக் குடியேற்ற மந்திரிக்கு எழுதிய போது, அரசாங்கத்தின் நிர்வாகத்துக்குப் படைக்கழகம் முரணுயிருந் ததாக எழுதினர். நோத் அவர்கள் காலத்தில் இருந்த குடியேற்ற சேவையாளர் தனிப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொள்ளலாபம் பெற்றதை மெயிற்லன் அறிந்து அவ்வித சீர்கேட்டைக் குறைக்க வழி செய்தார். யாழ்ப்பாணத்தில் வருமானத் தலைவராயிருந்த ஹரிக்னன் என்பார் கைக்கூலி பெற்றும் வேறு வித தகாத வழி களில் ஈடுபட்டும் பொருளீட்டியதைக் கண்டறிந்து அவரை வேறி டத்துக்குக் குறைந்த வேலையில் மாற்றித் தண்டித்தார்.

மெயிற்லன் அவர்களுக்குப்பின் ரேபேட் பிரவுண்றிக் அவர்கள் ஆள்பதியாய் 1812 தொடக்கம் 1820 வரையும் இருந்தார். அவர் காலத்திலேதான் கண்டி கைப்பற்றப்பட்டது. அதனால் இலங்கை முழுவதும் ஒரு நாடாகியது. அன்றி 2357 ஆண்டுகளாக இலங்கை யில் நிலைத்திருந்த முடியாட்சி அத்தமித்தது. கண்டி கரை நாடுக ளோடு இணைக்கப்பட்டு மூன்றுண்டுகளாவதன் முன் அங்கே பெரிய எதிர்க் கிளர்ச்சி ஏற்படலாயிற்று. ஆள்பதி பிரவுண்றிக் அவர்கள் எதிர்க் கிளர்ச்சியையும் அடக்கி அமைதி நிலவச் செய்தார். அதனால் அவருக்குக் கண்டியைப் பிடித்த வீரன் என்ற விருதுப்பட்டமும் பதக்கங்களும் பட்டிகளும் கிடைத்தன. அவர் 1-2-1820 இல் இலங் கையை விட்டுப் போனார்.

ஆள்பதி பிரவுண்றிக் அவர்கள் ஓய்வு பெற்றுப் போனதும் இலங்கையில் படைத்தலைவராய் இருந்த சேர் எட்வேட் பாண்ஸ் அவர்கள் 1-2-1820 முதலாக உப ஆள்பதியாகக் கடமை ஏற்றார். அவர் 1-2-1822 வரை இரண்டாண்டுகள் ஆள்பதியாயிருந்து ஆட்சி செய் வதற்கிடையில் இந்தியாவில் படைச் சேவைக்கு மாற்றப்பட்டார். எனவே அவருடைய இடத்துக்கு சேர் எட்வேட் பசற் என்பார் 2-2-1822 இல் ஆள்பதியாக நியமிக்கப்பட்டார். அவர் பத்து

மாதங்கள் ஆள்பதியாக இருந்தார். அதற்குள் இந்தியாவில் படைச் சேவைக்குச் சென்ற பாண்ஸ் அவர்கள் பழையபடி இலங்கைக்கு ஆள்பதியாக மாற்றப்பட்டார்.

ஆள்பதி பாண்ஸ் அவர்கள் இலங்கையின் பல பாகங்களையும் சுற்றிப்பார்த்துப் போக்கு வரத்து வசதிக்காக வீதிகள், பாலங்கள் அவசியம் அமைக்கப்படல் வேண்டும் எனக் கண்டார். கோட்டை கொத்தளங்கள் இனித் தேவையில்லை. எமக்குத் தேவையானவை பிரயாண வீதிகளே என அவர் எழுதியும் உள்ளார். வியன்ன மகாநாட்டிலே 1815 ஆம் ஆண்டிலே வல்லரசுகள் செய்த திருவிளையாடல்களால் ஒல்லாந்த தேசத்துக்கு பெல்சியம் நாட்டைக் கொடுத்து ஒல்லாந்துக்குச் சொந்தமாயிருந்த தென் ஆபிரிக்காவையும் இலங்கையையும் இங்கிலாந்துக்குக் கொடுத்தார்கள். அதனாலே இனிமேல் இலங்கை ஆங்கிலேயருக்கே நிரந்தரமாகச் சொந்தமாகும் என்பதோடு கண்டியும் இணைக்கப்படலே கோட்டை கொத்தளங்கள் தேவையில்லாது போயின எனலாம். காடு நாடாவதற்கு நல்ல வீதிகள் நாடு நகரங்களை இணைத்தல் வேண்டும். நாட்டில் உள்ளவர்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுதல் வேண்டும். நாட்டபிமானம் மிக்கவராயிருத்தல் வேண்டும், என்பனவாதிய கருத்துக்கள் நிலவத் தொடங்கின.

ஆங்கிலேயர் முதலில் இலங்கைக் கரை நாடுகளில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டைகளைப் புதுப்பித்துப் பாதுகாப்புக்காக உபயோகித்தார்கள். அவை திருக்கோணமலை, கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம், கல்பிட்டியா, மன்னார், மாத்துறை, காலி, தங்காலை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தன. பின்னர் கண்டி நாட்டினரால் தமக்கு இடையூறு இல்லாதிருப்பதற்காக எல்லைப் புறங்களிலும் பல கோட்டைகளைக் கட்டினார்கள். அவை ரூவான்வல, அற்றப்பிட்டியா, குருணைக்கல், கல்கதற முதலிய இடங்களில் அமைக்கப்பட்டனவாகும். இக்கோட்டைகள் காட்டுப் பாதைகளான ஒற்றையடிப்பாதைகளால் கல்லும் முள்ளும் நிறைந்த வழிகளால் தொடுக்கப்பட்டன. ஆகவே நல்ல பாதைகள் இன்றேல் இக்கோட்டைகள் தாமும் பிரயோசனமில்லாதவைகளாகும். அன்றி கோட்டைகளில் வசித்த ஆங்கிலப் படை வீரர் சுரநோயினல் காலத்துக்குக் காலம் மாண்டனர். எனவே காடுகெடுத்து நாடாக்கி நல்ல வீதிகள் செய்யப்பட வேண்டியிருந்தது.

பாண்ஸ் காலத்திலே பல வீதிகள் அமைக்கப்பட்டன. இவரது காலம் 1820-1830 மிக அமைதியான காலம். ஐரோப்பாவிலும் நெப்போலிய மகாயுத்தங்கள் ஓய்ந்து மக்கள் சமாதானமாக வாழ்ந்த

காலம் அது. இங்கிலாந்திலே பாலதைகள் அமைத்தல், வண்டிவாகன ஊர்திகளில் திருத்தங்கள் செய்தல் ஆகிய சமூகத்தொடர்புகள் ஏற்பட்டன. மெற்காவ், மக்காடம் முதலாய எஞ்சினியர்கள் நல்ல முறையில் வீதிகள் அமைக்கும் வழியில் ஈடுபட்டார்கள். ஆறு கிடந்த தன்னகன்ற நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டில் இருந்ததாகப் புலவர்கள் பாடியுள்ளார்கள். ஆனால் இலங்கையில் அப்படியான தெருக்களை ஆங்கிலேயரே அமைக்க முயன்றார்கள்.

இலங்கைக் கரை நாடுகளைச் சுற்றிப் பழைய மணல் தெருக்கள் அக்காலத்தில் இருந்தன. அவற்றைத் திருத்தி மண்ணும் சேறுமில்லாமல் கற்களிட்டு ஒப்பனை செய்யும் முறைகள் ஆரம்பிக்கப் பட்டன. கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் இருந்த பழைய பாதை கல்லிட்டு வீதியாக்கப் பட்டது. இலங்கையில் உள்ள எல்லா நகரங்களும் கொழும்பு நகரோடு இணைக்கப்பட வீதிகள் அமைக்கப்பட்டன. இலங்கைக் கரையோர நகரங்கள் கண்டி நகரோடு இணைக்கப்பட்டன. இங்ஙனம் அதிகமான வீதிகள் அமைப்பதற்கு பாண்ஸ் அவர்கள் பொதுமக்களை நிர்ப்பந்தப் படுத்தினர். பொது மக்கள் ஒவ்வொருவரும் 14 நாள்கள் தெருவில் கட்டாயமாக வேலை செய்ய வேண்டியவராயினர். இக்காலத்தில் களனி நதி, மகாஓயா, மகாவலி கங்கை ஆகிய ஆறுகளின் மேலாகப் பாலங்களும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு அரும்பாடுபட்டு வீதிகள் அமைத்தபின் அதன் பயனை நாட்டின் வளத்தை அபிவிருத்தி செய்வதில் ஆள்பதி பாண்ஸ் அரிய முயற்சி எடுத்தார். முன்னர் ஒல்லாந்தர் காலத்தில் அவர்களுடைய வர்த்தக சங்கத்தினர் இலங்கையில் கோப்பிப் பயிர்ச் செய்கையைத் தமது ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தனர். அவர்கள் அப்பயிர்ச் செய்கையை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முயலவில்லை. ஆனால் இப்பொழுது ஆள்பதி பாண்ஸ் அவர்களின் அரிய நண்பர் ஜோச்போட் என்பார் முதன் முதலாக 1823 ஆம் ஆண்டில் கோப்பிப் பயிரைத் தோட்ட முறையில் பயிரிட ஆரம்பித்தார். பேராதனையில் கன்னெரூவா என்ற தோட்டத்தை ஆள்பதி பாண்ஸ் அவர்கள் 1825 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

பாண்ஸ் அவர்கள் கோப்பியோடு மாத்திரம் நிற்கவில்லை. உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பையும் வளர்த்தார். அதனால் கொப்பரை, தும்பு, தேங்காயெண்ணெய், புகையிலை, மிளகு முதலியனவும் அதிகமாக உண்டாக்கப்பட்டன. பாண்ஸ் அரசாட்சிப் பொறுப்பேற்றபோது வெறும் இறை சேரியோடு அதனை ஏற்று, அவர் வேலையை விட்டுப் போன போது £ 73500 பொன் அரசாங்கத்தில் சேர்த்திருந்தார்.

பாண்ஸ் காலத்தில் பேதி நோயால் பலர் மாண்டதால் சுகாதார வசதிகள் அகலிப்புச் செய்யப்பட்டன. குடியியற் சேவையில் ஆங்கிலேயரும் பறங்கியருமே இருந்தமையால் அவர்கள் சுதேசமொழிகளாய சிங்களம் அல்லது தமிழ் மொழியறிவு பெற்றுலன்றி உத்தியோக உயர்வு பெற இயலாது எனச் செய்து, சுதேச மொழிகளையும் கௌரவித்தார். பொது மக்களுக்கு அதனால் வசதிகள் உண்டாயின.

பாண்ஸ் அவர்கள் தமது கீழ்உத்தியோகத்தரான மாகாண அதிபர்கள், மணியகாரர், விதானைமார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களைப் பல வழிகளிலும் உற்சாகப் படுத்தி அவர்களின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பணிவான சேவையையும் நிரம்பப் பெற்றார். அவருக்கு இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகளும் முன்னேற்றமும் பிரச்சினைகளும் தெரிந்திருந்தன. அவருடைய அரிய சேவையை மறவாத இலங்கையர் அவருடைய நினைவுச் சின்னமாக அவரின் உருவச்சிலையை நாட்டியுள்ளார்கள்.

அத்தியாயம் 11

கோல்புறூக் கெமறன் அரசியற்றிருத்தம்

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளைக் கைப்பற்றி அரசாண்ட காலத்திலே குடியேற்ற மந்திரியார் காரியாலயம் என்றும், முறையான திணைக்கள அலுவல்கள் என்றும் இங்கிலாந்தில் இருக்கவில்லை. மந்திரிகளில் ஒருவர் இங்கிலாந்துக்குச் சொந்தமான கடல்கடந்த நாடுகள் சம்பந்தமான அலுவல்களை மேற்பார்வை செய்தபோதிலும் அவை முறையான அலுவலகமாய் விளங்கவில்லை. இங்கிலாந்து, ஸ்கொத்து லாந்து, வேல்ஸ், அயர்லாந்து என்ற நாற்பெரும் பிரதேசங்கள் பிரித்தானியாவென்றும் ஐக்கிய இராச்சியம் என்றும் வழங்க முனைந்த காலமும் அதுவேதான்.

இலங்கையை ஆளவந்த முதலாள்பதியான நோத் அவர்கள் காலத்திலே பிரதம நீதியரசராயும், ஆள்பதியின் ஆலோசனைச் சபையில் முதலாம் அங்கத்தவராயும் இருந்த பெரியார் சேர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் என்பவராவர். அவர் இலங்கையின் அரசியல் அலுவல் காரணமாக இலங்கைக்கு ஒரு சட்டசபை அமைதல் வேண்டும் என 1807 ஆம் ஆண்டளவிலேயே குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு தகவுரை எழுதியுள்ளார். இப்பெரியார் தமது பிள்ளைப் பராயத்திலே தென்னிந்தியாவிலே வாழ்ந்தவராதலால், ஆசிய வாசிகள் மீது அன்பும் அநுதாபமும் கொண்டிருந்தார். அவர் இளமையிலேயே இலங்கையில் வழக்கறிஞராயிருந்து இராணி அப்புக்காத்து முதலிய உத்தியோகங்களை வகித்து ஈற்றில் பிரதம நீதியரசராக உயர்த்தப்பட்டவர். இவரால் ஆங்கிலேயராட்சி இலங்கையில் வேரூன்றுவதாயிற்று என்றும் கூறுவர்.

அலெக்சாண்டர் யோண்ஸ்ரனுடைய தகவுரை சிறந்ததாய் இருந்தபோதிலும் அதனை ஆங்கிலேயர் முதலிற் கவனிக்கவில்லை. அக்காலத்தில் நிகழ்ந்த தேர்தல் வைபவமும் அதனால் ஏற்பட்ட மாற்றரசாங்கமும் உத்தியோகத்தர் மாற்றமும் அலெக்சாண்டர் யோண்ஸ்ரனின் தகவுரையை எந்த மூலையில் இட்டனவோ தெரியவில்லை

ஆரம்பத்தில் ஆங்கிலேயர் இலங்கையைப் பரிபாலித்த முறை திருப்திகரமாயிருக்கவில்லை. இலங்கை 25500 சதுரமைல் பரப்புள்ள ஒரு சிறிய தீவாக இருந்தபோதிலும், கரைநாடுகளில் ஒருவித பரிபாலனமும், கண்டியைச் சூழ்ந்த மலைநாடுகளில் வேறுவிதமான ஆட்சிமுறையும், தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் வேறுவித ஆட்சியும் முறையற்றனவாயே இருந்தன.

கண்டிச் சிங்களவர் இலங்கை அரசைத் திரிசிங்கள என்றே என்றும் கருதினர்கள். முன்னர் மிகப்பழைய காலத்திலே ராஜரட்ட, மலாயரட்ட, ருகுணரட்ட என்றும், பிற்காலத்தில் கோரட்டை, கண்டி யாழ்ப்பாணம் என்ற மூன்று இராச்சியப் பிரிவுகளாகவும் இலங்கை பரிபாலிக்கப்பட்டது உண்மைதான். ஆனல் இப்போது அங்கிலேயர் இலங்கை முழுவதையும் ஒரு நாடாக்கிவிட்டு ஒரரசு எனப் பிரகடனஞ் செய்துவிட்டு விதம்விதமான அரசாங்கங்களை நிலவச் செய்தமை முறை கேடாகவே இருந்தது.

நீதிபரிபாலன முறையிலும் ஒருவருக்கு ஒரு நீதி என்ற அமைப்பில் கண்டியில் உள்ளவருக்கும் கரை நாட்டில் உள்ளவருக்கும் வெவ்வேருன நீதி வழங்கப்பட்டன. ஆள்பதி அவர்களின் மேற் பார்வையில் ஒரு நீதிபரிபாலனமும் உச்சநீதிமன்றம் என்ற உயர்நீதி மன்றத்தின் நீதிபரிபாலனம் எனவும் அவை இருந்தன.

அரசாங்கம் என்றுல் ஆள்பதி என்றும், ஆள்பதி என்றுல் அரசாங்கம் என்றும் கருதும் அளவில் ஆள்பதி அவர்களின் வரம்பி கந்த அதிகாரமும், மானியமுறையிலமைந்த ஊழிய முறையும், விளை வரியும், வெறுக்கத்தக்கனவாயே இருந்தன. இலங்கையின் வரு மானத்தைப் பார்க்கிலும் அதன் பரிபாலனச் செலவு அதிகமாய் இருந்தமையை ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஆகவே இலங்கையில் அரசியல்முறை, நீதிபரிபாலனமுறை, பொருளாதார அமைப்பு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படல் வேண்டுமென எல்லோரும் ஒரே முகமாக விரும்பினர்.

இங்கிலாந்தில் பொதுமக்கள் சபையில் அங்கம் வகித்த நன் மனசுடைய தாராண்மைப் போக்குள்ள பெரிய ர்கள் பலர் இலங்கை அரசாங்க அமைப்பில் இருந்த முறையீனங்களை வெகுவாகக் கண்டித்துப் பேசினர்கள். அவர்கள் 1. உடனடியாக இலங்கை ஆட்சி அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். 2. ஊழியமுறை நீக்கப்படல் வேண்டும். 3. இலங்கையின் பரிபாலனங் காரணமாக ஒரு சட்ட சபை நிறுவப்படல் வேண்டும். 4. கட்டுப்பாடில்லாத நீதிபரிபாலனம் அமைக்கப்படல் வேண்டும். 5. பகிரங்க சேவையில் சேருவதற்கு எல்லோருக்கும் நிறமை நோக்கிச் சமசந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும் என்பன சம்பந்தமாகவும் பிறமாற்றங்கள் திருத்தங்கள் சம்பந்தமாகவும் பேசினர்கள்.

சேர் வில்மட் ஹோட்டன் அவர்கள் காலத்திலேதான் இலங்கை யின் முதலாவது சட்டசபை நியமிக்கப்பட்டது. அந்தப் பெருமையை விட ஹோட்டன் அவர்களுக்கு வேறுரு பெருமையும் இருந்தது.

அதுகாறும் இராணுவப் பயிற்சியும் படையனுபவமும் வாய்ந்தவரே ஆள்பதிகளாயிருந்தனர். ஆனல் ஹோட்டன் அவர்கள் அந்தி இனத்தைச் சேராதவராயிருந்தார். இன்னும் இலங்கையில் சட்ட சபையை அமைப்பதற்கும் பூரண உரிமையும் அருகதையும் அறிவும் உள்ளவராயே இருந்தார். இவர் இங்கிலாந்தில் குடியேற்ற நாடு களின் உதவி மந்திரியாயிருந்த காலத்தில் இலங்கை, தென்ஆபிரிக்கா மோறிற்றஸ்தீவு ஆகிய இடங்களுக்குச் சட்டசபைகள் அமைக்கப்பட வேண்டும் எனப் பிரேரித்தவராவர்.

ஹோட்டன் அவர்கள் இங்கிலாந்திலே இருந்த காலத்திலேயே இலங்கையைப் பற்றிய முன்அறிவு அவருக்கு இருந்தது. அத்தகைய முன்னறிவை அவருக்கு ஊட்டியவர் அவருடைய நண்பர் வணக்கத் துக்குரிய பிசப் ஹீபராவர். பிசப் ஹீபர் இந்தியாவில் இருந்தவர். இலங்கைக்கு வருகைதந்து இலங்கையின் அழகையும் வளப்பத்தையும் நன்கறிந்தவர். அன்றி இந்த அருமையான நாட்டில் அருவருக்கத் தக்க ஊழிய முறையும், அரசாங்கத்தின் வியாபார ஏகபோக உரிமை யும் நீக்கப்படல் வேண்டும் என்றும் ஹோட்டனுக்கு எழுதினர். மனித சமுதாயம் சாதி, சமய, மொழி, நிறவேற்றுமையில்லாமல் மனிதகுலம் என முன்னேற்றமடைதல் வேண்டுமென ஒப்புரவாண்மை யாளர் கருதிய காலம் அக்காலம்.

ஹோட்டன் அவர்கள் தாராண்மைப் போக்குள்ளவர். அதனல் சமூக முன்னேற்றத்தில் கருத்துள்ளவராயிருந்தார். இவர் இலங்கை அரசியல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனப் பிரேரித்த பிரேரணை 25-7-1822 இல் நிறைவேற்றப்பட்டது. அதன்பிரகாரம் வேத்தியல் ஆணைக்குழுவின் அதிகாரத்தால் 18-1-1823 இல் கேணல் வில்லியம் மாக்பீஸ் கோல்புறூக், யோண்பிக் வில்லியம் பிளயர் ஆகிய அரசியற் பண்டிதர்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் தென்ஆபிரிக்காவிலும், மொறிற்றஸ் தீவிலும், இலங்கை யிலும் உள்ள நிலைபரங்களைச் சீராக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கு மாறு வேண்டப்பட்டார்கள். கோல்புறூக் தலைமையில் அமைந்த அந்தக்குழு கோல்புறூக்குழு எனப் பெயர்பெறுவதாயிற்று.

குடியேற்ற மந்திரியாரின் கட்டளைப் பிரகாரம் இவ்வாணைக் குழுவினர் முதலில் தென்ஆபிரிக்காவுக்கும், பின்னர் மொறீற்றஸ் தீவுக்கும் சென்று ஈற்றில் இலங்கைக்கு வந்தார்கள். இவர்களுள் கோல்புறூக்கைத்தவிர மற்றிருவரும் சுகவீனங் காரணமாகத் தாய் நாட்டுக்கு மீண்டார்கள். எனவே அவர்களுடைய இடத்தில் சார்ள்ஸ் கெமறன், யோண் கிரகரி என்னும் இருவர் வந்தார்கள்.

கோல்புறூக் முன்னர் கிழக்கு நாடுகளில் பணி செய்தவர். இலங்கையில் மேஜராக 1805 ஆம் ஆண்டில் கடமையாற்றி அநுபவம் பெற்றவர். இவர் சிறந்த அறிவாளியாய் இருந்தமையோடு பரந்த நோக்கமும், நல்ல பண்பாடும் வாய்ந்தவராய் இருந்தார். இவர் 1811 தொடக்கம் 1816 வரையும் யாவா தேசத்திலே படைப் பாலனத்தில் இருந்தவர். அங்கே பாரம்பரியமாக நிலவி வந்த கட் டாய தொழிற் சேவை நீக்கப்பட்டதைக் கண்டனுபவம் பெற்றவர். இவருக்கு மனிதப் பண்பாட்டுக்கும் பொருளாதார வளமேம்பாட்டுக் கும் தக்கதாக நாடுகள் திருத்தப்பட வேண்டும் என்ற கொள்கை பலகாலமாக மனத்தில் இருந்தது.

கெமறன் அவர்கள் பிறப்பால் ஸ்கொத்துலாந்தினர். அவர் பெரிய அப்புக்காத்தாக இருந்ததோடு அடம் சிமித் எழுதிய தேசங் களின் செல்வம் என்ற பொருளாதார நூலையும், ஜெரமி பெந் தாம் எழுதிய அரசியல் ஒழுக்கம் என்ற நூலையும் நன்கு கற்றவராய் இருந்தமையோடு ஆக்காலத்தில் நிலவிய அடிமை வியாபாரத்தை வேரோடு அறுத்துத் தொலைத்தல் வேண்டும் என்ற தாராண்மை மனப்பான்மை கொண்டவராயும் இருந்தார்.

இலங்கையின் அரசாங்க பரிபாலனத்தைப் பற்றியும், நிதி சம்பந்தமான அலுவல்களைப்பற்றியும் கோல்புறூக் ஆராயவும், நீதி சம்பந்தமான அலுவல்களை அத்துறையில் திறமை வாய்ந்திருந்த கெமறன் ஆராயவும், யோண் கிரகரி இவர்கள் இருவருக்கும் காரிய தரிசியாய் இருக்கவும் ஒழுங்குகள் செய்தனர். எனவே இவர்கள் இலங்கையின் பலபாகங்களையும் நேரில் சென்று சுற்றிப் பார்த்துப் பல தகவல்களைச் சேகரித்ததோடு தமக்குக் கிடைத்த நினைவேடுகள், விண்ணப்பங்கள் என்பனவற்றையும் படித்துப் பலரிடம் நேரில் வாக்கு மூலங்களையும் கேட்டார்கள்.

கோல்புறூக் சபையினர் அரசியல் அமைப்பை மாத்திரம் திருத்திவிட்டுப் போகவில்லை. நாடுநாடாவதற்கான முறையில் பல சீர்கேடுகளை நீக்கியும், சில நடைமுறைகளை மாற்றியும், சிலவழக்கங் களைத் திருத்தி நிலை நாட்டியும் திருத்தங்கள் செய்தார்கள். இலங்கை 16 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததை மாற்றி ஐந்து மாகாணங்களாகப் பிரித்து அவற்றுக்கு வடமாகாணம், கீழ் மாகாணம், தென்மாகாணம், மேன்மாகாணம், மத்தியமாகாணம் எனப் பெயரிட்டனர் வடமாகாணத்திலே யாழ்ப்பாணப் பகுதியும், தீவுப்பற்றும், மன்னார், வன்னி, அநுராதபுரம் ஆகிய இடங்களும் அடங்கின. கீழ்மாகாணத்திலே மட்டக்களப்பு, திருக்கோணமலை,

தமன்கடவை, விந்தனை முதலிய இடங்கள் அடங்கின. தென்மாகாணத்திலே காலி, மாத்துறை, தங்காலை, அம்பாந்தோட்டை, பதுளை, வெல்லாசி முதலிய இடங்கள் இருந்தன. மேல் மாகாணத்திலே கொழும்பு, களுத்துறை, சிலாபம், புத்தளம், ஏழு கோறளைப் பிரிவுகள் என்பன இருந்தன மத்தியமாகாணத்திலே மாத்தளை, கண்டி, யட்டிநுவர, உடு நுவர, தும்பறை முதலிய பகுதிகள் உளவாயின. இதனல் முன்னர் வரையறுக்கப்பட்டிருந்த தமிழ் நாடு, சிங்களநாடு. மலை நாடு என்ற அமைப்பு நீக்கப்படவே இலங்கை ஒரு நாடு என நிலவுவதாயிற்று.

இங்ஙனம் பரிபாலனத்தின் பொருட்டு இலங்கையை ஒரு நாடாக்கியமை போலவே, நீதி பரிபாலனத்திலும் இலங்கையை ஒரு நாடாக்கினர். அதுகாறும் வரம்பிகந்த அதிகார முள்ளவராயிருந்த ஆள்பதியின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. இராச காரிய நீக்கத்தால் அவருடைய செல்வாக்கு வெகுவாகக் குறைக்கப் பட்டது. உச்ச நீதி மன்றங்கள் நிறுவப்பட்டமையால் அவருடைய நீதித்துறை அதிகாரம் குறைக்கப்பட்டது. உச்ச நீதிமன்ற அமைப் பிலே ''சட்டத்தின் முன் சகலரும் சமம்'' என்ற நிலமை ஏற்பட்டது. ஒருவருக்கு ஒரு நீதி என்று ஆள்பதி அவர்கள் பரிபாலித்த பழைய முறையோடு மக்களுக்குள் இருந்த ஏற்றத் தாழ்வு ஓரளவுக்குக் குறைக்கப்பட்டது. ''மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் இலங்கைக் குடிமகனுவது, இலங்கையில் வாழும் இந்தியக் குடிமகனுவது எவ்வித ஊழியமேனும் செய்யும்படி நிர்ப்பந்தப் படாமல், இலங்கையிலுள்ள ஐரோப்பியரைப் போல அவர்களும் கௌரவமாக வாழ வேண்டும்'' என்பதே குடியேற்றமந்திரியார் மூலம் 12-4-1832இல் மன்னர் பிரான் விடுத்த கட்டளையாகும்.

அரசாங்கம் அதுகாறும் நடத்திவந்த கறுவா வியாபாரத்தின் ஏகபோக உரிமை முற்றுக நீக்கப்பட்டது. இலங்கை முழுவதிலும் யூரி எனப்படும் நடுவர் மத்தியில் விசாரணை நடைபெற வழிவகுக்கப் பட்டது. அதுகாறும் இல்லாத கல்விச் சங்கம் ஒன்று நிறுவப் பட்டதால் அவர்கள் கல்வி அபிவிருத்தியில் ஈடுபடுவாராயினர். கொழும்பில் இன்று ரோயல் கல்லூரி என வழங்கும் கொழும்புக் கல்விக் கழகம் 1836 ஆம் ஆண்டில் நிறுவப்படலாயிற்று. அதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் உதவியுடன் சுத்தோலிக்கர் பல பாட சாலைகளை ஆரம்பித்தார்கள். அதுகாறும் இல்லாத அச்சுலகும் இலங்கையில் தாபிக்கப்படலாயிற்று. அதனல் 1834 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நாலாந் திகதி முதலாக ஒப்சேவர் வெளிவந்தது.

அது ஆரம்பத்தில் செவ்வாய், வெள்ளி நாள்களில் வெளிவந்தது. அதற்குப் பெர்குசன் குடும்பத்தாரும் எலியட் குடும்பத்தாரும் பல காலம் சிறப்பான சேவை செய்தார்கள்.

கோல்புறூக் திருத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் இலங்கையின் எதிர்கால்ப் பொருளாதார நிலைக்கு ஒரு நிலைக்களனாக அமைந்ததென்றே கருதுவர். அத்தகைய மாற்றத்தைப்பற்றி முன்னர் ஆள்பதி நோத், அலெக்சாண்டர் யோண்ஸ்ரன். ஆள்பதி பிறவுண்றிக் ஆகியோர் நினைத்திருந்தாலும் அதனை நடைமுறையில் வரச்செய்த பெருமை கோல்புறூக் சபையினருக்கே உரியது எனக் கருதுவாரும் உளர். ஆணையாளர் அதனைச் செய்வதற்குத் தகுதியும் அதிகாரமும் உடையவராயிருந்தனர்.

கோல்புறூக் குழுவினர் செய்த திருத்தங்களுள் முடிமணி போலத் திகழ்வது அவர்கள் நிறுவச் செய்த சட்ட நிரூபண சபையும், சட்ட நிர்வாக சபையும் சேர்ந்த சட்டசபையாகும். அதுகாறும் ஆள்பதி அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு அமைந்த ''மன்னர் சபை'' ''ஆணையாளர் சபை'' ஆகிய சபைகளின் ஆலோசனையை ஆள்பதி அவர்கள் கேட்டல் வேண்டும் என்ற கட்டுப்பாடோ நியதியோ இருக்கவில்லை. மன்னர் சபையிலமர்ந்த ஆள்பதி என்ற நிலைமை நீக்கப்பட்டு இப்போது சட்டசபையும் ஆள்பதியும் என்ற அமைப்பு ஏற்பட்டது.

சட்டசபையில் உள்ள சட்ட நிரூபண சபையிலும் பார்க்கச் சட்ட நிர்வாக சபையே அதிகாரம் உள்ளது. அதனைச் சட்ட நிறைவேற்றுசபை எனவும் கூறுவர். அது ஆள்பதி அவர்களுக்கு ஆலோசனை கூறுந்தரத்தது. அது மந்திரிகள் சபை போன்றது. ஆனால் அதில் இருந்த அங்கத்தவருக்குத் திணைக்களங்களோ மந்திரி என்ற பெயரோ இருக்கவில்லை. அவர்கள் ஆள்பதிக்கு ஆலோசனை கூறினால், ஆள்பதி அதனைக் கேட்காவிட்டால் அதற்குக் காரணம் இன்னது என்று குடியேற்ற மந்திரியாருக்கு விளக்கம் எழுதவேண்டும் என்ற நியதி இருந்தது. இத்தகைய சட்ட நிருவாக சபையிலே ஆள்பதியோடு அரசாங்கக் காரியதரிசி, நிதிநாயகம், கணக்குப் பரிசோதகர், அளவையாளர் நாயகம், சுங்கத்தலைவர், மேல்மாகாண அரசாங்க அதிபர் ஆகியோர் இருக்கவும், அவர்கள் ஆள்பதிக்கு நிர்வாக அலுவலிலும், நிதி அலுவலிலும் ஆலோசனை கூறுவதற்கு அருகதை உள்ளவராயிருக்கவும் வழிவகுக்கப்பட்டது.

சட்டசபையில் 15 அங்கத்தவர் இருந்தனர். அவர்களுள் 9 பேர் உத்தியோக அங்கத்தவர் எனவும் 6 பேர் உத்தியோகப் பற்றற்றவர் எனவும் இருந்தனர். உத்தியோக அங்கத்தவராவார்

அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்துக்கொண்டே சட்டசபைக் கூட்டங்களிலும் கலந்து கொள்பவராவர். அவர்கள் முன் சொன்ன சட்ட நிர்வாக சபையில் உள்ள 6 பேரும் இன்னும் வேறு மூன்று உத்தியோகத்தருமாவர். சட்டசபையில் உள்ள உத்தியோகப்பற்றற்ற ஆறு அங்கத்தவர் அரசாங்க உத்தியோகம் பாராதவர். அவர்கள் வர்த்தகம், சட்டம், தோட்டப்பகுதி முதலியவற்றில் உள்ளவராவர். அவர்கள் ஆறுபேரும் இலங்கையில் உள்ள இனவாரிச் சமூகங்களின் பிரதிநிதிகளாக ஆளுபதி அவர்களால் நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்படும்போது ஐரோப்பியருக்கு மூன்று பிரதிநிதிகளும், பறங்கியருக்கு ஒரு பிரதிநிதியும், தமிழருக்கு ஒரு பிரதிநிதியும், சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியுமென நியமனம் பெறுவாராயினர்.

கோல்புறூக் குழுவினர் அமைத்த சட்ட சபையைப் பின்வருமாறு வரையலாம்.



இங்ஙனம் கூடிய சட்டசபைக் காலத்திலே வாக்குரிமை என்றே நியமன நாள் என்றே, தேர்தல் நாள் என்றே, வாக்களித்தல் என்றே ஒன்றும் இல்லை. அரசியல்கட்சி என்றால் என்ன என்றே எம்மவருக்குத் தெரியாது. எனவே ஆளுபதி அவர்கள் சில பெரியார்களைத் தமது விருப்பத்தின் வண்ணம் அழைத்துச் சட்டசபை அங்கத்தவராக இருக்கும்படி பணித்தார். ஆளுபதிதாமே ஆட்சியை நடத்தி வந்தார். அந்த ஆட்சியைப் பணிக்குழுவாட்சி என்றும் கூறுவர்.

முதலாவது சட்டசபை அமைந்த விதமே வேடிக்கையானது. சட்டசபைக்கு ஒன்பது உத்தியோகத்தரை நியமிப்பது இலகுவாயிற்று. ஆனால் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் ஆறு பேரைத்தேடுவதிலும் நியமிப்பதிலும் ஆள்பதி அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டாயின. உத்தியோகப் பற்றற்றவரைத் தேடுவது அவர்களைச் சட்டசபையில் வரிசையாய் இருத்துவது பிரச்சினைக்குரிய காரியமாயிற்று. ஐரோப்பியர் பிரதிநிதிகள் மூவரையும், பறங்கியர் பிரதிநிதி ஒருவரையும், ஆள்பதி தேடிப்பிடித்தார். ஆனால் தமிழர் பிரதிநிதியையும் சிங்களவர் பிரதிநிதியையும் தேடிப்பிடிப்பது முயற்கொம்பாகவே இருந்தது. ஆங்கிலந் தெரிந்த உத்தியோகப் பற்றற்றவர் இல்லாமையாலே சட்டசபையின் முதற் கூட்டம் 1—10—1833 இல் கூடியபோது அதிலே உத்தியோக அங்கத்தவர் ஒன்பதுபேர் மாத்திரம் இருந்தார்கள். இலங்கையர் பிரதிநிதிகள் இடம் பெறுதமையைக் குடியேற்ற மந்திரியார் கண்டிக்கவே ஆள்பதி அவர்கள் அவசர மவசரமாய்த் தமது மொழிபெயர்ப்பாளர் இருவரை முழுச்சம்பளத்தோடு இளைப்பாறச்செய்து உத்தியோகப் பற்றற்றவர் வரிசையில் இருத்தினர். அங்ஙனம் இருத்தப்பட்டவருள் தமிழர் பிரதிநிதியாய் இருந்தவர் இராசவாசல் மகா முதலியார் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்பார். இவர் சேர் இராமநாதன் அவர்களின் தாயாரின் தந்தையாராவர். சிங்களப் பிரதிநிதியாய் நியமனம் பெற்றவர் முதலியார் T. J. பிலிப்ஸ் என்பாராவர். இவர்கள் 30-5-1835 தொடக்கம் சட்டசபையில் இலங்கையர் பிரதிநிதிகளாயமர்ந்து அச்சபையை அலங்கரிப்பாராயினர்.

குமாரசுவாமி முதலியார் அவர்கள் 14-5-1837 இல் இறந்து போனதால் அவருடைய இடத்தில் நியமிப்பதற்கு ஒரு பிரதிநிதியைத் தேடுவதில் ஆள்பதி அவர்களுக்குச் சிரமமேற்படலாயிற்று. ஈற்றில் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி என்ற தமிழ்ப் பெருமகனரை அவ்விடத்தில் நியமிப்பதற்காக அன்னரை உத்தியோகத்திலிருந்து இளைப்பாறச் செய்தார். ஆனால் காசிச் செட்டியார் உத்தியோகத்தை விட்டு இளைப்பாறுவதைக் குடியேற்ற மந்திரியார் விரும்பவில்லை. அதற்குக் காரணம் காசிச் செட்டியார் போன்ற ஒரு விவேகியையும் உழைப்பாளியையும் குடியேற்ற நாட்டில் காண இயலாது என்பதே.

சைமன் காசிச்செட்டியார் அவர்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கே அறிதல் மிகப்பொருத்தமான விடயமாகும். இலங்கையின் அட்ச தேசாந்தரத்தையும், நீள அகலத்தையும், அதன் நிலப்பரப்பையும் முதன் முதலில் முறையாகக் கணித்த அறிவாளி சைமன் காசிச்

செட்டியாரவர்களேயாம். அவர் இலங்கை வர்த்தமானி எனப்படும் 'கஜற்' பத்திரிகையை இலக்கிய நயம் ததும்ப எழுதியமைக்காக அக்காலத்துக் குடியேற்ற மந்திரியார் அவர்கள் செட்டியாருக்கு £105 பொன் அன்பளிப்புச் செய்து கௌரவித்துப் பாராட்டி எழுதியுள்ளார்

போத்துக்கீயரும் ஒல்லாந்தரும் ஆண்ட கரையோரப் பகுதி 10520 சதுரமைல் பரப்பே என்றும் பழைய கண்டி இராச்சியப் பகுதி 14144 சதுரமைல் பரப்பென்றும் நிரூபித்து வெள்ளைக்கார நில அளவையாளரைத் திருத்திய நிபுணன் சைமன் காசிச் செட்டி என்பது சரித்திரப் பிரசித்தமான விடயமாகும். இப்பெரியார் பல துறைகளில் திறமைவாய்ந்தவர். பல மொழிகளைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றதோடு வரலாறு, பழையநாகரிகம் என்பவற்றையும் நன்கறிந்தவர் அன்றி இலங்கையின் பூமிசாத்திரத்தோடு விலங்கியல் என்பதாகிய விபரங்களையும் ஐயந்திரிபற அறிந்து எழுதினர் என்ப. இப்பெரியார் எழுதிய பல நூல்கள் அச்சிடப்படாமலே கையெழுத்துப் பிரதியாகவே அழிந்துபோயின. இவர் எழுதிய நூல்கள் எவை என அவற்றின் பெயர்களைத் தாமும் இன்றுள்ள விவேகிகள் அறியாதிருக்கின்றனர் என்பது வியப்பாகவிருக்கிறது.

செட்டியாரவர்கள் 27—3—1807 இல் பிறந்து மிக இளமையிலேயே இலங்கை அரசாங்க சேவையிற் சேர்ந்து தமது விவேகத்தாலும் மதிநுட்பத்தாலும் கடும் உழைப்பினாலும் மேலதிகாரிகளாற் கணிக்கப்பட்டுப் பலவாய மேலுத்தியோகங்களுக்கு உயர்த்தப்பட்டார். அதிகாரிகளின் நல்லபிப்பிராயத்தையும் பொதுமக்களின் மதிப்பையும் பெற்றுக்கொண்டு பண்பட்ட உள்ளமும் பரந்த மனப்பான்மையும் உள்ளவராய் அவர் சேவை செய்துவந்தார்.

முதலியார் உத்தியோகத்தில் இருந்த காலத்திலேயே இலங்கை வர்த்தமானியை எழுதுவதற்குத் தம் கருத்தை ஆள்பதி சேர் ரேபேட் வில்மொட் ஹோர்ட்டன் அவர்களுக்குத் தெரிவித்தார். இத்தகைய முயற்சியை வெகுவாக ஊக்கப்படுத்திய ஆள்பதி அவர்கள் தம்மாலான உதவிகளைச் செய்வதாக இவருக்கு எழுதினர். வர்த்தமானி 1834 ஆம் ஆண்டில் முதன் முதலாக அச்சிடப்பட்டது. அதுவே பின்னர் வந்த எத்தனையோ விபரங்கள் அறிக்கைகள் என்பனவாதிய புள்ளி விபரங்களுக்கு முன் மாதிரியமைந்து விளங்கிற்று. அதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பத்திரிகையுமாகும். அதிலே செட்டியாரின் கவிகள் இடம்பெற்று அணிசெய்தன.

இலக்கியப் புலமை வாய்ந்த ஆள்பதி ஸ்ரூவாட் மக்கென்சி அவர்கள் சைமன் காசிச்செட்டியாரைப் பற்றிக் குறிக்கும்போது, ''ஆங்கிலேயரல்லாத மக்களுள் மிகவும் அபூர்வ ஆற்றல் வாய்ந்த சிறந்த விவேகி இந்த மனிதன்'' எனக் குறித்துள்ளார்கள்.

செட்டியார் அவர்களின் சேவையை மெச்சிய குடியேற்ற மந்திரியாரின் தகவுரையின் வண்ணம் அவருக்குச் சிலாப மாவட்ட நீதிபதி உத்தியோகங் கிடைத்தது. அவர் பெரிய கோட்டு நீதவான் என எல்லோராலும் புகழப்பட்டார். அவரைத் தமிழ்நாட்டுப் புளூட்டரக் என்றே எல்லோரும் அழைத்தனர். அவர் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியதாகத் தெரிகிறது. பாவலர் சரித்திரதீபம், தமிழரின் சாதிப் பிரிவும் பழக்கவழக்கமும், யாழ்ப்பாணச் சரித்திரம் என்பன இவர் எழுதியவற்றுள் சில. அது நிற்க.

ஆள்பதி அவர்களே அக்கால சம்பிரதாயப்படி சட்டசபைக்குத் தலைமைதாங்கினர். அவர் ஒருவரே சட்டசபையில் சட்டங்கள், பிரேரணைகள், முறிகள் மசோதாக்கள் எதுவாயினும் பிரேரிக்கலாம். வேறு அங்கத்தவர் எதனையும் பிரேரிக்கவோ, வாதப் பிரதி வாதஞ் செய்யவோ, இகலாட்டுகள் செய்யவோ இயலாது. ஆள்பதி அவர்களின் அனுமதியின்றி எவரும் சட்டசபையில் எக்காரியமும் பேசலாகாது என்ற கட்டுப்பாடும் அக்காலத்தில் நிலவியது.

சட்டசபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட ஒன்பது உத்தியோக அங்கத்தவரும், ஆறு உத்தியோகப் பற்றற்றவரும் ஆரம்பத்தில் நிரந்தர அங்கத்தவராயே இருந்தனர். அவர்களுடைய அங்கத்துவ காலம் வரையறை செய்யப்படவில்லை. அங்கத்தவருள் அபிப்பிராய பேதம் எழுந்த காலத்தில் உத்தியோக அங்கத்தவர் ஆளுங்கட்சியினர் போலவும், உத்தியோகப் பற்றற்றவர் எதிர்க்கட்சியினர் போலவும் நாளடைவில் நடந்து கொள்வாராயினர்.

இவ்வாறான காலத்தில் இலங்கையில் சில புள்ளி விபரங்களைக் குறிக்கின் அவை 1834-ல் இருந்தபடி இவ்வாறும்.

1.	குடிசனம்	...	1167700
2.	வருமானம்	...	ரூ. 3779520
3.	செலவு	...	ரூ. 3348350
4.	இறக்குமதி	...	ரூ. 3727260
5.	ஏற்றுமதி	...	ரூ. 1458340

அக்காலத்தில் 1105 பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 14000 பிள்ளைகள் கல்விகற்றனர்.

பெரிய உபகண்டம் என்ப்படும் இந்தியாவுக்கே பிரித்தானியர் சட்டசபை ஒன்றை வழங்குவதற்கு முன்னர், இலங்கையில் சட்ட சபை அமைக்கப்பட்டலாயிற்று. அதன் முதற் கூட்டம் 19-3-1833 இல் கூடியது. அன்று கூடிய சட்டசபை இடையிடையே பல மாற்றங் களையும் திருத்தங்களையும் கொண்டு இருபது ஆள்பதிகளைக் கண்டு 1931 ஆம் ஆண்டில் டொனமூர்த் திருத்தத்தின் விளைவாகக் கூடிய அரசாங்க சபைக்கு இடங்கொடுக்கும் வரை நூறு வருடகாலமாக இலங்கையில் நிலவுவதாயிற்று.

அத்தியாயம் 12

கோல்புறூக் கெமறன் திருத்தத்தின் பின்

கோல்புறூக் கெமறன் யாப்புத் திருத்தக் குழுவினர் ஆராய்ந்து செய்த திருத்தங்கள் நல்லவை என்றும், நல்லனவல்ல என்றும் இருவேறு கருத்துக்கள் அரசியற் பண்டிதர்களிடையே நிலவுகின்றன. அவர்கள் இருபகுதியினர் கூறுவன சம்பந்தமாக அதிகங் கூறலாம். கோல்புறூக் திருத்தங்கள் நல்லன என்றும் கூறலாம் அல்லாதன என்றுங் கூறலாம்.

கௌரவ யோண்பிறைற் என்ற பெரியார் பிரித்தானிய பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையிலே 1-8-1859 இல் கோல்புறூக் திருத்தம் உண்மையில் மிகவும் நல்லது என்றும் அதனைப் போன்ற ஓர் அமைப்பை இந்தியாவுக்கும் வழங்குதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுப் பேசினர். கோல்புறூக் திட்டம் நல்லது என்று பேசுகிறவர்கள் காட்டும் சிறப்பியல்புகளான அதன் அம்சங்கள் வருமாறு:

1. அது பழமைக்கும் புதுமைக்கும் இடையில் உள்ள ஒரு திருப்பு மையம்.
2. அது இலங்கையின் பொருளாதாரத்துறையில் பூரண மாற்றத்தை வருவிக்க வழிகோலியது.
3. நீதிபரிபாலன முறையில் புதிய அமைப்பை உண்டாக்கியது.
4. சமூக வாழ்வில் வியக்கத்தக்க மாற்றத்தை உண்டாக்கியது.
5. அரசாங்கம் அதுவரை வியாபாரத்திலும், விவசாயத்திலும் வகித்துவந்த ஏகபோக உரிமையை நீக்கியது.
6. இலங்கை முழுவதற்கும் ஒரே மாதிரியிலமைந்த அரசியல் முறையை உருவாக்கியது. (அதற்கு முன் கரைநாட்டுக்கு ஒருமுறை, கண்டிநாட்டுக்கு ஒருமுறை, தமிழ் நாட்டுக்கு ஒரு முறை என மூன்று முறையான பரிபாலனம் இருந்தது. எனவேதான் சிங்களவர் இலங்கை அரசைத் திரிசிங்கள என முற்காலத்தில் வழங்கினர்.)

ஆங்கிலம் அரசாங்க மொழியாக்கப்பட்டதால் ஆங்கிலங் கற்றவர்கள் உலக நிகழ்ச்சிகளை அறியவும், சமூக நிலையை மாற்றியமைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இங்கிலாந்தில் மத்திய தர

வகுப்பார் எனப்படும் நடுவகுப்பார்போல இலங்கையிலும் ஒரு முன்னேற்றமுள்ளவர் நிலவ வழி ஏற்பட்டது. நீதியின்முன் சகலரும் சமம் என்பதும், உயர்தர குடியியற் சேவையில் இலங்கையரும் சேரலாம் என்றமையும் நல்ல அம்சங்களே. இன்னும் இலங்கையில் கோல்புறூக் திருத்தங்களால் வேறுபல காரியங்களும் நடைபெறலாயின.

1. சிங்கள-தமிழ் சமூகங்கள் மாறியமைய வழி பிறந்தது.
2. அவர்கள் தங்களுக்குத் தலைச்சுமையாய் இருந்த காணிகளை விட்டுத் தாம் விரும்பிய இடத்தில் குடியேறி விருப்பமான தொழிலைச் செய்ய வசதியுள்ளவராயினர்.
3. அரசாங்கத்தின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டதால் மக்கள் தாமே வியாபாரம், வர்த்தகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.
4. இவ்வாறான வசதிகளையெல்லாம் கோல்புறூக் அமைத்த ஒற்றை ஆட்சி பலப்படுத்தியது.

கோல்புறூக் செய்த பொருளாதார அமைப்பினால் முன்னர் பலமுயற்சிகளாலும் மாற்ற இயலாதிருந்த சாதி வித்தியாசம் நீக்கப்பட வழிபிறந்தது. கோல்புறூக் கொள்கைகளே தாராண்மை வாதிகளால் கூறப்பட்டவைகளேயாம். அவை சீர்திருத்தங்கள் அரசியாப்பு சம்பந்தமாயும், சட்டமுறை சம்பந்தமாயும், சமூக வமைப்பு சம்பந்தமாயும், பொருளாதாரவமைப்பு சம்பந்தமாயும் ஏற்படுதல் வேண்டும் என்று கூறுவனவாயுள்ளன.

மனிதர் எல்லோரும் சமத்துவம் உள்ளவரானால் வேற்றுமை இருத்தலாகாது. வேற்றுமை யுண்டேல் அதற்குத்தகுந்த காரணம் உளவாதல் வேண்டும். மனிதருக்குரியதான உரிமைகள் யாவும் சட்டங்களால் அளிக்கப்பட்டுச் சட்டங்களால் பாதுகாக்கப்பட்டுப் பொதுநன்மை பயப்பனவாயிருத்தல் வேண்டும். உரிமையளிக்கும் மசோதாக்கள் ஏட்டுச் சுரைக்காயாய் எழுத்தில் இருப்பதில் எட்டுணையும் பிரயோசனமில்லை. சட்டங்கள் கீழ்ப்படியச் செய்யப்படுவனவேயன்றி மறுக்கப்படவல்ல. சட்டங்களைப் பொதுமக்கள் வெறுக்கும்போது கலகங்கள் உண்டாகின்றன. எனவே சட்டங்கள் பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவாதல் வேண்டும்.

நாட்டில் குற்றங்கள் நிகழாதவாறும், நிகழ்ந்தவழி குற்றவாளிகளை அகப்படுத்தி நீதிமன்றத்தில் ஒப்புவித்தற்குமாகவே பொலிசுக் காரர் சேவை செய்கிறார்கள். இலங்கையில் 1833 ஆம் ஆண்டிலே

தான் பொலிசுக்காரர் கூலியின் பொருட்டு வேலை செய்யத் தொடங்கினர்கள். இங்கிலாந்திலும் 1829 ஆம் ஆண்டிலேதான் பொலிசுப் பகுதியினருக்கு முறையான சம்பளத்திட்டம் வகுக்கப்பட்டது.

ஆள்பதி சேர் எட்வேட் பாண்ஸ் அவர்கள் கோல்புறூக் திருத்தங்களை அறவே வெறுத்தார். சுதேசிகளை உயர்தர உத்தியோகங்களில் அமர்த்துவதை அவர் எள்ளளவும் விரும்பவில்லை. அவர் தமது கருத்தைக் கோல்புறூக் சபையினருக்கே தெளிவாக எழுதியும் விட்டார். ''பொதுமக்களுக்கு இன்றுள்ள நிலைமையில் இதற்கு மேல் சலுகைகளோ வசதிகளோ செய்வதற்கு அவர்கள் தகுதி வாய்ந்தவராக இல்லை என்பதே என்னுடைய சொந்த அபிப்பிராயம்'' என்று குறிப்பிட்டார். ஆனால் அக்காலத்தில் குடியேற்ற நாட்டு மந்திரியாராய் இருந்த கொட்றிச் என்ற பெரியார் பாண்ஸ் கூறிய வற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் கோல்புறூக் தகவுரையின் வண்ணம் சட்டசபையை நிறுவுவதற்கே வழிவகுத்தார்.

கோல்புறூக் குழுவினர் அமைத்த சட்டசபை எவ்வளவுதான் நிறைமையாய் இருந்தபோதிலும் அதில் பிழைகள் இல்லாமல் போகவில்லை. அதன் அமைப்பை மேல்வெட்டாகப் பார்க்கும்போதே பல பிழைகள் தென்படுகின்றன. அவை:

1. ஆள்பதி அவர்கள் சட்டசபைக்கு எவ்வாற்றானும் கட்டுப்படாமை.
2. சட்டசபை அங்கத்தவர் தேர்தல்மூலம் இடம்பெறாமல் ஆள்பதியால் நியமிக்கப்பட்டமை
3. இலங்கையின் வரவு செலவுத்திட்டம் பிரதிநிதிகளின் கண்ணிற் படாமல் ஆள்பதியால் தயாரிக்கப்பட்டமை.
4. இலங்கைவாசிகளை இனவாரியாகக் கணித்தபின் கண்டியருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதிகளை நியமிக்காமை
5. நியமிக்கப்பெற்ற உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் தம் ஆயுள் பரியந்தம் சட்டசபையை அலங்கரித்தமை.

கோல்புறூக் திருத்தத்தின் பயனாக முன்னர் நாட்டில் நிலவிய கன்சபாவ, றட்ட சபாவ என்ற கிராம மன்றங்கள் அதிகாரமிழந்தன. அவை மக்கள் மன்றங்களாய்ப் பொதுமக்களுக்கு மனத்திருப்தியளிக்கக்கூடிய வகையில் தீர்ப்பளிக்கக்கூடிய வலவாய் நாட்டுப் பொறுப்பாரைக் கொண்டனவாய் நிலவியவை, கிராமமன்றங்கள் இல்லாது போகவே நாட்டுப்புறமக்கள் நகரங்களில்ஏற்பட்டிருந்த நீதிமன்றங்களைத் தேடி நெடுந்தூரம் அலைந்து அங்கே அதிக செலவுசெய்து

வழக்குரைஞரிடம் வழக்குகளைக் கூறி மேலதிக முத்திரைச் செலவு கொடுத்துத் தவணைதோறும் அலைந்து ஈற்றில் பெற்ற நீதியும் சில சமயங்களில் திருப்தியற்றதாகவே இருந்தது.

கட்சிப்பிரிவுகளும் இனவாரிப்பிரிவுகளும் அக்காலத்தில் இல்லை. அங்கிருந்தவர்கள் உத்தியோக அங்கத்தவரும் உத்தியோகப்பற்றற்றவரும் என்ற இரு பிரிவினரே. உத்தியோகப் பற்றற்றவருள் ஆங்கிலேயர், பறங்கியர், தமிழர், சிங்களவர் ஆகிய பலரும் இருந்தார்கள். பலரும் இருந்த பகுதியினர் சிறுபான்மையினராயும் அதிகாரமில்லாதவராயும் இருந்தார்கள். அதிகாரமுள்ள உத்தியோகப் பற்றுள்ளவர் பெரும்பான்மையினராயிருந்தார்கள். இவ்விருதரத்தாரும் 1847 ஆம் ஆண்டில் முதன்முதலாக மோதிக்கொள்வாராயினர்.

அக்காலத்தில் ஏற்பட்ட கோப்பிப் பயிரழிவு காரணமாக அரசாங்கம் தெருக்கள் அமைப்பதற்குப் பணம் ஒதுக்குவதைக் குறைத்தது. அப்பொழுதுதான் மலைநாட்டுத் தோட்டப் பகுதிகள் உருப்பெற்றன. அவற்றுக்கு நல்ல வீதிகள் இன்றியமையாதவை எனக் கண்ட உத்தியோகப் பற்றற்றவர் அறுவரும் அரசாங்கத்தின் கொள்கையை அறவே வெறுத்தனர். ஆனல் ஆள்பதி அவர்கள் தமக்குச் சாதகமாக உள்ள உத்தியோக அங்கத்தவரின் ஆதரவால் காரியங்களை நிறைவேற்றி வருவாராயினர்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் ஆறுபேரும் தாங்கள் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாயிருந்தபோதிலும் எண்ணிக்கையிற் சிறுபான்மையினராயிருத்தலால் பெரும்பான்மையினராய உத்தியோக அங்கத்தவரின் தீர்மானங்களை வீழ்த்த இயலவில்லை எனக் கண்டனர். அதனல் அன்று தொடக்கம்,

1. உத்தியோகப் பற்றற்றவர் தொகை உத்தியோக அங்கத்தவரில் பார்க்க அதிகமாய் இருத்தல் வேண்டும் என்றும்,
2. ஆள்பதி சட்டசபைக்குக் கட்டுப்படுதல் வேண்டும் என்றும்,
3. தமக்கு அதிகாரம் வழங்கப்படல் வேண்டும் என்றும்,
4. அரசாங்கம் செலவுகளைக் குறைத்தல் வேண்டும் என்றும்,
5. உத்தியோகப்பற்றற்றவர் வரவு செலவுத் திட்டத்தைக் கண்காணித்தல் வேண்டும் என்றும் கோரிக் கிளர்ச்சி செய்வாராயினர்.

அவர்களுடைய கோரிக்கைகளை அவர்கள் வரைந்தனுப்பிய நினைவேட்டில் படித்த குடியேற்ற மந்திரியார் எழுதிய பதிலில் பல காரியங்களைக் குறிப்பிட்டார். ''இப்பொழுதுள்ள நிலைமையில் சட்ட சபையில் தேர்தல்முறை என்பன வாதியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டால், அவற்றைக் கொண்டு நடத்துவதற்கு இலங்கை வாசிகளுக்குப் போதிய தகமை இல்லை. அதனல் இங்குள்ள ஐரோப்பியரே இலங்கையரை நலியச் செய்ய நேரும் ஆதலால் வேறு சில திருத்தங்களைச் செய்யலாம்'' என எழுதினர்.

அதன் பயனகவே முன்னர் இலங்கையில் கட்டளைச் சட்டங்கள் நடைமுறையில் வருவதன்முன், குடியேற்ற மந்திரியாரின் பிரசித்தம் பெற்றிருத்தல் வேண்டும் என்றிருந்த நியதி 1847 ஆம் ஆண்டு தொடக்கம் அத்தகைய பிரசித்தங்கள் ஆள்பதியவர்களே செய்யலாம் என மாற்றியமைக்கப்பட்டது. இன்னும் 1848 ஆம் ஆண்டு முதலாகச் சட்டசபையினர் வரவு செலவு விபரத்தைக் கண்ணுற் காணலாம் என்றும் அதனை ஆள்பதி மறைவாய் வைத்திருக்க இயலாது என்றும் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இலங்கையர் செய்த கிளர்ச்சியின் பயனகவே 1889 ஆம் ஆண்டில் வேறொரு திருத்தஞ் செய்யப்பட்டது. அதிலே அரசாங்கம் உபமதிப்பீட்டுப் பணம் பெறுவதானல் சட்டசபையின் அங்கீகாரத்தைப் பெற்றேயாகல் வேண்டும் என்று திருத்தப்பட்டது.

குடியேற்றநாட்டு மந்திரியார் அளித்த சலுகைகளில் வேறொன்று உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகள் சட்டசபையிலே முறிகள் பிரேரிக்க யோக்கியம் உடையவர்கள் என்று கணித்தமை. அதனைத்தொடர்ந்து தோட்ட விளைவு நன்றாக இருந்ததால் செலவுப் பிரச்சினை உண்டாகாதமையால் கிளர்ச்சிகள் மேலும் எழவில்லை. உத்தியோகப்பற்றற்றவர் தொகை அதிகரிக்கப்படல் வேண்டும் என்ற கிளர்ச்சி இரண்டாம் முறையாக 1864 ஆம் ஆண்டில் எழுந்தது. என்றாலும் அதற்கு 25 ஆண்டுகளுக்குப்பின் 1889 ஆம் ஆண்டிலேதான் உத்தியோகப் பற்றற்றவர் தொகை இரண்டால் அதிகரிக்குமுகமாகக் கண்டிச் சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியும், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியும் நியமிக்கப்பட்டனர். முஸ்லிம் பிரதிநிதியாக முதன்முதலாக நியமிக்கப்பட்டவர் காசிம் அப்துல் றகிமான் அவர்களாவர். அன்னாருக்கு முன் தமிழர் பிரதிநிதியே முஸ்லிம்களுக்குமாகப் பிரதிநிதித்துவம் வகித்தார். சேர் இராமநாதன் கூட 1879 ஆம் ஆண்டு முதலாக 1889 ஆம் ஆண்டளவுக்குத் தமிழருக்கும் முஸ்லீம்களுக்குமாகவே பிரதிநிதியாயிருந்தார்.

முன்னர் 16 மாவட்டப் பிரிவுகளாய் இருந்த இலங்கையை கோல்புறூக் திருத்த சபையினர் 5 மாகாணங்களாகப் பிரித்தனர். அதனால் பரிபாலனச் செலவு குறையும் என அவர்கள் கருதினர்கள். உண்மைதான். ஆனால் இப்போது ஒவ்வொரு மாகாணமும் முந்திய மாவட்டப் பிரிவிலும் பார்க்க மூன்று பங்கு பெரிய நிலப் பரப்பாக இருந்தது. அதனால் மேலுத்தியோகத்தர் நாட்டுப் புறங்களை நேரிற் சென்று அறிந்து கொள்ளுதல் இயலாதிருந்தது. எனவே பெரும் பகுதிகள் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டதால் அந்நிலப்பரப்பில் வாழ்ந்தவரின் தேவைகள் நிறைவு பெற வழியில்லாது போயின. அன்றி முன்னர் மெயிற்லண்ட் ஆள்பதியின் காலத்தில் நிலவிய சிவில் சேவை முறையினைக் கோல்புறூக் கெடுத்து விட்டார் என்றே பலரும் கருதுவாராயினர்.

சட்டசபை நிறுவப்பட்ட போதிருந்த ஆள்பதி விஸ்மட் ஹேர்ட்டன் அவர்கள் போனபின் ஆள்பதியாக இங்கே வந்தவர் ஸ்ரூவாட் மக்கென்சியாவர். அவர் இங்கிலாந்திலே பாராளுமன்றத்திலே பிரதிநிதியாய் இருந்தவர். ஒருகாலத்தில் கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தின் நிருவாக கர்த்தாவாகவும்இருந்தவர். ஆகவே அவருடைய பட்டம் பதவிகள் பகட்டானவை. அதிகௌரவ யேம்ஸ் அலெக்சாண்டர் ஸ்ரூவாட் மக்கன்சி அவர்கள் 7-11-1837 தொடக்கம் 5-4-1841 வரை இலங்கையில் ஆள்பதியாய் இருந்தவர். அவருடைய காலத்தில் இலங்கை வருமானம் வெகுவாகக் குறைந்தபடியால் வீதிகள் அமைக்கப்படுதலில் தாமதம் ஏற்படலாயிற்று.

ஆள்பதி மக்கன்சி அவர்கள் இலங்கைக்கு வந்த போது தம் முடைய அந்தரங்கக் காரியதரிசியாக A. M. பெர்குசன் என்பவரை அழைத்து வந்தார். அப்பெரியார் சிலகாலஞ் செல்ல ஒப்சேவர் பத்திராதிபராகி அப்பத்திரிகையின் உரிமையாளராயும் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆள்பதி மக்கன் சி ஒரு சமயம் கிழக்கு மாகாணத்துக்குப் போன போது அங்கே வேடர் மத்தியில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். அதனால் உடல் நலக் குறைவு காரணமாக அவர் தம் பதவியை விலகல் செய்ய அவருக்குப் பின் ஆள்பதி சேர் கொலின் கமல் அவர்கள் பதவியேற்றார். ஆள்பதி கமல் அவர்கள் 15-1-1841 முதலாக 18-1-1847 ஈறாக பதவி வகித்தார். இவர் சிறந்த தளபதி எனப் போற்றப் படும் வெலிங்ரன் பிரபுவின் படைகளில் பயிற்சி பெற்றவர். பல நாடுகளில் போர்க்களங்களைக் கண்டவர்.

மலைநாடுகளில் கோப்பித் தோட்டங்கள் உண்டாக்குவதற்குக் காடுகளைப் பெருந்தொகையாக வாங்குவதில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரும் இங்கிலாந்தின் முதலாளிகளும் ஈடுபடுவாராயினர்.

அதனால் 1834 ஆம் ஆண்டில் 50 ஏக்கர் தோட்டம் இருந்த நாட்டில் 1838 ஆம் ஆண்டளவில் 6500 ஏக்கர் தோட்டங்கள் ஏற்படுவன வாயின. அதன் பின் ஆண்டு தோறும் சராசரியாக 12000 ஏக்கர் நிலம் விலைப்படுவதாயிற்று. இலங்கைக் காடுகளை வெள்ளையர் ஏக்கர் ஒன்று ஐந்து சிலிங் காசுக்கே வாங்கினர்கள். இவ்வளவு இலாபகர மாகத் தோட்டங்கள் உண்டாக்க வழியேற்பட்டதால் ஆள்பதி மக்கன்சி, படைத்தலைவர், குடியேற்றக் காரியதரிசி, ஆகிய பெரிய வர்களும் ஏனைய உத்தியோகத்தவரும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கினர்கள். அந்நிலங்கள் பொன் கொழிக்கும் தோட் டங்களாக்கப்பட்டன.

கமல் ஆள்பதியாய முதலாண்டிலேயே இலங்கைக் கோப்பித் தோட்டத்தின் வளர்ச்சி உச்சநிலையடைவதாயிற்று. அவ்வாண்டில் ஏறக்குறைய 78500 ஏக்கர் நிலம் புதிதாகத் திருத்தப்பட்டது. வெள் ளைக்காரர் குடியியற் சேவையிலிருந்து கொண்டே பெருந்தொகையான காடுகளை வாங்குவாராயினர். அதனால் தமது வருமானம் அதிகரிக்கும் என அவர்கள் எண்ணினர்கள். இக்காலத்திலே தான் இலங்கையில் வெள்ளைக்காரர் பல வங்கிகளை நிறுவுவாராயினர். அவர்கள் இலங்கை வங்கி என்ற பெயருடன் ஒரு வங்கியும், இந்திய வங்கி என்ற பெய ருடன் ஒரு வங்கியும் ஆரம்பித்தார்கள். இதனால் இலங்கையைப் பரிபாலிக்க வந்த ஆள்பதி முதல் குடியிற் சேவையாளர் ஈறாக எல் லோரும் கோப்பித் தோட்டப் பைத்தியத்தில் இருந்ததைக் குடி யேற்ற மந்திரி வெறுத்தார். எனவே அவர் ஆள்பதிக்கு ஒரு சுற்று நிருபம் அனுப்பினர். அதன்படி குடியியற் சேவையாளர் தோட் டங்கள் விவசாயம், வர்த்தகம் என்பவற்றில் ஈடுபடுதலாகாது. இது வரை ஈடுபட்டவர்கள் தங்கள் வியாபாரமாதியவற்றை விற்று விட்டு உத்தியோகத்தை மாத்திரம் பார்த்தல் வேண்டும். அன்றேல் உத்தியோகத்தை விலகல் செய்து விட்டு அவற்றை மேற்கொள்ள லாம், எனக் குறிப்பிடப்பட்டது. இன்னு மொரு சுற்று நிருபத்தில் குடி யியற் சேவையாளர் சிங்களம் அல்லது தமிழில் பாண்டித்திய மடையா விட்டால் அவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடையாது என்று எழுதிய குடியேற்றக் காரியதரிசி குடியியற் சேவையை நல்ல முறை யிற்றிருத்தி அமைத்தார்.

ஆள்பதி கமல் அவர்கள் காலத்திலேதான் ஆங்கிலேயர் பலர் வர்த்தக நிலையங்களை இலங்கையில் ஆரம்பித்தார்கள். அக்காலத் திலே தான் யோச் வால் என்ற பெரியாரும் இலங்கையில் வந்து குடி யேறினர். அவர் வர்த்தகம், தோட்டம் ஆகிய துறைகளில் நல்ல உத்தியோகம் பார்த்தபின் சட்ட சபையிலே நியமனம் பெற்று

அளப்பரும் சேவை செய்தார். அவருடைய சேவையை இலங்கையர் இன்றுந்தான் நினைவு கூர்ந்து அவரைப் பெரிதும் மதிக்கிறார்கள். அவர் காலத்திலேதான் சார்ல்ஸ் லோறன்ஸ் அம்புறோஸ் அவர்களும் பிரகாசித்தார்கள். அப்புக்காத்தாக இருந்த றிச்சாட் மோகன் என்ற பெரியார் சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்து ஆள்பதி களுக்கு அந்தரங்க ஆலோசனை கூறுபவராய் இருந்தார். அக்காலத் திலேதான் சேர் எமர்சன் றென்னன்ற் என்பார் குடியேற்றக் காரியதரிசியாய் இருந்து அரிய பணி புரிந்தார். றென்னன்ற் இலங் கையைப்பற்றி எழுதிய புத்தகம் இன்றும் இலக்கியமாகவே இருக் கிறது.

கோல்புறூக் திருத்தத்தின் விளைவாக ஒரு பக்கத்தில் நாடு நாடாகி நல்ல முறையில் முன்னேறிய போதிலும் நாட்டில் மதுபா னப் பழக்கம் அதிகரித்தமையால் மக்கள் குற்றவாளிகளாய் நிலவு நாள்கள் அதிகங்கழியவில்லை. அவர்களைத் திருத்துவதற்கு அரசாங் கம் அரிய பாடுபட்டதெனக் கூறலாம் எனினும் அம்முயற்சியின் பயன் நன்றுகவில்லை என்றே கூறல் வேண்டும். அதனால் 1844 ஆம் ஆண்டில் பொலிஸ் நீதி மன்றங்களும் 1845 ஆம் ஆண்டில் விண்ணப்ப மன்றுகளும் நிறுவப்படலாயின. இன்னும் பழைய முறையில் வாழ்ந்து வந்த கண்டிச் சிங்களவர் மத்தியில் புதிய நாகரிகம் பழகிய கரை நாட்டுச் சிங்களவரும் முஸ்லிம்களும் பெருந் தொகையாகக் குடியேறியதால் கண்டிச் சிங்களவர் மத்தியில் திருப்தியீனம் ஏற்பட லாயிற்று.

இலங்கையில் ஆங்கிலப் பாடசாலைகள் அமைந்த விதமே சரித் திர சம்பந்தமானது. ஆள்பதி நோத் அவர்களுடைய ஆதரவில் 1799 இல் கொழும்பில் கோடினர் செமினரி என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூரில் C M. S. மிசனரிமார் யோசேப் நைற் அவர்கள் தலைமையில் தாபித்த பாடசாலை பழைய நல்லூர் இராசதானியில் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலிடிபட்ட அத்திபாரத்திலேயே கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்தே சுண் டிக்குளியில் பிற்காலத்தில் பாடசாலைகள் கட்டப்பட்டன. நல்லூ ரில் C. M S. பாடசாலை கட்டப்பட்ட காலத்தில் கொழும்புக் கோட் டையிலும் ஒரு தாபனம் நிறுவப்படலாயிற்று.

ஆனால் அதே ஆண்டில் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை செமினரி அமெரிக்க மிசனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்டு அளப் பரிய சேவை செய்ய முற்படலாயிற்று. அதனுடைய நோக்கம்; 1. ஆங்கிலக் கல்வி மூலம் சுதேசிகளுக்கு நல்ல சந்தர்ப்பத்தை ஏற் படுத்தல். 2. தமிழ் இலக்கண இலக்கியத்தை வளர்த்தல். 3. வட்

மொழி அறிவை அபிவிருத்தி செய்தல். 4. பழைய மொழிகளான ஹீபுறு, லத்தின், கிறீக் ஆகியவற்றை விவேகிகளாய ஒரு சிலருக்கு அறிவித்தல். 5. அமெரிக்க ஐரோப்பிய கலாசாலைகளில் வழங்கும் விஞ்ஞானப் பாடங்கள் தற்காலப் பாடங்கள் ஆகியவற்றைப் போதித்தல்.

கோல்புறூக் அவர்கள் வட்டுக்கோட்டைக் கலாசாலையையும் கொழும்புக் கோட்டைக் கலாசாலையையும் வெகுவாகப் புகழ்ந்துள்ளார். வட்டுக்கோட்டையிற் கற்று விற்பத்திமான்களாய கரோல் விசுவநாதபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆனெல்ட் சதாசிவம்பிள்ளை வைமன் கதிரவேற்பிள்ளை ஆகிய பெரியார்களைப் பற்றி எல்லோரும் அறிவர். ஆனல் கொழும்புக் கோட்டை C. M. S. கலாசாலையிற் கற்று விற்பத்திமான்களாய சிங்களப் பெரியார்களைப் பற்றி பலருக்குந்தெரியாது.

றிச்சாட் மோகன் என்ற பறங்கியரே பிரதம நீதியரசர் பதவியை வகித்த முதலாவது இலங்கையர். அவர் கொழும்பு C. M. S. கலாசாலையின் பழைய மாணவருள் ஒருவர். யேம்ஸ். டி. அல்விஸ் என்பார் நீதிபதியாக இருந்து இளைப்பாறியபின் சட்டசபையில் கரைநாட்டுச் சிங்களவரின் பிரதிநிதியாகப் பலகாலம் இருந்து சேவை செய்தவர். யேம்ஸ் டுணுவல என்பாரும் இராணி அப்புக் காத்தாகக் கடமையாற்றி நீதிபதியாயும் இருந்து கண்டியர் பிரதிநிதியாகச் சட்டசபையையும் அலங்கரித்தவர். குறுக்கு விசாரணை செய்வதில் மிகத்திறமான அப்புக்காத்து என பெயர் பெற்ற அப் பெரியார் டட்லி சேனநாயக அவர்களின் தாயாரின் பேரனாராவார். டுணுவல அவர்களின் உறவினரான டெகிகம என்பாரும் சட்ட சபையை அலங்கரித்த பெரியார்களுள் ஒருவர். ஆனல் அவர் மிகவும் அடக்கமுள்ளவராயே இருந்தார் என்றும் அவர் தமது அங்கத்துவ காலத்தில் சட்டசபையில் இரண்டே இரண்டு சொற்களே பேசினர் என்றும், அவை ''நான் அனுமதிக்கிறேன்'' என்பன என்றும் கூறுவர்.

டெகிகம அவர்களின் அடக்கத்திலும் பார்க்கப் படித்து அடங்கி வாழ்ந்தவர் வித்தியாசாகர் என்ற வடஇந்தியப் பேராசிரியர். யாழ்ப்பாணத்துப் புலோலிச் சிவபாதசுந்தரம் அவர்களும் அடக்கமுள்ள பெரியார். ஆனல் C.M.S. கல்லூரிக்குப் பெருமை தந்த ஒரு பெரியாரின் அடக்கம் பிறரறியாத வைபவமாகவே இருக்கிறது.

ஒருநாள் சேர் S.C. ஒபயசேகரா என்ற பெரியார் கோட்டைப் புறத்தால் தமது மனைவியாருடன் சென்றார். வழியில் ஒரு வயோதிபர் அரையில் மாத்திரம் ஆடை அணிந்து தலையில் புல்லுக்

கட்டுடன் நடந்து சென்றூர். கிழவனரிடம் ஓபயசேகரா ''கோட்டை C.M.S. கலாசாலை எவ்விடத்தில் இருக்கிறது''? என்று கேட்டார். கிழவன் பதில் கூறுவதற்குத் தயங்கியபோது ஓபயசேகராவின் மனைவியார் போயும் போயும் இந்தப் பட்டிக்காட்டிடமா பாட சாலையைப்பற்றிக் கேட்டீர்கள்'' என்று ஆங்கிலத்தில் தமது கண வனிடம் கூறினர்.

சீமாட்டியின் சீமை மொழியைக் கேட்ட கிழவன் புன் முறு வல் பூத்த முகத்தோடு சுத்தமான ஆங்கிலத்தில் பாடசாலை இருக் கும் இடத்தையும் அதற்குரிய வழியையுங் கூறினர். அதைக் கேட்ட ஓபயசேகராத் தம்பதிகள் ஆச்சரியப்பட்டு நின்றபோது கிழவன் ''இனி என்ன பிள்ளைகள், லத்தீன் மொழியில் சொல்லவா? கிரீசு மொழியில் சொல்லவா? ஹீபுறு மொழியில் சொல்லவா?'' என்று கேட்டாராம். இப்படியாகப் பிறமொழிப்புலமை பெறும் வண் ணம் கல்வி புகட்டிய அக்கலாசாலையிலேயே எங்கள் சேர். முத்துக் குமாரசாமியும் தமது ஆரம்பக் கல்வியையும் மொழிப்புலமையை யும் பெற்றூர் என்பர்.

அத்தியாயம் 13

இலங்கையில் நடந்த எதிர்க் கிளர்ச்சி

10த்திய ஐரோப்பாவில் உள்ள நாடுகள் எல்லாவற்றிலும் 1848 ஆம் ஆண்டில் பல வேறு படித்தான கலகங்கள் ஏற்பட்டன. அந்த ஆண்டைக் கலக ஆண்டு என்றே சரித்திர ஆசிரியர் குறித்துள்ளனர். அந்நாடுகளெங்கும் உழுத்துப்போன பழைய முறைகள் எல்லாம் மண் மூடிப்போக வேண்டும் என்றும், புதிய வழியில் புது வாழ்வு மலரவேண்டும் என்றும் புரட்சிகள், கலவரங்கள் நடை பெற்றன. அங்கே புரட்சி மனப்பான்மை உக்கிரமாக எழுந்து பரந்தது. யேமனி, இத்தாலி, அவுஸ்திரியா ஆகிய நாடுகளில் பொதுசன அபிப்பிராயம் குழம்பியே நிலவியது.

இன்னும் 1848 ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் எழுந்த புரட்சி உலகத்தைக் கண் விழிக்கச் செய்தது. பல்ரிக் நாடுகளில் ஆரம்பித்த புரட்சி மத்தியதரைக்கடல் நாடுகளுக்குப் பரவிற்று. பிரான்சில் ஆரம்பித்த குழப்பம் ருசியாவரை பரவிற்று. மற்றெனிச் பெரியார் கோலாகலமாக அமைத்த முறைகள் யாவும் தவிடுபொடியாக வீழ்ந்தன. அன்று 1848 இல் பறந்த பொறி 1914 ஆம் ஆண்டில் பெருநெருப்பாய் எரிந்தது என்பர். ஹங்கேரி, பொகிமியா, யேமனி, இத்தாலி, அவுஸ்திரியா ஆகிய இடங்கள் எங்கும் மக்கள் மாற்றத்தையே விரும்பினர். அதனால் சார்டினியா, பிறசியா போன்ற அரசுகள் நல்ல முறையில் தோன்றுவனவாயின. சர்வசனவாக்குரிமை வழங்கப்படலாயிற்று. பொதுமக்கள் யுகம் தோன்றுவதற்குச் சூழ்நிலை உருவாயிற்று.

இலங்கையைப் பொறுத்த அளவில் இங்கேயும் அந்த ஆண்டிலே ஒரு பெரிய கலகம் ஏற்படலாயிற்று. அது ஆரம்பித்த சூழ்நிலை வேறு, நடந்த சூழ்நிலை வேறு, முடிந்த சூழ்நிலை வேறு. சேர்கொலின் கமல் அவர்களுக்குப்பின் ஆள்பதியாக வந்தவர் ரொறிங்ரன் பிரபு. அவர் எவ்வித அநுபவமும் இல்லாதவர் எனினும் அக்காலத்தின் பிரித்தானிய பிரதமர் யோன்றசல் பிரபுவின் உறவினர் என்ற முறையில் அவருக்கு இப்பதவி கொடுக்கப்பட்டது என்பர்.

ரொறிங்ரன் பிரபு 29-5-1847 இல் பதவியேற்ற காலத்தில் இலங்கையின் நிலைமை குழப்பமாகவே இருந்தது. மக்கள் மனதில் அதிருப்தியும், அரசாங்கத்தில் நிதியின்மையும், குடியியற் சேவை அலங்கோலமாயும் இருந்த காலம் அது. அதற்கு முதல் வருடத்திலே

ஆள்பதி கமல் அவர்கள் ''விருந்தை வரி'' என ஒரு வரியை விதித் திருந்தார். அதனல் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூருயிருந்த விருந்தைகள் உடனடியாக இடிக்கப்படவும், இடையூறு விளைவிக் காத விருந்தைகள் உள்ள இடத்திற்கு வீட்டுக்காரர் வரிகொடுத்தல் வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது. இதனை ஒப்சேவர் பத்திராதிபர் எலியட் அவர்களும் றிச்சாட் மோகன் என்ற பறங்கியரான அப்புழ காத்து அவர்களும் வெகுவாக எதிர்த்தார்கள். இவர்களுடைய எதிர்ப்பை அறிந்த குடியேற்ற மந்திரியார் புதிய ஆள்பதி ரொறிங் ரனிடம் சலுகை காட்டுமாறு எழுதியபோதிலும், ஆள்பதியவர்கள் முரட்டுத்தனமாக வரிதிரட்ட ஆரம்பித்தார். அவர் ஆங்கிலேயர் பறங்கியருடைய நன்மதிப்பையும் இழந்ததுமல்லாமல் அவர்களை அலட்சியமாக நடத்தவும் தலைப்பட்டார் அவர் அவசர புத்தியும் முற்கோபமும் உள்ள மனிதன்.

இந்த நேரத்திலேதான் ஏமசன் ரென்னன்ற் என்ற பெரியார் குடியேற்றக் காரியதரிசியாக இலங்கைக்கு வந்தார். அவர் வந்தும் நிலைமையைச் சமாளிக்க இயலவில்லை. சென்ற பல ஆண்டுகளில் அதிக வருமானமுள்ள வரவு செலவுத்திட்டம் இவ்வருடம் செலவு அதிகமுள்ளதாயிற்று. எனவே குடியேற்ற மந்திரியார் அநுமதி யோடு ரொரிங்ரன் பிரபு பல புதிய வரிகளை ஆராய்வின்றி விதித்தார்.

கடைக்காரர், ஓடக்காரர், வண்டிக்காரர், குதிரைவண்டிக் காரர் வருடந்தோறும் உத்தரவுச் சீட்டுப் பணமாக ஒரு £ பொன் இறுக்கவேண்டியவராயினர். இன்னும் இரண்டரை சிலிங் துவக்கு வரியும், ஒரு சிலிங் நாய்வரியும் விதிக்கப்படலாயின. இவற்றைவிட மிகக்கொடுமையான தெருவரி விதிக்கப்பட்டது அதனல் 18 வயதுக்கும் 60 வயதுக்கும் உட்பட்டவர்கள் தலைக்கு மூன்று சிலிங் வரி கொடுக்கவேண்டியவராயினர். வரி கட்டத் தவறியவர்கள் ஆறுநாள்கள் தெருக்கட்டும் வேலையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். முன்னர் ஆள்பதி ஹோட்டன் அவர்கள் காலத்தில் 1832 ஆம் ஆண்டில் நீக்கப்பட்ட இராசகாரியம் என்ற கட்டாய சேவை வேறு வழியில் மீண்டும் புகுத்தப்பட்டது. எனப் பொதுமக்கள் கருதினர். இவற்றை விட உணவுப்பொருள் களுக்கும் மேலதிக வரி விதிக்கப்பட்டது. அரிசிக்கு 25% வீதமும், கோப்பிக்கு 120% வீதமும், உப்புக்கு 300% வீதமும் விதிக்கப்பட்டன. அதனல் அத்தியாவசிய தேவைப் பொருள்களின் விலைகள் அதிகரித்தன.

இலங்கை அரசாங்கம் உத்தியோகத்தர் தொகையை வெகு வாகக் குறைத்தும், பாடசாலைகளை மூடியும், ஆசிரியரை வேலை யினின்று நீக்கியும் நிலைமையைச் சமாளிக்கமுயன்றது. இங்கிலாந்

திலேயே அந்நாள்களில் பெரிய நிதிநெருக்கடி ஏற்பட்டது. இங்கிலாந்தில் £ 10,00000 (பத்துலட்சம் பொன்) திரட்டும் நோக்கமாகவும், கொழும்பிலிருந்து கண்டிவரை புகையிரதப்பாதை அமைப்பதாகவும் ஆரம்பிக்கப்பட்ட கொம்பனி இடையில் கைவிடப்படவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது, இலங்கையிலும் அதேவித நெருக்கடி இருந்தமைக்குக் காரணம் கோப்பிப் பயிரழிவு எனலாம். முன்னர் £ 15000 விலைபெற்ற தோட்டங்கள் இப்போது £ 50 ஆக விலைப்பட்டன. திருவாங்கூரிலே ஒரு பெரிய கோப்பித்தோட்டம் £ 2 பொன்னுக்கு விற்கப்பட்டது.

வற்ழுத வளங் கொழிக்கும் கண்டி நாட்டுக்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டமையாலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டமையாலும் கரைநாட்டுச் சிங்களவர் பெருந்தொகையாக அங்கே குடியேறுவாராயினர். வெள்ளைக்காரர் தங்கள் பணத்தைத் தோட்டங்களில் முதலீடு செய்வதற்காக அங்கே சென்றார்கள். தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியத்தமிழர் பெருந்தொகையினராக அங்கே குடியேறுவாராயினர். வியாபார வசதிகளை உண்டாக்குவதற்காக முஸ்லிம்கள் அங்கே சென்றார்கள். அவர்கள் ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்துக் கொள்வதற்கு இன்றியமையாத உதவியையும் செய்துகொடுத்தமையால் ஆங்கிலேயர் அவர்களுக்குச் சலுகையளித்தனர் போலும். உத்தியோகங் காரணமாகவும் வியாபாரங் காரணமாகவும் தமிழர் அங்கே குடியேறினர்கள். இங்ஙனமாக மலைநாட்டுப் பிரதேசங்கள் பல வேறு தரப்பட்ட மக்கள் வசிப்பிடமாக மாறுவனவாயின.

தோட்டங்கள் ஏற்பட்டமையால் கண்டிநாட்டில் முன்னர் நிலவிய கிராமவாழ்க்கையும் எளியவாழ்க்கை முறையும் நீங்கியது. பணப்பழக்கமும் தவறணைகளும் அதிகமாகவே அங்கே சென்றுறைந்தவர் வாழ்க்கை முறைகளும் சீரில்லாதிருந்தன. ஆங்கிலேயர் கோப்பி தேயிலை றப்பர் முதலிய விலைப்பயிர்களை நட்டுப் பொருள் தேடியதால் மலை வளத்தின் அழகு கெட்டுவிட்டதென்றும் மலைவாழ்வோர் முன்னர் சாமி, தினை, கேழ்வரகு தனிப்பாலில் சமைத்துத் தேன்கலந்து விருந்து கொடுத்துத் தாமும் உண்டமுறையும், பூமிவிளை வள்ளி மர வள்ளி யெனும் கிழங்கைப் பூப்போலத் தாமவித்துப் தின்றமுறையும் நீங்கிவிட்டன எனவும் வருந்தினர். அவர்கள் வருத்தத்தைப் படம் பிடித்து காட்டுவது போலப் பிற்காலத்தில் மாத்தளைக் குறவஞ்சி பாடிய பாவலர் பாடியுள்ளார்.

''ஆங்கிலரென் றெங்கிருந்தோ
வந்தவொரு சாதி
அந்தமலே அழகுகெடத்
தேயிலையை நட்டார்
பாங்கு நிறை மலைவளமும்
பழுதுபட லாச்சு
பண்டிருந்த பார்வதியும்
பறந்தோடிப் போச்சு
ஆங்குவொரு மாரியம்மை
அவளிருப்ப தாலே
அந்தமலே மீதுமழை
வந்திறங்கு தையா
நாங்களுறை அழகுமலே
நல்லமலே யையா
நாகரிகங் கொள்வதில்லே
எவர்வரினு மையா''

கண்டிப் பொதுமக்களுக்குச் சட்டசபை என்றால் என்ன என்றே தெரியாதிருந்தது. அதில் கண்டியருக்குப் பிரதிநிதிகள் நியமனம் பெறவேயில்லே. அரசாங்கத்துக்கும் கண்டியர் நிலைமை இன்னதுதான் என்பது உண்மையாகத் தெரியவில்லே. அரசாங்கம் நீல ஏடு என்னும் நாலுவித விபரப் புத்தகம் தயாரிப்பதற்குப் பொதுமக்களிடம் 30 கேள்விகளுக்குத் தகவல் கேட்டது. அம்முப்பது கேள்விகளையும் மேலும் 30 வரிகளே விதிப்பதற்காகவே அரசாங்கம் விளைகிறது எனப் பொதுமக்கள் கருதினர். அவர்கள் ஏற்கெனவே வீதிவரி, துவக்குவரி, நாய்வரி, வத்தைவரி எனப்பல வரிகளோடு போராடி வந்தவர்களாதலால் இவ்விஞக்கள் அவர்களே அவ்வாறு சந்தேகிக்கச் செய்தன.

இந்த வேளையிலேதான் ஒப்சேவர் பத்திரிகை 3-7-1848 இல் அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டித்தது. ''இத்தகைய அநீதியான வரிகளை மக்கள் எதிர்ப்பதுமல்லாமல், சட்டசபையில் பொதுமக்கள் பிரதிநிதிகளான உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் சமத்துவபலம் உள்ளவராயமரவும் பொதுமக்கள் கோரிக்கை செய்து களர்ச்சி செய்தலும் வேண்டும்'' என எழுதியது. இதையொட்டிப்போலும் கண்டி வாசிகள் 4000 மக்கள் அரசாங்க அதிபரைக்காண அணிவகுத்துப் போனார்கள். அரசாங்கம் படைகளை ஏவி அவர்களைக் கலைத்து விட்டது. புத்திசாலியான எமர்

சன் ரென்னன்ற் என்ற குடியேற்றக்காரியதரிசி கண்டிப் பிரமுகர் கூடிக் கண்டு மக்கள் குறையை நீக்குவதாக வாக்களித்து நிலைமையைச் சமாளித்தார்.

பொறளையிலிருந்து 26-7-1848 இல் 5000 பொதுமக்கள் கொழும்புக்கோட்டையை நோக்கிப் போனார்கள். அவர்களைக் கிறிஸ்தபர் எலியட் என்ற பெரியார் சமாதானங் கூறிச் சாந்தப்படுத்தித் தாம் அவர்கள் குறைகளை நீக்க வழிசெய்வதாகக் கூறினார். மக்களிடம் கையொப்பம் சேர்த்துக் குடியேற்ற மந்திரியாருக்கு எலியட் எல்லா விபரங்களையும் முறையாக எழுதினார். அதன் பயனாகவே மிகக்கடுமையான வரிகள் நீக்கப்பட்டன. ஆள்பதி றொறிங்ரன் திருப்பி அழைக்கப்பட்டார். குடியேற்றக் காரிய தரிசியாய எமர்சன் ரென்னன்ற் வேறிடத்துக்கு மாற்றப்பட்டார். இவ்வாறு எலியட் செய்த முயற்சிக்கு அவருக்கு அருந்துணையாய் இருந்தவர் பேர்குசனும் லோறன்சும் என்பது கவனிக்கத்தக்கது. அது நிற்க.

கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களில் பொதுமக்கள் கொதித்தெழுந்து ஆரவாரித்தார்கள். மாத்தளை வாசிகள் தமது எதிர்ப்பை வேறுவழியில் காட்டினார்கள். வெள்ளைக்காரரை அடியோடு இலங்கையைவிட்டு அகற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்தளையில் ஆரம்பித்த கலகத்தின் தலைவர் புரூன்அப்பு என்பவராவர். அவருடைய முழுப்பெயர் வீரசன்னத்தக்கே பிரான்சிஸ்கோ பர்ணந்து என்பதாம். மொறட்டுவ பகுதியிலுள்ள உயன என்ற ஊரில் 7-11-1812 இல் மதிப்புக்குரிய குடும்பத்தில் அவர் பிறந்தார். அவருடைய பெற்றோரின் குடும்பங்கள் வீரர் பலரை ஈன்ற பெருமையுள்ளவை. அவருடைய தகப்பனார் பெயர் வீரபாலஜயசூரிய குருத்தம்பால அத்ததேவ குணரத்தின என்றும், அவர் தாயார் பெயர் வர்ணமன்ன திசநாயக சபரமது நாணயக்கார லட்சாபதி என்றும் அறியத்தருவர்.

மொறட்டுவவிலுள்ள இதாமா என்ற ஊரில் ஆரம்பக்கல்வி பயின்று பர்ணந்து, இளமையிலே ஆள்பதி எட்வேட் பாண்ஸ் அவர்களுடைய மெய்காப்பாளரோடு சேர்ந்து ஊர்சுற்றி உல்லாசமாகப் பொழுது போக்குவாராயினர். அக்காலத்திலேயே வலியவராலும் உத்தியோகத்தராலும் நசுக்கப்பட்ட ஏழைகள் மீது அவருக்கு இரக்கம். உண்டாகியது. அதனால் அவர் ஏழைகளுக்காகப் பாடுபடுவது வழக்கம் அதனால் அவ்வூர்க் கிராமதிகாரி அவரைச் சவுக்கால் அடித்துவிட்டார். சவுக்கடிபட்ட பர்ணந்துவுக்கு ஆத்திரமுண்டாகவே அவர் கிராமாதிகாரியைக் கல்லால் எறிந்து காயப்படுத்தினர். இதுவே அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட கனிப் போரும் திருப்பமுமாகும்.

கிராமாதிகாரியைக் காயப்படுத்திய பின், வீட்டைவிட்டோடி மலை நாடுகளில் தமது உறவினர் வீடுகளில் உண்டு, ஐரோப்பிய தோட்ட முதலாளிகளுடனும், ஊவாவிலிருந்த பட்டாளத்தாருடனும் வேட்டையாடிக் காலங்கழிப்பாராயினர். அக்காலத்தில் ஓர் ஏழையின் பொருட்டுப் பொலிஸ் நீதிபதியை இரந்து கேட்ட போது அவர் மனமிரங்காமையால் அவர் வீட்டை உடைத்துப் பொருள்களைச் சூறையாடிப் பறிவாங்கினர். இதற்காகக் கைதுசெய்யப் பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட போது, ஆங்குள்ள பிற கைதிகளையும் விடுவித்துத் தாமும் சிறையை விட்டு வெளியேறினர் வெளியேறிய வர் மறுபடியும் கைது செய்யப்பட்டுச் சிறையிலிடப்பட்டதும் மீண்டும் சிறையை உடைத்து வெளியேறிவிட்டார்.

இதனால் அடங்காப்பிடாரி எனப் பிரித்தானியரால் பிரகடனப் படுத்தப்பட்டார். அவரை எங்கே கண்டாலும் உடனே சுட்டுக் கொல்லும்படி பொலிசுக்காரருக்கு உத்தரவு கிடைத்தது. பர்ணந் துவைக் கொன்று பட்டியுயர்த்திக் கொள்ளப் பொலிசுக்காரர் படாத பாடுபட்டார்கள். அக்காலத்தில் பர்ணந்துவின் பெயர் ஒவ் வொரு வீட்டிலும் வழங்கிற்று. ரொபின்கூட் என்ற வீரனைப் போலப் பர்ணந்துவும் ''புரூன் அப்பு'' எனச் செல்லமாக அழைக்கப்பட்டார்.

புரூன் அப்பு தனது நண்பர்களை இரகசியமாக ஒன்று திரட்டி வெள்ளைக்காரர் வீடுகளைச் சூறையாடி ஏழைகளுக்கு உதவுவதில் ஈடுபடுவாராயினர். நாட்டிலிருந்து வெள்ளையரைத் துரத்துவதில் நாட்டங் கொண்ட அவர், மகியங்கனையில் இருந்த புத்த பிக்குகளுடனும் முதியங்கனையில் இருந்த பிக்குகளுடனும் இரகசியமாகத் தமது கருத்தைத் தெரிவித்தார். ஆள்பதி அவர்கள் புத்தசமயத்துக்கு ஆதரவளியாதமையால் ஆத்திரப்பட்டிருந்த பிக்குமாருக்குப் புரூன் அப்பு வரப்பிரசாதமாய் இருந்தார். ஆறடி உயரமும் கவர்ச்சிகரமான தோற்றமும் உள்ள புரூன் அப்புவைப் பிக்குகள் ஆசீர்வதித் தார்கள். பொதுமக்கள். ஆதரவளித்துப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் வெள்ளைக்காரருக்கு எதிராகக் கொடியுயர்த்தி யுத்தத் துக்கு ஆயத்தமானார்கள்.

கண்டி, குருணைக்கல், அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களுக் கூடாக அணிவகுத்துச் சென்றவருக்கு எங்கும் அணி அணியாக ஆதரவு கிடைத்தது. இளைஞர் பலர் வரிசை வரிசையாக அவருடன் சேர்ந்தார்கள். அவருடைய பெருமிதத்தையும் தியாகத்தையுங் கண்ட பெண்கள் அவரை மணம் செய்ய விரும்பினர்கள். அவர் டம்புல என்ற இடத்தில் சென்றபோது அவருக்கு இராச கௌரவம்

ஏற்பட்டது. அவ்வூரினர் அவரை வெகுவாகக் கெண்டாடி 20-7-1848 இல் அவரை முடிசூட்டி அரசனுக்கினர்கள். அவ்வமையம் 67 பிக்குகள் பிரித் கிரியை செய்து ஆசிவழங்கினர்கள். மகுடாபிடேகஞ் செய்து முடிசூட்டியருளிய குட்டப் பொல உனன்சே என்ற தேரோ, அரச னுக்குப் பாலசிங்க என்ற பெயரையிட்டு வெற்றிக் கொடியுயர்த்தி வழிவிட்டார்.

ரத்வத்தை பண்டா என்ற பெரியாரைத் தமது அதிகாராகக் கொண்ட பாலசிங்க மன்னன் தமக்கு உதவியாகக் கரை நாட்டுச் சிங்களத் தலைவர்களைச் சிற்றரசராக முடிசூட்டினர். தெற்கு நோக்கிப் படையெடுத்த பாலசிங்க மன்னன் மாத்தளையில் இருந்த பிரித்தா னியரின் கோட்டையை 28-7-1848 இல் கைப்பற்றினர். அதனல் முர சுகள், கொம்புகள், சங்குகள் ஊதியொலிக்க; துவக்குகள் வெடிதீர, சுட்டிகள் வாள்கள் ஏந்திய இளைஞர் அணிவகுக்கப் பாலசிங்க 'கண்டி மன்னன் எனப் பேரறிவித்தல் செய்யப்பட்டார். இவ்வித கோலாகலங் களோடு பரிவாரங்கள் புடை சூழ அட்டதிக்கும் புகழ் பெற்ற பால சிங்க மன்னன் கண்டியை நோக்கிப் போன வழியில் பிரித்தானிய படைகள் அவரை எதிர்த்தன. படைப்பயிற்சியும் பலமுள்ள ஆயுதங் களும் இல்லாத பாலசிங்க மன்னனைப் பிரித்தானிய படைகள் பிடித்துக் கொண்டனர்.

பாலசிங்க மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பல. 1. **மன்னன் எனக் கூறியமை, 2. கலகஞ் செய்தமை. 3. யுத்தஞ் செய்தமை. 4. கொடியுயர்த்தியமை.** இவையாவும் மாட்சிமைதங்கிய விக்டோரிய மகாராணியாருடைய அதிகார மேன்மைக்கு இழுக்கு என வெள் ளையர் கூறினர்.

நிலைமையைச் சமாளித்துக் கொள்ள வகையறியாத ஆள்பதி அவசரத்தில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனஞ் செய்தார். கண்டி யிலிருந்து புறப்பட்டுப் போன ஆங்கிலேயர் படைகள் வழியிற் கண்ட பொது மக்களைத் துவக்காற் சுட்டுக் கொன்றும், தூக்கில் இட்டுக் கொன்றும், சவுக்காலடித்துத் துன்புறுத்தியும் பழிவாங்கினர்கள். பிரதம நீதிபதியாய் இருந்த அன்ரனி ஒலிபன்ற் என்பாரும், சட்டத் துறை நாயகமும் கலகக்காரரைத் துன்புறுத்தக் கூடாது எனவும் அப்படிச் செய்தால் தாம் பிரதம நீதிபதிப் பதவியை விலகல் செய் வதாக அவர் கூறியும் அதனைச் செவிமடுக்காத ஆள்பதி கலகக் காரருள் புரூன் அப்புவையும், கொங்கல்ல கொட பண்டாவையும், குட்டப்பொல உனன்சே என்ற புத்த பிக்குவையும் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டார்.

புரூன் அப்பு தம்மீது ஆங்கிலேயர் சுமத்திய குற்றங்களை அஞ்சா நெஞ்சோடு ஒப்புக் கொண்டார். ''ஆம் நான் அரசனே! கண்டிப் பிரதானிகள் என்னை மன்னன் எனத் தெரிந்து முறைப்படி முடி சூட்டினர்.'' கொலைத் தண்டனை விதிக்கப்பட்டபின் ஏனைய சிற்றரசர் களோடு போகம்பரைச் சிறைச்சாலையில் அவர் அடைக்கப்பட்டார். அவர் 8–8–1848 இல் தூக்கு மேடையில் நின்று அஞ்சாநெஞ்சோடு மரணதண்டனையை வரவேற்ற போது கூறிய வாசகம் மிக உருக்க மானது. என் அன்னை என்னைப்போல இன்னொரு பிள்ளையை எனக்குத் தம்பியாகத்தந்திருந்தால் நான் என் முடியை வெள்ளையரிடம் பறி கொடுத்திருக்கமாட்டேன்.'' துப்பாக்கிச் சூடு அவர் நெஞ்சைத் துளைக்கு முன் அவர் தம் நெஞ்சைத் தொட்டு, ''இந்த வீர சன்னத் தினைப் போல இன்னும் நான்கு வீரர்கள் எனக்கு உதவியாய் இருந் தால், நான் வெள்ளைக்காரரை எங்கள் தாய்த்திரு நாட்டை விட்டுத் துரத்தியிருப்பேன்.''

வைக்கவுண்ட் ரொறிங்ரனுக்குப் பின்னர் சேர்யோச் அண்டர்சன் 27–11–1850 இல் ஆள்பதியானார். அண்டர்சன் அவர்கள் இந்திய சிவில் சேவையிற் சித்தியெய்தி இந்தியாவிலே பெரிய பதவிகளை வகித்துப் பரிபாலன முறைகளில் திறமை பெற்றவர். அவர் 36 ஆண் டுகள் இந்தியாவில் சேவை செய்த பின் தமது 53 ஆம் ஆண்டுப்பரா யத்தில் 1844 இல் இளைப்பாறி 1849 இல் நைற் பட்டமளிக்கப் பெற்று மோறிற்றஸ் தீவின் ஆள்பதியாக நியமனம் பெற்றார்.

அண்டர்சன் அவர்கள் இலங்கையின் ஆள்பதியாக வந்த போது இங்கே சேர் சார்ள்ஸ் மக்காதி அவர்கள் குடியேற்றக்காரிய தரிசியாயிருந்தார். அவருக்கும் ஆள்பதியவர்களுக்கும் உரிமை கடமை யாதிய அலுவல்களில் பல பிணக்குகள் உண்டாகி அவையாவும் குடியேற்ற மந்திரியாராய கிறே பிரபுவினால் தீர்த்து வைக்கப்பட்டன. ஆள்பதி அவர்களுக்கு வேறும் பல மனத்தாக்கங்கள் ஏற்படலாயின. முன்னர் ஓர் அந்தர் 100 சிலிங்காக விலைப்பட்ட இலங்கைக் கோப்பி வெகுவாக விலை குறைந்து 45 சிலிங்காகி ஈற்றில் 27 சிலிங்காகவும் விலை குறைந்தது. அத்தோடு கோப்பிப் பயிர்களுக்கு ஒரு வித பிளேக்நோய் உண்டாகிப் பெரிய நாசமும் ஏற்படலாயிற்று. அக்கா லத்திலே தான் குடியேற்ற மந்திரியார் ஆள்பதி அவர்களுக்குச் சிக்க னமாயிருக்கும் வண்ணம் சுற்று நிருபங்கள் அனுப்பினர். இரு ஆண் டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கிளர்ச்சியில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட பெருந்தொகையான செலவும் சமாளிக்கப்பட வேண்டியிருந்தது.

இந்த நேரத்திலே ஆள்பதியவர்கள் தெருக்கட்டுதல் முதலிய வற்றில் செலவைக் குறைத்தபோது, தோட்ட முதலாளிகள் தெருக் கட்டுதல் அத்தியாவசியமென்றும் சிக்கனமாக இருப்பதற்கு வழி உத்தியோகத்தர் வேதனத்தைக் குறைப்பதும், உத்தியோகத்தவர் தொகையைக் குறைப்பதுமே செய்யக் கூடியகாரியங்கள் என எதிர்த்து நின்றனர். இக்காலத்திலே ஆள்பதி அவர்களுக்குச் சட்டசபையின் உத்தியோக அங்கத்தவருடைய போக்கும் தலையிடியைக் கொடுத்தது உத்தியோக அங்கத்தவர் சட்ட நிறைவேற்றுச் சபையில் தீர்மானிக் கும்போது சாதகமாக நின்ற அலுவல்களைச் சட்ட சபையில் பேசும் போது தம் நிலையிற் பிரிந்துபாதகமாயும் நிற்பாராயினர். அவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டியவராயிருந்தும், ஆதரியாமல் இரு ந்தமை ஆள்பதி அவர்களுக்குத் தலையிடியாய் இருந்தது. இதற்குக் காரணம் பெரும் பாலான உத்தியோக அங்கத்தவர் தோட்ட முதலா ளிகளுக்கும் வர்த்தகருக்கும் நண்பர்களாயிருந்தமையேயாம். அண் டர்சன் அவர்கள் தாமாகவிரும்பி 1855 ஆம் ஆண்டில் சுகவீனங் காரணமாக இளைப்பாறிக் கொண்டார்.

அண்டர்சன் அவர்களுக்குப் பின்னர் ஆள்பதியாய் வந்த ஹென்றிவாட் என்பார் தாராண்மைக் கொள்கையில் அநுதாபம் உள்ளவர். அவர் தென்அமெரிக்காவில் உள்ள மெக்சிக்கோ நாட டில், அரசதூதுவராய் இருந்தபின் இங்கிலாந்துக்கு மீண்டு குரே னிக்கிள் என்ற வாரான்தப் பத்திரிகையை நடத்தியவர். அவர் பிரித்தானிய பாராளுமன்றத்திலே சென் அல்பண்ஸ் தொகுதியின் பிரதிநிதியாயிருந்து பணியாற்றியவர். அதன்பின் அயோனியன் தீவின் பாதுகாவலராயிருந்தபோது 1855 ஆம் ஆண்டின் மே மாதந் தொடக்கம் இலங்கை ஆள்பதியாய் நியமிக்கப் பெற்றார்.

ஹென்றிவாட் அவர்களின் பரிபாலன காலம் சீரும் சிறப்பும் வாய்ந்தது என்று பெர்குசன் அவர்கள் தமது ஒப்சேவர் பத்திரிகை யில் பாராட்டி எழுதியுள்ளார். பெர்குசன் ஐம்பதாண்டு பத்தி ரிகைத்தொழில் நடத்திய பழுத்த அநுபவசாலி. ஹென்றிவாட்டு போக்குவரத்து வீதிகள், நீர்ப்பாசன குளங்கள், ஒல்லாந்தரின் பழைய வெட்டுவாய்க்கால்கள் என்பவற்றை நல்லமுறையில் திருத்தியமைத் தார். தபால் போக்குவரத்தை நல்லமுறையில் அமைத்து இலங் கைவாழ் மக்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படச் செய்தார். ஆள்பதி வாட் அவர்கள் இளைப்பாறிப்போன காலத்தில் இலங்கை யில் கொழும்பு, கண்டியாகிய இரு பிரதான நகரங்களையும் இலங்கையின் பல்வேறு நகரங்களோடு தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற்காகவும் இணைக்கும் 750 மைல் நீளம் உள்ள உறுதி யான வீதிகள் செப்பமாக்கப்பட்டு விளங்கின.

இன்னும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மூல மாயிருந்த கோப்பிச்செய்கை நல்ல புகைவண்டிப்பாதை இல்லா விட்டால் பிறேசில், யாவா முதலிய நாடுகளோடு போட்டியிட முடியாதுபோகும் எனக் கருதினர். அதனால் 1855 ஆம் ஆண்டின் யூலை மாதத்தில் சட்டசபை ஏகமனதாக அவர் கருத்தை நிறை வேற்றியது. அதன்படி புகைவண்டிப் பாதை அமைக்க ஆயத்தங்கள் செய்யப்படலாயின.

தாராண்மைப் போக்குள்ள ஆள்பதி வாட் அவர்கள் இலங் கையரைப் பொறுத்த அளவில் சிறிது பழமையாகவே இருந்தார். அவருடைய காலத்தில் சட்டசபையில் நியமன முறையை நீக்கிவிட் டுத் தேர்தல் முறையில் பிரதிநிதிகளைத் தெரிதல் வேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்தது. அந்த நேரத்தில் வாட் அவர்கள் ஐரோப்பிய அங்கத்தவர் மூவரையும் தேர்தல் முறையிலும்; ஏனைய பறங்கியர், தமிழர், சிங்களவர் ஆகியவர்களுடைய பிரதிநிதிகளை நியமன முறையிலும் அமர்த்த உடன்பட்டார். அன்றி அதே நேரத்தில் அவர் குடியேற்ற மந்திரியாருக்கு எழுதிய அறிக்கையும் இங்கே குறிப்பிடத்தகுந்தது.

"இன்று இலங்கையில் ஏறக்குறைய எண்ணூயிரம் ஐரோப்பிய ரும், ஒருசில பறங்கியரும், இருபதுலட்சம் சிங்களவர், தமிழர், சோனகர் ஆகிய சுதேசிகளும் இருக்கிறார்கள். இவர்களுக்கு அரசியல் யாப்பைப்பற்றியோ, பிரதிநிதித்துவ முறையைப்பற்றியோ பொறுப் பாட்சியைப் பற்றியோ யாதும் விளங்காதாகையால், கனடாபோன்ற நாடுகளில் உள்ள ஆட்சிமுறை இங்கே நடைபெற வழியில்லை. ஆத லால் பாரபட்சம் இல்லாமல் இன்று அரசாட்சி நடைபெறுவதற்கு முடியே அதிகாரத்தைத் தாங்கி ஐரோப்பியருக்கும் சுதேசிகளுக்கு மிடையில் இருத்தல் வேண்டும்"

ஆள்பதி வாட் அவர்கள் அயராத உழைப்பாளி. அவர் இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைத்த திறமையை இலங்கை யர் மறக்கவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல்ல உழைத்த பெரியார் அவர் என்ற கருத்து மக்களிடையே நிலவிற்று. அவ ருடைய உருவச்சிலை கண்டியில் நாட்டப்பட்டுள்ளது கொழும்பில் அவர் நினைவாக காலிமுக மைதானமும் விளங்குகின்றது.

ஆள்பதி வாட் அவர்கள் 30-6-1860 இல் இலங்கையைவிட்டுச் சென்னபட்டினத்தில் வேலை ஒப்புக்கொள்ளச் சென்றார். அவருடைய இடத்துக்கு சேர் சார்ல்ஸ் மக்காதி அவர்கள் வந்தார். இவர்

இலங்கையில் 13 ஆண்டுகள் உயர்தர உத்தியோகங்கள் வகித்து உயர்ச்சி பெற்றவராவர். இவர் கணக்காளர் நாயகமாய் இருந்த போது உத்தியோக அங்கத்தவராய்ச் சட்ட சபையில் இருதவர். எமர்சன் ரென்னன்ற் மாற்றம் பெற்று வெளிநாடு சென்றபோது மக்காதி அவர்களே குடியேற்றக் காரியதரிசியாய் நியமனம் பெற்றார். அதனால் இவர் மூன்று ஆள்பதிகள் காலத்தில் காரியதரிசியாய் இருந்தமையோடமையாது இருமுறை பதில் ஆள்பதியாகக் கடமை ஆற்றியுமுள்ளார். ஆகவே இலங்கையரைப்பற்றியும் அவர்கள் பிரச்சினைகளைப்பற்றியும் மக்காதி அவர்கள் நன்கறிந்திருந்தார்கள். அதுவுமன்றிச் சிறந்த அறிவாளியான றிச்சாட் மோகன் .அவர்களுடைய நட்பும் அவருக்கிருந்தது. எனவே அவர் தோட்ட முதலாளிகள் மேலதிக வீதிகள் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்ததையும் பொருட்படுத்தாது இலங்கையில் புகையிரத வீதிகளையே மேலும் அமைத்தார். என்றாலும் அவர் காலத்தில் நல்ல வருமானம் இருந்தமையால் அவர் வீதிகளையும் செப்பமிட்டுப் புதிதாகப் பல வீதிகளையும் அமைக்க வழிசெய்தார். வீதியமைத்துப் பெயர்பெற்ற ஆள்பதி லாட் அவர்களிலும் பார்க்க மக்காதி அவர்களே வீதியின் பொருட்டு அதிக பணம் செலவு செய்தார் என்பர். அவர் £500000 வீதிகளுக்காகச் செலவிட்டார் என அறியக்கிடக்கின்றது. கொழும்பில் உள்ள பொதுசன நூல்நிலையமும் அவருடைய தலைமையிலேயே 21-12-1880 இல் ஆரம்பிக்கப்பட்டது.

முன்னர் உத்தியோக அங்கத்தவர் சிலசமயங்களில் ஆள்பதியோடு அமைந்து நடந்து கொள்ளவில்லை என்ற குறை இருந்தது. அக்குறை மக்காதி காலத்தில் திருத்தப்பட்டு உத்தியோக அங்கத்தவர் ஆள்பதியின் இட்டமாகவேதான் வாக்களித்தல் வேண்டும் எனக் குடியேற்ற மந்திரியாரின் கட்டளையும் கிடைத்தது. இதற்குமுன் பிரதம நீதிஅரசர் சட்டசபையில் இடம் பெற்று வந்த வழக்கமும் மாறி அவருடைய இடத்தில் இராணி அப்புக்காத்து நியமனம் பெறுவாராயினர்.

———

அத்தியாயம் 14

கிளர்ச்சியாளர் வெளியேறலும் அவர்தம் விலகற் கடிதமும்

இற்றைக்கு நூறுண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சன நாயக தர்மச்செயல், டிக்பி எழுதிய றிச்சாட் மோகனின் வாழ்க்கை வரலாறு என்ற நூலிலும், யேம்ஸ் டி அல்விஸ் எழுதிய நினைவுகள் என்ற நூலிலும், டாக்டர் ஐசாக் தம்பையா அவர்கள் பேசிய இலங்கைப் பிரமுகர்கள் என்ற பேச்சிலும் வெகுவாக விதந்து கூறப் பட்டுள்ளது.

அன்று சட்டசபையில் ஆள்பதி அவர்கள் நடந்து கொண்ட தன்மை காரணமாகவும், அன்றைய அரசாங்கத்தின் போக்குக் காரணமாகவும், சட்டசபையில் இருந்த உத்தியோகப்பற்றற்ற அத்தனைபேரும் கௌரவமாக வெளியேறினர்கள். அவர்கள் வெளி யேறிய பின் ஆள்பதி அவர்கள், றிச்சாட் மோகனின் ஆலோசனை யைக்கேட்டு உத்தியோக அங்கத்தவரோடு சட்டசபையைக் கொண்டு நடத்த முனைந்தார். ஆனல் அடுத்த கூட்டத்தின் ஆரம்பத்திலே சென்ற கூட்ட வரலாறு படிக்கப்படும் நிகழ்ச்சியில் சட்டசபையின் எழுதுவினைஞன் அறிக்கையைப் படிக்க மறுத்தமையோடமையாது உத்தியோகப் பற்றற்ற அத்தனை பேரும் வெளியேறிய பின் அங்கு கூடியிருந்தவர் சட்டசபையாகார் என அரசியற் புலமை தொனிக்க மறுப்புக் கூறினர். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய ஆள்பதி அவர்களுக்கு அது பெரிய தலையிடியாயிற்று.

வெளியேறிய யோச்வால், சார்ள்ஸ் அம்புறோஸ் லோறன்ஸ், W. தோம்சன், J. காப்பர், J. அல்விஸ், J. ஈற்றன் ஆகிய அறுவரும் பெயர்பெற்ற இலங்கையர் சங்கம் என்ற தாபனத்தை உருவாக்கி னர்கள். அதனல் இலங்கையிலும், இங்கிலாந்திலும், பொதுமக்கள் சபையிலும் இலங்கை அரசியலமைப்பு மாறுதலடைதல் வேண்டும் என்ற கிளர்ச்சி பரவலாயிற்று.

இவர்கள் தம் அங்கத்துவ பதவியை விலகல் செய்தபோது பதில் ஆள்பதி அவர்களுக்கு எழுதிய விளக்கக் கடிதம் இலக்கியமாக விளங்குவதால் அதன் சாரத்தையாவது நாம் அறிந்து கொள்வது முறையாகும். அது பின்வருமாறு:

''ஐயா, இதன் கீழ்க் கையொப்பமிடும் தங்கள் மதிப்புக்குரிய சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற கௌரவ அங்கத்தவராய நாங்கள், தாங்கள் மேன்மை தங்கிய குடியேற்ற மந்திரியார் அவர்கள் கற்பித்தவண்ணம் படைச் செலவு சம்பந்தமாக நடந்து கொண்ட வகையில் எங்கள் அங்கத்துவ பதவிகளை விலகல் செய்யாமல் இருக்க இயலாமல் தன்மானத்துடன் விலகல் செய்கின்றோம்.

இம் முறி விதிக்கப்படுவதால் பொதுமக்களுக்கு முட்டுப்பாடும் அநீதியும் ஏற்படும் என்றும், இதனைப் பெரும்பான்மையினராய உத்தியோக அங்கத்தவர் மத்தியில் சிறுபான்மையினராய நாம் எதிர்க்க இயலாது என்றும் கருதியே இவ்வண்ணம் செய்கிறோம். இம்முறியின் தேவையும் சந்தர்ப்பமும் சிறிதேனும் பொருத்தமில்லை என்றும், இம்முறி எங்கள் மனச்சாட்சியை வெகுவாக உறுத்துகிறது என்றும், சட்டசபையின் கௌரவத்தை இது அலட்சியஞ் செய்கிற தென்றும் கருதி இதில் பங்குபற்ற விருப்பமில்லாமை கருதியே நாம் விலகல் செய்கின்றோம். இதனால் தங்களுக்கும் தங்கள் சபைக்கும் ஏற்படும் வசதியீனத்துக்கு நாங்கள் வருந்துகிறோம்.

இவ்வாறாக நேர்ந்தமைக்கு உடன் காரணமாக 26–9–64 இன் நினைவேடும் அரசுச் செய்தியும் இருப்பதை நினைவூட்டுகிறோம். முந்திய குடியேற்ற மந்திரியார் கிறே பிரபுவின் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் பரிபாலனர்த்தங் காணமாக நிதி ஒதுக்குதல் சட்டசபையின் தீர்மானத்தாலன்றிக் குடியேற்ற மந்திரியாரின் கற்பனையாலல்ல என்பது முன்னமேமுடிவான முரணில்லாத கொள்கையாகும் ஆகவே இலங்கையின் படைப்பாலன பரிபாலன செலவுகள் யாவும் சட்ட சபையினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே மரபாகும்.

அங்ஙனம் செயலாற்றுங் கடமையே உரிமையாகியும் உள்ளது. இது 16 ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டுத் தாபிக்கப்பட்டிருப்பதும் இன்று இதற்கு முரணை நடைமுறைகள் ஏற்படுவதை நாம் கண் கூடாகக்காண்கிறோம். குடியேற்ற மந்திரியார் தமது விருப்பம் போலக் கட்டளைச் சட்டங்களுக்குப் புறநடை விதிப்பது தர்மமாகாது. இத்தகைய தகுதிக் குறைவான அலுவல் இந்நாட்டு மக்கள் மீது சுமத்தப்படுமாயின் அக்குற்றம் மாட்சிமை மிக்க மகாராணியாரின் உத்தியோகத்தரைச் சாருமேயல்லாமல் சட்டசபையினரைச் சாராது என நாங்கள் கருதுகின்றோம்.

மகாராணியாருடைய மந்திரிகள் இது முதற்றரமானது எனக் கருதி அதனை மகாராணியவர்கள் இச்சபை மீது விதித்தால் நாங்கள் இதனை மிகப் பணிவுடன் ஏற்று இதன்படி நடக்கச் சித்த

முள்ளவராய் இருக்கிறோம். ஆனால் நாங்கள் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவராதலால் இதனை ஏற்றுக்கொள்ள இயலாதவராய் இருக்கிறோம். இது தகுதிக்குறைவான அலுவலாய் உள்ளது. பரிபாலன அலுவல் போலவே படைப்பாலன அலுவலும் சட்டசபையின் அதிகாரத்துக்குரியதாதல் வேண்டும் என நாம் கருதுகிறோம். இம் முறியை · இச்சட்டசபை நிறை வேற்றுமானால் இதை விட இச் சபைக்கு அவமானமும் தகுதிக் குறைவும் வேறில்லை என்பதே எமது துணிபாகும். பரிபாலனத்துக்கு ஒரு சட்டமும் படைப் பாலனத்துக்கு வேறு அதிகாரச் சட்டமும் இருப்பதை, முன்னர் குடியேற்ற மந்திரியார் தந்த முறைக்கு முரணான முறை என்றே நாம் கருதுகிறோம். இது மந்திரியாரின்கட்டளை எனத் திணிக்கப்படாமல், சட்டசபையின் தீர்மானத்துக்குரிய அலுவலாயின் நாங்கள் கௌரவமாகத் தீர்மானித்து ஒரு தொகையைப் படைப்பாலனத்துக்கு ஒதுக்கத் தயாராக உள்ளோம்.

படைகளின் முழுச்செலவையும் இலங்கையரே பொறுக்க வேண்டும் என்றும், படைகள் குறைக்கப்படமாட்டா என்றும், திருக்கோணமலையில் உள்ள, படைகள் இலங்கையின் பாதுகாப்புக் காகவே நிறுவப்பட்டுள்ளன என்றும் மந்திரியார் கூறுவதை நாங்கள் நம்புவது எவ்வாறு? இவையாவும் சட்டசபையில் முறையாகத் தீர்மானிக்கவேண்டிய அலுவல்களாகும். தங்கள் பேரரசைப் பாதுகாப்பதற்குக் கேந்திரத்தானமாயுள்ள திருக்கோணமலை எனக் கூறி அங்கே படைகளை நிறுவும் பிரித்தானிய சாம்ராச்சியக் கொள்கை எங்களுக்கு விளங்கவில்லை. இதுபற்றிப் பிரித்தானிய பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையின் நிர்வாக சபையினர் 1861 ஆம் ஆண்டில் வெளியிட்டவண்ணம் இலங்கையில் உள்ள படைகளின் செலவில் பெரும் பகுதியை பிரித்தானிய அரசாங்கமே பொறுத்தல் வேண்டும் என்பதை கௌரவ மந்திரியாரவர்கள் கவனிப்பாராயின் நாங்கள் அகமகிழ்வோம். இங்ஙனம் அமைந்த அண்மைக்கால அலுவல்களை விட்டு 1801 ஆம் ஆண்டில் டண்டாஸ் கூறிய பழைய கதைகளை இக்காலத்துக்குப் பொருந்தும் என மந்திரியார் அமைவு காட்டும் அறிவுத்திறன் எங்களுக்கு விளங்கவில்லை.

இன்னும் இன்றுள்ள நிலைமையில் இறைசேரியில் மிகுதியாக உள்ள பணம் இன்றைய பரிபாலன சேவையில் எல்லாத் துறைகளின் தேவைகளையுங் கண்டபின் எஞ்சியுள்ள தொகை எனக் கணிக்கும் நுட்ப புத்திக்கூர்மை எங்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமாகச் செய்ய வேண்டிய ஆரம்பச் சேவைகளைக் கூடப் புறக்கணித்துத் தற்கொலை செய்யும் முறைபோல எல்லாப் பணத்தையும் குவித்து வைத்து விட்டுத் தேவைகள் கண்டு எஞ்சிய பணம் என வாயாற் கூறும் மதியீனம் வருந்தத்தக்கது. இன்னும் சென்ற ஆண்டு படைப் பாலனத்துக்காக £30,000 பொன் மேலதிகமாக விதிக்கப்பட்ட போது எத்தனை எத்தனை தேவைகள் புறக்கணிக்கப்பட்டன என் பதைச் சரித்திரம் கூறும்.

இன்றுள்ள போக்குவரத்துப் பாதைகள், பகிரங்க வேலைகள், பொலிசுப் பகுதி, இராசாங்கக்கல்லூரி, தபாற் பகுதி, என்பனவும் பிறவும் மாற்றுந்தாய் பிள்ளை வளர்த்த வகையில் உள்ள நிலைமையில் கௌரவ மந்திரியாரவர்கள் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன எனக் கூறுவதன் மர்மம் எங்களுக்கு விளங்கவில்லை.

அன்றித் தேவைகள் கண்டு எஞ்சிய வருமானம் அதிகமாக இருக்குமாயின் வரியைக் குறைத்தலே செய்ய வேண்டிய காரியமாகும். அதைவிடுத்து ஆணைச்சபையின் அதிகாரம் பெறுத காரியங்களில் அதனைச் செலவிடல் தானும் முறையற்ற செயலாகும் இன்றுள்ள வருமானந்தானும் அதிக வரியால் வந்தே உள்ளதாகும். இலங்கையரின் பிரதான உணவுத்தானியமாய நெல்லிலும், இலங்கையரின் பிரதான வீவுப் பொருளாய கோப்பியிலுமே இவை அதிகமாக விதிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இவை வெகுவாகக் குறைக்கப் படவேண்டிய வரிகளேயாகும்.

மேன்மை தங்கிய தங்கள் மதிப்புக்குரிய சட்டசபையின் கௌரவ அங்கத்தவராகிய நாங்கள் மரியாதையாயும், மதிப்புடனும் பணிவுடனும் அறியத்தருவது தாங்கள் எத்தொகையை விரும்பினாலும் அத்தொகையைச் சட்டசபை விவாதித்து அநுமதிக்குமாயின் அதனைத்தருவதில் நாங்கள் மனச் சம்மதத்தோடு ஒத்துழைப்போம் என்பதேயாம். இச்சட்டசபை தானும் கௌரவ குடியேற்ற மந்திரியாரின் விருப்பத்தையும் ஏவலையும் செய்து நிறைவேற்றும் தன்மையிலேயே அமைந்துள்ளது. இலங்கை வாழ் பொதுமக்களின் கருத்து இச்சபையில் நிறைவேற்றப்பட இயலாதிருப்பது வெளிப்படை மாட்சிமை தங்கிய மகாராணியாரின் மதிப்புக்குரிய மந்திரியாரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகக் கௌரவ சட்டசபையின் அதிகாரத்தை வலியிழக்கச் செய்வதில் கருத்தில்லை.

இந்த நேரத்தில் இக்குடியேற்றத்தின் நன்மைகருதி, பொது மக்களுக்காகவும் எங்களுக்காகவும் நாம் செய்ய வேண்டிய கடமை கருதி, எங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரிய அவமானமும் அநீதியுங் கருதி,

இலங்கையின் சட்டசபையின் உத்தியோக அங்கத்தவரே இந்த நேரத்தில் இதனை நடத்திக் கொள்ளலாம் எனக் கருதி நாங்கள் எங்கள் அங்கத்துவத்தை விலகல் செய்கிறோம். இதன் பிரதியொன்றை மாட்சிமை மிக்க மகாராணியாரின் மந்திரியாருக்குத் தாங்கள் அனுப்பி, அவரும் இதனை அறியச் செய்வீர்கள் எனக் கேட்டு நிற்கும் தங்கள் பணிவுள்ள ஊழியர்கள்.

C. A. லோறன்ஸ்
யோச் வால்
W. தோம்சன்
J. காப்பர்
J. அல்விஸ்
G. ஈற்றன்.

இங்ஙனமாகச் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற கௌரவ அங்கத்தவர் செய்த நடபடிக்கையை இலங்கையில் உள்ளவர் அனைவரும் பெருமையாக ஏகமனதாக ஏற்புடைத்தென ஒப்புக் கொண்டனர். எவரொருவராவது அவர்கள் செய்தமை தவறுடையதென எங்குஞ்சருதவில்லை. உத்தியோகப் பற்றற்ற கௌரவ அங்கத்தவர் இல்லாமல் சட்டசபை பூரணமாகாது எனவே எல்லோரும் கருதினர். ஆனல் இராணி அப்புக்காத்தாக இருந்த றிச்சாட் மோகன் அவர்கள் பதில் ஆள்பதியிடம் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளை நியமித்தவர் மகாராணியாராகவே அவர்களுடைய விலகற் கடிதமும் மகாராணியாராலேயே அங்கிகரிக்கப்படல்வேண்டும் அதுவரை ஆள்பதி அவர்கள் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர் வரிசையோடு சட்டசபைக் கூட்டங்களை நடத்தலாம் என்றும், அதன் கூட்டங்களுக்குக் குறைந்த எண் ஆறு அங்கத்தவரே என்றும், ஒன்பது உத்தியோகத்தரோடு அவற்றை நடத்தலாம் என்றும் ஆலோசனை கூறினர். அதனல் றிச்சாட் மோகனுக்கும் பதில் ஆள்பதி ஒபிரைனுக்கும் நாட்டில் அபகீர்த்தி உண்டாயிற்று.

சட்டசபை அங்கத்தவர் விலகல் சம்பந்தமாகக் குடியேற்ற மந்திரியார் அலுவலகத்திலிருந்து காட்வல் அவர்கள் எழுதிய அரசுச் செய்தி 1865 ஆம் ஆண்டு மேமாதத்தில் இலங்கையில் கிடைத்தது. அது உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் எழுதியவற்றை மறுத்து அவர்கள் கோரியவற்றைப் புறக்கணித்து 27-3-1865 இல் டவுணிங் வீதியிலிருந்து எழுதப்பட்டதாகும். காட்வல் அவர்கள் எழுதிய அரசுச் செய்தியில் ''நான் இதில் எழுதக் கூடியது ஒன்று. இங்ஙனம் விலகல் செய்யும் கௌரவ அங்கத்தவர்கள் இந்தக் காரணங்களைச் சட்ட சபையிலேயே காரசாரமாகப் பேசி அதிலேயே ஒரு முடிபு

கண்டிருக்கலாம். அவர்களுடைய கருத்தை அங்குள்ள ஏனைய அங்கத்தவரும் பதில் ஆள்பதியுங் கேட்டு அதில் கவனஞ் செலுத்தியிருப்பார்கள். அதனால் சட்டசபையிலேயே அவர்கள் கோரிக்கைக்கு நீதி வழங்கப்பட்டிருக்கலாம்; அல்லது மாட்சிமை மிக்க மகாராணியாரின் அரசாங்கத்தைக் கொண்டு நியாயமான வழியில் ஏதாவது மாற்றஞ் செய்வித்திருக்கலாம்.

இவ்வாறு எழுதிய குடியேற்ற மந்திரியார் காட்வல் கௌரவ அங்கத்தவருடைய விலகற் கடிதத்தை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மகாராணியாரின் அரசாங்கத்துக்குத் தகவுரை எழுதியதோடு இலங்கை அலுவல்களை விசாரணை செய்து முடிபு காண்பதற்கு ஓர் ஆணைச்சபையினை நிறுவ ஒப்புக் கொண்டார். அந்த ஆணைச்சபையில் குடியியற் சேவையாளர் மூவரும், படைப்பாலனத்தில் உள்ள மூவரும், இலங்கையில் உள்ள பெரியார்மூவரும், அமர வழிவகுத்தார். ஆணையாளர் ஆறமர இருந்து எல்லா அலுவல்களையும் ஆராய்ந்து ஏகமனதாக ஒரு முடிபுக்கு வந்தார்கள். அதன்படி படைச் செலவு £ 20,000 பொன்னிலிருந்து £ 160,000 பொன்னைக் குறைக்கப் பட்டது. அதனை அடுத்து 1867 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தினால் இத்தீர்மானம் நிறைவேற்றப் படவே குடியேற்ற மந்திரியார் காரியாலயம் இலங்கைப் படைச் செலவை நிர்ணயிக்கும் அதிகாரத்தைக் கைவிட்டது.

இஃது இவ்வாறாக விடுமுறைபெற்று இங்கிலாந்துக்குச் சென்ற முத்துக்குமாரசுவாமியவர்கள் இங்கிலாந்திலிருந்து மீண்டதும் தமது அங்கத்துவத்தைத் தாம் விலகல் செய்யாதவராகையால் அவர் வழமைபோலச் சட்டசபைக் கூட்டங்களுக்குச் செல்வாராயினர். இதனை விலகல் செய்த அங்கத்தவர் வெறுத்தனர்.

இலங்கைச் சங்கம் எனப்படும் ''சிலோன் லீக்'' ஆரம்பிக்கப்பட்டதும் அது அபிமானமூட்டும் வகையில் பூட்கைகளை வெளியிடலாயிற்று. அவற்றை ஆதரித்து இலங்கையில் அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் யாவும் தலையங்கங்கள் எழுதி வரவேற்றன. அன்றி இலங்கையில் இருந்த பிரமுகர்களான வர்த்தகர், தோட்ட முதலாளிகள் ஆகிய பலரும் இன மத மொழி வேறுபாடு கருதாது அங்கத்தவராய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் எல்லோரும் சங்கத்தின்மூலம் இலங்கையின் பல திறப்பட்ட முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தார்கள் அவர்களுள் யோச்வால், சார்ள்ஸ் அம்பறோஸ், லோறன்ஸ், காப்பர், பெர்குசன், மிற்சல், மாக்வுட், ஆமிற்றேச், கிறீன், சார்ள்ஸ்பைட், நன்னித்தம்பி முதலியார்



யோச் வால்
அவர்கள்



சார்ல்ஸ் அப்புரேஸ்
லோறன்ஸ் அவர்கள்





(சேர் இராமநாதனுக்குப் பெண் கொடுத்த பெரியார்) பிராம்சி, கௌவாசி, டி சேரம், கேலி, குக், சார்ஸ் எட்கார் கொறியா, பிலிப் ஜயவர்த்தனை, வன்டர்வால், கர்மரத்தின முதலியோரும் இன்னும் பலருமாவர்.

இலங்கையர் சங்கம் மிகவும் பலம்வாய்ந்த சங்கமாய் இலங்கையின் பல பாகங்களிலும் கிளைச்சங்கங்கள் உள்ளதாய், இங்கிலாந்திலும் அலுவலகம் உள்ளதாய் விளங்கிற்று. பிரித்தானிய பராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர் இச்சங்கத்தின்மீது அநுதாபம் உள்ளவராயும் இருந்தார்கள். யோர்வால் அவர்கள் இங்கிலாந்துக்கேகி அங்கே தமது நண்பர் வாற்கின் அவர்களைக்கொண்டு பொதுமக்கள் சபையில் இதுசம்பந்தமாக ஒரு விவாதத்தையும் நடத்துவித்தார்.

ஆனால் இலங்கை ஆள்பதி சேர் ஹேர்குலிஸ் ரொபின்சன் அவர்களும், இராணி அப்புக்காத்து றிச்சாட் மோகன் அவர்களும் குடியேற்ற மந்திரியாருக்குப் பக்கபலமாக நின்று ஆதரித்தமையால் அவ்விவாதம் பயனளிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் பொதுமக்கள் சபையிலேயே இலங்கையின் பரிபாலனத் திருத்தஞ் சம்பந்தமாக ஓர் அரசியல் விசாரணைச்சபை நிறுவப்படல் வேண்டுமென்ற குரல் ஒலிக்கலாயிற்று. அவ்வேளையில் இலங்கை ஆள்பதி அதற்குக் குறுக்கே நின்று அப்படித் திருத்தசபை ஏற்பட்டு ஏதாவது செய்யுங்காலத்து இலங்கை அரசியல் விவகாரத்தில் ஐரோப்பியரே அதிக பங்கு பெறுவர் என்றும் சுதேசிகள் புறக்கணிக்கப்பட நேரும் என்றும் அக்காலத்தில் இலங்கையில் மூன்று ஐரோப்பியப் பிரதிநிதிகளும் ஒரு சிங்களப் பிரதிநிதியும் ஒரு தமிழ்ப் பிரதிநிதியுமே இருந்தார்கள் என்றும் சாட்டுக் கூறி அந்த வாய்ப்பைத் தடுத்து விட்டார். சுதேசிகளின் நன்மை கருதியே தாம் அவ்வாறு தடைசெய்ததாக ஆள்பதி அவர்கள் பெருமையாகப் பிறிதோரிடத்தில் கூறியதும் உண்டு.

ஆள்பதி ரொபின்சன் இங்கிலாந்துக்குப் போனகாலத்தில் குடியேற்ற அலுவலகத்திலே ஐரோப்பிய முதலாளிகளின் கிளர்ச்சி வெறும் சுயநலப் போக்கென்றே கருத்துக் கூறினர். அவர் இங்கிலாந்திலே இருந்த காலத்திலே இலங்கையில் பதில் ஆள்பதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனறல் ஹொட்சன் அவர்களும் சட்டசபைக் கூட்டத்தில் "நான் இலங்கை வாழ் சுதேசிகளின் நன்மை கருதி உள்ளன்போடு இங்கே கூறக் கூடியது இச்சட்ட சபை இன்றுள்ள நிலைமையில் இலங்கைக்குப் போதுமானது. இதில் மாற்றமோ திருத்தமோ இன்றை நிலையில் இப்போது தேவையில்லை என்பதேயாம். இன்னும் இன்று அதிகாரம் பெற்றிருக்கும் ஆங்கிலேயர் சிறுபான்மையினராயும், ஆளப்படும் சுதேசிகள் பெரும் பான்மையினராயும் இருப்பதால் சுதேசிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அதற்குப் பணிந்து நடப்பதே செய்யக் கூடிய செயலாகும்" என்றிவ்வாறு பதில் ஆள்பதி பேசியவையெல்லாம் இராணி அப்புக்காத்து றிச்சாட் மோகன் எழுதிக் கொடுத்ததே என்பது எல்லோருக்குந் தெரிந்தும் விட்டது.

அத்தியாயம் 15

இலங்கையர் சங்கம் செய்த கிளர்ச்சி

ஐரோப்பாவிலே நெப்போலிய மகாயுத்தங்கள் முடிவுற்று வியன்னு மகாநாட்டுச் சமாதானத்தின் பின் ஐரோப்பியர் ஓரளவுக்கு அமைதியாகவும் சமாதானமாகவும் வாழுவாராயினர். இப்படியான அமைதிக் காலத்திலே தான் மக்கள் தங்கள் உரிமைகள், கடமைகள். தேவைகள், அபிலாசைகள், சமூகத்தின் தேவைகள், ஆட்சிமுறைகள். அரசமைப்புக்கள் என்பன சம்பந்தமாக ஆராய்வதும் ஆலோசிப்பதும் வழக்கம்.

இந்த வழக்கத்தில் பழகிய ஆங்கிலேயர், அமைதிக் காலத்தில் உத்தியோகங் காரணமாகவும், தோட்டம், தொழில், வர்த்தகம் என்பன காரணமாகவும் பெருந்தொகையினராக இலங்கைக்கு வந்து குடியேறுவாராயினர். அவர்கள் இலங்கையின் ஆட்சி முறையை அறவே வெறுத்தனர். ஆள்பதியவர்களின் அதிகாரம், இலங்கைச் சட்டசபையின் அமைப்பு, அதில் அங்கத்தவர் ஆயுட்காலம் வரை நியமனம் பெற்றமை, அதிலே உத்தியோக அங்கத்தவரின் செல்வாக்கு என்பன அரசியற் சாத்திரத்துக்கும் முறைக்கும் முரணுகவும் பிழையாகவும் இருந்தன. இலங்கை வாழ் மக்களின் பெயரால் நடைபெற்ற சட்டசபையில் இலங்கையரின் பிரதிநிதிகளாய் மூவர் மாத்திரம் இருந்தமையும், முஸ்லிம்கள், கண்டிச் சிங்களவர் ஆகிய சாகியத்தார் பிரதி நிதித்துவம் வழங்கப் பெருமல் இருந்தமையும் வருந்தத்தக்க முறைகளாகவே இருந்தன.

நாட்டின் வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கோ அன்றி அவர்கள் பிரதிநிதிகளுக்கோ எவ்வித கண்காணிப்பும் இருக்கவில்லை. இலங்கை ஆள்பதி அவர்கள் இலங்கைச் சட்டசபைக்குக் கட்டுப்படாமல் அதன் கருத்தாவா இருத்தமை மிகவும் பிழையாக இருந்தது. சட்ட நிரூபணசபையும் சட்ட நிர்வாக சபையும் பெயரளவில் மகத்தாக அமைந்தனவேயல்லாமல், அவை எவ்வித்திலும் பழைய ஆலோசனைச் சபையைவிட அதிகாரமுடையனவாய் அமையாதமை அவற்றின் அங்கத்தினரை வெறும் பொம்மைக் கூட்டத்தினராகவே செய்து விட்டது. சட்ட நிரூபணசபை சட்ட நிறைவேற்று சபையின் வால் போலவே அமைந்திருந்தது.

கோல்புறூக் குழுவினர் செய்த திருத்தத்தின் விளைவாக ஆங்கிலம் அரசாங்க மொழியானது. அதனால் உத்தியோகத்துக்காகவும் மேன்மைக்காகவும் இலங்கையர் ஆங்கிலங்கற்று முன்னேறுவாராயி

னர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளிலேயே இலங்கையின் பல பாகங்களிலும், சிறப்பாக யாழ்ப்பாணப் பகுதியிலே மிசனரிமார் பல பாடசாலைகளைத் தாபித்து ஆங்கிலக் கல்வியூட்ட வழி செய்தார்கள். சென்னைச் சர்வகலாசாலை தாபிக்கப்பட்டு. 1857 ஆம் ஆண்டிலே அவர்கள் முதன் முதலாக நடத்திய B. A. தேர்வில் திறமையுடன் முதன்மையாகத் தேறிய விவேகிகள் யாழ்ப் பாணத்து சி. வை. தாமோதரம்பிள்ளையும், கறல் விசுவநாதபிள்ளையு மாவர்.

இங்ஙனமாக ஆங்கிலேயர் வருகையாலும், ஆங்கிலக் கல்வியறி வால் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் பயனாலும் இலங்கையர் தங்கள் அரசாங்கத்தில் உள்ள பெருங் குறைகளை அறிந்து கொள்ளத் தலைப் பட்டனர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மரபுவழி தமிழும் வட மொழியுங் கற்று, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே ஆங்கிலங்கற்று விற்பத்திமானாய் விளங்கிய தோடு ஆசிரியராயும் பிரசுர கர்த்தாவாகவும் விளங்கினர். அவர் தமது 26 ஆம் வயதிலே 1848 ஆம் ஆண்டிலே அச்சுக்கூடம் வாங்கு வதற்காகச் சென்னபட்டணம் சென்றார். அவருடைய முயற்சியால் யாழ்ப்பாணத்திலே பெரிய தொரு விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று. அதனால் கல்வி கற்பதில் எல்லோருக்கும் ஊக்கம் பிறக்கலாயிற்று. அதனால் நாட்டில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளும் சைவாபி விருத்திச் சங்கங்களும் ஆரம்பிக்கப்படலாயின.

சட்ட நிரூபணசபையிலே அங்கத்துவம் வகித்த உத்தியோகப் பற்றற்றவர் சாதி, சமய, இன, மொழி வேறு பாடு கருதாது இலங் கைக்கு நல்ல முறையில் ஓர் அரசியலமைப்பு அமைதல் வேண்டும் என்று கிளர்ச்சி செய்வாராயினர். கோல்புறூக் திருத்தம் நடை முறைக்கு வந்த காலத்திலே தான் ஐரோப்பியர் பிரதிநிதிகள் சில பிரச்சினைகளைக் கிளப்பினர்கள். அவர்கள் ஆரம்பத்தில் தாம் உத்தி யோக அங்கத்தவரின் வரிசைக்குப் பின் இருக்க விரும்பவில்லை. அன்றி இலங்கை வாசிகளோடு சமமாக இருக்கவும் அவர்கள் விரும்பவில்லை ஆனால் நாளடைவில் வேறு பெரிய பிரச்சினைகள் நாட்டை நலியச் செய்யவே இத்தகைய வகுப்புப் பிரச்சினைகள் மறையத் தொடங்கின. மறைந்து விட்டன.

பின்னர் 1853 ஆம் ஆண்டில் உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகள் தெருக்கட்டும் மானியத்தைக் குறைத்துக் கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் புகையிரதப் பாதையை அமைப்பதற்கு மானி யத்தை அதிகரிக்க ஏகோபித்த நல்லிணக்கத்தைத் தெரிவித்தனர்.

இந்த அபிப்பிராயம் நிலவத் தொடங்கிய பின் 1864ஆம் ஆண்டளவில் அரசாங்கத்திடம் £ 100000 பொன் கையிருப்பாய் இருந்தது. இத்தொகையைக் கொண்டு என்ன செய்வது என்ற பிரச்சினை 1864 இல் எழுந்தது புகைவண்டிப்பாதையா, தெருக்கட்டுதலா இலங்கையின் பொருளாதார சமூக முன்னேற்ற வளத்துக்கு இன்றியமையாதது என்பதே அப்பிரச்சினை.

இப்பிரச்சினை இலங்கையரைப் பொறுத்த அளவில் தெருக்களுக்கும் புகைவண்டிக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த போது, குடியேற்ற நாட்டு மந்திரியாரின் மூலை வேறுபக்கமாக வேலை செய்யத் தொடங்கியது. இலங்கையில் 1802 ஆம் ஆண்டு தொடக்கமாக இலங்கையின் பாதுகாப்புக்காக ஆங்கிலேயர் படைஇங்கே இருந்தன. அப்படையின் முழுச் செலவும் பிரித்தானியஅரசாங்கமே பொறுத்து வந்தது.

ஆனால் 1838 ஆம் ஆண்டில் பழைய நிலைமை மாறியதால் இலங்கையின் பாதுகாப்புக்காகஇலங்கையில் உள்ளபிரித்தானியப்பட்டாளத்தின் செலவில் ஒரு பாகத்தையாவது இலங்கை அரசாங்கம் பொறுத்தால் என்ன என்பது பிரச்சினையாயிற்று. எனவே 1838 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசாங்கம் ஆண்டு தோறும் £ 24000 பொன் பாதுகாப்புக்காகக் கொடுக்கவேண்டுமென்றும், அத்தொகை ஆண்டு தோறும் படிப்படியாக அதிகரித்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அக்கட்டளை தலைச்சுமையாய் இருந்தது.

அதன் பிரகாரம் கொடுக்கப்பட்டு வந்த செலவு ஆண்டு தோறும் அதிகரித்து 1863 ஆம் ஆண்டில் £ 100000 கொடுக்க வேண்டிய அளவுக்கு வந்தது. அந்த ஆண்டில் படைச் செலவு £ 200 000. அதில் இலங்கையர் அரைவாசியைக் கொடுக்க வேண்டியவராயினர். அடுத்த ஆண்டாகிய 1864 இல் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையின் பாதுகாப்புச் செலவு முழுவதையும் இலங்கை அரசாங்கமே பொறுத்தல் வேண்டும் எனஅறிவித்தது. அந்த அறிவித்தல்இலங்கைக்குக்கிடைக்கும் போதே இந்த அலுவலை ஆராய்வதற்கு ஓர் ஆணைச்சபை நியமிக்கப்பட்ட தென்றும், அச்சபை ஏதாவது கருணை காட்டினால் மேற்சொன்ன தொகை குறைக்கப்படலாம் என்றும், ஆளுனாளர் தீர்ப்பு கிடைக்கும் வரை இலங்கை அரசாங்கம் ஆண்டு தோறும் £ 135000 பொன் கொடுத்தல் வேண்டு மென்றும், அத்தொகை ஆண்டு தோறும் £ 10000 பொன்னால் அதிகரிக்கவேண்டும் என்றும் அறிவித்தது.

அந்தவிதமான ஆணையைக்கேட்டு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர், ஒரு பகல் எல்லாம் யோசித்து உருத்தெழுந்து சீறி அந்த அநியாய ஆணையை எதிர்த்தார்கள். அவர்கள் கூறிய காரசாரமான

மறுப்புக் கண்டனம் சரித்திரப் பிரசித்தமானது. அவர்கள் புகையிரதப் பாதையே நாட்டுக்கு முதற்கண் இன்றியமையாதது, அதுவே முதலில் அமைக்கப்பட வேண்டியது, ஆங்கிலேயர் தமது படைகளை இலங்கையில் வைத்திருந்தது பேரரசாட்சிக்காகவே அல்லாது வேறெதற்குமல்ல, அவர்களுடைய தரைப் படையும் கடற் படையும் இந்து சமுத்திரத்தில் தமதாணையை நிலை நாட்டவும், கப்பற் பாதைகளைத் தமததிகாரத்துள்ளாக்கவும், இந்திய ராச்சியத்தைப் பாதுகாக்கவுமே. அதனால் அவர்கள் நோக்கம் பேரரசைப் பலப்படுத்துவதல்லாமல் இலங்கையைப் பாதுகாத்தல் அல்ல என்று தகுந்த காரணங்களைக் காட்டி மறுத்தனர்.

இலங்கைப் பிரதிநிதிகள் சட்டசபையில் சாதகமாகப் பணம் ஒதுக்கினால் அல்லாமல் பிரித்தானிய அரசாங்கம் நாட்டுப் பணத்தைத் தவருன வழியில் செலவிட முடியாதென வாதாடினர். ஆனால் உத்தியோக அங்கத்தவர் தொகை அதிகமாய் இருந்தமையால் ஆள்பதி அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். அதனால் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் மனமுடைந்து போனர்கள்.

பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகள்—கொலனிகள் உலகம் எங்கும் பரந்து பரவியுள்ளன. ஆனால் அவற்றில் எங்காயினும் என்றாயினும் விதிக்கப்படாத இராணுவச் செலவு இலங்கையில் மாத்திரமே விதிக்கப்படலாயிற்று. அதன் மர்மம் ஒருவருக்குமே விளங்க வில்லை. அன்றி குடியேற்றமந்திரியார் இலங்கைச் சட்டசபைக்குப் பணம் செலவழிக்கும் அதிகாரத்தில் தலையிட உரிமை இல்லை என்றும் அரசாங்கம் தன் விருப்பத்தின்படி செலவிடலாம் என்றும் அறிக்கைவிட்டார்.

யோச்வால் அவர்கள் செய்த மகத்தான சேவையைப் பாராட்டி எழுதினால் அது விரிந்து ஒரு நூலாய்விடும். அக்காலத்தில் அதிவீரனைய ஆள்பதி ஸ்பென்சனும் இராணி அப்புக்காத்தாய் இருந்து பிரதம நீதிபதியாய் உயர்ந்த பதவியை வகித்த மகாமேதையாகிய நிச்சாட் மோகனும் செயல் வீரனைய கிப்சனும் அரசாங்கத்தின் தூண்களாய் இருந்தார்கள். அவர்களை எதிர்க்கும் ஆற்றல் எவருக்கும் இருக்கவில்லை. அவர்களுக்கு உத்தியோக அங்கத்தவர் பக்கபலமாய் இருந்தனர். யோச்வால் அவர்கள் ஸ்பெக்குலம் என்னும் புனைபெயரில் அரசாங்கத்தின் போக்கை வெகுவாகக் கண்டித்து ஆணித்தரமாக ஒப்சேவர் பத்திரிகையில் எழுதிவந்தார். அவர் சட்டசபையில் திருத்தங்கோரி எழுதிய எழுத்தோவியங்கள் எண்ணிறந்தவை. அவர் கோரிக்கைகளை மறுத்து அரசாங்கத்தின்சார்பில் கண்டி ஹெறல்ட் என்ற பத்திரிகை செய்திகளை வெளியிட்டது.

யோச்வால் அவர்கள் 1856 ஆம் ஆண்டு முதலாகச் சட்ட சபையில் ஐரோப்பியர் பிரதிநிதியாக இருந்தார். அவரை ஒன் பது முறை திரும்பத் திரும்பத் தெரிவு செய்தார்கள். அவர் இலங்கையில் தோட்டத்துறையை ஆரம்பித்தவர்களுள் ஒருவர் என்பதும், தோட்டத்துரைமார் சங்கத்தை ஆரம்பித்தவர் என் பதும் அதன் தலைவராய்ப் பலகாலம் இருந்தவர் என்பதும் அவருக்குப் பெருமை அளிப்பன. அவர் பெரிய புலவராயிருந்து பலருக்குப் பலவித உதவிகள் செய்தமையோடு யேம்ஸ்டி அல்விஸ், சார்ல்ஸ் அம்புரோஸ் லோறன்ஸ் ஆகிய இருவருடன் சேர்ந்து இலங்கை அரசியற்றிருத்தத்துக்காகவும் அரும்பாடுபட்டுள்ளார்.

ஆள்பதி ரெபின்சன் பதவியேற்பதற்கிடையில் பதில் ஆள்பதி யாக ஓபிரையன் கடமையாற்றினார். அக்காலத்தில் 17–8–64 இல் சட்டசபையின் வைகல் ஆரம்பமான வேளையில் ஓபிரையின் தமது அரியணைப் பேச்சை முடித்துவிட்டு இராணி மாளிகைக்குச் சென்று சட்டசபையினரின் நன்றிப் பிரேரணையை ஏற்பதற்காக அங்கே இருந்தார்.

அக்காலச் சம்பிரதாயப்படி நன்றிப் பிரேரணை சட்டசபை அங்கத்தவரால் பிரேரிக்கப்பட்டு பத்துப்பதினைந்து நிமிட நேரத்தில் ஆள்பதிக்கு அனுப்பப்படுவது வழக்கம். ஆனால் அன்றைய கூட் டத்திலே உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் ஆறுபேரும் தவறுது சமுகமளித்தனர். உத்தியோக அங்கத்தவர் வரிசையிலே ஐவர் மாத்திரம் சமுகமாயிருந்தனர். உத்தியோகப் பற்றற்றவர் வரிசை யிலே சியேட்டராய் இருந்த ஐரோப்பியர் பிரதிநிதியாய யோச் வால் அவர்கள் ஆள்பதியவர்களுடைய அரியணைப் பேச்சின் நன்றிப் பிரேரணையில் திருத்தப் பிரேரணைகள் கொண்டுவர முனைந்தார். அவருடைய முதலாவது பிரேரணை பின்வருமாறிருந்தது.

''சட்டசபையின் முந்திய வைகலின்போது சபை அங்கத்தினர் முக்கியமாகக் கருதிய படைச்செலவைப்பற்றிய விபரங்கள் அரியணைப் பேச்சில் குறிக்கப்படாமையை இச்சபை குறை எனக் கருதுகின்றது.''

இப்பிரேரணை முறையற்றது என எதிர் விதிக்கப்பட்டு நீக் கப்பட்டது. அதற்குத் தலைவர் கூறிய காரணம், திருத்தப் பிரே ரணைகள் ஆள்பதி அவர்களின் அரியணைப் பேச்சில் குறிப்பிடப் பட்டவை சம்பந்தமாக இருக்கவேண்டுமேயல்லாமல் குறிக்கப் படாதவை சம்பந்தமாய் இருக்கப்படாதென்பதேயாம். முதற் பிரேரணை எதிர்நீக்கப்பட்டதும் யோச்வால் தமது இரண்டாவது பிரேரணையைப் பிரேரித்தார்.

''இலங்கை வளநாட்டின் நிலையான வினைபொருள்கள் என்றென்றும் உலகச் சந்தைகளில் மதிப்புக்குரிய பண்டங்களாய் இருந்தமையால் ஏற்பட்ட பெருக்கமேயன்றி, இன்றைய அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியால் ஆனதல்ல என்பதை இச்சபை நன்றியுடன் கருதுகின்றது''

இப்பிரேரணையை எதிர்த்து இராணி அப்புக்காத்தாக இருந்த நிச்சாட்மோகன் வெகுவாகத் தாக்கிப் பேசினார். இராணி அப்புக்காத்து பேசியபின் உத்தியோகப் பற்றற்றவர் வரிசையிலே இருந்த சார்ள்ஸ் லோறன்ஸ் அம்புரோஸ் என்ற பறங்கியர் இராணி அப்புக்காத்தரைத் தாக்கி ''இவர் பெரிய பெரிய மீன்கள் ஓடித் திரிய அவற்றைப் பிடிக்காமல் சின்னஞ்சிறிய மீன்களையே பிடிக்கிறார்'' எனக் குறிப்பிட்டார். ஆனால் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாய தோம்சன் என்பார் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார். எனவே பிரேரணை தோற்றுவிட்டது. யோச்வால் தமது மூன்றுவது பிரேரணையைச் சிறிது கோபக்கனல் பறக்கப் பிரேரித்தார்.

''இலங்கை அரசியற் பரிபாலனத்துக்கான செலவுக்கு மேலதிகமான அளவில் வருமானங்களைப் பல்லாண்டுகளாகப் பொதுமக்களிடம் நெருக்கித் திரட்டி, அவற்றை நல்ல முறையில் செலவிடாது பல நிணக்களங்களும் பழுதாகிப் போகுமாறு பணத்தைச் சிக்கனப் படுத்தும் இவ்வரசாங்கத்தின் போக்கை இச்சபை கண்டிக்கின்றது''

இவ்வாறுக நன்றிப் பிரேரணை பதினைந்து நிமிடநேரத்தில் நிறைவேற்றுவது வழக்கமாயிருக்க அன்று நான்கு மணி நேரத்திற்கு மேலாகச் சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருந்தது. இராணி மாளிகையில் நன்றிப் பிரேரணை எப்போது வரும் என ஆள்பதி தமது உத்தியோக உடையில் வெயர்வை வழியக் காத்திருந்தார்.

யோச்வால் பிரேரித்த பிரேரணை ஒருமணி நேரமாகப் பேசப்பட்டு இறுதியில் வாக்களிப்புக்கு விடப்பட்டபோது உத்தியோகப் பற்றற்றவர் ஆறுபேரும் ஒரே முகமாகப் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தனர். அதற்கு எதிராக உத்தியோக அங்கத்தவர் ஐவர் மாத்திரமே வாக்களித்தமையால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிராகப் பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் எங்காவது என்றுவது நடைபெறுத ஒரு அலுவல் அன்று இலங்கையில் நடைபெற்று விட்டது. அது சரித்திரப் புகழ்பெற்ற நிகழ்ச்சியாய் விட்டது.

உத்தியோக அங்கத்தவர் எதிர்பாராத விதத்தில் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. ஆனால் இராணி அப்புக்காத்தான ரிச்சாட் மோகன், பதில் ஆள்பதி ஓபிரையினிடம் அரசாங்கம் வீழ்த்தப்படவில்லை என்றும் அவர் உத்தியோக அங்கத்தவரோடு சட்டசபையை நடத்தலாம் என்றும் திரித்து விளக்கம் கூறி அப்படியே நடக்கச் செய்தார். இதைக் கண்டு கொதித்த உத்தியோகப் பற்றற்றவர் ஆறுபேரும் ஏகமனதாக ஒரே முறையில் விலகல் செய்தார்கள். அவர்களுடைய விலகற் கடிதங்கள் மாட்சிமை மிக்க விக்டோரியா மகாராணிக்கே உரியதென்றும் தனக்குரியதல்ல வென்றும் கூறிய ஓபிரயன் சட்டசபைக் கூட்டத்தை மேலும் உத்தியோக அங்கத்தவருடன் நடத்தி வந்தார்.

உத்தியோகப் பற்றற்றவர் யோச்வால். C. A. லோறன்ஸ், W. தோம்சன், J. காப்பர், யேம்ஸ். டி. அல்விஸ், யோன் ஈற்றன் ஆகிய ஆறுபேரும் 15-11-1864 இல் விலகல் செய்தார்கள். இவர்களுள் யோன் ஈற்றன் என்ற பறங்கிப் பெரியார் முத்துக்குமாரசாமி அவர்கள் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது அவருக்குப் பதிலாக அங்கத்துவம் வகித்தவராவர்.

பிரதிநிதித்துவ பதவிகளை விலகல் செய்த உத்தியோகப் பற்றற்றவர் 16-11-1864 இல் இலங்கையர் சங்கம் என்ற சபையை உருவாக்கினார்கள். அதிலே ஐரோப்பியர், பறங்கியர், சிங்களவர், தமிழர் ஆகிய பலவேறு சமூகத்தவரும் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் அன்றைய அரசியல் நிலைமையைப் பிரித்தாணிய மேலதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

இலங்கைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் சட்டசபையில் உத்தியோக அங்கத்தவர் தொகையுடன் உத்தியோகப் பற்றற்றவர் தொகை சம பலமாய் இருப்பச் செய்தலேயாம். உத்தியோகப்பற்றற்றவர் செய்கையையும் கோரிக்கைகளையும் இலங்கையில் உள்ள எல்லாத் தாபனங்களும் பிரமுகர்களும் முறையானவை என ஏற்றுக்கொண்டனர் என்று உத்தியோகப் பற்றற்றவர் தமது பூட்கையில் தெரிவித்தனர். அதற்காக இலங்கையின் நாலுபக்கங்களிலும் பகிரங்கக் கூட்டங்கள் கூட்டிப் பொதுமக்களின் சார்பாக நிறை வேடுகள் குடியேற்ற மந்திரியாரவர்களுக்கு அனுப்பினர்கள். அவற்றில் மகாராணியாரின் ஒப்பங்கொடுத்தலைத் தவிர்த்து படைச்செலவு சம்பந்தமான முறியை நிறைவேற்றுது செய்யுமாறு வேண்டினர்கள்.

இதற்குப் பதிலாகக் குடியேற்ற மந்திரியார் அனுப்பிய அரசுச் செய்தியில் உத்தியோக அங்கத்தவரைக் கொண்டு அலுவல்களை நடத்துமாறு ஆள்பதிக்கு அநுமதி கிடைத்தமையால் உத்தியோகப்

பற்றற்றவர் வெகுவாகப் புறக்கணிக்கப்படலாயினர். இதனால் முன்னர் 1848 ஆம் ஆண்டிலே குடியேற்ற மந்திரியாய் இருந்த கிறே பிரபு செய்த பெருந்தன்மையான காரியமும் இன்றைய குடியேற்ற மந்திரியார் செய்த வன்மையான காரியமும் சீர்தூக்கி மதிக்கப்பட்டன. முன்னர் 1848 இல் ஒரே ஒரு உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதி செய்த விண்ணப்பத்தின் விளைவாகச் சட்டசபையிலே பரிபாலனச் செலவு அநுமதிக்கப்படல் வேண்டும் என்ற வழக்கத்தைக் கிறே பிரபு வழங்கினார். ஆனால் இன்றோ சட்டசபையின் பிரதிநிதிகள் என்னும் கௌரவத்துக்குரிய அனைவரும் ஏகமனதாக விண்ணப்பித்தும், நாட்டின் பொதுமக்கள் சார்பாக நிறைவேற்றுகள் அனுப்பியும் அவற்றை எல்லாம் மதிக்காத மந்திரியாரின் மதிநுட்பத்தை என்னென்பது என்றனர். முந்திய மந்திரியாரும் இந்த மந்திரியாரும் சட்டசபையின் உரிமைகளை மதித்தார்கள் என்பது உண்மையேயாயினும், முந்தியவர் அதன் உரிமையைப் புறக்கணிக்காது நடந்தார். ஆனால் இவர் அதனை வெகுவாகப் புறக்கணித்து விட்டார்.

இங்ஙனம் அநுமானித்த உத்தியோகப் பற்றற்றவர் மேலும் தமக்கு ஏற்பட்ட குறையை எண்ணி, ''நாங்கள் செய்யவேண்டியவை யாவற்றையும் — தவறாமல் செய்துவிட்டோம். நாங்கள் எங்களுக்குரிய உரிமையை நீதியை வழங்குமாறு தானே விண்ணப்பித்தோம். அதுவும் அவர்கள் எங்களுக்கு முன்னர் வழங்குவதாக வாக்குப் பண்ணிய ஒன்றுதானே! நாங்கள் மகாராணியாரின் மதிப்புக்குரிய மந்திரிகளுக்கு எடுத்துக்காட்டியவை, எங்கள் தாய்நாட்டுக்குச் செய்த மனுக்கள், மகாராணியாருக்குச் சமர்ப்பித்த விளிப்புரைகள் என்றின்ன இவையாவும் வீணாகிப்போயினவே. நாங்கள் ஏமாற்றப்பட்டதோடு மாத்திரம் இருக்கவில்லை அநீதி இழைக்கப்பட்டும் இருக்கிறோம்.

இப்பொழுது நமக்குள்ள பிரச்சினை நாம் எமது உரிமையைப் பாதுகாப்பதே. அது சாத்தியமின்றேல் நாம் உரிமையற்றவர் என்பதே கருத்தாகும். நாம் இதனைப் பொறுத்திருந்தால் இவர்கள் எங்களை உரிமைக்கு யோக்கியம் இல்லாதவர் எனக் கருதுவது உண்மையாகிவிடும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது மூச்சுள்ள வரை ஒன்றுபட்டு எம்முழு ஆற்றலையும் இதில் ஈடுபடுத்தி எமக்கு முறையான ஒரு சட்டசபை அமைக்கும்வரை முன்னின்று கிளர்ச்சி செய்வோமாக. நாங்கள் இந்தச் சங்கத்துக்கு எங்களை அர்ப்பணித்து இதற்காக உறுதியுடன் பணிபுரிவோமாக'' எனத் திட சங்கற்பம் செய்வாராயினர். இந்த வேளையிலேதான் சேர் ஹெர்குலிஸ் ரொபின்சன் அவர்கள் ஆள்பதியாக நியமனம் பெற்று வந்தார்.

திருவாளர் லோறன்ஸ் அவர்களுடைய செயற்றிறனுலாய அரசியல் நிலைவேட்டில் உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகள் தொகை அதிகரித்தல் வேண்டும், வரவு செலவுத் திட்டத்தைச் சட்டசபையே தயாரித்தல் வேண்டும் என்பனவாதிய திருத்தங்கள் குறிப்பிடப்பட்டன. யோச்வால் இங்கிலாந்துக்குச் சென்று மந்திரிமார்களைக் கண்டு இலங்கையர் சார்பில் திருத்தங் கேட்டார். அவருடைய நிலைவேடு உடனடியாகப் பலன் செய்யவில்லையாயினும் அது பேரரசுவாதிகளைச் சிந்திக்கவைத்தது. குடியேற்ற மந்திரியார் இலங்கையர் சமர்ப்பித்த நிலைவேடுகளை முன்னர் காற்றிலே பறக்கவிட்டமை போல மேலும் செய்ய இயலாதவரானுர்.

லண்டனில் இருந்த வங்கிக்காரரும், பெரிய வர்த்தகரும் இலங்கையில் தோட்டப் பகுதிகள் அபிவிருத்தியடைவதையே பெரிதும் விரும்பினர்கள். ஆகவே அவர்கள் உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகளின் கோரிக்கைகளை மனப்பூர்வமாக ஆதரித்தனர். நல்லவேளையாக அந்த ஆண்டுகளில் தோட்டப் பகுதியில் நல்ல வருமானம் உண்டாயது. அதனுல் செல்வமதிகரிக்கவே பட்டாளத்துச் செலவையும் புகைவண்டிப்பாதை அமைக்கும் செலவையும் சரிசெய்யக் கூடியதாக நிலைமை ஏற்பட்டது. எனவே இலங்கையர் கோரியவையும் அவர்கள் செய்த கிளர்ச்சிகளும் ஓரளவுக்கு ஒய்ந்தன. என்ருலும் அக்கிளர்ச்சியின் பயனகவே கொழும்பு, கண்டி, காலி ஆகியநகரங்களுக்கு மாநகர சபைகள் 1865 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இது உள்ளூர் ஆட்சியில் ஒரு பெரிய முன்னேற்றம் எனப் பலரும் கருதினர். இது இவ்வாருக முன்னர் நியமிக்கப்பட்ட ஆணையாளர் சபையினர் இலங்கைப் படைகளின் செலவை £ 160 '00 ஆக மதிப்பிட்டு, அச்செலவு போக எஞ்சிய வருமானத்தைச் சட்டசபையினர் தமது தீர்மானத்தின் வண்ணம் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டுச் செலவு செய்யலாம் என அறிக்கை விடுத்தனர். அத்தோடு இலங்கைச் சட்டசபை அங்கத்தவர் வரவு செலவுத் திட்டத்தைப் பார்வையிடலாம் எனக் குடியேற்ற மந்திரியார் அநுமதியும் வழங்கினர். அக்கால நிலைமையில் இத்தகைய சலுகைகள் பெரிய வரமாகவே இருந்தது. ஆள்பதி ரெபின்சனுக்கும் அவருக்கு அந்தரங்க ஆலோசனை கூறிவந்த றிச்சாட் மோகன் என்ற இராணி அப்புக்காத்தருக்கும் நாட்டில் கெட்டபெயர் உண்டாயிற்று.

———

அத்தியாயம் 16

இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

சட்டசபையில் அமளிதுமளிகள் ஓரளவுக்கு ஓய்ந்த பின்னர் ஆள்பதி சேர் யோச் ரெபின்சன் அவர்கள் பொறுப்பேற்க வந்தார்கள். அவர் திறமை வாய்ந்த உத்தியோகத்தர் எனப் பெயர் பெற்றவர்; நல்ல அநுபவசாலி. அவரை ஆள்பதியாகப் பெற்ற இலங்கை பாராட்டப்பட வேண்டியது என ஓர் ஆங்கிலேயர் அக்காலத்தில் எழுதினர்.

ரெபின்சன் அவர்கள் 1865ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்து, 1872 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் பரிபாலனஞ் செய்தார், அக்காலத்தில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்கு முன் பவுண், சிலிங், பென்ஸ் என்ற ஆங்கில நாணகங்களே வழக்கில் இருந்தன. அவர் காலத்திலே தான் ரூபா சதம் வழக்கத்தில் வந்தன. பிற்காலத்தில் ஏழாம் எட்வேட் எனப் பிரித்தானிய பேரரசை ஆண்ட சக்கரவர்த்தி, விக்டோரியா மகாராணியின் மைந்தர். அவர் 1870 இல் வேல்ஸ் இளவரசராக இருந்த காலத்தில் இலங்கைக்கு வருகை புரிந்து சிறப்புச் செய்தார்.

ஆள்பதி ரெபின்சன் அவர்கள் அவுஸ்திரேலியாவக்கு மாற்றம் பெற்றுச் சென்ற பின் சேர் வில்லியம் கிரகரி என்பார் ஆள்பதியாக வந்தார். அவர் இலங்கையை ஆண்ட ஆள்பதிகளுள் திறமை மிக்க வருள் ஒருவர் எனப் போற்றப் படுபவர். அவர் இளமையிலே அதிக விவேகம் உள்ளவராய்ப் பாராளுமன்ற அங்கத்தவராயும் இருந்து அநுபவம் பெற்றவர். அவர் இளைஞராயிருந்த காலத்திலேயே அவருக்குப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தை முதன் மந்திரியார் வழங்கிய போதிலும் அவர் அதனை ஏற்க மறுத்து விட்டார் என்பது சரித்திரம்.

கிரகரி அவர்களுக்கு இலங்கையில் வசிப்பதற்கு விருப்பம் இருந்தமையால் அவர் நுவரெலியாவில் ஒரு பெரிய வீட்டை விலையாக வாங்கியிருந்தார். இலங்கையைச் சுற்றிப் பார்த்துத் தமக்குத் தேவையான தகவல்களை அறிந்து கொண்டார். அவர் காடுகளுக் கூடாகவும், மறைந்த பழைய தலைநகரங்களுக் கூடாகவும் பல முறை பிரயாணஞ் செய்து பரிபாலன அலுவல்களில் மாற்றங்கள் செய்வதற்குத் தேவையான முன்னறிவைப் பெற்றார்.

இதுகாறும் வடமாகாணப் பிரிவிலேயே அநுராதபுரமும் சேர்க்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து நெடுந்தூரத்துக்கப் பாலுள்ள அநுராதபுரத்தைப் பரிபாலிப்பது அரசாங்கத்துக்குச் சிரம

மாயிருந்தது. எனவே அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட வடமத்திய மாகாணத்தைப் பிரித்தார்கள். அங்கே பிரடரிக் டிக்சன் என்ற வெள்ளையரை அரசாங்க அதிபராக நியமித்து நீர்ப்பாசன வேலைகளைக் கவனிக்க வழிவகுத்துப் பல குளங்களைப் புனருத்தாரணஞ் செய்தார்கள். காலவேவா ஓர் உள்ளூர்க்கடல் போன்றதாய், முப்பத்தைந்து மைல் சுற்றளவுள்ளதாய், ஊர்மக்களுக்குப் போதிய நீரளிப்பதாய் இருந்தது. ஆள்பதி கிரகரி அவர்களின் முயற்சியால் காலவேவாவிலிருந்து உள்ளூர்களுக்கு வெட்டப்பட்ட பழைய வாய்க்கால்கள் பழுது பார்க்கப்பட்டன.

கிரகரி அவர்கள் மாகாண அதிபர்களை ஆண்டு தோறும் ஒருங்கே அழைத்து மகாநாடு நடத்தி அவர்கள் அவையிலே பொது மக்களுக்கு வேண்டிய அலுவல்களைப் பற்றியும் அவற்றின் செலவு விபரங்களைப் பற்றியும் பேசிவந்தார். குளங்களையும் வாய்க்கால்களையுந் திருத்தி விவசாயத்துக்கும் வழிவகுத்தமையோடு நில்லாது வீதிகளை அமைத்துப் போக்கு வரத்துத் துறையிலும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வித்தார். அவர் காலத்திலேயே கொழும்புத் துறைமுக அபிவிருத்தி வேலை கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

கிரகரி அவர்கள் காலத்திலேயே மின்னேரியாக் குளம் புதுப்பிக்கப்பட்டது. அதனால் கீழ்மாகாணத்திலே ஏராளமான நெல் வயல்கள் உண்டாயின. கிரகரி அவர்கள் ஆட்சிக்கால முடிவில் எல்லாமாக நாற்பதுக்கு மேற்பட்ட குளங்களும் 164 மதகுகளும் 30 லட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டன. நீர்ப்பாசன அலுவல்களைக் கண்காணிப்பதற்காக 1877 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது. இதன் கீழ்க் கிளைச்சங்கங்கள் தாபிக்கப்பட்டு மாகாணங்கள் தோறும் நீர்ப்பாசன அலுவல்கள் கவனிக்கப்பட்டன. இச்சங்கங்கள் நெல்வரி ஒன்றை விதித்து நீர்ப்பாசன உதவி செய்து வந்தன.

இலங்கையில் புராதன நாகரிகப் பெருமைக்குச் சான்று பகரும் சகல சாதனங்களையும் தன்னகத்தே கொண்டு நிலவும் கொழும்பு நூதனசாலை ஆள்பதி கிரகரி அவர்கள் முயற்சியாலேயே தாபிக்கப்பட்டது. அவருக்குக் கலையில் அதிக விருப்பம். அவருடைய மனைவியாரும் கலாவிற்பன்னர் என்றே கருதப்பட்டார். ஆனால் அவரது பிரிவால் வாட்டமுற்ற ஆள்பதிக்கு இலங்கையில் தனிமையில் இருக்க மனம் அமைதி பெறவில்லை. எனவே அவர் 1877 ஆம் ஆண்டில் இலங்கையை விட்டுத் தாய்நாட்டுக்கு மீண்டார். மீண்ட கிரகரி அவர்கள் இலங்கையைப் பலமுறை வந்து பார்த்துப் போனதாக அறியக்கிடக்கிறது.

ஆள்பதி கிரகரிக்குப் பின்னர் சேர் யேம்ஸ் லோங்டன் ஆள்பதியாய் வந்தார். அவர் குடியேற்ற நாடுகளில் பல ஆண்டு களாகச் சிறு உத்தியோகங்கள் வகித்துப் படிப்படியாக உயர்ச்சி பெற்று ஆள்பதியாக வந்தவர். அவர் காலத்திலேதான் கோப்பிச் செய்கை கைவிடப்பட்டது. அதனால் மனமுடைந்த வெள்ளைக்கார தோட்ட முதலாளிகள் 400 பேர் இலங்கையை விட்டுப் போனார்கள். போகாது இங்கே இருந்தவருள் பலர் கோப்பியைக் கைவிட்டுத் தேயிலை, சிங்கோனை முதலியவற்றைப் பயிராக்கினர்கள்.

வருமானம் வெகுவாகக் குறைந்த காலத்தில் பரிபாலனப் பொறுப்பேற்ற லோங்டன் ஆட்சியைக் கொண்டு நடத்தியமை பாராட்டுதற்குரியதென்று கருதுவாரும் உளர். ஆனால் ஒப்சேவர் பத்திராதிபர் பெர்குசன் அவர்கள் ஆள்பதியை வெகுவாகத் தாக்கியே எழுதிவந்தார். 'முற்றுக முற்போக்குக் குணம் இல்லாது' மூலையில் இருந்து அலுவலக வேலையைச் செய்த பழைய மனிதன்' என எழுதினர்.

லோங்டன் காலத்திலேதான் நாவலப்பிட்டியிலிருந்து நானு ஓயாவரை புகைவண்டிப்பாதை அமைக்கப்பட்டது. அதேபோல் கஞ்சத்துறை வரையும் நீடிக்கப்பட்டது. அதே காலத்தில் கோப்பித் தோட்டங்கள் தேயிலைத் தோட்டங்களாக மாறத் தலைப்பட்டன. ஆள்பதி லோங்டன் 1883 இல் இளைப்பாறித் தாயகம் மீண்டபின் சேர் ஆதர் கமில்ரன் கோடன் அவர்கள் ஆள்பதியாக இங்கே வந்தார்.

ஆள்பதி ஆதர் கோடனின் தகப்பனார் பிரித்தானிய முதன் மந்திரியாராய் இருந்தவர். அதனால் இவர் தம் தந்தையாருக்குக் காரியதரிசியாய் இருந்து அநுபவம் பெற்றதோடு, இவர் கேம்பிரிச் சர்வகலாசாலையில் கல்வி கற்றுச் சர்வகலாசாலையின் மாணவர் மன்றத்துத் தலைவராய் இருந்த பெருமையும் அநுபவமும் உள்ள வராய் இருந்தார். இவர் பாராளுமன்ற அங்கத்தவராயும் கடமை யாற்றி வெளிநாடுகளுக்குப் பிரதியாளராயும் சென்றிருந்தார். பின்னர் குடியேற்ற நாடுகளில் ஆள்பதியாய் இருந்து அனுபவம் பெற்ற பின் இலங்கைக்கு வந்தார்.

ஆதர் கோடன் வந்த காலத்தில் இலங்கையில் கோப்பிச் செய்கை முற்றுகக் கைவிடப்பட்டு வெள்ளையர் பெருந் தொகை யிவராய் வெளியேறிவிட்டனர். கோப்பிச் செல்வத்தை நம்பி இங்கே அமைக்கப்பட்ட வங்கியும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. வங்கி முற்றுக மூடப்பட்டதால் அதில் முதலீடு செய்து பத்திரம், நோட்டுகள் பெற்றிருந்தவர் கலகஞ் செய்தபோது ஆள்பதி கோடன்

நிலைமையை விளக்கி வங்கியின் பணம் 30 லட்சம் ரூபாவை அரசாங்கமே மாற்றிக்கொடுக்க நிலைமையைச் சீராக்கினர். இவ்வங்கி மூடப்பட்டமையால் காசுப் புழக்கத்துக்காக இலங்கை அரசாங்கம் 1–1–1885 தொடக்கம் ரூபாத் தாள்களை அச்சிட்டு வழங்கத் தொடங்கிற்று.

ஆள்பதி கோடன் அவர்கள் தேயிலைத் தோட்டங்களின் அபிவிருத்திக்குப் போதிய ஆதரவும் உதவியும் கொடுத்தார். அவர் தாமே நேரில் பல தோட்டங்களைச் சென்று பார்த்தும் ஆவன செய்தார். தோட்ட முதலாளிகள் அவர்தம் தொழிலாளருக்கு நல்ல சம்பளம் கொடுக்காத சமயங்களில் அவர்களை வெகுவாகக் கண்டித்து அவர்தம் பகைமையையும் தேடிக்கொண்டதும் உண்டு.

ஆதர் கோடன் அவர்கள் முன்னர் கேம்பிரிச் சர்வகலாசாலை மன்றத்திலும் பின்னர் பிரித்தானிய பாராளுமன்றத்திலும் வாதப் பிரதிவாதங்களில் பங்குபற்றி அநுபவம் பெற்றிருந்தாராகையால் இலங்கைச் சட்டசபையின் இகலாட்டுகளில் பொன் இராமநாதனுக்கு எதிர் நின்று பேசக் கூடியவராயிருந்தார். இராமநாதனின் காரசாரப் பேச்சிலும் சொல்லம்புப் போரிலும் ஆள்பதி அறநூல்களை அனுபவமும் பெற்றார். இராமநாதனுடன் எதிர்த்துப் பேசுவதை ஆள்பதிகள் பொதுவாகக் குறைத்துக்கொள்வது அக்கால வழக்கம். ஆனால் ஆதர் கோடன் அவர்கள் இராமநாதனுக்கு பேசுவதிலும், இராமநாதனின் பேச்சைக் கேட்பதிலும் இன்பங்கண்டார் என்று கூறின் மிகையாகாது. இராமநாதன் இங்கிலாந்துக்குப் போயிருந்த காலத்தில் ஆள்பதி அவர்கள், ''எங்கே அழகான தலைப்பாகையையும் உத்தரியத்தையும் ஒளி வீசும் வைரத்தையும் காணவில்லை'' என்று இராமநாதனின் ஆசனத்தைப் பார்த்துக் கேட்டாராம்.

ஆதர் கோடன் அவர்கள் ஆள்பதியாயிருந்த காலத்திலேயே பதுளையைத் தலைநகராகக் கொண்ட ஊவா மாகாணம் பிரிக்கப் பட்டது. அவர் காலத்திலேயே அதுகாறும் மேல்மாகாணத்தில் அடங்கியிருந்த இரத்தினபுரியைத் தலைநகராகக் கொண்ட சப்பிரகமுவா மாகாணமும் பிரிக்கப்பட்டது. இங்ஙனம் இலங்கை பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமையால் பரிபாலன எல்லைகள் குறைந்தமையால் பரிபாலன அலுவல்கள் இலகுவாக நல்ல முறையில் நடைபெற வசதியாயிற்று. இக்காலத்தில் வியாபாரம் வர்த்தகம் நன்கு விருத்தியடைவதாயின. நீதிபரிபாலனத்தின் பொருட்டுச் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அரசியற்

பரிபாலனத்தின் பொருட்டுத் திணைக்களங்கள் பல திறக்கப்பட லாயின. வைத்தியம், பொலிசு, தபால், நிலஅளவை, பகிரங்கவேலை, பதிவு என்பனவாதிய திணைக்களங்கள் அரும்பணி செய்தன.

ஆள்பதி ஆதர்கோடன் அவர்கள் ஆட்சிக்காலத்திலேதான் கண்டிச் சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியும், சோனகருக்கு ஒரு பிரதிநிதியுமாக இருவர் சட்டசபையில் நியமனம் பெற்றூர்கள். ஆதர் கோடன் தாராண்மைக் கொள்கையுள்ளவர் என்பது உண்மை தான். ஆனல் இலங்கையர் பிரதிநிதித்துவப் பொறுப்பாட்சிக்கு அரிய பாடுபட்டபோது அதனைக் கொடுக்கக் கூடாது என்று தடுத்து நின்றவரும் அவரேதான். அதற்கு அவர் கூறிய காரணமும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதே. ''பொறுப்பாட்சி கொடுக்க வேண்டும் எனக் கோருவோர் பிரித்தானிய பாராளுமன்ற முறையிலமைந்த ஆட்சியையே கேட்கின்றூர்கள். அங்கே உள்ள ஆட்சி சனநாயகத்தில் அமைந்த பெரும்பான்மைக் கட்சி ஆட்சி யாகும். அங்கே உள்ள குடிகள் ஒரே இனம் ஒரேமொழி ஒரே கலாச்சாரம் என்பன உள்ள மக்கட் கூட்டத்தவராவர். அங்கே பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என உள்ளவர் கட்சி அநுதாபத்தில் அமைந்திருப்பவர்களேயல்லாமல் வகுப்பு, இன, மத, மொழிப் பிரிவாலல்ல, எனவே அங்கே வேற்றுமை கிடையாது. ஆனல் இங்கே பெரும்பான்மை என்று எடுத்தால் ஓரினத்தையே கூறவேண்டிவரும். ஆதலால் அத்தகைய ஆட்சி இலங்கையருக்கு இன்றிருக்கும் நிலைமையில் சரிவராமாட்டாது' என எழுதினர்.

அவர் காலத்தில் நடைபெற்ற இன்னுமொரு சம்பவம் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் வரிசையிலே ஐரோப்பியர் பிரதி நிதியாயிருந்த T. N. கிறிஸ்ரி என்ற சிறந்த பேச்சாளர் இரண்டு பிரேரணைகளைக் கொண்டு வந்தமை. இந்தப் பிரேரணைகள் சட்ட சபையில் உள்ள உத்தியோக அங்கத்தவர் தம் விருப்பத்தின்படி பேசவும் வாக்களிக்கவும் உரிமை வழங்கப்படவேண்டும் என்றும்; அவர்களுடைய பிரதிநிதித்துவப் பங்கு சட்டசபையில் எத்தகையது என்பதை வரையறுத்தல் வேண்டும் என்றும் மாட்சிமை மிக்க மகாராணியாரைக் கேட்பதாகும் என்பதே. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் வாக்கெடுப்பின்போது உத்தியோக அங்கத்தவர் அத்தனைபேரும், உத்தியோகப் பற்றற்றவருள் நியமனம் பெற்றவருள் சிலரும் பிரேரணைக்குப் பாதகமாக வாக்களிக்க அது தோற்கடிக்கப்பட்டதேயாம்.

பொறுப்பாட்சி கொடுப்பதற்கு இலங்கை தகுதியில்லை என்று தடைசெய்த ஆள்பதி அவர்கள் இலங்கைச் சட்ட சபையின் தன்மை மிகவும் உன்னதமானது என்றும் அதன் அங்கத்தவர்கள் மெகு சாமர்த்தியம் வாய்ந்தவர் என்றும் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார்.

"இலங்கைச் சட்டசபையோடு நான் ஆறுண்டுக் காலம் கலந்து பழகியுள்ளேன். அதில் உள்ள இன மத மொழி வேறுபாடுகளால் பிரிக்கப்பட்ட பல பிரதிநிதிகள் பெருந்தன்மையாயும் சட்ட வொழுக்கத் தோடும் பங்கு பற்றிய முறையை நான் வேறெங்கும் கண்டதில்லை என்பதைப் புகழுக்காகவல்ல உண்மையாகவே கூறுகின்றேன். அவர்களுடன் கூட இருந்தமையால் நான் நல்ல அநுபவமும் பெற்றுள்ளேன் இது உண்மை"

ஆள்பதி இங்ஙனம் கூறியமை உண்மைதான். அவருக்கு உதவியாக ஓபிரைனும், றிச்சாட் மோகனும் இருந்தார்கள். ஆள்பதி அவர்கள் மாறிப்போன காலத்தில் நடைபெற்ற பிரிவுபசார வைபவத்திலே இலங்கைச் சாகியத்தாரின் பல பிரதிநிதிகளும் ஒரு முகமாக அன்னரின் சிறப்பியல்புகளை மெகுவாகப் பாராட்டி வழி அனுப்பினர்கள்.

ஆதர் கோடனுக்குப் பின் ஆள்பதியாய் வந்தவர் ஆதர் ஹவலொக் அவர்களாவர். ஹவலொக் அவர்கள் பட்டாளத்தில் பல நாடுகளில் கடமையாற்றி இளைப்பாறிய பின் ஆபிரிக்க பிரதேசங்களில் ஆள்பதியாயும் இருந்தவர். அவர் 1890 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இலங்கைக்கு ஆள்பதியாக வந்தார். அவர் வந்த காலத்தில் இலங்கையின் பொருளாதார வளம் செழிப்பாகவே இருந்தது. கோப்பிச் செய்கை கைவிடப்பட்டதும் தேயிலை, தென்னை, கறுவா, சொக்கோ ஆகிய பயிர்கள் பயனளித்தன. காரீயச் சுரங்கங்கள் தோண்டப்பட்டு அது நிலையான ஏற்றுமதிப் பொருளாயிற்று. புதிதாக ஆரம்பிக்கப் பட்ட தேயிலை 10 525380 இருத்தல் ஏற்றுமதி செய்யப்பட்டது

ஆதர் ஹவலொக் அவர்கள் காலத்தில் பல நன்மையான அலுவல்கள் நடைபெற்றன. முன்னர் மக்களின் வெறுப்புக்குக் காரணமாயிருந்த தானியவரி நீக்கப்பட்டது. அதனால் அவருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. ஆனால் அதன் நீக்கத்துக்காக யோச்வால் அவர்களும் கிண்தபர் எலியட் அவர்களும் கடுமையாக வேலை செய்தார்கள். ஐரோப்பியர் பிரதிநிதியாயிருந்த C. N. கிறிஸ்ரி அவர்கள் தானிய வரியின் நீக்கத்துக்காக ஒரு பிரேரணை பிரேரித்தும் பேசியுள்ளார் என்பதை நாம் மறந்து விடலாகாது.

தானியவரி தமிழ் நாட்டுக்குப் புதியதல்ல. தமிழ் மன்னர் காலத்தில் ஆறில் ஒன்று அரசனுக்குக் கொடுத்தே வந்தார்கள். ஆனால் ஆங்கிலேயர் பத்தில் ஒன்றே தமது ஆட்சியில் விதித்தார்கள். அது விதித்தபடியிருந்தபோதே குத்தகைக்காரர் போட்டியிட்டு அதனை அதிகரித்தார்கள். அதனால் அது பத்துக்கொன்று, கந்துக்கொன்று, களத்துக்கொன்று. சும்மா ஒன்று, சுமைகூலி ஒன்று என அதிகரித்த மையால் மக்கள் வெறுப்புக்கு இலக்காயிற்று.

ஆள்பதி ஹுவலொக் அவர்கள் காலத்தில் வீதிகள் புகைவண்டிப் பாதைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டன. அவர் காலத்திலேதான் கொழும்பிலுள்ள தொழிற்றுறைக் கல்லூரியும் பெரிய தபாற் கந்தோரும், கழனி நதிக்கு மேலாக விக்டோரியாப் பாலமும் அமைக்கப் பட்டன.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய காலந் தொடக்கம் கிறிஸ்தவ மிசனரிமார்களே கல்வி சம்பந்தமாக அதிக சேவை செய்து வந்தார்கள். அரசாங்கம் சொந்தப் பொறுப்பில் பாடசாலை களை அமைத்துச் சேவை செய்யத் தொடங்கிய பின்னரும் மிசனரி மாரின் பாடசாலைகளே அதிகமாக இருந்தன. உதாரணமாக 1868 ஆம் ஆண்டின் புள்ளி விபரத்தைக் குறிக்கின், அது பினவரு மாறு. அரசாங்க பாடசாலைகள் :-

பாடசாலையின் தரம்	தொகை	மாணவர்
ஆங்கிலப் பாடசாலை	18	2000
துவிபாஷா பாடசாலை	41	1950
சுதேச மொழிப் பாடசாலை	65	3624

கல்வி நிலையை ஆராய்வதற்கும் ஆலோசனைகள் தகவுரைகள் கூறுவதற்கும் 1865 ஆம் ஆண்டில் ஒரு நிர்வாகசபை நியமிக்கப் பட்டது. அதன் தலைவராக றிச்சாட் மோகன் அவர்கள் அமர்ந்து திருத்தங்கள் பல உண்டாவதற்கு வழி செய்தார். முன்னர் நியமிக்கப்பட்ட கல்வி விசாரணைச்சபை குலைக்கப்பட்டுக் கல்வித் திணைக்களம் திறக்கப்படலாயிற்று. அதில் ஆள்பதியின் கட்டுப் பாட்டில் ஒரு கல்வி அதிபர் நியமிக்கப்பட்டார். அதனால் மிகக் குறுகிய காலத்திலேயே 200 அரசாங்கப் பாடசாலைகளில் 11000 மாணவர் பயில வசதிகள் செய்யப்பட்டன. சமயக் கல்வியில் அது காறும் இருந்த தடைகள் நீக்கப்பட்டதும் 1872 ஆம் ஆண்டளவில் மிசனரிமார் பொறுப்பில் 400 பாடசாலைகள் நடாத்தப்படலாயின. அவற்றில் 25000 மாணவர் கல்வி பயின்றனர். அரசினர் பாடசாலைகள்

பெரும்பாலும் மலைநாடுகளிலும், மிசனரிமாரின் பாடசாலைகள் பெரும்பாலானவை கரை நாடுகளிலும் இருந்தன. ஆகவேதான் மிசனரிமாரின் பாடசாலைகள் பலவாக இருந்தன இத்தொகை யதிகரிப்பு 1890 ஆம் ஆண்டிலும் நிலவியது. அக்காலத்தில் அரசாங்கப் பாடசாலைகளின் தொகை 436 ஆக இருந்தபோது மிசனரிமாரிடம் 985 பாடசாலைகளிருந்தன அக்காலத்தில் 114000 பிள்ளைகள் பாட சாலையில் படித்தார்கள்.

அக்காலத்திலே இங்கிலாந்துக்குச் சென்று படிப்பதற்கும் வசதிகள் ஏற்பட்டன. கேம்பிரிச் சர்வகலாசாலைப் பரீட்சைகள் இலங்கையிலும் நடத்தப்பட்டு அவற்றில் திறமையுடன் சித்தி பெற்ற வருக்கு இங்கிலாந்தில் படித்துவர உபகாரநிதி அளிக்கப்பட்டது. இந்தியாவிலும் சென்னை, கற்கத்தா ஆகிய இடங்களில் சர்வகலா சாலை வசதிகள் ஏற்பட்டதால் இலங்கையர், சிறப்பாகத் தமிழர் அங்கே சென்று படித்து பாண்டித்தியமடைவாராயினர்.

முன்னர் 1857 ஆம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலையில் சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளையும் சுதுமலை கறல் விசுவநாதபிள்ளையும் பெருஞ் சிறப்புடன் B. A. பரீட்சையில் சித்தி யடைந்த காலத்தில் பரீட்சகராயிருந்த G. U. போப் என்ற கலா விற்பன்னர் இவர்களுடைய விடைப் பத்திரங்களில் ''இவர்கள் எங்கள் பரீட்சையின் அளவிற் பார்க்கக் கூடிய திறமையுள்ளவர்கள்'' என எழுதியமை யாழ்ப்பாணத்தாருக்கும் வட்டுக்கோட்டைக் கல்லூ ரிக்கும் புகழைக் கொடுத்தது.

தமிழ்க் கல்விக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சலியாதுழைத்த ஆறுமுகநாவலர் அவர்கள் தமது 26 ஆம் வயதில் அச்சுக்கூடம் வாங்குவதற்குச் சென்னை பட்டினஞ் சென்றார் என்றால் அவர் முயற்சியை என்னென்பது. அவரைப் பின்பற்றித் தாமோதரம் பிள்ளை அவர்கள் தமிழ் நூல்கள் ஏட்டுப் படிவத்தில் சிதைந்து போகாது அச்சிற் பதித்துத் தமிழ் நாடெங்கும் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கினர். அதனை வாய்ப்பாகக் கொண்டே இராசகோபால பிள்ளை, பவானந்தம்பிள்ளை, உ. வே. சுவாமிநாத ஐயர் முதலாய தென்னிந்திய அறிவாளிகள் நூல்களை ஆராய்ந்து அச்சேற்று வாராயினர்.

ஆறுமுகநாவலர் அவர்களை முன்னோடியாகக் கொண்டு வட இலங்கையில் சைவசமய விழிப்புணர்ச்சி உண்டாகிப் பரந்தமை போலவே தென்னிலங்கையினிம் பாணந்துறை நகரிலே பௌத்த

சமயாபிவிருத்திக்கான ஒரு நிகழ்ச்சி நடைபெறலாயிற்று. அங்கே வணக்கத்துக்குரிய ஸ்ரீ மகத்துவத்த ஞானனந்த தேரோ அவர்கள் எழுதிய கட்டுரையொன்று ரைம்ஸ் பத்திரிகையில் வெளியாயிற்று. அக்கட்டுரை கேணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் என்ற அமெரிக்கப் பெரியாரின் கவனத்துக்கும் எட்டிற்று. இலங்கையிலிதுகாறும் இல்லாத விழிப்புணர்ச்சி பௌத்தர்களிடையே ஏற்பட்டது.

பௌத்தர்களிடையே ஏற்பட்ட விழிப்பினால் பல பாடசாலைகள் உடனடியாக உண்டாக்கப்பட்டன. ஆனந்தாக் கல்லூரியின் பின் 1890 ஆம் ஆண்டளவில் ஐம்பதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் அவர்களால் நடாத்தப்பட்டன. அவற்றை உருவாக்குவதற்கு நடுவகுப்பார் தம்மாலான உதவிகளைச் செய்தார்கள். அவர்கள் உதவியால் பாடசாலைகள் கல்லூரிகளேயன்றிப் பௌத்த கலாபீடங்களான பிரிவேனைக்களும் உண்டாக்கப்பட்டன. வணக்கத்துக்குரிய ஸ்ரீ சுமங்கல தேரோ அவர்களின் தலைமையில் வித்தியோதய பிரிவேனை 1873 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அங்ஙனமே வணக்கத்துக்குரிய ஸ்ரீ தர்மாலோக தேரோ தலைமையில் வித்தியாலங்கார பிரிவேனை 1876 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

முன் சொன்ன அமெரிக்கப் பெரியாரான, ஒல்கொட் அவர்கள் சிறந்த போர் வீரனுயிருந்து அமெரிக்க குடிப்போரில், கடமையாற்றிச் சிறந்த வீரருக்குரிய விருதுகள் பெற்று இராணுவத்திலிருந்து ஓய்வெடுத்துச் சமூக சேவைகள் செய்து வந்த காலத்தில் பிளவஸ்கி அம்மையாரின் தொடர்பால் தத்துவ ஞான சங்கத்தைக் கண்டு அதன் தலைவராயமர்ந்து நீகுறேவர் முதலாய உரிமையற்றேருக்குத் தொண்டு செய்வதில் தீவிரமாக ஈடுபடுவாராயினர்.

தேரோவின் கட்டுரையைக் கருத்தூன்றிப் படித்த ஒல்கொட் புத்த சமயத்தவரின் நலிவைத் துடைப்பதற்காக இலங்கைக்குப் புறப் பட்டார். அவர் 15-5-1880 இல் காலியில் இறங்கிப் புத்த சமய வளர்ச்சிக்காகத் தீவிரமாக உழைப்பாராயினர். இலங்கைப் பௌத்த ஞானசங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் மூன்றுண்டுகளில் 200 பாடசாலைகள் தொடங்கப்பட்டன. அவற்றேடு மூன்று கல்லூரிகளும் ஆரம்பிக்கப்படவே 20,000 பௌத்தமதப் பிள்ளைகளின் கண்கள் திறக்கப்பட்டன. அத்தோடு பௌத்தமதப் பிரசார சபையும் இயங்கத் தொடங்கவே அவர்கள் பௌத்தமதக் கொடிக்கு அஞ்சலி செய்யத் தொடங்கினர்கள். அதன் பின் வெசாக் திருநாளை விடு முறையாகக் கணிக்குமாறு ஆள்பதி ஆதர் கோடன் அவர்களையும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆறுமுகநாவலர் அவர்களைப் பின் தொடர்ந்து கோப்பாய்ச் சபாபதி நாவலர், காசி வாசி செந்திநாதையர், வித்துவ சிகோமணி பொன்னம்பல பிள்ளை, அம்பலவாண நாவலர், சதாவதானம் கதிரவேற்பிள்ளை முதலாய பேரறிஞர் வட இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தொண்டு செய்தமையைப் போலத் தென்னிலங்கையிலும் அனகாரிக தர்மபால, வாலிசிங்க கரிச்சந்திர, பியதாச ஸ்ரீ சேன முதலாய பெரியார்கள் தொண்டு செய்வாராயினர். இப்பால் சைவ சமயமும் அப்பால் பௌத்த மதமும் மறுமலர்ச்சிப் பாதையில் தவழ்ந்து நடை பயில்வனவாயின.

சிங்களவரின் வரலாற்றைக் கூறும் மகா வமிசம் 1877 ஆம் ஆண்டிலே சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அங்ஙனமே ஸ்ரீ சுமங்கல பண்டித பத்துவன்தொட, முதலியார் விக்கிரமசிங்க முதலாய விற்பத்திமான்கள் முயற்சியால் 1879 ஆம் ஆண்டில் சூளுவ வமிசமும் மொழிபெயர்க்கப்படலாயிற்று.

இங்ஙனம் கல்விப் பகுதியில் விழிப்பேற்பட்டமை காரணமாக வைத்தியம், சட்டம் முதலிய துறைகள் மேலோங்கின. நியாயவாதிகளுக்குரிய பயிற்சியும் நியாய துரந்தரக்குரிய பயிற்சியும் 1873 ஆம் ஆண்டிலும் 1889 ஆம் ஆண்டிலும் இலங்கையில் பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டன. இதற்கு முன் தனிப்பட்ட பெரியார்களிடமே அத் துறைகளிற் பயிற்சி பெறும் வசதி நிலவிற்று. சேர் இராமநாதன் அவர்கள் 1872 ஆம் ஆண்டில் தமது இளமைப் பராயத்தில் றிச்சாட் மோகன் என்ற விற்பத்திமானிடம் பயிற்சி பெற்றார்.

நாவலர் அவர்களின் உறுதியான உழைப்பின் பயனாக வண்ணார்பண்ணையில் சைவப் பெரியார்கள் ஒன்று சேர்ந்து சைவ பரிபாலன சபை எனப்படும் தாபனத்தை 1888 ஆம் ஆண்டில் நிறுவினர்கள் அவர்களுடைய முயற்சியின் பயனாக அச்சுக்கூடந் தாபிக்கப்பட்டு இந்துசாதனம் என்னும் பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்படலாயிற்று. இச் சபையாரின் பரிபாலனத்தில் சைவாங்கில பாடசாலையொன்று நிறுவப்பட்டது. அது இன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியாகப் பரிணமித்து இலங்கையிலுள்ள உயர்தரக் கல்லூரிகளிலொன்றாக நிலவுகின்றது.

அங்ஙனமே பௌத்த பரிபாலன சபையாரும் தாமே தம் முடைய சமயத் தலைவரைத் தெரிந்துகொள்ளும் நல்வாய்ப்பைப் பெற்றார்கள். முன்கூறிய அமெரிக்க வாசியாகிய ஒல்கொற் என்ற பெரியாரின் முயற்சியால் பௌத்த சமயம் உன்னத நிலையடைந்த காலத்திலேதான் 1886 ஆம் ஆண்டில் ஆனந்தக் கல்லூரி என்ற பௌத்த ஆங்கில கலாசாலை நிறுவப்பட்டது.

இலங்கையின் மேற்குக் கரையில் சாதாரண நகரமாய் இருந்த கொழும்பு கோப்பிச் செய்கை அதிகமானதும், அது பிரதான ஏற்று மதிப் பொருளானதும் பிரபலிக்கமுறுவதாயிற்று. ஆரம்ப வருடங்களில் 30000 அந்தர் கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்ட துறைமுகத்தில் நாற்பது வருட காலத்துள் 10,00000 அந்தர் கோப்பி ஏற்றுமதியாவதாயின் அத்துறைமுகத்தில் எத்தனை கப்பல்கள் வந்து போயிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

சட்டசபை, சேமிப்பு வங்கி, ஆங்கில பாடசாலைகள், இலங்கை வங்கி, நீதிமன்றம், விண்ணப்ப மன்றம் என்பனவும் அங்கே நிறுவப் பட்டமையால் கொழும்பு பிரதான நகரமாகத் தலைதூக்குவதாயிற்று. பின்னர் 1850 ஆம் ஆண்டளவில் ஆள்பதி ஹென்றி வாட் அவர்கள் காலமுதலாக இலங்கையின் ஏனைய பகுதிகள் கொழும்பு நகரத்தோடு பெரிய வீதிகளாற் ரெடுக்கப்பட்டதோடு கொழும்பு மிக்வும் பிரபலிக்கமுறுவதாயிற்று. அவற்றைத் தொடர்ந்து புகை வண்டிப்பாதைகள் அமைக்கப்பட்டமையும் கொழும்பின் சிறப்பை அதிகரித்துவிட்டது.

பின்னர் 1871 இல் கொழும்புத் துறைமுகந் திருத்தப்பட்டதும், கொழும்பு நகரில் வர்த்தக நிலையங்கள் தாபிக்கப்பட்டதும், பல தீவுக் களங்களின் அலுவலகங்கள் நிறுவப்பட்டதும், உத்தியோகத்தர் உறை விடங்களாக மாடிவீடுகள் அமைக்கப்பட்டதும், பொழுதுபோக் கிடங்கள், பூங்காக்கள், வைத்தியசாலைகள் தாபிக்கப்பட்டதும்கொழும் பின் வளர்ச்சிக்குக்க ாரணமாயின. அவற்றை அடுத்து 5-8-1872 இல் கொழும்பு வீதிகளில் ''காஸ் லையிட்டால்'' வெளிச்சம் ஏற்றப்பட்டது கிறிஸ்தவ மிசனரிமார் பெரிய பாடசாலைகளைக் கட்டிப் படிப்பு வசதி களைச் செய்தார்கள். பொதுமக்களுக்குக் கொழும்பு உறைவிடத் துக்கு இன்றியமையாது அமைந்துவிட்டது. இலங்கையின் முதலா வது முறையான குடிமதிப்பு எண்ணிக்கை செய்யப்பட்டபோது 1871 ஆம் ஆண்டில் கொழும்பில் 95000 மக்கள் வசித்தார்கள் எனக் கணக்கிட்டார்கள். அக்காலத்தில் கொழும்பில் பல தேசத்தவரும் யாவரும் கேளிர் என உறைந்தனர். கொழும்பு ஒரு ''கொஸ்மோ பொலிரன் ரவுண்'' எனப்படும் உலகக்குடி நகரமாயிற்று.

பின்னர் 1874 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுக வேலை ஆரம்பமானதும், தேயிலைத் தோட்டங்கள் உண்டானதும், காரீயச் சுரங்கங்கள் தோண்டப்பட்டதும், டெலிபோன் தொடர்புகள் அமைக் கப்பட்டதும், மேலதிக புகை வண்டிப்பாதைகள் தொடுக்கப்பட்டதும், லபுகம நீர்த்தேக்க வசதி செய்யப்பட்டதும் கொழும்பு முதற்ற

மான நகரமாயிற்று. பின்னர் பொலிசுப் பகுதி, வர்த்தக விசாவிப்பு, மின்சார வெளிச்ச வசதி என்பன அமைந்ததும் கொழும்பு நகரம் மெதுவாக விசாலிக்கத் தொடங்கிற்று. திரும் வண்டிச் சேவை உபயோகத்துக்கு வந்ததும் அயலிடங்கள் நகரத்தோடு வெகுவாக இணைக்கப்படலாயின.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் முன்னேற்றத்துக்கான பல அம்சங்கள் உண்டாக்கப்பட்டன. உள் நாட்டுப் புறங்கள் நகரத்தோடு பலவித தொடர்புகளால் இணைக்கப்பட்டன. நகரப் பகுதிகள் வெகுவாகத் திருத்தப்பட்டன. குடியிருப்பு வசதிகள் நல்ல முறையில் செய்யப்பட்டன. பேரு லேக் எனப்படும் நீர் நிலை ஒடுக்கப்பட்டு அதனுல் நிரப்பப்பட்ட நிலத்தில் கோட்டைப் புகையிரத நிலையக் கட்டடங்கள் ஆதியன கட்டப்பட்டன. மக்கலம் வீதி நல்ல முறையில் அமைக்கப்பட்டது.

நாளடைவில் சுகாதார விதிகள் நடைமுறைக்கு வந்தமையாலும், சுகாதார வசதிகள் ஏற்பட்டமையாலும், சாக்கடை வடிகால் முறைகள் செய்யப்பட்டமையாலும் கொழும்பு நகரசபையின் பொறுப்புக்கள் அதிகரித்தன. முன்னர் 6463 ஏக்கர் நிலத்தில்பரிபாலனஞ்செய்த சபை இப்போது சில ஆண்டுகளில் 8587 ஏக்கர் நிலத்தைப் பரிபாலிக்க வேண்டியதாயிற்று. இன்னும் 171000 மக்களின் தேவைகளைக் கவனித்த சபை இப்போது 284155 மக்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டியதாயிற்று. இவற்றேடு இன்றுள்ள சகல வசதிகளையும் நாளடைவில் பெற்ற கொழும்பு கிழக்கு நாடுகளில் மிகவும் சுத்தமான நகரமாய் உள்ளது என வெளிநாட்டார் விதந்து கூறும் வண்ணம் விளங்குவதாயிற்று.

இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் பொதுவாக இலங்கையின் முகம் மாறியமைக்கும் முக்கிய காரணம் கோப்பிச் செய்கையேயன்றிச் சட்டசபையோ சட்டவாக்கங்களோ கட்டளைச் சட்டங்களோவல்ல எனவும் கருதுவர். கோப்பிப் பயிரினுலேயே அரசாங்கமாயினும், தோட்ட முதலாளிகளாயினும் பொதுமக்களாயினும் தங்கள் போக்கை மாற்றியமைக்கவேண்டியவராயினர். கோப்பிப் பயிரால் ஏற்பட்ட செல்வப் பெருக்கத்தையும் செந்தழிப்பையும் அக்காலத்தவர் உவமையில்லா வளப்பம் எனவே கூறினர். உண்மையில் மேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் இருந்தவருக்குக் கோப்பிப் பயிர் செல்வங் கொழித்த சிங்காரப் பயிராகவே நிலவியது.

ஆரம்ப ஆண்டுகளில் 1836 தொடக்கம் 1840 ஆம் ஆண்டு வரையில் ஆண்டுதோறும் 50000 அந்தர் கோப்பி ஏற்றுமதியாயிற்று. அத்தொகை படிப்படியாகப் பெருகி 1875 ஆம் ஆண்டளவில் 856570 அந்தராகிற்று. இலங்கைச் சரித்திரத்தில் 1830 தொடக்கம் 1880 வரையுள்ள ஐம்பதாண்டு காலம் கோப்பி இராசாவின் ஆட்சிக்காலம் என்பர். அதன்பின் தேயிலை இராசாவின் ஆட்சிக்காலம் ஆரம்பித்தது,

அத்தியாயம் 17

நடுவகுப்பார் செய்த கிளர்ச்சி

இலங்கையர் சார்பில், அரசியற்றிருத்தங்கோரிய இலங்கை வாழ் ஐரோப்பியர், பறங்கியர் ஆகிய பெரியார்கள் **இலங்கைக் கூட்டணை** என்ற சங்கத்தை நிறுவி அதன்மூலம் கிளர்ச்சி செய்வாராயினர். ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த வில்லியம் டிக்பி என்பார் 1877 ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது நூலில் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைத்து நடத்துவதற்கு ஏற்ற பழுத்த அநுபவம் வாய்ந்த புராதனப் பெருமை உள்ள ஒரு நாடு என்று இலங்கையைப் பற்றி எழுதிக் குறிப்பிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையர் ஓரளவுக்கு ஆங்கிலம் பயின்று மேற்கு நாடுகளின் முறைகளை அறிந்து கொள்வாராயினர் முன்னர் கோல்புறூக் திருத்தத்தின் பிரகாரம் ஆங்கிலமே இலங்கை அரசகரும மொழி எனத் தீர்மானிக்கப்பட்டது; எனவே இலங்கையர் தீவிரமாக ஆங்கிலம் பயிலத் தலைப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக மிசனரிமார் தம் பாடசாலைகளை நிறுவினர்கள்

இலங்கையர் ஆங்கிலக் கல்வி பயின்று அரசாங்கத்தில் மதிப்புக்குரிய மேல் உத்தியோகங்களில் அமர்வாராயினர். அவர்கள் கல்வித் தகுதியினாலே நடுவகுப்பார் என ஒரு பகுதியாக முன்னேறினர்கள் அவர்கள் ஆங்கிலக் கல்வி மூலம் தாராண்மை நெறிகளையும் கருத்துக்களையும், சனநாயக முறைகளையும் தன்மைகளையும், விரிந்த மனப்பான்மை முன்னேற்ற இயக்கம் என்பவற்றைப்பற்றி நன்கறிந்தார்கள்

இன்னும் இங்கிலாந்து, பிரான்ஸ் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் எழுந்த புரட்சிகரமான இயக்கங்களையும், நவமான அரசியற் தத்துவக் கொள்கைகளையும் அறிந்தார்கள் இலங்கையில் சட்டசபை நிறுவப்பட்டுப் பல்லாண்டுகளுக்குப் பின்னர் சட்டசபையைப் பெற்ற இந்தியர் குறுகிய காலவரையறைக்குள் நல்ல முறையில் முன்னேறிப் பூரண சுதந்திர தாகந் தீர்த்துக் கொள்வதற்காக இந்திய காங்கிரஸ் தாபனத்தை 1885 ஆம் ஆண்டில் நிறுவிக் கிளர்ச்சி செய்வதை அறிந்து உணர்ச்சி வசப்பட்டு அவர்களைப் போலத் தாமும் முன்னேற வேணவாக் கொண்டார்கள்.

நடுத்தர வகுப்பார் போதிய கல்வியறிவுடையவராய் இலங்கை அரசியல் அலுவல்களைக் கையேற்று நடத்த ஆயத்தமாய் இருக்கும் போது அவர்களுக்கு ஏன் உரிய முறையில் சந்தர்ப்பத்தை அளிக்க

லாகாது எனப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்தன. நடுவகுப்பாரால் ஆரம்பிக்கபட்டு நடுவகுப்பாரால் ஆதரிக்கப்பட்டு அவர்களால் வழி நடத்தப்பட்டு வந்த இயக்கம் தேசிய இயக்கமாகவே நிலவியது. அவர்கள் தேசிய சுதந்திரத்துக்காகவே பணி செய்தனர்.

நடுவகுப்பார் அரசியற் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்த காலத்துக்கு முன்பின்னாக இங்கிலாந்தில் இருந்த அரசியலமைப்பு முறையையும் அந்நாட்டவர் அதிலே சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தமையையும் பற்றிச் சுருக்கமாகவாயினும் இங்கே அறிந்து கொள்ளல் இன்றியமையாததாகும். பாராளுமன்றத்தின் தாயகம் என்பதாலும், இலங்கையை ஆண்ட நாடாதலாலும் இங்கிலாந்ததப்பற்றி நாம் அறிதல் வேண்டும்.

நெப்போலியன் காலத்தின் முன்பின்னாக நாடெங்கும் மாற்றங்கள் ஏற்படலாயின. பிரபுக்கள், குருமார், பொதுமக்கள் என்ற அமைப்பு நீக்கப்பட்டுச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிலவவே புரட்சிகள் தோன்றின. புரட்சிவாதிகளின் கொள்கைகள் இங்கிலாந்தில் வெகு மந்தமாகவே பரவின. கர்ப்பூரம், நிலக்கரி, ஈரவிறகு என்னும் எரிபொருள்களில் நெருப்புப் பற்றுவதற்கு ஒரு நேரப் பாகுபாடுண்டு. அதைப்போலவே அதிதீவிரம், தீவிரம் மந்தம் என்ற கதியில் புரட்சிக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நாடுகளும் உண்டு.

இங்கிலாந்து மந்தகதியிலேயே போய்க்கொண்டிருந்தது. பழைமை வேண்டுவோரின் செல்வாக்கதிகமாயிருந்த காலம் அது. உயர் குடிப்பிறப்பினராட்சியில் பிரபுக்களும் விழுமியோரும் உட்குழுவில் அங்கம் வகித்த காலமும் அது. பிரபுக்கள் சபையிலும் நிலக்கிழார்கள் மாத்திரமே அங்கத்துவம் பெற்றிருந்தனர். பொதுமக்கள் சபையில் 1815 ஆம் ஆண்டினமைப்பில் 658 அங்கத்தவர் இருந்தனர். இவர்களுள் 489 பேர் இங்கிலாந்துக்கும், 100 பேர் அயர்லாந்துக்கும், 45 பேர் ஸ்கொத்லாந்துக்கும், 24 பேர் வேல்ஸ் சுக்கும் பிரதிநிதிகளாயிருந்தனர்.

அக்காலத்தில் மாநிலத் தொகுதிகள், புரத் தொகுதிகள், பல்கலைக் கழகத் தொகுதிகள் என முப்பெரும் தொகுதிப் பிரிவுகள் இருந்தன. தொகுதிகள் மிகவும் பெரியனவாயும் மிகவும் சிறியனவாயும் இருந்தபோதிலும் பிரதிநிதித்துவம் ஒரே அளவினதாய் இருந்தது. தொகுதிகள்தோறும் குடிசனத் தொகை வெவ்வேறளவினதாயிருந்தபோதிலும் அது கவனிக்கப்படவில்லை. இங்கிலாந்திலுள்ள கோன்வால் என்ற பிரிவிலிருந்து 44 பிரதிநிதிகளும், அதைப்போல

எட்டு மடங்கு குடிசனமுள்ள ஸ்கொத்தலாந்திலிருந்து 45 பிரதிநிதி களும் தெரியப்பட்டனர் என்பது பெரிய குறையாகவே இருந்தது. சில தொகுதிகளில் பல்லாயிரக்கணக்கான வாக்காளரும், சில தொகுதி களில் பத்துப் பன்னிரண்டு வாக்காளர்களும் இருந்தனர். எல்லா மாக 186 பிரதிநிதிகளைக்கொண்ட மாநிலத் தொகுதிகள் இவ்வாறு கப் புரத் தொகுதிகளின் நிலை வேறுயிருந்தது.

புரத் தொகுதிகள் பலவகைப்பட்டனவாய் பல நிலைகளில் இருந்தன. அவை எல்லாமாக 467 பிரதிநிதிகளைக் கொண்டவை. அங்கேயும் பிரபுக்கள் நிலக்கிழார்கள் செல்வாக்கு நிலவிற்று. நியமனப்புரங்கள், பாழ் நிலைப்புரங்கள், கைவசப் புரங்கள் என்பன வாதிய புரத்தொகுதிகளில் பிரபுக்களின் திருவிளையாடல்கள் அதிக மாகவே இருந்தன. அவர்கள் தம்மவரையும் தமக்குப் பந்தம் பிடிப்பவரையும் அங்கே நியமித்திருப்பதாக அறிவித்தாற்போதும். "பொதுமக்கள் எங்கை உமக்கல்லாதெப்பணியுஞ் செய்யற்க, உமக்கே ஆட்பட்டோம்" எனக் கூறி அவர்களுக்கே வாக்களித்தல் வேண்டும். கைக்கூலியும் பலாத்காரமும் அச்சுறுத்தலும் தேர்தல் வைபவங்களில் சகசமாயிருந்தன.

பிரதிநிதித்துவ முறையில் இருந்த அலங்கோலங்கள் இன்னும் பல. குடிசனம் இல்லாத வெறும் நிலங்களும் பாழ்புரங்களும் பிரதி நிதிகளையுடையனவாயிருப்பக் குடிசனம் நிறைந்த மன்செஸ்டர், பர்மிங்காம், லீட்ஸ், செவீல்ட் போன்ற கைத்தொழில் நகரங்கள் பிரதிநிதித்துவமில்லாமலே இருந்தன.

இங்கிலாந்தில் அரசியற் சீர்திருத்தங் கோரிய ஏழைகளுக்கு ஏழைத் தொழிலாளியின் மைந்தனைய வில்லியம் கொபற் என்ற பெரி யார் தலைவராயும் முதல்வராயும் இருந்தார் அவர் சில காலம் அரசியல் பொருந்த ஏடு என்ற பத்திரிகையைப் பிரசுரித்து இரண்டு பெனிக்கு அதை ஏழைகளும் வாங்கிப் படிக்க வசதி செய்தார். அவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஏழைகளுக்கு அரசியலறிவூட்டி அவர்களைச் சிந்திக்க வைத்தார். அவர் ஏழைகளிடம் "உங்களுக்குச் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு முன் வாக்குரிமையே பிரதானமாக வேண்டப்படுவது. பாராளுமன்றத் திருத்தமே முதலில் செய்யப்பட வேண்டியது. தொழிலாளர் விவசாயிகள் பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதித்துவப் பலத்தைப் பெற்றுக் கொண்டால் பிற திருத்தங்கள் தாமாகவே வந்து சம்பவிக்கும்" எனக் கூறினர்.

ஆனால் பழைமை பேண்வாதிகளின் உழுத்துப்போன அரசாங்கம் சீர்திருத்தங்களுக்கு இடங்கொடாதிருந்ததோடு, அயல் நாடாய பிரான்சில் மறுபடியும் ஏற்பட்ட கொந்தழிப்பைச் சாட்டாகக் கொண்டு இங்கிலாந்திலே அடக்கு முறைகளே மேற்கொண்டது. பிணை எடுக்க இயலாதவாறு சட்டத்தை அமைத்து காக் சட்டங்களைப் பிறப்பித்துப் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் கூட்டச் சுதந்திரம் என்பனவாதியவற்றைத் தடை செய்தது. ஐயாண்டுகளாக மிகவும் குரூரமான அடக்குமுறை ஆட்சியை அரசாங்கம் நிலை நிறுத்தியது.

பின்னர் 1820 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் கனிங், பீல், கஸ்கிசன் போன்ற பரந்த நோக்கமுள்ள இளைஞர்கள் அங்கத்தவராயினர். அவர்கள் சுயாதீனப் போக்கும், பொருளாதார சுதந்திரமும், வர்த்தகத் தடை நீக்கமும் நிலவ முயற்சி செய்தனர். பீல் அவர்கள் முயற்சியால் பல திருத்தங்கள் ஏற்பட்டன. முன்னர் நிலவிய வசதிக் குறைவுகள் நீக்கப்பட்டன. ஆனால் அரசியல் சம்பந்தமாகப் பாராளுன்ற சீர்திருத்தத்தைச் செய்யப் பழைமை தழுவுவோர் தீவிரமாக எதிர்த்தனர்.

ஆனால் 1830 ஆம் ஆண்டுத் தேர்தலில் இதுகாறும் 46 ஆண்டுகளுக்கு மேலாக அதிகாரத்தில் இருந்த பழைமை தழுவுவோர் முறியடிக்கப்படவே தாராண்மையாளர் அதிகாரத்திற்கு வந்தார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பாராளுமன்றத் திருத்தங்கோரியகிறே பிரபு பிரதம மந்திரியானார் அவருடைய மந்திரத்திலே டேகம், றசல், புரூகம், பாமேஸ்ரன், ஸ்ராலி, மெல்போ முதலாய தாராண்மையாளர் இருந்தார்கள். எனவே 1–3 1831 இல் மந்திரி றசல் அவர்கள் பாராளுமன்றத்திலே ஒரு சீர்திருத்த மசோதாவைப் பிரேரித்தார். அப்பிரேரணை பாராளுமன்ற அங்கத்தவரை வெகுவாக ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. அதில் குறிப்பிட்ட திருத்தங்களை அவர்கள் அன்று முதல் 5–6–1832 வரையுள்ள 15 மாத காலமாக விவாதித்தார்கள். றசல் அவர்கள் பரந்த அமைப்பில் பிரதிநிதித்துவம் வழங்கும் அத்திருப்பத்தைப் பற்றிப் பேசும் போது பிரதிநிதித்துவமில்லாமல் வரி விதித்தலாகாது என்ற கொள்கையினடிப்படையில் காரசாரமாகப் பேசினர். ஆனால் எதிர்க்கட்சியினர் அம்மசோதாவில் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றியதால் பாராளுமன்றம் குலைக்கப்படவேண்டியதாயிற்று.

சீர்திருத்த மசோதாவின் அடிப்படையிலேயே புதிய தேர்தல் நடைபெற்றது. அதிலே சீர்திருத்தவாதிகளுக்கு எண்ணிக்கைப் பலம் வாய்ந்த அதிகாரம் கிடைப்பதாயிற்று. எனவே றசல்

அவர்கள் 24-6-1831 இல் புதிய பாராளுமன்றத்தில் நமது இரண்டாவது சீர்திருத்த மசோதாவை 22-9-1831 இல் 106 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றினர். ஆனால் அம்மசோதா பிரபுக்கள் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது 8-10-1831 இல் வீழ்த்தப்பட்டது. அதனால் நாட்டில் பெரிய கலவரம் உண்டாகும் எல்லையில் நெருக்கடி உண்டாயிற்று.

தரிப்பிடப்பட்ட பாராளுமன்றம் 6-12-1831 இல் மறுவைகலில் கூடியதும், றசல் அவர்கள் தமது மூன்றாவது சீர்திருத்த மசோதாவைப் பிரேரித்து 116 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றினர். ஆனால் பிரபுக்கள் சபையினர் அதனை மீளவும் வீழ்த்திவிட்டனர். இந்த நேரத்தில் வேறொன்றும் செய்ய இயலாமல் பிரபுக்கள் சபையில் மசோதாவுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய அளவுக்கு மேலதிக பிரபுக்களை மன்னர் நியமித்தல் வேண்டும் என மந்திரிகள் கருதியபோது மன்னர் அதற்கு உடன்படவில்லை. எனவே பிரதமர் கிறே பிரபு அரசாங்கத்தை விலகல் செய்தார். அதனால் மன்னர் எதிர்க்கட்சித் தலைவரான வெலிங்ரன் பிரபுவை அரசாங்கத்தை அமைக்குமாறு அழைத்தார். வெலிங்ரன்பிரபுவால் அது இயலாது போகவே மன்னர் மறுபடியும் கிறே பிரபுவை அழைத்து வேண்டிய அளவுக்குப் பிரபுக்களை நியமித்துத்தரலாம் என வாக்களித்தார்.

கிறே பிரபு மறுபடியும் அரசாங்கத்தை அமைத்து அலுவலை நடத்த முயன்றபோது பிரபுக்கள் சபையினர் தம் பிடியிலிருந்து இறங்கினர். அவர்களுள் நூற்றுவருக்கு அதிகமானோர் கூட்டத்தில் கலவாமையினால் சீர் திருத்த மசோதா வெற்றிகரமாகப் பிரபுக்கள் சபையிலும் 4-6-1832 இல் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாயிற்று.

இத்திருத்தத்தால் பாராளுமன்றம் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்டதாய் ஓரளவுக்கு அமைந்தபோதிலும் அது சனநாயக அமைப்பைப் பெறவில்லை என்பது புலனாயிற்று. மத்தியதர வகுப்பாரில் வறியவருக்கும், தொழிலாளர்க்கத்தினருக்கும் வாக்குரிமை கிடைக்கவில்லை. குடிமக்களுள் 30 பேருள் ஒருவருக்கே வாக்குரிமை இருந்தது. அவர்கள் 60,23752 குடிசனங்களுள் 8,39519 பேர் என்பதுவும் சுட்டிக் காட்டப்பட்டது. எனவே மக்கள் பட்டயம் என்னும் உரிமை கோரிய நினைவேடொன்று 12,86000 மக்களின் கையொப்பமிடப்பட்டுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பட்டய இயக்கத்தினருக்குப் பாராளுமன்றத்தில் செல்வாக்கில்லாமையால் அவர்கள் கோரிக்கை நிராகரிக்கப்படலாயிற்று. என்வே அவர்கள் பகிரங்கக் கூட்டங்கள், பிரசுரங்கள், ஊர்வலங்கள்,

நாட்டுப் பாடல்கள், நினைவேடுகள் முதலியன மூலம் கிளர்ச்சியை மேலும் நடத்தினர். மறுபடியும் 1842 ஆம் ஆண்டிலும் 3000000 கையொப்பங்களுடன் ஒரு நினைவேடுலண்டனில்உள்ள வீதிகள்தோறும் ஊர்வலமாகக் கொண்டு சென்று சமர்ப்பிக்கப்பட்டது. அதுவும் நிராகரிக்கப்பட 1848 ஆம் ஆண்டிலும் வேறொரு ஏடு சமர்ப்பிக்க ஏற்பாடுகள்நடைபெற்றன, அதில் 5700000 மக்கள் கையொப்ப மிட்டனர் என்றும் அதனை ஐந்துலட்சம் மக்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்வர்எனவும் செய்தி பரவிற்று.

அது கலக ஆண்டாதலால் அதைக் கேட்ட அரசாங்கம் லண்டன் நகரின் பாதுகாப்பை வெலிங்ரன் பிரபுவிடம் விட்டு 170000 விசேட பொலிசுகளை நியமித்துப் பாதுகாப்பு வசதிகளைச் செய்தது. இவ்வாறுக 1832 தொடக்கம் 1867 வரையும் எவ்வித திருத்தமும் இன்ற நடுவகுப்பார் அரசாங்கம் நிலவியது.

பின்னர் 1866 ஆம் ஆண்டளவில் றசல் பிரபுவின் மந்திரத்தில் பொதுமக்கள் சபை முதல்வராயிருந்த கிளாட்ஸ்ரோன் அவர்கள் தாராளமான அளவில் வாக்குரிமை வழங்க முயன்றார். அதனால் அம் மந்திரம் விலகவேண்டி நேர்ந்தமையால் டேபி பிரபு பிரதமரானர். அம் மந்திரத்தில் டிசலாறி அவர்கள் பிரதான மந்திரியாய் இருந்தார். பழையபடி பழைமை தழுவுவோர் செல்வாக்கு நிலவிற்று.

அந்த நேரத்திலே கிளாட்ஸ்ரோனும், யோண் பிறைற் என்பாரும் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தனர். அதைக் கண்ட டிசலாறி தாமே தம் கட்சியின் பெருமையை நிலைநாட்ட வெண்ணித் திருத்தங்கள் செய்ய ஆயத்தமானர். அவர் 1867 ஆம் ஆண்டில் சீர் திருத்த மசோதாவைப் பிரேரித்தார். அதனைத் திருத்தப் பிரேரணைகள் மூலம் கிளாட்ஸ்ரோன் உருமாற்றித் தம் கோரிக்கைகளை அவ்விடத்தில் நிலை நாட்டினர். டிசரலியும் நன்மனசுடன் விட்டுக் கொடுக்கப் பரந்த அளவில் திருத்தங்கள் ஏற்படலாயின. அதனால் நடுவகுப்பாரின் ஆட்சி நீக்கப்பட சனநாயக ஆட்சி நிலைபெறுவதாயிற்று. பொதுமக்கள் வாக்குரிமை பெற்றுச் சனநாயக ஆட்சி உண்டாவதை விரும்பாத டேபி பிரபு அவர்கள் ''இருட்டில் குதித்த வாறு'' எனக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அடுத்தடுத்து நடைபெற்ற அரசியற்றிருத்தங்கள் இலங்கையில் நடு வகுப்பாரை வெகுவாகச் சிந்திக்க வைத்தன இந்தியாவில் நடைபெற்ற மோலி–மின்ரோ திருத்தங்கள் இந்தியருக்குத் தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் உரிமையையும்

இராசப் பிரதிநிதி எனப்படும் பதிலரையன் ஆட்சி நிருவாகசபையில் ஓர் இந்தியப் பிரமுகர் இடம்பெறவும்; அங்ஙனமே மாகாணவாட்சிகளில் ஆள்பதிகளின் ஆட்சி நிருவாக சபைகளில் ஒவ்வோர் இந்தியப் பிரமுகர் இடம் பெறவும் சூழ் நிலை உருவாயிற்று.

ஆனல் இலங்கையில் அத்தகைய சந்தர்ப்பம் உருவாகவில்லை. சட்டசபையில் அங்கத்துவம் பெற்ற முறையே பிழையாய் இருந்தது. இலங்கையருள் கண்டிச் சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்கும் பிரதிநிதிகள் நியமனம் பெறவில்லை. பிரதிநித்துவம் பெற்ற பிறசாகியத்தாரின் நியமனந்தானும் ஆயுட்காலத்துக்கு எனவே இருந்தது. அக்காலத்தில் இலங்கையருள் 1000 பேரில் 349 பேர் எழுத்தறிவுள்ளவராயினர். இலங்கைப் பெண்களைப் பொறுத் அளவில் 1000, பெண்களுள் 69 பேர் எழுத்தறிவுள்ளவராயிருந்தனர். ஆனல் இந்தியாவிலோ 1000, மக்களுள் 109 பேர் எழுத்தறிவுள்ளவராய் இருந்தனர். பெண்களைப் பொறுத்த அளவில் அவர்கள் 1000, பேருள் ஆறு பேராகவே இருந்தனர்.

இன்னும் இலங்கையரின் பெருமைகளை விபரிக்கின் இலங்கையில் முன்னர் இருந்த மாகாணங்கள் ஐந்தும் இப்போது ஒன்பதாகப் பிரிக்கப்பட்டுப் பல வழிகளிலும் முன்னேற்றமடைந்தன. இன்னும் மாவட்ட பிரதேசங்கள் முன்னரிலும் பார்க்க 12 அதிகமாக உருவாக்கப்பட்டு முன்னேற்றப் பாதையில் திருத்தங்கள் ஏற்பட்டன. இன்னும் பகிங்கர வேலை, புகைதரயிப்பகுதி, கல்வி, தாபால் தந்தி, சுகாதாரம், வைத்தியம், பொலிசு, சிறைக்காவல், நீர்ப்பாசனம் ஆகிய பல திணைக்களங்கள் உண்டாக்கப்பட்டு வேலைகள் நடந்தன. இத்தகைய முன்னேற்றத்துக்குத் தக்கதாகச் சட்ட சபையில் முன்னேற்றமோ, திருத்தமோ ஏற்படாமை வருத்தத்துக்குரியதாய் இருந்தது.

நடுவகுப்பார் திருத்தங் கோரிய காலத்தில் ஆள்பதி அவர்கள் முயற்சியால் சட்ட சபையில் சிற்சில சிறிய திருத்தங்கள் ஏற்பட்டன. அவற்றை நாம் அறியாமல் மேலும் கிளர்ச்சி செய்தவரின் கோரிக்கைகளை அறிந்து கொள்ள இயலாதாகையால் முதற்கண் அவற்றை அறியவேண்டியது இன்றியமையாதாகின்றது.

முன்னர் ஆயுள் பரியந்தம் பிரதிநிதித்துவம் என்றிருந்தமுறை 1889-ம் ஆண்டளவில் மாற்றப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரமே என இருந்தது. பின்னர் அம்முறையும் மாற்றப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு என்றும், அக்கால எல்லை முடிவில் சாதகமாயிருந்தால் மீண்டும் பிரதிநிதியாய் நியமனம் பெறலாம் எனவும் இருந்தது.

முன்னர் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் ஐரோப்பியர், பறங்கியர், தமிழர், சிங்களவர் ஆகியவர்களுக்காக நியமனம் பெற்றனர். ஆனால் முஸ்லிம்களுக்கும் கண்டிச் சிங்களவருக்கும் பிரதிநிதிகள் இல்லாத பெரிய குறை 1889 இல் ஆள்பதி அவர்களால் நீக்கப் பட்டது. அவர் கண்டியருக்கு ஒரு பிரதிநிதியும், முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதியும் சட்டசபையில் இருக்க ஒழுங்கு செய்தார் அதனால் இச் சிறு திருத்தத்தின்பின் சட்டசபையில் உத்தியோக அங்கத்தவர் ஒரு ஆசனப் பலத்தால் பெரும்பான்மையினராய் இருந்தனர். அந் நிலையைப் பின்வரும் வரைவில் காண்க.

சட்டசபை

17

உத்தியோக அங்கத்தவர்	உத்தியோகப்பற்றற்றவர்
9	8

ஐரோப்பியர்	– 3
பறங்கியர்	– 1
தமிழர்	– 1
சிங்களவர்	– 1
கண்டியர்	– 1
முஸ்லிம்கள்	– 1

இனி 1833 ஆம் ஆண்டளவில் இருந்த நிலைமையில் இலங்கையில் 10,00000 மக்களே வாழ்ந்தனர். அக்காலத்தில் 14000 பிள்ளைகளே பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள். அவர்களுக்கு உயர் கல்வி கற்க வசதிகள் இருக்கவில்லை. அக்காலத்தில் இலங்கையரில் 100பேர் கூட ஆங்கிலம் அறியவில்லை. இலங்கை வருமானம் 43, 75, 000 ரூபாவாய் இருந்தது ஏற்றுமதி வருமானம் 13, 25, 300 ரூபாவாய் இருந்தது.

இவற்றைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பின்வரும் புள்ளி விபரங்களை அறிதல் வேண்டும். இலங்கையர் குடிசனம் 40, 00, 000 பேராய் விட்டனர். மாணவர் தொகை 2,67690. இலங்கையருள் 76500 பேர் ஆங்கிலம் எழுத வாசிக்க அறிந்திருந்தனர். இலங்கையின் வருமானம் 3,65,73824 ரூபாவாய் இருந்தது. ஏற்றுமதி வருமானம் 12,63,31154 ரூபாவாய் இருந்தது.

ஆசிய நாடுகளுள் ஆயினும், பிரித்தானிய குடியேற்ற நாடுகளுள் ஆயினும் இலங்கையைப் போல இன்னெரு நாடு துரிதமாக எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடையவில்லை. இங்ஙனம் முன்னணியில் நின்ற நாடு அரசியலமைப்பைப் பொறுத்தமட்டில் ஒன்றுமில்லாமலே இருந்தது.

சட்டசபையில் பிரதிநிதித்துவ முறையில் இருந்த பெரிய பிழை உச்சியோகப் பற்றற்ற அங்கத்தவர் வரிசையிலேதான் இருந்தது. அக்காலக் குடிசன வீதத்தின் வண்ணத்திலாவது பிரதிநிதித்துவம் அமையவில்லை, முன்னர் அமைத்த முறை குடிசனமதிகரித்த பின்னரும் இருந்தமை பொருத்தமற்றதாகவே இருந்தது. அதனைப் பின்வரும் புள்ளி விபரம் வெளிப்படையாகக் காட்டும்.

குடிமக்கள்	தொகை	பிரதிநிதிகள்
1. ஐரோப்பியர்	9000	3
2. பறங்கியர்	23000	1
3. முஸ்லிம்கள்	226000	1
4. தமிழர்	955000	1
5. கண்டிச் சிங்களவர்	872000	1
6. கரை-நா-சிங்களவர்	1458000	1

இப்பிரதிநிதித்துவம் என்ன அடிப்படையிலளிக்கப்பட்டது என்பது அரசியல் யாப்புக்கே இழுக்காயிருந்தது, நல்ல முறையிற் றிருத்தங்கோரியவர்கள் இதனையும் சுட்டிக்காட்டித் திருத்தங் கோருவாராயினர்.

நடுத்தர வர்க்கத்தாரின் கோரிக்கைகள் நியாயமானவை எனவோப்சேவர், எக்சாமினர் ஆகிய பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதி ஊக்கப்படுத்தின. அக்காலத்தவர் கோரிக்கைகள் : நியமன முறையையும், வகுப்புவாரியமைப்பையும் நீக்கிவிட்டுப் பெரிய சட்டசபையும், அதிலே தொகுதிவாரிப் பிரதிநிதித்துவமும், சிறுபான்மையினருக்கு விசேட பிரதிநிதித்துவமும், ஆள்பதி அவர்களின்சட்ட நிறைவேற்றுச் சபையில் இலங்கையர் பிரதிநிதிகள் இருவராவது இடம் பெறுதலையும் நோக்கமாகக் கொண்டன.

அக்காலத்திலே தான் புகழ் பூத்த சேர். பொன்னம்பலம் இராமநாதனின் குடும்பத்தார் பிரகாசித்தார்கள். சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் சகோதரியின் பிள்ளைகளான குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் ஆகிய மும்மணிகளும் ஒரே காலத்தில் அரசியல்

வானில் பிரகாசித்தார்கள். ஈழத்து சிங்கள் என்று ஆங்கிலேயரால் பாராட்டப்பட்டவர்கள் அவர்கள். அவர்களைப் போலவே சிங்களவருள்ளும் பறங்கியருள்ளும் பலர் தேசத் தொண்டு செய்தார்கள். சேர். யேம்ஸ் பீரிஸ், H. J. C. பெரேரா F. R. சேனநாயக, D. B. யயத்திலக, D. R. விஜயவர்த்தனு ஆகியோரும் பறங்கியருள் C. A. லோறன்ஸ் போன்ற பெரியார்களும் குறிப்பட வேண்டியவர்கள். யோச் வால் என்ற ஐரோப்பியப் பெருந்தகையார் இலங்கையின் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்டபோது அவருக்கு பக்கத் துணை வராய் இருந்து அரிதில் உழைத்த பெரியார் C. A. லோறன்ஸ் என்ற பறங்கியர் பிரதிநிதியாவர். அவர் றிச்சாட் மோகன் என்ற பெரியாருக்குப் பிறகு பறங்கியர் பிரதிநிதியாய் இருந்தார்.

றிச்சாட் மோகன் என்ற பறங்கியர் வரலாறு இரண்டு பிரிவானது. அவர் 1821 ஆம் ஆண்டிற் பிறந்தவர் தமது 19 ஆம் ஆண்டுப் பராயத்திலேயே நியாயதுரந்தரராக வேலை பார்த்து மேலும் அத்துறையிற் பிரகாசித்து 1846 ஆம் ஆண்டில் அப்புக்காத்தாக வேலை பார்த்தவர். அவர் 1851 ஆம் ஆண்டில் ஆள்பதி அவர்களால் பறங்கியர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுச் சட்டசபையில் அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டித்தவர். அவர் இலக்கியப் புலமையோ பேச்சுச் சாமர்த்தியமோ இல்லாதவராயிருந்த போதிலும் சட்டத் துறையில் விற்பத்திதிமானுயும் கண்டனப் புலியாயும் இருந்தார். அவருடைய எதிர்ப்பை நீக்குவதற்காக ஆள்பதி அவர்கள் அவரை 1856 ஆம் ஆண்டில் கொழும்பு மாட்ட நீதிபதியாய் நியமித்தார். அன்றி அவ்வருட இறுதியிலேயே அவரை துணை நீதியரசராக நியமித்தார். அதிற் கடமையாற்றிய காலத்தில் அவரை உதவி இராணி அப்புக்காத்தாகவும் நியமித்தார். அவர் பதிற் பிரதம நீதியரசராயும் உயர்த்தப்பட்டவர்.

அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டித்த றிச்சாட் மோகன் அதற்குப் பிராயச்சித்தமாக அரசாங்கத்தைப் பாதுகாத்து ஆள்பதி அவர்களுக்கு அந்தரங்க ஆலோசனை கூறுபவராயும் சட்டவியாக்கியான கருத்தாவாகவும் விளங்கினர். அவர் ஆள்பதியின் வலது கரமாகவும் அரசாங்கத்தின் தூணுகவும் இருந்தார் என்பர்

சார்ல்ஸ் அம்புறோஸ் லோறன்ஸ் அவர்களைப் பற்றி எழுதுவதானுல் அது ஒரு பெரிய நூலாய்விடும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இலங்கையருள், அவர் முன்னணியில் நின்ற மகா மேதையும், விவேகியும், தியாகியுமாவர் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நடுப்பகுதியின் வரலாறே லோறன்சின் வரலாறு என்பர். லோறன்ஸ் அவர்களின் வரலாறே இலங்கை வரலாறு என்று கூறலாம்.



சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள்



சேர். றிச்சாட்
மோகன் அவர்கள்





இலங்கைக்குப் பொறுப்பாட்சி பெறுவதற்கு முதலில் அத்தி பாரமிட்டவர் லோறன்ஸ். சட்டசபையிலே உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தனிப்பட்ட அங்கத்தவர் என்ற ரீதியில் மசோதாக்க ளைப் பிரேரிக்க அனுமதி பெற்றும், பிரேரித்தும் முன்மாதிரியாய் விளங்கியவர் அப்பெரியாரே. ஆள்பதியவர்களே பிரேரணைகளைக் கொண்டு வரலாம் என்றிருந்த அதிகாரப் போக்கைத் தகர்த்த வீரன் லோறன்ஸ் எனலாம். இலங்கையில் உள்ளூர் ஆட்சி மன்றங்களை பிரதிநிதிகளைக் கொண்டு செயலாற்றும் முறையில் அமைக்கக் காரண ராயிருந்தவரும் அவரே. இலங்கையின் முதலாவது மாநகரசபையில் தெரியப்பெற்ற பிரதிநிதியுமாயிருந்த கௌரவமும் அவருக்கே உரி யது. இலங்கையில் ஆங்கிலேயர் தம் நாட்டுச் செலாவணி முறையில் பவுண், சிலிங், பென்ஸ் நாணயங்களைப் புகுத்தினர். அவற்றை நீக்கி விட்டு ரூபாசத நாணய முறையைப் புகுத்த வழி வகுத்தவர் லோறன்ஸ் அவர்களே. இலங்கையில் பத்திரிகை உலகை முதலில் உண்டாக்கித் தாமே எழுத்தாளனுமிருந்த பெருமையும் லோறன்ஸ் அவர்களுக்கே உரியது. கல்விச் சீர்திருத்தம், சட்ட சீர்திருத்தம், சட்டக் கோவை யாத்தமை இலங்கையில் புகையிரதப் போக்குவரத்து அமைத் தமை என்பனவாதிய பல காரியங்களிலேயும் லோறன்ஸ் அவர் களுக்கு நிரம்பிய பெருமையுண்டு. லோறன்ஸ் அவர்களின் எழுத்து வன்மையையும் வளத்தையும் கண்டு மகிழ்ந்தவர்கள் அவரை ஈழத் துச் சார்ள்ஸ் டிக்கின்ஸ் எனப் பாராட்டினர். அவர் வெகு திறமையாக எக்சாமினர் என்ற பத்திரிகையை நடத்தி அதிலே அக்காலத்து ஆள் பதிகளின் வல்லாட்சியைக் கடுமையாகத் தாக்கி எழுதினர். யோச் வால் இலங்கை அரசியலில் சீர்திருத்தங் கோரி அரிய முயற்சி செய்த காலத்திலே அன்னருக்குப் பக்கபலமாய் இருந்து பணி செய்த பெரியார் லோறன்ஸ் அவர்களே.

லோறன்சின் சொல்லம்பால் தாக்கப்பட்டவருள் ஆள்பதி வாட் அவர்களும் ஒருவர். வாட் அவர்களின் இரு பெண்களை மணந்த மாப்பிள்ளைகள் இலங்கையில் பெரிய உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டார்கள். அதனை லோறன்ஸ் தாக்கி எழுதியமையால் மனமுடைந்த ஆள்பதியவர்கள், லோறன்சை இராணி மாளிகைக்கு அழைத்து "லோறன்ஸ்! என்னுடைய மகள் என் மாளிகையில் இருக்க உரிமை இல்லாவிட்டால் நான் ஆள்பதியாய் இருந்து பெறும் அதி காரம் என்னவாகும்?" என்று கேட்டாராம். அந்தக் கேள்வியில் ஓர ளவு மன்னிப்புத் தொனியும் கலந்துள்ளதை அறியலாம்.

இவ்வாறே முன்னர் ஆள்பதி அண்டர்சன் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட போதும் "இவருக்கு உடலிலும் மனத்திலும் பிழை என்கிறார்கள். இவர் இலங்கை அரசியலைப் பழுதாக்கிவிட்டு, அந்த

மனவருத்தத்தைப் போக்குவதற்கு லீவு எடுத்துக்கொண்டு வந்து ஐரோப்பிய மதுபானம் அருந்தப் பார்க்கிறார். ஏன் இவர் இந்திய சிவில் சேவ கித்தியெய்திய பாண்டித்தியமுடையவராயிற்றே. இவருக்குச் சுயமூளை வேலை செய்யவில்லையோ'' எனக் குறிப்பிட்டார்.

லோறன்ஸ் அவர்கள் மாத்துறையில் நில்கங்கையெனப்படும் நீல ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த ''றேஞ்ஸ் குடிசை'' என்னும் இல்லத்தில் 1829 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் எட்டாம் நாளில் பிறந்தார். அவருடைய தந்தையார் யோண் லோறன்ஸ் என்பார் ஐரோப்பியருள் யுத்தப் பிரியரான பிறசிய இனத்தைச் சேர்ந்தவர். லோறன்ஸ் பிறந்த காலத்தில் யோண் லோறன்ஸ் மாத்துறையில் பொலிஸ் நீதிபதியாய்க் கடமையாற்றினர். அவருடைய பதின் மூன்று பிள்ளைகளுள் கடைசிப் பிள்ளையே லோறன்ஸ்.

லோறன்ஸ் இளமையிலேயே சிறந்த விவேகியாயிருந்தமையால் அவரை உயர்தரக் கல்வி பயிலவைப்பதற்குத் தந்தையார் விரும்பினர். ஆங்கில இலக்கண இலக்கியங்கள், லத்தீன் மொழி, கணிதம், என்பவற்றோடு சங்கீதம், நடனம், சித்திரம், கவிகள் என்பனவும் தம் மைந்தன்பயிலவேண்டும் எனத் தந்தையார் விரும்பினர். எனவே கொழும்பிலுள்ள றோயல் கல்லூரிக்குத் தம் மைந்தனை அனுப்பினர்.

றோயல் கல்லூரியிலே கல்வி கற்ற லோறன்ஸ் ''நான் ஒரு பெரிய மனிதனாய் வருகிறதாக உணருகிறேன்'' என்று எழுதியுள்ளார். உண்மையில் அவர் நீதித்துறை, எழுத்துத்துறை, இலக்கியத்துறை, சட்டத்துறை, கல்வித்துறை என்பனவாகிய பல துறைகளிலும் அற்புதமான முன்னேற்றத்தைச் செய்துள்ளார். றோயல் கல்லூரியைப் பார்வையிடச் சென்ற குடியேற்றக் காரியதரிசி லோறன்சின் வியாசக் கொப்பியைப் படித்துப் பார்த்து அப்பிள்ளையை நேரில் பார்க்க விரும்பினர். அவர் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டதும் அவரை மெச்சி ''தம்பி, உனக்கு அரசாங்கத்தில் உடனடியாக ஓர் உத்தியோகம் தர விரும்புகிறேன்'' என்றாராம். லோறன்ஸ் விவேகியாதலால், ''பொருள் தேவையானபோது உத்தியோகத்திற்கு வருகிறேன்'' என்று கிண்டலாகக் கூறினாராம். இளமையிலேயே குடியேற்றக் காரியதரிசியை நெற்றிக்கு நேரில் கிண்டல் செய்த லோறன்ஸ் பெரியவரானபின் ஆள்பதிகளோடு சொற்போர் தொடுத்ததில் வியப்பில்லையே. லோறன்ஸ் தாம் இலங்கையர் என்பதில் பெருமை கொண்டே தொண்டு செய்தார். அவரைப் போன்ற தேசத் தொண்டர்களைக் காண்பது அரிது.

அத்தியாயம் 18

சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள்

பேர்மைக்கும் ஒப்பில்லாத
பெருங்குணக் கோடைக்கும் தாழா
நேர்மைக்கும் தலைமை சான்ற
நிலைமைக்கும் பிறப்பின் மேன்மைச்
சீர்மைக்கும் மாசிலாத
சிறப்புக்கும் தன்னே ரில்லாச்
சேர் முத்துக் குமார சாமிச்
செம்மல் சீர் சிறக்கலாதோ.

— ந. சி. பாதி.

சேர். முத்துக்குமாரசுவாமியவர்களை என்ன தன்மையர் என்றே என்னவாய் இருந்தவர் என்றே எடுத்தியம்ப இயலாது. அவர் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் பெரும் புகழோடு வாழ்ந்தவர். அவரை அறிஞர், நூலாசிரியர், அரசியற் புலமைத்தர், தேசபக்தர் என்றெல்லாம் நூல்கள் அன்று தொட்டு இன்றுவரை புகழுகின்றன. அவரும் புகழொடு தோன்றிய பெரியாராவர்.

கோல்புறூக் அரசியாப்புத் திருத்தத்தின் வண்ணம் இலங்கையில் முதன் முதலாக நிறுவப்பட்ட சட்ட சபையிலே தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்குமாறு நியமிக்கப்பெற்ற பெரியார் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்னும் முதலியாராவர். அவர் நாற்பது ஆண்டுகளாய் ஆள்பதி அவர்களின் அரண்மனையில் மொழிபெயர்ப்பு முதலியாராய் உத்தியோகம் வகித்துப் புகழ் பெற்றவர். குமாரசுவாமி முதலியாருக்குப் பின்னர் அவருடைய சகோதரியாரின் மைந்தர் சேஞ்திராயர் எதிர்மன்னசிங்கம் என்பார் முதலியாராயிருந்தவர். குமாரசுவாமி அவர்கள் இறந்த பின் அவருடைய இடத்தில் எதிர்மன்னசிங்கம் அவர்களே சட்ட சபை அங்கத்தவராயும் இருந்தார்.

எதிர்மன்னசிங்க முதலியார் இறந்தபின் சட்டசபையின் பிரதிநிதியாக முன்சொன்ன குமாரசுவாமி முதலியாரின் மைந்தர் முத்துக்குமாரசுவாமி அவர்களே இருத்தல் வேண்டும் என்று தமிழர் விரும்பினர். எனவே தமிழ்ச் சபைகள் தங்கள் விருப்பத்தை ஆள்பதி சேர். சார்ல்ஸ் மக்காதி அவர்களுக்கு விண்ணப்பித்தார்கள்.

முத்துக்குமாரசுவாமியின் அறிவாற்றல்களை நேரிலறிந்த ஆள்பதி அவர்கள் அவரை 18-7-1861 முதலாக்ச் சட்டசபையின் உத்தி யோகப்பற்றற்ற அங்கத்தவராகத் தமிழருக்கும் முஸ்லிம்களுக் குமாக நியமித்தார். முத்துக்குமாரசுவாமி அவர்கள் அன்று தொடக்கம் 12-5-1879 இல் இறக்கும்வரை சட்டசபைப் பிரதி நிதியாயே இருந்தார். அவருக்குப்பின் அவருடைய சகோதரி யாரின் மைந்தர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அன்று தொடக்கம் 26-11-1930 இல் தமது எண்பதாவது வயதில் இறக்கும்வரை ஐம்பதாண்டுகள் சட்டசபையினை அலங்கரிப்பாரா யினர். சேர். இராமநாதன் அவர்கள் சட்டசபையில் உத்தியோ கப்பற்றற்ற அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும், நியமன அங்கத்தவராயும், தெரியப்பட்ட அங்கத்தவராயும் இருந்தார் என்பது குறிப்பிடத்தகும்.

சேர். முத்துக்குமாரசுவாமியின் தாயார் செல்லாச்சி அம்மை யார், வைரவநாதர் என்ற பெரியாரின் பெண். செல்லாச்சி அம்மையார் செய்த சீரிய தியாகத்தையும் தவத்தையும் பற்றி அருணாசலம் அவர்கள் தமது ஆங்கில நண்பராய எட்வேட் கா பென்ரருக்கு எழுதியுள்ளார். ''மிக இளம்வயதிலேயே கணவனை இழந்த இக்காரிகையார் மிகுந்த பொருளும் அதிக அழகும் பொருந்தியி ருப்பவும் மறுமணம் புரியாது தமது இருபிள்ளைகளையும் வளர்ப்பதில் தியாக வாழ்க்கையில் ஈடுபட்டார்'' அவரைப் போன்ற பெண்களை நாகரிக காலத்தில் காண்பதரிது.''

முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1833 ஆம் ஆண்டிற் பிறந் தவர்கள். தகப்பனரைக் குழந்தைப் பராயத்திலே இழந்தவரா னாலும் தாயாரின் தியாக வாழ்க்கையால் முத்துக்குமாரசுவா மி ஒரு குறையும் இன்றி வளர்ந்து ரேயல் கல்லூரியிற் சேர்ந்து படித்து வந்தார். ரேயல் கல்லூரியில் அதிபராயிருந்த வணக்கத் துக்குரிய போக் அவர்களுடைய அபிமான மாணவராயிருந்த முத்துக்குமாரசுவாமி படிப்பிலும் பரீட்சைகளிலும் ஆசிரியர்கள் வியக்கும் வண்ணம் நிறமையுள்ளவராயே இருந்தார். அக்காலத் தில் மாணவர் அவாவும் ரேணர் பரிசைப் பெற்ற முத்துக்குமார சுவாமி ரேயல் கல்லூரியின் முதற்றர மாணவருள் முதலிடத்தைப் பெற்று விளங்கினர் என்பது சொல்லாமலே அமையும்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் ஆங்கில இலக்கிய இதிகா சங்களில் திறமை பெற்றதோடமையாது லத்தீன், கிறீக் ஆகிய புராதன மொழிப் புலமையும் பெற்று 1851 ஆம் ஆண்டின் திறமையான மாணவர் எனக் கல்லூரிச் சுவரில் அவர் பெயர் எழுதப்படும் பேற்றையும் பெற்றார்.

வணக்கத்துக்குரிய கலாநிதி மாக்விகார் என்ற பெரியாரிடம் தத்துவ சாத்திரம், இயல்பு நூல் என்பன கேட்டும் விற்பத்திமாலைப் விளங்கிய முத்துக்குமாரசுவாமியின் அதி விவேகத்தையும் கல்வித் தரத்தையும் அறிந்த அரசாங்கம் அவரை அழைத்து உயர்ந்த சிவில் உத்தியோகம் ஒன்றை அவருக்கு வழங்கிற்று. மேலதிகாரிகள் மெச்சும் வண்ணம் நேர்மையாகவும் திறமையாகவும் உழைத்த முத்துக் குமாரசுவாமி அவர்கள் உத்தியோக உயர்ச்சி பெற்று முல்லைத் தீவுப் பகுதியின் அரசாங்க அதிபராய்க் கடமையாற்றினர். அங்கே கடமையாற்றிய காலத்தில் நோய்வாய்ப்பட்டமையால் உத்தியோகத்தை விலகல் செய்துவிட்டுக் கொழும்புக்கு மீண்டு சட்டம் பயின்று 1856 ஆம் ஆண்டில் அப்புக்காத்தாகத் தொழில் நடத்த அநுமதி பெற்றார். கொழும்பில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய அப்புக்காத்துமாருள் சிங்கம் எனப் புகழப்படும் தகுதியைப் பெறுமளவில் அவர் தொழில் நடத்தினர். தமது ஓய்வு நேரங்களில் ஐரோப்பிய இலக்கியங்களையும் பிறநூல்களையும் நன்கு கற்றுப் பெரும் புலமை பெற்றார்.

அவர் அப்புக்காத்தாகத் தொழில் நடத்திய காலத்திலே தான் சட்டசபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அவர் சட்ட சபையில் பேசியவற்றையும். அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்துக் கூறியவற்றையும், அவருடைய அஞ்சாமை, நேர்மையாகிய அரும் பெரும் குண மகிமையாகியவற்றையும் ஐரோப்பிய அங்கத்தவரும் பிறரும் வெகுவாகப் பாராட்டிப் பேசியும் எழுதியும் உள்ளார்கள்.

அவர் கண்டி மக்கள் விவாகம் சம்பந்தமாகப் பொதுமக்கள் விரும்பாத தன்மையில் எழுந்த ஒரு கட்டளைச் சட்டத்தையும், கிராமச்சபை சம்பந்தமான ஒரு கட்டளைச் சட்டத்தையும், இராணி அப்புக்காத்து உத்தியோகம் பார்த்துக்கொண்டே தனித்தொழில் நடத்தும் அநுமதியையும் வெகுவாக எதிர்த்துப் பேசினர். மேலும் ஒருமுறை சட்டசபையின் வைகற் காலத்தை மூன்று மாத எல்லையில் தரிப்பிட முன்ந்த ஆள்பதி அவர்களின் அடாத 'செயலை ஆணித்தரமாகக் கண்டித்தார். ''நாங்கள் சட்டசபை அங்கத்தவர் என்றதால் இங்கே கூடுவது சட்டங்கள் செய்வதற்கு மாத்திரமல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்கான நலன்களைச் செய்ய முயற்சிப்பதற்காகவும் இங்கே வந்துள்ளோம் என்பதை மறந்து விடலாகாது. நாட்டுக்குச் சேவை செய்யும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மூன்று மாதகாலம் போதாது. சனநாயக ஆட்சி

என்றும் மக்கள் சபை என்றும் தாராள மனப்பான்மை என்றும் பெருமையடிக்கும் ஆங்கிலேயரின் ஆட்சி முறைக்கு இது முரணான செயலாகும்'' என்பது அவர் பேச்சின் சுருக்கமாகும்.

சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் மொழிப் புலமை, சொற் சிறப்பு, சொல்வன சொல்லுவதற்கு அஞ்சாமை, நேர்மை, தியாகம் என்னும் பல பண்புகளுக்காப் பெயர் பெற்றவர் சட்டசபை அங்கத்தவர்களுக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாகவும் உதாரண மாகவும் விளங்கினர் என்ப. முத்துக்குமாரசுவாமியவர்கள் இராசாங்க ஆகிய அங்கத்தின் இலங்கைக் கிளையில் அங்கத்தவராயிருந்து அளப் பரிய சேவை செய்தார். இச்சங்கம் வெளியிட்ட சஞ்சிகை மலர் களில் காலத்துக்குக் காலம் கீழைத் தேசக் கல்வி, கலாசாரம், மதம் என்பன சம்பந்தமான அரிய கட்டுரைகளை எழுதி வந்தார். அவற் றோடு ஆங்கிலத்தில் அரிச்சந்திரன் முதலிய பல நூல்களையும் தாயு மான சுவாமிகளின் அரிய பாடல்களை மொழிபெயர்த்தும் தொண்டு செய்தார்.

முத்துக்குமாரசுவாமியவர்கள் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த காலத்தில் 1862 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே படித்தவர்கள் மத்தியில் கீழைத்தேசக் கலாச்சாரம், சைவ சமயத்தின் மகத்துவம், அரிச்சந்திரன் வரலாறு, உண்மையின் உயர்வு என்பன போன்ற பொருள் பற்றிப் பேசினர். அக்காலத்திலேதான் அவர் முன்னர் ஆசியாக் கண்டத்தினர் எவராயினும் பெறுததும், கிறித்தவரல்லாதார் சேர முடியாததுமான சீமை அப்புக்காத்து என் னும் பாரிஸ்டர் பதவியைப் பெற்று, ''லிங்கன் இன்'' என்ற பாரிஸ்டர் கழகத்துக்கே பெருமை தேடிக் கொடுத்தார். அவருடைய முன் மாதிரியைக் கொண்டே இந்தியர் பலர் நாளடைவில் பாரிஸ்டர் பட்டம் பெறுவாராயினர்.

முத்துக்குமாரசுவாமியவர்கள் கீழைத் தேசத்தின் முதலாவது பாரிஸ்டர் என்ற தகுதியைப் பெற்றபோது லண்டனில் பிரசுரமான ரைம்ஸ் பத்திரிகை அவரை வெகுவாகப் பாராட்டிக் கௌரவித்தது. ''இந்துப் பிரபுக்கள் பாரம்பரியம் முன்னேற்றமடைவதற்கு அறி குறியாக 'லிங்கன்' இன் என்னும் கழகத்தில் சேர்வதற்குக் கீழைத் தேசத்துப் பெருமகனர் ஒருவர் தெரியப் பெற்றது மகிழ்ச்சிக்குரிய தாகும். இப்பெரியார் இலங்கைச் சட்டசபையில் தமிழர் பிரதி நிதியாய் அங்கம் வகிக்கின்றார். இவர் இக்கழகத்தில் சேர்ந்தமையால் இந்தியர் இனிமேல் சோம்பேறிகளாய் இருக்கமாட்டார்கள்.'' என அப்பத்திரிகை எழுதிற்று.

முத்துக்குமாரவாமி அவர்கள் இங்கிலாந்திலே இருந்த காலத்திலே இலங்கைச் சட்டசபையிலே பெரிய அமளிகள் ஏற்பட லாயின. ஆள்பதி மக்காதி அவர்கள் சென்று, ஆள்பதி ரெபின்சன் அவர்கள் வருவதற்கு இடைப்பட்ட காலம் அது. அக்காலத்திலே மேஜர் ஒபிறைன் பதில் ஆள்பதியாகக் கடமையாற்றினர். முத்துக் குமாரசுவாமி அவர்கள் இங்கிலாந்தில் இருந்தாராகையால் அவருக் காக யோண் ஈற்றன் என்ற பறங்கியர் பதில் அங்கத்தவராய் இருந்தார். அக்காலத்திலேதான் 17-8-1864 இல் கூடிய சட்ட சபைக் கூட்டத்திலே அரசாங்கத்துக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப் பட்டது.

அடுத்த கூட்டத்தில் ''குடியேற்ற நாட்டுப் படைச் செலவைக் குடியேற்ற நாடுகளே பொறுத்துக் கொள்ளவேண்டும். படைச் செல வுக்கு ஒதுக்கிய பணத்தின் மிச்சமிருந்தால் அத்தொகை திறை சேரியில் ஈட்டப்பட வேண்டுமேயல்லாமல் பொதுசன உபயோகத் துக்காக ஒதுக்கப்படலாகாது'' என்று குடியேற்ற நாட்டு மந்திரி வரைந்தனுப்பிய சட்டமொன்று சட்டசபையில் உத்தியோக அங்கத் தவர் தவறுது சமுகமளிப்ப நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து சபையிலிருந்த ஆறு உத்தியோகப் பற்றற்ற அங்கத் தவரும் 15-10-1864 ல் சபையை விலகல் செய்தார்கள். அவர்கள் லோறன்ஸ், ஜோச்வால், தோம்சன் காப்பர், யேம்ஸ் டி அல்விஸ், யோன் ஈற்றன் என்பவராம். இவர்களுள் பின்னர் குறிப்பிட்ட யோன் ஈற்றன் முத்துக்குமாரசுவாமிக்குப் பதிலாகக் கடமையாற்றிய வராவர். இந்த இக்கட்டான நிலைமையில் என்ன செய்யலாமென பதில் ஆள்பதியான மேஜர் ஒபிறைன் கலங்கியபோது, இராணி அப்புக்காத்தாய நிச்சாட் மோகன் என்பார் ஆள்பதியிடம் உத்தி யோகப் பற்றற்ற அங்கத்தவரின் விலகற் கடிதங்களைக் கவனிக்காது அவர்களை விட்டுச் சபையைக் கொண்டு நடத்துமாறு ஆலோசனை கூறினர்.

இங்ஙனம் விலகல் செய்த பெரியார்கள் இலங்கைச் சிர்திருத்த சபை என்றொரு சபையை ஆரம்பித்துக் குடியேற்ற நாட்டு மந்திரிக்குச் சீர்திருத்தங்கோரியும், வரவு செலவு கட்டுப்படுத்தப்படல் வேண்டு மெனவும் நினைவேடுகள் எழுதுவாராயினர்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் இரண்டாம் முறை இங்கிலாந் துக்குப் போயிருந்த காலத்தில் ஆங்கிலேயர் அவரை வெகுவாக உபசரித்தனர். பெரிய மந்திரிகளின் தேநீர் விருந்துபசாரத்திலும்

பிரசித்திபெற்ற விழாக்களிலும் அவர் கவர்ச்சிகரமாகப் பிரசன்ன மாயிருந்தார். அவரைப் பெரிய பெரிய இடங்கள் தங்கள் தங்கள் கொண்டாட்டங்களுக்கு அழைத்திருந்தனர்.

அவருடைய புருடத்துவம், திறமையான ஆங்கிலப் புலமை, எவரையும் வெகுவாகக் கவர்ந்ததால் ஆங்கிலப் பத்திரிகைகள் அவருடைய படங்களை அதிகமாகப் பிரசுரித்தன. முத்துக்குமாரசுவாமி அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கிலத்திலே தயாரித்து மகாராணி முன்னிலையில் நடித்துச் சிறப்புப் பெற்றார். அவர் தம் நாடகத்தை கானவன் என்ற பிரபுவுக்குச் சமர்ப்பித்துப் புகழ் பெற்றார். கானவன் பிரபுவே அக்காலத்தில் குடியேற்ற மந்திரியாராயிருந்தார்.

முத்துக்குமாரசுவாமி அவர்களின் நல்லியல்புகளை நேரிலறிந்த மொங்ரன் மைல்ஸ் என்ற கவுரன் பிரபு அவரை வெகுவாக உபசரித்து அவருடன் கைகோத்துலாவி நண்பராயினர். அப்பிரபுவின் மைந்தராய குறூவ் அவர்களே அருணாசலம் அவர்கள் காலத்தில் குடியேற்ற மந்திரியாராயிருந்து அன்னருக்குப் பல உதவிகளைச் செய்து கொடுத்தார். அவற்றினடிப்படையிலேயே பிற்காலச் சட்டசபைத் திருத்தங்கள் ஏற்பட்டன எனினும் அமையும்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் மாட்சிமை தங்கிய மகாராணியாரின் ஆங்கிலத்தை அட்சரம் பிசகாமல் அழகாகப் பேசியதைக் கேட்டு ஆங்கிலேயரே அதிசயித்தனர். அவருடைய தலைப்பாகை, உத்தரீயம் ஆகிய கீழைத்தேச உடையலங்காரத்தைக் கண்ட ஆங்கிலப் புலவர்கள் கவிபுனைந்து களித்தனர். அவற்றில் ஒன்று பின் வருமாறு:

His coat was like the snow drift
His pants of semilar hue;
His turban shone with diamonds,
And his girdle—it was blue.

பாமேஸ்ரன் பிரபுவும், டிசலறி என்ற பீக்கன்ஸ் பீல்ட் பிரபுவும் பிரித்தானிய பிரதம மந்திரிகளாய் இருந்தவர்கள். அவர்கள் இருவரும் முத்துக்குமாரசுவாமியின் ஆப்த நண்பர்களாயிருந்தனர். டிசலறி, அவர்களின் தகவுரையிலேலேயே விக்டோரியா மகாராணியார் முத்துக்குமாரசுவாமியைத் தமது அரண்மனைக்கு அழைத்து விருந்துபசாரஞ் செய்து நைற் பட்டமும் வழங்கினர் என்பர். பாமேஸ்ரன் பிரபுவின் நண்பனாய் முத்துக்குமாரசுவாமி இருந்தார் என்பதை லோலன்ஸ் அவர்கள் தமது விகடகவியில் பின்வருமாறு பாடியுள்ளார்.

Samy Coomarasamy
He doesn't care what harm is done
Samy Coomarasamy
He's a friend of Palmerston

இன்னும் டிசலறி அவர்கள் தாம் எழுதிய நவீனத்தில் குமார சுவாமி அவர்களை ஒரு முக்கிய பாத்திரமாக அமைத்து எழுதிச் சிறப்பித்துள்ளமையை இலக்கிய விற்பன்னர்கள் இரசிக்கக் கூடிய தாக இருக்கிறது.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் கென்ற் மாகாணத்தில் ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத் கிளே பீபீ என்ற ஆங்கிலேயப் பெண்ணைத் திருமணஞ் செய்து ஓராண் குழந்தையைப் பெற்றார். அக்குழந்தைக்கு ஆனந்தக் கென்ரிஸ் குமாரசுவாமி எனப் பெயரிட்டார். அக்குழந்தையே பிற்காலத்தில் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி என அகில உலகமும் போற்ற அருங்கலை விநோத ராய் வாழ்ந்து கலைத்தொண்டு செய்த பெரியாராவர்.

மைந்தர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் லண்டனில் உள்ள வைக்கிளிவ் கல்லூரியிலும், சர்வ கலாசாலையிலும் கல்வி கற்றுப் பெரிய பட்டங்கள் பரிசுகள் பெற்றார். அவர் தோறியனேட் என்னும் கனிப் பொருளில் ஆராய்ச்சி செய்து நில நூற் புலவராய்க் கலாநிதிப் பட்டம்பெற்றார். அவர் தமது 23 ஆம் ஆண்டுப் பராயத்தில் இத்தனை புகழுடன் இலங்கைக்கு வந்து இலங்கையையே தமது தாய் நாடெனக் கருதி கனிப் பொருள் துறைத் திணைக் களத்தில் அதிகாரியாய்ச் சில காலம் கடமையாற்றினார்.

கலா விநோதர் கலாநிதி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் ஆங்கி லத் தாயின் வயிற்றில் பிறந்து ஓர் ஆங்கில மாதையே மணம் முடித்து ஆங்கிலேயர் மத்தியிலே இங்கிலாந்திலேயே நீண்டநாள் வாழ்ந்து பழகியவராயினும், அவர் கீழைத் தேயக் கலை பண்பாடு ஆகியவை குடிபோவதைக் கண்டு மனம் நொந்து 1905 ஆம் ஆண்டிலே சமுதாயச் சீர்திருத்த சங்கம் என்றொரு தாபனத்தை உருவாக்கி நாட்டின் கலாச்சாரத்தை வளர்க்கவும் எங்கள் நாட்டுக்கு எள்ளத் தனையும் பொருத்தமற்ற மேலைத் தேயக் கலாச்சாரத்திலிருந்து மக்களை விடுவிக்கவும் அயராது உழைப்பாராயினர்.

ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் கலைத் தொண்டைச் சுருக்க மாகச் சொல்ல இயலாது. அவர் அநுராதபுரம் பொலநறுவை முதலாய பல பழைய தலைநகரங்களிலே அழிந்து கிடந்த கோயில்கள்,

விகாரைகள், தூபிகள், கட்டடங்கள், வாவிகள் என்பனவற்றை நல்ல முறையில் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து நடு நின்ற நன் நெஞ்சுடன் பல நூல்கள் எழுதியுள்ளார். அவர் ஓவியங்கள் சிற் பங்கள், சிலைகள், சிலாசனங்கள் என்பனவற்றை நுணுக்கமாகப் படித்தறிந்து அவை இன்ன இன்ன காலத்தவை என்றும் இன்ன நாகரிகத்தைச் சேர்ந்தவை என்றும் எழுதியுள்ளார். அவர் எழுதிய கலைக்களஞ்சியங்களுள் சிவ நடனம் இராசராசத்திர ஓவியங்கள், கண்டிக் கலையும் அதன் எழுச்சியும் வீழ்ச்சியும், இந்தியக் கலையின் சிறந்த பகுதிகள், மத்திய காலச் சிங்களக்கலை இந்தோனேசிய கலைச் சரித்திரம் என்பன சில. அவருடைய ஆராய்ச்சிப் புலமையையும் மேதாவிலாசத்தையும் அறிந்த அமெரிக்க அரசாங்கத்தார் அவரைத் தமது பொஸ்ரன் நகரில் உள்ள கலா நிலையம் என்னும் நுண்கலை மன்றத்துத் தலைமைப் பதவியை வழங்கிப் பேணினர்கள். நவநாகரிகம் தலை விரித்தாடும் அமெரிக்காவிலே வாழ்ந்த ஆனந்தக்குமாரசுவாமி பழைய முனிவர் போலத் தாடியும் சடையுந் தாங்கித் தாங்கரும் தவ வாழ்க்கையில் தமிழ் வாழ்வேவாழ்ந்து கலைத் தொண்டு செய்தார்.

சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் சட்டசபையிற் பேசிய பேச்சுக்களை வாசித்தறிந்த ஆங்கிலேயர் தமது பாராளுமன்றத்திலே இவரைப் பற்றிப் பாராட்டிப் பேசினர்கள். 'இலங்கையர் இத்தகைய சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றும் சக்தியுள்ளவர்களாயிருப்பின் அவர்களே தங்கள் காரியங்களைத் திறமையாக நடத்துவார்கள் எனத் தெரிகிறது''. என வெள்ளைக்காரர் விதந்து கூறிய வாசகம் இது.

றிச்சாட் மோகன் என்னும் இராணி அப்புக்காத்து அக்காலத்தில் ஆள்பதியின் வலது கரம் போலவும் அரசாங்கத்தின் தூண் போலவும் இருந்தவர். அவருடைய நாட்குறிப்புக்களில் முத்துக்குமாரசுவாமியின் காரசாரப் பேச்சுக்களைப் பற்றியும் அவர் தன்னைத் தாக்கிப் பேசிய சிறப்புக்களையும் வெகுவாக வியந்து புழுக்கத்துடன் எழுதியுள்ளார்.

சேர் முத்துக்குமாரசுவாமியவர்களுக்கு இங்கிலாந்திலே தொடர்பும் செல்வாக்கும் இருந்தன. அதனால் அவர் பிரித்தானிய பாராளுமன்றத்தில் அங்கத்தவராய் இருந்து இலங்கைக்கு வேண்டிய முன்னேற்றமான காரியங்களைச் சாதிக்க விரும்பினர். அதற்காக அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட ஆயத்தஞ் செய்த காலத்தில் நோய்வாய்ப்பட்டுத் திடீரெனத் தமது 46 ஆம் வயதில் காலமானார். சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் 4-5-1879 இல் காலமான போது இலங்கை ஒப்சேவர் பத்திரிகை அவரைப் பற்றிக் குறிப்பிட்டபோது, ''30,00000 திராவிட மக்களின் தலைவராய பெரிய மனிதன்'' என எழுதிப் பாராட்டியது. அவர் அக்காலத்தில் தமிழ்ப் பேசும் நல்லுலகத்தின் தனிப் பெரும் தலைவர். திராவிட நாட்டின் முடிசூடா மன்னன். சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் இறந்தமையைக் கேட்ட நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை மனமுருகிப் பல பாடல்கள் பாடினர். அவற்றுள் ஒன்று வருமாறு.

வெண்பா

தென்னிலங்கை வள்ளல் ஸ்றிகுமாரசு வாமி நயிற்
றென்னுந் தமிழ்மரபார் இந்திரனைப்-பின்னுதவா
மாகொடிய காலன் வசங்கொண்டான் ஐயையோ
ஆகடியம் ! ஆகடியம் ஆ!!

சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் இறந்தபின் கூடிய சட்டசபை வைகலில் தேசாதிபதி சேர். யேம்ஸ் லோங்டன் அவர்கள் ''இத்தருணத்தில் இந்தச் சபையின் மிகப் பழைய உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரின் மரணத்தால் இந்தச் சபைக்கும், உண்மையில் இந்த நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு எனது துக்கத்தைப் பகிரங்கமாக வெளியிடாமல் எனது பேச்சை முடிக்க இயலாது. சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் தமது கல்வியினாலும், திறமையினாலும், ஐரோப்பாவிலுள்ள பல பிரமுகர்களின் கவனத்தைத் தம்பால் ஈர்த்துக் கொண்டவராவர். அவர் எங்கள் மகாராணியால் நன்கு கௌரவிக்கப் பெற்றிருக்கிறார். தமது திறமையினாலும், இச்சபையில் காலந்தோறும் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு நடபடிக்கையிலும் அன்னார் காட்டிவந்த அயர்விலா அக்கறையினாலும் இச்சபையில் உள்ள தமது சகாக்களின் மதிப்பை அவர் பெற்றிருக்கின்றார். இந்நாட்டு மக்கள் அவர்மீது எத்தகைய மதிப்பு வைத்திருந்தனர் என்பதை உணர்த்தும் பல கடிதங்கள் அவர் இறந்தபின் எனக்குக் கிடைத்தன. அவருடைய திருநாமத்தை நாட்டு மக்கள் நீண்ட காலத்துக்குத் தமது ஞாபகத்தில் இருத்தி வருவார்கள்'' எனக் குறிப்பிட்டார்கள்.

சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் அருங்கலை விநோதராய ஆனந்தக் குமாரசுவாமியைத் தந்தமையோடு அவர் பெருமை நின்றுவிடவில்லை. பொன்னம்பல முதலியாரின் மூன்று மைந்தர்களாய குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் ஆகிய மும்மணிகளையும் வழிப்படுத்தித் தேசசேவையில் ஈடுபடுத்திய பெருமையும் சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கே உரியது. அவர்களும் தம் மாமனார் சொற்படியே தம் வாழ்வை அர்ப்பணித்துப் புகழ்பூத்து விளங்கினர்கள்.

சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் நூற்றாண்டு விழாவெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டபோது 1936 ஆம் ஆண்டில் அவருடைய நிழற்படம் ரோயல் கல்லூரி மண்டபத்தில் ஆளுநர் சேர். றெஜினோல்ட் ஸ்ரப்ஸ் அவர்களால் திரை நீக்கஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 19

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளைக் கைப்பற்றி நூறாண்டுகளாகி விட்டன. இந்த நூற்றாண்டுக் காலத்திலே இலங்கையில் பலவிதமான மாற்றங்களும் பல படித்தான முன்னேற்றமும் ஏற்பாட்டுள்ளன என்பதை இது காறும் அறிந்தோம். இனி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இலங்கையில் நடைபெற்ற அலுவல்களை இங்குக் காண்பாம்.

ஆள்பதி ஆதர் ஹவலொக் அவர்களுக்குப் பின் சேர் யோசேப் வெஸ்ற் றிச்வே அவர்கள் ஆள்பதியாக இலங்கைக்கு வந்தார். இவர் பட்டாளத்தில் பணிசெய்து பெருமை பெற்றதோடு ரூசியாவில் பீற்றர்ஸ் பேக் அரண்மனையில் சார் மன்னன் காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதியாளராகச் சென்று, உடன்படிக்கையில் கைச்சாத்து இட்டும் பெருமை பெற்றவர். ஆபிரிக்காவில் மொறக்கோவிலே சுல்தானின் அரண்மனையிலே தானிகர் தகுதியிலமர்ந்து சிறப்புச் செய்தவர். இலங்கை ஆள்பதிப் பதவியை ரும்பிக் கேட்டுப் பெற்று இங்கே வந்தவர். முன்னர் இந்தியாவில் இராசப் பிரதிநிதியிடம் வேலை பார்த்தபோதிலும் இலங்கையைப்பற்றி இவர் அறிந்திருந்தார். இலங்கையை விட்டுப்போன பழைய ஆள்பதிகளிடமும் இலங்கையைப் பற்றிய பல தகவல்களைக் கேட்டு முன்னறிவு பெற்று இங்கே வந்தார்.

ஆள்பதி றிச்வே அவர்கள் 1895 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வந்து இலங்கையைச் சுற்றிப் பார்த்து இங்குள்ளவர்களோடு மிக நெருங்கி உரையாடி நேரனுபவம் பெற்றார். இவர் காய்தல் உவத்தல் இன்றி இலங்கை வாழ்மக்களை இன மத மொழி வேறுபாடு சுருதாமல் அறிந்தார் என்பர். இவருக்கு முன்னிருந்த ஆள்பதி இவருக்கு நிதி நிலைமையை நல்லமுறையில் விடுச் சென்றுராகையால் இவர் இலங்கையின் பல அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கக் கூடியதாயிருந்தது. தேயிலைச் செய்கை, புகையிரதப் பாதை, வீதிகள் அகலிப்பு, சுகாதார சேவை புனரமைப்பு, கல்வி, அளவையாளர் அலுவலகப் புனரமைப்பு என்பன நல்ல முறையில் நடைபெற்றன.

ஆள்பதி றிச்வேயின் காலத்தில் கல்வித்துறை சிறப்புப் பெற்றது. இலங்கையர் மேலுத்தியோகங்களில் அமரும் வாய்ப்பும் அதிகமாகக் கிடைப்பனவாயின. றிச்வே அவர்கள் நீர்ப்பாசனத் துறையை வேறுக அமைத்து அதிலே பல அபிவிருத்தித் திட்டங் களைச் செய்பவாரம்பித்தார். அன்றித் தாவர நூலாராய்ச்சித்துறை, நில நூலாராய்ச்சி என்பன இவர் காலத்திலேதான் ஆரம்பிக்கப் பட்டன. கனிப்பொருளாராய்ச்சித் துறையின் மேலதிகாரியாய மர்ந்த கலாவிநோதர் ஆனந்தக் கென்ரிஸ் குமாரசுவாமி அவர் களுடைய அரியசேவை இலங்கைக்குக் கிடைத்த காலமும் இதுவே யாகும்.

கிழக்குக் கிழக்கே என்றும் மேற்கு மேற்கே என்றும் முன்னர் ஒரு பெரியார் கூற அவை ஒன்று சேரா என உறுதி கூறினர். ஆனல் ஆள்பதி றிச்வே அவர்கள் கீழைத்தேய அறிவு மேலைத்தேய அநுபவத்தோடு ஒன்று சேருமானல் இலங்கையின் வளம் பூரணப் பொலிவு பெறும் என்று கிழக்கு மேற்கு நாடுகள் கொண்டுங் கொடுத்தும் உபகரிக்கும் முறையொன்றை முன்னரே அமைக்க முயன்றார்.

கொழும்புத் துறைமுக அபிவிருத்தியில் ஆள்பதி றிச்வே அரியபணி செய்துள்ளார். பிரித்தானிய அரசாங்கமும் அதன் செலவில் அரைப் பங்கை உபகரிக்க உடன்பட்டது. றிச்வே காலத்தில் போக்குவரத்துத் துறையில் துரித முன்னேற்றங்கள் நடை பெற்றன. மின்சாரத்தில் ஓடிய 'திராம் கார்' சேவை இவர் காலத்திலேதான் ஆரம்பிக்கப்ப டது. இலங்கையில் முதன் முதலாக ஓடிய மோட்டார்வண்டி இவர் காலத்திலேயே இறக்குமதியாயிற்று.

இலங்கைப் பிரதமராயிருந்த S. W. R. D பண்டாரநாயக அவர்கள் பிறந்த காலமும் இதுவே. அக்காலத்திலே முதலியார் உத்தியோகம் வகித்த பண்டாரநாயக அவர்களின் தந்தையார் தம்முடைய பிள்ளைக்குப் பெயரிட்டபோது ஆள்பதி அவர்களைக் கௌரவிக்குமுகமாகத் தம் பிள்ளையின் பெயரில் றிச்வே அவர் களின் பெயரையுஞ் சேர்த்தே சொலமன் வெஸ்ற் றிச்வே டயஸ் பண்டாரநாயகவென நாமகர்ணஞ் செய்தார்.

இன்று இலங்கைப் பிரதமரின் உத்தியோக வாசத்தலமாக விளங்கும் அலரி மாளிகை எனப்படும் கட்டட்டமும் அக்காலத்திலே தான் அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டது.

றிச்வே காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களுள் இகலாட்டுக்குரிய தான ஒரு கட்டளைச்சட்டம் வெறுங் காணி சம்பந்தமாய் ஏற் படுத்தப்பட்டதாகும். வெறுங்காணிக் கட்டளைச் சட்டத்தை உரு வாக்கிய ஆள்பதியின் நோக்கும் நல்லதாயிருந்த போதிலும் பொது மக்கள் அபிப்பிராயம் அதற்கு மாறுகவே நிலவியது. கள்ளத் தனமாகக் காடு வெட்டுதலும், காட்டு நிலத்தைச் சுவீகரித்தலும் பல காலமாக நடைபெற்று வந்தன. ஆகவே 1840 ஆம் ஆண்டில் காடுகளும், வெறும் தரைகளும், ஐந்து ஆண்டுகளுக்குக் குறைந்த ஆளுரிமை நிலங்களும் அரசாங்க நிலமாகக் கணிக்கப்படும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்பின் இப்போது றிச்வே காலத்தில் நிறைவேற்றப்பட்ட கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு விசேட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார். அவர் முன்னி லையில் காணிகளின் உரிமை பதிவு செய்யப்படல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து நாட்டில் கிளர்ச்சிகள் எழுந் தன. லண்டனில் உள்ள குடியேற்ற மந்திரியாருக்குக் கிளர்ச்சி யாளர் விண்ணப்பஞ் செய்து பிரித்தானிய பாராளுமன்றத்திலும் இந்த அலுவல் பேசப்பட்டது.

ஆளுல் ஆள்பதி றிச்வே அவர்கள் தாம்கொண்ட கொள் கையைக் கைநெகிழ விடவில்லை. ''இச்சட்டம் இலங்கை வாழ் மக்களின் சுபீட்சத்துக்காகவே இயற்றப்பட்டது. எங்கள் சந்ததி யினரின் நன்மைக்காக நாம் எம்தலைமுறையில் செய்யும் நன்மை இது. காணிகளில் உரிமை கொண்டாடுவோர் ஆட்சியில் ஆவ ணத்தில் ஏதேனும் ஒன்றைக்காட்டி உண்மையை நிலைநாட்டுங்கள் அப்படியானுல் காணி உங்களுடையதே'' என்று நிலைமையைத் தெளிவுபடுத்தினர்.

ஆளுல் இக்கட்டளைச் சட்டம் முன்னர் 12 ஆம் இலக்கச் சட்டமாய் நிலங்களை முடிக்குரியதாக்கிச் சிங்களவரின் உரிமையை நீக்கி அதை ஐரோப்பியருக்குக் கோப்பித் தோட்டங்களாக்கு வதற்கும், இந்தியத்தமிழர் குடியிருப்பதற்கும் வழிவகுத்தமையால் பெரிய எதிர்க் கிளர்ச்சியும் நடைபெற்றதைச் சிங்கள மக்கள் 50 ஆண்டுகள் கழிந்த பின்பும் நினைவில் வைத்திருந்தனர்.

ஆள்பதி றிச்வே அவர்கள் காலத்திலே 1903 ஆம் ஆண்டின் முற்பகுதியிலே இலங்கை அரசியல் முறையில் மாற்றம் ஏற்படல் வேண்டும் என ஐரோப்பியர் ஒரு திருத்தங் கோரினர். அதில் ஐரோப்பியர் பிரதிநிதியாய J. N. கம்பல் என்பார் 'சட்ட நிறை வேற்று சபையில் சட்டசபைப் பிரதிநிதிகள் இருவர் இடம்பெறுதல்

வேண்டும்'' என ஒரு பிரேரணையை நிறைவேற்றினர். அப்பிரேரணைக்குத் தமது ஆதரவை அளித்த ஆள்பதி அவர்கள் அதில் கூறிய வண்ணம் திருத்தம் ஏற்படலாம் எனத் தமது தகவுரையையும் எழுதிக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பிவைத்தார்.

அக்காலத்தில் குடியேற்ற நாட்டு மந்திரியாராயிருந்த யோசேப் சேம்பர்லின் அவர்கள் அந்த நியமனவேட்டைக் கருத்தூன்றிப் படித்தபின் அவ்வண்ணம் திருத்தம் செய்ய இயலாதென மறுத்தார். அதற்கு அவர் கூறிய காரணமும் இங்கே கருதற்பாலது. ''சட்டசபையிலிருந்து சட்ட நிறைவேற்றுச் சபைக்குத் தெரியப்படும் பிரதிநிதிகள் மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளாயிருத்தல் வேண்டும் என்றும், அவர்கள் ஆள்பதி அவர்களின் அபிமானத்துக்குரிய நியமன அங்கத்தவராதல் ஆகாதென்றும்'' குறிப்பிட்டு வீட்டாணை செய்தார். ஆள்பதியால் நியமிக்கப்பட்டு அவர் ஆதரவில் தங்கியிருந்த அங்கத்தவர் சட்ட நிறைவேற்று சபையிலும் ஆள்பதிக்காகவே தலையசைப்பார்கள் என்று கருதியே சேம்பர்லின் அதனை நிராகரித்தார். உண்மையில் பொதுமக்களுக்கு நியமன அங்கத்தவரால் நன்மையில்லைத்தானே என்பர்.

ஆள்பதி றிச்வே அவர்களுக்குப் பின்னர் ஆள்பதி சேர் ஹென்றி பிளாக் அவர்கள் 1903 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தார். அவர் அவுஸ்திரேலியா, யமிக்கா, கொங்கோங் ஆகிய இடங்களில் ஆள்பதியாகக் கடமையாற்றி அநுபவம் பெற்ற ஜரிஸ்காரன். அவருடைய சேவையை வியந்த கொங்கோங் வாசிகள் அவர் சேவைக் காலத்தை நீடிக்குமாறு குடியேற்ற மந்திரியை விநயமாக வேண்டிக் கொண்டார்கள். ஆனால் குடியேற்ற மந்திரியார் பிளாக் அவர்களை இலங்கைக்கு மாற்றிவிட்டதால் அவர் 3-12-1903 இல் இங்கே வந்து சேர்ந்தார்.

ஆள்பதி பிளாக் அவர்கள் விவசாயத்துறையில் அதிக முயற்சி எடுத்தார். அவர் காலத்திலே றப்பர்ச் செய்கை அதிகமாக அகலிப்புச் செய்யப்பட்டது. அவர் ஆட்சிக் காலத்தில் 150000 ஏக்கர் றப்பர்த் தோட்டம் இலங்கையில் இருந்ததென்பர். பிளாக் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சட்டசபையின் அங்கீகாரம் இல்லாமல் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் முத்துக் குளிக்கும் குத்தகையை ஏலத்தில் விட்டமையும்; மேல் உத்தியோகத்தருக்குச் சாதகமான ஒரு சம்பளத் திட்டம் வகுத்தமையும் ஒரு முரண்பாட்டை உண்டாக்கியது. அத்தோடு இலங்கையர் மேலுத்தியோகம் வகிக்கும்போது வெள்ளைக்காரரைப் போன்று தகுதி வாய்ந்தவராகக்

காணப்படவில்லை எனக் குடியேற்றக் காரியதரிசி சேர். அலக் சாண்டர் அஸ்மோர் கூறியமையும் வருத்தத்துக்குரிய விடயமா யிருந்தது.

இக்கருத்தை அஸ்மோர் அவர்கள் வெளிவெளியாக பொன் னம்பலம் அருணாசலம் அவர்களின் விடயத்தில் கூறியும் உள்ளார். அருணாசலம் அவர்கள் ஆங்கிலேயராக இல்லாத குற்றத்துக்காகவே அவரைப் பிரித்தானிய அரசாங்கம் குடியேற்றக் காரியதரிசியாக உயர்த்தவில்லை என்றாராம். அதன் இரகசியம் நிறத்துவேசமேயன்றி வேறொன்றுமில்லை. அருணாசலத்தின் புத்திக் கூர்மையில் ஆயிரத்தில் ஒரு பாகம் தானும் இல்லாத வெள்ளையர் சிலர் அரசாங்க அதிப ராயும் ஆள்பதிக்கு அடுத்த உத்தியோகத்தராயும் இருந்தார்கள் என்பதும் உண்மையே. அது நிற விசேடத்தின் மகிமையேயன்றி மேதாவிலாச மகிமையல்ல என்பது வெளிப்படையாக விளங்கிற்று. அப்படியில்லையானால் அருணாசலம் அவர்கள் ஆள்பதிக்கு அடுத்த உத்தியோகத்தில் அமர்ந்திருப்பர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இலங்கை அரச யாப்பில் திருத்தங்கள் ஏற்படவேண்டும் எனப் பல பாகங்களி லிருந்தும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. இலங்கைக் கரைநாட்டு வினைபொருள் சங்கம் என ஒரு தாபனம் 15-2-1908 இல் ஆரம் பிக்கப்பட்டது. இலங்கை வாழ் ஐரோப்பியர் தங்கள் சமூகத்தின் பிரதிநிதிகள் தொகை குறைக்கப்பட்டமையை வெகுவாகக் கண்டித் தனர். ஒல்லாந்துப் பறங்கியர் தமக்கென ஒரு சங்கத்தை 1907 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்தனர். அதன் மூலம் அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பலப்படுத்திக்கொள்ள முனைந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பறங் கியருக்கிருந்த செல்வாக்கு இருபதாம் நூற்றாண்டில் அவர்களுக்கு இருக்கவில்லை.

இக்காலத்தில் 1911 இலங்கையிலிருந்து 184000000 முத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டு அதனால் 84000000 ரூபா வருமா னங் கிடைத்தது. இன்னும் 6000000 முத்தல் றப்பர் ஏற்றுமதியாகி 28000000 ரூபா கிடைத்தது. அன்றித் தென்னைப் பிரயோசனங் களால் 36000000 ரூபா கிடைத்தது. சுங்கத்தீர்வையாக 5746000 ரூபா கிடைத்தது. இத்தீர்வைப்பணம் 1811 இல் 442000 ரூபாவா கவே இருந்தது.



பொன்.
குமாரசுவாமி
அவர்கள்



சேர். பொன்.
இராமநாதன் அவர்கள்





கொழும்புத்துறைமுகம் பிரபலிக்கமுற்றதால் 2121 கப்பல்கள் 1910—1911 ஆம் ஆண்டுகளுக்கிடையில் துறைமுகத்தில் வந்து தங்கி நின்று போயின. உள்நாட்டுப் போக்குவரத்துத் துறையில் 568 மைல் நீளமான புகைவண்டிப் பாதை இருந்தது. மேலும் பல மைல் நீளமான பாதைகளமைப்பதற்கு ஆயத்தஞ் செய்யப்பட்டது. இன்னும் 2914 மைல் நீளமுள்ள செப்பஞ் செய்யப்பட்ட வீதிகளும் 4000 மைல் கெட்டியாக அமைந்த வீதிகளும் இருந்தன. இதற்கு 50 ஆண்டுகளுக்கு முன் 564 மைல் செப்பமிடப்பட்ட வீதிகளும் 456 மைல் கெட்டியாக்கப்பட்ட வீதிகளுமே இருந்தன. ஆனால் 1807 ஆம் ஆண்டில் இலங்கையில் வீதிகள் இருக்கவில்லை என்றே கார்டினர் என்பார் எழுதியுள்ளார்.

இலங்கையின் பல பாகங்களிலும் எல்லாமாக 1815 ஆம் ஆண்டளவில் 28 வாடி வீடுகள் இருந்தன என்றும், இப்போது 1911 இல் 193 முதற்றரமான சகல வசதிகளுமுள்ள வாடி வீடுகள் இருந்தனவென்றும் கூறுவர். ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் 28-2-1814 இல் கொழும்பிலிருந்து புறப்பட்டு அரிப்பு, யாழ்ப் பாணம், திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கூடாக மட்டக் களப்பைச் சென்றடைய 30-4-1815 ஆனதென்றும் அறியக்கிடக் கிறது. ஆனால் 1911 ஆம் ஆண்டளவில் கொழும்பிலிருந்து எந்த ஊரையும் இரண்டு நாள்களுள் சென்றடையக் கூடியதாகப் போக்கு வரத்து வசதிகள் ஏற்பட்டிருந்தன.

இலங்கைக்கு 1902 ஆம் ஆண்டில் மோட்டார் வண்டி முதன் முதலாக வந்தது. பத்து வருட காலத்துள் இலங்கையில் 1000 மோட்டார் வண்டிகள் இருந்தன. என்ஜினும் பொருள் பண்டங்களை ஏற்றிச் செல்லும் பெரிய லொறிகள் வான்கள் அக்காலத்தில் அதிகம் இல்லாமை காரணமாக இந்நாட்டில் 23000 மோட்டு வண்டிகள் இருந்ததாக அறியக்கிடக்கிறது.

இலங்கையில் உள்நாட்டில் நிலவிய ஆயவரிகள் 1-1-1911 முதலாக நீக்கப்பட்டதால் போக்குவரத்து அதிகப்படலாயிற்று. முன்னர் ஆயத்துறையால் இலங்கை அரசாங்கத்துக்கு ஆண்டுச் சராசரியாக 850000 ரூபா கிடைத்தது போக்குவரத்துத் துறையில் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றமை போலவே தந்தி டெலி போன் தொடர்பிலும் தபாற் போக்குவரத்திலும் அதிக முன்னேற் றங்கள் ஏற்படலாயின. தந்திப் போக்குக்கு 4595 மைல் நீள முள்ள கம்பிகளும் டெலிபோன் வசதிக்கு 1447 மைல் நீளக்

கம்பிகளும் இருந்தன. முன்னர் தபாலோடிகளும் கோச்வண்டி களும் நீராவிக் கப்பல்களும் புறூக் கூட்டங்களும் தபால் கொடுக்க உபயோகமாயிருந்த இடத்தில் இருபதாம் நூற்றாண்டுக் காலத்தில் உடனுக்குடன் தபால் எடுக்கவும் கொடுக்கவும் வசதிகள் ஏற் பட்டதால் மக்கள் தொடர்பு அதிகரிக்கலாயிற்று. இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாகச் சிறப்படைந்தமையால் அவர்களுக்கு முன்னர் இல்லாத பல வசதிகள் இப்போது ஏற்பட லாயின. தற்காலக் கல்விமுறை நாட்டுக்கு நல்லது என்ற பிப் பிராயமும் எங்கும் பரந்ததால் பாரம்பரியத் தொழில் முறைகளிலும் சாதிப் பிரிவுகளிலும் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டலாயின.

இவ்வாருன முன்னேற்றங்கள் பல ஏற்பட்ட பின்னரும் அவற்றுக்கு அமையச் சட்டசபையில் திருத்தங்கள் ஏற்படவில்லை. முன்னர் இலங்கையருக்கு ஆங்கில அறிவோ அல்லது ஆங்கிலேயரின் பாராளுமன்ற அரசியலனுபவமோ இல்லாத காலத்தில் அமைக்கப் பட்ட வகுப்புவாத நீதியிலமைந்த பிரதிநிதித்துவ முறை இப்போது ஆயிரம் மக்களுள் 350 பேர் கல்வியறிவு பெற்ற பின்னும் மாற்றி யமைக்கப்படாமலே இருந்தது. பழைய வகுப்புவாதப் பிரதிநிதித் துவமும் மக்கள் தொகைக்குத் தக்கதாகத்தானும் மாற்றியமைக்கப்பட வில்லை. ஓரினத்துக்கு ஒருவர் என இலங்கையருக்குக் கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவமுறை மேலும் பொருந்தாத அமைப்பிலேயே இருந்தது. அது 1458000 சிங்களவருக்கு ஒருவரும் 23000 பறங்கியருக்கு ஒரு வரும் என்ற கணக்கிலேயே இருந்தது.

இன்னும் 1906 ஆம் ஆண்டில் இருந்த நிலைமையை விரித் துரைக்கின் அன்றும் பரிபாலனப் பொறுப்பு ஆள்பதி அவர்களி டமேயே இருந்தது. அவருக்கு ஆலோசனை கூறுவதற்குச் சட்ட நிருவாக சபை இருந்தது. இந்தச் சட்ட நிருவாக சபையினர் கூட சட்டசபையின் உத்தியோக அங்கத்தவரில் இருந்து ஆள்பதியின் அபிமானத்துக்குரிய அங்கத்தவரிலிருந்தே தெரியப்பட்டார்கள். அவர்களும் ஆள்பதி அவர்களுக்குச் சார்பான ஓர் உட்குழுவினராயே இருந்தனர்.

சட்ட சபையில் 17 அங்கத்தவரிருந்தனர். அவர்களுள் 9 பேர் உத்தியோக அங்கத்தவரும், 8 பேர் உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகளுமாவர். உத்தியோக அங்கத்தவர் பெரும்பாலும் மேலுத்தி யோகம் வகித்த வெள்ளையராயே இருந்தனர். அவர்கள் நிலை பின் வருமாறு.

1. குடியேற்றச் செயலாளர்
2. இறை சேரித் தலைவர்
3. வருமானத் தலைவர்
4. பிரதம படைத் தலைவர்
5. சட்டத்துறை நாயகம்
6. மேல் மாகாண அதிபர்
7. மத்திய மாகாண அதிபர்
8. வேறு யாராவது பெரிய உத்தியோகத்தர்
9. ,, ,, ,, ,,

உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் எண்மரும் பின் வருவோராவர்.

1. சுரை நாட்டுச் சிங்களப் பிரதிநிதி — 1
2. கண்டி நாட்டுச் சிங்களப் பிரதிநிதி — 1
3. தமிழர் பிரதிநிதி — 1
4. முஸ்லிம்கள் பிரதிநிதி — 1
5. பறங்கியர் பிரதிநிதி — 1
6. ஐரோப்பியர் பிரதிநிதி — 1
7. தோட்டத்துறைப் பிரதிநிதி — 1
8. வர்த்தகத்துறைப் பிரதிநிதி — 1

இவர்களுள் ஏழாம் எட்டாம் இலக்கத்தில் குறிக்கப்பட்டவர்கள் அவ்வச் சங்கங்களின் தகவுரையின் வண்ணம் ஆள்பதி அவர்களால் நியமிக்கப்பட்டவராய் இருந்தனர். ஏனையோர் ஆள்பதியின் விருப்பத்தின் வண்ணம் நியமிக்கப்பட்டவராவர்.

ஆள்பதி அவர்களின் ஆலோசனைச் சபை எனப்பட்ட சட்ட நிர்வாக சபை அங்கத்தவர் முன்சொன்ன உத்தியோக அங்கத்தவரிலிருந்தே நியமிக்கப்பட்டனர். அத்திருக் கூட்டத்தில் உத்தியோகப் பற்றற்றவர் எவரேனும் இருக்கவில்லை. அன்றி இலங்கையர் எவராவது நியமிக்கப்படவும் இல்லை. அத்தகைய சட்டசபையின் அமைப்பைப் பின்வருமாறு வகுப்பர்.

சட்டசபை
17

உத்தியோக அங்கத்தவர் 9	உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் 8

சட்ட நிருவாகசபை
5

இக்காலத்தில் இலங்கையின் குடிசனம் 3968541 எனவும், வருமானம் 35030661 ரூபா எனவும், செலவு 32644215 ரூபா எனவும், பகிரங்கக் கடன்பளு 72719095 ரூபா எனவும் அறியக் கிடக்கின்றன.

முன்னர் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதியாய் நியமிக்கப் பெற்ற இராமநாதன் அவர்கள் 28-8-1879 தொடக்கம் 15-12-1892 வரை சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயிருந்தார். அவர் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கிச் சட்ட அறிஞர் நாயகம் எனப்படும் சொலிசயிற்றர் ஜெனறலாகப் பதவியேற்றமையால் அவருடைய இடத்தில் அவருடைய தமையனார் பொன் குமாரசுவாமியவர்கள் 4-2-1893 இல் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாகச் சட்டசபையில் நியமனம் பெற்றார்.

பொன் குமாரசுவாமி அவர்களிடமும் அவருடைய பாரம் பரியக் குணங்கள் மிகுதியாய் இருந்தன என்பர். சத்தியம், நேர்மை, தீரம், தருமசிந்தனை, தியாகம், தேசப் பற்று, தயை ஆகிய உத்தம நற் பண்புகள் குமாரசுவாமியிடம் களி நடம் புரிந்தன எனப் புலவர்கள் போற்றினர். அஞ்சாமை மிக்க அவர் ஆள்பதி அவர்களின் போக்கை வழிப்பறி காரனின் போக்கு எனக் கூறிக் கண்டித்தார். அது

"வேலொடு நின்று னீடுவென் றதுபோலுங்
கோலொடு நின்று னிரவு"

என்று திருவள்ளுவரால் கொடுங்கோன்மையில் கூறப்பட்டதாகும். ஆட்சி முறையில் இங்ஙனம் கண்டிக்கப்பட்ட ஆள்பதி அவர்கள் குமாரசுவாமி அவர்களை மறுமுறை நியமிப்பதில்லை என வஞ்சினங்கொண்டதும் உண்டு.

ஆனால் தமிழர் பொன் குமாரசுவாமியையே மறுபடியும் ஆள்பதி அவர்கள் நியமித்தல் வேண்டும் எனக்கோரி ரெக்வுட் அவர்கள் தலைமையில் மாபெருங் கூட்டங் கூடி ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். ஒரு சிலர் பிறிட்டோ அவர்களின் மருகர் சுவாமிநாதன் அவர்களையே நியமித்தல் வேண்டும் எனக்கோரினர். எனவே ஆள்பதி அவர்கள் ரெக்வுட் அவர்களை இரகசியமாய்த் தம் அரண்மனைக்கு அழைத்து அவர் மனத்தை மாற்றி அவரையே பிரதிநிதியாக நியமித்தார். ரெக்வுட் அவர்கள் 13-3-1898 முதல் 13-3-1903 வரை அங்கத்துவம் வகித்தபின் பொன் குமாரசுவாமி அவர்களே 15-3-1903 முதலாக மறுபடியும் நியமனம் பெற்றார்.

குமாரசுவாமி அவர்கள் ஆள்பதியின் போக்கை வழிப்பறி காரனின் போக்கு என்று கூறியதை ஆள்பதி அவர்களும் அவர் சார்பான அரசாங்கமும் சட்டை செய்யாமல் விடவில்லை. அதற்கு விளக்கங் கூறுமாறு குமாரசுவாமி அவர்களைக் கேட்டனர். அதற்கு அவர் எள்ளளவும் அஞ்சாது ஆணைச்சபையொன்றை நியமித்தால் அச்சபையினர் முன் தான் கூறியதை விளக்கலாம் என்று கூறினார். அதற்கு மேல் ஆள்பதி அவர்களால் ஒன்றுஞ் செய்ய இயலவில்லை. அவ்வளவில் அவ்வலுவல் ஆறித்தணிந்தது. என்றாலும் ஆள்பதியின் மனக்கொதிப்பு ஆறுமலே இருந்தது என்பது அடுத்த நியமனத்தில் தெற்றெனப் புலப்பட்டது. பொன் குமாரசுவாமி யவர்கள் 1906 ஆம் ஆண்டில் இறந்த பின் அவருடைய இடத்தில் அம்பலவாணர் கனகசபை அவர்கள் நியமிக்கப்பெற்றார்கள்.

நீதியே நிறம்பா வண்ணம்
நெடுகவே எடுத்துக் கூறித்
தீதிலா மகற்றித் தெய்வத்
திருவெல்லாம் மன்றம் பூப்ப
வாதமே புரியவல் லோன்
வசையிலா இசையே பூண்டோன்
காதலார் சுதேசசாமிக்
கண்ணியன் வாழ்க மாதோ.

— ந. சி. பாரதி

காடுகெடுத்து நாடாக்கும் முயற்சி நல்ல முறையில் நடை பெற்றது. தோட்டத்தின் பொருட்டும், சேனைச் செய்கையின் பொருட்டும், விறகின் பொருட்டும் காடுகள் அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இலங்கை பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்தது. அகன்ற வீதிகள், பாலங்கள், புகைவண்டிப் பாதைகள் யாவும் திருந்திய முறையில் செப்பமிடப்பட்டன. தேயிலை, கொக்கோ, சிங்கோனா, தென்னை, புகையிலை பெருந்தொகையாகப் பயிரிடப்பட லாயின. நெற்செய்கைக்கு ஏற்ற முறையில் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. தந்தி தபால் சாதனங்களில் திருத்தங்கள் செய் யப்பட்டன.

காலக்கழிவினால் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கதாக சன சமுதாய வாழ்வும், தனிவாழ்வும் கட்டாயமாக மாறுதலடைய வேண்டியனவே. எனவே அரசாங்கத்தின் உபபிரிவுகளும் உட்பிரிவு களுமான திணைக்கள வேலைகள் அலுவல்கள் ஒவ்வொன்றும் முன்னேற் றத்துக்குத் தக்கதாக உழைக்கவாரம்பித்தன. அரசாங்கமும்

முன்னேற்றத்துக்காவன செய்தது. இக்காலத்து மாற்றங்களுக்கு உடந்தையாகவும் காரணராகவும் இருந்தவர் ஆள்பதி றிச்வே அவர்களாவர். றிச்வே அவர்கள் காலத்தில் அரசாங்க உத்தியோகத்தர் பல வழிகளிலும் அநுகூலமடைந்தனர். அவர்கள் ஏற்ற முறையில் உத்தியோகப் பயிற்சி பெற்றமையோடு உயர்ந்த வேதனமும் பெறலாயினர்.

ஆள்பதி மக்கலம் அவர்கள் ஆட்சிக் காலத்திலே கிளறிக்கல் எனப்படும் எழுது வினைஞர் சேவையில் ஏராளமான இளைஞர்கள் சேர்ந்தார்கள். அச்சேவையில் பொதுச் சேவை, றெயில்வே சேவை, தபாற் சேவை எனப் பல பிரிவுகள் இருந்தன. அவற்றில் திறமையாக வேலை செய்தவருக்குக் காலந்தோறும் வகுப்புயர்ச்சியும் வேதன யுயர்ச்சியும் படிப்படியாக வழங்கப்பட்டன.

மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதால் பல நகரங்கள் பிர பலிக்கமுறுவனவாயின. மாகாண அதிபர்கள் அதிக வேலை செய்ய வேண்டியிருந்தமையால் அவர்களின் கீழ் சேவை செய்த மணியகாரர், முதலியார்கள், றட்டமகாத்மயாக்கள், உடையார்கள், கோறளைகள் விதானைமார் ஆகிய உத்தியோகத்தருக்கும் அதிக பொறுப்புக்கள் ஏற்பட்டன.

பொலிசுத் திணைக்களம் நல்ல வேலை செய்வதற்காக அத் திணைக்களத்தினின்றும் சிறைச்சாலைப் பரிபாலனம் வேறுக்கப்பட்டுப் புதிய திணைக்களம் உருவாக்கப்பட்டது. ஆள்பதி பிளாக் அவர்கள் ஆட்சிக் காலத்திலே பாலிசதிகாரிகளாய் இருந்தவர் இங்கிலாந்திலே பயிற்சி பெற்றவராயிருந்தனர். உள்ளூர்க் காவல் பொலிசுக்காரருக்கும் பயிற்சியளிப்பதற்குப் பயிற்சிக் கல்லூரி திறக்கப்பட்டது.

நீர்ப்பாசனம்:

முன்னர் சிங்கள மன்னராட்சிக் காலத்தில் இலங்கைக் கரை நாடுகளில் நீர்பாசனக் குளங்களும் வாய்க்கால்களும் அதிகமாக இருந்தன. நீருயர நெல்லுயரும் என்ற முதுமொழியை அவர்கள் கருத்தில் கொண்டே கருமஞ் செய்தனர். பிற்காலத்தில் அவை கைவிடப்பட்டு உருக்குலைந்து போயின. ஆங்கிலேயர் நீர்ப்பாசன வேலைகளைச் சிறிதளவிற் செய்ய முற்பட்ட காலத்தில் அவ்வேலைகள் முதலில் பகிரங்க வேலைத் திணைக் களத்தின் பரிபாலனத்திலேயே செய்யப்பட்டன. ஆள்பதிகள் நீர்ப்பாசனத் துறையில் அதிக

முயற்சி எடுக்க முயன்ற காலத்திலே நீர்ப்பாசன சங்கம் என ஒரு தாபனத்தை முதலில் உண்டாக்கினர்கள். ஆனல் காலப்போக்கில் அச்சபை செயலற்றுப் போய்விட்டது.

ஆள்பதி ஆச்வே அவர்கள் பேருழைப்பின் பயனக 1898 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களம் என ஒரு காரியாலயம் நிறுவப் படலாயிற்று. இத்திணைக்களமும் பகிரங்க வேலைப்பகுதியோடுதான் முதலில் இணைந்திருந்தது என்ருலும் நீர்ப்பாசனத்துக்கெனத் தனிப்பட்ட ஓர் உத்தியோகத்தர் இருந்தார். ஹென்றி பாக்கர் என்ற இவ்வுத்தியோகத்தர் முயற்சியால் 1900 ஆண்டில் நீர்ப் பாசனத்துக்கென 50000 ரூபா முதலில் ஒதுக்கப்பட்டது. மாகா ணங்கள் தோறும் மாகாணுதிபதிகள் உதவியுடன் இவர் நீர்ப்பாசன வேலைகளைக் கவனித்து வந்தார்.

ஆள்பதி பிளாக் அவர்கள் விவசாயத்தில் அதிக ஊக்கமெடுத் தமையால் நீர்ப்பாசன முயற்சிகளை மேலும் அபிவிருத்தி செய்ய முயன்ருர். நீர்ப்பாசனத் திணைக்களத்தை முதலில் திருத்தியமைத் துக்கொண்டு ஆறில்லாது வரண்ட வடமாகாணப் பிரதேசங்களில் உள்ள வேலைகளை முதலிற் கவனித்தார். யயன்ஸ்ராங் எனப்படும் கட்டுக்கரைக் குள வேலைகள் உடனடியாகக் கவனிக்கப்பட்டன. அதில் 1046000000 கனஅடி நீர் தங்கி நிக்கக்கூடியது. கரைச்சி நீர்ப்பாசனக் குளத்திலிருந்து 20000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச் சலாம். எனவே இவையும் இவை போன்ற ஏனைய வேலைகளும் கவனிக்கப்படலாயின.

நீர்ப்பாசனத் திணைக்களம் தனியாக உருவாயபின் இலங்கை நீர்ப்பாசன அலுவல்களுக்காக ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பிரிவுகள் தோறும் அலுவலகம் நிறுவப்பட்டு அரும் பணிகள் நடை பெறலாயின. இலங்கையின் நீர்ப்பாசனப் பிரிவும் அதில் அடங்கிய பிரதேசங்களும் வருமாறு.

1.	மேற்பிரிவு	— கொழும்பு, களுத்துறை
2.	மத்தியபிரிவு	— ஊவா, வடமேல்மாகாணம்
3.	வடபிரிவு	— வடமாகாணம்
4.	கிழ்ப்பிரிவு	— கிழ்மாகாணம்
5.	வடமேற்பிரிவு	— வடமேல்மாகாணம்

அத்தியாயம் 20

ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்

இற்றைக்கு ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பின்னாக இலங்கை முழுவதும் ஒரு தேர்தற்றொகுதியாய் இருந்தது என்றும், அதன் தெரியப்பட்ட பிரதிநிதியாய் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இருந்தார் என்றும் நினைக்கும்போது அக்காலத்தில் இருந்த தேசீயத் தன்மையை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்கவியலாது.

இராமநாதன் அவர்களுக்குக் கண்டிச் சிங்களவர், கரைநாட்டுச் சிங்களவர், சோனகர், மலாயர் ஆகிய சாகியத்தார் அனைவரும் இன மத வேறுபாடு கருதாமல் இலங்கையர் எனக் கருதியே வாக்களித்தார்கள் என்ற கருத்தை எவரும் என்றேனும் மறுக்கவோ மறைக்கவோ மறக்கவோ இயலாது. அவரும் இலங்கை முழுவதுக்கும் அசல் பிரதிநிதியாயே அரிய தொண்டாற்றினர்.

ஆள்பதி பிளாக் அவர்களுக்குப் பின்னர் சேர் ஹென்றி மக்கலம் அவர்கள் 1907 ஆம் ஆண்டில் ஆள்பதியாய் நியமிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தார். இவர் மலாயாவின் பல பாகங்களிலும் எஞ்சினியர் பதவியைச் சிறப்புடன் வகித்துச் சேவை செய்த ஓர் அறிவாளியாவர். இவருக்கு உதவியாக இலங்கையில் சேர் கிளிபோட் அவர்கள் பிரதம செயலாளராய் இருந்தார். இவர்கள் காலத்திலே இலங்கைச் சட்டசபையிலே திருத்தங்கள் நல்ல முறையில் உடனடியாக ஏற்படுதல் வேண்டுமெனக் கோரி இலங்கையர் கிளர்ச்சி செய்வாராயினர்.

சட்ட சபையில் திருத்தம் ஏற்படல் வேண்டும் எனக் கிளர்ச்சி எழுந்தமைக்குப் பல காரணங்கள் நிலவின. கல்வித்தரம் உயர்ந்து மக்கள் சிந்திக்கத் தொடங்கினர். செல்வம் அதிகரித்தமையால் அவர்களுக்கு ஆறுதல் ஒய்வு நேரங் கிடைத்தது. பொதுநலத் தொண்டு செய்தல் வேண்டும் எனப் பெரியவர்கள் விரும்பினர்கள். இந்தியாவின் முன்னேற்றத்தைக் கண்ட மக்களின் பொது அபிப் பிராயம் முன்னேற்றத்தை விரும்பியது.

இக்காலத்திலேதான் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்துக்காக கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் அரும்பாடுபட்டார்கள். கோகலே அவர்களே தமது குருவென்று மகாத்மா காந்தி போற்றி

வந்தார். இத்தாலிக்குக் கவுண் கேவர். இந்தியாவுக்கு கோகலே என்றே அரசியற் பிரமுகர்கள் கருதினர். கோகலே அவர்கள் இந்தியாவுக்கு நல்லரசாங்கம் வேண்டும் என்றே முதலில் தெளர்ச்சி செய்தார்.

கோகலே அவர்களின் கருத்தின் வண்ணம் நல்லரசாங்கம் என்றால் அது அரசின் பல வேறு உறுப்புக்களான தாபனங்கள் சட்டப்படி தன் தன் கடமைகளைச் சரிவரச் செய்தல், பொதுத் தேவைகளின் பொருட்டுச் சிக்கனமாகப் பணஞ்செலவு செய்தல், வரி விதிக்கும் போது இயன்றளவு குறைத்து விதித்தல், பொதுசன அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்தல், மக்களின் முன்னேற்றத்துக் காவண செய்தல், மக்களின் முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியுஞ் செய்தல் என்பனவும் பிறவுமாம்.

கோகலே அவர்களுடைய வசனத்தில் கூறினால் ''நான் கண் ணுக்குத் தெரியாத தூரத்தில் எதிர்காலத்தில் உள்ள சுதந்திரத்தை உடனடியாகக் கையில் தரும்படி ஆங்கிலேயரைக் கேட்கவில்லை. நான் கேட்பது முன்னேற்றப் பாதையில் ஒரடி முன் வைக்க அநு மதியுங்கள் என்பதே'' சுதந்திரம் நெடுந்தூரத்தில் இருப்பதாகவும் அதன் பாதை வழியே ஆறுதலாகச் சென்றே அதனை அடைய வேண்டும் என்றும் கோகலே அவர்கள் கருதினார். அவர் சென்னையில் 1908 ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மகா நாட்டில் தலைமை தாங்கிப் பேசியது பொறுப்புள்ள தொடர்பை முதலில் பெற்று அதன் வழியாகப் பரிபாலனப் பொறுப்பைப் பெற வேண்டும் என்பதே.

பொதுசன இயக்கத்தின் வரலாறும் ஆற்றின் போக்கைப் போன்றதேயாகும். சிறு துளிகள் ஒன்றுகிச் சிற்றாறாகி அவை ஒன்றாகக் கலந்து பேராறாகப் பாய்வதைப் போலவே மக்கள் இயக்கமும். கோகலே அவர்கள் 1915 ஆம் ஆண்டில் ஆற்றின் ஊற்றுப்போலவும் மகாத்மா காந்தியடிகள் 1945 ஆம் ஆண்டில் ஆற்றின் பிரவாகம் போலும் இந்திய நாட்டின் தேசிய வரலாற்றில் இருந்தார்கள் என்பர். கோகலே அவர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்றும், அதனைப்பெற இந்தியருக்குத் தகுதி உண்டென்றும் ஆங்கி லேயருக்கு அறியச் செய்தார். அதிலிருந்து இந்திய வரலாற்றிலே புதிய சகாப்தமும் அதன் போக்கிலே புதிய திருப்பமும் ஏற்படலாயின. வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே என்றும் நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் என்றும் பாரதியார் பாடிய காலமும், அஃதே.

இந்தியாவில் அரசியற் கட்சிகள் அரும்புவதற்கு முன் பொது நலத் தொண்டு செய்யும் நோக்கமாகத் தோன்றிய சங்கங்களும் சபைகளும் இருந்தன. பிரிட்டிஸ் இந்திய சங்கம், தென்னேச் சுதேசிச் சங்கம், ஸர்வஜனிகசபா முதலிய சங்கங்கள் வங்காளம், பம்பாய், சென்னை, பூனு முதலிய இடங்களில் தொண்டு செய்து வந்தன.

சென்னையில் இந்து, வங்கத்தில் அமிர்தபசார் பத்திரிகா, பம்பாயில் பம்பாய் சமாசார் போன்ற பத்திரிகைகள் பொதுமக்களுக்கு அரசியல் நுணுக்கங்களை அவ்வப்போது அறிவித்து வந்தபின்னரே இந்தியப் பொதுமக்கள் அரசியற்றேவைகளை உணர்ந்தார்கள். பத்திரிகை படிக்கும் பழக்கம் இந்தியாவிலே அதிகம் பரந்தமையால் 1875 ஆம் ஆண்டளவில் எல்லாமாக 478 பத்திரிகைகள் இருந்தன என்பர். பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் குறைக்குமாறு இங்கிலாந்திலிருந்து லிட்டன் பிரபு கட்டளையிட்டதும் உண்டு.

இந்தியாமீது அபிமானங் கொண்ட ஆங்கிலேயர் பலர். அவர்களுள் சார்ல்ஸ் பிரட்லா என்பாரும் அனிபெசன் அம்மையாரும் தலைசிறந்தவர்கள். அம்மையார் இங்கிலாந்து, இந்தியா, அப்கானிஸ்தானம் என்னும் தமது நூலில் ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவில் செய்துவந்த அலங்கோலங்களைச் சித்திரித்து அம்பலப்படுத்தினர். வங்காளப் பகுதிகளில் எழுந்த இலக்கிய வளமும் கவிப்பிரவாகமும் நாட்டுப் பற்றை வளர்த்தன. பக்கிம் சந்திரர் போன்ற கவிகள் அவ்வளப்பத்தை அரண் செய்தார்கள்.

அருணுசலம் அவர்கள் இலங்கைச் சிவில் சேவிஸ் பரீட்சைக்குப் போய் வந்தமைபோல இந்திய சிவில் சேவைப் பரீட்சைக்குப் போய் வந்த ரமேஸ்சந்திர தத் என்ற பெரியாரும் அவருக்குப் பின்வந்த சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களைப் போன்ற பெரியார்களும் வங்காளத்திலே தேசிய உணர்ச்சியை உண்டாக்கினர்கள்.

சுரேந்திரநாத் பானர்ஜி முதலானோர் 1876 இல் உண்டாக்கிய இந்திய சங்கம் அரசியல் திருத்தங்கோரிக் கிளர்ச்சி செய்வதாயிற்று. சுரேந்திரநாதர் ஆறுமுக நாவலரைப் போன்ற நாவன்மை படைத்த பெரியார். அவர் பேச்சு இளைஞர்களுடைய நெஞ்சைத் தொட்டு விட்டதில் ஆச்சரியமில்லை. ஒன்றுபட்ட சுதந்திர இந்தியா உதயமாகும் நாளை எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். பக்கிம் சந்திரர் எழுதிய ஆனந்த மடத்தில் அன்னை வழிபாடும் வந்தே மாதர கீதமும் தேசபக்தியை வளர்த்தன. சென்னையில் சுப்பிரமணிய ஐயர் ஆரம்பித்த மகாசன சபையும், பம்பாய் வாசிகள் உண்டாக்கிய இராச

தானிக் கழகமும் தேசத்தொண்டு செய்துவந்தன. இந்தக் காலத்திலே தான் 1884 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் சென்னையிலே மயிலாம்பூரிலே உள்ள ரகுநாதராவின் மாளிகையில் பல மாகாணங்களைச் சேர்ந்த 17 தேசபக்தர்கள் கூடினர்கள்.

அந்தப் பதினேழு பேரும் செய்த முயற்சியின் பயனாகவே இந்திய காங்கிரஸ் 1885 ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பம்பாயிலே கூடியது. அதில் பல மாகாணப் பெரியார்களும் வந்திருந்தனர். வங்காளத்து ரோமேஸ் சந்திர பானர்ஜி மகாநாட்டுக்குத் தலைவராயிருந்தார். இலங்கையில் யோசவால் என்ற பெரியாரைப் போல இந்தியாவிலும் ஆங்கிலப் பெரியார்கள் இருந்தார்கள். அவர்களுள் A. O. ஹியூம் என்பார் குறிப்பிடப்பட வேண்டியவராவர்.

இங்ஙனம் அமைந்த காங்கிரஸ் காலந்தோறும் வெவ்வேறு நகரங்களிற் கூடி இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டு வரலாயிற்று. தாதாபாய் நவுரோஜீ மதனமோகன மாளவியா, மகரிஷி தேவேந்திர நாத்தாகூர், பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே லாலா லஜபதிராய், அனந்தா சார்லு முதலாய பெரியோர்கள் இருந்தார்கள்.

இவ்வாறுக இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆசியாக் கண்டத்திலே ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது. அதன் ஆரம் பத்திலேயே ஜப்பானியர் ருசியரைப் போரில் வென்று முன்னணியில் நின்றனர். யப்பானின் முன்னேற்றத்தைக் கணித்த பிரஞ்சுக்காரர் யப்பானியருடன் நேச ஒப்பந்தமும் செய்து கொண்டனர். இந்நிகழ்ச்சி இந்தியாவிலும் தேசீய உணர்ச்சிக்குத் தூண்டுகோலாயிருந்தது என்பர்.

கற்கத்தாவிலே 1906 ஆம் ஆண்டிற் கூடிய காங்கிரஸ் மகாநாட்டிலே தலைமை தாங்கிய தாதாபாய் நவுரோஜி சுயராச்சியம் என்ற சொல்லை முதலில் உச்சரித்தார். இந்த ஒரு சொல் இந்தியா வெங்கும் மகாமந்திரமாக உபயோகிக்கப்பட்டதை மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

''பேசவோர் வார்த்தை தாதா சொல்லி விட்டார்
பின்வா வழியாமல் சுதந்திரந் தொட்டார்''

எனப் பாடியுள்ளார். அதனால் உணர்ச்சி வசப்பட்ட பாரதியார் மேலும் பல பாடல்கள் பாடியுள்ளார்.

''ஓராயிரம் வருடம்
ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல் வந்த
மாமணியைத் தோற்போமே''

எனவும் பாடிய அவர் தாதாபாய் அவர்களின் நல்லியல்பு கண்டும் வியந்து பாடியுள்ளார்.

''தீதா வார் வினும் அவர்க்கினிய சொலி
நல்குணர்த்தும் செல்வியாளன்
வேதாவா யினும் அவனுக் கஞ்சாமே
உண்மைநெறி விரிப்போன் எங்கள்
தாதாவாய் விளங்குறுநல் தாதாபாய்
நவுரோஜி சாணம் வாழ்க!

தாதாபாய் நவுரோஜி அவர்களைப்பற்றி மேலும் ஒரு அலுவலை நாம் இங்கு அறிந்து கொள்ளுதல் பொருத்தமாகும். தாதாபாய் அவர்கள் பிரித்தானிய பாராளுமன்றத்திலே தாராண்மைக் கொள்கையாளர் சார்பில் ஒரு தொகுதியின் பிரதிநிதியாய்த் தெரியப்பட்டுப் பாராளுமன்றத்தை அலங்கரித்தவர். அவர் எலுமிச்சம் பழம் போன்ற நிறமுடையவராயிருந்த போதிலும் ஆசியவாசி என்பதற்காக அவரைப் பழைமை தழுவிய ஆங்கிலேயர் கறுப்பர் எனவே அருவருத்துக் கூறியும் உள்ளார்கள். அக்காலத்தில் பிரதம மந்திரியாயிருந்த சலிஸ்பரிப் பிரபு அங்ஙனம் குறிப்பிட்டமையை விக்டோரிய மகாராணியார் கேட்டு மனம் வருந்தினர் என்பது வரலாறு.

தாதாபாய் பேச ஒரு வார்த்தையான சுயராச்சியத்தை எடுத்துக் கூறி அதுவே தமது குறிக்கோள் என்றபின், திலகர் பெருமான் சுயராச்சியம் எங்கள் பிறப்புரிமை எனப் பிரசாரஞ் செய்வாராயினர். அத்தகைய வீரமிக்க மராட்டிய திலகத்தின் சீரடிக் கமலத்தினை வாழ்த்துவேன் சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே, எனப் பாரதியார் தூய செந்தமிழ்ப் பாடல் பாடியுள்ளார்.

இந்தியாவில் மூண்டெழுந்த தேசியக் கிளர்ச்சியை அடக்கி ஒழிப்பது இயலாத அலுவல் என அரசப் பிரதிநிதியாய மிண்டோ பிரபு எழுதியதை இந்திய மந்திரியாய மார்லி பிரபுவும் ஒப்புக் கொண்டார். எனவே அவர் 1909 ஆம் ஆண்டில் இந்திய சபைச் சட்டம் என்னும் சட்டத்தை ஏற்படுத்தி அதன் வண்ணம் ஒவ்வொரு

மாகாணத்திலும் இருந்த சட்டசபையைத் திருத்தி விரிவு செய்ய வழிசெய்தார். சட்ட சபையின் அங்கத்தவரில் பெரும் பாலார் மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளாயிருத்தல் வேண்டும் என்றும், அர்சப் பிரதிநிதியின் நிர்வாக சபையிலும், இந்தியா மந்திரிசபை யிலும் இந்தியர் ஒருவராயினும் இருத்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய மக்களைச் சாந்தப்படுத்த எண்ணிய இந்திய விவகார மந்திரியார் லண்டனிலிருந்து பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்: ''மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அரசாங்கத்தின் நோக்கம் இந்திய நாட்டின் பரிபாலன தாபனங்களில் மேலும் மேலும் இந்திய மக்களைத் தொடர்பு படுத்துவதேயாம். அதனால் அவர்களுக்குப் படிப்படியாகப் பொறுப்பாட்சி கொடுத்துப் பிரித்தானிய பேரரசில் அங்கம் வகிக்கச் செய்வதேயாம்.''

இந்தியாவில் எழுந்த கிளர்ச்சியும் அதன் பெறுபேறும் இவ் வாறுக. இலங்கையில் எழுந்த கிளர்ச்சியைப் பற்றி இனி அறிவாம். சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்கள் 12-12-1908 இல் சமர்ப்பித்த நினை வேட்டில் கூறியவற்றைக் கலந்து பேசுவதற்கு உதவிக் குடியேற்ற நாட்டு மந்திரியார் இலங்கையருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து இலங்கையர் சார்பில் பல நினைவேடுகள் யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம், கரைநாட்டு விளைபொருட் சங்கம் ஆகிய தாபனங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படலாயின.

இவ்வாறுக 26-10-1909 இல் உதவிக் குடியேற்ற மந்திரி கேணல் சீலி இலங்கையிலிருந்து போன தூதுக் குழுவினரைக் கண்டு பேசினார். தூதுக்குழுவில் H. J. C. பெரேரா, F. H. M. கோபற், K. தோமஸ், J. W. டி சில்வா, டேவிட் ரெக்வட், E. W. பெரேரா ஆகியோர் இருந்தனர். இக்குழுவினர் கேட்ட கோரிக்கைகளுள் நியமன முறைக்குப் பதிலாகத் தேர்தல் முறையும், வகுப்புவாத அடிப்படைக்குப் பதிலாக மாகாண அடிப்படையில் ஆள்புல ரீதியில் பிரதிநிதித்துவ வசதியும் பிரதானமானவைகளாம். இத்தகைய திருத்தங்களைக் கோரிய குழுவினருக்கு உதவி மந்திரியார் சீலி அவர்கள் கூறிய உத்தரமும் இங்கே குறிக்கற் பாலது. அது,

''நாட்டுக்குப் பொறுப்பாட்சியை இன்றைய சூழ்நிலையில் வழங்க இயலாது. நாட்டினர்க்குச் சர்வசன வாக்குரிமை வழங்கும்வரை பொறுப்பாட்சியைப் பற்றி நீங்கள் கருதக்கூடாது. இன்றைய சூழ் நிலையில் வேண்டுமானால் பிரதிநிதித்துவ முறையில் ஏதாவது மாற் றஞ் செய்து விடலாம்'' என்பதே.

முன்னர் நடுவகுப்பார் செய்த கிளர்ச்சியும் அவர்களுடைய கோரிக்கைகளும் நியாயமானவையே எனப் பொது மக்களும் பத்திரிகைகளும் ஐரோப்பியரும் ஒப்புக் கொண்டார்கள். அப்படியானால் எப்பவோ 1833 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பழைய சட்ட சபையை வைத்துக்கொண்டு ஏன் கட்டி அழுதார்கள் என்பது விளங்கவில்லை. எல்லோரும் சீர்திருத்தங்கோரிக் கிளர்ச்சி செய்தமை ஆள்பதி சேர். ஹென்றி எட்வேட் மக்கலம் அவர்களின் மனச்சாட்சியையும் தொட்டது. ஆனல் அவர் ஐரோப்பியரல்லாத பிற நாட்டினர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு அருகதை இல்லாதவர்கள் என்ற தடித்த எண்ணப் பாங்குள்ளவர். அவர் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்ற கருத்துடையவராயிருந்த போதிலும் கிளர்ச்சியாளர் கேட்ட கோரிக்கைகள் அனைத்தையும் கொடுக்க விரும்பவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் இலங்கையர் சட்ட சபையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும், ஆட்சி முறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று கேட்டார்களேயல்லாமல் சுதந்திரந் தருமாறு கேட்டார்கள் அல்லர். ஆட்சி முறையில் இலங்கையருக்கும் விசாலித்த உரிமையையே அவர்கள் கேட்டார்கள். E. W. பெரேரா என்னும் பெரியார் 'பிரித்தானியர் ஆட்சியில் நம்பிக்கையும் அதற்கு விசுவாசமும் பண்பாடும் பணிவும் உள்ள இலங்கையராய நல்ல மக்கள் கௌரவமான குடியுரிமையே கோருகிறார்கள். சுயாதீன அரசமைப்பு, முறையான சமூக சேவைகள், கடுமையான வரிநீக்கம், பரந்த முறையில் குடியேற்றம், குளங்கள் திருத்தப்படல், பரந்த கல்வி முறை, பகிரங்க சேவையில் பொதுமக்கள் பங்கு, இன்னும் அத்தியாவசியம் வேண்டிய திருத்தங்கள் இவையே இப்போது இன்றியமையாது செய்யப்பட வேண்டியவை" எனக் குறிப்பிட்டார்.

சீர்திருத்தங்கோரி முன்னின்ற பெரியார்கள் நினைவேடுகள், விண்ணப்பங்கள், தீர்மானங்கள் என்பன எழுதியும்; பகிரங்கக் கூட்டங்கள் கூட்டியும் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். ஆள்பதிகளுடன் நேரில் கலந்துரையாடியும் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். இவற்றையெல்லாங் கேட்ட ஆள்பதி மக்கலம் அவர்கள் குடியேற்ற மந்திரியார் குறூவ் அவர்களுக்கு "இவர்கள் கோருவது பிரதிநிதித்துவ அரசாங்கம் அல்ல. இவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் இலங்கையில் சில்லோராட்சியே நிலவ வழி அமைத்ததாகும்" என எழுதினர்.

இந்த அபிப்பிராயமே முன்னர் வாட், ரெபின்சன், அண்டர்சன் ஆகிய ஆள்பதிகளுக்கும் இருந்தது. அவர்கள் கருத்தின்படி ஆங்கிலேயராய தாங்கள் இலங்கையில் இருந்தமை சுதேசிகளின் நன்மையைக் கண்காணிக்கவேயென்றும், தோட்ட முதலாளிகளோ, ஆங்கிலம் பயின்ற சில பெரியார்களோ கோருவதுபோலத் திருத்தங்கள் ஏற்பட்டால், ஆட்சிப் பொறுப்பு மேலிடத்தில் இருக்குமேயல்லாது பொது மக்களுக்கு நன்மை பயவாது என்பதேயாம். எனவே தான் போலும் 1833 ஆம் ஆண்டு தொடக்கம் 1910 ஆம் ஆண்டு வரையும் வியக்கத்தக்க ஒரு மாற்றமும் செய்யப்படாதிருந்தது.

சமூக அபிவிருத்தி கருதி ஆரம்பிக்கப்பட்ட விவசாயச் சங்கம், மதுவொழிப்புச் சங்கம், சமூக சீர்திருத்தச் சங்கம், இலங்கைத் தேசீய சங்கம், கரைநாட்டு விளைபொருட் சங்கம், தோட்டத் துரைமார் சங்கம் என்பனவாதிய இயக்கங்கள் திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தன. அன்றேல் மக்கள் திருத்தங்கோருமாறு ஊக்கமளித்தன.

ஆள்பதி மக்கலம் அவர்கள் குடியேற்ற மந்திரியார் குறூவ் அவர்களுக்கு எழுதியவற்றோடு இலங்கையில் 1907 ஆம் ஆண்டில் ஒரு நிதிக்குழுவையும் நியமித்தார். அதில் அங்கத்தவராய நியமன அங்கத்தவர்களுக்கு சட்ட நிறைவேற்று சபையின் நடபடிக்கைகளையும், வரவு செலவு விபரங்களையும் அறியும் வாய்ப்பு ஏற்படலாயிற்று. நிதிக்குழுவில் அனுமதிக்கப்பட்ட நியமன அங்கத்தவர்கள் அராபியனின் கூடாரத்துள் நுழைந்த ஒட்டகம்போல நடக்கத் தலைப்பட்டனர் என லுடவைக் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

படித்த இலங்கையரின் கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்தது ஏன் எனக் குடியேற்ற மந்திரியார் ஆள்பதி மக்கலத்தைக் கேட்ட போது, அவர் அதற்கு உத்தியோக அங்கத்தவர் பெரும் பான்மையினராய் இருந்தாற்றான் பிரித்தானிய பேரரசு வாதம் நிலைக்கும் என எழுதினர். அன்றி இலங்கையர் தமது பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் அளவுக்குப் பக்குவம் அடையவில்லையென்றும், அவ்வாறு அவர்கள் பக்குவம் அடையும்வரை இவர்களுக்குத் தெரிவுமுறை தகாதென்றும், நியமன முறையே தகுதியானதென்றும் அவ்வாறு நியமிக்கும் பொறுப்பும் ஆள்பதியிடமே இருத்தல் வேண்டும் என்றும் எழுதினர். அவருக்கு உதவியாக அப்படியேயாகுக எனப் பக்கப்பாட்டுப் பாடிய பெரியார் கிளிபோட் என்ற பிரதம காரிய தரிசியாவர்.

ஆனல் குடியேற்ற மந்திரியாராய குறூவ் பிரபு, ஆள்பதி அவர்கள் எழுதியவற்றை முற்றுக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் இலங்கையருக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை வழங்கி இலங்

கையரின் தெரியப்பட்ட பிரதிநிதி ஒருவரைச் சட்ட சபையில் இருத்த வழிவகுத்தார். ஆள்பதி அவர்களின் நியமன உரிமையை அவர் நீக்காது ஆறு அங்கத்தவரை அவர் நியமிக்க இடங் கொடுத்தார். அன்றி உத்தியோக அங்கத்தவரின் பெரும்பான்மைப் பலத்தை நீக்காது அதனை ஒருவரால் மேலதிகமாக இருக்க அநுமதித்தார். முன்னர் ஐரோப்பியர் பிரதிநிதிகள் மூவராக இருந்தமை இப்போது இருவராகக் குறைக்கப்பட்டனர். அவ்விரு வரும் நாட்டுப்புற ஐரோப்பியருக்கும் நகர்ப்புற ஐரோப்பியருக்கு மாகத் தெரியப்பட்டனர். பறங்கியரும் படித்தவராகையால் தம் பிரதிநிதியைத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆகவே இப்போது தேர்தல் மூலம் நால்வர் தெரியப்பட வாய்ப்பு ஏற்பட லாயிற்று.

இ வேனோயில் பிரித்தானிய பாராளுமன்றத்து அங்கத்தவர் வரிசையிலே இருந்த தாராண்மையாளர் இலங்கை பிற்போக்கு வாதியாய மக்கலம் அவர்களால் ஆட்சி செய்யப்பட்ட தன்மை யைப் பற்றிக் குடியேற்ற மந்திரியாரைக் கேள்விகள் கேட்டார்கள். திருவாளர் கோபற், சேர். ஹென்றி கொட்டன், சேர் யோன் யார்டயின், சேர். ஹேபேட் ரேபேட்ஸ் ஆகியோர் குடியேற்ற நாடுகள் நல்லமுறையில் ஆட்சி செய்யப்படல் வேண்டுமென்று கூறினர்கள். சேர். ஹென்றி கொட்டன் அவர்கள், ''இலங்கைச் சட்டசபையில் ஒரே ஒரு தெரியப்பட்ட பிரதிநிதிதானும் இல்லா மல் ஆட்சி நடைபெறுவது பெரிய விந்தையாய் இருக்கிறது. நாட்டு மக்களிடையே ஏற்பட்ட அதிருப்தியைக் கனம் குடியேற்ற மந்திரி யாரவர்கள் அறிவாரோ? இலங்கைச் சட்டசபையில் கூடிய விரைவில் தெரியப்பட்டபிரதிநிதிகளை இருத்துவதோடு, ஆள்பதியின் நிர்வாக சபையிலும் இலங்கையர் பிரதிநிதிகள் இடம்பெறத் தக்கதாகத் திருத்தங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்'' என்று பேசினர்

இங்ஙனம் லண்டனில் இலங்கையருக்காக அநுதாபந் தெரி வித்த இப்பெரியவர் இலங்கைவாழ் மக்களுக்குப் பத்திரிகைகளை நல்ல முறையில் நடத்தும் அச்சுலகு சுயாதீனமாகத் தாபிக்கப்பட வேண்டுமென்று ஆலோசனையுங் கூறி அதற்கான உதவியும் செய்ய ஆயத்தமானார். அவருடைய ஆலோசனையின் வண்ணமே விஜய வர்த்தனர் அவர்கள் பத்திரிகைகளை ஆரம்பித்தார் என்பர். அவர் முயற்சியாலேயே ஏரிக்கரைப் பத்திரிகைக் கூட்டம் வெளிவர லாயின.

லண்டனில் நிகழ்ந்த விபரத்தை அங்கிருந்து குடியேற்ற மந்திரியார் இலங்கையில் ஆள்பதியாயிருந்த மக்கலத்துக்கு எழுதினர். ஆனால் மக்களமும் கிளிபோட்டும் சேர்ந்து இலங்கைக்கு அந்த

நேரத்தில் அரசியற்றிருத்தஞ் செய்ய இயலாது என மந்திரி யாருக்கு எழுதினர்கள். அன்றி அரசியற்றிருத்தங் கோரி இலங் கையர் தமக்கு அனுப்பிய நினைவேடுகளையும் புறக்கணித்து விடுவா ராயினர். கன்மனம் படைத்த ஆள்பதியவர்கள் அரசியலமைப்பில் ஒரே ஒரு சிறிய மாற்றம் – அதுவும் சட்டசபையில் படித்த இலங் கையரின் பிரதிநிதியாக ஒரு இலங்கையரை அநுமதிக்கத் தாம் இடமளிப்பதாகக் கூறினர். வேறெவ்விதமான மாற்றத்துக்கும் தாம் தகவுரை கூறமுடியாது எனச் சினத்தோடு கூறி நின்றார்.

ஆனல் குடியேற்ற மந்திரியார் அவர்கள் 24-11-1910 இல் கொடுக்கப்பட்ட வேத்தியல் ஆணையின் வண்ணம் ஒரு மாற்றஞ் செய்யப்படலாயிற்று. அதன் பிரகாரம் சட்டசபையில் 11 உத்தி யோக அங்கத்தவரும் 10 உத்தியோகப் பற்றற்றவரும் இடம் பெறுவர். உத்தியோகப் பற்றற்றவருள் நால்வர் தெரியப்பெறுவர். அவர்கள் முறையே நகர்ப்புற ஐரோப்பியர், நாட்டுப்புற ஐரோப் பியர், படித்த இலங்கையர், பறங்கியர் ஆகிய சமூகத்தினரின் பிரதிநிதிகளாவர். ஏனைய ஆறு உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதி களும் ஆள்பதி அவர்களால் நியமிக்கப்பெறுவர். அவர்கள் கண்டிச் சிங்களவருக்கு ஒருவரும், முஸ்லிம்களுக்கு ஒருவரும், கரைநாட்டுச் சிங்களவருக்கு இருவரும், தமிழருக்கு இருவருமாவர்.

உத்தியோக அங்கத்தவர் வரிசையில் பிரதம சுகாதார அதிபரும், மேல்மாகாண அரசாங்க அதிபரும் இடம் பெறுவா ராயினர். உத்தியோக அங்கத்தவர் காலந்தோறும் வெவ்வேறு பகுதிகளின் தலைவராகவே இருந்தார்கள். உத்தியோக அங்கத்தவர் பெரும்பாலும் பின்வரும் 13 உத்தியோகத்தருள் 11 பேர் காலந் தோறும் நியமிக்கப் பெற்றார்கள். அவர்கள் ஆள்பதி அவர்களுடன்

1. படைத் தளபதி
2. குடியேற்றக் காரியதரிசி
3. சட்டத்துறை நாயகம்
4. வருமானப் பகுதித் தலைவர்
5. திறைசேரி நாயகம்
6. மேல் மாகாண அதிபர்
7. மத்திய மாகாண அதிபர்
8. பகிரங்க வேலைப்பகுதித் தலைவர்
9. தென் மாகாண அதிபர்
10. சுகாதார அதிபர்
11. பதிவாளர் நாயகம்
12. சுங்கத் தலைவர்
13. அளவையாளர் நாயகம்.



இங்ஙனமாக 1910 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருத்தத்தின் பயனுகச் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த பெரியார்கள் வரிசை பின்வருமாறு. உத்தியோகப் பற்றற்றவர் வரிசையிலே பத்துப் பேர் இருந்தார்கள். அவர்களுள் தெரியப் பெற்ற பிரதிநிதிகள் வரிசையில் நால்வர் இருந்தனர். அவர்களுள் படித்த இலங்கையர் பிரதிநிதியாகப் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சபையை அலங்கரித்தார் நகர்ப்புற ஐரோப்பியர் பிரதிநிதியாய் திரு. அலெக்ஸாண்டர் பெயர்லி இருந்தார். நாட்டுப்புற ஐரோப்பியர் பிரதிநிதியாக திரு. எட்வேட் ரெஸ்ரிங் அவர்கள் இருந்தார்கள். பறங்கியர் பிரதி நிதியாய் இருந்தவர் திரு. கெக்டர் விலியம் வான் கயிலன்பர்க் என் பாராவர்.

உத்தியோகப் பற்றற்ற நியமனப் பிரதிநிதிகள் வரிசையில் ஆறு பேர் இருந்தார்கள். அவர்களுள் திரு. C. L. ஒபயசேகரா அவர் களும் திரு. அல்பிறட் யோசப் றிச்சாட் த சில்வா அவர்களும் கரை நாட்டுச் சிங்களவர் பிரதிநிதிகளாகவும்; திருவாளர் அம்பலவாணர் கனகசபை அவர்களும், திருவாளர் யோசப் நித்தலஸ் திரவீரசிங்கம் அவர்களும் தமிழர் பிரதிநிதிகளாகவும்; திருவாளர் தியடர் பாக்கு றவ்ற் லீவிஸ் முணமலி அவர்கள் கண்டிச் சிங்களவர் பிரதிநிதியாகவும் திரு. வப்பிச்சி மரைக்காயர் அப்துல் ரகிமான் அவர்கள் முஸ்லிம் பிரதிநிதியாயும் இருந்தார்கள். இச்சபையில் இருந்த உத்தியோக அங்கத்தவர் பெரும்பாலும் ஆள்பதி அவர்களின் மதிப்புக்கும் அன் புக்கும் பாத்திரமான ஆங்கிலேயர்கள் ஆனல் அவர்களுள் நடுநாயக மாய் பதிவாளர் நாயகமாய் உத்தியோகம் வகித்த பொன்னம்பலம்

அருணாசலம் அவர்களும் இருந்தார்கள். இப்புதிய சபை ஆள்பதிய வர்களால் 16-1-1912 இல் கோலாகல வைபவங்களிடையே திறந்து வைக்கப்பட்டது.

இச்சமயத்தில் ஒரு காரியத்தை எண்ணி நாம் பெருமைப் படலாம். திரு. பொன் குமாரசுவாமி அவர்கள் இறவாதிருந்தால் அவரே தமிழரின் நியமன அங்கத்தவராய் இருந்திருப்பர். அப்படி யானால் சட்டசபையில் பொன்னம்பல முதலியாரின் மைந்தர் மூவரும் ஒரே சமயத்தில் சட்டசபையை அலங்கரித்திருப்பார்கள். அவர்கள் முறையே நியமன அங்கத்தவராயும், தெரியப்பட்ட அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும் இருந்திருப்பர் எனலாம்.

படித்த இலங்கையர் இலங்கை முழுவதற்கும் ஒரு பிரதி நிதியைத் தெரிவதற்குச் சாதகமாகப் படித்தவருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. அக்காலத்தில் இலங்கைக் குடிசனத்தில் 4% வீத மக்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. படித்த இலங்கையர் பிரதிநிதியாவதற்கு வைத்திய கலாநிதி மாக்கஸ் பர்ணந்து அவர்கள் வேட்பாளராய் முன்வந்தார். ஆனால் சிங்களப் பெரியார்கள் இராமநாதன் அவர்களையே பெரிதும் அபிமானித்து அவரைப் போட்டியில் ஈடுபடுமாறு விநயமாக வற்புறுத்தினர்கள்.

இராமநாதன் அவர்கள் அதுகாறும் சட்ட அறிஞர் நாயக மாகக் கடமையாற்றிவிட்டு ஓய்வு பெற்றுத் தமது காலத்தில் ஈடு பட்டிருந்தார். சிங்களப் பெரியாரின் வேண்டுகோளை நிராகரிக்க மாட்டாமல் அவர் வேட்பாளராய் முன்வந்தார். சிங்கள மக்க ளிடையே அவருக்குச் செல்வாக்கதிகமாய் இருந்தமையால் அவர் பெரும்பான்மை வாக்குகளால் பர்ணந்து அவர்களை வென்று இலங் கையில் வாழ்ந்த படித்தவர்களுடைய பிரதிநிதியாக முதன்முறை யாகத் தெரியப்பட்ட கௌரவத்தைப் பெற்றார். இராமநாதன் அவர்கள் 2300000 சிங்களவருக்கும், 950000 தமிழருக்கும், 300000 முஸ்லிம்களுக்கும் ஏகப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டார் என்ற பெருமை அவருக்கே உரியது. அவர் ஒரு தேசீயப் பெரியார் எனவே கணிக்கப்பட்டார்.

புதிய சட்டசபைப் பிரதிநிதிகள் 16-1-1912 இல் கூடி விசு வாசப் பிரமாணஞ் செய்து கொண்டனர். மலையைக் கல்லி எலியைப் பிடித்ததுபோல எத்தனையோ கிளர்ச்சிகள், நிண்டவேடுகள், தூதுக் குழுக்கள் யாவும் முயற்சி செய்து ஒரே ஒரு இலங்கையர் தெரியப் படும் சலாக்கியத்தையே பெற்றார்கள். பெற்றும் என்ன? உத்தி

யோக அங்கத்தவர் தொகை மேலும் அதிகமாகவே இருந்தது. உத்தியோக அங்கத்தவர் 11 பேருடன் உத்தியோகப் பற்றற்ற ஐரோப்பியர் இருவரும், பறங்கியர் ஒருவரும் சேர்ந்து வாக்களிக்கும் நிலைமை இடையிடையே நிலவுவதாயிற்று. அதனால் ஆள்பதி அவர்கள் பக்கத்தில் அவ்வப்போது 14 அங்கத்தவருடைய வாக்குகள் இருந்தன. அவர்கள் இலங்கையர் அரசியல் உரிமை பெறுவதை உள்ளார விரும்பவில்லை என்றுதான் தோன்றிற்று. உத்தியோகப் பற்றற்றவர் வரிசையில் உள்ள நியமன அங்கத்தவர் என்பார் இலங்கையராயிருந்தும் தம்மை நியமித்த ஆள்பதியின் முகத்துக்காக அவர்களும் உத்தியோக அங்கத்தவரோடேயே வாக்களித்தும் வந்தனர். இந்நிலைமையில் உள்ளதை உள்ளபடி கூறினால் சட்ட சபையின் 21 அங்கத்தவருள் 20 பேரும் ஆள்பதியுடனும், ஒரே ஒருவர் நாட்டுக்காகவும் வாக்களிப்பாராயினர். அந்த ஒரே ஒருவர் வேறுயாருமில்லை. அவர் எங்கள் இராமநாதன் அவர்களேதான். உத்தியோக அங்கத்தவருள் ஒரே ஒரு இலங்கையராய் இருந்த அருணாசலம் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்த சந்தர்ப்பமும் உண்டு. அது அவரின் தனிப் பண்பு.

இங்ஙனம் அமைந்த சட்டசபையும் மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆள்பதி மெயிற்லன் அவர்களின் பிடிவாதத் தன்மையால் உத்தியோக அங்கத்தவர் தொகை அதிகமாகவே இருந்தது. அக் காலத்தில் தோட்டப் பகுதிகளிலும், தொழிற் பகுதிகளிலும் பெருந் தொகையான இந்தியத் தமிழர் இருந்தனர். அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமை பெருங் குறையாகவே இருந்தது.

இலங்கை வேறு பல துறைகளில் முன்னேற்றமடைந்த அளவுக்கு அரசியற்றுறையில் முன்னேறவில்லை எனப் பலரும் கருதினர். இலங்கைக்குப் பின்னர் சட்டசபை அமைக்கப்பட்ட இந்தியாவில் சுதேசிகள் பெற்ற உரிமைகளில் ஒரு பகுதியாவது இலங்கையர் பெறவில்லை என அறிஞர் வருந்தினர்.

இலங்கை அரசியல் அமைப்பில் இருந்த பெரிய குறைகளில் ஒன்றைக் குறிப்பிடின் சட்டத்துறை நாயகம் என்ற அட்டோனி ஜெனறல் தம் உத்தியோகப் பொறுப்போடு சட்டசபை அங்கத்தவராயும், சட்ட நிர்வாகசபை அங்கத்தவராயும், சட்ட அறிஞர் தலைவராயும், முடிக்குரிய அப்புக்காத்தாகவும், சட்டக் காரியாலயத்தின் காரிய அதிகாரியாகவும், சட்ட வரைவாளராயும் இருந்தார். இத்தனை அலுவல்களையும் அவரொருவரே தனி மனிதனுக்கு மிஞ்சிய சுமையால் அவரின் அதிகாரத்தை என்னென்பது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டு முதலாக 1911 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இலங்கையில் வர்த்தகச் செழிப்பும் வாழ்க்கைச் சிறப்பும் பலவகையிலும் நல்ல முன்னேற்ற மேற் பட்டுள்ளது என்று குடிசனமதிப்பு அதிகாரி கூறியுள்ளார். அவர் அறிக்கையிற் கண்ட வண்ணம் அக்காலத்தின் சில புள்ளி விபரங்கள் வருமாறு.

குடிசனம்	— 4110367
தேயிலை ஏற்றுமதி	— 184000000 ரூத்தல்
,, ,, வருமானம்	— 84000000 ரூபா
றப்பர் ஏற்றுமதி	— 6000000 ரூத்தல்
,, ,, வருமானம்	— 28000000 ரூபா
தென்னம் பொருள்கள் வருமானம்	— 36000000 ரூபா
ஏற்றுமதிச் சரக்குகள் பெறுமதி	— 172000000 ரூபா
இறக்குமதிச் சரக்குகள் பெறுமதி	— 156000000 ரூபா

அத்தியாயம் 21

முதலாம் மகா யுத்த காலம்

ஆளுநர் மக்கலத்துக்குப் பின்னர் சேர் ரூபேட் சாமேஸ் அவர்கள் ஆளுநராக 1913 இல் இங்கே வந்தார். சாமேஸ் அவர்கள் பாளிமொழியை நன்கு கற்றுப் புலமை வாய்ந்தவராயிருந்தார் என்றும், புத்தசாதகக் கதைகள் பலவற்றைச் சுத்தமான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் என்றுங் கூறுப. அவர் நிதியியல் நிபுணன் எனவும் பெயர் பெற்றிருந்தார். பரிபாலன அலுவல்கள் அவருக்கு நன்கு தெரிந்த விடயங்களாயிருந்தன. அவர் சிறந்த பேச்சாளியாயிருந்தமையால் கலைக் கூடங்களில் உயர்தரக் கல்வியைப்பற்றி ஓயாது பேசிப் பத்திரிக்குகளின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

இலங்கைக்குச் சர்வகலாசாலை அத்தியாவசியமென்றும் அதனை நிறுவும் வரை சர்வகலாசாலைக் கல்லூரியொன்றை நிறுவி, அதனை இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையோடு இணைத்தல் வேண்டும் எனவும் சாமேஸ் முயற்சி செய்தார். அதற்குள் முதலாம் மகாயுத்தம் மூண்டெழுந்ததால் அது பற்றிய வேலைகள் கைவிடப்பட்டன.

நாட்டபிமானம் மிக்க சாமேசின் இரு மைந்தர்களும் யுத்த காலத்தில் படையில் சேர்ந்து பணியாற்றினர். அவர்கள் இருவரும் போர்க்களத்தில் உயிர் விட்டமை சாமேஸ் அவர்களுக்குப் பெரிய இழப்பாக இருந்தது. அதே காலத்திலேதான் இலங்கையில் சிங்கள வருக்கும் சோனகருக்குமிடையில் 1915 ஆம் ஆண்டின் இனக் கலவரமும் நடைபெறலாயிற்று.

ஒரு நோயிலும் பார்க்க அதற்குக் கொடுக்கப்பட்ட மருந்து ஆபத்தை உண்டாக்கியமை போலக் கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் கையாண்ட வழி வகைகள் பேராபத்தை விளைவித்தன. அத்தோடு மகாயுத்த நெருக்கடியும் இருந்தபடியினாலே ஆங்கிலேயர் நிலைமையைத் தவருகவே கருதித் தீவிர நடபடிக்கைகளை அவசரத்தில் கையாளுவாராயினர்.

இந்தியாவில் அக்காலத்தில் இருந்த தலை சிறந்த நியாயவாதியான ஏட்லி நோட்டன் என்ற பெரியார் இலங்கையில் கைதியாக்கப்பட்ட பெரியவர்கள் சார்பில் வழக்குப் பேசவந்தார். அவர்

குடியேற்ற மந்திரியார் பொனர் லோ என்பாருக்கு இலங்கை அரசாங்கத்தின் போக்கைப்பற்றி விபரமாக எழுதினர். ''பிரித்தானியரின் அருமை பெருமைகளையெல்லாம் இலங்கையில் வெள்ளைக்காரன் ஒருவர் மதிப்பில்லாமல் செய்ததுமல்லாமல் வெறுக்கத்தக்கதாக அலுவல்களைச் செய்தவராயும் இருந்தால் அவரே இன்றைய இலங்கை ஆள்பதியாவர். எனக்குள்ள நீண்ட கால அநுபவத்தில் நான் 36 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் எண்ணிறந்த பெரிய வழக்குகளைக் கண்டிருக்கிறேன். பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய பெரிய நகரங்களில் கலகங்களைக் கண்டுள்ளேன். இராசப் பிரதிநிதியை எறிகுண்டினால் கொல்ல இந்திய மக்கள் முயன்றதையும் அறிவேன். ஆனால் இத்தகைய பெரிய ஆபத்துக் காலங்களிற் கூட இந்திய அரசாங்கம் நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பட்டாளத்தாரின் தயவில் தாழ்த்தியமை என்றுமே நடந்ததில்லை, ஆனால் இங்கே இலங்கையில் ஆள்பதி அவர்கள் தமது கண்களை அகல விழித்துக் கொண்டே எவ்வித காரணமும் இன்றி இலங்கை வாசிகளை மாட்சிமைதங்கிய மன்னர் பிரானின் பேரருள் பாதுகாப்பதைத் தடை செய்து விட்டுப் பட்டாளத்தைக் கொண்டு அச்சுறுத்துகின்றார்.

அதனால் நீதி மன்றத்தின் ஆளெல்லை அதிகாரமில்லாது ஒடுங்கவும், சட்டங்கள் வலியிழப்பவும், பட்டாளத்தினர் பொதுசனங்களை எவ்வித காரணமும் இன்றிச் சுட்டுப் பொசுக்குமளவில் நிலைமை ஏற்பட்டுள்ளது. இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுப் பல தினைக்களங்களில் அதன் அதிகாரமே மேம்பட்டு நிலவுவதையும், இராணுவத்தினர் கன் நெஞ்சம் உள்ளவராய் நடப்பதையும் பார்க்க, ஆங்கிலேயனாய எனக்கு வெட்கமாயிருக்கிறது.'' என்பது ஏட்லி நோட்டன் எழுதியதன் சுருக்கமாகும்.

உண்மையில் இராணுவத் தலைவனாய பிரகாடியர் ஜெனறல் மக்கம் என்பான் குரூரமாகவே ஆட்சி செய்தான். அவன் போக்கை இராமநாதன் அவர்கள் துணிகரமாக எள்ளளவும் எவர்க்கும் அஞ்சாமல் சட்டசபையில் எடுத்துக் கூறினர். அவர் ஒருவருக்கே அதனைப் பற்றிக் கூறுவதற்குத் துணிவும் அதிகாரமும் பொறுப்பும் தகுதியும் இருந்தவென்பர். அவர் இலங்கை மக்களின் ஏகப்பெரும் பிரதிநிதியாதலாலும் அஞ்சா நெஞ்சினராதலாலும் பெருஞ் சொற் கொண்டாலும் இரக்க மனம் உள்ளவராதலாலும் அப்பணியைச் செய்தார் என்க. அவரைவிட வேறெவரும் அப்படிப் பேசக் கூடிய மனோபாவமும் தைரியமும் உள்ளவராய் இருக்கவில்லை. அவர் சட்டசபையில் 1915 செப்ரம்பர் இறுதி நாள்களில் பேசி விட்டுத் தம் குதிரை வண்டியில் ஏறப்போன போது பொதுமக்கள் குதூகலத்

துடன் பெரிய குரலெடுத்து அவரை வாழ்த்தி வணங்கினர்கள் என்று D. R. விஜயவர்த்தனு தம் மனைவியாருக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்.

இனக் கலவரம் நடை பெறுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் மதுவொழிப்புப் பிரசாரத்தில் தீவிரமாக உழைத்த பெரியார்களான D. B. யயத்திலக, W. A. த. சில்வா, D. S. சேன நாயக, C. பத்துவந்தொடாவ ஆகியோர் உட்படப் பல பௌத்த மதப் பெரியார்கள் இராணுவ அரசாங்கத்தால் கலகத்தைத் தூண்டியவர்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்களை விடுதலை செய்வதற்காகவே இராமநாதன் அவர்கள் பகிரதப்பிரயத்தனஞ் செய்தார். அதுவும் அவர் அவர்களுடைய பிரதிநிதி என்றதால் அவருடைய கடமையுமாயிருந்தது. ஆள்பதி சாமேஸ் அவர்களுடன் பேசிப் பயனில்லை எனக் கண்ட இராமநாதன் அவர்கள், ஆள்பதியையே இலங்கைகை விட்டு மாற்றிவிட இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். மகாயுத்த நெருக்கடியும், யேமனியரின் எம்டன் என்ற நாசகாரிக் கப்பலின் அட்டூளியமும் கடற்பிரயாணத்தில் பேராபத்தாயிருந்த காலம் அது. அவ்வேளையில் தம் உயிரையே பொருட் படுத்தாது கடமையொன்றையே பெரிதாகக் கொண்டு, அபிமானம் நிறைந்த நெஞ்சுடன் சென்ற இராமநாதன் அவர்கள், இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற மந்திரியாரையும் பிரதரையும் கண்டு இலங்கையரின் துயரை எடுத்துரைத்தார். அவர் கூறியவற்றைக் கருத்துடன் கேட்ட மந்திரிமார் ஆள்பதி சாமேஸ் அவர்களை உடனடியாகத் திருப்பியழைத்துவிட்டு ஆவன செய்வதில் ஈடுபட்டார்கள்.

இராமநாதன் அவர்களுடைய வெற்றி, பரணிபாடிப் போற்றப்படவேண்டிய தொரு நிகழ்ச்சி. அது இலங்கைச் சரித்திரத்திலே ஏற்பட்ட பெரிய திருப்பம். அவர் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு மீளும் நாளை எதிர்பார்த்திருந்த சிங்களப் பெருமக்களின் சிந்தை நிறைவால், கொழும்பு மாநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. இராமநாதன் அவர்களை வரவேற்ற சிங்களப் பெரியார்கள் இன்றும் உயிரோடு இருக்கிறார்கள் இராமநாதன் அவர்களின் ஊர்வலத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்ட வண்டியின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு அப்பெரியார்கள் நெடுங்கயிறு கட்டித் தாமே வடந் தொட்டு வண்டியை இழுத்தும், பட்டுக்குடை, ஆலவட்டம் பிடித்தும் கௌரவமாக இராமநாதனை வெற்றிப் பவனியில் வீதி வழியே கொண்டு சென்றார்கள். "வருக வருக இலங்கைப் பெருமகனார் வருக. வருக வருக இலங்கையர் பிரதிநிதியே வருக. இலங்கையர் பிரதிநிதி

நீடூழி வாழ்க. வாழ்க எம் கிழவனர்" என்னும் வாழ்த்துச் சுலோகப் பலகைகள் அணியணியாக அவரை வரவேற்றுபசாரஞ் செய்தன. அக்கண்கொள்ளாக் காட்சியை அற்புதமாகச் சித்திரிக்கும் படம் பரமேஸ்வராக் கல்லூரியின் மேல் மாடியில் தென் கோடியில் அழகாகத் தொங்குகின்றது.

அன்று 1915 இல் நடைபெற்ற துன்பியல் நிகழ்ச்சிகள் வெறும் இனக்கலவரத்தைக் குறிப்பனவல்ல. அவை நீண்ட காலமாக அடக்கப்பட்ட உணர்ச்சி, விரக்தி, வெப்பியாரம் என்பன வின் வெளிப்பகர்ப்பு எனவே கருதப்பட்டது. புத்தசமய அடிப் படையில் சிங்களக் கலாச்சார மறுமலர்ச்சிக்கு அவை அத்திவார மெனவுங் குறிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற் பட்ட மாற்றங்கள் இலங்கை வாசிகளுக்கு நன்மையையே பயத்தன என்றாலும், கண்டிச் சிங்களவர் அம்மாற்றங்களால் தமது பாரம் பரிய முறைகள் நீங்கிவிட்டன என்றே கருதினர். சிங்கள இனத் துக்கும் புத்த சமயத்துக்கும் அம்மாற்றங்கள் பாதகமானவை என்றே சங்கம் கருதியது. சங்கம் சரணங்கச்சாமி என்று அதில் சரணமடைபவர் மாற்றங்களை விரும்பமாட்டார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ.

பௌத்த தத்துவஞான சங்கத்தாராலும் அனகாரிக தர்ம பாலா போன்ற பெரியார்களாலும் விழிப்புணர்ச்சியூட்டப்பட்ட சிங்களப் பௌத்தர்கள், மறுமலர்ச்சிக் காலமொன்றை எதிர் பார்த்திருந்த வேளையில் 2-3-1915 இல் தினமின பத்திரிகை விசேட அநுபந்தமொன்றை வெளியிட்டு, அதில் 2-3-1815 இல் கண்டி அரசு வீழ்ந்த வைபவத்தை நினைவு படுத்திற்று. அதிலே கண்டிப் பிரதா னிகளே கண்டியின் பாரதன அரசு அழிந்தமைக்குக் காரணமாயிருந் தார்கள் என்றும், நூற்றாண்டுக் காலமாகச் சிங்களவர் ஆங்கிலேய ருக்குக் கைகட்டி வாய்பொத்தி அடங்கி நிற்க வேண்டிய நிலைமை யேற்பட்டது என்றும் குறிப்பிட்டது.

இன்னும் டொன் பாரன் யயத்திலக, E. W. பெரேரா முதலா னோர் உணர்ச்சி ததும்ப எழுதிய வரலாற்றுக் கட்டுரைகளையும் வெளியிட்டுக் கண்டியின் கடைசி மன்னனை ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் கம்பீரமான தோற்றத்தைச் சித்தரித்த படத்தையும், அவனுடைய கொடி, முடி, குடை, ஆலவட்டம், சிங்காசனம், பாதபீடம் முதலாய அரச சின்னங்களின் நிழற் படங்களையும் பிரசுரித்தது. இவற்றையெல்லாம் கண்ட சிங்களப் பொதுமக்கள் தங்கள் பழமை யான பெருமைகளை எண்ணி உணர்ச்சி வசப்பட்டு அந்த நாளும் வந்திடாதோ என எதிர்பார்த்தார்கள்.

கம்பளை நகரம் இராசதானியாக இருந்த காலத்திலே பராக்கிரமபாகு என்னும் மன்னன் வாலகொட தேவாலயத்தை அங்கே கட்டினன். அது புராதன தேவாலயங்களில் ஒன்று. அதன் பரிபாலகராய பசநாயக நிலம் அன்றொரு நாள் நிகழ்ந்த எஸ்லா பெரகரா விழாவுக்கான ஊர்வலத்துக்கு அநுமதி கோரிக் கண்டி மாகாண அதிபராயிருந்த சாக்சனுக்கு 1912 ஆம் ஆண்டில் விண்ணப்பம் எழுதினர். அதற்கு அநுமதியளித்த ஆங்கிலேயரான மாகாண அதிபர் அவ்வீதியில் இருந்த முஸ்லிம் பள்ளி வாசலின் இருமருங்கிலும் ஐம்பது யார் தூரத்துக்குள் ஊர்வலக்காரர் வாத்தியங்கள் இசைக்கக் கூடாதென ஒரு நிபந்தனையும் விதித்தார். அத்தகைய கட்டுப்பாட்டை விரும்பாத விகாராதிபதி கண்டி மாவட்ட நீதி மன்றத்தில் முறையிட்டபோது, அதில் நீதிபதியாய் இருந்த கலாநிதி போல் பீரிஸ் விகாராதிபதியின் சார்பாகத் தீர்ப்புக் கூறினர். இதனைக் கேட்ட மாகாண அதிபர் சட்டத்துறை நாயகத்தோடு கலந்தாலோசித்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

உயர் நீதிமன்றத்தமர்ந்த நீதியரசர்கள் சோ என்பாரும், சம்பயோ என்பாரும் மாவட்ட நீதிபதியின் தீர்ப்பைத் தள்ளி விட்டு, அதற்கு விளக்கமுங் கொடுத்தார். ''முன்னர் கண்டியர் மகாநாட்டில் கண்டியருடைய பெருவிழாக்களுக்கு உத்தரவாதமளித்தமை, மேளவாத்தியம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தும் பொலிசுக் கட்டளைச் சட்டத்தையும், தலத்தாபன கட்டளைச் சட்டத்தையும் கட்டுப்படுத்த மாட்டாது, கட்டளைச் சட்டத்துக்கு எதிராகத் தீர்ப்புக் கூற மாவட்ட நீதிமன்றத்துக்காயினும் உயர் நீதி மன்றத்துக்காயினும் ஆளதிகாரம் இல்லை'' இத்தீர்ப்பைக் கேட்டதும் பௌத்த சிங்களவருக்கு மனவருத்தமுண்டாயிற்று. முன்னர் பிரித்தானிய அரசாங்கம் கண்டியருடன் செய்துகொண்ட மகத்தான ஒப்பந்தம் இப்போது கட்டளைச் சட்டங்களின் வலுவினால் மதிப்பிழந்து வெறுங் காகிதத் துண்டாகிப் போயிற்றே எனக் கவலைப்பட்டனர்.

பெல்சியம் சம்பந்தமாகப் பிரித்தானியாவுக்கும் யேமனிக்குமிடையில் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டி உலக மகாயுத்தத்தையே பிரகடனஞ் செய்த பிரித்தானியாவா தாங்கள் முன்னர் 2-3-1815 இல் எழுதிய கண்டியர் ஒப்பந்தத்தைக் கட்டளைச் சட்டத்தின் மூலம் செல்லுபடியாகாது என்று காற்றில் பறக்க விடுகிறார்கள் எனப் புண்பட்டனர், புழுங்கினர். அதுவுமல்லாமல் 1914 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் மகாயுத்த பிரகடனத்துக்கு முன் மாட்சிமை தங்கிய மன்னர் பிரான், ''ஒப்பந்

தங்களுக்கு மிகுந்த மதிப்பளித்தல் பிரித்தானியரின் தலையாய பண்பு, அது எங்கள் முந்தையோர் எமக்கு விட்டுப்போன மேலான அருஞ் செல்வம்" என்றும் பேசியிருந்தார். அது நிற்க.

முதலாம் மகாயுத்தம் மூண்டெழுந்த காலத்தில் வல்லரசுகளின் குடியேற்ற நாடுகளிடையே விழிப்புணர்ச்சியுண்டாகிச் சுதந்திரம் சமத்துவம் என்பனவாதிய சனநாயக சர்மத்துக்காக மக்கள் குரலெழுப்பினர். பிரித்தானியாவின் செல்வத்துக்கு விளைநிலமாகவிருந்த பாரதநாட்டிலும் கலகங்கள் ஆரம்பித்தன.

இதுகாறும் இலங்கையில் இனப்பகை வகுப்புக் கலவரம் என்பன உக்கிரமாக நடைபெறவில்லை. முன்னர் 1818 ஆம் ஆண்டிலும், 1848 ஆம் ஆண்டிலும் எதிர்க் கிளர்ச்சிகள் நடைபெற்றபோதிலும் அவை உள்நாட்டுக் கலகமாகவோ இனக் கலகமாகவோ இருக்கவில்லை. ஆனால் அன்று 28-5-1915 இல் வைகாசி விசாகநன் நாளிலே கண்டியில் உள்ள காசில் வீதியிலே ஒரு கலகம் ஆரம்பிக்க ஏதுவான ஒரு நிகழ்ச்சி நடைபெறலாயிற்று.

பௌத்தர்கள் தங்கள் புராதன கண்டி நடனம் ஆடல் பாடல் என்பன செய்து கறேல் என்னும் ஊர்வலங்கள் நடத்துவது வழக்கம். அது நெடும் பண்டைக்கால முதலாக நிகழ்ந்து வந்ததொரு விழாவணி. அன்று அவர்கள் காசில் வீதியில் இருந்த கனவான் ஒருவரைக் கௌரவித்துக் களிக்கு முகமாகத் தங்கள் கறேல் ஊர்வலத்தை அவ்வீதிவழியே திருப்பினர்கள். ஆனால் அவ்வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிவாசலில் முஸ்லிம்கள் அந்த வேளையில் தொழுகை நடத்தினர்கள் என்ற காரணத்தால் பொலிசுக்காரர் ஊர்வலத்தை தடை செய்தார்கள். பொலிசுக்காரர் தடை செய்வதற்குள் ஊர்வலத்தின் முன் வரிசையினர் வேகமாக அவ்வழியே முன்னேறிவிட்டார்கள். ஆனால் பின்வரிசைக்காரர் மாத்திரம் வந்த வழியே திரும்பிப்போக வேண்டியவராயினர்.

ஊர்வலக்காரரில் ஒரு சாரார் திரும்பிப் போவதைக் கண்ட தொழுகையாளர் ஊர்வலக்காரரை எள்ளி நகையாடிக் கைதட்டிச் சிரித்து மகிழ்ந்தார்கள். அவர்களுடைய மனோபாவத்தை அறிந்ததும் திரும்பிப்போன ஊர்வலக்காரர் மீளவும் அவ்வழியே மேல் நோக்கிப் பள்ளிவாசல் வழியாகத் தங்கள் மேளதாளங்கள் ஒலிக்க நடனங்கள் பாடல்களுடன் போனர்கள்.

இந்நிலையில் இருபக்கங்களிலிருந்தும் நிந்தனைகள், ஏச்சுக்கள், கூக்குரல்கள் ஒலித்தன. அவை உச்சநிலையடைந்தபின் கல்லெறிகள் தடியடிகள் இடம் பெற்றன. கலகம் பிறந்தது. அக்கலகம் அவ்வூர்

வலத்தோடு அன்றிரவோடு ஆறியமையலாம் எனப் பெரியவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நிலைமை வேறு வழியிற்றிரும்புவதா யிற்று.

கண்டியின் நாட்டுப் புறங்களில் வாழ்ந்த நல்ல சுபாபமுள்ள பௌத்தர்கள், அந்நிலைமையை வேறு விதமாக விளங்கினர்கள். அவர்கள் அதிகாலையிலேயே வீதி வழியே கூட்டங் கூட்டமாக நின்று தங்கள் புனிதமான புத்ததந்தக் கோயில் வேற்று மதத்தவரால் அழிக்கப்படலாம் என எண்ணி அஞ்சினர். அவர்கள் அச்சத்தை வேகப் படுத்தக் கூடியதொரு செய்தியும் அவர்களுக்குக் கிடைத்தது. அது கொழும்பிலிருந்து ஆயிரக்கணக்கான முரடர்கள் கோயிலை இடிப்ப தற்காக வருகிறார்கள் என்பதாம். கோயிலிடிபட்டபின் தாங்கள் வாழ்வதில் என்ன பயன் எனப் பௌத்தர் கண்ணீர் விட்டழுதனர். உண்மையில் பெருந்தொகையான முஸ்லிம்கள் கொழும்பிலிருந்து கண்டிக்குப் புறப்பட்டார்கள் என்றும் அவர்கள் கண்டியில் இறங்காது பொலிசாரால் திருப்பியனுப்பப்பட்டார்கள் என்றும் நாளடைவில் அறியவந்தது.

இதற்குள் பொலிசுப் பகுதியின் மேலதிகாரியாய டௌபிகன் பஞ்சாபியர் படையுதவியுடன் கலகக்காரரை அடக்கிவிட்டார் என்பது உத்தியோக பூர்வமான செய்தியாயிருப்பவும், ஊர்மக்கள் அதனை நம்பவில்லை. அவர்கள் புனிக்கோயில் தரைமட்டமாக இடிக்கப் பட்டதாயும், பௌத்தர்களுடைய வீடுகள் தாக்கப்பட்டதாயும், பௌத்தமதப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாயும் அவர்கள் பொருள் பண்டங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாயும் பேசித்திரிந்தார்கள்.

இவ்வாறுகக் கண்டியில் ஏற்பட்ட கலகம் மின்னல் வேகத்தில் கொழும்பு, இரத்தினபுரி, மாத்தளையாதிய நகரங்களுக்கும் பரவிற்று. அவ் டங்களிலிருந்து காட்டுத் தீ போல அது வடமாகாணம், கீழ் மாகாணம் ஆகிய இரு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிற் பரவியது. கொழும்பில் நடைபெற்ற கைகலப்பால் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க இயலாது பொலிசுக்காரர் இடர்ப்பட்டனர்.

இந்நிலையில் நுவரெலியாவில் ஓய்வெடுத்திருந்த ஆள்பதி சாமேஸ் அவர்களுக்கு இச்செய்தி 2-6-1915 இல் கிடைத்தது. அவர் உடனடியாகக் கண்டிக்குப் புறப்பட்டார். அவருடைய இலக் கியப் புலமை அவருக்கு நிலைமையை ஆற அமர விளங்கிக் கொள்ள உதவ வில்லை. அவர் தம்முடைய பிரதம செயலாளரான ஸ்ரப்ஸ் அவர்கள் கூறியவற்றை அப்படியே நம்பினர். அன்றிப் பொலிசதிகாரியாய டௌபிகன் கூறிய வண்ணமும் நடக்க அவர் ஆயத்தமானார்.

அவர்கள் இருவரும் அதனை அரசாங்கத்துக்கு எதிராக எழுந்த கிளர்ச்சி என்றே திரித்துக் கூறி விளக்கினர்கள். ஆள்பதியும் அவர்கள் கூற்றை நம்பிக்கொண்டார்.

அவற்றோடு யேமனிய ஒற்றர்கள் பௌத்த பிக்குகள் உடையில் உலாவுகிறார்கள் என்றும் அவர்கள் பிரித்தானியர் ஆட்சியை அகற்றுவதற்காகச் சதி செய்கிறார்கள் என்றும் வதந்தி பரவிற்று. அதைப்பற்றிப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப் பட்டபோது "இலங்கையில் ஏற்பட்ட கலவரம் யேமனியரின் தூண்டுதலால் ஏற்பட்டதாகலாம்" என்று கௌரவ மந்திரியார் பதிலளித்தார்.

கலகக்காரரிடம் துப்பாக்கி முதல் குண்டுகளீறுகப் பலவித ஆயுதங்கள் தயாராக இருந்தன என ஆள்பதி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், அவர் எதனையும் ஆலோசியாமல் உடனடியாக இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தி விட்டுப் படைத் தலைவன் பிரகாடியர் ஜெனறல் மக்கொம் என்பவரிடம் முழுப் பொறுப்பையும் ஒப்புவித்தார். படைத்தலைவனும் நிலைமை மிகவும் ஆபத்தானது எனக் கூறிப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

இராணுவ ஆட்சியில் படைகள் செய்த அட்டூழியங்களை எழுதிக்கொள்ளவியலாது. ஆண்களும் பெண்களுமாய பொதுமக்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டார்கள். அரசியல் சமூக சேவை, தேசிய சேவை, மதுவொளிப்பு ஆகியவற்றில் தொண்டு செய்த பெரியார்கள் எல்லோரும் காரணமின்றிக் கைது செய்யப் பட்டார்கள். சந்தேகத்தின் பேரிலும், முஸ்லிம்கள் குறிப்பிட்ட வண்ணமும் பெரியார்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள். உண்மை, நேர்மை, நல்லியல்பு என்பன மக்களைப் பாதுகாக்க இயலாது போயின. பஞ்சாப்பிய படைகள் செய்த துட்டச் செயல்கள் வரலாற்றில் காணப்படாத வகையில் அடாத செயல்களாயிருந்தன.

முன்னர் 1818 ஆம் ஆண்டிலும், பின்னர் 1848 ஆம் ஆண்டிலும் சிங்கள மக்கள் பட்ட துன்பியல் நிகழ்ச்சிகளைவிட 1915 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகள் அதிக பயங்கரமாகவும், வெகு குரூரமாகவுமிருந்தன. ஆள்பதி அவர்கள் பிரகடனஞ் செய்த இராணுவ ஆட்சி மத்திய மாகாணம், வட மேல் மாகாணம், மேல் மாகாணம், தென் மாகாணம், சப்பிரகாமுவ மாகாணம் ஆகிய பிரதேசங்கள் நிலவிற்று. எல்லாமாக. 105 நாள்கள் வரையில் நிலவிய பயங்கரவாட்சியின் சரித்திரம் சேர் இராமநாதன் அவர்களா

லும், ஆமண்டி சூசா அவர்களாலும் தனித்தனி நூல்களாக எழுதப் பட்டுள்ளன. யூன் மாதம் இரண்டாந் திகதி ஆரம்பித்த இராணுவ ஆட்சி செப்ரம்பர் இருபத்தைந்தாம் நாள் வரை நடைபெற்றது.

மதுவொழிப்புப் பிரசாரத்தில் தீவிரமாயுழைத்த திரு. D. S. சேனநாயக அவர்களும் கலகத்தைத் தூண்டியவர்களில் ஒருவர் எனக் கைது செய்யப்பட்டு 40 நாள்களுக்கு மேலாகச் சிறையில டைக்கப்பட்டு விடுதலையளிக்கப்பட்டார்.

குடியேற்ற நாட்டு மந்திரியாரால் ஆள்பதி சாமேஸ் அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டதும், சமாதானப் பிரியரான சேர். யோண் அண்டர்சன் அவர்கள் ஆள்பதியாக நியமனம் பெற்று 15-4-1916 இல் இலங்கைக்கு வந்தார். அவர் சர்வகலாசாலைப் பரீட்சார்த்திகளுள் மிகத் திறமையாகச் சித்தியெய்தியமைக்காகத் தங்கப் பதக்கம் பரிசில் பெற்ற படிப்பாளி. குடியேற்ற மந்திரியாரின் காரியாலயத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து குடியேற்ற நாடுகளின் பரிபாலன அலுவல்களிற் போதிய அநுபவமும் முன்னறிவும் பெற்றவர். பிரித்தானிய பேரரசின் பல நாடுகளுக்கு அரசாங்கத்தின் பிரதியாளராய்ச் சென்று ஆங்காங்குள்ள பிணக்குகள் பலவற்றைத் தீர்த்துவைத்தவர். மாட்சிமை தங்கிய ஐந்தாம் யோச் மன்னர் அவர்கள், முன்னர் வேல்ஸ் இளவரசராக இலங்கைக்கு வந்த காலத்தில் அண்டர்சனும் உடன் வந்தவர். வெளிநாடுகளிலும் உள்நாட்டு அரசாங்கத்திலும் பொறுப்பு வாய்ந்த மேல் உத்தியோகங்களை வகித்து அனுபவம் பெற்ற அண்டர்சன், இலங்கைக்கு ஆள்பதியாய் வந்தமை வரவேற்கப்பாலதே என்றனர்.

அண்டர்சன் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இலங்கையில் கலவர காலத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் தகவல் சம்பந்தமான ஏடுகளைப் பரிசீலனை செய்வதில் முதலில் முனைந்தார். சின்னஞ் சிறிய குற்றத்துக்காகப் பெண்ணும் பெரிய மனிதர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும், ஆதாரமற்ற கோள்குண்டணிகளைக் கேட்டுப் பெரியவர்கள் சிறையிடப்பட்டதையுங் கண்டு வருந்தி அவர்களுள் 800 பேருக்கு மன்னரின் பிறந்தநாள் விழா வைபவத்தைச் சாட்டிப் பொது மன்னிப்பளித்து விடுதலை வழங்கினர்.

ஆள்பதி அவர்கள் சேர். இராமநாதன் அவர்கள் சட்டசபையில் கேட்டுக் கொண்டபடி கலவரகால நடபடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஓர் ஆணைச்சபையை நிறுவினர். அதிலே பிரதம நீதியரசர் சேர். அலெக்சாண்டர் வுட்றென்றம் அவர்களும், சினிதர் என்னும் முதிய அப்புக்காத்திருமி

இருந்தார்கள். அவர்கள் இனக் கலவரத்தின்போது நடைபெற்ற இராணுவ ஆட்சியின் குரூரச் செயல்களை ஆராய்ந்து, அன்னை மன்னர் பிரானின் அரசாங்கம் நன்நம்பிக்கையோடு செய்த பிழைகள் என அறிக்கையில் எழுதினார்கள். பிழையைப் பிழை என ஒத்துக்கொள்ளாமல் தெரியாத்தனமாக நடந்த பிழையென்று கூறாமல், நன்நோக்கத்தோடு செய்த பிழை என்றமை இலங்கையர் வெறுப்புக்கு இலக்காயிற்று.

அப்போதுதான் இலங்கையர் கொதித்தெழுந்தார்கள். அநீதி நடப்பதைத் தடை செய்வதற்கு இலங்கையர் அதிகாரம் இல்லாமல் இருந்ததை உணர்ந்தார்கள். தங்கள் நாட்டில் நிலவிய அரசாங்கத்தைத் தாங்கள் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கருதினார்கள். சொந்த நாட்டில் பிறர்க்கடிமையாயிருப்பது இயல்பாது எனக் கண்டார்கள். சட்டசபையில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என ஒரு சங்கம் கூடிக் கிளர்ச்சி செய்ய முனைந்தவர்களுக்குப் புகலிடம் யார் என்பது முதலில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கையர் பிரதிநிதியாகத் தெரியப்பெற்ற இராமநாதன் அவர்களின் அரிய சகோதரர் அருணாசலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட இலங்கைச் சீர்திருத்தசபை 1917 இல் உருவாக்கப்பட்டது. அது இரண்டாண்டுகளில் தேசீய காங்கிரஸ் எனப் பெயர் பெற்று 1919 ஆம் ஆண்டில் கோலாகல வைபவங்களோடு மகாநாடுகள் நடத்திச் சீர்திருத்தங் கோருவதாயிற்று. அதிலே அரசியற் பணியும் தேசத்தொண்டும் செய்ய விரும்பிய பிரமுகர் பலரும் சேர்ந்தார்கள். சேர். பேம்ஸ் பீரிஸ், டொன்பாரன் யயத்திலக, F.R. சேனநாயக, D. S. சேனநாயக ஆகிய சிங்களப் பெரியார்கள் தேசீய மகாசபையை அலங்கரித்தார்கள். எமது அரசியற்றேவைகள் என்ற தலைப்பில் அருணாசலம் அவர்கள் பேசியதைக் கேட்டவர்கள் அதன் ஆற்றொழுக்குப் போக்கையும் ஆணித்தரமான கண்டனத்தையும் வியந்தார்கள். அருணாசலம் அவர்களை முதல்வராக முன்னணியில் கொண்டே இலங்கையின் சுதந்திரத்தைப் பெறுவதற்குச் சிங்களப் பெருமக்கள் முயற்சி செய்தார்கள். அருணாசலம் தலைமை தாங்கியதைக் கண்டு ஆங்கிலேயரும் அந்தாபங் கொண்டனர். ஆனால் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையருக்குப் பொறுப்பாட்சி வழங்குவதில் சிறிது தயங்கியது. "இலங்கையருக்குப் பொறுப்பாட்சி வழங்கினால் இலங்கையர் பிழை விட்டுவிடுவார்கள், பொறுப்பாட்சியைக் கொண்டு நடத்தும் தகுதி இலங்கையருக்கு இன்னும் ஏற்படவில்லை" என்றே ஏழுதினார்கள். இதனால் இலங்கையில் பெரிய பரபரப்பு ஏற்படலாயிற்று.

அக்காலத்தில் இலங்கையின் மோனிங் லீடர் என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் 27-9-1917 இல் வெளியான தலையங்கம் கோடி பொன் பெறும். அதனை ஆணித்தரமாக எழுதியவர் ஆமண்டி சூசா என்னும் பெரியாராவர். அவர் சமசமாசக் கட்சிப் பிரமுகராய தோழர் டொறிக் சூசாவின் அருமைத் தந்தையாவர். ஆமண்டி சூசா எழுதிய அருமையான தலையங்கம் பிழை விடும் உரிமை என்பது. அப்படியான தலையங்கத்தை அவர் காரசாரமாய் எழுதியது ஏன் என்பது கேள்வி. ஆள்பதி அவர்கள் இலங்கையருக்கு ஆளுரிமை கொடுத்தால் அவர்கள் பிழை விட்டுவிடுவார்கள். அவர்களுக்கு அரசியற் பயிற்சி கிடையாது என்றார். அதனைக் கேட்டு மனம் நொந்த ஆமண்டி சூசா அவர்கள் அத்தலையங்கத்தை அப்படி ஆணித்தரமாக எழுதுவாராயினர்.

''மனிதர் பிழை விடுவது சகசம். பிழைவிட்டுத்தான் காரியங்களைப் பழகலாம் பிழை விடுதல் மனிதருக்குரிதோர் உரிமை. ஏன் ஆங்கிலேயர் பிழையான அரசாங்கத்தைக் காணவில்லையா ? அவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகள் யாவரும் உண்மையில் தகுதியானவர் தாமோ ? ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் பிழைவிடச் சுதந்திரம் உண்டு.'' என்று பொருட்பட மிகவும் நயமான தலையங்கத்தை எழுதி ஆள்பதி அவர்களைச் சிந்திக்க வைத்தார்.

முதலாம் மகாயுத்தத்தில் இங்கிலாந்து தீவிரமாக ஈடுபட்ட போது அதன் விசுவாசமுள்ள முடிக்குரிய குடியேற்றம் என்ற முறையில் இலங்கையும் யேமனியோடு போருக்குப் புறப்பட்டது. இலங்கைச் சட்டசபை எவ்வித எதிர்ப்புமின்றி யுத்தச் செலவுக்கு மானியம் ஒதுக்கியது. அதனுடன் நில்லாது இலங்கை அரசாங்கம் சுதேசிகளிடையே படைதிரட்டிப் பழக்கி ஐரோப்பாவுக்கு அனுப்பியது. மகா முதலியார் பண்டாரநாயக அவர்கள் அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்தாராகையால் அவருடைய மைந்தன் திரு S.W.R.D. பண்டாரநாயக தமது யுத்த நன்கொடையைத் தாராளமாக அள்ளிக் கொடுத்து ஆவன செய்தார். யுத்த நெருக்கடிகள் இலங்கையில் ஏற்படாவிட்டாலும் விலைவாசிகள் அதிகமாக ஏறுவனவாயின.

படித்த இலங்கையர் தொகுதியின் பிரதிநிதித் தேர்தல் இரண்டாம் முறையாக 1916 ஆம் ஆண்டில் நடை பெற்றபோதும் இராமநாதன் அவர்கள் வேட்பாளராய் முன்நின்றார். அவருக்கு எதிராக நியாயவாதி T. S. ஜெயவர்த்தனா என்னும் பெரியார் முன்னின்றார். இலங்கை முழுவதிலும் இராமநாதன் அவர்களுக்கே அதிக ஆதர

விருந்தமையால் அவர் இரண்டாம் முறையும் இலங்கைவாழ் மக்களின் ஏகப் பெரும் பிரதிநிதியாகத் தெரியப் பெற்றுச் சட்டசபையை அலங்கரிப்பாராயினர்.

முன்னர் தமிழரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பொன் குமாரசுவாமி அவர்களுக்குப்பின் அம்பலவாணர் கனகசபை என்னும் பெரியார் நியமனம் பெற்றார். மக்கலம் திருத்தத்தின்போது தமிழருக்கு மேலும் ஒரு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டபோது அவ்விடத்துக்குத் திரு. J. N. திசைவீரசிங்கம் என்னும் பெரியார் கீழ் மாகாணத்திலிருந்து நியமிக்கப்பட்டார்.

அம்பலவாணர் கனகசபை அவர்கள் இரண்டாம் முறையும் நியமனம் பெற்றதோடு சட்ட நிர்வாக சபையிலும் அங்கத்துவம் வகித்தார். அவருடைய சேவையைக் கௌரவிக்குமுகமாக அரசாங்கம் அவருக்கு நைற் பட்டம் அளித்தது. அவர் 1916 ஆம் ஆண்டில் இறந்தபின் அவருடைய இடத்திற்கு இந்துசாதனம் சபாபதி அவர்கள் நியமனம் பெற்றார். திசைவீரசிங்கம் அவர்களுக்குப்பின் அப்புக்காத்தர் பாலசிங்கம் அவர்கள் நியமனம் பெற்றார். பாலசிங்கம் அவர்கள், நீதிபதி வைமன் கு. கதிரைவேற்பிள்ளை அவர்களின் மைந்தர்

இந்தியாவிலும் 1917 ஆம் ஆண்டில் சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறலாயின. முதலாவது மகாயுத்தத்தின் காரணமாக இந்தியாவில் ஏற்பட்ட பல தடைமுறைகளை நாட்டு மக்கள் தீவிரமாக எதிர்த்தனர். அன்னிபெசண்ட் அம்மையாரின் சுதந்திர ஆட்சி இயக்கம் வலுப்பெற்றது. தேசிய உறவுமுறைகள் தீவிரமாக உறுதிப்படுத்தப்படலாயிற்று.

எட்விட் மொன்ராகு என்பார் இந்திய மந்திரியாகப் பதவியேற்றதும் அவர் இந்தியாவுக்குத் தம்மாலான நன்மைகளைச் செய்வதற்குத் திட்டமமைப்பாராயினர். அவர் கெம்ஸ்போட் பிரபுவுடன் சேர்ந்து இந்தியாவெங்கும் சுற்றிப்பார்த்து நிலைமைகளை அறிந்தார். அவர் இந்தியாவிலுள்ள சேலத்தில் விஜயராகவாச்சாரியார் என்ற பெரியாருடன் கலந்து பேசியபோது விஜயராகவாச்சாரியார் கூறிய அரசியற் கோட்பாடுகளையும் கேட்டார். "மாகாண சுயவாட்சி எமக்குத் தேவையில்லை. எமக்கு இந்தியா முழுவதிலும் ஒற்றையாட்சியே தேவை." என்று ஆச்சாரியார் கூறியதோடு இந்திய அரசாங்கத்தில் இலங்கையும் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தார்.

மொன்ராகு அவர்கள் இங்கிலாந்துக்கு மீண்டபின் 1918 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் அவருடைய அறிக்கை வெளியிடப்பட்டது. அதிலே இந்தியாவின் சுயவாட்சிக்கு அடிகோலும் அமைப்புக்கள் எதுவும் இன்றி வெறும் சட்டசபைத் திருத்தங்களுக்கான வழிகளே கூறப்பட்டதை இந்தியர் வெறுத்தனர். அவர்கள் சுயராச்சியப் பாதையில் கிளர்ச்சி செய்ய முனைந்தபோது இந்திய அரசாங்கம் அடக்கு முறைகளைக் கையாண்டது.

பஞ்சாப் மாகாணத்தில் கல்நெஞ்சனை சேர். மைக்கல் ஓடையர் என்பானின் கொடுங்கோலாட்சியில் 13—4—1919 இல் வருடப் பிறப்பின்போது 20000 மக்கள் மத்தியில் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஐந்நூறு பேர் இறந்தும் ஆயிரக்கணக்கானோர் காய முற்றும் போனதால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படலாயிற்று.

அத்தியாயம் 22

மனிங் காலத்து முதற்றிருத்தம்

ஆள்பதி அண்டர்சன் அவர்கள் தமது பதவிக் காலத்திலேயே நுவரெலியாவில் உள்ள தமது சுகத்தானத்தில் நோய்வாய்ப்பட்டு 24-3-1918 இல் இறந்தார். அவருக்குப் பின் பிரகாடியர் ஜெனறல் ஹென்றி மனிங் அவர்கள் ஆள்பதியாக வந்தார். அவர் இலங்கைக்கு வருமுன் பர்மா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் போர்க்களங்களைக் கண்டவர். அவர் தளபதியாயிருந்து படைகளை வெற்றிகரமாக நடத்திப் பெயர் பெற்றவர். மேற்கிந்திய தீவுகளில் ஆள்பதியாயிருந்து அனுபவம் பெற்றபின் 1818 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் இங்கே வந்தார். அவர் இங்கே வருமுன் குடியேற்ற மந்திரியார் மில்னர் பிரபுவிடம் இலங்கை அரசியல் சம்பந்தமான முன்னறிவைப் பெற்று வந்தார். இலங்கையர் ஆரம்பித்த சீர்திருத்த சங்கம் கோரிய அரசியற்றேவைகளைக் கருத்தூன்றிக் கவனித்து அறிக்கையொன்றை எழுதியனுப்புமாறு மில்னர் பிரபு ஆலோசனை கூறிவிட்டார்.

அருணாசலம் அவர்களைத் தலைவராகவும் முதல்வராகவுங் கொண்டே இலங்கைச் சீர்திருத்த சங்கம் 1917 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கைத் தேசீயசபை உருவாக்கப்பட்டது. அதன்பின் 1919 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்திலே அருணாசலம் அவர்கள் தலைமையிலேயே இலங்கைத் தேசீய மகாசபை என்னும் தேசீய காங்கிரஸ் உருவாக்கப் பட்டது. அதில் பெரும்பான்மையினரான கரை நாட்டுச் சிங்கள வரும் தமிழரும் பிறரும் இருந்தார்கள்.

தேசீய மகாசபையினர் இலங்கைச் சட்டசபையில் உடனடியாகத் திருத்தம் ஏற்படுதல் வேண்டும் என்று கோரிக் குடியேற்ற மந்திரியாருக்குத் தந்தி மூலம் தெரிவித்தனர். "ஏறக்குறைய 50 பிரதிநிதிகள் உள்ள சபையாகவும், அதிலே ஐந்தில் நான்கு பகுதியினர் ஆள்புல அமைப்பில் தெரியப்படவும், பரந்த முறையில் ஆண்களுக்கும், குறிக்கப்பட்ட அளவில் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கவும், ஐந்தில் ஒரு பகுதியார் சிறிய சிறுபான்மைப் பிரதிநிதிகளும் உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவராயுமிருக்கவும், தெரியப் பெற்ற வாசகர் என்னும் சபாநாயகர் சபைக்குத் தலைமை தாங்கவும், வரவு செலவுத் திட்டத்தைச் சட்டசபை மட்டுப்படுத்தவும், ஆள்பதி

அவர்களின் மந்திரிமார் சபை எனப்படும் சட்ட நிர்வாக சபையில் உள்ளவரில் அரைப் பங்கினராவது சட்டசபை அங்கத்தவரிலிருந்து தெரியப்பட்டவராயிருப்பவும், ஆள்பதி அவர்கள் பிரித்தானிய பாராளுமன்ற யாப்பு முறைகளில் பாண்டித்தியமுள்ளவராயும் அதில் அநுபவம் வாய்ந்தவராயும் இருப்பவும், உள்ளூர் அலுவல்களில் இலங்கையருக்குப் பரிபூரண சுதந்திரப் போக்கு வழங்கப்படவும் வசதிசெய்தல் வேண்டும்'' என்பதே அந்தத் தந்தியில் கூறப்பட்ட வற்றின் சாரமாகும்.

அருணாசலம் அவர்கள் தேசிய மகாசபையின் தலைமைப் பீடத்தை அலங்கரித்துக் கொண்டே அம் மகாசபையின் சார்பில் இலங்கை அரசியலமைப்பில் திருத்தங்கோரிய நினைவேடு ஒன்றை ஆள்பதி மனிங் அவர்களுக்கூடாகக் குடியேற்ற மந்திரியார் மில்னர் பிரபுவுக்கு அனுப்பினர். மில்னர் பிரபுவுக்கு வேண்டிய விளக்கத்தைக் கொடுக்குமாறு அருணாசலம் அவர்கள் தமது ஆப்த நண்பராய குறூவ் பிரபுவுக்கும் அந்நினைவேட்டில் ஒரு பிரதியை அனுப்பினர். குறூவ் பிரபுவுக்கு இங்குள்ள நிலைமைகளை நன்கு விளக்குமாறு இங்கிலாந்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த தமது மைந்தன் பத்மநாதனுக்கும் எழுதியிருந்தார்.

அக்காலத்தில் படித்த இலங்கையர் பிரதிநிதியாக இரண்டாம் முறையும் தெரியப்பெற்ற இராமநாதன் அவர்கள் சட்டசபையில் திருத்தங்கோரி நீண்ட பிரேரணை யொன்றைப் பிரேரித்தார். அவருடைய பிரேரணை இலங்கை அரசயாப்பைத் தாராளமான முறையில் திருத்தி அமைக்கும் அடிப்படையில் அமைந்திருந்தது.

மேலே சொன்ன நினைவேடுகள் பிரேரணைகளைவிட, கண்டி நாட்டுச் சிங்களவரும் ஒரு நினைவேட்டை அனுப்பியிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இலங்கைவாழ் ஐரோப்பியரும் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் தங்களுக்குச் சாதகமான திருத்தங்களைக் குறிப்பிட்ட நினைவேடொன்றை அனுப்பினர்கள்.

இதற்குள் ஆள்பதி மனிங் அவர்கள் தமது அந்தரங்க அறிக்கையையும் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பியிருந்தார். இதனால் நிலைமை சாதகமாயிருக்கமாட்டாது எனச் சந்தேகம் கொண்ட அருணாசலம் அவர்கள் குடியேற்ற மந்திரியாரிடம் இரண்டு காரியங்கள் கேட்டார். முதலாவது, ஆள்பதி அவர்களுடைய அறிக்கையை வெளியிடுமாறும், இரண்டாவது இலங்கையில் இருந்து ஒரு பிரதியாளர் குழுவினைக் கண்டு பேச இசையுமாறும் அவர் கேட்டிருந்தார்.

ஆனல் மில்னர் பிரபு அருணுசலம் கேட்டவை இரண்டையும் செய்ய இயலாது என உடனடியாக நிராகரித்து விட்டார். பின்னர் ஒருவாறு மனமிளகிய மில்னர் அவர்கள் இலங்கையிலிருந்து போன பிரதியாளர் குழுவைக் கண்டு பேச மனமிசைந்தார். அருணுசலம் அவர்கள் யேம்ஸ் பீரிஸ், D. B. யயத்திலக ஆகியோருடன் சென்று மில்னரைக் கண்டார். அருணுசலம் எடுத்துரைத்தவற்றை மில்னர் உண்மையானவையென ஒப்புக் கொண்டார் சீர்திருத்தம் செய்வ தற்கும் உடன்பட்டார்.

ஆனல் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அரசாங்கம் இலங்கைக்கு அரசியற்றிருத்தஞ் செய்யும் விபரத்தை 28-7-1920 இல் பிரித்தானிய பாராளுமன்றத்தில் வெளியிட்டதைக் கேட்ட இலங்கையர் மனமுடைந்து போனர்கள். அத்திருத்தம் இலங்கைக் ''கசற்'' எனப்படும் வர்த்தமானியில் 23-9-1920 இல் விளம்பரப் படுத்தப் பட்டது,

அதன் பிரகாரம் மனிங் காலத்தில் ஏற்பட்ட முதலாவது திருத்தத்தின் வண்ணம் சட்டசபையில் சில மாற்றங்கள் செய்யப் பட்டன. அதனல் சட்டசபையில் 37 பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கவும், அவருள் 14 அங்கத்தவர் உத்தியோகத்த ராயும், 23 பேர் உத்தியோகப் பற்றற்றவராயுமிருக்க ஒழுங்கு செய்யப்பட்டது

உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் நான்கு தரப்பட்டவர் களாய் இருந்தனர். அவர்கள் பின்வரும் முறையில் அங்கத்துவம் வகித்தனர். அவர்கள் 1. ஆள்புலவாரியாகத் தெரியப் பெற்றவர். 2. வகுப்புவாரியாகத் தெரியப் பெற்றவர். 3. சங்கங்களினல் தெரியப் பட்டு ஆள்பதி அவர்களால் நியமனம் பெற்றவர்கள். 4. ஆள்பதி அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள்.

1. ஆள்புலத்துக்குரிய முறையில் தெரியப் பெற்றவர் பதினெரு வராவர். மேல்மாகாணம் தலைநகரத்தைத் தன்னகத்தே கொண்ட தாகையாலும், அங்கே குடிசனமதிகமாதலாலும், அங்கே பல இன மக்கள் வாழ்ந்தாரென்பதாலும் அம் மாகாணத்தில் மூன்று பிரதி நிதிகள் தெரியப்படக் கூடிய வகையிலும்; ஏனைய எட்டு மாகாணங் களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியாக எண்மர் தெரியப் பெறவும், எல்லாமாகத் தெரியப்பட்ட பிரதிநிதிகள் பதினெருவராவர்.

2. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஐரோப்பியருக்கு இருவரும், பறங்கியருக்கு ஒருவருமாக மூன்று தெரியப்பட்ட அங்கத்தவருக்கு இடமளித்தது.

3. சங்கங்கள் தெரிந்து அனுப்பும் பிரதிநிதிகள் - கரை நாட்டு வீரபொருள் உற்பத்தியாளர் சங்கத்துக்கு ஒருவரும் இலங்கை வர்த்தக சங்கத்துக்குரியவர் ஒருவருமாக இருவர் இடம் பெற்றனர்.

4. ஆள்பதி அவர்கள் இலங்கையில் உள்ள பல வேறு இனத்தவருக்கும் பிரதிநிதிகளை வழங்கும் முறையில் நியமனம் மூலம் இடம் பெற்றவர்கள் பின்வருமாறு. அவர்கள் கண்டிச் சிங்களவருக்கு இருவர், இந்திய மக்களுக்கு ஒருவர், முஸ்லிம்களுக்கு ஒருவர், விசேட நன்மை கருதி மூவர் என எழுவராவர்.

முன்னர், படித்த இலங்கையரைத் தெரிவு செய்வதற்கு இலங்கையருக்கு இருந்த வாக்குரிமை போல இந்த அமைப்பிலும் தகுதி வாய்ந்தவருக்கே வாக்குரிமை இருந்தது. வாக்காளர் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகியவற்றுள் ஒன்றிலேனும் எழுத வாசிக்கத் தெரிந்தவராய் மாதாந்தம் 50 ரூபா வருமானம் உள்ளவராயிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது.

அன்றி 1920 ஆம் ஆண்டின் கழகத்துப்பணி, கௌரவம் மிக்க தெரியப்பெற்ற பிரதிநிதிகளாய்ச் சட்டசபையை அலங்கரிக்க அருகதை உள்ள வேட்பாளருக்கு இருக்க வேண்டிய யோக்கியாம்சங்களைத் தயாரித்து வெளியிட்டது. வேட்பாளராவோர் இயல்புகள் பின்வருமாறு:-

1. அவர்கள் இலங்கையில் அரசாங்க உத்தியோகம் எதுவும் வகிக்கக்கூடாது.
2. அவர்கள் வயது 25 க்குக் குறையப்படாது.
3. அவர்கள் பிரித்தானிய குடியுரிமையுள்ளவராதல் வேண்டும்.
4. ஆங்கிலம் எழுத வாசிக்கப் பேச வல்லவராயிருத்தல் வேண்டும்.
5. வாக்குரிமை பெற்றவராய் இருத்தல் வேண்டும்.
6. தேர்தலுக்கு மூன்றாண்டுகள் முன்னதாகவாவது இலங்கையில் வசித்தவராயிருத்தல் வேண்டும்.
7. நிதியறவு பெறுதவராய் இருத்தல் வேண்டும்.
8. அரசாங்கத்திலிருந்து விலத்தப்பட்டவராயிருத்தலாகாது.
9. வழக்கறிஞர் வரிசையில் இருந்து விலத்தப்பட்டவராயிருத்தலாகாது.
10. ஆண்டு தோறும் சராசரி 1500 ரூபாவுக்குக் குறையாத வருமானம் உள்ளவராயிருத்தல் வேண்டும். அன்றி 6000 ரூபா பெறுமதியான ஆதனம் அவர் பெயரிலாவது அல்லது அவருடைய மனைவியாருடைய பெயரிலாவது இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் அமையுமாறு ஆள்பதி மனிங் அவர்கள் திருத்தி அமைத்த சட்ட சபையின் அமைப்பைப் பின்வரும் வரைவிற் காண்க.



மேலே சொன்ன தகுதிகளுள்ள வேட்பாளர் சட்டசபைக்குத் தெரியப் பெற்றதும், கௌரவமுள்ள பெரியாராய் விளங்குவர். அவர் சட்டசபையிலே அங்கத்துவம் வகிக்குமுன் மாட்சிமை தங்கிய பிரித்தானிய மன்னருக்கு விசுவாசமுள்ளவராய்க் கடமையாற்று வதாகச் சத்தியஞ் செய்தல் பின்வரும் வசனக் கோப்புக்குள் அடங்கியதாயிருத்தல் வேண்டும்.

''கதிரவேலு சின்னையா குலசேகரம் ஆகிய நான், மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கும் அவர் வம்சாவழியில் பட்டத்துக்கு வருபவர்களுக்கும் உண்மையில் நம்பிக்கைக்குரிய விசுவாசமுள்ளவனுய்ச் சட்டப்படி கடமையாற்றுவேன் என்று இத்தால் உறுதி கூறிச் சத்திய விசுவாசஞ் செய்கின்றேன். அங்ஙனமே கடமையாற்றக் கடவுள் என்னைக் காப்பாற்றுவாராக''.

ஆள்பதி மனிங் அவர்கள் செய்த இத்திருத்தங்களினுல் ஏற் பட்ட வேறொரு மாற்றம் மகிழ்ச்சிக்குரியது. ஆள்பதி அவர்களுக்கு வரவு செலவு விபரங்களில் ஆலோசனை கூறுவதற்கு நிதிக்குழு என ஒன்று இயங்கி வந்தது. அதிலே இதுகாறும் இலங்கைவாழ் மக் களின் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. இத்திருத்தத்தால் நிதிக்

குழுவில் முதன் முதலாக இலங்கையர் பிரதிநிதிகளில் ஒருவர் இருவர் இடம்பெற அமைந்தமை நல்ல சகுனம் என்பதோடு அவர்கள் வரவு செலவு விபரங்களைக் கண்காணிக்கக் கூடியதாக இருந்தமை விரும்பத்தக்கதாகவுமிருந்தது.

இன்னும் ஒரு விசேட இராசாங்க அறிவித்தலினால் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் மூவர், சட்ட நிறைவேற்றுச் சபையில் இடம் பெறலாம் என ஒழுங்கு செய்யப்பட்டது. அங்ஙனம் சட்ட நிர்வாக சபையில் இடம் பெற்றவர்களுள் ஒருவர் அம்பலவாணர் கனகசபையாவர். அவர் 13-1-1921 இல் அச்சபையில் அமர்வாராயினர்.

உண்மையில் 1920 ஆம் ஆண்டின் சட்டசபை அமைப்பு சம பலப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்ததென்றே கூறல் வேண்டும். அதில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் முதன்முதலாகப் பெரும் பான்மையினராய் இருந்தனர். ஆனல் இலங்கைச் சமூகங்களைப் பொறுத்த வரையில் எந்தச் சமூகமும் தனித்து ஏனைய சமூகமொன்றை நலியச்செய்ய இயலாதவாறு இருந்தனர். சுருங்கச் சொன்னல் உத்தியோக அங்கத்தவர் சிறுபான்மையினரான போதிலும் அவருடைய ஒத்துழைப்பை ஏனைய சமூகங்கள் வேண்டிக் கொள்ள வேண்டிய தன்மை இருந்தது. எந்தச் சமூகமும் உத்தியோக அங்கத்தவர் உதவியில்லாமல் சட்டசபையில் பேரதிகாரம் பெற இயலாதிருந்தது.

மனிங் திருத்தத்தில் இருந்த குறைகள்:

மனிங் அவர்கள் அமைத்த முறையிலும் குறைகள் இல்லாது போகவில்லை. அவர் எல்லோரையும் திருப்திப்படுத்த முனைந்து ஈற்றில் ஒருவரையுந் திருப்திப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர் அமைப்பில் ஆள்பதி அவர்களின் அதிகாரமும் செல்வாக்கும் ஆதரவும் குறையவேயில்லை. ஆள்பதியின் சின்னவிரலசைய 14 உத்தியோக அங்கத்தவரும் அசைவர்.

மனிங் அவர்கள் அமைப்பைப் பார்த்தவுடன் உத்தியோக அங்கத்தவர் 14 பேரும் உத்தியோகப் பற்றற்றவர் 23 பேரும் இருக்கிறார்கள் எனத் தோன்றும். ஆனல் உள் நிலைமை வேறுய் இருந்தது. ஆள்பதியின் விரலசைய ஆடும் 14 உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப் பற்றற்ற ஐரோப்பியர் இருவரும், பறங்கியர் ஒருவரும் ஆங்கிலேயர் மயமான வர்த்தக சங்கப் பிரதிநிதியாய ஐரோப்பியரும், நியமன அங்கத்தவர் ஏழுபேரும் சேர்ந்து கொண்டால் நிலைமை

வேருய் அமையும் போலிருந்தது. அப்படியானால் உத்தியோகப் பற்றுள்ள பிரதிநிதிகள் நிலைமை 14 அல்ல. அவர்கள் வாக்களித்தால் 25 பேரைத் தம் பக்கம் இழுக்கக் கூடியவராயிருந்தனர்.

எனவே இத்திருத்தத்தாலும் உத்தியோகப் பற்றற்றவர் நிலைமை திருப்திகரமாகவிருக்கவில்லை. அவர்கள் 23 : 14 எனக் கருதினர். ஆனால் அது 12:25 ஆக ஆடி அசையவுங் கூடியதாக இருந்தது. சுருங்கக் கூறின் தெரியப் பெற்ற அங்கத்தவர் தொகை அதிகரித்த போதிலும் பொறுப்பு உத்தியோக அங்கத்தவர் கையிலேயே முன் போல இருந்தது எனலாம்.

இன்னும் உத்தியோகப் பற்றற்றவர் 23 பேரில் 16 அங்கத்தவரே தேர்தல் மூலம் தெரியப் பெற்றனர். ஏனையவர் ஆள்பதியின் தயவினாலேயே அங்கத்துவம் பெற்றனர். அந்த ரீதியில் பார்த்தால் 16 : 21 ஆகவும் கொள்ளலாம். இன்னும் இலங்கையர் பிரதிநிதிகளிலும் பார்க்க உத்தியோக அங்கத்தவர் தொகையில் அதிகமாகவே இருந்தனர். அன்றி சிங்களவருள் கரைநாட்டினருக்கும் தமிழருள் இலங்கைத் தமிழருக்கும் மாத்திரம் ஆள்புல அமைப்பில் தேர்தலை வகுத்துவிட்டு ஏனைய சமூகத்தவருக்கு நியமன முறையும் வகுப்புவாத முறையும் அமைத்தமை முற்போக்காக இருக்கவில்லை என்றனர்.

ஆள்பதி மனிங் அமைத்த திருத்தத்தில் இருந்த குறைகள் பல சோணங்களில் ஆராயப்பட்டன. அதில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் முதன் முதலாக எண்ணிக்கைப் பலம் வாய்ந்தவராய் யிருந்தமை உண்மைதான். ஆனால் அவர்களுக்கு அதிகாரமோ பொறுப்போ வழங்கப்படவில்லை என்பதும் உண்மையே. இதில் உள்ள வேடிக்கை என்ன என்றால், ஆள்பதி அவர்கள் ஏதாவது ஓர் அலுவல் முக்கியமானது எனக் கருதுவாராயின் அவர் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளைப் புறக்கணித்துவிட்டு உத்தியோக அங்கத்தவரை மாத்திரம் கொண்ட சபையில் அந்த அலுவலைத் தமது விருப்பத்தின் பிரகாரம் நிறைவேற்றியோ தடைப்படுத்தியோ கொள்ளலாம் என்பது. இன்னும் சட்டசபையின் வைகலின் போக்கு, வாதப் பிரதிவாதங்கள், இகலாட்டுப் பேச்சுக்கள் ஆதியன மனத்துக்கு உகந்ததாக இல்லாவிட்டால், ஆள்பதி அவர்கள் உடனடியாகச் சட்ட சபையின் வைகலைத் தரிப்பிட அதிகாரம் உள்ள தலைவராயிருந்தார்.

ஆள்பதி மனிங் அவர்களின் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையில் ஆள்பதி அவர்களுக்கு 1920 ஆம் ஆண்டின் வேத்தியல் கற்பனையின் வண்ணம் பின்வரும் முறிகளை வீட்டாணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது.

1. தூய்மையான திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகளின் விவாகரத்துச் சம்பந்தமான முறி.

2. ஆள்பதி அவர்களுக்கு அன்பளிப்போ சலுகைப் பணமோ, நிலமோ வேறுவித தானமோ அளிக்க வழி வகுக்கும் முறி.

3. இலங்கைக் காசுத்தாள்கள் சம்பந்தமாகவோ, வங்கி நோட்டுகள் சம்பந்தமாகவோ எழுந்த முறிகள்.

4. வங்கிகள் சம்பந்தமான சங்கங்களை நிறுவுவதற்கோ, அரசியாப்பைத் திருத்துவதற்கோ, அரசியாப்பை மாற்றியமைப்பதற்கோ, வழி வகுக்கும் முறிகள்.

5. வேறுபாட்டுக் கடமைகளை விதிக்கின்ற முறிகள்.

6. மாட்சிமை தங்கிய மன்னபிரானுடன் ஏற்பட்ட இணைப்புக்கு முன்பின் முரணான விதிகளை வகுக்கும் முறிகள்.

7. மாட்சிமைதங்கிய மன்னர்பிரானின் தரைப்படை, கடற்படை ஆகாயப்படைகளின் கட்டுப்பாடோ தடைகளோ சம்பந்தமான முறிகள்.

8. வேத்தியல் தற்கிழமை சம்பந்தமாகவோ, பிரித்தானிய குடிகளின் உரிமைகள் உடைமைகள், அன்னர் கப்பற்போக்கு, வர்த்தகம் என்பனவுக்குத் தப்பெண்ணம் உண்டாக்கக் கூடிய முறிகள்.

9. ஐரோப்பிய குடிமக்களைப் பாதிக்காமல் உள்ள ஏதாவது நிபந்தனைகளை ஐரோப்பியரல்லாதாருக்கு விதித்து வேறுபாடு காட்டும் முறிகள்.

10. முன்னமே மன்னர்பிரானின் அங்கீகாரத்தைப் பெறத் தவறிய அலுவலை மறுபடியும் குறிப்பிடும் முறிகள்.

தேசிய மகாசபையினர் இத்தருணத்தில் சும்மாவிருக்கவில்லை. அவர்கள் தாங்கள் முன்னர் தயாரித்த அரசியல் நிர்ணயவேட்டை நடைமுறையில் கொண்டு வருவதற்குக் கிளர்ச்சி செய்தனர். ஆள்பதி மனிங் அவர்களின் திருத்தம், 1. ஆள்பதியின் அதிகாரத்தை அதிகரித்தது. 2. சட்டசபையில் பிரதிநிதிகள் சுதந்திரமாகப் பேசுவதை தடை செய்தது. 3. பொதுமக்களின் பிரதிநிதிகள் மீது கௌரவமற்ற தடை நிபந்தனைகளைச் சுமத்தியது. 4. இலங்கைவாழ் மக்களிடையே சாதிப்பிரிவினை ஏற்படுத்தியது. 5. சுயாட்சியின் ஆரம்ப அநுகூலத்தையாவது அளிக்கவில்லை. எனக் குற்றஞ் சாட்டினர்.

மனிங் அவர்கள் செய்த மகத்தான திருத்தத்திலே கண்டிச் சிங்களவருக்குத் தெரிவு முறையில் பிரதிநிதித்துவங் கிடைக்கவில்லை. அதேபோல முஸ்லிம் மக்களுக்கும் தெரிவுமுறை அளிக்கப்படவில்லை. இவைகளினால் பலரும் விரும்பாத இத்திருத்தம் பயனளிக்க மாட்டாது

எனவே அரசியற்றிருத்தங் கோரியவர் கருதினுர்கள். இத்தகைய சீர்கேடான திருத்தத்தைத் தன்மானமுள்ள இலங்கையர் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது வெளிப்படையாயிற்று.

எனவே தேசிய மகாசபையினர் உடனடியாக ஒரு விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டினர். அதன் ஒப்பற்ற தலைவராய அருணுசலம் அவர்கள் ஆள்பதியை வன்மையாகக் கண்டித்தார். அவர் கண்டனங்கள் அரசியற் பண்டிதர்மாருள் பெரிய பரபரப்பை உண்டாக்கின.

முன்னர் ஆள்பதியின் பணிக்குழுவாட்சியில் அவருடைய நிர்வாக சபையை அலங்கரித்த அருணுசலம் அவர்களா இங்ஙனம் பொது மக்களுக்காகப் பேசுகிறுர் எனப் பெரியவர்கள் மூக்கின்மேல் விரலே வைத்துப் பெருமூச்சு விட்டார்கள். ''ஆள்பதி அவர்கள் இரக்கம் இல்லாத மனிதன். அவருக்கு மாற்றங்கள் முற்போக்குகள் என்றுல் என்னவென்றே தெரியாது. இலங்கைப் பொதுமக்கள் மீது அவருக்கு அநுதாபம் இல்லே. பிரித்தானிய அரச உத்தியோகத்தர் இந்திய மக்கள் மீது இரக்கங்காட்டுவதாகத் தெரியவில்லே என மன்னர் பிரான் வெளிவெளியாகக் கூறிய வாசகங்கூட எங்கள் ஆள்பதியின் கவனத்தில் எட்டவில்லே. பிற்போக்காளரும் கூழுக்குப் பாடிகளும் அவருக்கு முகமன் கூறி அவரைச் சிந்திக்க விடுகிறுர்கள் இல்லே.''

''இத்திருத்தம் தேவைகளேத் திருப்திப்படுத்தாதது, குறைகள் நிரம்பியது, பிற்போக்கானது, வெறுக்கத்தக்கது. சட்ட சபையைக் கட்டுப்படுத்துவது, ஆள்பதியின் அதிகாரத்தை அதிகப்படுத்துவது, பேச்சுச் சுதந்திரத்தை அகற்றுவது, நிர்வாகத்துறையை மட்டுப்படுத்துவது, சனங்களின் கௌரவ பிரதிநிதிகளே அவமதிப்பது, வகுப்புவாதத்தை வளர்ப்பது, மாந்தருக்குள் வேற்றுமையை உண்டாக்குவது, பொறுப்பாட்சிக்கு அத்திபாரந்தானும் இல்லாதது,'' என்பன அவர்கள் வெறுத்துக் கூறிய வாசகங்களாம்.

வன்மையாகப் பேசிய அருணுசலம் அவர்களின் குரல் மென்மையாய் ஒலித்தது. ''நாங்கள் நலிய வேண்டும் என்பது தெய்வ சித்தம் போலும். நாம் எல்லோரும் இவ்வண்ணம் ஒருவருக்கும் உதவாத இந்தத் திருத்தத்தை எதிர்ப்பதில் இலங்கையர் அனைவரையும் ஒன்றுபடுத்திய பெருமை ஆள்பதி மனிங் அவர்களுக்கே உரியதாகும்''

இவ்வாறு தலைவரும் வழிகாட்டியுமான அருணுசலம் அவர்கள் கூறியவற்றைக் கேட்ட சிங்களவர் ஒரே முகமாகத் தேசிய மகாசபையின் சார்பில் மனிங் திருத்தத்தின் அடிப்படையில் ஒத்துழையாமையை மேற்கொண்டார்கள்.

தேசீய மகாசபையினர் ஆள்பதி மலிங் அவர்களின் முதலாவது திருத்தத்தை உபயோகமற்றது என்று பகிரங்கமாகக் கண்டித்தமையைக் கேட்டு மலிங் அவர்கள் அஞ்சவில்லை. அவர் தேசீய மகாசபையினரிடம், "நீங்கள் என்னுடைய திட்டத்தை ஏற்று என்னுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்தால் நான் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவேன்" என்று கூறினார். தேசீய மகாசபையினர் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். அத்தகைய திட்டத்தை விரும்பாத அருணாசலம் அவர்கள் அதில் கலந்து கொள்வதை விரும்பவில்லை.

அதனால் தேசீய மகாசபையில் நம்பிக்கையில்லாது போன தமிழர், தேசீய மகாசபையைவிட்டு விலகினர். அந்தச் சபையும் தேசீய முறுக்குக் குலைந்து வெறுங் கரைநாட்டுச் சிங்களவர் சபையாய்ப் பரிணமித்தது. தமிழர் விலகியதால் தேசீய மகாசபை கடலில் மூழ்கிப் போகவில்லை. அவர்கள் அதுகாறும் தமிழருக்குச் சார்பாக நின்ற காரியங்களில் தங்கள் எதிர்ப்பையுங் காட்டத் தொடங்கினார்கள். அரசியல் காரியங்கள் அடிதலை மாறின.

அதனால் தமிழர் தங்கள் முன்னேற்றத்துக்குச் சிங்களவரை மேலும் நம்பி இருப்பதில் பிரயோசனம் இல்லை எனக் கண்டு இலங்கையில் உள்ள ஏனைய சிறுபான்மையினருடன் கூட்டுச் சேர்ந்தனர். அதிலே அவர்கள் சட்டசபையின் பிரதிநிதித்துவ பலம் எப்படி இருத்தல் வேண்டும் எனத் திட்டமிட்டனர்.

சட்டசபையில் உள்ள ஒவ்வொரு மூன்று சிங்களப் பிரதிநிதிகளுக்கும் தமிழர் பக்கத்தில் இரண்டு பிரதிநிதிகள் இருத்தல் வேண்டும். அத்தகைய அமைப்பு ஆள்புலவாரியால் கிடையாது. அது வகுப்புவாரியாகவே சாதிக்கக் கூடியது. ஆகவே தமிழர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் நம்பிக்கை வைத்தார்கள். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளிவிடும் வேலை விளை கெட்ட ஆயாபோல ஆள்பதி அவர்கள் தமிழருக்கும் தன் ஆதரவைத் தருவதாக வாக்களித்தார். அதனால் ஆள்பதியின் பணிக் குழு ஆட்சி அசையாமல் நடைபெறும் என அவர் கருதினார் போலும்.

இவ்வாறு ஆள்பதி அவர்கள் இருபக்கத்தாருக்கும் இதமாகக் கூறியதை இலங்கையர் நம்பினார்கள். இருபக்கத்தாரும் நல்லிணக்கம் இல்லாமல் ஆள்பதியின் இதமான பேச்சை நம்பிப் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்போல ஒட்டாமலே சட்டசபையில் இருந்தார்கள். ஆள்பதி தன் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

முன்னர் படித்த இலங்கையர் பிரதிநிதியாவதற்கு சேர். இராமநாதன் அவர்களுடன் போட்டியிட்டுத் தோற்ற வைத்திய கலாநிதி சேர். மாக்கஸ் பர்ணந்து அவர்கள் 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சட்டசபையின் கரைநாட்டுச் சிங்களவர் பிரதி நிதிகளிருவருள் ஒருவராய் நியமிக்கப்பட்டார். அவர் பிரதிநிதி யானதும் இராமநாதன் அவர்களுடைய முயற்சிகள் எல்லாவற் றுக்கும் தமது பூரண ஆதரவைக் கொடுத்து வந்தார். தலை சிறந்த வைத்திய நிபுணர் என்ற மேம்பாடு மாத்திரமன்றி விவ சாயம், வங்கி இயல் ஆகியவற்றிலும் நிபுணராயிருந்தார். அவருடைய தகவுரையின் வண்ணமே இலங்கை வங்கி நிறுவப்படலாயிற்று. அவர் சட்டசபையில் இருந்து அரியசேவை செய்த காலத் திலே சட்ட நிர்வாக சபையிலும் நியமிக்கப்பட்டு ஆள்பதி அவர் களின் ஆலோசனைச் சபையில் தனியிடம் பெற்றார்.

ஆள்பதி மனிங் அவர்களுடைய முதலாவது திருத்தத்தின் வண்ணம் 1920 ஆம் ஆண்டில் அமைந்த சட்டசபை அமைப்புக்கு முன்னர் சிங்களவருக்கு எத்தனை ஆசனங்கள் கிடைத்தனவோ அத்தனை ஆசனங்கள் தமிழருக்கும் கிடைத்திருந்தன. ஆனால் 1920 ஆம் ஆண்டுத் திருத்தத்தின் பயனுகச் சிங்களவருக்கு 13 ஆச னங்களும் தமிழருக்கு மூன்று ஆசனங்களுமே கிடைத்தன. எனவே தமிழர் தேசிய மகாசபையை விட்டு விலகித் தமக்குச் சிங்கள வருடைய ஆசனத் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியாயினும் வழங்குமாறு கோருவாராயினர்.

அத்தியாயம் 23

பொறுப்பில்லாத சட்டசபை

ஆள்பதி மனிங் அவர்கள் கேட்டுக் கொண்டவண்ணம் தேசிய மகாசபையினர் தங்கள் ஒத்துழையாமைப் போக்கைக் கைவிட்டுத் திருத்தப்பட்ட சட்டசபையில் அங்கம் வகித்துக்கொண்டே மேலுந் திருத்தங்கள் செய்வதற்குக் கிளர்ச்சி செய்வாராயினர். தேசிய மகாசபையினரின் சுயநலப்போக்கும் ஓரினக் கொள்கையும் இப்போது அம்பலமாயின. சிறுபான்மையினர் மேலும் சிங்களவரை நம்பியிருப்பதில் நன்மையில்லை எனக் கருதித் தங்கள் சார்பில் சீர்திருத்த நிஜவேடு ஒன்றைத் தயாரித்து ஆள்பதி அவர்கள் மூலம் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பிவைத்தனர். சிறுபான்மையினருடைய நிஜவேட்டுக்கும் தகவுரை எழுதி அனுப்பிய ஆள்பதி மனிங் அவர்கள் தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங்கிள்ளி விட்டார் என்பது நாளடைவில் தெரிய வந்தது. சீர்திருத்தங் கோரி இது காறும் தோளோடு தோளாக நின்ற சிங்களவரும் தமிழரும் வெவ்வேறு பாதைகளில் பிரிந்து அடியெடுத்து வைப்பாராயினர்.

தேசிய மகாசபையினர், அருணாசலம் அவர்கள் விரும்பிய கொழும்புத் தமிழர் தொகுதியை வகுப்புவாரித் தொகுதி என்பதற்காக ஆதரிக்கவில்லை. ஆனால் அவர்கள் அருணாசலம் அவர்களை வேறெந்தத் தொகுதியிலாவது போட்டியில்லாமல் தெரிவு செய்வதாக வாக்குறுதி கூறினர். ஆனால் அருணாசலம் அவர்கள் மனோபாவம் வேறுக இருந்தது. அவருக்குப் பிரமாணம் பிரமாணமாகவிருத்தல் வேண்டும் என்ற மனோபாவம் இருந்தது. மூன்று தொகுதிகள் உள்ள மேல் மாகாணத்தில் முதலில் அவருக்கு வாக்குப்பண்ணி வகுத்த தொகுதி இடையில் ஏற்பட்ட ஊடல்களால் மாற்றியமைக்கப்படுவதை அருணாசலம் அவர்கள் விரும்பவில்லை. இன்று கொழும்பு மத்தியில் வகுப்புவாதமில்லாமல் உள்ள மூக்கூட்டுத் தொகுதி முறையையும், கொழும்பு தெற்கில் உள்ள இரட்டைத் தொகுதி முறையையும் பெரியவர்கள் அன்று விளங்கிக் கொள்ளவில்லை.

ஆள்பதி மனிங் அவர்களால் முதலில் திருத்தப்பட்ட சட்டசபையின் பிரதிநிதிகள் கூட்டம் 1921 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் திறந்து வைத்துப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசித் தலைமை தாங்கிய ஆள்பதி அவர்கள் மாகாணந்தோறும் பிரதிநிதிகள் தெரியப்பட்டுச் சபையை அலங்

கரித்தமை மகிழ்ச்சிக்குரிய காரியம் என்றும், பொறுப்புவாய்ந்த அப்பிரதிநிதிகள் பொதுமக்களின் நன்மையையும் இலங்கையின் சுபீட்சமான எதிர் காலத்தையும் கருத்தில் கொண்டு அரிதில் உழைத்துக் கடமை செய்வதற்குச் சந்தர்ப்பங் கிடைத்துள்ளது, என்றும் கூறினர். இலங்கையின் நிதி நிலைமை உலக நாடுகளைப் போல மகாயுத்தத்தின் பின் நன்றாக இல்லை என்றும், இலங்கையின் வருமானம் 60000000 ரூபாவாக இருந்தபோதிலும் அதன் கொள்வனவு விலை 40000000 ரூபா என்றே மதிப்பிடல் வேண்டும் என்றும், நிதி நிலைமையை மேற்பார்வை செய்ய ஒரு நிதிக் குழு நியமிக்கப்படும் என்றும் கூறினர். திரு. பொன்னம்பலம் இராமநாதனவர்கள் பொது மக்களுக்காற்றிய அளப்பரிய சேவையை அறிந்தின்புற்ற மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவருக்கு நைற் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை சால மகிழ்ச்சிக்குரிய காரியம் என்றும் கூறினர்.

சேர் இராமநாதன் அவர்கள் 1921 ஆம் ஆண்டிற் கூடிய சட்டசபையிலே கௌரவ நியமன அங்கத்தவராயே இருந்தார்கள். ஆனால் அவர் சட்டசபையிற்றிருத்தங்கோரிப் பேசிய பேச்சு இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்றவையாகும். அவர் தாம் 1879 ஆம் ஆண்டிற் சட்ட சபையிற் பிரவேசித்த காலத்தில் அங்கே விவேகிகளான ஆங்கிலேயர் பலர் அங்கத்தவராய் இருந்தபோதிலும், அவர்கள் ஆள்பதி அவர்களின் எண்ணத்தையும் ஏவலையும் செய்து நிறைவேற்றும் யந்திரங்களாயே இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்.

பின்னர் 1910 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருத்தத்தின் விளைவாக உத்தியோக அங்கத்தவர் 12 பேரும், உத்தியோகப் பற்றற்றவர் 10 பேரும் இடம் பெற்றமையால் ஏற்பட்ட அரசுவலுச் சமநிலையால் உத்தியோக அங்கத்தவர் பிரித்தானிய பேரரசின் நலனுக்காக உழைக்கக் கூடியதாக இருந்தார்கள் என்றார். இத்திருத்தத்தை அனுமதித்த குடியேற்ற மந்திரியார் குறூவ் பிரபுவின் நோக்கமும் அதே யென்றார்.

மேலும் 1910 ஆம் ஆண்டின் பின் இலங்கையிலிருந்து ஐந்து சங்கங்கள் சீர்திருத்தங்கோரி நிஜனவேடுகள் சமர்ப்பித்த போதிலும், குறூவ் பிரபு அவர்கள் இலங்கையருக்குப் பரந்த முறையில் வாக்குரிமை கொடுக்கப் பலமுறை மறுத்து விட்டார் என்றார்.

சேர் இராமநாதன் 9-12-1921 இல் சீர்திருத்தங்கோரிப் பேசிய போது இலங்கைச் சட்டசபையில் குறைந்தது 45 பிரதிநிதிகளாவது இருத்தல் வேண்டும் என்றும், அன்றைய குடிசனத்தொகை 4500000 என்றும் ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியாவது இருக்கவேண்

டாமோ என்றும் கேட்டார். மேலும் அவர் இலங்கையின் குடிசனத் தொகையில் அக்காலத்தின் மாகாண ரீதியில் இருந்த வாக்காளர் தொகையையும் புள்ளிவிபரத்தோடு காட்டிப் பேசினர்.

1.	மேல் மாகாணம்	—20800	வாக்காளர்கள்
2.	வட மாகாணம்	—14000	,,
3.	தென் மாகாணம்	— 7700	,,
4.	வடமேல் மாகாணம்	— 4820	,,
5.	மத்திய மாகாணம்	— 2430	,,
6.	சப்பிரகாமுவா மாகாணம்	— 1345	,,
7.	கீழ் மாகாணம்	— 810	,,
8.	ஊவா மாகாணம்	— 600	,,
9.	வடமத்திய மாகாணம்	— 385	,,
	மொத்தம்	—52890	,,

உத்தேச சட்டசபையில் உள்ள 45 பிரதிநிதிகளுள், சிங்களவர் 20 பேரும் தமிழர், 10 பேரும், 15 பேர் ஏனைய சமூகத்தினருக்கும் பிரதிநிதிகளாகலாம் என அவர் கருதினர்.

சேர். இராமநாதன் அவர்கள் திருத்தங் கோரியதைப் பின் பற்றித் தேசிய மகாசபையினர். சிறுபான்மை ஐக்கிய முன்னணியினர், இலங்கை ஐரோப்பியர் சபையினர், கொழும்புத் தமிழர் சபையினர், யாழ்ப்பாண மகாசபையினர், யாழ்ப்பாணச் சங்கத்தார், பறங்கியர் சங்கத்தார் சிலாபச் சங்கத்தார் ஆகியோர் திருத்தங் கோரினர். அவர்களுள் தேசிய மகாசபையினரும், சிறுபான்மை முன்னணியினரும் தாங்கள் தயாரித்த அரசியல் திருத்த நிரூபவேடு களையுஞ் சமர்ப்பித்தார்கள்.

முன்னர் இலங்கை முழுவதற்கும் இராமநாதன் அவர்கள் ஏகப் பிரதிநிதியாய் இருந்த இடத்தில் இப்போது பதினெரு பிரதிநிதிகள் மாகாணந்தோறும் பிரதிநிதித்துவம் பெற்று வந்திருந்தனர். அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த தேர்தல் தொகுதிகளையும் அவர்கள் பெயர்களையும் அறிந்திருத்தல் ஈண்டுப் பொருத்தமானதாகும்.

1. வட மாகாணம் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள்.
2. வட மத்திய மாகாணம். S. D கிருஷ்ணரத்தின அவர்கள்
3. கீழ் மாகாணம். E. R. தம்பிமுத்து அவர்கள்.
4. வடமேல் மாகாணம். சார்ல்ஸ் எட்கார் கொறியா அவர்கள்.
5. மத்திய மாகாணம். A. C. G விஜயக்கூன் அவர்கள்.

6. தென் மாகாணம். O. C. திலகரத்தின அவர்கள்.
7. ஊவா மாகாணம். D. H கொத்தலாவல அவர்கள்.
8. சப்ரகமுவாமாகாணம். வணக்கக்துக்குரிய. W. E. பொத்தியு அவர்கள்.
9. மேல் மாகாணம்.

W. M. ராசபக்சே அவர்கள்
யேம்ஸ் பீரிஸ் அவர்கள்
E. W. பெரேரா அவர்கள்

இச்சட்டசபையை அலங்கரித்த உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகள் முன்சொன்ன தெரியப் பெற்ற 11 பேரை விட இன்னும் வகுப்புவாத அடிப்படையில் தேர்தல் மூலமும், நியமன முறையிலும் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களை அக்கால முறைப்படி இனவாரி யாகக் கணிக்கும்போது பின்வருமாறு கணக்கிடலாம்.

1.	கரை நாட்டுச் சிங்களவர் ...	11
2.	கண்டிச் சிங்களவர் ...	2
3.	இலங்கைத் தமிழர் ...	3
4.	ஐரோப்பியர் ...	3
5.	பறங்கியர் ...	2
6.	முஸ்லிம் பெரியார் ...	1
7.	இந்தியர் ...	1

இச்சட்டசபையிலே சேர் இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்தவராயே இருந்தார். அவர் முன்னர் பத்தாண்டுகள் இலங் கையின் ஏகப் பிரதிநிதியாய் இருந்தபின் போட்டியைத் தவிர்த்திருந் தார். வடமாகாணத் தொகுதியை அலங்கரிப்பதற்கு வைத்திலிங்கம் துரைசாமி அவர்களும், அரியாலை ஆறுமுகம் கனகரத்தினம் அவர்க ளும் போட்டியிட்டனர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்களுக்கு நல்ல ஆதரவிருந்தமையால் அவர் பிரதிநிதியானர். அக்காலத்திலே தான் அம்பலவாணர் கனகசபை அவர்களும் நியமன அங்கத்தவராகி ஆள்பதியின் சட்ட நிர்வாக சபையை அலங்கரிப்பாராயினர்.

இப்பிரதிநிதிகள் பதினெருவரும் இன்னும் நியமன அங்கத்த வருள் மூவருமாகப் 14 பிரதிநிதிகள் 1922 ஆம் ஆண்டில் ஆள்பதி யூஸிங் அவர்களுடன் அபிப்பிராய பேதப்பட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேறி வில்கல் செய்து கொண்டனர். அதன் பின் அடுத்த உப தேர்தலில் அவர்கள் அத்தனை பேரும் மீளத் தெரியப் பெற்றும் நியமிக்கப் பெற்றும் அங்கத்தவராயினர்.

இக்காலத்திலேதான் யேம்ஸ் பீரிஸ், விஜயக்கூன் என்பாருடன், தேசீய மாசபையின் சார்பில் D. B. யயத்திலகாவும் சேர்ந்து இங்கிலாந்துக்குச் சென்று குடியேற்ற மந்திரியாரைக் கண்டு சட்ட சபையில் தாராளமான திருத்தம் வேண்டும் என்றும், அதிகாரம், சுதந்திரம், பொறுப்பு என்பன பெருமளவில் வழங்கப்படல் வேண்டும் என்றுங் கேட்டார்.

இக்காலத்தில் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தும் தேசீய ஒருமைப்பாட்டுக்காக உழைத்தும் முயற்சி செய்த சாள்ஸ் எட்கார் கொறியா அவர்களைப் பற்றிப் பேசாமல் இருக்க இயலாது. சிலா பத்தைச் சேர்ந்த சாள்ஸ் எட்வேட் கொறியா அவர்களின் தவப் புதல்வர் இவர். தகப்பன் கொறியா அவர்கள் முன்னர் லோறன்ஸ் ஹரிடயஸ் முதலாய பெரியாருடன் கூடி இலங்கையர் சங்கத்தைக் கூட்டிக் கிளர்ச்சி செய்து வெகு இளமையிலேயே காலஞ் சென்றவர். தந்தைக்குப் பின் தனயன் தேச சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்து வந்தார்.

மைந்தர் கொறியா 1886 இல் பிறந்து ரோயல் கல்லூரியில் கல்வி கற்றுத் திறமையான மாணவர் என்பதற்காகரேணர்பரிசும் பெற்றவர். அவர் இளமையிலேயே நியாயவாதியாகத் தொழில் நடத்தித் தேசத் தொண்டு செய்தார். ஆங்கிலேய மேலதிகாரிகள் நியாய மற்ற முறையில் நடந்த போதெல்லாம் அவர்கள் செய்கையைப் பத்திரிகைகளில் வன்மையாகக் கண்டித்து எழுதினர். அவருடைய எழுத்து வன்மையையும் தேசாபிமானத்தையும் அறிந்தவர்கள் அவரை ஈழத்து ஹம்டன் "Hamden of Ceylon" என அழைத் தனர் அவருடைய பெரு முயற்சியாலேயே 1896 ஆம் ஆண்டிலே சிலாப மகாசபை உருவாக்கப்பட்டது. அதிலே நாட்டுப் பற்றுள்ள வர்கள் சேர்ந்து தேச விடுதலைக்காக உழைத்தனர். சிலாப மகாசபை யின் புகழ் இலங்கை முழுவதும் பரவியது. அச்சபையினர் அரசாங் கத்தின் போக்கைத் தீவிரமாக எதிர்த்தமையை எல்லோரும் வெகு வாகப் போற்றினர்கள்.

சபையின் மேன்மையின் இரகசியம் கொறியா அவர்களின் உழைப்பேயாகும். வெறுங்காணிக் கட்டளைச் சட்டம் மன்று படுத்தப்பட்ட போது அதனுடைய விதிப்புக்கு எதிர்ப்புக் குரல் காட்டியவர் கொறியா அவர்களே. பல சங்கங்களும் பொது மக்களும் வேண்டிக் கொண்டதால் அவர் 1899 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்று அக்கட்டளைச் சட்டத்தை விலக்கல் செய்ய முயன்றார். அம் முயற்சியில் அவருக்கு அநுகூலமேற்படா விட்டாலும் பொது மக்களுக்குச் சில சலுகைகளை அவர் பெற்றுக் கொடுத்தார் என்பதை மறக்கலாகாது.

கொறியா அவர்கள் சிலாப மகாசபைத் தலைவர் என்ற ரீதியில் சட்டசபையில் உத்தியோக அங்கத்தவரின் தனியாட்சியை நீக்கிவிட்டுப் பிரதிநிதித்துவ ஆட்சியை அமைத்தல் வேண்டும் என்று 1909ஆம் ஆண்டில் கிளர்ச்சி செய்தார். பான்னர் வெறுங் காணிக் கட்டளைச் சட்டம் வந்தபோது அதனைப் பல காரணங்கள் காட்டி எதிர்த்தார். இலங்கைச் சட்டசபைக்கு அக்கட்டளைச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்கு ஆளெல்லையோ, ஆளதிகாரமோ இல்லை என்று வாதாடினார். அது சம்பந்தமான ஒரு வழக்கின் மேன் முறையீட்டில் உயர் நீதியரசர் வுட் றென்ரம் கொறியாவுக்கு 5000 ரூபா குற்றம் விதித்தார். அத்தண்டனை 1915 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது விதிக்கப்பட்டதாயினும் அத்தொகையை யூசுப் என்ற முஸ்லிம் ஒருவர் கொடுத்துதவினர். அதனால் கொறியா அவர்களின் தேசியப் பணியை எல்லோரும் வியந்தனர் எனத் தெரிகிறது.

அருணாசலம் அவர்கள் தலைமையில் நடந்த சீர்திருத்த இயக்கத்திலும், தேசிய மகாசபையிலும் கொறியா அவர்கள் காரிய நிர்வாக சபையில் ஓரங்கத்தவராய் அமர்ந்து உதவி செய்தமையோடு அவர் இங்கிலாந்துக்கும் சென்று திருத்தங்கோரிய குழுவில் ஒருவராயிருந்தார். சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள் ஆள்பதி மனிங் அமைத்த சட்ட சபைத் திருத்தத்தைப் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொண்டபோது கொறியா அவர்கள் அதனைத் தீவிரமாக எதிர்த்தார்கள். அதன் பயனாய் 1921 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டசபைத் தேர்வில் வடமேல் மாகாணத் தொகுதியில் கொறியா அவர்கள் போட்டியின்றித் தெரியப் பெற்றார்.

கொறியா அவர்கள் தலைசிறந்த தேசியவாதி. முன்னர் தேசிய மகாசபையை விட்டுவிலகிய தமிழரை ஒன்று சேர்ப்பதற்கு கொறியா அவர்கள் வெகுவாக முயற்சி செய்தார்கள். அவர் 1924 ஆம் ஆண்டில் தேசிய மகாசபையின் தலைவராயிருந்தபோது தமிழரோடு செய்துகொண்ட நல்லுறவின் பயனாகவே கொழும்புத் தமிழ்த் தொகுதி தமிழருக்கு வழங்கப்பட்டது என்றும் கூறுவர். அத்தோடு அவர் பூரண சுதந்திரம் கோரி நின்றார் என்றும் டொனமூர்த்திருத்தத்தை வெறுத்து அதனை ஒன்றியொதுக்கல் செய்தார் என்றும் கூறுவர்.

நாட்டுப் பற்றுள்ள கொறியா அவர்கள் மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றித் தாமே தமது ஆடைகளை வீட்டில் நெசவு செய்து அணிந்தார். தேசிய மனப்பான்மையோடு யாழ்ப்பாணத்தில் நிலவிய வாலிப மகாநாட்டினரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களைத் தேசியப் பணியில் ஊக்குவித்தார். முதலாவது அரசாங்க

சபைத் தேர்வை வாலிப மகாநாட்டினர் வன்மையாக வெறுத்து ஒன்றியொதுக்கல் செய்தமையைப் பின்பற்றியே சிவத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் அதில் அளப்பரிய சேவை செய்தார்; இராமநாதன் அவர்களுக்குப்பின் துரைசுவாமி அவர்களே முது பெருந் தமிழ்த் தலைவர் என்பர். துரைசுவாமி அவர்கள் இல்லத்தில் கூடிய சிங்களத் தலைவர்கள் ''மகேந்திரா'' ஒப்பந்தம் என ஓர் உடன்படிக்கையும் எழுதினர்கள் என்பர்

ஆள்பதி மனிங் அவர்கள் செய்த திருத்தத்தைத் தமிழர் விரும்பாமைக்குக் காரணம் சிங்களவராலேயே கற்பிக்கப்பட்டன. தமிழர் சிங்களப் பிரதிநிதிகள் தொகையில் $\frac{3}{5}$ தொகை கேட்ட விடத்தில் $\frac{1}{2}$ பங்கிலும் குறையப் பெற்றதை அவர்கள் விரும்பவில்லை என்றும், பொறுப்பாட்சி கிடைக்கப்போகும் தருணத்தில் தமக்குப் பிரதிநிதித்துவம் குறைந்தால் பகிரங்க சேவையிலும் தங்கள் பங்கு குறைந்து விடலாம் என அஞ்சினர் என்றும் சிங்களவரே கூறினர். இன்னும் ஒரு காரணம் அவர்கள் கூறியமை அருணசலம் அவர்கள் தேசிய மகாசபையை லிலகிப்போனமையோடு சம்பந்தப்பட்டதாகும். தமக்குக் கொழும்புத் தொகுதியில் ஒரு தமிழாசனங் கிடைக்கப் பெறுதமையால் அவர் பிரிந்து போனார் என்றார்கள். மேல் மாகாணத்தில் மூன்று ஆசனங்கள் இருந்தமையால் அதில் ஒன்றைத் தமிழருக்குக் கொடுப்பதில் ஒரு குறையும் இல்லையே.

அதிகம் பெற்ற சிங்களச் சகோதரர் தாமும் திருப்திப்பட்டார்களோ என்றால் இல்லை. அவர்கள் ஆள்புலவாரியான பிரதிநிதித்துவத்தை விரும்பினர். ஆனால் இலங்கையில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் நிலவியதை அவர்கள் விரும்பவில்லை. அதனை அவர்கள் வெறுத்தனர். வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தைப் பிரித்தானும் தந்திரோபாயமாக ஆங்கிலேயர் கைக்கொண்டனர் எனச் சிங்களவர் கருதினர்.

மனிங் திருத்தத்தைப் பறங்கியரும் ஐரோப்பியரும் விரும்பவில்லை. அதற்குக் காரணம் தமக்கு அளிக்கப்பட்ட வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் போதாது என்றமை. ஆள்புலவாரியாகப் பிரதிநிதித்துவ முறை இருந்தமையால் தாங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிய இயலாது எனக் கருதினர்

தேசிய காங்கிரசை விட்டு அருணசலம் அவர்கள் விலகியபின் அது சிங்களக் காங்கிரசாகவே இருந்தது. அதனால் தமிழர் ஏனைய சிறுபான்மைச் சாகியத்தாரோடு ஒன்று சேர்ந்தார்கள். அவர்கள்

ஐரோப்பியர், பறங்கியர், முஸ்லிம்கள், இந்தியர் ஆகியோருடன் சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கித் திருத்தங் கோரினார்கள்.

எனவே சட்டசபையில் திருத்தம் ஏற்படுதல் வேண்டுமெனச் சிறுபான்மை முன்னணியினர் ஒரு புறமாகவும் தேசிய காங்கிரஸ்காரர் மறுபுறமாகவும் கிளர்ச்சி செய்து நிர்வேடுகளைச் சமர்ப்பித்தார்கள். இரு பகுதியாருக்கும் நடுவில் நின்ற ஆள்பதி மனிங் அவர்களும் தம்முடைய எண்ணத்தின் வண்ணம் ஒரு நிர்வேட்டைச் சமர்ப்பித்தார். இதனால் குடியேற்ற மந்திரியாருக்கு எல்லாமாக மூன்று நிர்வேடுகள் சமர்ப்பிக்கப்படலாயின. அவற்றின் சுருக்கங்களையாவது அறிதல் இன்றியமையாது வேண்டப்படும்.

1. சிங்கள மக்கள் சார்பில் சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்கள் தயாரித்த திட்டத்தில் சட்டசபையில் 45 அங்கத்தவர் இருக்கவும், அவருள் 39 பேர் உத்தியோகப் பற்றற்றவராய் இருக்கவும், 6 பேர் உத்தியோக அங்கத்தவராய் இருக்கவும், உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவருள் 25 பேர் ஆள்புலவாரியாகத் தெரியப்படவும், 11 பேர் நியமன முறையில் சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரதிநிதிகளாய் இடம் பெறவும், முன்சொன்ன 28 ஆள்புலவாரிப் பிரதிநிதிகளுள் 9 பேர் வட மாகாணம் கிழ் மாகாணப் பிரதிநிதிகளாய் இருக்கவும் வகுத்தார். இன்னும் சட்டசபைக் கூட்டங்களுக்கு ஆள்பதி அவர்கள் தலைமை தாங்காது சபை அங்கத்தவரிடையே தெரியப்பட்ட ஒரு வாசகர் தலைமை தாங்கவும், வாக்குரிமைக்குரிய நிபந்தனைகளைக் குறைத்து மேலும் பலருக்கு வாக்குரிமையை வழங்கவும் வழி வகுத்தார்.

2. தமிழர் கூட்டிய ஐக்கிய முன்னணியினர் தயாரித்த திட்டத்தில் 45 அங்கத்தவர் இடம் பெறவும், அவருள் 33 பேர் உத்தியோகப் பற்றற்றவராயிருக்கவும், 12 பேர் உத்தியோக அங்கத்தவராயிருக்கவும், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவருள் 19 பேர் தொகுதிவாரியாகவும், 11 பேர் வகுப்புவாரியாகவும், 3 பேர் நியமன முறையிலும் இடம் பெறவும் வகுத்தனர்.

3. ஆள்பதி மனிங் அவர்கள் தயாரித்த திட்டத்தின் வண்ணம் சட்ட சபையில் 47 அங்கத்தவர் இருக்கவும், அவருள் 35 பேர் உத்தியோகப் பற்றற்றவராயிருக்கவும், 12 பேர் உத்தியோக அங்கத்தவராகவும், உத்தியோகப் பற்றற்றவருள் 21 பேர் ஆள்புலவாரியாகத் தெரியப் பெறவும், (அவருள் 14 சிங்களவரும்

7 தமிழரும் அமையக் கூடியதாகத் தொகுதிகளை நிர்ணயிக்கவும்). 6 பேர் வகுப்பு வாரியாகத் தெரியப்படவும், (அவருள் 3 ஐரோப்பியரும் 2 பறங்கியரும் 1 கொழும்புத் தமிழரும் இடம் பெறவும்) 5 பேர் வகுப்புவாரியாக நியமனம் பெறவும், அவருள் 3 பேர் முஸ்லிம்களுக்கும் 2 பேர் இந்தியருக்கும் இடம் பெறவும், இவர்களை விட இன்னும் மூவர் விசேட நன்மைக்காக ஆள்பதி அவர்களால் நியமிக்கப்படவும் வகுத்தார்.

ஆள்பதி மனிங் அவர்கள் தயாரித்த திருத்தத்தின் பிரகாரம் சட்டசபை அமையும் விதம் இது:-

சட்டசபை

47 அங்கத்தவர்

உத்தியோக அங்கத்தவர் 12	**உத்தியோகப் பற்றற்றவர்** 35

A.	B.	C.
ஆள்புலவாரியாக 21 பேர்	**வகுப்புவாரியாக** 6 பேர்	**நியமன முறையில்** 8 பேர்
சிங்களவர் – 14	ஐரோப்பியர் – 3	முஸ்லிம்கள் – 3
தமிழர் – 7	பறங்கியர் – 2	இந்தியர் – 2
	கொழும்புத் தமிழர் – 1	சிறப்பு முறை – 3

ஆள்பதி மனிங் அவர்கள் தயாரித்த அமைப்பில் ஆள்புல வாரித் தொகுதிகள் 21 இருந்த முறை வருமாறு.

1.	கொழும்பு நகரம்	–1
2.	மேல் மாகாணம்	–3
3.	மத்திய மாகாணம்	–2
4.	வட மாகாணம்	–5
5.	தென் மாகாணம்	–2
6.	கீழ் மாகாணம்	–2
7.	வடமேல் மாகாணம்	–2
8.	வடமத்திய மாகாணம்	–1
9.	ஊவா மாகாணம்	–1
10.	சப்பிரகாமுவா மாகாணம்	–2
	மொத்தம்	–21

இதில் உத்தியோக அங்கத்தவர் தொகையிலும் பார்க்கப் பற்றற்றவர் தொகை மூன்று மடங்கு என்றும் இலங்கையர் என உள்ள பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்தாலும் ஆள்பதியின் எண்ணத்தை அசைக்க முடியாதென்றும் கருத இடமுண்டு. ஆள்பதி அவர்கள் நினைத்தால் பின்வரும் ஆதரவைப் பெறலாம்.

உத்தியோக அங்கத்தவர்	-12
ஐரோப்பிய-பறங்கியர் அங்கத்தவர்	-5
நியமன அங்கத்தவர்	-8

இவர்கள் 25 பேரும் கூடினால் எஞ்சியவர் 22 பேர்தானே என ஆள்பதி கருதினார் போலும்.

ஆனால் முன்னர் சேர். இராமநாதன் அவர்கள் சட்டசபையில் பேசிய பேச்சையும், தேசிய மகாசபையினர் தயாரித்த நினைவேட்டையும், தமிழராதிய சிறுபான்மையினர் தயாரித்த நினைவேட்டையும், ஆள்பதி மனிங் தயாரித்த திட்டத்தையும் கருத்தூன்றிப் படித்த குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபு அவர்கள், இவற்றுக் கெல்லாம் பெரியதாய பாசுபதாத்திரம் போன்ற ஒரு திட்டத்தைத் தாமே தயாரித்து அனுப்பினார். அதுவே இறுதியான திருத்தம் எனவும் அறிவித்தார். உண்மையில் அத்திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையே இறுதிச் சட்டசபையாய் நிலவிற்று. முன்னர் கோல்புறூக் விசாரணைச் சபையினர் 1833 இல் வகுத்த சபையில் 1923 இல் ஏற்பட்டதே இறுதித் திருத்தம் என்க.

மனிங் தயாரிப்பில் டிவன்சயர் பிரபு செய்த திருத்தமும் அமைப்பும் வருமாறு.



தேசிய மகாசபையினர் தயாரித்த திட்டத்தில் ஆள்பதி மனிங் அவர்கள் அங்கிகரிக்கக் கூடியதாக இருந்தவை இரண்டே இரண்டு அம்சங்கள். அவை ஆள்புல ரீதியில் வாக்களிக்கத் தகுதியானவர் களுக்கு வாக்குரிமை வழங்குதலும், சட்டசபையில் தலைமை தாங்க ஓர் உபதலைவர் தெரியப் பெறுதலுமாம்.

ஆள்பதி மனிங் அவர்களின் திட்டத்தைத் தேசிய மகாசபை யினர் வன்மையாகக் கண்டித்தனர். ஆனால் குடியேற்ற மந்திரியாய் இருந்த டிவன்சயர் பிரபு அத்திட்டத்தில் மாற்றங்கள் செய்வதை விரும்பவில்லை. ஆனால் தேசிய மகாசபையினரைத் திருப்திப்படுத்து வதற்காகச் சில சலுகைகளைச் செய்ய உடன்பட்டார்.

எனவேதான் அத்திட்டம் மனிங் டிவன்சயர் திட்டம் எனக் கூட்டுப் பெயரால் விளங்குவதாயிற்று. டிவன்சயர்செய்த சலுகைகள் வருமாறு.

1. கரைநாட்டுச் சிங்களவருக்கு மேலதிகமாக இரண்டு தொகுதி களை உண்டாக்கிக் கொடுத்து அவர்களைப் பிரீதிப்படுத்தினர்.

2. தமிழர் கேட்ட கொழும்புத் தமிழர் தொகுதியைக் கொடுத் துத் தமிழரைத் திருப்திப்படுத்தினர்.

3. இந்தியர், முஸ்லிம்கள் ஆகிய சாகியத்தாருக்கும் பிரதிநிதித் துவம் பெறும் சலுகையைக் கொடுத்தார்.

இத்தகைய திருத்தத்தின் இன்னோர் அம்சம் சட்ட நிர்வாக சபையில் ஏற்பட்ட திருத்தமாகும். அதிலே இதுகாறும் உத்தியோக அங்கத்தவர்களே இருந்தார்கள். அதிலே சட்டசபையில் தெரியப் பெற்ற இருவர் சேரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இவர்களுக்குத் திணைக்களங்கள் குறிக்கப்படவில்லை என்றாலும் இவர்கள் ஆள்பதியின் மந்திராலோசனைச் சபை எனப்படும் சட்ட நிர்வாக சபையில் கௌரவமாய் வீற்றிருக்கும் தனிச் சிறப்புக் கிடைத்தது. சட்ட சபை அங்கத்தவர் சட்ட நிர்வாக சபையில் இடம் பெறுவதாயின் சட்டசபை அங்கத்துவத்தை விலகல் செய்தல் வேண்டும் எனவும் ஒரு விதி சில காலம் நிலவியது என்பர். ஒரு சமயம் கதிரைவேற் பிள்ளை பாலசிங்கம் அவர்கள் இரண்டு சபையிலும் இருந்தார்.

மனிங் அவர்கள் தயாரித்த திட்டத்தைச் சிங்களவர் ஏற்றுக் கொள்வதற்கு முதலி மறுத்தமைக்குக் காரணம் அதில் கொழும் புத் தமிழருக்கு வழங்கப்பட்ட தொகுதியேயாம். அத்தொகுதிப் பலத்தால் தமிழர் செல்வாக்குப் பெறுவதைச் சிங்களவரின் புதிய

தலைவர்கள் விரும்பவில்லை. இதை அறிந்த குடியேற்ற மந்திரி யாராய டிவன்சயர் பிரபு சிங்களவருக்கு மேலதிகமாக இரண்டு தொகுதிகளை வரைந்து கொடுத்தார். அவை மேல் மாகாணத்தில் ஒன்றும், தென் மாகாணத்தில் ஒன்றுமாய் இருந்தன.

இனி டிவன்சயர்–மனிங் திருத்தத்தின் வண்ணம் 1924 இல் அமைந்த சட்டசபையின் அமைப்பைத் திருப்பிப் பார்ப்போம். அதில் பின்வருமாறு அங்கத்துவ அமைப்பு இருந்தது.

சட்டசபையில் 49 அங்கத்தினர். இவர்களுள் உத்தியோக அங்கத்தவர் 12 பேர். உத்தியோகப் பற்றற்றவர் 37 பேர். உத்தியோகப் பற்றற்றவருள் 23 பேர் தொகுதிகள் தோறும் ஆள்புல ரீதியில் தெரியப் பெறுவர். ஆறுபேர் வகுப்பு வாரியாகத் தெரியப் பெறுவர். இந்த ஆறுபேருள் மூவர் ஐரோப்பியர், இருவர் பறங்கியர், ஒருவர் கொழும்புத் தமிழர். இனி நியமன ரீதியில் முஸ்லிம்களுக்கு மூவரும், இந்தியருக்கு இருவரும், விசேட நன்மையின் பொருட்டு மூவருமாக எண்மர் நியமன அங்கத்தவராயினர்

டிவன்சயர்–மனிங் திருத்தம் சிங்களவரைத் திருப்திப் படுத்தியது. இதனால் அரசாங்கம் தெரியப்பெற்ற இலங்கைப் பிரதிநிதிகளுக்கு எதிராகக் கொண்டிருந்த பலம் குறைந்தது. இப்போது அரசாங்கத்தின் சார்பில் 25 அங்கத்தவரும், இலங்கையில் தெரியப் பெற்றவர் சார்பில் 24 அங்கத்தவருமாய் இருந்தனர்.

இந்த இக்கட்டான நிலைமையில் தற்செயலாய் உத்தியோக அங்கத்தவரோ அல்லது அரசாங்கத்தின் பந்தக்காரராய நியமன அங்கத்தவரோ அல்லது வெள்ளைப் பிரதிநிதிகளோ கூட்டத்துக்குப் போக இயலாத சந்தர்ப்பம் ஏற்பட்டால், இலங்கைப் பிரதிநிதிகள் பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராகப் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற அச்சம் இருந்தது. எனவே தான் பிரித்தானிய பேரரசின் பாதுகாப்புக்காக இலங்கையின் ஆள்பதி அவர்களுக்கு விசேடித்த வீட்டாணை எனப்படும் மறுப் பாணை வழங்கப்பட்டது. முன்னர் 1920 ஆம் ஆண்டின் வேத்தியல் கற்பனையின் வண்ணம் முறைகளை வீட்டாணை செய்யும் அதிகாரம் ஆள்பதி அவர்களுக்கு இருந்தது. அதன்பின் அவர் 1923 ஆம் ஆண்டின் கழகத்துப் பணியின் XLVII உறுப்பினால் நல்லரசாட்சியின் பொருட்டு அவ்வதிகாரமுடையவராயிருத்தல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது.

இவ்வாறுகத் தேசீய மகாசபை சிங்களத் தாபனமாகவும் தமிழர் தாபனமாகவும் தடம் புரண்டு பிரிந்து நிலவி அரசியற்றிருத் தங்கோரிய காலத்திலே 1922 ஆம் ஆண்டிலே இலங்கைத் தொழி லாளர் சங்கம் திரு A. E குணசிங்க அவர்கள் தலைமையில் ஆரம் பிக்கப்பட்டது. அவர் தமது மோட்டார் வண்டியில் சிவப்புக் கொடியைப் பறக்கவிட்டு ஓட்டித்திரிந்தமை கொழும்பில் பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று அவர் கொழும்பு மாநகரத்துத் தொழிலாளர் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தார். அவருடைய தலைமையிலேயே 1923, 1925 ஆகிய ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் முதன்முதலாக ஏற்பட்டன. வேலைநிறுத்தத்துக்கு அக்காலத்தில் கூலிக் குழப்பம் என்ற பெயர் வழங்கியது. குணசிங்க அவர்களுடைய முயற்சியால் இரண்டு காரியங்கள் நிறைவேறின. அவை தொழிலாளர் ஒன்று திரண்டமையும், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எல் லோருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையுமாம். அதனால் நடுவகுப்பாரேயன்றிப் பொதுமக்களும் அரசியலில் ஈடுபடுவாராயினர் அதனால் மக்களாட்சிக்கு அத்திபாரம் இடப்படலாயிற்று.

அத்தியாயம் 24

சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்

(14-9-1853—9-1-1924)

தோன்றும் பொழுதே புகழுடன் தோன்றிய பொன்னம்பலம் சகோதரர் மூவருள் அருணாசலம் இளையவர். அவருக்கு மூத்தவர் இராமநாதன். அவரிருவருக்கும் மூத்தவர் குமாரசுவாமி. மூவரும் இலங்கைச் சட்டசபையை அலங்கரித்த அறிவாளிகள். கோல்புறுக் திருத்தத்தின் வண்ணம் 1833 ஆம் ஆண்டில் இலங்கையில் அமைக்கப்பட்ட சட்டசபையிலே முதன் முதலாகத் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்னும் முதலியாராவர். குமாரசுவாமி முதலியாரின் மைந்தரே சேர். முத்துக்குமாரசுவாமி. சேர். முத்துக்குமார சுவாமியின் மைந்தரே கலாயோகி ஆனந்தக் கென்ரிஸ் குமாரசுவாமி என்னும் அருங்கலை விநோதராவர்.

சேர். முத்துக்குமாரசுவாமியின் சகோதரியார் செல்லாச்சி என் பாரைப் பொன்னம்பல முதலியார் திருமணஞ் செய்திருந்தார். அவர் பொன்னம்பலத் தருமவான் என்னும் பெரியாரின் வழித் தோன்றல். பொன்னம்பல முதலியாரும் செல்லாச்சி அம்மையாரும் பெற்றெடுத்த மைந்தர்களே குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் மூவருமாவர். அருணாசலம் அவர்கள் 14-9-1853 இல் பிறந்தவர்.

அருணாசலம் தமது காலத்தில் தலைசிறந்த அறிவாளியாயும், அரசாங்க உத்தியோத்தராயும், அரசியற் பண்டிதராயும், அறிவு நூற் புலவராயும், தத்துவ சாத்திரியாயும், மொழிப்பற்று நாட்டுப்பற்று சமயப்பற்று நிறைந்த உத்தமராயும், இருந்து அளப்பரிய சேவை செய்தவர். அவரைப் போன்ற அரசியல் ஞானியையும் வடிவியா விற்பன்னரையும் இலங்கை என்றும் கண்டதில்லை.

கொழும்பிலுள்ள இராசாங்கக் கல்லூரி என்னும் மேலையற் கல்லூரியிலே அருணாசலம் கல்விகற்ற காலத்திலே அங்கே ஆசிரியராயிருந்த வெள்ளைக்காரருடைய நன்மதிப்பையும், பாராட்டுதலையும்,

அன்பையும் பெற்றுக் கொண்டார். தலைகிறந்த மாணவராயிருந்தமை யோடல்லாமல், அருணாசலம் கவர்ச்சிகரமான பல பரிசுகளையும் காலத்துக்குக் காலம் ஈட்டிக்கொண்டார். அப்பரிசுகளில் ஒன்று பாரம்பரியமாகக் குடும்ப சரித்திரப் பிரசித்தி பெற்றதாய் விளங்கிற்று.

முன்னர் அருணாசலத்தின் தாய் மாமனராய சேர். முத்துக் குமாரசுவாமி 1851 ஆம் ஆண்டிலே ஈட்டிய பரிசை, அருணாசலம் 1870 ஆம் ஆண்டிற் பெற்றுக்கொண்டார். பின்னர் அருணாசலம் அவர்களின் மைந்தர் மகாதேவா 1903 ஆம் ஆண்டில் அப்பரிசைப் பெற்றார். அவரின் மைந்தர் பாலகுமார் அப்பரிசை 1938 ஆம் ஆண்டிற் பெற்று நான்கு தலைமுறைகளின் கல்வித் தரத்தை நிரூபித்து விட்டார்.

அருணாசலம் மாணவராயிருந்த காலத்தில் அவரைக் கற்பித்த கலாநிதி பியர்சுறவ்ற் போக் என்னும் ஆங்கிலேயர் அருணாசலத்தைப் பற்றி எழுதிய அறிக்கையில் "நான் என்னுடைய நாற்பதாண்டு ஆசிரியத் தொழில் அநுபவத்தில் அருணாசலத்தைப் போன்ற நிறமை யுள்ள மாணவர் ஒருவரைக் கண்டதில்லை. இவருடைய படிப்பும் நல்லொழுக்கமும் சிறந்த தரத்தவை. இவருக்கு மிகுந்த சிறப்போடு கூடிய எதிர்காலம் உண்டு என்று தான் திடமாக நம்புகின்றேன்" என்று எழுதியுள்ளார்.

அருணாசலம் சர்வகலாசாலை ஊபகாரப் பரிசைப் பெற்று இங்கி லாந்தில் உள்ள கேம்பிரிச் சர்வகலாசாலைக்குப் போனபோது, இலங் கையில் வித்தியாதிகாரியாயிருந்த வால்ரர் சென்டல் என்னும் ஆங்கி லேயர் தமது நண்பர்களுக்கு அருணாசலத்தின் திறமையைப்பற்றி அறிமுகஞ் செய்து, "கிழக்கு நாடுகள் என்றுங் கண்டிராத மெத்தப் பெரிய விவேகி இவர். இவருக்கு ஆவனசெய்து ஊக்கப்படுத்துக" என்று எழுதினர்.

அருணாசலம் கேம்பிரிச் சர்வகலாசாலையைச் சேர்ந்த கிறைஸ்ற் கல்லூரியிலே பிரசித்தி பெற்ற பேராசிரியர்களிடத்திலே பாடங்கேட் டார். அச்சர்வகலாசாலையிலே திறமையுடன் பட்டம் பெற்றுக் கொண்டபின் சீமை அப்புக்காத்து எனப்படும் பாரிஸ்ரர் பட்டமும் பெற்று இலங்கைக்கு மீண்டு, சுதந்திரமாகத் தொழில் நடத்த விரும் பினர்.

ஆனால் அவருடைய மாமனராய சேர். முத்துக்குமாரசுவாமி. அருணாசலம் இலங்கைச் சிவில் சேவிஸ் என்னும் C. C. S. பரீட்சை யில் தேறிப் பொறுப்பு வாய்ந்த பெரியவுத்தியோகத்திலே பெருமை

யுடன் இருத்தல் வேண்டும் என்று விரும்பினர். ஆகவே அருணாசலம் தமது 22 ஆவது பராயத்தில் அதுகாறும் வெள்ளைக்காரரே அருகதை உள்ளவராயிருந்த C. C. S. பரீட்சையில் மிகத்திறமையுடன் சித்தி பெற்றார். இலங்கைச் சரித்திரத்தில் இலங்கையர் ஒருவர் முதன் முதலாக C. C. S. பதவியில் அமர்ந்த பொன்னாள் 3-4-1875 என்பர். அப்பெருமை அருணாசலத்துக்கே உரியது.

அருணாசலம் இலங்கையின் முன்னேற்றத்துக்காகப் பல துறைகளிலும் அயராதுழைத்தார். அவருடைய உபகரிப்பைப் பெறாத துறை இல்லை என்றே கூறலாம். அவர் அரசசேவை, அரசியற் சீர்திருத்தம், சட்டம், நீதி, புள்ளிவிபரவியல், சமூகசேவை, விவசாயம், கல்வி, சரித்திரம், கலை, புதைபொருள், தத்துவம், சமயம் ஆகிய துறைகளில் அரிய சேவை செய்துள்ளார்.

அருணாசலம் 1886 ஆம் ஆண்டு முதலாக மாவட்ட நீதிபதியாயும், மேல் மாகாண நீதிவாரியாயும் கடமையாற்றிய பின், அவர் 1901 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பு அறிக்கையைத் தயாரித்துள்ளார். அதிலே நானாவிதமான புள்ளி விபரங்கள் நல்ல முறையில் அமையும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. அவ்வறிக்கையைக் கண்ட அமெரிக்க வாசிகள், தங்கள் நாட்டகத்தே அத்தகைய முறையில் அவ்வறிக்கையைத் தயாரிக்கக்கூடிய விற்பத்திமான்கள் இல்லை என்றும், அருணாசலத்தின் அறிக்கை வெறும் விபரப்பட்டியல் அல்லவென்றும், அது பாரம்பரியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பாரிய இலக்கியப் படைப்பு என்றும் பலவாறுகப் புகழ்ந்தார்கள்.

அருணாசலம் தயாரித்த அவ்வறிக்கையை உலக நாடுகள் வெகுவாகப் பாராட்டின. லண்டன்ரைம்ஸ் என்னும் பத்திரிகை, "இலங்கை வாழ் மக்களுடைய வரலாறு, சமயம், மொழி, இலக்கியம் என்பன சம்பந்தமான வரலாறுகளைக் கூறும் ஆதாரபூர்வமான ஓர் அரிய நூல் என்று இதனைச் சொல்லவேண்டும்." என்று பாராட்டி எழுதியது.

இன்று இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராயும், மேற்சபை அங்கத்தவராயும், தலைசிறந்த அரசியல் ஞானியாயும் உள்ள தோழர் டொறிக் சூசாவின் தந்தையார் ஆமன்டிசூசா அக்காலத்தில் மோனிங்ஸ்டார் என்னும் பத்திரிகையில் அருணாசலத்தின் அறிக்கையைப் பாராட்டி, "இலங்கையின் பொருளாதார சமுதாய நிலைமைகளையும், இனப் பாகுபாடுகளையும் தெளிவாக ஆராய்ந்து காட்டும் ஓர் அரிய நூல். இதில் இலக்கிய நயம் ததும்புகின்றது.

ஆங்கிலம் வல்ல அடிசனின் அழகு நடையும், சரித்திரம் வல்ல மக்காலே பிரபுவின் வீரநடையும், ஆராய்ச்சிப் புலமை வாய்ந்த மொம்சனின் ஆணித்தரமான நடையும் அருணாசலத்தின் நடையில் ஒன்று சேர்ந்து மிளிர்கின்றன'' என்று எழுதியுள்ளார்.

அருணாசலம் அரசாங்க சேவையிலே அமைதியாகச் சிறப்புற்றிருந்த காலத்திலே 1902 ஆம் ஆண்டிலே ஆங்கிலேய மன்னராய ஏழாவது எட்வேட் என்பாருக்கு முடிசூட்டுவிழா நடைபெற்றது. அருணாசலம் முடிசூட்டு விழாவின் பரிசாக இலங்கைக்கு அரசியற்றிருத்தங் கொடுக்கப்படல் வேண்டும் என்று ஒப்சேவர் பத்திரிகையில் நயம்பட எழுதி, ஆள்பதி அவர்களையும் ஆங்கிலேயரையும் சிந்திக்க வைத்தார்.

குடியியற் சேவையிலமர்ந்த அருணாசலம் சீரும் சிறப்பும் பொறுப்பும் உள்ள உயர்ந்த உத்தியோகங்களை வகித்து, 1909 ஆம் ஆண்டில் பதிவாளர் நாயகம் என்னும் உத்தியோகத்துக்கு உயர்த்தப் பெற்றார். அவர் அவ்வுத்தியோகத்தமர்ந்த காலத்திலே எழுதிய பரிபாலன அறிக்கைகளை ஆங்கிலேயர் வெகுவாகப் புகழ்ந்து, ஆசியா வாசியாகிய ஒருவர் அத்துணை அழகாக எழுதினரே என அதிசயித்தனர்.

அருணாசலம் பதிவாளர் நாயகமாக இருந்த காலத்திலேதான் இலங்கைச் சட்டசபையில் குறும்-மக்களம் திருத்தம் ஏற்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட சட்டசபையிலே நியமிக்கப்பட்ட உத்தியோக அங்கத்தவராய ஆங்கிலேயர் மத்தியிலே அருணாசலம் அவர்களும் நியமிக்கப் பெற்றார். அவ்வுத்தியோகத்தர் வரிசையிலே இருந்த இலங்கையர் அவர் ஒருவரே. தமிழர் நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் நடையுடை பாவனையில் தலைப்பாகையணிந்து அரச அன்னம் போல ஆங்கிலேயர் மத்தியில் அருணாசலம் அமர்ந்து ஆலோசனை கூறுவாராயினர்.

அருணாசலத்தைப் பார்க்கினும் வயதாலும் சேவை அநுபவத்தாலும் மூத்தவராய ஆங்கிலேயர் குடியியற் சேவையிலிருப்பவும், ஆள்பதி சேர். ஆதர் கோடன் அருணாசலத்தையே அப்பதவிக்குத் தகுதியானவர் எனக் கண்டு அதில் அவரை நியமித்தார். பதிவாளர் நாயகமாயமர்ந்த அவர் அத்திணைக்களத்தில் செய்த திருத்தங்கள் பல. அவற்றைச் சுருக்கிச் சொல்லுதல் இயலாது. அவர் அப்பதவியிலமர்ந்த காலத்திலே 16-1-1913 தொடக்கம் சட்ட நிர்வாக சபையிலும் அமர்ந்து ஆள்பதி அவர்களுக்கு மந்திராலோசனை கூறி வந்தார்.

மந்திராலோசனை கூறும் சட்ட நிர்வாகசபையிலமர்ந்த அருணாசலம் அவர்கள் ஆங்கிலேயரின் பணிக்குழுவாட்சியில் இன்றியமையாத தோர் இடத்தைப் பெற்றிருந்தார். அவருடைய திறமையை ஆங்கிலேயர் வெகுவாக மெச்சினர். அவர் அப்பதவியிலிருந்து இளைப்பாறிய போது அவருடைய சேவை நலத்தை வெகுவாகப் பாராட்டிய ஆங்கிலேய அரசாங்கம் அவருக்கு 1914 ஆம் ஆண்டிலே நைற் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

அருணாசலம் சட்ட நிர்வாக சபையிலமர்ந்து ஆலோசனை கூறிவந்த அழகை அக்காலத்தில் சட்டத்துறை நாயகமாயிருந்த சேர். அன்ரன் பேற்றம் என்னும் ஆங்கிலப் பெரியார் பின்வருமாறு பாராட்டியுள்ளார். ''சட்ட நிருவாக சபையை அலங்கரித்து அதற்குப் பெரியதோர் அணிகலமாகவன்றே அருணாசலம் இருந்தார். எவருக்கும் விளங்காத எந்தக் கட்டளைச் சட்டத்தையும் அவர் எளிதிற் படித்து விளங்கிப் பிறருக்கு இலேசாக விளங்கவைப்பார். கமக்காரருடைய பிரச்சினைகள் முதல், அரசாங்க உத்தியோகத்தரின் பெரிய பிரச்சினைகள்வரை அவர் தீர்த்து வைப்பார். எதனையும் உரிய காலத்திற் கருத்தூன்றிப் படித்து ஆராய்ந்து உரிய முறையிற் செய்து நிறைவேற்றுவது அவருடைய தனிப்பட்ட பண்பாகும். அது அவரிடத்தில் இயல்பாயமைந்ததை நான் நன்கறிவேன்''

இவ்வாறு மந்திராலோசனைச் சபையில் உடனமர்ந்திருந்த ஓர் ஆங்கிலேயர் அருணாசலத்தைப்பற்றி எழுதுவாராயிருந்தால் அவரின் பெருமையை என்னென்பது. பெரிய உத்தியோகத்தை வகித்துக்கொண்டே சட்டசபையின் உத்தியோக அங்கத்தவராயும் சட்ட நிர்வாக சபையிலே ஆலோசகராயும் இருந்த அருணாசலம் ஒருமுறை அரசாங்கத்தின் போக்கை விரும்பவில்லையென்பதை வெளிப்படையாகச் சட்டசபைக் கூட்டத்தில் ஆள்பதி அவர்கள் முன்னிலையில் பாதகமாக வாக்களித்தார். உத்தியோக அங்கத்தவர் அவ்வாறு செய்யலாகாது என்பது குடியேற்ற மந்திரியாரது கட்டளை. ஆனால் அருணாசலத்தின் நேர்மையைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் இயலவில்லை.

குடியியற் சேவையிலமர்ந்திருந்த காலத்தில் அருணாசலம் நீதிபதியாகவே பன்னெடுங்காலம் கடமையாற்றினார். அவருடைய நேர்மையையும் அறிவாற்றலையும் அக்காலத்தில் நீதியரசராயிருந்த மொன்கிரியல் வெகுவாகப் பாராட்டியுள்ளார். ''அருணாசலம் புகழ் பெற்ற அறிஞர். அவர் புராதன ஆங்கில இலக்கியங்களிலும்,

கீழைத் தேயத்து இலக்கியங்களிலும் மிகுந்த பாண்டித்தியம் வாய்ந்தவர். பேச்சுவன்மையும் ஆராய்ச்சிப் புலமையும் அவருக்கு இயல்பாயமைந்துள்ளன. அவர் எந்த அலுவலையும் கண்ணுங்கருத்துமாகச் செய்து நிறைவேற்றும் இனிய இயல்பினர்''. என்பன நீதியரசரின் பாராட்டுரையாகும்.

உவிலியம் டிக்பி என்னும் ஆங்கிலேயர் நல்ல இருதயம் உள்ள பெரிய மனிதர். அவர் 1876 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்து ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராய் இருந்தவர். அவர் தமது எழுத்துவன்மையால் எல்லோருடைய மனத்தையுங் கவர்ந்தார். அவர் 1877 ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் முறையில் சீர்திருத்தங்கோரிப் ''**பிரதிநிதித்துவ ஆட்சிக்குப் பக்குவம் வாய்ந்த புராதனப் பெருமையுள்ள ஒரு நாடு**'' என்று இலங்கையின் உரிமையை எழுதி இலங்கையரை விழிப்படையச் செய்தார். அவர் இலங்கையை விட்டு இந்தியாவுக்குச் சென்று ஆங்கிருந்த காலத்தில் அருணாசலத்தின் அறிவாற்றலை நினைத்து அவரைத் தம்முடன் இந்தியாவுக்கு வருமாறு எழுதினர். 'எனதன்புக்குரிய அருணி, நீங்கள் இந்தியாவில் இருப்பதையே நான் வெகுவாக விரும்புகிறேன். மிகவும் சிறப்பான தோர் இலட்சியத்தை நிலைநாட்டவே நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதை நான் நன்கறிவேன். தங்கள் விவேகத்தையும், பண்பட்ட சிந்தனைத் தூய்மையையும், தாராளமான குணநலனையும் செவ்வனே முழுதாக உபயோகிப்பதற்குத் தாங்கள் தற்சமயம் வகிக்கும் தானம் தடையாய் உள்ளது. தங்களைச் சூழவுள்ள தடைகளையும் கட்டுப்பாடுகளையும் புறங்கண்டு, இப்பொழுது தாங்கள் மேற்கொண்டொழுகும் புறநீங்கலான வாழ்வின் போக்கை மாற்றிக்கொண்டாலன்றி நீங்கள் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைய முடியாது. தங்களைப் போன்ற பெரியார் ஒருவரை இப்பெரிய தேசத்தில் காண்பதற்கு இயலாதவனாய் இருக்கின்றேன்'' என்பது டிக்பியின் கடிதமாகும்.

ஒருசமயம் டிக்பியின் உதவியை நாடி அருணாசலம் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில், ''மதிப்புக்குரிய நண்பர் டிக்பி அவர்களுக்கு எழுதுவது. தங்கள் ஆப்த நண்பரும் குடியேற்ற மந்திரியாருமாகிய றிப்பன் பிரபுவைக் கொண்டு இலங்கையில் உள்நாட்டு நிர்வாக அலுவலிலாவது சுதந்திரம் அளிக்குமாறு செய்விக்க உதவி செய்வீர்களா? கிழக்கு நாடுகளில் ஆங்கிலேய ஆட்சி ஒரு முகமாக எல்லாத் துறைகளையும் நிருவாகஞ் செய்வதால் உள்நாட்டு மக்களுக்குத் தங்கள் நாட்டலுவல்களைக் கவனிக்கும் வாய்ப்பு வாய்க்காது போனதைப் பற்றிப் பலமுறை



சேர். பொன்.
அருணைசலம் அவர்கள்



சேர். யேம்ஸ் பீரிஸ்
அவர்கள்





வருந்தியுள்ளேன். மக்கள் தங்கள் அலுவல்களை நிருவகிக்கத் தருணம் கிடைக்காமையால், தங்கள் பொறுப்புக்களை நடத்தும் இயல்பான சுதந்திர வல்லபத்தை இழந்துவிட்டனர். ஆங்கிலேய அதிகாரிகள் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய அலுவல்களைப் புறக்கணிக்கிறார்கள். அவர்கள் ஏகாதிபத்தியத்திலே ஊறிக் கிடக்கிறார்களாதலால். சீர்திருத்தங்களை ஏற்க முற்படமாட்டார்கள். சீர்திருத்த அலுவல்களைக் கையாளத் தருணமளிக்கவும் மாட்டார்கள். இதைப்பற்றி எங்கள் நாட்டு ஆள்பதிகளுடன் பலமுறை பேசியிருக்கின்றேன்.

எங்கள் நாட்டு மக்கள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே ஏற்று நடத்துதல் வேண்டும். அவர்கள் பிழைவிட்டாலும் கவலையில்லை. அவர்களிடம் ஊக்கமும் பொறுப்பும் வல்லபமும் பிறக்கும். அவர்கள் தங்கள் சக்தியைத் தம் நாட்டை வளம்படுத்த உபயோகிப்பார்கள். ஆங்கிலேயர் வருமுன் எங்கள் அரசியல் முறையில் கிராமங்களின் நிருவாகப் பொறுப்பு கிராம மக்களிடமே இருந்தது. ஆங்கிலேயர் அதனை நிர்மூலமாக்கிவிட்டனர்'' என எழுதினர்.

இத்தகைய கடிதத்துக்கு அருணாசலத்தின் நண்பன் டிக்பி என்ன எழுதினர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ''அன்புள்ள அருணாசலம் அவர்களே, 1870 ஆம் ஆண்டுக்குப் பின்வந்த காலத்தில் இலங்கையில் இருந்தபோது நாங்கள் வாலிபத் தோழராயிருந்தோம். நாங்கள் கண்ட கனவு உங்களுக்கு நினைவிருக்கலாம். அந்தக் காலத்தில் நாங்கள் ஊக்கம் மிகுந்திருந்தோம். உத்தியோகத்திலிருந்து தாங்கள் இளைப்பாறுதல் வேண்டும். நாங்கள் கண்ட கனவு நனவாதல் வேண்டும் என்பதே என்னுடைய வேணவா. இதைவிட வேறு இலட்சியம் என் மனதில் இல்லை. என் அருமை நண்பரே! தங்களுடன் தோளோடு தோளாக நின்று தங்கள் இலட்சியத்துக்காகப் போராட நான் தயாராக இருக்கிறேன்.''

சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலகம் எழுந்த காலத்தில் சேர். இராமநாதன் செய்த சேவை ஒருபுறமிருக்க சேர். அருணாசலம் ஆற்றிய பணியை திரு. E. W. பெரேரா அழகாகக் கூறியுள்ளார். ''இராணுவச் சட்ட ஆட்சிக் காலத்திலே இலங்கை முழுவதும் இழவு வீடுபோல இருளடைந்திருந்த காலத்தில் சேர் பொன் அருணாசலம் சுவாலித்தெரியும் சுடர்போன்று கோபாவேசத்துடன் சீறியெழுந்து அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்தவும், அமைதியை நிலைநாட்டவும், தம்மாலான அளவில் உழைத்தார். அவர் செய்த முயற்சியாலேயே, துன்பமுற்ற மக்களுக்கு ஓரளவுக் காயினும் நிவாரணமளிக்கப்பட்டது.''

சிவில் சேவையிலிருந்து இளைப்பாறிய சேர். அருணாசலம் சமூக சேவை செய்வதில் ஆர்வங்கொண்டார். அவர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் ஆங்குள்ள சமூக சேவைத் தாபனங்களுக்குச் சென்று அவை அலுவலாற்றும் முறைகளை நேரிற்கண்டு அநுபவம் பெற்றிருந்தார். அவர் இலங்கைக்கு மீண்டதும் பொன்கிழார் என்னும் மாளிகையில் சமூகசேவை செய்வதில் ஆர்வமுள்ள தம் முடைய நண்பர்களை 19-11-1914 இல் அழைத்து விருந்து கொடுத் துக் கலந்துரையாடினர். அதில் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத் தையும், கல்வித் தரத்தையும் உயர்த்துதல் வேண்டும் என்று சங்கர்ப் பஞ் செய்தார். அதற்காக இராப் பாடசாலைகள் அமைத்தும், பிற வசதிகளை நிருவகித்தும் தினந்தோறும் எட்டு மணி நேரம் சமூக சேவையில் ஈடுபட்டார்.

பொதுமக்களின் தரத்தை உயர்த்தப் பாடுபட்ட அருணாசலம் இலங்கைச் **சர்வகலாசாலையின் தந்தை** எனவும் போற்றப்படுபவர். பேராதனையில் அவருடைய நினைவு மண்டபம் அதற்குச் சான்று பகருகின்றது. அவர் கேம்பிரிச் சர்வகலாசாலையில் கல்விகற்று மீண்ட நாட்டொடக்கம் இலங்கைக்குத் தனியாக ஒரு சர்வகலாசாலை அமைத்தல் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்துவந்தார். ''உரோம ராச்சியத்தைப் பற்றியும், இங்கிலாந்தின் பேரரசைப் பற்றியும் படிக்கின்ற எங்கள் மாணவர்கள் எல்லாளன் துட்டகாமினி கதிர் காமம் முன்னீஸ்வரம் மகியங்கனையைப்பற்றி அறியாதிருப்பது வருந் தத்தக்கது.'' இத்தகைய கருத்தை அருணாசலம் அவர்கள் 19-1-1906 இல் தாம் கூட்டிய பகிரங்கக் கூட்டத்தில் சர்வகலா சாலையின் இன்றியமையாமையைப் பற்றி பேசும்போது குறிப்பிட்டார். இலங்கைச் சர்வகலாசாலைக்கு வித்திட்டவர் அருணாசலம் அவர்களே.

அருணாசலத்தின் அரிய முயற்சியின் பயனாகவே **சர்வகலாசாலைக் கல்லூரி** கொழும்பில் அமைக்கப்பட்டது. அது உருவானதும் அவர் அதற்குத் தாராளமான உதவி செய்தமையோடு தமது அரிய நூல் களையும் உபகரித்தார். மாணவர் பரிசு பெறும் பொருட்டுப் பெரு நிதியுதவியும் தமது வள்ளன்மையின் வளத்தை இலங்கையின் எதிர் கால மாணவ மாணவிகளுக்கு இன மத மொழி வேறுபாடு கருதாது வரையாது வழங்கினர்.

இலங்கையில் அருணாசலத்தின் காலத்தில் அவர் மூச்சுப்படா மல் எந்தத் தலைவரும் செயலாற்றியது கிடையாது. **எங்கள் அரசியல் தேவைகள்** என்னும் தலைப்பில் 22-4-1917 இல் விக்ரோறியா நினைவு மண்டபத்திலே அவர், கேட்டார் இறும்பூதெய்தும் வண்ணம்

பேசினார். அப்பேச்சு இலங்கை வாசிகளைத் தட்டி எழுப்பிற்று. அது இலங்கையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வழிகோலிற்று. ஆங்கிலேய அரசியற் பண்டிதர்களையும், யாப்பு வல்லுநரையும், பேரரசு வாதிகளையும் அது வெகுவாகச் சிந்திக்க வைத்தது. அப் பேச்சின் எதிரொலி வீதிவாய்க் கேட்டவர்கள் விம்மி விம்மி மெய் மறந்து பெருமிதங்கொண்டு சுதந்திரதாகங் கொண்டார்கள்.

''பணிக்குழு ஆட்சியாளரின் சங்கிலித்தளையாற் பிணிப்புற்று நாங்கள் எங்கள் அதிகாரம், பொறுப்பு என்பன அற்றவர்களாய் எங்கள் இயல்பு, திறமை ஆதியன குறைக்கப்பட்டவர்களாய், தற்குறைவுணர்வினுல் ஏற்பட்ட விரக்தியினுல் நலிந்து வாழுகின்றோம். எங்கள் சொந்த இயல்பில் நாங்கள் பூரணமாய் வளருவதற்கு விடாமல் எங்களைப் பணிக்குழு ஆட்சியாளரின் பரிபாலனம் தடை செய்கின்றது. குடியேற்ற நாட்டு முறையில் இலங்கையில் நிலவு கின்ற ஆட்சி எங்கள் கழுத்தை நெரிக்கின்றது''

சேர். அருணுசலம் பேசியபோது தமது கோரிக்கையை அரண் செய்வதற்கு நானுவித புள்ளி விபரங்களையும் எடுத்துக் காட்டி ஆணித்தரமாகப் பேசினார். அவருடைய பேச்சின் பெறுபேறாக உண்டாக்கிய பொதுசன அபிப்பிராயத்திலேதான் இலங்கைச் சீர் திருத்த சபையும், அதன்வழி இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்னும் மகாசபையும் உருவாயின.

எங்கள் அரசியல் தேவைகள் என்னும் தலைப்பில் அவர் பேசிய பேச்சை சேர். யேம்ஸ் பீரிஸ் வெகுவாகப் பாராட்டி, ''சேர். அருணுசலம் அவர்கள் பேசிய பின்னரே இலங்கையர் தன் நம்பிக்கையுடன் விடாக் கண்டர்களாய் அரசியற் களர்ச்சி செய்தல் வேண்டும் என உறுதி கொண்டனர்'' என்று கூறினர்.

திரு. D. S. சேனநாயகவின் தமையனரும், திரு. R. G. சேன நாயகவின் தகப்பனருமாய திரு. F. R. சேனநாயக 20-9-1919 இல் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் அரசியல் சமுதாய பொருளா தார அபிவிருத்திக்கான சங்கங்களைத் தாபிப்பதற்காக ஒரு கூட்டங் கூட்டி அதிலே சேர். அருணுசலத்தைப் பேச அழைத்தார். அவர் பேசியதைச் சிங்கள மக்கள் வெகுவாகப் போற்றினர்கள். அருணுசலம் அவர்கள் எல்லா வகையாலும் இலங்கையரை வழி நடத்தப் பொறுப்பு வாய்ந்த உத்தமத் தலைவர் என்று போற்றினர்கள்.

அமெரிக்கா தேசத்துப் பெரியாராய கேணல் ஒல்கோட் அருணுசலத்தைக் கண்டு பேசி இன்புற்ற வரலாற்றைத் தமது நாட் குறிப்பில் எழுதிக்கொண்டார். ''இன்று கேம்பிரிச் பல்கலைக்கழ

கத்தைச் சேர்ந்த பட்டதாரியாய ஒருவரைச் சந்தித்தோம். நாங்கள் ஆசியாவில் கண்ட பெரியார்களுள் மிகுந்த அறிவாற்றலும் நாகரிகமும் வாய்ந்தவருள் இவர் ஒருவராவர்'' என்பது ஒல்கொட்டின் குறிப்பாகும்.

இலங்கைச் சீர்திருத்த சபைக்கும் அதன் வழி உருவாகிய தேசிய மகாசபைக்கும் அருணாசலமே முதற் பெருந் தலைவராய்த் தெரியப் பெற்றுப் பல காரியங்களை முன்னின்று செய்து முட்டின்றி நிறைவேற்றினார். அவர் தேசிய மகாசபையில் பேசிய பேச்சின் பிரதியொன்று, சீர்திருத்தங்கோரி எழுதிய நினைவேட்டுடன் சேர்த்துக் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பப்பட்டது. அப்பேச்சினால் இலங்கையர் தமது அரசியல் உறக்கத்தினின்றும் கண்விழித்தமையும், அது இலங்கைச் சரித்திரத்தை மாற்றி அமைக்கும் பெற்றி வாய்ந்ததையும், அது புதிய சகாப்தத்தை உருவாக்கும் தன்மையது என்பதையும் ஆங்கிலேயர் நன்கறிந்தனர்.

தேசிய மகாசபையின் தலைமையுரையின்போது இலங்கைக்குக் கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளின் கௌரவ அந்தஸ்துக் கொடுக்கப்படல் வேண்டும் என்று பேசிய அருணாசலம் பின்வரும் நடைமுறைகளும் அமைதல் வேண்டும் என்னும் பிரேரணைகளையும் பிரேரிப்பித்தார்.

1. சட்டசபை நல்ல முறையில் திருத்தப்படல் வேண்டும்.

2. உள்ளூர் ஆட்சிச் சபைகள் தேச மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்படல் வேண்டும். அவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்படல் வேண்டும்.

3. மத்திய அரசாங்கம் விதிக்கும் வரிகள் தரப்படுத்தப்பட்டன வாய், மட்டானவையாய் இருத்தல் வேண்டும்.

4. கல்வியின் பொருட்டு மேலதிக பணஞ் செலவிடப்படல் வேண்டும். (இலங்கையில் 1917 ஆம் ஆண்டின் வருமானத்தில் 5% வீதமே கல்வியின் பொருட்டுச் செலவிடப்பட்டது. அமெரிக்காவின் பரிபாலனத்திலிருந்த பிலிப்பீன் தீவில் 32% வீதம் செலவிடப்பட்டமை எடுத்துக் காட்டப்பட்டது.)

5. பிள்ளைகளுக்கு 14 வயது வரை கட்டாய இலவசக்கல்வி இருத்தல் வேண்டும். அதனை அடுத்துத் தொழிற் பயிற்சியும் அளிக்கப்படல் வேண்டும்.

6. இலங்கைக்கு ஓர் சர்வகலாசாலை தாபிக்கப்படல் வேண்டும்.

சேர். அருணாசலம் தேச சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒன்றான டெயிலி நியூஸ் 3-1-1918 இல் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அதன் முகாமையாளராயிருந்த D. R. விஜயவர்த்தனா அப்பத்திரிகையின் முகப்பை அருணாசலத்தின் கட்டுரை அலங்கரித்தல் வேண்டும் என்று விரும்பினர். அமெரிக்க நாட்டு ஏபிரகாம் லிங்கனைப்போல அருணாசலமும் நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதன் சுருக்கத்தின் சுருக்கம் பின் வருமாறு. ''டெயிலி நியூஸ் தக்க தருணத்தில் தோன்றியிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். எங்கள் மத்தியில் புதிய சக்திகள் வேலை செய்யத் தொடங்கியுள்ளன. நாட்டின் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது. இந்நாடு தன் பிள்ளைகள் எல்லோருடைய விசுவாசம் நிறைந்த சேவைகளை வேண்டி நிற்கிறது.''

பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு அவர் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதோடு நிற்கவில்லை. காலத்துக்குக் காலம் பல சங்கங்களை உருவாக்கி அவற்றிலே தம் கருத்தை வெளியிட்டும் வந்தார். அவர் உருவாக்கி உயிர்ப்பளித்த சங்கங்களுள் இலங்கைச் சீர்திருத்தச் சங்கம், இலங்கைத் தேசிய மகாசபை, சமூக சேவைச் சங்கம், தொழிலாளர் நலன்புரிச்சங்கம், இலங்கைச் சர்வ கலாசாலைச் சங்கம், இலங்கை மகாசனசபை, கொழும்புச் சைவ பரிபாலனசபை, இலங்கைத் தமிழர் சபை, செந்தமிழ்ப் பரிபாலன சபை என்பன குறிப்பிடத் தகுந்தவை.

''எங்கள் நாட்டின் அரசியல் புனரமைப்புக்கும், நாட்டு மக்களின் சமுதாய முன்னேற்றத்துக்கும் அருணாசலம் அவர்கள் அயராது உழைத்தமை போல, வேறெவரும் அவர் காலத்திலாவது அவருக்கு முந்திய காலத்திலாவது பணியாற்றவில்லை'' இவ்வாறு சட்டசபைத் தலைவராய் இருந்த சேர். யேம்ஸ் பீரிஸ் அருணாசலத்தைப்பற்றி எழுதியுள்ளார்.

சேர். அருணாசலம் பண்பட்ட பண்பி. அவர் நற்பண்புகளின் உறைவிடமாயிருந்தமையோடு, அருங்கலை விநோதராய்ப் பிரபுத் தன்மையோடு வாழ்ந்த பெரியவராவர். அதனால் இலங்கையில் கல்வி, கலாசாரம், சமயம், சமுதாய ஒழுங்கு, அரசியல் மறுமலர்ச்சியடையவும் அவர் அயராதுழைத்தவராகையால் அவை புத்துயிர் பெற்றுப் புனரமைப்புப் பெற்றன என்பர்.

சேர். இராமநாதனைப் போலவே அவருடைய இளவலான சேர். அருணாசலமும் இணையற்ற தேசியத் தலைவராயிருந்து முழு இலங்கைக்கும் முற்போக்கான அலுவல்களைச் செய்தார். அவர்

இராசாங்க ஆசிய சங்கத்தின் தலைவராயிருந்தும் அளப்பரிய தொண்டு செய்தார். அதன் வெளியீடுகளில் இலங்கையரின் கலாசார சம்பந்தமான கட்டுரைகளைத் தமக்கே உரிய சுத்தமான ஆங்கிலத்தில் எழுதினர். அவற்றைவிட வேறு பல வெளியீடுகளிலும் சிவவழிபாடு, கந்தசாமிக் கடவுள், பத்தினித் தெய்வம் முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி ஆங்கிலேயருக்கு எம்பெருமையை எடுத்துக் காட்டினர்.

சமூக கலாசார சமய சம்பந்தமாக அரிய எழுத்தோவியங்களை எழுதிய அவர், அரசியல் சம்பந்தமாகவும், சரித்திரம் சம்பந்தமாகவும், உத்தியோகம் சம்பந்தமாகவும் எண்ணற்ற நூல்களை உருவாக்கியுள்ளார். அழிவழக்குகளின் சட்ட மஞ்சரி, இலங்கைக் குடிசன மதிப்பு அறிக்கை, இலங்கைச் சரித்திரச் சுருக்கம், எங்கள் அரசியல் தேவைகள், எங்கள் அபிலாசைகள் என்பனவும் பிறவும் என்றென்றும் சேர். அருணாசலத்தின் புகழுடம்பாகவே நிலவும் என்பதில் சந்தேகம் இருக்கமாட்டாது.

வெயில் மழை பனி என்றும் பாராமல் அடி சறுக்கும் மலைகளில் பகல் முழுதும் வேலைசெய்து துன்பப்பட்ட தோட்டத் தொழிலாளருடைய இன்னல்களைக் கண்டு அருணாசலம் மனமுருகினர். இலங்கைத் தொழிலாளரின் நலன்களைப் பாதுகாத்து அவருடைய சேமாபிவிருத்தியை அதிகரித்து, அவருடைய தொழில் வசதிகளைச் சீர்திருத்தி அவருடைய அபிவிருத்திக்கு உதவுதலையே நோக்கமாகக் கொண்டு இலங்கையின் முதலாவது தொழிற் சங்கத்தை அருணாசலம் 25–6–1919 இல் ஆரம்பித்தார். **இலங்கைத் தொழிலாளர் சேமாபிவிருத்திச் சங்கம்** என்னும் அத்தாபனத்துக்கு அருணாசலம் தலைவராகவும், பெரிசுந்தரம் என்னும் பெரியார் செயலாளராகவும் கடமையாற்றினர்கள்.

அடுத்த ஆண்டில் அருணாசலம் அச்சங்கத்தை பெரிதாக அகலிப்புச்செய்து **இலங்கைத் தொழிலாளர் கூட்டவை** எனப் பெயரிட்டார். அதனால் தொழிலாளருக்கு ஏற்பட்ட நன்மைகள் அதிகம். தொழிலாளர் இயக்கத்து முன்னோடிகளில் ஒருவரான **கேணல் யோசையா** வெச்வுட் எனும் பெரியார் இலங்கைக்கு வந்து அருணாசலம் அவர்களுடைய சேவையை நேரிற்கண்டார். அவர் இங்கிலாந்துக்கு மீண்டதும் பாராளுமன்றத்தில் அருணாசலம் அவர்கள் இலங்கையில் தொழிலாளருக்குச் செய்து வந்த சேவையைப்பற்றி ஆங்கிலேயருக்கு எடுத்துக் கூறினர்.

தற்பொழுது நிலவும் அரசியல் நீலைமை என்னும் பொருள் பற்றி சேர். அருணசலம் 15-3-1921 இல் பேசினர். ''தேசிய மகாசபையில் சேர்ந்து கொள்வதற்கு மக்கள் விரிசையாய் வருகின் றனர். ஆனல் இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் இச்சபையில் உள்ள பெரியவர்களே இதனே நன்கறிந்து கொள்ளவில்லே. அவர்கள் இதன் பெயரில் உள்ள காங்கிரஸ் என்னும் சொல் இந்தியாவில் வெள்ளேக்காரருக்கு எதிராக எழுந்த ஓர் இயக்கத்தின் பெயர் எனக் கருதினர். தேசியம் என்பதே அருத்தமற்றதும் உபயோக மற்றதுமான ஒரு சொல் எனக் கருதினர். ஆனல் என்னேப் பொறுத்த அளவில் இது நான் கேம்பிரிச் சர்வகலாசாலே மாணவனு யிருந்த காலந் தொடக்கம் கண்டுவந்த கனவின் நனவாகவும், எனது அபிலாசையின் நிறைவாகவும் உள்ளது.

தன்மானம் உள்ள ஒருவன் தான் பிறந்த பொன்னுட்டில் எவ் வண்ணம் வாழ விரும்புகின்றனே அவ்வண்ணம் எங்கள் நாட்டில் வாழ் வதையே நாம் விரும்புகின்றேம். சுயராச்சியம், பலம், உள்நாட்டில் மதிப்பு, வெளிநாட்டில் கௌரவம் என்பனவாகிய சிறப்பியல்புகளோடு வாழ்வதற்கு வழிகோலும் படியிலமைந்த அரசியலமைப்பையாவது எமக்கு அளிக்குமாறு நாங்கள் கோருகின்றேம். இலங்கையர் பிச்சைக் காரர் அல்லர். நாங்கள் வெள்ளேக்காரராகிய உங்களிடம் பிச்சை கேட்கவில்லே. இலங்கையர் தங்கள் முன்னேரளித்துப்போன தங்கள் அருஞ் செல்வமாய ஆட்சிப் பொறுப்பையே கேட்கின்றூர்கள்.'' என்று அருணசலம் அவர்கள் அருமையாகப் பேசினர்கள்.

அக்காலத்தில் இந்தியாவிலே அரசப் பிரதிநிதியாயிருந்தவர் கெம்ஸ்ம் போட் பிர . இந்திய மக்கள் சமர்ப்பித்த நினேவேடுகளே அரசப் பிரதிநிதியோடு கலந்தாலோசிப்பதற்கு இந்திய மந்திரியாய மொன்ராகு இந்தியாவுக்குப் போயிருந்தார். அவரிடம் தங்கள் கோரிக்கைகளேயும் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு அருண சலம் கேட்டார். அதற்குக் குடியேற்ற மந்திரியார் இணங்காமல் தாம் இலங்கை ஆள்பதியுடன் கலந்தாலோசித்து ஆவன செய்வதாக வாக்களித்தார்.

அந்த வாய்ப்பைத் தவற விடக்கூடாது என்று எண்ணிய அருண சலம் தமது நண்பர்களுடன் கலந்தாலோசித்து ஒரு நினேவேட்டைத் தயாரித்தனுப்பினர். அதனேப் பரிசீலனே செய்வதன் முன் ஆள்பதி அண்டர்சன் இறந்துபோகவே, அவரின் பின்வந்த ஆள்பதி மனிங் சட்டசபையிற்றிருத்தஞ் செய்ய முயன்றார்.

மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையில் கொழும்பு நகர்த்தொகுதி அருணசலத்துக்கென்றே முதலில் தீர் மானிக்கப்பட்டது. அதனே யேம்ஸ் பீரிசுக்கே கொடுத்தல் வேண்டும்

என்று குழப்பித் தீர்மானித்தார்கள். அருணாசலத்தை வேண்டு மானால் வேறு தொகுதியில் போட்டியில்லாமல் தெரிந்தனுப்பலாம் எனத் தேசிய காங்கிரஸ்காரர் திரித்து விளக்கினர்கள். அருணாசலம் பிரமாணம் பிரமாணமாயிருத்தல் வேண்டும். புரட்டிப் பேசுதல் அழகல்ல என்று கூறி விலகிக் கொண்டார்.

சிங்களவரிடையே ஒரினத்தன்மைப் போக்கு எழுந்த காலத்தில் தமிழர் யாழ்ப்பாண மகாசன சபையை 1921 ஆம் ஆண்டில் உரு வாக்கினர்கள். அவர்கள் இனவாரியான பிரதிநிதித்துவம் நிலைக்க வேண்டும் என்று கோரி நினைவேடொன்றை அனுப்பினர்கள். அதற்கு இராமநாதனும் அருணாசலமும் ஆதரவளித்தார்கள்.

சைவப் பண்பாட்டின் லட்சிய குணங்களாய நம்பிக்கை, தன்னடக்கம், தியாகம் ஆகிய சீலங்கள் அருணாசலத்திடம் இயல் பாயமைந்திருந்தன. பொதுசன சேவையைத் தவமாகக் கருதியே அவர் தொண்டு செய்து வந்தார். முன்னர் ஆள்பதியின் வல் லாட்சி மன்றத்தமர்ந்த பெரியாரா மக்களுக்காக இங்ஙனம் தொண்டு செய்கின்றார் என்று எல்லோரும் வியந்தார்கள். தோகலே 1905 ஆம் ஆண்டில் உருவாக்கிய இந்திய ஊழியர் சபையின் லட்சி யங்கள் அருணாசலத்தின் மனத்திற் பதிந்திருந்தன. அவற்றைச் செயற்படுத்தவே அவர் இப்போது முயன்றார்.

எமது அரசியற் குறைகள் என்னும் பொருள்பற்றி அருணாசலம் பேசியபோது, ''ஒரு நாட்டிற் குடியிருக்கும் மக்கள் தொகுதியின் சரித்திர முறையிலே சிற்சில காலவெல்லைகளிலே, அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கிணங்க உள்ளூர்க் குடியாட்சி முறைகளை ஆராய்தல் இன்றியமையாதது என்று கொப்டன் கூறியுள்ளார். எங்கள் நாட்டில் இப்படியான ஒரு காலவெல்லை இப்பொழுது வந்து விட்டது. எமது இன்றைய அரசியல் முறை எதிர்காலத்துக்குப் பொருத்தமில்லாதது.

எத்துணை மாறுதல்கள் எம்மிடையே காணப்படினும், எமது அரசியல் முறையிலே ஒருவகையான மாறுதலும் உண்டாகவில்லை. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவாறே இன்றும் எமது நாடு ஒரு குடியேற்ற நாடாக இருக்கின்றது. நமது கருமங்களை நாமே பார்த்து நடத்துவதற்குக் காலம் இன்னும் வந்திலது.

நாமெல்லோரும் அதிகாரியாளுமரசு என்னும் ஆட்சியதி காரமாய அரக்கியுடைய முன்னூனைத் தொங்கலில் கட்டுண்டு தன்வலியும் தன்வயமும் கெட்ட ஒட்டுக் குடிகளாய் விட்ட

படியினுலே எமது மனேபலங்கள் யாவும் தறுக்கணித்துப் போயின. அதனுல் அடிமைத்தனமே எமது வாழ்வின் கதியாய்விட்டது. எனவே நாம் எமது ஆண்மைக்கேற்ற மேற்பதவியை அடைந்து கொள்ள முடியாதவராயிருக்கிறோம். குடிமக்களுக்கு இதனைவிடப் பெருங் கெடுதியில்லை. ஆதலால் நாம் இழந்துவிட்ட தன் மதிப்பை மீண்டும் எமது உரிமையாக்கிக் கொள்ள முயலுதல் வேண்டும்.

இலங்கைச் சட்டசபையிலே உத்தியோக அங்கத்தவரே பெரும் பான்மையினராயிருக்கின்றனர். உத்தியோகப் பற்றற்ற அங்கத் தவர் பதின்மருள்ளே குடிகளால் தெரியப்படுவோர் நால்வரே. இந்நால்வருள்ளும் ஐரோப்பியரால் தெரியப்படுபவர் இருவர். இலங்கையில் உள்ள ஒரு சில ஐரோப்பியருடைய நன்மையைக் கவனிப்பதற்குப் பன்னிரண்டு உத்தியோக அங்கத்தவர் இருந்தும் இவர் தொகை போதாது எனக் கண்டு மேலும் இருவரைத் தெரிந் துள்ளார்கள். அதனுடைமையாது சட்ட நிர்வாக சபையிலே உத்தியோகப் பற்றற் வர் ஒருவரேனுமிலர்'' என்று பேசினர்.

சேர். அருணுசலம் பத்திரிகைகளில் அரசியற் கட்டுரைகள் எழுதி இலங்கையரை விழிப்படையச் செய்தமையோடு, **இலங்கையர்** என்னும் பத்திரிகையையும் ஆரம்பித்துத் தேசிய ஒருமைப்பாட்டை உண்டாக்க வழிவகுத்தார். இராமநாதனுடைய மேற்பார்வையில் ஹெக்டர் ஜயவர்த்தனு, பிறுன்சிஸ் த. சொயிசா ஆகிய பெரியார் களால் தயாரிக்கப்பட்ட பத்திரிகையின் சேவையைக் கண்ட ஆங்கி லேயர் தமது பேரரசுவாதம் இலங்கையில் மேலும் வேர்கொள்ள மாட்டாது என ஏங்கினர். ஆங்கிலேயரைத் திகைக்க வைத்த அப்பத்திரிகை இலங்கையரைச் சிந்திக்க வைத்தது என்பர்.

தமிழ்ப்பற்று மிக்கவரான அருணுசலம் வண்ணர்பண்ணை நாவ லர் வித்தியாசாலை மண்டபத்திலே 21-7-1917 இல் செந்தமிழ் பரிபாலன சபையை ஆரம்பித்துத் தமிழ்த் தொண்டு செய்யவைத்தார் சைவசமயத்தில் ஈடுபாடுள்ள அவர் தஞ்சாவூரைச் சேர்ந்த அருள் பரானந்த யோகியாரிடம் சைவசித்தாந்த நெறியை முறையாக அறிந்தார். அதனைப்பற்றி எற்வேட் காப்பென்ரருக்கு எழுதி வந்தார். அவர் குபேர சம்பத்துடையவராய் இருந்தபோதிலும், நவநாகரிகம் தலைவிரித்தாடும் கறுவாக்காட்டிலே வாழ்ந்தபோதிலும், தூய்மையாகவும் அமைதியாகவும் வாழ்ந்தார். தமக்கு அவ்வாழ் வுக்கு வழிவகுத்த அருள் பரானந்த யோகியைப்பற்றி ஆங்கிலே யருக்கு அருமையாக எழுதினர்.

சேர். அருணுசலம் முத்திதரும் புண்ணிய தலமாய திருவாலவாய் என்னும் மதுரையிலே 9-1-1924 இல் காலமானர் என்பதைக் கேட்ட சுவாமி மறைமலையடிகள், தமது நாட்குறிப்பில் இவ்வாறு

எழுதியுள்ளார். ''அருணாசலத்தின் இறப்பினை அறிந்ததும் என் உள்ளத்தில் இடிவீழ்ந்தது போன்ற துன்பம் அடைந்தேன். உருகிய உள்ளத்துடனும், வழியுங் கண்ணீருடனும் மிக்க வருந்தினேன். என் உண்மையான நண்பர், புரவலர், உண்மையான தமிழன்பர்''

அருணாசலம் அவர்களுடைய அரும்பெருஞ் சேவைகளைச் சிங்கள மக்கள் மறக்கவில்லை அவர்கள் பாராளுமன்ற முகப்பில் அன்னருக்கு அழகிய சிலைநாட்டி அதனடிக் கல்லில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்.

''நிரம்பிய கல்விப் புலமையும் அரசியல் வன்மையும், ஆளுந் திறனும் வாய்ந்த ஸ்ரீமான் சேர் பொன்னம்பலம் அருணாசலம் (1853–1924) தேசசேவைக்கென்றே தம்நாள்களை அர்ப்பணஞ் செய்த பெருந்தகையாளர். சட்டமன்றத் திருத்தத்தினை அரிதின் முயன்று முற்றுவித்த வீரர். இலங்கையிற் சர்வகலாசாலை அமைத்தற்காய அருந்தவமாற்றித் தாளாதுழைத்த பெருமகன். இவருடைய நன்றி களை மறவா இலங்கை வாசிகளால் நிறுவப்பட்ட நடுகல்.''

தன்னுட்டுக் கலைகளொடு
பிறநாட்டுக் கலையும்
தங்கு தடையில்லாது
பொங்கவுளம் பூத்தோன்
எந்நாட்டுக் கவின் தனினும்
இலங்கை சிறந்தாற் போல்
எத்தலைவர் தலைமையினும்
இவன் தலைமை சிறந்தோன்
பொன்னுட்டின் அமுதமெனப்
புவிநாட்டும் அமிழ்தாய்
பொலிதமிழ் தீஞ் சுவையுலகம்
சுவைக்க அருள் புரிந்தோன்
தென்னுட்டின் ஈழத்தாய்
ஈன்ற இளஞ்சிங்கம்
செல்வன் அருணாசலவேள்
வாழி வழி வழியே

—ந. கி. பாரதி

அத்தியாயம் 25

திருத்தப்பட்ட சட்ட சபை

முந்திய சட்டசபை மாட்சிமை தங்கிய ஐந்தாம் யோச் மன்னர் பிரானின் பெயரால் ஆள்பதி அவர்களின் ஆணையால் குடி யேற்றச் செயலாளராய சிசில் கிளிமந்தியால் 1924 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் 29 ஆம் திகதி குலைக்கப்பட்டது. புதிய சட்ட சபை 15-10-1924 இல் கூடியது. அன்று கூடிய சட்ட சபையே இலங்கையின் கடைசிச் சட்டசபையுமாகும்.

சட்டசபை கூடியதும் ஆள்பதி மனிங் அவர்கள் அவ்வாண்டுக் குரிய வரவு செலவுத் திட்டத்தை வாசித்து நிறைவேற்றிவிட அவசரப் பட்டார். அவ்வாண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம், முந்திய சட்ட சபையில் வாசிக்கப்படவில்லை. எனவே அந்த ஆண்டு முடிவதற்குள் அதனை நிறைவேற்றும்படியாக அவருக்குக் குடியேற்ற மந்திரியார் 223 ஆம் சட்டப் பிரமாணத்துக்கமைய உத்தரவு கொடுத்திருந்தார்.

குடியேற்றக் காரியதரிசி தமது அறிக்கையில் 1-10-23 இல் எஞ்சிய கையிருப்பு 21563659 ரூபா என்றும் அதில் மகாயுத்த நன் கொடையின் ஏழாந் தவணைப் பணமாக 15 லட்சம் ரூபாவும், ஒன்பதாம் தவணைப் பணமாக 15 லட்சம் ரூபாவும், படைகளின் நன்றிப் பணமாக 375000 ரூபாவும், வட இலங்கைப் புகைவண்டிப் பாதையின் பாதுகாப்பு வசதிக்கு 150000 ரூபாவும் ஒதுக்கப்படலா யிற்று என்று விபரமாகப் படித்தார். மேலும் 30 லட்சம் ரூபா யுத்த நிதிக்கும், 1823782 ரூபா பொதுசன தேவைக்கும், 3000000 ரூபா சர்வகலாசாலைக் கட்டடத்துக்கும், 214877 ரூபா அங்கொடை வைத்திய சாலைக்கும் கொடுக்கப்படல் வேண்டும் என நிதிக்குழுவினர் அநுமதித்தனர். எல்லாமாக ஒதுக்கீடுகள் 11563559 ரூபாவாக இருந்தது.

இன்னும் 20-11-24 இல் பாடசாலை உதவிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பில் உள்ள சகிருக் கல்லூரிக்கு 25000 ரூபாவும், பரமேஸ்வராக் கல்லூரிக்கு 50000 ரூபாவும், இராம நாதன் மகளிர் கல்லூரிக்கு 32000 ரூபாவும், கொழும்பில் உள்ள குருடர் செவிடர் பாடசாலைக்கு 10000 ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

ஆங்கிலேயர் இலங்கையைப் பரிபாலிக்கத் தொடங்கிய காலந் தொட்டு ஆள்பதி அவர்களே சட்டசபையின் வைகல்களுக்குத் தலைமை வகித்து வந்தார். அவருக்கு அடுத்தபடியாய் குடியேற்

றச் செயலாளருக்கே அதிகாரம் இருந்தது. ஆனால் இந்தக் கடைசி சட்டசபையில் ஆள்பதி அவர்கள் தலைவர் என்ற பெயரோடு விலகி இருப்ப, உபதலைவர் என்ற பெயரில் சபை அங்கத்தவர் ஒருவர் சபைக்குத் தலைமை தாங்கும் சம்பிரதாயம் ஏற்பட்டது.

சட்டசபையில் 1879 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதிநிதியாய் இருந்த முதுபெருந் தமிழ்ப் பெரியாராய சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சட்டசபைக்குத் தலைமை தாங்கிக் கௌரவிக்க வேண்டும் என்று ஆள்பதி அவர்கள் விரும்பினர்கள். ஆனால் இராமநாதன் அப்பதவியை விரும்பவில்லை. சபையின் இகலாட்டுகளில் காரசாரமாகப் பேசிப் பங்கு பற்றிச் சாதுரியம் படைத்த அவருக்கு அதில் விருப்பம் ஏற்படவில்லை. அவர் ஆள்பதி அவர்களிடம் மன்னிப்புக்கோரி அப்பதவியைப் போட்டி பொறுமை இல்லாமல் ஏகமனதாய் ஒருவருக்கு வழங்க ஒழுங்கு செய்தார். சட்டசபையினரும், ஆள்பதி அவர்களும் வியக்கும் வண்ணம் திரு. E. W. பெரேரா முன்மொழியத் திரு. கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம் பின்மொழியத் திரு. யேம்ஸ் பீரிஸ் ஏகமனதாய் உபதலைவர் பதவிக்குத் தெரியப் பெற்றார். ஆள்பதி அவர்கள் சேர் இராமநாதனின் பெருந்தன்மையை வெகுவாகப் பாராட்டி யேம்ஸ் பீரிஸ் அவர்களைத் தலைமை வகிக்குமாறு அழைத்தார். சேர். யேம்ஸ் பீரிஸ் தமக்கு உபதலைவர் பதவிக்கு இன்றியமையாத உதவியைச் செய்த இராமநாதனை வெகுவாகப் புகழ்ந்தார்.

சட்டசபையில் இறுதியாகச் செய்யப்பட்ட மனிங்-டிவன்சயர் திருத்தத்தின் பின்னரும் இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற மாயே விளங்கிற்று. பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்குச் சட்டங்கள் செய்யும் அதிகாரம் நீக்கப்படாமலே இருந்தது. பிரித்தானிய அரசாங்கத்தின் சின்னமாய் இருந்த ஆள்பதி அவர்களின் அதிகாரம் இலங்கையில் இருந்தது. அவர் இலங்கைச் சட்ட நிர்வாக சபையின் உதவியுடன் இலங்கையைப் பரிபாலித்து வந்தார்.

மனிங்-டிவன்சயர் செய்த திருத்தத்தின் பயனாய் இலங்கைச் சட்டசபைக்கு ஓரளவு பொறுப்பு வழங்கப்பட்டது. அதனால் ஆள்பதி அவர்கள் சட்டசபையின் ஆலோசனையையும் கேட்க வேண்டியவரானார். அதே சமயத்தில் அவர் சட்டசபையின் எண்ணத்துக்கு நடப்பதானால் சட்டசபையினரும் ஆள்பதியின் எண்ணத்தையும் கேட்கவேண்டி இருந்தது. தன்மதிப்புக்காரன் பிறர் தன்னை மதிக்கவேண்டும் எனவிரும்பினால், தான் பிறரை முதலில் மதித்தல் வேண்டும் என்பது உளநூற் சித்தாந்தம்.

எனவே 1924 ஆம் ஆண்டின் பின்னர் ஆள்பதியின் அதிகாரம் இயற்றும் அதிகாரமாய் இருந்தது. ஆள்பதி அவர்களே இயற்றுமல் தடைசெய்யும் தடை அதிகாரம் சட்டசபைக்கு இருந்தது. இதனை விரிவாகக் கூறில் ஆள்பதிக்குப் பூரணபொறுப்பு இருந்தது. ஆனால் பூரண அதிகாரம் இருக்கவில்லை எனலாம். சட்டசபைக்கு ஆள்பதியை ஓளவுக்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தது. ஆனால் அவர்கள் விரும்பிக்கேட்ட பொறுப்பு அதிகமாக இருக்கவில்லை என்றே கூறல் வேண்டும்.

இந்த அமைப்பிலிருந்த பெருங்குறைகளிலொன்று அதிகாரமும் பொறுப்பும் வெவ்வேறிடங்களிலிருந்தமையாம். சட்டசபையின் உத்தியோக அங்கத்தவரிடம் அதிகாரம் விடப்பட்டது. சட்டசபைக்குக் கட்டுப்படாமலும், மக்கள் பிரதிநிதிகளாகாமலும் இருந்த அவ்வுத்தியோகத்தர் குடியேற்ற மந்திரியாரால் நியமிக்கப்பட்டு ஆள்பதிக்கே கட்டுப்பட்டிருந்தார்கள். ஆள்பதியிடமே சட்டநிர்வாக அதிகாரமும் இருந்தது. சபையில் பெரும்பான்மையினரான உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர், அரசாங்கத்தை அமைத்து நடத்த இயலாதவராய் இருந்தார்கள். இந்நிலையில் ஆள்பதி சிறுபான்மைக் கட்சித் தலைவர் பிரதம மந்திரியாய் இருந்த நிலையிலிருந்தார்.

தேசிய மகாசபையின் பெயரால் ஆள்புலத் தொகுதி வாரியாகப் பிரதிநிதித்துவங் கோரிய பெரும்பான்மைச் சிங்களவரின் கோரிக்கையை நிறைவேற்றினால், அவர்கள் கரைநாட்டுத் தொகுதிகளிலும் மலைநாட்டுத் தொகுதிகளிலும் அதிக பிரதிநிதித்துவம் பெற்றுச் சட்டசபையில் சிறுபான்மையினரை நலியச் செய்யலாம் எனத் தாம் அஞ்சுவதாக ஆள்பதி மனிங் தமது அறிக்கையில் குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபுவுக்கு எழுதினர். டிவன்சயர் பிரபுவும் அதே கருத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் இருத்தல் வேண்டுமென அனுமதித்தார்.

தேசிய மகாசபையினர் கோரிய திருத்தங்களுள் வாக்குரிமையைப் பலருக்கு வழங்குவதற்கும், தெரியப்பட்ட வாசகர் சட்டசபைக்குத் தலைமை வகிப்பதற்கும் ஆள்பதி மனிங் தம் மறுப்பைத் தெரிவித்தார். ஆனால் குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபு அவற்றை வழங்கிய தோடு மக்கள் தேவைகளை நிறைவு செய்யவும் வழிவகுத்தார்.

டிவன்சயர்-மனிங் திருத்தத்தின் வண்ணம் சட்டசபை அமைவதற்குக் கமகத்துப் பணி 1923 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் விதித்த பிரகாரம் சட்டசபை புதுப்பிக்கப்பட்டது. அதிலே ஆள்பதி சட்ட நிர்வாகசபை மூலமும், சட்ட நிருபணசபை மூலமும் உதவி

பெறத்தக்கதாக இருந்தார். சட்டசபையில் உத்தியோக அங்கத்தவரும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரும் என இரு பகுதியார் முன்போலவே இருந்தார்கள்.

உத்தியோக அங்கத்தவர் 12 பேர். அவர்கள் முன்போல ஆள்பதியால் குடியேற்ற மந்திரியாரின் அங்கீகாரத்தோடு நியமிக்கப் பெற்றவர்கள். அவர்கள் :

1. பிரதம படைத் தலைவன்
2. குடியேற்றச் செயலாளர்
3. சட்டத்துறை நாயகம்
4. வருமானப் பகுதித் தலைவர்.
5. இறைசேரி நாயகம்

என்னும் இவர்களோடு வேறு உத்தியோகத்தரும் நியமிக்கப் பட்டனர். திருத்தப்பட்ட சட்ட சபையின் அமைப்பும் உத்தியோக அங்கத்தவரும் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளும் அவர்களின் தொகுதிகள் விபரமும் பின்வருமாறு.

தலைவர்

மாட்சிமை தங்கிய சேர் வில்லியம் மனிங் அவர்கள்.

1. **குடியேற்றக் காரியதரிசி**
   சிசில் கிளிமெந்தி
2. **சட்டத்துறை நாயகம்**
   எல்பின்ஸ்ரோன்
3. **வருமான அதிகாரி**
   E. B. அலெக்சாண்டர்
4. **இறைசேரி நாயகம்**
   W. W. வுட்ஸ்
5. **கல்வியதிகாரி**
   மாக்கிறே
6. **மத்திய மாகாண அதிபர்**
   W. L. கின்டர்ஸ்லி
7. **பகிரங்க வேலை இயக்குநர்**
   J. ஸ்ராச்சன்
8. **சுங்க அதிபர்**
   W. T. சதேண்

9. இந்தியத் தொழிலாளர் கட்டுப்பாட்டதிகாரி
W. E. வெயிற்

10. சட்ட அறிஞர் நாயகம்
M. T. அக்பார்

11. வைத்திய அதிகாரி
J. F. E. பிரிஜ்ஜர்

சாதாரண தொகுதிகள் 23

உபதலைவர்

1. கொழும்பு தெற்கு
கௌரவ யேட்ஸ் பீரிஸ்

2. வட மாகாணம் வடபகுதி
கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதன்

3. வடமாகாணம் மேற்கு
,, வைத்திலிங்கம் துரைசுவாமி

4. வடமாகாணம் கிழக்கு
,, கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம்

5. வடமாகாணம் தெற்கு
,, ஆறுமுகம் கனகரத்தினம்

6. வடமாகாணம் மத்தியபகுதி
,, சுப்பிரமணியம் இராசரத்தினம்

7. ஊவாமாகாணம்
,, D. H. கொத்தலாவல

8. கலுத்துறை
,, E. W. பெரேரா

9. மட்டக்களப்பு
,, E. R. தம்பிமுத்து

10. மத்தியமாகாணம் நகர்
,, A. C. G. விஜயகூன்

11. மத்திய மாகாணம் நாடு
,, G. E. த. சில்வா

12. தென்மாகாணம் மேற்கு
,, C. W. W. கன்னங்கரா

13. தென்மாகாணம் மத்திய பகுதி
,, F. A. ஒபயசேகரா

14.		தென்மாகாணம் தெற்கு
	,,	V. S. த. S. விக்கிரமநாயக
15.		திருக்கோணமலை மாவட்டம்
	,,	M. M. சுப்பிரமணியம்
16.		கொழும்பு வடக்கு
	,,	C. E. விக்டர் கொறியா
17.		கொழும்பு மாவட்டம்
	,,	D. B. ஜயத்திலக
18.		வடமேல் மாகாணம் மேற்கு
	,,	C. H. Z பர்ணந்து
19.		வடமேல் மாகாணம் கிழக்கு
	,,	G. E. மதுவல
20.		வடமத்திய மாகாணம்
	,,	H. R. பிரீமன்
21.		கேகாலை மாவட்டம்
	,,	A. F. மொலமுரே
22.		இரத்தினபுரி மாவட்டம்
	,,	A. H. E. மொலமுரே
23.		கொழும்புத் தமிழ்த் தொகுதி
	,,	அருணசலம் மகாதேவா

இத்தொகுதிகளை மாகாண அமைப்பில் பின்வருமாறு கணிப்பர்

1.	மேல்மாகாணத் தொகுதிகள்	— 5
2.	தென்மாகாணத் தொகுதிகள்	— 3
3.	வடமாகாணத் தொகுதிகள்	— 5
4.	கீழ்மாகாணத் தொகுதிகள்	— 2
5.	மத்திய மாகாணத் தொகுதிகள்	— 2
6.	வட மேல் மாகாணத் தொகுதிகள்	— 2
7.	வட மத்திய மாகாணத் தொகுதி	— 1
8.	ஊவாமாகாணத் தொகுதி	— 1
9.	சப்பிரகாமுவா மாகாணத் தொகுதிகள்	— 2
	மொத்தம்	— 23

நியமன அங்கத்தவர்கள்

முஸ்லிம் பிரதிநிதிகள் கௌரவ திரு:-

1. மாக்கான் மரக்கார்
2. N. H. M. அப்துல்காதர்
3. J. B. யயா

பறங்கியர் பிரதிநிதிகள் கௌரவ திரு:-

1. G. A. H. வில்லே
2. N. J. மாட்டின்

பிறர் பிரதிநிதிகள் கௌரவ திரு:-

1. I. X. பெரேரா
2. S. R. மொகமத் சுல்தான்

திருத்தப்பட்ட சட்டசபையில் இருந்த 49 அங்கத்தவருள் 37 பேர் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராவர். அவர்களுள் 29 அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாவர். இச்சட்ட சபையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு முன்னில்லாத செல்வாக்கு அதிகமாக இருந்தது. என்றாலும் அவர்களுக்கு எதிராக உத்தியோக அங்கத்தவர் 12 பேரும் நியமன அங்கத்தவர் எண்மரும் இருந்தார்கள். இலங்கை குடியேற்ற நாடாய் இருந்த போதிலும், ஆள்பதி அவர்களுக்கு வரம்பிகந்த அதிகாரம் இருந்த போதிலும், அவரை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த இச் சட்டசபையினர் தடைவலியுள்ளவராயிருந்தனர்.

சட்ட நிர்வாகசபை மந்திரிமார் சபையின் போக்குடையதாய் ஆள்பதி தலைமையில் நடைபெறுவது. அதிலே குடியேற்றச் செயலாளர், சட்டத்துறை நாயகம், மேல்மாகாண அதிபர் ஆகிய மூன்று உத்தியோகத்தரும்; சட்டசபையில் உள்ளவரான இரண்டு உத்தியோக அங்கத்தவரும், நான்கு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரும் இருந்தனர். இவர்களை ஆள்பதி அவர்களே நிர்வாகசபையில் நியமித்தாலும், அவர் அதனை இராச கட்டளையின் பேரிலேயே செய்தல் வேண்டுமென்பது சட்டமாயிருந்தது. அதில் உத்தியோகப் பற்றற்ற பிரதிகள் நால்வர் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் சிங்களவர் இருவர், தமிழர் ஒருவர், ஆங்கிலேயர் ஒருவர் என இருந்தனர்.

இக்காலத்திலேதான் வரி நிர்வாகசபை 1925 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. திரு. W. W. வுட்ஸ் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் நிலவிய சபையில் திருவாளர்கள் துரைசுவாமி, பால சிங்கம், சுப்பிரமணியம் ஆகிய பெரியார்களும் நியமிக்கப்பட்டார்கள். இலங்கை வானொலி நிலையம் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப் பட்டது. பொலிசுக்காரருக்குப் பயிற்சிக் கலாசாலையும், கொழும் பிலுள்ள இலவச நூல்நிலையமும் ஆரம்பிக்கப்பட்டன. புத்தளப் பிரதேசத்தில் புகைவண்டிப் பாதையும், அங்கொடையில் மனநோயாளருக்கு வைத்தியசாலையும், தேயிலை ஆராய்ச்சிச் சாலையும் 1926 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்டன.

சட்டசபையின் கௌரவ அங்கத்தவருக்கு 1927 ஆம் ஆண்டு முதலாகச் செலவுப்படி என்னும் அநுமதி வழங்கப்படலாயிற்று. திருக்கோணமலைப் பிரதேசப் புகைவண்டிப் பாதை அமைத்தல், இங்கிலாந்தோடு இலங்கை வயர்லெஸ் என்னும் கம்பியில்லாத் தொடர்பு அமைத்தல் என்பன இவ்வாண்டிலே நடைபெற்றன. மகாத்மா காந்தியடிகள் வாலிபர் மகாநாட்டினர் அழைப்பையேற்று இலங்கைக்குவந்து தமது சமூகத்தொண்டுகளுக்கு நிதி திரட்டினர் இலங்கைப் பெண்கள் வாக்குரிமை பெறும் நோக்கமாக மாதர் சங்கம் அமைத்துக் கிளர்ச்சி செய்வாராயினர்.

இலங்கையில் கொலைத்தண்டனை நீக்கப்படல் வேண்டும் என்னும் பிரேரணை சட்டசபையில் 1928 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. கௌரவ அக்பார் அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலை கண்டியில் அமைக்கப்படல் வேண்டுமெனப் பிரேரித்த பிரேரணை நிறைவேற்றப் பட்டது. உயர் நீதிமன்றத்துத் தீர்ப்பொன்றின் பிரகாரம் சட்ட சபை அங்கத்தவருக்குத் தனிச்சிறப்புரிமை இல்லை என்பது தீர்மானிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்துக்கு ஆறுவது நீதியரசர் நியமனமும் அநுமதிக்கப்படலாயிற்று.

ஆள்பதி அவர்களுக்கிருந்த அதிகாரங் காரணமாக அவர் இறக்குமதித் தீர்வை அதிகரித்தல் சம்பந்தமாக உறுதி செய்தமை வரம்பிகந்த முறை எனக் கருதிய உத்தியோகப் பற்றற்றவர் அத்தனை பேரும் 16-7-1929 இல் சபையை விட்டு வெளியேறினர்கள்.

ஆள்பதி மனிங் அவர்கள் இலங்கைக்கு வந்த காலத்தில் அரசியற்றிருத்தஞ் செய்வதற்குத் தமக்கு ஒத்தாசை செய்யுமாறு சேர். இராமநாதன் கேட்டபோது முடியாது என்று தலை அசைத்தார். ஆனால் சேர். இராமநாதன் நெக்குவிடாப் பாறையையும் நெக்குவிடச் செய்து விடுவதற்குச் சமார்த்தியமாக ஆள்பதி அவர்களோடு மெல்லெனப் பேசி வந்தார்கள். ஈற்றில் மனிங் இலங்கையை விட்டுப் போனபோது சொன்ன வாசகம் இலங்கையர் மனத்தை விட்டகலா வகையில் இருத்தல் வேண்டும். **"நான் இலங்கைக்கு வந்த காலத்தில் தீவிர பழமை பேணுபவனாகவே இருந்தேன். ஆனால் இன்று இலங்கையை விட்டுப் போகும்போது ஆட்சி அதிகாரத்தை இலங்கையர் கையில் ஒப்படைத்து விட்டுத் தாராள மனப்பான்மை யுள்ளவனாயே போகின்றேன்."**

ஆறரை ஆண்டுக் காலம் இலங்கையை ஆண்ட ஆள்பதி மனிங் இளைப்பாறிப் போனதும், ஆள்பதி சேர். கூகிளிபோட் 1925 ஆம் ஆண்டில் வந்தார். அவர் எங்கள் நாட்டுக்குப் புதிய

வரல்லர். முன்னர் 1907 ஆம் ஆண்டு தொடக்கம் 1913 ஆம் ஆண்டு வரையும் இலங்கையில் குடியேற்றக் காரியதரிசியாயிருந்து அநுபவம் பெற்றவர். அவர் இருபதாண்டுக் காலம் மலாயாவில் உயர்தர உத்தியோகம் வகித்து அநுபவம் பெற்றவர். அவர் மலாய் மொழியில் பல தொண்டுகள் செய்தமையோடு ஓர் அக ராதியும், ஆங்கில தண்டக்கோவையை மொழிபெயர்த்தும் மலாய் மொழிக்கு உபகரித்தார். ஆபிரிக்காவில் உள்ள காஞ நாட்டில் ஆள்பதியாகவும் சிலகாலம் இருந்த கிளிபோட் அவர்களுக்கு ஆசிய ஆபிரிக்க பிரச்சினைகள் நன்கு விளங்கின.

ஆள்பதி கிளிபோட் இராமநாதனுடன் சட்டசபையில் பல முறை மோதிக்கொண்டதுண்டு. ''கிலிபிடித்த கிளிபோட்'' என்றே இராமநாதன் ஆள்பதியைக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது. சீர்திருத்தங் கோரிய இலங்கையரின் சொல்லம்பு கிளிபோட் அவர்களை வெகுவாகத் தாக்கின. அவர் சட்டசபையை மேலுங்கொண்டு நடத்த முடியாதிருந்தார். எனவே அவர் குடியேற்ற மந்திரியாரிடம் உடனடியாகச் சட்டசபையில் திருத்தங்கள் செய்வதற்கு ஓர் ஆலோசனைச் சபையை அனுப்பி வைக்குமாறு அவசரமாக எழுதினர். தம்மை வேறெங்காவது மாற்றிவிடும்படி மந்திரியாரைக் கேட்டார். அதனால் மந்திரியார் கிளிபோட் அவர்களை மலாய்த்தீவுகளுக்கு மாற்றி விட்டார். ஆள்பதி கிளிபோட் அவர்களுக்குப்பின் சேர். ஹூபேட் ஸ்ரான்லி ஆள்பதியாக 1927 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தார். அவர் ஆபிரிக்காவில் பல உத்தியோகங்களைத் திறமையாக வகித்தவர்.

ஆள்பதி கிளிபோட் இலங்கைக்கு அரசியல் திருத்த சபை யினரை அனுப்புமாறு எழுதிய தகவுரைபைக் கண்டதும் குடியேற்ற மந்திரியாருக்கும் அவருடைய அலுவலகத்தாருக்கும் துணிவு பிறந்தது. அவர்கள் சீர்திருத்தக் குழுவொன்றை உடனடியாக அனுப்பத் தீர்மானித்தார்கள். பிரபுக்கள் சபையின் உதவித் தலைவ ராயிருந்த டொனமூர்ப்பிரபு, கேம்பிரிச் சர்வகலாசாலைத் தொகுதி யின் பிரதிநிதியாய் இருந்த சேர். யெவ்ரிபட்லர், ஸ்கொத்துலாந்துப் பிரதிநிதியாய் இருந்த கலாநிதி திறமன்சீல், கொங்கோங் நாட்டின் பழைய ஆள்பதியாய சேர். மாதியூநாதன் ஆகியோர் அவ்விசாரணைச் சபையிலிருந்தனர்.

டிவன்சயர்–மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த இச் சபையின் அமைப்பை இன்னொரு வழியிற் பார்த்தால் இதிலுள்ள 37 அங்கத்தவருள் பெரும்பான்மைச் சாகியத்தாரின் பிரதிநிதிகள் 18 பேராயும், சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் 19 பேராயும்

இருந்தனர். இப்பத்தொன்பது பேரில் ஒன்பதின்மர் தமிழராயிருந்தனர். இம்முறையினுல் ஒரு சாகியத்தார் பிறிதொரு சாகியத்தாரை அடக்கி ஒடுக்காவண்ணம் யாப்புப் பாதுகாப்பு அமைந்து இருந்தது.

அன்றி இந்த அமைப்பில் பத்து வருடகாலம் நடைபெற்ற சட்டசபையின் வைகல்களில் என்ருவது வாதப்பிரதிவாதங்களின்பின் வாக்கெடுப்பின்போது சிறுபான்மையோர் தனித்து ஒருபுறமாயும் பெரும்பான்மையோர் மறுபுறமாயும் வாக்களிக்கவில்லே என்றும் இவர்கள் பெருந்தன்மையாய் நடந்து கொண்டார்கள் என்றும் ஆள்பதி ஸ்ரான்லி அவர்கள் 1929 இல் குடியேற்ற மந்திரியாராய பஸ்வீல்ட் பிரபுவுக்குத் தமது பரிபாலன அறிக்கையில் எழுதியுள்ளார்.

சட்டசபைக்கு அலங்காரமான கட்டடம் ஒன்று இல்லாத குறை நீக்கப் பெரிய கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டது. அது கோலாகல வைபவத்திடையே ஆள்பதி அவர்களால் 29-1-1930 இல் திறந்து வைக்கப்பட்டது.

நிதிக்குழு

மனிங்-டிவன்சயர் திருத்தத்தின் பின் சட்ட சபையில் ஏற்பட்ட பெரிய பரபரப்புகளும் சொற்போர்களும் நிதிக்குழுக் கூட்டங்களிலேயே அதிகமாக நடைபெறலாயின. நாளடைவில் சட்டசபையிலும் பார்க்க வலுவுள்ள தாபனமாக அந்த நிதிக்குழு நிலவலாயிற்று. குடியேற்றக் காரியதரிசி என்னும் பிரதம செயலாளருடைய தலேமையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் சமுகத்தில் அக் கூட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கத்தின் அவசியமான அலுவல்களும் இன்றியமையாத விடயங்களும் அக் கூட்டத்திலேயே அதிகமாகப் பேசப்படலாயின. பிரதம செயலாளர் பல அலுவல்களே நிதிக் குழுவிலேயே கலந்தாலோசித்தார். சட்டநிறைவேற்று சபையில் அங்கத்தவராயிருந்த சேர். மாக்கஸ் பார்ணந்து அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டபோது, ஆள்பதி அவர்கள் 1924 ஆம் ஆண்டுக்கு முன்னர் சட்ட நிர்வாக சபையைக் கலந்தாலோசித்தே அலுவல்களேச் செய்தார் என்றும் அதற்குப் பின்னர் அவர் நிதிக் குழுவைக் கலந்தாலோசித்தே அலுவல்களேச் செய்வாராயினர் என்றும் கூறினர். எல்லா அலுவல்களிலும் நிதிக்குழுவே பிரபலிக்க முறுவதாயிற்று எனக் கூறிய பார்ணந்து அவர்கள், உதாரணமாக 1924 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் சட்ட நிர்வாக சபையில் விவாதிக்கப்படவேயில்லே என்றும், உத்தியோகப் பற்றற்ற பிரதி

நிதிகளுக்குப் படி வழங்கும் அலுவல் கூட குடியேற்றச் செயலாளரும் நிதிக்குழுவினருமே பேசிக்கொண்டார்கள் என்றும், உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தங்கள் தொகுதிகளுக்குப் பணம் ஒதுக்கும் அலுவல் கூட நிதிக்குழுக் கூட்டங்களிலேயே பேசப்பட்டது என்றும் குறிப்பிட்டார்,

சட்ட சபைப் பிரதிநிதிகளுள் ஒருவரான திரு. பிரூன்சிஸ் த. சொயிசா அவர்கள் நாட்டின் அரசியலிலும், பரிபாலனத்திலும், நிதிப்பொறுப்பிலும் சட்ட சபைக்கே அதிக பொறுப்பு இருத்தல் வேண்டும் என்று பேசினர்.

பிரதம செயலாளர் சேர். ஆதர் பிளச்சர் தலைமையில் நடை பெற்ற நிதிக்குழுக் கூட்டங்கள் வெகு கலகலப்பாக நடைபெற்றன. தினைக்களங்களுக்குப் பொறுப்பான பெரிய இயக்குநர்கள் தங்கள் அலுவல்களுக்கு நிதி ஒதுக்குமாறு கோரிய காலங்களில், அவர்களை நிதிக் குழுவிலங்கம் வகித்த உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் காரசாரமாகவும் தாறுமாறுகவும் குறுக்கு விசாரணை செய்தே பணம் ஒதுக்க அநுமதிப்பாராயினர். அங்ஙனம் குறுக்கு விசாரணைகள் செய்து முறுக்கேறிய உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் எதிர் காலத்துப் பெரிய மந்திரப் பொறுப்புகளை நிர்வகித்து நடத்தக் கூடிய ஆற்றலையும் அந்த நிதிக்குழுவின் பழக்கத்தால் பெற்றார்கள் என்பது நாளடைவில் தெரிய வந்தது.

அக்காலத்திலேதான் அரசாங்கத்தைக் கொண்டு நடத்து வதற்கு உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் இன்றியமையாதவர் களானார்கள் என்றும், அவர்கள் என்றுவது ஆட்சியின் போக்குக்கு முட்டுக்கட்டையாக இருக்கவில்லை என்றும், அரியாலை கனகரத்தினம் அவர்கள் அழகாகப் பேசியுள்ளார்கள். உத்தியோகப் பற்றற்றவர் பெரும்பான்மையினராக இருந்த போதிலும் அரசாங்கத்தை அள்ளி வைக்கக் கூடிய செயல்களில் அவர்கள் என்றுவது இறங்கத் துணிய வில்லை என்றும், அவ்வாறு அவர்கள் நடந்து கொண்டமை அவர்கள் தம்பொருந் தன்மையைக் காட்டுவதுமாகும் என்றும் டெயிலி நியூஸ் பத்திரிகை 27-8-26 இல் பாராட்டி எழுதியது.

சட்டசபையில் அங்கத்துவம் வகித்த தமிழரின் அபிமானத் தலைவர்களுள் ஒருவரான H. A. P. சந்திரசேகரமவர்கள் டொனமூர் குழுவினர் முன் வாக்குமூலமளிக்கும்போது, "இன்றைய சட்டசபை அங்கத்தவர்களுள் சர்வகலாசாலை அலுவல் சம்பந்தமாக உள்ள ஒரே ஒரு அபிப்பிராய பேதந் தவிர வேறு எந்தவிதமான அபிப்பிராய பேதமு

மின்றி ஒற்றுமையுள்ள ஒரு குடும்பம்போல இருக்கிறார்கள்'' என்று கூறினர். யாழ்ப்பாண மகாசபையின் மதிப்புக்குரிய தலைவரான வைத்திலிங்கம் துரைச்சுவாமி அவர்களும், ''வகுப்புவாதம் இன்றியமையாத குழப்பமாய்விட்டது அதனை மேலும் நிலைக்க விடாதிருத்தல் எங்கள் கடன்'' என்று கூறியுள்ளார்.

திருத்தப்பட்ட சட்டசபை 1924 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டுவரை ஏழு வருடங்கள் நிலவிற்று. அத்திருத்தத்தை நாட்டு மக்கள் விரும்பாதவாறு அரசாங்கமும் விரும்பவில்லை. எனவே 1927 ஆம் ஆண்டில் ஆள்பதி கிளிபோட் அவர்கள் ஆலோசனையின் வண்ணமே குடியேற்ற மந்திரியார் டொனமூர் விசாரணைச் சபையினரை இலங்கைக்கு அனுப்பினர்.

அத்தியாயம் 26

சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்கள்

சேர். அருணாசலம் அவர்களைப் போலவே சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்களும் இலங்கையின் சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்டார். யேம்ஸ் பீரிஸ் கேம்பிரிச் சர்வகலாசாலையில் கல்வி கற்ற காலத்தில், அதற்கு முன்னர் ஆசிய மக்கள் எவரும் வகிக்காத மகத்துவமான கேம்பிரிச் மாணவர் சங்கத்தின் தலைமைப் பதவியை வகித்து ஆசியாக் கண்டத்துக்கே அரும் பெரும் சிறப்பைத் தேடிக்கொண்டார்.

அவர் கேம்பிரிச் சர்வகலாசாலையில் விற்பத்திமானாகி, மனதத்துவ சாத்திரத்திலும் சட்டத்துறையிலும் முதலாம் பிரிவில் கீர்த்தியுடன் சித்திபெற்று இலங்கைக்கு மீண்டார். யேம்ஸ் பீரிஸ் இலங்கைக்கு மீண்டதும் உத்தியோகங்களில் ஈடுபடாது தேச சேவையில் உழைப்பாராயினர். அவர் இலங்கை பூரண சுதந்திரம் பெறல் வேண்டும் என்று கேட்டதில்லை. அவர் பிரித்தானியப் பேரரசுவாதி. பிரித்தானியப் பேரரசில் இலங்கை சுயவாட்சி பெற்றோ அல்லது பொறுப்பாட்சி பெற்றோ இருந்தாற் போதுமானது எனக் கிளர்ச்சி செய்தார். டொனமூர்த் திருத்த சபையினர் முன் வாக்குமூலம் அளித்த போதும் அவர் இலங்கை சுயவாட்சி நடத்துவதற்குப் பக்குவ மடையவில்லை என்றே கூறியுள்ளார்.

இலங்கையின் சுதந்திரக் கிளர்ச்சியின்போது பீரிஸ் தமது சகபாடிகளைச் சுதந்திரப் பாதையில் வழி நடத்திச் சென்ற மோசேஸ் ஆவர் என பண்டாரநாயக உவமை கூறியுள்ளார். வழிநடத்தும் தலைமைக் குணம் பீரிஸ் அவர்களிடம் பிறப்பிலேயே அமைந்ததென்பர். முன்னொருகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த பீரிஸ் குடும்பத்திலே 1856 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆந் தேதி பீரிஸ் பிறந்தார். பீரிஸ் பிறந்த காலத்தின் முன்பின்னாக அவருடைய குடும்பம் வறுமைப்பட்டதால், அவர் பாடசாலைக்கு நடந்தே போனார். அவர் ரோயல் கல்லூரியிலே கல்வி கற்ற காலத்திலே பேராசிரியர் ரொட் என்பாரின் மதிப்புக்குரிய மாணவராயிருந்தார் என்பர். விவேகியாய பீரிஸ் கவனமாகப் படித்தாராகையால் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிச் சர்வகலாசாலையில் கல்விகற்க உதவும் உபகாரச் சம்பளப் பரிசையும் அவர் பெற்றார்.

வெற்றியில் மனக்களிப்பும் தோல்வியில் மனக்கொதிப்பும் இல்லாத பீரிஸ் 1882 ஆம் ஆண்டில் சீமை அப்புக்காத்தாகச் சித்தியெய்தி இலங்கைக்கு மீண்ட காலத்தில் அவரைப் பெரிய இடத்துச்

சம்பந்தம் ஒன்று காத்திருந்தது. வட்சாதிபதியான பெண்ணை விவாகஞ் செய்த பீரிஸ் தோட்டத்துறையில் ஈடுபட்டுக் கொண்டே சட்டத்துறையையும் பார்க்க எண்ணினார். அவர் சீமையில் இருந்த காலத்தில் சட்டத்துறையின் அதி கௌரவமான மக்மோகன் மாணவன் என்ற தகுதியும் கிடைத்தது.

அவர் அரசியல் வாழ்வில் ஈடுபடுவதற்கு முன் கொழும்பு மாநகரசபையின் கொம்பனிப்பிட்டித் தொகுதியின் அங்கத்தவராய் 1898 ஆம் ஆண்டில் தெரியப்பட்டார். அவருடைய பரோபகாரப் போக்கையும் செயற்றிறனையும் சேலை மனப்பான்மையையும் ஆற்றலையும் அறிவையும் அயரா உழைப்பையுங்கண்ட சிங்களவர் அவரைச் சுற்றி வட்டமிட்டனர். தமது முன்னேற்றத்துக்கு ஏற்ற வழி காட்டி அவரே என அவர்கள் கண்டனர் சட்டசபையில் அவரை நியமிப்பதற்கு ஆள்பதிகூட நினைக்காத காலம் அது.

திரு H. J. C பெரேரா குடியேற்ற நாட்டு மந்திரியாரிடம் அரசியற்றிருத்தங் கோரிப்போன காலத்தில் குடியேற்ற மந்திரியாரின் உதவி மந்திரியாயிருந்த சீலி என்பார் யேம்ஸ் பீரிசைத் தமது அபிப்பிராயத்தையும் அங்கே வந்து கூறுமாறு 1909 ஆம் ஆண்டில் அழைத்திருந்தார். அப்பிரதியாளர் குழுவில் திரு. E. W. பெரேரா அவர்களும் போனார்கள். அவர்கள் குடியேற்ற மந்திரியாரிடம் திருத்தங் கோரிச் சமர்ப்பித்த திட்டம் பீரிஸ் மனோவன்மையாலேயே உருவானதென்றும், படித்த இலங்கையர் பிரதிநிதித்துவமும் படித்தவருக்கு வாக்குரிமையும் பெற்ற 1910 ஆம் ஆண்டின் முதல் வெற்றி பீரிசின் கன்னிப்போர் என்றும் அரசியற் பண்டிதர் கருதுகிறார்கள். இலங்கை அரசியற் பிணக்குகளையும் பிச்சினைகளையும் தீர்த்துவைப்பதில் எங்களுக்கெல்லாம் இன்றியமையாத உதவியைச் செய்தவர் பீரிஸ் அவர்களே என E W பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

சிங்களவர்-முஸ்லிம்கள் கலகத்தின் காரணமாக ஆங்கிலேயர் திணித்த இராணுவ ஆட்சியின்பின் நடைபெற்ற முதலாவது பகிரங்கக் கூட்டத்திலே, பீரிஸ் தலைமை தாங்கி அரசியல் வாழ்வில் வெளிவெளியாகப் பிரவேசித்தார். தெறுபொருட் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையால் இராணுவத்தினரின் அட்டூழியங்களைப்பற்றி இலங்கையில் மேலும் ஏதுஞ்செய்ய இயலாமையால், இலங்கையர் சட்ட சபையிற்றிருத்தங் கோரி மறுபடியும் 1920 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குப்போக நேர்ந்தது. அதில் பீரிஸ் அவர்களும் உடன் சென்று மில்னர் பிரபுவைக் கண்டார். அருணாசலத்தின் பின், யேம்ஸ் பீரிஸ் அவர்களே தேசிய காங்கிரஸ் தலைவராய்த் தெரியப்பட்டா

ராதலால் அவர் மில்னரிடம் தலைநிமிர்ந்து பேசக் கூடிய பொறுப்பும் இருந்தது. மனிங் அவர்களின் பிற்போக்கான திருத்தங்களைத் தேசிய காங்கிரஸ்காரர் நிராகரிப்பர் எனவே பீரிஸ் கூறினர்.

மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த 1921 ஆம் ஆண்டுச் சட்டசபையில் பீரிஸ் போட்டியின்றித் தெரியப்பட்டார். அச்சட்ட சபைக் காலத்திலே உத்தியோகத்தரின் சம்பள உயர்வுக்காக மேலதிக வரிகள் பிரேரிக்கப்பட்டபோது உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் வெளியேறியபோது அவர்களை வழிநடத்தியவர் யேம்ஸ் பீரிஸ் அவர்களே. அங்ஙனம் உத்தியோகப் பற்றற்றவர் வெளியேறியபோது, உத்தியோக அங்கத்தவர் மாத்திரம் சபையில் இருந்தால் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்படும் என்று கண்ட புத்திசாலியான இராமநாதன் வெளியேறுமல் அங்கிருந்து பிரேரணைகளுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துப் பதிவுசெய்து கொண்டார் என்பது குறிப்பிடத் தகுந்தது

டிவன்சயர்—மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்ட சபையிலே நாற்பதுக்கு மேற்பட்ட அங்கத்தவர் மத்தியிலே நடுநாயகமாய சபாநாயகராய் பீரிஸ் இருக்கும் வாய்ப்பை இராமநாதனின் உதவியாற் பெற்றார். முன்னர் ஆள்பதிகள் சட்டசபைக்குத் தலைமை தாங்கிய காலங்களில் சபை சிறிதாகவே இருந்தது.

சட்டசபை அங்கத்தவரின் நன்மதிப்பை பெற்ற பீரிஸ் அவர்களைப் பிரித்தானிய அரசாங்கம் உரிய முறையிற் கௌரவித்து நைற்பட்டத்தை நல்கியது. சேர். யேம்ஸ் பீரிஸ் படிப்பில்லாதவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதைத் தீவிரமாக எதிர்த்தார் எனினும். அவர் இலங்கையில் கல்வி அபிவிருத்திக்காக அரிய பாடுபட்டுள்ளார். இலங்கைச் சர்வகலாசாலை நிறுவப்பட வேண்டுமென உழைத்த பெரியார்களுள் அவரும் ஒருவர். அவர் இருபதாண்டுக் காலமாக இலங்கைக்காக அரும்பணி புரிந்த பெரியார். அவர் சமூகசேவைத் துறையில் அதிகம் உழைத்தவர். அவருடைய அயரா உழைப்பினாலேயே இலங்கைச் சமூக சேவைச் சங்கம் 1915 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும்.

பீரிஸ் தம்முடைய மனச்சாட்சிக்குச் சரியானதெனத் தாம் கண்ட அலுவல்களையே தீவிரமாகச் செய்து நிறைவேற்றுஞ் சுபாவம் உள்ளவர். பௌத்த குடும்பத்திலே பிறந்து கிறித்தவராய் மதம் மாறி வாழ்ந்த அவரைப் பௌத்த மதத்தினரின் தொடர்பை நீக்கு மாறும், அதற்காகப் பெரிய அலுவல்களைச் செய்து தருவதாகவும் ஆள்பதி சாமேஸ் கேட்டபோது, பீரிஸ் ஆள்பதியின் லஞ்சத்தை அலட்சியஞ் செய்து தம் கொள்கையினின்றும் வழுவாதொழுகினர்.

இலங்கைச் சட்டசபை வரலாற்றுச் சுருக்கம் எழுதிய மெயின் மன் என்ற அப்புக்காத்தர் சேர். யேம்ஸ் பீரீஸ் அவர்களைத் **தலை சிறந்த சிங்களப் பெரியார் என்றும் அவர் அரசியலை முறையாகக்கற்ற அரசியல்வாதி** என்றும் அவர் பெலத்துச் சத்தமிட்டுப் பேசும் பழக்கமில்லாதவர் என்றும் சிறந்த அறிவாளியாய அவர் முன்னமேயே சட்ட சபையில் நியமனம்பெறுதமை இலங்கையர் செய்த தவக்குறை என்றும் எழுதியுள்ளார்.

பீரிஸ் 1908 ஆம் ஆண்டில் குடியேற்ற உதவி மந்திரியாருக்கு இலங்கை அரசியல் நிலைபற்றி ஒரு நீண்ட நினைவுக் கடிதம் எழுதினர். ''ஐய! ஆங்கிலேயர் 1833 இல் எமக்களித்த சட்டசபையில் நாளது வரையில் சென்ற 75 ஆண்டுகளாக ஏதாவது அடிப்படை மாற்றம் ஒன்றையும் செய்யாது இருக்கிறார்கள். இக்காலவெல்லையில் அவர்கள் செய்த ஒரே ஒரு சின்னஞ்சிறிய மாற்றம் கண்டிச் சிங்களவருக்கும் இலங்கைச் சோனகருக்கும் ஒவ்வொரு பிரதிநிதியைச் சட்டசபையில் சேர்க்க அனுமதித்தமையாகும். இக்காலவெல்லையில் இலங்கையின் குடிசனப் பெருக்கம் நான்கு பங்காயும், வருமானம் ஒன்பது பங்காயும் அதிகரித்துள்ளன. அவற்றுக்குத் தகுந்தாற்போலச் சட்டசபையில் வியக்கத்தக்க மாற்றம் ஏற்படாமை விசனிக்கத்தக்கது. எனவே இலங்கைச் சட்டசபையில் உடனடியாக இரண்டு மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். இனவாரியாகப் பிரதிநிதிகளை நியமிக்கும் முறை முற்றுக நீக்கப்பட்டு, ஆள்புலவாரியாகத் தேர்தல் முறையில் பிரதிநிதிகள் தெரியப்படும் முறை நடைமுறைபில் வருதல் வேண்டும். நாட்டு அரசாங்கத்தில் நாட்டு மக்களுக்கு அதிக பங்கு கொடுத்தல் வேண்டும். மக்கள் தங்கள் உரிமையைப் பெறுவதற்குப் புரட்சி வழிகளை நாடும் வரை அரசியற் பண்டிதர்கள் காத்திருத்தல் புத்திசாலித்தனமல்ல.'' என்பது அவர் கடிதத்தின் சுருக்கமாகும்.

இக்காலத்திலேதான் குடியேற்ற மந்திரியாருக்கு இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் சீர்திருத்தங்கோரிய நினைவேடுகள் சமர்ப்பிக்கப்படலாயின. இலங்கைத் தேசிய சங்கம், சிலாபத்துச் சங்கம், கரைநாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் என்பன நினைவேடுகளைச் சமர்ப்பித்துத் திருத்தங்கோரின. இன்னும் இலங்கையில் உள்ள 800 பிரபலஸ்தர்கள் பெரியதொரு நினைவேட்டுக்குக் கையொப்பமிட்டும்அனுப்பினர்கள். இக்காலத்தில் இங்கிலாந்தில் இருந்த D. R. விஜயவர்த்தனை என்ற பெரியார் இலங்கையிலிருந்து சென்ற பிரதியாளர் குழுவினரைக் குடியேற்ற உதவி மந்திரியாரோடு கலந்து பேச

வாய்ப்பைத் தேடிக் கொடுத்து உதவி செய்தார். இத்தகைய கிளர்ச்சியின் பயனுகவே சட்டசபையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுப் படித்த இலங்கையர்களின் பிரதிநிதியாய் இராமநாதன் அவர்கள் தெரியப் பெற்றார் என்பர்.

சேர். அருணுசலம் அவர்களைப் போலவே சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்களும் ஓரளவுக்குப் பழமை பேணுபவராய் விளங்கினர். என்றாலும் ஆங்கிலேயருடைய குடியேற்ற அரசாங்க அமைப்பை இருவரும் விரும்பவில்லை. அருணுசலம் அவர்களுக்குப் பின்னர் பீரிஸ் அவர்களே இலங்கைத் தேசிய மகாசபையின் தலைவராய்த் தெரியப் பட்டார். அத்தலைமைப் பதவியும் அருணுசலம் அவர்களுக்குப்பின் ஒருவகையில் தகுதிவாய்ந்தவருக்கே கொடுக்கப்பட்டது. பீரிஸ் அவர்களுக்குப்பின் டொன்பாரன் யத்திலக அவர்களும், அவர்களுக்குப் பின் திரு. D. S. சேனநாயக அவர்களும் தலைவராயினர் என்பதும் கவனிக்கத்தக்கது.

பீரிஸ் சமயப் பற்று, நாட்டுப் பற்று, மதுவிலக்கில் ஆர்வம், குடியேற்ற அரசாங்கத்தை நீக்குவதில் ஊக்கம், பெருந்தன்மை ஆகிய நல்லியல்புகள் நிறைந்த நல்ல மனிதன் என்பர்.

சட்டசபையில் திருத்தங்கள் ஏற்படல் வேண்டும் என்ற கிளர்ச்சி சட்டசபைக்கு வெளியேயிருந்துதான் உண்டானது. சட்டசபையில் அக்காலத்தில் அங்கம் வகிக்காத அருணுசலமும் பீரிஸ் அவர்களும் சட்டசபைக்கு வெளியே இருந்துதான் தேசிய மகாசபையை உருவாக்கி அதன்மூலம் சீர்திருத்தங் கோரினர்கள். அக்காலத்தில் உத்தியோக அங்கத்தவரின் மேலதிக செல்வாக்கும், ஆள்பதியின் தலைமை வகித்தலும் சட்டசபையில் களிநடம் புரிந்தமையால் உத்தியோகப் பற்றற்ற இலங்கையர் சீர்திருத்தங்கோருவது இயலாத காரியமாகவே இருந்தது. அன்றி உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளுள் பெரும்பாலானேர் ஆள்பதியினுல் நியமிக்கப் பெற்றார்கள் எனவே அன்னரும் ஆள்பதியின் சின்னவிரல் அசைவில் அவருக்கே ஊழியராயிருந்தார்கள். ஆகவே அக்காலத்துச் சட்டசபை வைகல்கள் ஆள்பதியின் அதிகாரத்துக்கு ''அப்படியே யாகுக'' என்று ததாஸ்துக் கூறுவதற்கும், வரவு செலவுத்திட்டத்தைப் பேசுவதற்கும் தங்குறைகளை எடுத்துப் பேசுவதற்குமே இடமளித்தன. பிரிஸ் D. R. விஜயவர்த்தனுவின் உதவியுடன் சமூக சேவைச் சங்கத்தை 1914 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இலங்கைவாழ் மக்களின் வாசற்படியில் கல்வி வசதியைக் கொண்டு வருவதற்காக ஒத்துழைத்தார்கள்.

பீரிஸ் அவர்களின் அயரா உழைப்பும் உதவியும் அருணாசலத்துக்கு நிரம்பக் கிடைத்தது. அருணாசலம் தேசிய மகாசபையின் முதற்றலைவராய்த் தலைமையுரையை நிகழ்த்தியபின் அரசியற்றிருத்தங்கோரி இங்கிலாந்துக்குப் போன காலத்தில் அன்னருக்கு உதவியாகப் பீரிஸ் உடன் சென்றார்கள்.

மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அரசாங்கம் இலங்கை அரசியலமைப்பில் முதன் முதலாக ஆள்புலவாரியாகப் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்துவதாக 28-7-1920 இல் பொதுமக்கள் சபையில் அறிவித்தபோது முதன் முதலாகச் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தொகை உத்தியோக அங்கத்தவர் தொகையிலும் பார்க்க அதிகமாயிருக்கும் என்றும் விளக்கினர். ஆனால் ஆள்பதியின் அதிகாரம் அத்துமீறிப் பிரயோகிப்பதற்கும் அத்திட்டத்தில் இடம் இருந்தது. அதனை இலங்கைத் தேசிய மகாசபையினர் சிறிதும் விரும்பவில்லை. எனவே தேசியமகாசபையினர் 1920ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் ஒரு விசேட கூட்டத்தைக் கூட்டித் தமக்குப் பிற்போக்கானதும், உபயோகமற்றதுமான அத்திட்டம் வேண்டத்தக்கதன்று எனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

சட்டசபையின் அதிகாரம் மேலும் அதிகரிக்கவேண்டிய சமயத்தில் குறைவதையும், ஆள்பதியின் செல்வாக்கு குறையவேண்டிய சமயத்தில் அதிகரித்தலையும், கலந்துரையாடல் இகலாட்டுகளைக் கட்டுப்படுத்துதலையும், சட்டநிர்வாகத்துறை கட்டுப்படுத்தப்படுவதையும், மக்கள் பிரதிநிதிகளின் மேல் ஏளனமான தடைகள் விதிக்கப்படுவதையும், இலங்கைவாழ் பொதுமக்கள் இனவாரியாகப் பிரிக்கப்படுவதையும், பொறுப்பாட்சியின் அத்திபாரங்கூட அமையாத அந்தத் திருத்தத்தையும் தேசிய மகாநாட்டினர் அறவே வெறுத்தனர்–நிராகரித்தனர், ஒத்துழைக்க மறுத்தனர்.

இந்த விசேட கூட்டத்துக்குத் தேசிய மகாசபையின் அபிமானத் தலைவரான அருணாசலம் தலைமை தாங்கவில்லை. அன்னரிடத்தில் யேம்ஸ் பீரிஸ் தலைமை தாங்குவாராயினர். யேம்ஸ் பீரிஸ் தலைமையைப்பற்றி அருணாசலம் வரவேற்புப் பேசும்போது யேம்ஸ் பீரிசின் நல்லியல்புகளையும் திறமைகளையுப் பின்வருமாறு கூறினர். ''யேம்ஸ் பீரிஸ் அவர்களுடைய முதிர்ந்த அநுபவம், சிறந்த பண்பாடு. அசையாத நடுநிலைமை, உயர்ந்த குணச்சிறப்பு ஆகியவற்றின் மூச்சுப்படாமல் இலங்கையில் எந்தப் பகிரங்க இயக்கமும் இருக்கவில்லை. அவர்கள் ஓர் ஒப்பற்ற தலைவர். இராச விசுவாசமும், தேசாபிமானமும், பொதுநல சேவைப்பண்பும்,

கலந்துரையாடிக் காரியங்களை நிர்ணயிக்கும் தாராளமான மன விசாலமும் உள்ள பெரியார் யேம்ஸ் பீரிஸ். அவர் இலங்கை வாழ் மக்களின் நன்மதிப்பை நிரம்பப் பெற்றுள்ளார். இத்தகைய விற்பத்திமானைப் விளங்கும் இப்பெரியாரை இலங்கை அரசாங்கமோ, இலங்கைச் சட்டசபையோ உரிய இடம் அளித்துப் போற்றிக் கௌரவிக்காதிருப்பது மெத்த விசனிக்கத்தக்கதாகும்''

இங்ஙனம் பேசிய அருணாசலம் இதுகாறும் பீரிஸ் அவர்களோடு தோளோடு தோளாக நின்று சேவை செய்த பெற்றியையும் மறந்து தேசிய மகாசபையைவிட்டு வெளியேறிவிட்டார். அத்தோடு ஆள்பதி அவர்களைக்கண்டு சட்டசபைத் திருத்தங்களைப் பற்றிக் கலந்துரையாட நியமிக்கப்பட்ட பேராட் குழுவில் ஒருவராய் இருப்பவும் அருணாசலம் மறுத்துவிட்டார். அது நிற்க.

ஆள்பதி அவர்களைக் கண்டுபேச யேம்ஸ் பீரிஸ், E. J. சமரவிக்கிரம, D. B. யயத்திலக, E W. யயவர்த்தன, G. A. வில்லி ஆகிய பெரியார்கள் நியமிக்கப் பெற்றார்கள். தேசிய காங்கிரஸ் குறிப்பிட்ட வண்ணம் கூடிய விரைவில் திருத்தங்கள் செய்ய உதவுவதாக ஆள்பதி அவர்கள் வாக்களித்ததும் பேச்சு மூச்சின்றி இப்பேராட் குழுவினர் புதிய திருத்தத்தை ஏற்றுக் கொண்டனர். ஆள்பதியின் விரல் அசைய அவருக்கே ஆட்பட்டுத் தொண்டு செய்ய உடன் பட்டனர்.

பீரிஸ் கொழும்பு நகரத் தொகுதிக்குப் பிரதிநிதியாய்த் தெரியப் பெற்றுச் சட்டசபைக்குள் இருந்து கொண்டே அதில் திருத்தங் கோரினர். அவர் தேசிய மகாசபையின் தலைவர் பதவியை விலகல் செய்ததும் அதற்கு H. J. C. பெரேரா தலைவராய்த் தெரியப் பெற்றார். பொதுசன நன்மையின் பொருட்டுத் தம்மையும் அர்ப்பணித்துத் தியாகஞ் செய்த பெரியார்களுள் சேர். யேம்ஸ் பீரிஸ் அவர்களும் ஒருவர். அவர் விரும்பியிருந்தால் சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்து நீதிபதியாகிச் சுகபோகங்களுடன் இளைப்பாறி யாவரும் மதிக்க வாழ்ந்திருக்கலாம். ஆனால் பொது சனங்களுக்காக வாழ்தலே தம் முடைய நோக்கம் என அவர் உறுதி கொண்டு அங்ஙனமே வாழ்ந்தார். அமைதியும் சாந்தமும் நிரம்பிய அவருடைய வாழ்க்கைப் போக்கில் அவருக்குப் பகைவரோ எதிரிகளோ இருந்ததில்லை. நயமாகப் பேசும் சுபாவமுள்ள அவர் என்றேனும் பொறுப்பற்ற முறையில் பயனில்லாத வெறுஞ்சொல் பேசியதும், விடயத்தை விலகிப் பேசியதுங் கிடையாது என்று அவர் சகபாடிகள் கூறுவர்.

அவர் நாட்டின் பொதுமக்களுக்கு அரசியல் அமைப்பில் போதிய பங்கு வழங்குதல் வேண்டும் என்றும், அவர்கள் பல வழிகளில் முன்னேற வேண்டும் என்றும் உழைத்தார்.

அவர் சட்ட சபையில் உத்தியோக அங்கத்தவரோடும், தம் முடன் அரசியற் கொள்கையளவில் மாறுபட்டவரோடும் பெருந் தன்மையாகவே நடந்தார். குடியேற்ற நாட்டு உதவி மந்திரியாராய ஒம்சிகோர் என்ற ஆங்கிலேயருடன் லண்டனில் அவர் கலந்துபேசிய முறையை ஆங்கிலேயர் மெச்சினர். மேல் மாகாணத் தொகுதியில் மூன்று பிரதிநிதிகளுக்குத் தொகுதி பிரித்தபோது அதில் ஒரு தொகுதியைத் தமிழர் தொகுதியாக்குதல் வேண்டும் எனத் தமிழர் கருதினர் ஆனால் பீரிஸ் அவர்கள் அது தமிழர் தொகுதி எனவரையறை செய்யப் படாமலே சேர். அருணாசலம் அவர்களுக்கு அவர் விரும்பிய எந்தத் தொகுதியிலும் போட்டியின்றிப் பிரதிநிதித்துவம் வழங்க ஆயத்த மாக இருப்பதாகக் கூறினர். ஆனால் அருணாசலம் அவர்கள் பிரமாணம் பிரமாணமாயிருத்தல் வேண்டும் எனக் கூறி மெதுவாக விலகி விட்டார். சில சிங்களப் பெரியார்கள் அருணாசலத்தின் தலைக்கு மேலாகக் கைகாட்டித் தங் காரியம் பார்த்துக் கொண்டனர்.

பீரிஸ் கொழும்புத் தொகுதியை சேர். அருணாசலம் அவர்களுக்கு விட்டுக்கொடுத்துச் சிங்களத் தொகுதிகளில் ஒன்றில் வேட்பாளராய் நின்றிருப்பார். அதுவும் இல்லாவிட்டால் விளைபொருள் சங்கத்தின் பிரதிநிதியாகவேனும் அவர் அங்கத்துவம் பெற்றிருப்பார். அவரைக் கொழும்புத் தொகுதியில் கண்டிப்பாக நிற்குமாறு வற்புறுத்திய பெரியார்கள் F. R. சேனநாயக அவர்களும் D. S. சேனநாயக அவர்களும் என நாளடைவில் தெரிய வந்தது.

முன்னர் கொழும்புத் தமிழருக்கென ஒரு தொகுதியை அமைப்பதற்கு அருணாசலம் அவர்கள் விரும்பியபோது அது கைகூடவில்லை. ஆனால் அவர் இறந்த அதே ஆண்டில் அவருடைய மைந்தன் மகாதேவா அத்தொகுதியில் தெரியப் பெற வாய்ப்பும் ஏற்படலாயிற்று. இந்த வாய்ப்பு இராமநாதன் அவர்களுடைய முயற்சியால் ஏற்பட்டது. இராமநாதனவர்கள் குடியேற்ற மந்திரியார் டிவன்சயர் பிரபு அவர்களைக்கொண்டு இத்திருத்தத்தைச் செய்வித்தார். குடியேற்ற மந்திரியாரும் ஒன்றுக்கு இரண்டு கொடுத்தே சிங்களவரைத் திருப்திப்படுத்தினர். கொழும்புத் தமிழர் தொகுதியைத் தமிழருக்கு வசுத்தமைக்காகச் சிங்களவருக்கு மேலதிகமாக இரண்டு தொகுதிகளை அவர் வரைய அனுமதித்தார்.

கோல்புறூக் திருத்தத்தின் பயனுய் 1833 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சட்டசபையில் அன்று தொடக்கம் 1923 ஆம் ஆண்டுவரை 90 ஆண்டுகளாய் ஆள்பதி அவர்களே சட்டசபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி வந்தார்கள். ஆனல் 1923 ஆம் ஆண்டில் ஏற்பட்ட டிவன்சயர் மனிங் திருத்தத்தின் பயனுய் ஏற் பட்ட மாறுதல்களுள் ஒன்று சட்டசபைக் கூட்டங்களுக்குச் சபைப் பிரதிநிதியொருவர் தலைமை தாங்கலாம் என்பது. சம்பிரதாயப்படி ஆள்பதி அவர்களே தலைவராய் அமைந்தபோதிலும் உப தலைவர் என்றொரு பதவியில் சபை அங்கத்தவர் ஒருவர் சபைக் கூட்டங் களுக்குத் தலைமை தாங்கலாம் என விதிக்கப்பட்டது.

சட்டசபைத் தலைவராய் இருக்கக் கூடியவர் இராமநாதனை விட வேறு யார்? ஆள்பதி அவர்களும் சட்டசபை அங்கத்தவர் அனைவரும் இராமநாதன் அவர்கள் தலைமை தாங்குவதையே விரும் பினர். ஆனல் இராமநாதன் அவர்கள் பீரிஸ் அவர்கள் தலைவராகத் தெரியப்படுவதையே விரும்பினர் அன்றித் தலைவர் தெரிவு ஏக மனதாக இருத்தல் வேண்டும் எனவும் விரும்பினர். அதன்படி இராமநாதன் அவர்கள் வகுத்த வழியிலே ஆள்பதி அவர்களும் நடந்தார்கள். திரு. பீரிஸ் அவர்களை திரு. E W. பெரேரா முன் மொழிய திரு. கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம் பின்மொழியத் தலைவர் தெரிவு நல்லெண்ணத்தோடு ஏகமனதாக நிறைவேறிற்று. பீரிஸ் அவர்களும் தலைமைப் பீடத்தைத் தகுதியோடு அலங்கரித்தார்கள். இராமநாதனின் பெருந்தன்மையை ஆள்பதி முதலாக அனைவரும் பாராட்டினர். அது இராமநாதனின் தியாகம் எனவே அவர்கள் கூறினர்.

பீரிஸ் சட்டசபைத் தலைவரானதும், டொன்பாரன் யயத்திலக உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் முதல்வராய்த் தெரியப் பட்டுச் சபைமுதல்வராய்க் கடமையாற்றினர். பீரிஸ் சட்டசபை யில் தலைமை வகித்தபோதிலும், அவர் இக்காலத்து வாசகர்போல இருக்கவில்லை. அவர் தலைமை தாங்கிக்கொண்டே எந்த அலுவலி லும் தீவிரமாகக் கலந்து பேசக்கூடிய வாய்ப்பு இருந்தது. அவர் சட்டசபையிலமர்ந்திருந்த உத்தியோக அங்கத்தவரையும் உத்தி யோகப் பற்றற்ற அங்கத்தவரையும் கண்ணியமாகவே நடத்தினர் என்பர்.

பீரிஸ் 5-5-1930 இல் இறந்தபோது நல்ல மனிதன் ஒருவர் இறந்து விட்டார் என்றே பத்திரிகைகள் அநுதாபந் தெரிவித்தன. லண்டன் ரைம்ஸ் என்னும் பத்திரிகை அவரின் பெருமையை **''இலங்கையில் மிதவாதத் தேசியப் பெரியார்''** என்றும் **''தங்கமான மனிதன்''** என்றும் குறிப்பிட்டது.

பீரிஸ் கொழும்பு மாநகரசபையில் 10 ஆண்டுகளும் இலங்கைச் சட்டசபையில் 9 ஆண்டுகளும் அரும்பணியாற்றியுள்ளார் அவர் இறந்தபின் சட்டசபையின் உபதலைவராய் டொன்பாரன் யயத்திலக தெரியப்பட்டார்கள்.

டொன்பாரன் யயத்திலக வயது சென்ற பின்னரே மேற் படிப்புப் படித்தாராயினும், சிங்கள பௌத்த கலாசாரத்துறையில் அதிக பாண்டித்தியமுள்ளவராய்ப் பிக்குகளாலும் பொதுமக்களாலும் நன்கு மதிக்கப்பட்டார். அவர் பௌத்த வாலிப சங்கத்தின் தலைவராயும், இராசாங்க ஆசிய சங்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவராயும் இருந்து பணி செய்தவர். சிங்களவரின் தினமின பத்திரிகையில் காலத்துக்குக் காலம் அரிய கட்டுரைகள் எழுதி அதன் வளர்ச்சிக்குக் காரணராயிருந்தவர்.

அத்தியாயம் 27

டொனமூர் யாப்புத் திருத்தம்

டிவன்சயர்-மனிங் திருத்தத்தின் பயனாக 1924 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட சட்ட சபையில் இலங்கையர் 90 ஆண்டுகளாகக் கேட்டு வந்த கோரிக்கைகள் ஓரளவுக்கு நிறைவு செய்யப்பட்டன. இலங்கையர் அது காறும் காலந்தோறும் கேட்டுவந்தவை:

1. சட்ட சபையில் உத்தியோக அங்கத்தவரிலும் பார்க்க உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் அதிகமாக இருத்தல்.
2. பிரதிநிதிகள் ஆள்பதியால் நியமனம் பெறுமல் மக்களால் தெரியப்படுதல்.
3. பிரதிநிதிகள் வகுப்புவாரியாகவோ இன அடிப்படையிலோ தெரியப்படாமல் ஆள்புல அமைப்பில் தெரியப்படுதல்.
4. சட்ட நிறைவேற்று சபையில் உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப் பற்றற்றவரும் இடம் பெறுதல்.
5. சட்டசபைக் கூட்டங்களுக்கு ஆள்பதி தலைமை தாங்காமல் சபையில் உள்ள அங்கத்தவர் ஒருவரே தலைவராகத் தெரியப்படுதல்.
6. வரவு செலவு விபரத்தில் நிதி அலுவல்களை இலங்கையர் பிரதிநிதிகளும் அறிந்திருத்தல்.
7. ஆள்பதியின் வரம்பிகந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, அவர் சட்ட சபைக்குக் கட்டுப்பட்டவராய் இருத்தல்.
8. சட்டசபை அங்கத்தவர் மக்களின் தெரியப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் அதிகாரமும் பொறுப்பும் உடையவராயிருத்தல்

இக்கோரிக்கைகளிற் பெரும்பாலானவை காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டு ஈற்றில் 1924 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட சபையின் காலத்தில் நிலைமை ஓரளவுக்கு நல்லதாகவே இருந்தது. அது பிரதிநிதித்துவ சபையாய் நிலவியது. ஆங்கிலேயரின் குடியேற்ற வலுச் சட்டத்தின் 1865 ஆம் ஆண்டுச் சட்டத்தின் முதலாம் பிரிவின் வண்ணம் அதிலே உள்ள அங்கத்தவரின் தொகையில் அரைப் பங்கினருக்குமேல் தெரியப்பட்ட பிரதிநிதிகளாய் இருந்தனர். அது மதிப்புக்குரிய அலுவலாயிருந்தது. உத்தியோகப் பற்றற்ற அங்கத்

தவருக்கு அச்சபையின் அலுவல்கள் போதிய அரசியற் பயிற்சியை அளித்தது அவர்கள் சட்டசபையிலும், நிதிக்குழுவிலும், சட்ட நிர்வாக சபையிலும் அமர்ந்து அரசியற் பரிபாலன நுணுக்கங்களை நேரிலறிய வாய்ப்பு ஏற்பட்டது. அன்றி அவைகளிலே தங்கள் அபிப்பிராயங்களையும் கூசாமல் குனியாமல் வெளிவெளியாகப் பேசுவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கலாயின.

இத்தகைய திருத்தங்கள் ஏற்பட்டபோதிலும் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் திட்டமிடல், நடத்துதல், நிறைவேற்றுதல் ஆகிய அலுவல்கள் யாவும் ஆள்பதியினதும் அவருடைய சட்ட நிர்வாக சபையினரதும் பொறுப்பிலேயே இருந்தன. முன்னர் 1833 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சட்டசபையின் அமைப்பு 1923 ஆம் ஆண்டிலும் மாற்றியமைக்கப்படவில்லை. ஆனால் அதன் உறுப்பினர் தொகையிலும் வேறு அலுவல்களின் போக்கிலும் சிறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சட்ட நிர்வாகசபை, உத்தியோகத்தரின் செல்வாக்கிலேயே நடைபெற்றது. அதிலே நியமிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தாமும் தங்கள் சட்டசபை அங்கத்துவத்தை விலகல் செய்துவிட்டே அதிலமரவேண்டும் என்னும் விதியும் நிலவியது.

ஆனால் உண்மையை ஆராய்ந்து பார்க்கையில் 1924 ஆம் ஆண்டுத் திருத்தமும் மக்கள் அபிலாசைகளைப் பூரணமாகத் திருப்தி செய்யவில்லை என்பர். சட்டசபையிலேயும் அதன் நடைமுறையிலேயும் பல பிழைகள் இருந்தன என்பதைச் சீர்திருத்த வாதிகள் பல கோணங்களிலிருந்து கண்டித்தனர். அவர்கள் சுட்டிக்காட்டிய பிழைகள் பின்வருவனவும் பிறவுமாம்.

1. சட்டசபைக்கும் சட்ட நிறைவேற்று சபைக்கும் நேரடியான தொடர்பில்லாமை.
2. சட்டசபையினர் சட்ட நிறைவேற்று சபையில் வேண்டிய அளவுக்குத் திருப்திகரமாகப் பிரதிநிதித்துவம் பெறுமை.
3. சட்டசபையிலே இருந்த உத்தியோகப் பற்றற்ற சிங்களப் பிரதிநிதிகளின் தொகையில் மூன்றில் இரண்டு பங்காவது தமிழருக்கு இருத்தல் வேண்டும் எனக் கோரியதற்கு மாறுக அவர்கள் தொகையில் அரைப்பங்காவது தமிழருக்கு வழங்கப் படாமை.
4. சிங்களப் பெரியார்கள்—பிரதிநிதிகள் விருப்பத்துக்கமையத் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் அமையாமை.

5. சட்டநிறைவேற்றுசபை சட்டசபைக்குக் கட்டுப்படாமை.

6. இலங்கையர் என்று கணித்த அளவில் 4% மக்களே வாக்குரிமை பெற்றும் ஏனைய 96% மக்கள் கல்வி செல்வம் இல்லாமை காரணமாக மதிப்பில்லாமல் நடைப்பிணங்களாய் இருந்தமை.

7. குடிசனத்தில் அரைப்பங்கு மக்களான பெண்ணினத்தாருக்கு வாக்குரிமை அறவே இல்லாமை.

எனவே டிவன்சயர் மனிங் திருத்தத்திலும் திருப்தியடையாத இலங்கையர், சட்டசபையில் மேலும் திருத்தங்கோரிக் கிளர்ச்சி செய்தார்கள். இலங்கை பல துறைகளிலும் வெகுவாக முன்னேறிய போதிலும் சட்டசபையின் அமைப்பு மாறுமல் இருந்தமையைச் சுட்டிக் காட்டிய இலங்கையர் பல கோணங்களிலிருந்தும் சீர்திருத்த நீனை வேடுகளைத் தயாரித்துக் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்புவாரா யினர். அவர்கள் கோரிய திருத்தங்களில் பொதுவான அம்சங்கள் பின்வருமாறு.

1. சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற தெரியப்பட்ட அங்கத் தவர்கள் மேலதிகமாயிருத்தல் வேண்டும்.

2. இலங்கையருக்கு தாராளமான அளவில்–பரந்த அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும்.

3. தெரியப்பட்ட அங்கத்தவருள் ஒருவர் வாசகர் எனப்படும் சபாநாயகராகத் தெரியப்பட்டுச் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். ஆள்பதி இது காறும் அண் மைக் காலத்தில் 1924 முதல் பெயரளவில் தலைவராயிருந்த முறை தானும் இருத்தலாகாது.

4. சட்ட நிறைவேற்று சபையினர் சட்டசபைக்குப் பொறுப்பா ளராயிருத்தலோடு, அச்சபையின் அங்கத்தவருள் அரைப்பங் குக்கு அதிகமானோர் சட்டசபை அங்கத்தவராயே–(தெரியப் பட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராய்) இருத்தல் வேண்டும்.

5. சட்ட நிறைவேற்றுசபை அங்கத்தவர் மந்திரிப் பொறுப்புள்ள வராய் இருத்தல் வேண்டும்.

6. ஆள்பதி சனநாயக பாராளுமன்ற அரசயாப்பு, சம்பிரதாயங்கள் ஆகியவற்றை நன்கறிந்த அறிவாளியாக இருத்தல் வேண்டும்.

7. கடைசியாக நிலவிய சட்டசபையிலிருந்த வகுப்புவாதப் பிரதி நிதித்துவமுறை நீக்கப்படல் வேண்டும்.

8. பொறுப்பில்லாமல் பெரும்பான்மையினராயிருந்த தெரியப் பட்ட உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் நீலையும், சிறுபான்மை யினராயினும் பொறுப்புடனிருந்த உத்தியோகத்தர் நீலையும் முரண்படக் கூடியதாயிருந்த நிலைமாற வேண்டும்.

சேர். இராமநாதன் பரிபூரண சுயராச்சியம் வேண்டும் என்னும் கருத்துள்ளவராயும், வைத்திலிங்கம் துரைச்சுவாமி டொமினியன் தகுதி எனப்படும் ஆணிலப்பதம் வேண்டும் என்னும் கருத்துள்ள வராயும் இருந்தனர். சிங்களப் பெரியார்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் பூரண சுதந்திரத்தையோ, ஆணிலப் பதத் தகுதியையோ அவாவவில்லை. அவர்கள் கேட்டதும் விரும்பியதும் ஆள்புல அமைப் பில் தொகுதிவாரியாகத் தெரியப்பட்ட அங்கத்தவர் பெரும்பான் மையினராக அமரும் சட்டசபையேயாகும். அத்தோடு, மந்திரசபை எனப் பின்னர் கருவாகும் தன்மையின் சில பொறுப்பும், சிறு பான்மையினரைத் திருப்திப்படுத்த ஒரு சிறிதளவு வகுப்புவாதப் பிரதிநிதித்துமேயாம். அவர்கள் சர்வசனவாக்குரிமை கேட்கவில்லை அவர்களுடைய நோக்கம் சட்டநிறைவேற்றுசபையில் மந்திரப் பொறுப்பைப் படிப்படியாக ஏற்று ஆட்சியை இலங்கையர் மயமாக்கு வதேயாம்.

எல்லோரும் நாட்டபிமானத்தால் தங்கள் தாய்த் திருநாடு நன்முக இருத்தல் வேண்டும் என்பதற்காகவே அயராதுழைத் தார்கள். அவர்கள் கருதிய வழிவகைகள் வெவ்வேறுக இருந்த போதிலும் அவர்கள் எல்லாருடைய நோக்கமும் ஒன்முகவே இருந்தது. அது அந்நியர் பிடியிலிருந்து இலங்கையர் விடுதலை பெறுதல் என்பதேயாம்.

டிவன்சயர்-மனிங் திருத்தத்தை 1925-1927 வரை ஆட்சி செய்த ஆள்பதி கிளிபோட் விரும்பவில்லை. அவர் முன்னர் இலங்கையில் பிரதம காரியதரிசியாயும் இருந்து நல்ல அநுபவம் பெற்றவர். அவர் அந்த அமைப்பில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த இயலாதென்றும் குடியேற்ற மந்திரியாருக்கு எழுதியும் உள்ளார். தம்மை வேறெங்காவது மாற்றிவிட்டால் நல்லது என்றும் விண்ணப்பித்தார். எனவே குடியேற்ற மந்திரியார் ஆள்பதியை மலாயாவுக்கு மாற்றிவிட்டார். ஆள்பதி கிளிபோட் மலாயாவுக்குப் போகுமுன், டிவன்சயர்-மனிங் அமைப்பை அடி யோடு மாற்றியமைக்கு முகமாகக் குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு தகவுரை எழுதியதோடு அத்தகைய மாற்றத்தின்போது இலங்கைக்கு ஓர் அரசியல் விசாரணைச் சபையை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் எழுதினர்.

கிளிபோட்டுக்குப் பின்வந்த ஆள்பதி சேர். ஹேபேட் ஸ்ரான்லி டிவன்சயர்–மனிங் திருத்தத்தைக் கொண்டு நடத்தலாம் என முயன்றபோதிலும் குடியேற்ற மந்திரியார் அமெரி, கிளிபோட்டின் ஆலோசனையின் வண்ணம் இலங்கைக்கு அரசியல் விசாரணைச்சபை யொன்றை அனுப்பத் தீர்மானித்தார்.

விசாரணைக் குழுவினர் 6-8-1927 இல் நியமிக்கப்பட்டார்கள். அதன் தலைவராயமர்ந்த டொனமூர் வேள் பிரித்தானிய பாராளு மன்றத்துப் பிரபுக்கள் சபையின் காரிய நிர்வாகசபைகளின் தலைவ ராயிருந்து அநுபவம் பெற்ற பெரியார். அன்றி அவர் யுத்த அலு வல் மந்திரியாராயும் கடமையாற்றியநுபவம் பெற்றவர். சேர். மாதியூநாதன் என்பார், குடியேற்ற நாடுகளின் பரிபாலனத்தில் நேரனுபவம் பெற்றவர். அவர் ஹொங்கோங் முதலிய இடங்களில் ஆள்பதியாய் இருந்தவர். சேர் யெவ்ரி பட்லர் என்பார் பாராளு மன்றப் பிரதிநிதியாயிருந்தமையோடு கேம்பிரிச் சர்வகலாசாலையில் பேராசிரியராயுமிருந்தவர். அவருக்குச் சர்வதேச சங்கத்தின் அமைப்பும் அதன் நடைமுறையும் நன்கு தெரிந்த அலுவல்களா யிருந்தன. கலாநிதி சேர். டிரமன்சீல் அவர்கள் மாநகரசபையிலும் பாராளுமன்றத்திலும் பிரதிநிதியாயிருந்தமையோடு தொழிற் கட்சியில் பெரும் பதவியிலும் இருந்த நல்லநோக்கமுள்ளவாவர்.

டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கையைச் சுற்றிப் பார்த்த பின் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, காலி ஆகிய இடங்களில் பகிரங்கமாகப் பொது சனங்களையும் பிரமுகர்களையும், சங்கங்களையும் அழைத்து ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் அறிந்தார்கள். அவர்கள் 34 முறை கூடி 141 பிரமுகர்களின் அபிப் பிராயங்களைக் கேட்டு அவர்களோடு பல அலுவல்களைச் கலந்துரை யாடினர்கள். இவ்விசாரணைகளின் போது பலர் பலவிதமான அபிப் பிராயங்களைக் கூறினர். கரைநாட்டுச் சிங்களவர் தமக்குப் பெரும் பாலான அங்கத்துவம் கிடைத்தல் வேண்டும் என்றும்; தமக்கே ஆட்சிப்பொறுப்பில் முக்கியமான பங்கு இருத்தல் வேண்டும் என்றும் கேட்டனர். தமிழருக்கு வகுப்புவாரியாகப் பிரதிநிதித்துவம் பெறு வதிலும் பார்க்கச் சமபலப் பிரதிநிதித்துவம் பெறலே நோக்கமாக இருந்தது. பல இனங்கள் வாழுகிற நாட்டில் ஓரினம் இன்னோர் இனத்தை நலியச் செய்யாதிருத்தற்கு ஏற்ற முறையில் பிரதி நிதித் துவம் அமைதல் வேண்டுமென்று கோரினர்.

பிரித்தானியர் 1833 ஆம் ஆண்டில் சட்டசபையைத் தாபித்த காலத்திலேயே இன அடிப்படையையும் அமைத்து விட்டார்கள். அதற்கு முன் சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் இலங்கையை

அரசாண்டதுண்டு. சிங்களமன்னருக்குத் தமிழ் மந்திரிகளும், தமிழரசர் களுக்குச் சிங்கள மந்திரிகளும், சேனதிபதிகளும் இருந்ததும் உண்டு. அவை பழைய கால வரலாறுயின், 1910 ஆம் ஆண்டிற் கூடத்தமிழர் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவங் கோரியதுகிடையாது. அவர்கள் குடி யேற்ற மந்திரியாருக்கு அனுப்பிய நீண்ட வேட்டிற்கூட மாகாண ரீதி யில் தெரியப்பட்ட பிரதிநிதித்துவத்தையே கோரினர்கள். சிங்களவர் 4 ஆசனம் பெறும்போது தமிழர் 2 ஆசனமாவது பெறுதல் வேண்டும் எனக் கேட்டமை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமாகாது. சேர். இராம நாதனும் குடிசனச் செறிவுக்குத் தக்கதாகப் பிரதிநிதித்துவத்தையே அவாவினர். வைத்திலிங்கம் துரைசுவாமி டொனமூர் குழுவினர் முன் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் இன்றியமையாது அமைந்து விட்டது அதனை மேலும் நடைமுறையிற் கொண்டு போதல் புத்தியல்ல என்றே கூறினர். சிங்களப் பிரமுகர்கள் அதிலுங் கரைநாட்டுப் பகுதியினர் அதிகாரத்தைப்பெற முனைந்தபோதுதான் தமிழர் சமநிலை அதிகாரம் அளிக்கப்படல் வேண்டுமெனக் கோரினர். திருவாளர் R. C. புறக்டர் என்னும் பெரியாரே 50 : 50 என்னும் கோரிக்கையை முதலில் பிரசாரஞ் செய்தார் என அறியக்கிடக்கிறது.

வகுப்புவாரியான பிரதிநிதித்துவத்தை விரும்பியவர்கள் ஐரோப்பியரும் பறங்கியருமே யாவர். அவர்களுக்கு வேறு வழியில் பிரதிநிதித்துவம் பெறுவதில் வசதிக் குறைவு இருந்தது உண்மை தான். முஸ்லிம்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விரும்பினர் களேனும் அவர்கள் சம பல அதிகார அமைப்பைக் கோருவதில் ஆர் வங்காட்டாமலே இருந்தார்கள்.

டொனமூர்த் திருத்த சபையினர் முன்னர் குடியேற்ற மந்திரியார் அமெரி தமக்குக் கற்பித்த வண்ணம் டிவன்சயர்-மனிங் திருத்தத்தையும் அக்காலத்தில் நிலவிய ஆட்சியியல்பையும் ஆராய்ந் தார்கள். அவர்கள் கண்ட முடிபைச் சுருக்கிப் பின்வருமாறு கூறலாம்.

1. இதுகாறும் நடைபெற்று வந்த முறையால் அரசாங்கம் ஓர் ஏலாச் சுவாகியாய் விட்டது.

2. உத்தியோகப் பற்றற்றவருக்குப் பொறுப்பில்லாத பெரும் பான்மை அதிகாரம் மாத்திரம் போதாது. அவர்களும் சட்ட நிறைவேற்றுத் துறையில் போதிய பங்கு பெறுதல் வேண்டும்.

3. இதுகாறும் நடைபெற்ற முறையில் உத்தியோகப் பற்றற்றவர் ஒரு நிரந்தர எதிர்க் கட்சியினராய் அமர்ந்து விட்டார்கள் போலத் தெரிகிறது.

4. இலங்கையர் தங்கள் அரசாங்கத்தின் சுய நிர்ணய ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுக் கொள்வதில் முனைந்து விட்டார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

5. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் படித்த இலங்கையரின் பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள். அவர்களே ஆட்சிப் பொறுப்புக்கு அருகதை வாய்ந்தவர்கள், ஏற்றவர்கள் என்பது எமது துணிபு.

6. உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பை அளித்தல் வேண்டும் என்று நாங்கள் தகவுரை கூறுகிறோம்.

டொனமூர் திருத்தக் குழுவினர் பழைய சட்டசபையின் அமைப்பில் இருந்த சட்ட நிர்வாக சபையில் இருந்த உத்தியோக அங்கத்தவர் ஐவரும், உத்தியோகப் பற்றற்ற நால்வரும் சட்ட சபைக்குக் கட்டுப்படாமல் இருந்ததைக்கண்டு அந்த அமைப்புப் பொருந்தாதது எனக் கருதினர். சட்டசபை வரவு செலவு விபரத்தைக் கண்காணித்தமையாலும், நிதிக்குழு சட்ட நிர்வாக சபையிலும் பார்க்க வலுவுள்ளதாக விளங்கியதாலும், சட்ட நிர்வாக சபை ஏலாச் சுவாகியாகவே நிலவியது என்றனர். எனவே மனிங் திட்டம் இலங்கையில் நடைபெற இயலாது போனது என்றனர். இலங்கையருள் 4% மக்களுக்கே வாக்குரிமை அளிக்கப்பட்டதால் வாக்காளர் தொகை 1924 ஆம் ஆண்டில் 205000 என இருந்தமை வருந்தத்தக்கது என்றனர்.

டொனமூர் ஆணைக் குழுவினர் அக்காலத்தில் நிலவிய பிரதி நிதித்துவ முறைகளை நன்கு பரிசீலனை செய்தபின் கீழ்க்கண்டவாறு தமது கருத்தை ஒரு குறிப்புரையாகக் கூறினர். ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அரசாகிய உடம்பில் புற்றுநோய் போலப் பற்றிக் கொண்டு தேசத்தின் ஆற்றலை வெகுவாக உட்புறமாகத் தாக்கி வந்துவிட்டது. இதனால் சுயநலம், ஐயுறவு, பகைமை, வெகுவாக வளர்ந்து தேசியத்தன்மை உண்டாகாதவாறு செய்துவிட்டது. ஆகவேதான் நாங்கள் இன அடிப்படையில் பிரதிநிதித்துவம் அமைதல் ஆகாது எனக் கண்டிப்பாகக் கூறுகின்றோம்.''

சர்வசன வாக்குரிமை வழங்குவதில் டொனமூர் ஆணைச் சபையில் அங்கம் வகித்த தொழிற் கட்சிப் பிரமுகரான டிரமன்சில் அதிக ஆர்வங்காட்டினார். அவர் பேராசிரியர் பேக்மன் அவர்களோடு பிற்காலத்தில் பேசிய சந்தர்ப்பத்தில், தாம் சர்வசன வாக்குரிமைக்கு வழிகோலியமை தமது வாழ்க்கையில் தாம் பெருமைப்படக் கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக் கூறி மகிழ்ந்தாராம்.

முன்னர் பிரித்தானிய குடியேற்ற நாடுகளுள் இலங்கையே முதலில் சட்டசபையைப் பெற்றமைபோல இப்போதும் இலங்கை வாசிகளே முதலில் சர்வசன வாக்குரிமையையும் பெறுவாராயினர். இலங்கையர் வாக்குரிமைபெற்ற வரலாற்றை ஒருவர் விளையாட்டாக விளையாட்டு மொழியில் விகடமாகக் கூறியபோது, துள்ளிக் கால் வைத்துப் பாய்ந்தமைபோல என வருணித்துள்ளார். படித்தவர் களுக்கு மாத்திரம் வாக்குரிமை வழங்கிய 1910 ஆம் ஆண்டிலே துள்ளி, வாக்குரிமை வழங்கல் சிறிது விசாலித்த 1920 ஆம் ஆண்டிலே யும் 1924 ஆம் ஆண்டிலேயும் கால்வைத்து, சர்வசன வாக்குரிமை வழங்கிய 1931 ஆம் ஆண்டிலே பாய்ந்தமையை அவர் துள்ளிக் கால் வைத்துப் பாய்ந்தமை என்றார்.

டொனமூர் குழுவினர் முதலில் 21 வயது வந்த ஆண் களுக்கும் 30 வயதுப் பெண்களுக்குமே வாக்குரிமை வழங்க வழி செய்தனர். ஆனால் சட்டசபையில் டொனமூர் திருத்தம் விவாதிக் கப்பட்டபோது ஆண்களைப் போலவே பெண்களுக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்கல் வேண்டுமென்று A. F. பிறீமன் அவர்கள் பிரேரித்து நிறைவேற்றினர். அதனைக் குடியேற்ற மந்திரியாராய சிட்னிவெப் என்ற பஸ்வீல்ட் பிரபு அநுமதித்து அனைவருக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்க ஒழுங்கு செய்தார்.

டொனமூர்த் திருத்த சபையினர் சர்வசன வாக்குரிமை வழங்கிய தற்குப் பல காரணங்கள் உண்டு. சமூக கைத்தொழிற் சட்ட வாக்கங்கள் துரிதமாக நடைபெறும் என்றும், பாடசாலைகள், வைத் திய சாலைகள், மருந்துச்சாலைகள், வீதிகள் ஆகிய பொதுசன உப யோக வசதிகள் நாட்டின் நாலு பக்கங்களிலும் நல்ல முறையில் தாபிக்க ஏதுவாகும் என்றும் கருதினர். பொறுப்பாட்சி வழங்கிச் சுயராட்சியத்துக்கு வழிகோலுகின்ற நேரத்திலே ஒரு சிலருக்கு மாத்திரம் வாக்குரிமையை வழங்கினால் கைக்கூலி பெறுதல் முதலிய ஊழல்கள் அதிகரிக்கலாமாகையால், எ லோருக்கும் வாக்குரிமை வழங்குவதே நல்லமுறை எனவும் அவர்கள் கருதினர். இன்னும் எழுத்து வாசிப்பைக் கொண்டு ஒருவருடைய அரசியலறிவை மட்டிட முடியாதாகையால் அரசியல் அலுவல்களை நன்கு தெரிந்த பேர் வழிகள்கூட விவசாயத்திலும் தொழில் துறைகளிலும் ஈடு ட்டிருக் கலாமாதலால் அவர்களைப் புறக்கணிப்பது தருமமாகாது என ஆணையாளர் கருதினர். அன்றி எல்லோருக்கும் வாக்குரிமையை வழங்கிவிட்டால் எல்லோரும் நாட்டின் பொது நன்மைக்குத் தம் உபகரிப்பைச் செய்வார்கள். இன்னும் சாதாரண விவசாயி

ஒருவனின் வருமானத்தை மட்டிடுதலும் இயலாத செயலாகும். அத்தகைய விவசாயிகளே நாட்டின் பெரும்பான்மை மக்களாதலால் அவர்களைப் புறக்கணிப்பதும் முறையல்லவென்பதால் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்குவதற்கு ஆணையாளர் முடிவு செய்தனர்.

டொனமூர்த் திருத்தத்தின் வண்ணம் சர்வசன வாக்குரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டது. என்றாலும் வாக்காளருக்குரிய யோக்கியாம்சங்கள் வரையறை செய்யப்பட்டிருந்தன. வாக்காளராவோர்:

1. பிரித்தானிய குடியாகவும்,
2. அவர் 21 வயதுக்கு மேற்பட்டவராயும்,
3. அவர் அவ்வருடத்தின் ஆவணி மாதத்துக்கு முன் உள்ள 18 மாத காலத்தில் ஆறு மாதகாலமாவது இலங்கையில் வாழ்ந்தவராயும்,
4. அவர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட கடுழியச்சிறை பெறுதவராயும்,
5. சித்தப்பிரேமை, கலக்கம் இல்லாதவராயும்,
6. கைக்கூலி முதலியவற்றுக்காகக் குற்றப்படாதவராயும் இருத்தல் வேண்டும் என்பது நியதியாயிற்று.

முன்னர் 1924 ஆம் ஆண்டின் சட்டசபைத் தேர்வின்போது இருந்த தகைமைகள் வாக்காளரை வெகுவாகக் கட்டுப்படுத்தியதால் இலங்கையில் 4% மக்களுக்கே வாக்குரிமை இருந்தது. அதன் பிரகாரம் இலங்கையில் 20 5000 வாக்காளர் பதியப்பட்டிருந்தனர். ஆனால் 1931 ஆம் ஆண்டின் தேர்தலுக்கு 1577850 வாக்காளர் பதியப்பட்டிருந்தனர்.

இவ்வாக்காளர் இலங்கையில் உள்ள 50 தேர்தற்றொகுதிகளில் பிரதிநிதிகளைத் தெரியக்கூடியவராயிருந்தனர். அவர்கள் மாகாணந்தோறும் தெரிந்தனுப்பக்கூடிய பிரதிநிதிகள் தொகை வருமாறு.

1.	மேல்மாகாணம்	... 14
2.	மத்தியமாகாணம்	... 8
3.	தென்மாகணம்	... 7
4.	வடமாகாணம்	... 4
5.	கீழ்மாகாணம்	... 2

6. வடமேல்மாகாணம் ... 6
7. வடமத்தியமாகாணம் ... 1
8. ஊவா மாகாணம் .. 3
9. சப்பிரகாமுவ மாகாணம் ... 5

முன்னர் 1923 ஆம் ஆண்டுத் திருத்தத்தின்போது வேட்பாளர் வயது 25 என்றும், அவர் ஆங்கிலம் வல்லவராய் இருத்தல் வேண்டும் என்றும், அவரிடம் அசையா ஆதனம் இருத்தல் வேண்டும் என்றும் இருந்த நிபந்தனைகள் பல 1931 ஆம் ஆண்டுத் தேர்தலுக்குத் தளர்த்தப்பட்டன. வேட்பாளர் 21 வயதுக்கு மேற்பட்டவராய், 1000 ரூபா பிணைப்பணங் கட்டக் கூடியவராயிருத்தல் வேண்டும் என்பதும் அவர்கள் பெண்பாலராயும் இருக்கலாம் என்பதும் நியதியாயிற்று. எனவே முன்னர் சட்டசபையினைப் போலன்றி அரசாங்க சபையினைப் பெண்களும் அலங்கரிப்பாராயினர்.

டொனமூர் அமைப்பு பெரும்பாலும் சர்வதேச சங்கத்தின் அமைப்பையும், லண்டன் மாநகரசபை அமைப்பையும் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். அரசாங்கத் திணைக்களங்கள் பத்துப் பெரிய பிரிவாகப் பிரிக்கப்பட்டு மந்திரிமாரின் பரிபாலனத்தில் நிர்வாகஞ் செய்ய விடப்பட்டன. இவற்றுள் பிரதான திணைக்களங்கள் அரசாங்கக் காரியதரிசிகள் மூவரிடம் விடப்பட்டன.

பிரித்தானிய பாராளுமன்ற முறைகள் டொனமூர் அமைப்பில் புகுத்தப்பட்டன. தெரியப்பட்ட வாசகர் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், முறிகள் மூன்று முறை வாசிக்கப்படுதல். நிலையற் குழுக்கள், கேள்வி நேரம், மன்னர்பிரானின் ஒப்பாசார இசைவு என்பனவும் பிறவும் இலங்கையருக்குப் பாராளுமன்ற வரன்முறைகளையும் சம்பிரதாயங்களையும் பழக்கவே கையாளப்பட்டன என்பர்.

டொனமூர் திருத்தம் ஏற்பட்ட காலத்தில் இலங்கையில் அரசியற் கட்சிகள் இருக்கவில்லையாயினும் சிங்களமயமான தேசிய மகாசபை, இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் சுதந்திரக்கட்சி, மட்டக்களப்புத் தமிழர் சங்கம், இலங்கை இந்தியர் காங்கிரஸ், முஸ்லிம் அரசியற் சங்கம், ஐரோப்பியர் சங்கம், தமிழர் மகாசபை, டொடன்டுவா மகாசனசபை என்னும் சங்கங்கள் இருந்தன அவை அரசியற் கட்சி உருவத்தில் நிலைக்கவில்லையாதலால் விசாரணைச்சபை சனநாயக பிரதிநிதித்துவ சுயவாட்சியை உடனடியாக இலங்கைக்குக் கொடுக்கக் காலம் சரியில்லையெனக் கருதினர். அதற்குக் காரணம் இலங்கையில் வகுப்புவாதம் அதிகமாய் நிலவியதென்றனர்.

டொனமூர் திருத்தம் 45 பிரசித்தங்களைக் கொண்டதாய், யாப்பின் அமைப்பு, சட்ட நிர்வாகத்தின் நடை முறை, அதன் அமைப்பு, நிர்வாக சபைகளின் தொகை, அவற்றின் அங்கத்த வரின் கடமையும் பொறுப்பும், அவர்களுக்கும் நிர்வாக சபைக்கும் உள்ள தொடர்பு, நிர்வாக சபைகளின் பரிபாலனத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்கள், அரசாங்க உத்தியோகத்தர் எனப்படும் மூன்று காரியதரிசிகளின் பரிபாலனத்தில் உள்ள திணைக்களங்கள், மந்திரிமார்சபை, சட்ட நிர்வாக சபையின் வைகல், ஆள்பதி அவர்களின் முறையேற்பு, அரசாங்கசபையின் வைகல், முறிகளின் ஆரம்பம், தனிப்பட்ட அங்கத்தவரின் சலுகைகள், நிலையற்குழு, முறிகளின் இரண்டாம் வாசிப்பு, அறிக்கைநிலை, மூன்றும் வாசிப்பு, அரசாங்க சபையின் கோலாகலத் திறப்புவிழா, வாசகர் கடமை, ஆள்பதி அவர்களின் உரிமை, கடமை, அதிகாரம் என்பனவும் பிறவும் வரையறை செய்வதாய் அமைந்தது.

டொனமூர் அமைப்பைச் சுருக்கமாய்க் கூறின், இதுகாறும் சட்டசபை எனவும், சட்ட நிர்வாக சபை எனவும் நிலவிவந்த இருசபைகளின் கருமங்களை இனிமேல் அரசாங்கசபை என உள்ள ஒரு சபையே நடத்தும். அரசாங்கசபை சட்டமியற்றுதல் காரண மாகவும், சட்ட நிறைவேற்றுதல் காரணமாகவும் வெவ்வேறு நேரத்தில் கூடும்.

அரசாங்கத் திணைக்களங்கள் யாவும் இதுகாறும் குடியேற்ற அலுவலாளர் எனப்படும் பிரதம காரியதரிசியின் கண்காணிப்பில் நடைபெற்றமுறை மாற்றியமைக்கப்பட்டுப் பத்துப் பேரின் பொறுப் பில் நடைபெறும். இப்பத்துப் பேரில் மூவர் அரசாங்க உத்தி யோகத்தர் எனவும் உத்தியோக அங்கத்தவர் எனவும் கூறப்படும் காரியதரிசிகளாவர். ஏனைய ஏழுபேரும் ஏழு நிர்வாக சபைகளின் தலைவர்கள் எனப்படும் மந்திரிமார்களாவர்.

இதுகாறும் குடியேற்ற அலுவலாளர் என வழங்கிய உத்தி யோக அங்கத்தவர் இனிமேல் பிரதம காரியதரிசி என வழங்குவர். அங்ஙனமே சட்டத்துறை நாயகம் என வழங்கியவர் இனிமேல் சட்டக் காரியதரிசி என வழங்குவர். இறைசேரி நாயகம் இனி மேல் நிதிக்காரியதரிசி என வழங்குவர். இம்மூவரும் காரிய தரிசிகள் என வழங்கிய போதிலும், மந்திரிப் பொறுப்புள்ள வராய் மந்திரிமார் சபை எனக் கருதப்படும் சட்ட நிறைவேற்று சபையிலேயும், சட்ட சபையிலேயும் இடம் பெறுவர். இவர்கள் ஆலோசனைகள் கூறுவதையே பிரதான கடமையாகக் கொண்டிருப் பரன்றிச் சட்ட நிறைவேற்றுந் துறையில் இரண்டாந்தரக் கடமை செய்பவராவர்.

ஏனைய ஏழு மந்திரிமாரும் அரசாங்கசபை கூடியதும் அங்கத்தவர் தங்களை ஏழு நிர்வாக சபைகளுள் பிரித்து அவற்றின் தலைவர்களாய்த் தெரியப்படுபவராவர். இத்தலைவர்களை ஆள்பதி அவர்கள் அங்கீகரித்து மந்திரிமார் என நியமிப்பார். இவர்களை நிர்வாக சபைத்தலைவர்கள் எனவும் மந்திரிமார் எனவும் அழைப்பர். இவர்கள் தத்தம் பொறுப்பில் உள்ள திணைக்களங்களின் பரிபாலனத்துக்குத் தனித்தனி பொறுப்புள்ளவராயும் நிதி சம்பந்தமான அலுவல்களுக்கு எல்லோருஞ் சேர்ந்து கூட்டுப் பொறுப்புள்ளவராயும் இருப்பர்.

அரசாங்கத்தின் சட்ட நிர்வாகப் பணியை இவர்களுடைய தலைமையில் இயங்கும் நிர்வாக சபைகள் தனித்தனி செய்யுமெனினும், அவற்றை அங்கீகாரம் பெறுவதற்கு இவர்கள் நடைமுறைகளை மந்திரிமார் சபைக்கு அறிவித்தல் வேண்டும். இதுபோலவே சட்டசபை வைகல்களிலும் இவர்கள் சட்டங்களை யாத்துக்கொள்வர். சட்டத்துறை சட்டநிர்வாகத்துறை ஆகிய இருதுறைகளிலும் செய்யும் அலுவல்கள் கட்டாயமாக ஆள்பதியின் அங்கீகாரம் பெற்ற பின்பே நடைமுறைக்கு வரலாம்.

இவ்வண்ணம் அமைந்த மந்திரிமார் எழுவரும் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாய உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர். அவர்களுக்கு நல்ல முறையிற் பொறுப்பு வழங்கப்படும். அவர்கள் நாட்டின் சுய நிர்ணய அலுவல்களை நடத்த அதிகாரமுள்ளவராவர். சனநாயக முறையில் அமைந்த கட்சிகள் இங்கே இல்லாமையால் இப்போதைய நிலையில் இந்த அரசியல்முறை தகுதியானது என்று டொனமூர் ஆணையாளர் கருதினர்.

கட்சிகள் அமைப்பு இல்லாதபடியினாலே ஆள்பதிக்கு ஒதுக்கு வலு அளிக்கப்பட்டது. அதனால் ஆள்பதி ஏதாவது ஓரலுவல் பரமாட்சிகுரியதென்றோ, அல்லது குடியேற்ற மந்திரியாரின் பரிசீலனைக்குரியதென்றோ கருதினால், அந்த முறிகளை அவர் ஒதுக்கி வைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இன்னும் ஆள்பதியின் ஒதுக்கு வலுவில் பகிரங்க சேவைப் பாதுகாவலும் இருந்தது. அன்றி ஆளும் அதிகாரம் காரியதரிசிகள் மூவருக்கும் அதிகமாக அளிக்கப்பட்டது.

இவ்வண்ணம் டொனமூர் சபையினர் வரைந்த காலத்தில் இங்குள்ளவரும் ஐரோப்பியரும் ஏன் இருமன்ற முறையிலமைந்த பாதுகாப்பு முறையை அமைக்கலாகாது என அபிப்பிராயப்பட்டனர்.

இரண்டாவது மன்றம் எனப்படும் சென்ற்சபையை அமைத்தால் அவசர சட்டங்கள் தடைப்படுத்தப்படலாம் எனவும், சிறுபான்மை யினத்தவர் உரிமைகள் பாதுகாக்கப்படலாம் எனவும், ஆள்பதியின் ஒதுக்குதிகாரத்தை நம்பியிருக்கத் தேவையில்லை எனவுங் கருதினர். அன்றி ஆள்பதி என்பார் இலங்கையில் ஐந்தாறு ஆண்டுகள் கடமையாற்றிப் போவதால் அவருக்கு நாட்டின் நிலைமை தொடர் பாகத் தெரியாமல் இருக்கும் எனவும் அவருடைய பாதுகாப்புப் பூரணமாக இருக்கமாட்டாது எனவும் கூறினர்.

அத்தகைய வாக்குமூலங்களைக் கேட்ட ஆணையாளர் மேற் சபையை நிறுவுவதற்குச் சம்மதிக்கவில்லை. மேற்சபையை நிறுவினால் அதன் அங்கத்தவர் தெரிவில் சிக்கல் ஏற்படுமெனக் கருதினர். மேற்சபை அங்கத்தவர் தொழிற்பாட்டு முறையிலாயினும், பணி யாற்று முறையிலாயினும், வகுப்புவாதமுறையிலாயினும் தெரியப் படவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவை இலங்கைக்குப் பொருந்தாதவை என்றும் ஆணையாளர் கூறினர். அன்றி வர்த்தக முறையிலோ உத்தியோக முறையிலோ மேற்சபையினரைத் தெரிந்து கொண்டால் சில்லோராட்சி தலைதூக்கி நிலவக்கூடும் என்றனர். அன்றி இலங்கைக்கு மேற்சபையை அந்த நேரத்தில் அமைப்பதால் நிதி அலுவல் பாதிக்கப்படும் என்றும், தகுதிவாய்ந்த பிரதிநிதிகளைத் தெரிவது அரிது என்றுங் கூறினர். அன்றி மேற்சபையினர் ஆள் பதியும் குடியேற்ற மந்திரியாரும் சிறுபான்மையினரின் உரிமை களைப் பாதுகாக்கும் அளவில் அலுவல் செய்ய இயலாதவர் என்றும் டொனமூர் ஆணையாளர் கருதினர். அதனாலேதான் அவர்கள் மேற்சபை தாபிக்கத் தகவுரை கூறவில்லை என்றனர்.

டொனமூர் திருத்தத்தின்பின் அரசாங்க உத்தியோகத்தரின் பெயர்களே மாற்றியமைக்கப்படலாயின. அதுகாறும் 1798 முதலாகக் குடியேற்றச் செயலாளர் எனவும், சட்டத்துறை நாயகம் எனவும், இறைசேரிநாயகம் எனவும் வழங்கிவந்த உத்தியோகத்தர் பெயர்கள் 1931 ஆம் ஆண்டு முதலாக முறையே பிரதம செயலாளர், சட்டச் செயலாளர், நிதிச் செயலாளர் என வழங்கலாயின.

இலங்கையின் முதலாம் குடியேற்றச் செயலாளராய்ப் பதவி வகித்தவர் கிளேகோன். கடைசியாக அப்பதவியை 1929 இல் வகித்தவர் சேர். B. H. போடிலியன். சேர். போடிலியன் 1931 இல் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டதால் அவரே அப்பதவியை முதலில் வகித்தவராவர். அப்பதவி 1947 ஆம் ஆண்டில் சோல்பரி யர்ப்பினடிப்படையில் நீக்கப்பட்டதால் இலங்கையில் கடைசியாக இருந்த பிரதம செயலாளர் R. H. டிறேற்றன் என்பவராவர். பிரதம செயலாளரைப் பிரதம காரியதரிசி எனவும் வழங்குவர். அவர் ஆள்பதிக்கு அடுத்த படியில் அதிகாரமுள்ளவராவர். ஆள்பதிக் காகப் பதிற் கடமைபுரிபவரும் பிரதம செயலாளரே.

அத்தியாயம் 28

டொனமூர் திருத்தம் பற்றிய விவாதம்

டொனமூர் அறிக்கை வெளியானதும் அதைப்பற்றிப் பல விதமான அபிப்பிராயங்கள் எழுந்தன. சேர். இராமநாதன் அதனைப் பார்த்தவுடனேயே அது இலங்கையருக்கு உதவாதது என்று கூறினர். அதற்கு அவர் கூறிய காரணம் டொனமூர் அமைப்பில் இலங்கையருக்குப் பூரண சுயராச்சியம் அமையவில்லை என்பதே. டொனமூர் அமைப்பில் சர்வசனவாக்குரிமை அமைந்ததைச் சிங்களப் பெரியார்கள் விரும்பவில்லை. பெரும்பான்மையினராய தங்களுக்குச் சனநாயக அமைப்பில் ஆளுரிமை கிடைக்கும் என எண்ணியவர்களுக்கு இந்தியர் வாக்குரிமை பெற்று இலங்கையிற் செல்வாக்குப் பெறுவது வெகுவாகக் கசந்தது. அவர்கள் முந்திய சட்ட சபையின் சில மாற்றங்களையே எதிர்பார்த்திருந்தனர்.

டொனமூர் அறிக்கையை மேலெழுந்தவாரியாகப் படித்துப் பார்த்த ஒரு பெரியார் பின்வருமாறு கூறினர்.

1. டொனமூர் திருத்த சபையினர் இலங்கையர் கேட்டவற்றைக் கொடாமற் கேளாதவற்றையே கொடுத்துள்ளார்கள்.
2. இலங்கையில் நிலவும் வகுப்பு வேற்றுமையை நீக்கித் தேசிய ஒற்றுமையை உருவாக்க அது ஏதுவாகலாம் எனக் கருதப்பட்ட திட்டம், வகுப்பு வேற்றுமையை மேலும் வளர்ப்பதற்கு வசதி செய்துள்ளது.
3. அதிலுள்ள நிர்வாக சபைமுறை விரும்பத் தக்கதன்று.
4. நிதி அலுவலில் அமைக்கப்பட்டுள்ள தடை முறைகள் இலங்கையருக்கு அமைவாக இல்லை.

டொனமூர் அறிக்கை 27-9-1928 முதலாகப் பழைய சட்ட சபையில் விவாதிக்கப் படலாயிற்று. விவாத ஆரம்பத்தில் பிரதம காரியதரிசி குடியேற்ற மந்திரியாரின் ஆணைக் கடிதத்தைப் படித்தார். அதன்படி விவாதத்தில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரே கலந்து கொள்ளலாமென்றும், உத்தியோக அங்கத்தவர் விளக்கத்துக்காக ஏதாவது பேசலாம் என்றும் விவாத முடிவில் அவர்கள் வாக்களித்தலாகாது என்றும் அறிவிக்கப்பட்டது.

டொனமூர் அரசியற்றிருத்தஞ் சம்பந்தமாகப் பல பிரேரணைகள் பிரேரிக்கப் படுவதாக அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தன. அப் பிரேரணைகளைப் பிரேரிக்கு முகமாக நிர்வாகசபையிலா, சட்ட சபை யிலா வாதப் பிரதிவாதங்களை நடத்துவது என்பது முதலில் தீர் மானிக்க எடுத்துக் கொண்டபோது, நிர்வாக சபையிலேயே பேசிக் கொள்ளல் வேண்டுமென 7 அங்கத்தவரும், சட்டசபையிலேயே பேசிக்கொள்ள வேண்டும் என 25 அங்கத்தவரும் வாக்களித்தனர். அவர்களைவிட 12 பேர் நடுவு நிலைமை வகித்தனர்.

இலங்கை தன்னாட்சி செய்யத் தகுதியுள்ளது என்பது விவாதிக் கப்பட்டபோது 15 பேர் சாதகமாகவும், 14 பேர் பாதகமாகவும், 15 பேர் வாக்களியாமலும் இருந்தனர். டொனமூர் அமைப்பில் கூறப்பட்ட நிர்வாகசபை முறை இலங்கைக்குப் பொருத்த மில்லாதது என்பது பேசப்பட்டபோது 23 பேர் சாதகமாகவும் 8 பேர் பாதக மாகவும் 8 பேர்நடுவு நிலைமையிலும் இருந்தனர்.

டொனமூர் அறிக்கையைப் பற்றி அதிகமாகப் பேசியவர் சேர். இராமநாதன் அவர்களே. அவர் டொனமூர் விசாரணைச் சபையினர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்கியமையைக் கண்டித்தும், சர்வசன வாக்குரிமையைக் கண்டித்தும் அதிகமாகப் பேசியுள்ளார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்து அவர் மணிக்கணக்காகப் பேசிய பேச்சில் அஞ்சாமை, அதிகாரம், அபி மானம் ஆராய்வு, அறிவு என்பன வெகுவாகப் புலப்படுகின்றன. நூறு வருடங்களுக்கு முன் சட்டசபை ஆரம்பிக்கப்பட்ட கால முதலாக இன்றுவரை உள்ள வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று யார் சொன்னார் என்று அவர் கேட்டார். நான் 1879 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இச்சட்டசபையில் இருந்து வருகிறேன். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பாதகமாக இதுகாறும் இருந்ததில்லை. நான் தமிழராய சைவர்களுக்கும், தமிழராய கிறித் தவருக்கும், சோனகருக்கும், மலாயருக்கும் பிரதிநிதித்துவம் வகித் திருக்கிறேன் என்று அவர் பேசினார்.

ஆள்பதியின் அதிகாரத்தையும் அவர் ஆராய்வின்றி வல்லா ளனாய் அவ்வப்போது நடந்து கொண்ட பழைய வரலாறுகளையும் அஞ்சாது கூறிக் கண்டித்தார். பறங்கியருள் பறங்கியரான றிச்சார்ட் மோகனின் ஆலோசனையைக் கேட்டு ஓர் ஆள்பதி நீதியீனமாக நடந்தார் என்றார். இன்னோர் ஆள்பதி பொன்னம்பலம் குமார சுவாமியின் (இராமநாதனின் தமையனார்) நியமனத்தில் தம் அதி காரத்தை வரம்புமீறி உபயோகித்தார் என்றார்.

''ஆள்பதிக்கு ஆணைச்சபையினர் அளித்த அதிகாரம் வெகுவாகக் குறைக்கப்படுதல் வேண்டும்'' என்னும் பிரேரணை பிரேரிக்கப்பட்ட போது அதற்குச் சாதகமாக 21 பேரும் பாதகமாக நால்வரும் வாக்களித்தனர். அவர்களிடப் பன்னிருவர் நடுவு நிலைமை வகித்தனர். அதனைத் தொடர்ந்து ஆள்பதியின் ஒதுக்கதிகார வலு குறைக்கப்படுதல் வேண்டும் எனப் பிரேரித்தபோது 21 பேர் சாதக மாகவும் நான்கு பேர் பாதகமாகவும் வாக்களிப்பப் பன்னிருவர் நடுவுநிலை வகித்தனர்.

ஆள்பதியின் அதிகாரம் ஆளிலப்பத நாடுகளில் அமைந்த வண்ணம் அமைதல் வேண்டும் என்னும் பிரேரணைக்குப் பதின்மர் சாதகமாயும் எண்மர் பாதகமாயும் வாக்களிப்ப 19 பேர் நடுநிலைமை வகித்தனர். வாக்களிக்கும் வயது எல்லோருக்கும் 21 ஆக இருத் தல் வேண்டும் என்ற பிரேரணை அதிக நேரம் பேசப்பட்டு பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

டொனமூர் திருத்தம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வாதப் பிரதிவாதங்கள் செய்யப்பட்டபோது 15-11-1928 இல் குடியேற்றக் காரியதரிசி குறுக்கிட்டுக் குடியேற்ற மந்திரியாரின் செய்தியொன்றைப் படித்தார். அதில் டொனமூர்த் திருத்தத்தின் பகுதிகளில் திருத்தங்களோ மாற்றங்களோ செய்யப்படக் கூடாது என்றும், அதனை முழுவதாக முற்றாக ஏற்றுக் கொள்வதா நிரா கரிப்பதா என்பதே தீர்மானிக்க வேண்டியது என்றும் எழுதியுள்ளார் எனப் படித்தார்.

சட்ட சபையினர் டொனமூர் அரசியலமைப்பின் பல்வேறு அம்சங் களையும் அலசி ஆராய்ந்து நிராகரித்த சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலானவற்றை வரிசைக் கிரமமாகக் குடியேற்ற மந்திரியாருக்கு எடுத்துக் காட்டி விளக்கி விண்ணப்பித்தால் அவர் இத்திட்டத்தை இலங்கையர் மீது திணிக்கமாட்டார் என்று இராம நாதன் 5-12-1929 இல் ஆணித்தரமாகவும் ஆதாரபூர்வமாகவும் இடித்துப் பேசினர். ''இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் அமைப்பு எங்களுக்கு வேண்டாம். இந்தியாவில் உள்ள நிலைமைகள் இங்கே இல்லை. நாங்கள் இங்கே நல்லுறவினராயே இருக்கிறோம்'' என்று இராமநாதன் குறிப்பிட்டார்கள்.

டொனமூர் திருத்தத்தில் நல்லியல்புகள் இல்லாமற் போக வில்லை. அதில் உள்ள நல்லியல்புகளைப் பின்வருமாறு மட்டிட்டனர்.

1. அரசாங்கசபைக்குத் தெரியப்படும் பிரதிநிதிகள் உண்மையான பிரதிநிதிகளாய், மக்கள் பிரதிநிதிகளாய் இருக்க வசதி ஏற்பட்டமை.

2. தெரியப்பட்ட வாசகர் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வசதி ஏற்பட்டமை.

3. பிரதிநிதிகள் ஓரளவுக்காயினும் எங்கள் நாட்டலுவல்களை நிர்ணயிக்கும் அதிகாரம் உள்ளவராய் இருந்தமை.

4. நூற்றுக்கு நால்வருக்கு வாக்குரிமையளிக்கப்பட்ட காலம்போய், சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டமை.

5. ஓரினத்து கு ஒருவித பிரதிநிதித்துவம் என்ற முறை நீக்கப் பட்டு எல்லாருக்கும் ஒரே வித வாக்குரிமையும் பிரதிநித்து வமும் வழங்கப்பட்டமை.

6. அரசாங்கசபை அமைப்பில் சாதாரண பிரதிநிதி எவரும் பரிபாலனத்துக்கு வேண்டிய சட்டத்தை உருவாக்க வசதி ஏற்பட்டமை.

7. இந்த நடைமுறையினால் மக்களுக்கு உரிமை, கடமை என்பன அநுபவத்தில் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டமை.

8. சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டமையால், பொதுமக் களிடம் வாக்குக்கேட்டுப் போகும் பெரியார்கள், பொதுமக் களின் தேவைகளையும் நேரில் அறிய வேண்டிய நிலைமை ஏற்பட்டமை.

கட்டாய இலவசக் கல்வி, இலவச வைத்திய வசதி, சமூக சேவை உதவி, தொழிற்சங்க உரிமை, தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கங்கள் என்பன யாவும் சர்வசன வாக்குரிமை வழங் கப்பட்டதன் பின்னரே வந்தவையாகும். ஒரு சிலருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டால் அவர்களுக்குக் கைக் லியோ வேறு சகாயமோ செய்து அவர்கள் வாக்கைப் பெறலாம். ஆனால் எல்லோருக்குமே வாக்குரிமை வழங்கப்பட்டால் எல்லோருக்கும் பொது நன்மை பயக் கக்கூடிய திட்டங்களைச் செய்தேயாகல் வேண்டும்.

ஒரு சிலருக்கு வாக்குரிமை இருந்த காலத்தில் கட்சிகள் இருக்க வில்லை. சனநாயக ஆட்சிக்கு இன்றியமையாத கட்சிகள் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னரே உருவாகச் சந்தர்ப்பம் ஏற் பட்டது. டொனமூர் திருத்தக் குழுவினருக்குப் பதினெட்டாண்டு களுக்குப் பின் வந்த சோல்பரிக் குழுவினர், வாக்குரிமையைக் கட்டுப் படுத்துவதை விரும்பாமையால் முந்திய முறை நல்லது என அவர் களும் கருதினர் என்றே கொள்ளல் வேண்டும்.

பல்லாண்டுகள் டொனமூர் அமைப்பில் மந்திரியாராயும், பின்னர் சோல்பரி அமைப்பில் மந்திரியாராயும், எதிர்க்கட்சித் தலைவராயும், பிரமதராயும் இருந்த திரு. S. W. R. D. பண்டாரநாயக இலங்கைக்கு நிர்வாகசபை முறையே நல்லது என்று கூறியுள்ளார். அதில் உண்மையுண்டு. அவருடைய அனுபவத்தைக் கொண்டே அவர் கூறியுளளார் இலங்கையில் சட்டத்துறை நாயகமாயும் பிரதம நீதியரசராயும் இருந்த சேர். அன்ரன் பேற்றம் அவர்களும் நிர்வாக சபை முறை நல்லது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதில் உள்ள ஓர் அந்தரங்க உண்மையையும் நாம் இங்கே அறிந்து கொள்ளுதல் வேண்டும். பிற்காலத்தில் நடந்த பாராளுமன்ற முறையிலமைந்த மந்திரசபைகளிலே எல்லோரும் பிரதம மந்திரியார் வழி ஒழுக்கெறும்புபோலப் போகவில்லை. எல்லோரும் ஒருவருக்கு என்றும், ஒருவர் எல்லோருக்கும் எ ற முறை திருப்திகரமாக நடைபெறவும் இல்லை. அதற்கு உதாரணம் மூகத சேன நாயகவின் மந்திரத்தில் பண்டாரநாயக ஒத்துப்போகவில்லை, டட்லியின் அரசாங்கத்தில் கொத்தலாவல ஒத்துப்போகவில் ல, கொத்தலாவலவின் ஆட்சியில் R. G. சேனநாயக ஒத்துப்போகவில்லை, பண்டாரநாயகவின் முன்னணியில் பிலிப், விலியம் சில்வா ஒத்துப் போகவில்லை. இப்படியே இவர்களுக்குப் பின் வந்தவர் அரசாங்கங்களிலும் முட்டுக் கட்டைகள் இருந்தன.

இனி பேராசிரியர் I. D. H. வீரவர்த்தனு கூறுவதுபோல டொனமூர் நிர்வாக சபைகளில் பிழைகள் இல்லாமற் போகவில்லை. ஆனற் காரியங்கள் தடைப்பட்டமைக்குக் காரணம் மந்திரிமார் சிலர் விவேகம் இல்லாதவராய் இருந்தமையும், பகிரங்க சேவையின் அமைப்புப் பிழையாய் இருந்தமையுமேயாம். நிர்வாக சபையின் பிழைக்குக் காரணம் மந்திரிமார் ஒற்றுமை இல்லாதிருந்தமையும், அவர்கள் ஒற்றுமையின்மைக்குக் காரணம் அவர்கள் போட்டி மனப்பான்மையுமே அல்லது வேறில்லை

சட்டசபை அங்கத்தவர் பெரும்பான்மையினர் டொனமூர் திருத்தத்தை எதிர்த்த விபரத்தை ஆள்பதி ஸ்ரான்லி குடியேற்ற மந்திரியார் பஸ்வீல்ட் பிரபுவுக்குத் தெரிவித்தார். அத்தோடு தமது அபிப்பிராயத்தையும் அறிவித்தார். அவற்றை எல்லாம் படித்த பஸ்வீல்ட் பிரபு, டொனமூர் அமைப்பில் சில மாற்றங்கள் செய்தார். அவர் செய்த மாற்றங்கள் பின்வருவனவாகும்.

1. பெண்கள் வாக்குரிமை பெறும் வயது 30 என்றிருந்த விதியை நீக்கி, அவர்களுக்கும் ஆண்களைப் போல 21 வயதில் வாக்குரிமை அளிக்கப்பட்டமை.

2. தொகுதிவாரியாக 65 அங்கத்தவர் தெரியப்படலாம் என்று இருந்ததை 50 ஆகவும், 12 அங்கத்தவர் நியமிக்கப்படலாம் என்பதை 8 அங்கத்தவரே நியமனம் பெறலாம் எனவும் திருத்தப்பட்டமை.

3. காலத்துக்குக் காலம் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் அரசாங்க சபைக் கூட்டங்கள் நடைபெறலாமென டொனமூர் குழுவினர் தகவுரை கூறியதை நடைமுறையில் செய்ய அநுமதிக்காமை.

கொழும்பில் உள்ள அரசாங்கசபை மண்டபத்தில் கூடுவதை விட்டுக் காலத்துக்குக்காலம் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அரசாங்க சபை வைகல்கள் நடைபெறலாம் என டொனமூர் குழுவினர் ஏன் வற்புறுத்தினர்கள் என்பது இங்கே விளங்கிக்கொள்ள வேண்டிய விடயமாகிறது. கண்டிச் சிங்களவர் இலங்கையைத் திரிசிங்கள எனவே என்றும் கருதினர். முன்னர் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இராசதானிகள் இருந்தமையைக் கருதி அவர்கள் டொனமூர் ஆணைச் சபையினர் முன் ஒரு சமஸ்டி அரசியலமைப்பையே கேட்டார்கள், தங்கள் செல்வங் கொழிக்கும் சிங்காரச் சீமையாகிய மலைநாட்டு வருமானத்தைக் கொண்டு இலங்கையின் ஏனைய பாகங்கள் வெகுவாக முன்னேற்றமடைதலையும் தங்கள் பகுதிகள் பின்தங்கிய நிலையில் கவனிப்பாரற்றுக் கிடந்ததையும் அவர்கள் கண்டு வருந்தியே சமஸ்டி அரசமைப்பைக் கேட்டார்கள். அப்படியானால் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்யலாம் என அவர்கள் கருதினர்கள் போலும்.

ஆனால் டொனமூர் சபையினர் கண்டியருடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு சிறுபான்மையினருள் பிரதான இனத்தாராகிய தமிழரையும் திருப்திப் படுத்தவே அவர்கள் திரிசிங்களவுக்குப் பதிலாக மூன்று தலைநகரங்களிலும் அரசாங்க சபை வைகல்களை நடத்தி ஓரளவுக்கு ஐக்கியத்தை வளர்க்க வழிவகுத்தார்கள் எனலாம்.

டொனமூர் திருத்தம் இலங்கைக்கு உதவாதது என்று இலங்கையர் சட்டசபையிலும், சபைக்கு வெளியிலும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அதன் பின்னரும் ஆள்பதி சேர். ஹேர்பேட் ஸ்ரான்லி இலங்கையரின் மனநிலையை அறிந்து கொள்ளாமல் அத்திட்டத்தை எதுவிதத்திலும் இலங்கையருக்குத் திணித்துவிடவே முயற்சி செய்தார். அவர் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரைத் தனித்தனி கண்டு அதனை ஏற்றுக்கொள்ளுமாறு

நட்புரிமையிற் கேட்டார். அங்ஙனமே முன்னர் 1920 ஆம் ஆண்டிலேயும் ஆள்பதி மனிங் சட்டசபையினரிடம் ஆசை வார்த்தைகூறி ஆதரவுபெற்றார். ஆனால் இம் முறை ஆள்பதியின் முயற்சி பயனளிக்கவில்லை என்றே அவர் 2-6-1929 இல் குடியேற்ற மந்திரியாருக்கு முதலில் எழுதினர்.

பெரியவர்கள் மறுப்புக்குப் பிரதான காரணம் சர்வசன வாக்குரிமையே எனப் பேசப்பட்டது. வளர்ந்துவரும் இந்தியத் தமிழரின் வாக்குரிமை கட்டுப்படுத்தப்படுவதாலல் சிங்களப் பிரமுகர்கள் சர்வசன வாக்குரிமையோடு டொனமூர்த் திருத்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என இடைக் காலத்தில் நிலைமை மாறலாயிற்று. எனவே அவர்கள் 1923 ஆம் ஆண்டில் இருந்த வருமானம், ஆதனம், கல்வியறிவு ஆகிய தகமைகள் இப்போதைக்கும் இருத்தல் வேண்டும் என்று கூறினர்.

ஆனால் குடியேற்ற மந்திரியார் எவர்களுடைய அபிப்பிராயத்துக்கும் செவிகொடாது, 10-10-1929 இல் டொனமூர் திருத்தம் சில சிறிய மாற்றங்களுடன் இலங்கையில் நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும் என அறிவித்தார். அன்றி அதில் வேறெவ்விதமான மாற்றங்களும் செய்யக் கூடாதெனவும், நிர்வாக சபைமுறை இருத்தல் வேண்டும் எனவும், ஆள்பதியின் மேலதிக சிறப்பதிகாரங்கள் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கு முகமாக இருத்தல் வேண்டும் என்றும், அதில் அமைந்த அடிப்படை மாற்றங்களாய வகுப்புவாதப் பிரதிநிதித்துவ நீக்கம், சர்வசன வாக்குரிமை வழங்கல், சட்ட நிரவாக சபையின் அதிகாரம் என்பன நிலவுதல் வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

"டொனமூர் யாப்பைக் குடியேற்ற மந்திரியார் செய்த திருத்தங்களோடு இலங்கையின் நன்மையின் பொருட்டு ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்." என்னும் பிரேரணை குடியேற்றக் காரியதரிசியின் பெயரில் இருந்தது. அப்பிரேரணையை அவருக்காகப் பதிற்கடமையாற்றிய F. O. ரைறல் 6-12-1929 இல் பிரேரித்தார். அந்த நேரத்தில் H. A. P. சந்திரசேகரம் அவர்கள் அறிக்கைக்கு எதிராகவும், அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறியவர்களைத் தாக்கியும் அருமையாகப் பேசினர். அப்பிரேரணை 12-12-1929 இல் வாக்களிப்புக்கு விடப்பட்டது. அதிலே டொனமூர் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்று வாக்களித்த 19 பேரும் பின் வருமாறு. அவர்கள் பெயர்களின் முன் கௌரவ திரு என்று கூட்டி வாசிக்கவும்.

1. D. H. கொத்தலாவல
2. E. R. தம்பிமுத்து
3. A. C. G. விஜயகூன்
4. N. T. மாட்டின்
5. C. E. விக்ரர்கொறியா
6. C. H. Z. பர்ணந்து
7. H. R. பிறீமன்
8. டொன். பாரன். யயத்திலக
9. G. E. மதவல
10. A. F. மொலமுரே
11. F. A ஒபயசேகர
12. D. S. சேனநாயக
13. V. S. த. விக்கிரமநாயக
14. W. A. த. சில்வா
15. P. B. றம்புக்வெல
16. T. L. வில்லியஸ்
17. M. J. கேரி
18. G. R. த சில்வா
19. C. E. ஹேவ்ஸ்

டொனமூர்த் திருத்தம் இலங்கைவாழ் மக்களுக்கு எவ்வாற்றானும் உதவாதது என எதிராக வாக்களித்தவர் பின்வரும் 17 பேராவர்.

1. N. H. M. அப்துல்காதர்
2. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
3. வைத்திலிங்கம் துரைசுவாமி
4. E. W பெரேரா
5. C. W. W. கன்னங்கரா
6. K. பாலசிங்கம்
7. T. B. யயா
8. H. M. மாக்கான் மரக்கார்
9. அருணாசலம் மகாதேவா
10. I. X பெரேரா
11. சு. இராசரத்தினம்
12. M. M. சுப்பிரமணியம்
13. G. A. H. வில்லே
14. T. M. சபாரத்தினம்
15. K. நடேச ஐயர்
16. C. E de வொஸ்
17. H. A. P. சந்திரசேகரம்

டொனமூர் திருத்தம் இரண்டே இரண்டு மேலதிக வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பாதகமாக இருந்த திரு. தம்பிமுத்து திடீரென மனம் மாறியோ மாற்றப்பட்டோ சாதகமாக வாக்களித்தார். அவர் பாதகமாக வாக்களித்திருந்தால் உபதலைவர் சேர். யேம்ஸ் பீரிஸ் தமது அறுதியிடும் வாக்கை அளிக்க வேண்டி நேர்ந்திருக்கும். அன்றி அவர் வாக்களிக்காமல் இருந்தமை சம்பிரதாயத்துக்குப் பிழையானது என சேர். இராமநாதன் உபதலைவரிடமே கூறியுமுள்ளார். அன்றி சிங்களப் பிரமுகர்கள் மூந்திய விவாதங்களில் பாதகமாக வாக்களித்துவிட்டு இறுதியில் சாதகமாக வாக்களித்தமையைச் சுட்டிக் காட்டினர். அவ்வங்கத்தவரைச் சிலர் நெருக்கியும், அச்சுறுத்தியும் சாதகமாக வாக்களிக்கச் செய்தமை தமக்குத் தெரியும் என்றும் வெளிவெளியாகக் கூறினர்.

சேர். இராமநாதன் பேசும்போது மேலும் பல அந்தரங்க அலுவல்களை அம்பலமாக்கினர். குடியேற்ற மந்திரியார் 10-10-1929இல் வெளியிட்ட அரசுக் கட்டளையில் **டொனமூர்த் திருத்தத்தின் வெற்றி இலங்கைப் பிரதிநிதிகள் கையிலேயே உள்ளது** என்றே எழுதினர் என்றும் ஆங்கில பாராளுமன்றச் சம்பிரதாய யாப்பு முறைகளில் ஒரு யாப்பை மாற்றி இன்னொரு யாப்பை நிலவச் செய்வதற்கு மூன்றில் இரண்டு அங்கத்தவரோ அதற்கு மேற்பட்ட தொகையினரோ வாக்களித்தல் வேண்டும் என்றும் எடுத்துக் காட்டினர். கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்க நாடுகளில் மாத்திரமன்றிச் சாதாரண வர்த்தகக் கொம்பனிகளிலேயே விதிகள் உபவிதிகள் பிரமாணங்கள் ⅔ வாக்களிப்பிலேயே மாற்றியமைக்கப்படுகின்றன என்றும் கூறினர்.

சேர். இராமநாதன் டொனமூர் அறிக்கையை எதிர்த்து நாட்கணக்காகப் பேசியதோடு விடாது, தமது எண்பதாவது ஆண்டுத் தளர்ச்சியையும் முதுமையையும் பாராது நாட்டின் நலங்கருதி இத் திட்டத்தை எதிர்த்துப் பல காரணங்கள் காட்டி நீண்டதொரு நினைவேட்டை எழுதிப் பிரசுரித்து அதனைக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று குடியேற்ற மந்திரியாரையும் பிற மந்திரிகளையும் கண்டு நியாயம் வழங்குமாறு கேட்டார்.

''என்னுடைய நினைவேடு பிரித்தானிய பாராளுமன்றத்தின் நேர்மையான தீர்ப்பை அவாவி நிற்கிறது. அது இலங்கையில் ஆள்பதிகள் இருவர், டொனமூர் ஆணையாளர் நால்வர், குடியேற்ற மந்திரிகள் இருவர் ஆகிய ஆங்கிலப் பெரியார்கள் எண்மரின் மனச் சாட்சி காற்றிலே பறந்தமையைக் கண்டதாகும். டொனமூர்

திருத்தம் ஓர் அவசரகால அநுபானமாகலாம். பதவி ஏற்று இரண்டு ஆண்டுகளாவதற்குள் பீதிபிடித்த மனத்துடன் தமது பதவியை விலகல் செய்த ஆள்பதி கிளிபேட் அவர்களின் ஏக்கவாயு நோய்க்கு டொனமூர் திட்டம் ஏற்ற மருந்தாகலாம். ஆனால் இலங்கைவாழ் மக்களுக்கு அது வேண்டத் தக்கதன்று.''

''எனவே 1879 ஆம் ஆண்டு முதலாக உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் முதல்வரும், சட்டசபையின் தந்தை எனவும் பெயர் பெற்ற நான் எனது கடமை காரணமாக ஆள்பதி கிளிபேட் பிழை யாகவும் திரித்தும் விளக்கங் கூறியவற்றுக்கு உண்மையான விளக்கங் கூறவே முடியவனுகின்றேன். டொனமூர் திருத்த சபையினர் கடவுளுக்கும் மனிதனுக்கும் முன்னால் பாவஞ் செய்ததுமன்றி, அறிவையும் அறியாமையையும் ஒருசேர மதித்தும் உள்ளார்கள். எனவே ஆள்பதியைக் கண்டு இதன் விளக்கத்தைக் கூறியபோது, அவர் இதனை உங்களுக்கு, எழுதுமாறு என்னிடம் பணித்தார். எனவேதான் இதனைத் தங்கள் மனச்சாட்சிக்கு அமையச் செய்யுமாறு சமர்ப்பிக்கிறேன்.'' என்பன இராமநாதனின் நினைவேட்டிற் கூறப் பட்டதன் பொழிப்பு. இராமநாதன் நினைவேட்டைச் சமர்ப்பித்த இருவாரங்களுள் பிரித்தானிய பாராளுமன்றம் குலைக்கப்பட்டதால் அது பயனளிக்கவில்லை என்பர்.

முன்னர் மக்கலம் காலத்தில் 1911 ஆம் ஆண்டில் இருந்த, குடிசனத்தொகை 4110000 என்றும் பின்னர் மனிங்காலத்தில் 1921 ஆம் ஆண்டில் 4505000 என்றும் இப்போது டொனமூர்த் திருத்தத்தின்போது 1931 ஆம் ஆண்டில் 53,07000 என்றும் அறியக் கிடக்கிறது.

இலங்கைக் குடிசனத்தொகை 1931 ஆம் ஆண்டில் இருந்த அமைப்பு பின்வருமாறு.

சிங்களவர்	...	3473029
தமிழர்	...	1417477
சோனகர்	...	325913
பறங்கியரும் பிறரும்	...	32315
மலாயர்	...	15977
ஐரோப்பியர்	...	9254
வேடரும் பிறரும்	...	32000

அத்தியாயம் 29

டொனமூர் கண்ட அரசாங்க சபை

முன்னர் கோல்புறூக் கண்ட சட்டசபை இலங்கையில் 1833 ஆம் ஆண்டு தொடக்கம் 1931 ஆம் ஆண்டு வரையும் நிலவியது. காலத்துக்குக் காலம் 1889, 1910, 1920, 1924 முதலாய ஆண்டுகளில் ஏற்பட்ட சிற்சில சிறுமாற்றங்களேவிட அந்தச் சட்டசபையின் அடிப்படையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற மந்திரியாருக்குக் கட்டுப்பட்டு ஆள்பதியும், அவருக்கு உதவியாக இருந்த உத்தியோக அங்கத்தவராய ஆங்கிலேயருக்குமே எல்லாவிதமான அதிகாரங்களும் இருந்தன. அவர்கள் காலத்துக்குக் காலம் கட்டளைச் சட்டங்கள் மூலம் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் அதிகரித்துக் கொண்டார்களே அல்லாமல், இலங்கை வாசிகளை ஆட்சியதிகாரத்தில் இருத்திப் பழக்கினார்களல்லர். அருணாசலம் கேம்பிரிச் சர்வகலாசாலைப் படிப்போடு குடியியற் சேவையிற் பல்லாண்டு கடமையாற்றி அநுபவம் பெற்றவராயிருந்த போதிலும், குடியேற்றக் காரியதரிசியாக உத்தியோக உயர்வு பெறவில்லை. அன்றி ஒருமாகாண அதிபராக நியமனம் பெறவுமில்லை. இராமநாதன் தலைசிறந்த சட்ட அறிஞர் நாயகம் என ஆங்கிலேயரான பிரதம நீதியரசர்களாற் பாராட்டப் பெற்றவர். அவர் வெகுதிறமையாகச் சட்டத்துறை நாயகத்தின் கடமைகளையும் பார்த்தவர். ஆனால் அவரை வெள்ளைக்காரர் சட்டக் காரியதரிசியாகவோ உயர் நீதியரசராகவோ பதவியில் உயர்த்தவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் இலங்கையர் என்பதேயாம்.

டொனமூர் கண்ட அரசாங்க சபையின் வண்ணம் அமைந்த அரசாங்கத்திலேயும் ஆங்கிலேயரிடமே பிடி இருந்தது. இலங்கையருக்கு ஒரு சில துறைகளில் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டது. ஆங்கிலேயரே பிரதான பொறுப்புக்களைத் தமது பரிபாலனத்தில் வைத்திருந்தனர். இலங்கையின் பகிரங்க சேவையுட்பட்ட பரிபாலன முறையையும், நிதிபரிபாலனத்தையும், நீதிபரிபாலனத்தையும் முறையே பிரதம காரியதரிசி, நிதிக் காரியதரிசி, சட்டக் காரியதரிசி ஆகிய அரசாங்க உத்தியோக அங்கத்தவரே பரிபாலித்தனர். அவர்கள் குடியேற்ற மந்திரியாரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலேயராயே ஆரம்ப காலங்களிலிருந்தனர். இரண்டாவது உலக மகாயுத்த நெருக்கடிகளுக்குப் பின்னரே முதன் முதலாக சேர் ஒலிவர் குணத்திலக அவர்கள் நிதிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

மேன்மை தங்கிய ஆள்பதி அவர்கள்

இலங்கை அரசாங்கத்தின் அச்சாணி ஆள்பதி அவர்களே. இலங்கை அரசாங்கம் என்னும்போது அது ஆள்பதியின் அரசாங்கம் எனவே கூறப்படும். மக்கள் அரசாங்கம் என்றே எங்கள் அரசாங்கம் என்றே, கட்சி அரசாங்கம் என்றே அக்காலத்தில் அது வழங்கவில்லை. மக்களுக்கு அதிகாரிகளின் அரசாங்கம் எனவே அது அமைந்திருந்தது. ஆள்பதி முடியின் பிரதிநிதியெனவே அவருடைய உரிமை யோலியில் குறிக்கப்படுவது வழக்கம். அவருக்கு முடியின் பெயரால் அதிகாரம் வழங்கப்பட்டது. அரசாங்கம் சம்பந்தமான எல்லாப் பொறுப்புக் களும் அதிகாரங்களும் ஆள்பதியின் தோளிலேயே சுமத்தப்பட்டன. அரசாங்கம் என்பது ஆள்பதியின் ஆட்சியேயாம்.

பூரண சுயாட்சி செய்வதற்கு இலங்கையருக்குப் போதிய பயிற்சி இல்லாமையால் அவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் ஒரு பகுதியையே டொனமூர் குழுவினர் வழங்கினர். ஆகவே ஆள்பதிக்கு இது காறும் இருந்துவந்த அதிகாரம் மாற்றியமைக்கப்பட வேண்டிய தாயிற்று. அதிகாரமும் பொறுப்பும் இடம் மாறியமையும் காலத் தில் பல பிரச்சினைகள் ஏற்படலாமாகையால், அவற்றைத் தீர்த்து நிலைமையைச் சீராக்குவதற்காக ஆள்பதிக்குச் சிறப்பதிகாரம் வழங்கப் படலாயிற்று. இச்சிறப்பதிகாரம் ஒதுக்கதிகாரமாக இருந்ததேயல் லாமல் நிர்வாக அதிகாரமாக இருக்கவில்லை எனவே அரசாங் கத்தின் பாரம் ஆள்பதியின் தோளில் மாத்திரம் இருக்கவில்லை. அரசாங்கத்தின் ஒரு பாகத்துக்குப் பொறுப்பாக ஆள்பதியும், ஒரு பாகத்துக்குப் பொறுப்பாக மக்கள் பிரதிநிதிகளும் அமர்ந்தனர்.

ஆள்பதியின் ஆளெல்லையில் நடைபெறும் அலுவல்கள் யாவுக் கும் அவர் குடியேற்ற மந்திரியாருக்கு விளக்கம் கொடுத்தல் வேண் டிய நியதியிருந்தது. அவருடைய ஆளெல்லை அலுவல்கள், பாது காப்பு, வெளி நாட்டலுவல்கள், அகக்குடியேற்றம், கப்பல்களின் தொகை, வர்த்தக உடன்படிக்கைகள், நிதிபரிபாலன சேவைகள், நீதிபாலனம் என்பனவும் பிறவுமாம். அவர் இக்கடமைகளைச் செய் வதற்கு அரசாங்க உத்தியோகத்தர் எனப்பட்ட மூன்று காரியதரிசி களும் அவருக்கு உதவியாக இருப்பர். அன்றி அவர் பக்கத்துக்குப் பாடுவதற்கு நியமன அங்கத்தவர் எண்மர் இருப்பர். காரியதரி சிகள் மூவருக்கும் மந்திரிமார் சபையிலாவது அரசாங்க சபையிலாவது வாக்களிக்கும் உரிமையில்லையெனவே நியமன அங்கத்தவரின் ஆதரவு ஆள்பதிக்குப் பற்றுமலே இருந்தது. எனவேதான் அவருக்கு விசா லித்த ஒதுக்கதிகாரம் வழங்கப்பட்டது.

ஆள்பதிக்கு 1931 ஆம் ஆண்டின் கழகத்துப் பணியினுல் கட்ட ளைச் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. அவர் கட்டளைச் சட்டங்களை அரசாங்கசபையின் உடந்தையோடும் இயற் றலாம், உடந்தையில்லாமலும் இயற்றலாம். அவருடைய கட்டளைச் சட்டங்களுக்குக் கழகத்துப் பணிகளுக்குள்ள அதிகாரம் உண்டு. அவசரகால நிலைமைகளில் அவர் திணைக்களங்களின் பரிபாலன அலு வல்களைத்தாமே விரும்பியவாறு நடத்தலாம். அவர் குடியேற்ற மந்திரியாருக்கு விளக்கங் கூறக் கூடிய வகையில் பகிரங்க சேவை யாளரின் நியமனம், மாற்றம், உயர்ச்சி, வேலை நீக்கம், சிட்டாசார விளக்கம், தண்டனை என்பனவாதிய அலுவல்களைக் கவனித்து நடத்தப் பூரண அதிகாரம் உடையவராவர். இங்ஙனமாக அவர் சட்டஞ்செய்ய வரிவிதிக்க, பணஞ்செலவிட, அரசாங்க சபையின் சம்மதமின்றித் தம்மாணையைச் செலுத்த அதிகாரமுள்ளவராயி ருந்தார். அவருக்கு மேலதிகாரியாகக் குடியேற்ற மந்திரியார் ஆலோசனை கூறும் அளவிலே இருந்தார் என்பதன்றி அவர் கட்டளை யிடும் அளவில் இருந்தார் என்பதும் மிக அருமையே. அன்றிக் குடி யேற்ற மந்திரியாருடன் ஆள்பதி நேரில் தொடர்பு கொள்ளும் உரிமை இருந்தது. ஆனல் அரசாங்கசபை மந்திரியொருவர் ஆள்பதி அவர் களுக்கூடாகவே குடியேற்ற மந்திரியாரோடு தொடர்புகொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டது. எனவே ஆள்பதியின் அதிகாரம் அதிக மாகவே நிலவியது.

அரசாங்க சபைக் காலத்திலே ஆள்பதி ஆலோசனை கூறுப வராயும், உதவியாளராயும், மேலதிகாரியாயும் இருந்தார். அவர் இராசப் பிரதிநிதியாகையால் அரசாங்க விழாக்களிலும், கொண் டாட்டங்களிலும், பங்கு பெறுபவராயிருந்ததோடு, மன்னருடைய பெயரால் தகுதி வாய்ந்த மக்களுக்குப் பட்டங்கள் பரிசுகள் வழங்கு பவராயும் இருந்தார்.

ஆள்பதியே அரசாங்க சபையைக் கோலாகல வைபவத்திடையே ஆரம்பித்து வைப்பது வழக்கம். அவர் அரசாங்க சபையைக் குலைக் கவும் அதிகாரமுள்ளவர். அரசாங்க சபையின் பிரதிநிதிகள் வரிசையிலே பிரதிநிதித்துவம் பெறுத சமூகங்களின் நன்மையின் பொருட்டு எட்டு அங்கத்தவரை, நியமிக்கும் அதிகாரமும் அவருக் கிருந்தது. அரசாங்க சபையின் மந்திரிமாரை, சபைமுதல்வர் ஆகிய பெரியவர்களை ஆங்கீகரிக்கவும், சபையின் நடைமுறைகளைக் கண்காணிக்கவும், சட்டங்களுக்குச் சம்மதமளிக்கவும், சட்டங்களைத் தடை செய்யவும், அவருக்கு உரிமையதிகாரம் உண்டு.

ஆள்பதி மசோதாக்களுக்கு ஆங்கீகாரம் வழங்கவும், வழங்க மறுக்கவும் மன்னர் பிரானின் ஆராய்வுக்கெனத் தவணையிடவும் சட்டங்களை ஆறுமாதகாலம் நடைமுறைக்குமுன் தடை செய்துவைக்கவும், அவற்றை அரசாங்க சபையிலே மீள ஆலோசிக்குமாறு திருப்பியனுப்பவும் அதிகாரமுள்ளவராவர். அவர் குடியேற்ற மந்திரியாரின் ஆலோசனையின் வண்ணம் கடமையாற்றுபவராகையால், அவர் எவ்வலுவல்களையும் குடியேற்ற மந்திரிக்கு அறிவித்தல் வேண்டும். நாட்டில் அரசியற் குழப்பங்கள், கலகங்கள், கலவரங்கள் முதலியன உண்டானால் அவர் ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் தாமே ஏற்று நடத்துவார். ஆனால் அக்காலத்தில் நடைபெறும் வரலாற்று வைபவங்களைப் பூரணமாகக் குடியேற்ற மந்திரியாருக்கு அறிவித்தல் வேண்டும்.

முன்னர் 1920 ஆம் ஆண்டின் வேத்தியற் கற்பனையின் வண்ணமும் பின்னர் 1923 ஆம் ஆண்டின் கழகத்துப் பணியின் வன்மையாலும் ஆள்பதிக்கு அளிக்கப்பட்ட அதிகார வலுக்கள் அப்படியே இருத்தல் வேண்டும் என்றும், அவற்றுள் முன்னர் 1920 ஆம் ஆண்டின் திருத்தத்தின் 9ஆம் உறுப்பை மாத்திரம் நீக்கி விடலாம் என்றும் டொனமூர் ஆணையாளர் தகவுரை கூறினர். அன்றித் தமது புதிய திருத்த அமைப்பில் பின்வரும் உறுப்புகள் அமைந் திருத்தல் வேண்டும் எனவும் வரைந்தனர். அவற்றின் வண்ணம் ஆள்பதி பின்வரும் முறிகளுக்குத் தமது ஆங்கீகாரத்தைக் கொடுக்க மறுக்கலாம்.

1. ஒரு சமயத்தவருக்கோ, ஓர் இனத்தவருக்கோ இல்லாத சலுகைகளைப் பிற இனத்தவருக்கோ சமயத்தவருக்கோ வழங்க முற்படும் முறி
2. பகிரங்க சேவை உத்தியோகத்தருடைய உரிமைகளையோ சலுகைகளையோ தப்பாகக் கருத வைக்கும் முறி.
3. இலங்கையின் பொருளாதார வளத்தின் நிலைமையைப் பாதிக்கும் முறி.
4. இலங்கையின் பாதுகாப்பையோ, பொதுசனப் பாதுகாப்பையோ அன்றி கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை, தன் விருப்பார்வப்படை என்பன சம்பந்தமான முறி.
5. இலங்கையின் பிறநாட்டு வர்த்தகத்தையோ, துறையையோ, துறைமுகத்தையோ, பிறவற்றையோ பாதித்துப் பேரரசாங்கத்தைப் பாதிக்க வரும் முறி.
6. இலங்கையின் நீதிபரிபாலனஞ் சம்பந்தமான முறி.

எனவேதான் அரசாங்க சபையில் நிறைவேற்றப்படும் முறிகளைக் கையாளும்போது ஆள்பதிக்குப் பின்வரும் ஆறு வழிகளை டொனமூர் ஆணையாளர் வகுத்தளித்தனர். அவர்:

1. முறிகளுக்கு ஒப்பங் கொடுக்கலாம்.
2. மன்னர் பிரானின் பிரியத்தை முன்னிட்டு ஒதுக்கி வைக்கலாம்.
3. அவற்றைத் திருப்பி ஆலோசிக்க அனுப்பி விடலாம். அவற்றில் திருத்தங்கள் கூ விடலாம்
4. அம்முறி அரசாங்க சபையின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தவர் ஆதரவில் நிறைவேற்றப்பட வேண்டும் எனத் திருப்பி விடலாம்.
5. ஒரு காலவரையறை (ஆறுமாதம்) அம்முறியைப் பின் போடலாம்.
6. ஒப்பங் கொடுக்க மறுக்கலாம்.

ஆள்பதி தமது ஆங்கீகாரத்தைக் கொடுக்கமுடியாத அலுவல்களும் உண்டு. விவாகரத்து, கைக்கூலி, நீதிசம்பந்தமான அலுவல்கள், சமயசம்பந்தமான சச்சரவுகள் என்பனவற்றில் அவர் தலையிடமாட்டார்.

அரசாங்க சபைத் தேர்தல்

அரசாங்க சபைத் தேர்தலைப்பற்றி ஆள்பதி அரசாங்க வர்த்தமானி எனப்படும் கசற் பத்திரிகையில் பிரகடனஞ் செய்து பிரசுரித்த பின் தேர்தலுக்கான ஒழுங்குகள் செய்யப்படும். அவை சட்டக் காரியதரிசியின் மேற்பார்வையிலேயே நடைபெறுவன. தொகுதிகள் தோறும் தேர்தலை மேற்பார்வை செய்வதற்கான தேர்தல் அதிகாரிகளை ஆள்பதி உரியகாலத்தில் நியமிப்பார். முந்திய தேர்தல்களைப் போலன்றிச் சர்வசன வாக்குரிமை அடிப்படையில் நடைபெறுந் தேர்தலாதலால் வாக்களிப்போர் தொகையினர் அதிகமாக இருப்பர். எனவே வாக்களிக்குந்தானங்கள் பலவிடங்களில் வகுக்கப்பட்டு மேற்பார்வையிடுதல் ஆகிய ஒழுங்குகளும் அதிகமாகச் செய்யப்படும். வேட்பாளர் தம்மை முறையாக முன் மொழிந்தவர் பின் மொழிந்தவர் பெயர்கள், ஒப்பங்கள் நிரப்பப்பட்ட நியமன பத்திரத்துடன் 1000 ரூபா பிணையுஞ் சேர்த்துத் தேர்தல் அதிகாரியிடம் சேர்த்திருப்பர்.

சர்வசன வாக்குரிமையாதலால் வாக்காளருள் கல்வியறிவில்லாதவரும் இருப்பர். எனவே அவர்களும் வாக்களிப்பவசதியாக நிறப் பெட்டிகளில் வாக்குச் சீட்டையிடுதல் முறையென வகுக்கப்பட்டிருந்தது. அபேட்சகருக்கு நியமன நாளன்று பச்சை, சிகப்பு, மஞ்சள் என நிறங்களே வழங்கப்பட்டன. இன்று தேர்தற் சின்னங்களான ஆனை, கை, திறப்பு, நட்சத்திரம், வீடு, சைக்கிள் என்பன போல அக்காலத்தில் பலவேறுநிறங்களே கொடுக்கப்பட்டன. அவற்றுக்குத்தக்கதாகத் தேர்ந்நற்றெருதிகள்தோறும் உள்ள வாக்களிக்குந் தானங்களில் நிறப்பெட்டிகள் மறைவில் வைக்கப்பட்டிருந்தன. வாக்காளருக்கு இரண்டங்குல நீளமும் ஓரங்குல அகலமும் உள்ள வெண்ணிறத் தடித்த காகிதத் துண்டு வழங்கப்பட்டது. அவர் அதனை எவ்வித அலங்கோலமும் செய்யாமல் தமக்கு விருப்பமான அபேட்சகரின் நிறப் பெட்டியில் இடுதலே வாக்களித்தலாக இருந்தது.

சகல தொகுதிகளிலும் தேர்தல் நிறைவேறியதும் பிரதிநிதித்துவம் பெறுத சமுகங்களுக்கு ஆள்பதி பிரதிநிதிகளை நியமிப்பர். பின்னர் குறிக்கப்பட்ட நாளில் அரசாங்கசபை கோலாகலமாகக் கூடும்.

அரசாங்கசபை

அரசாங்கசபைப் பிரதிநிதிகள் அங்கே கூடியதும், சபாநாயகர் எனப்படும் வாசகர் தெரிவு நடைபெறும். தெரியப்பட்ட வாசகர் தலைமையில் அங்கத்தவர் தங்களை இரகசிய வாக்களித்தல் மூலம் ஏழு நிர்வாக சபைகளில் பிரித்துக் கொள்வார்கள். நிர்வாக சபைகள் ஒவ்வொன்றுகத் தனித்தனி கூடித் தத்தம் தலைவரைத் தெரிந்து கொள்ளும். அங்ஙனந் தெரியப்பட்ட தலைவர்கள் ஏழு பேரையும் ஆள்பதி ஆங்கிகரித்து மந்திரிமார் என நியமித்துக் கௌரவிப்பார். அவர்கள் ஏழு பேருடன் அரசாங்க உத்தியோகத்தரான காரியதரிசிகள் மூவருஞ் சேர மந்திரிமார் சபையில் பத்துப் பேர் இருப்பர். மந்திரிமார் சபைக்குப் பிரதம காரியதரிசியே தலைமை தாங்குவாராகையால், அச்சபைக்கு உபதலைவராக ஏழு மந்திரிமாருள் ஒருவர் தெரியப்படுவர். அவர் அரசாங்க சபையின் முதல்வர் எனவும் வழங்குவர். அரசாங்க சபையின் அமைப்பைப் பின்வரும் வரைவில் விளக்கலாம்.



இங்ஙனம் அமைந்த அரசாங்கசபை, முன்னர் நிலவிய சட்ட சபையின் அலுவல்களையும் சட்ட நிர்வாக சபையின் அலுவல்களை யும் நடத்தும். சட்ட நிர்வாக சபையின் அலுவல்களை மந்திரிமார் பதின்மரும் இயற்றுவர். ம திரிமார் சபையில் உத்தியோக அங்கத்தவர் மூவரும் உத்தியோகப் பற்றற்றவர் எழுவரும் இருப்பர். முன்னர் சட்ட நிர்வாக சபையில் உத்தியோகப் பற்றற்றவரும் இருத்தல் வேண்டும் என்றும் அவர்கள் சட்டசபைக்குக் கட்டுப்பட்ட வராயிருத்தல் வேண்டும் என்றும் அரசியற் பண்டிதர்கள் செய்த கிளர்ச்சி இதற்காகவேதான். அவர்கள் நிர்வாக சபையில் அரைப் பங்கினர் தெரியப்பட்ட அங்கத்தவராயிருத்தல் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்தனர். ஆனால் இத்திருத்தத்தில் அம்மந்திரிமார் இரண்டு மடங்கதிகமாயிராயிருந்தனர்

அரசாங்கசபை வைகல்கள் சட்டவாக்கஞ் சம்பந்தமாக நடை பெறும்போது அது அதிகாரம் உள்ள சபையாய் இருக்கும். சமா தானத்துக்கும், அமைதிக்கும், நல்லரசாங்கத்துக்கும் அச்சபை சட்ட மியற்றும். ஆள்பதியின் ஒதுக்கதிகாரமும், மறுப்பதிகாரமும், உறுதிப் படுத்தும் அதிகாரமும், தவணையிடும் அதிகாரமும், திரும்ப ஆராய அனுப்பும் அதிகாரமும் நிலவுதல் அல்லாதபோது சட்டசபைக்கு அதிகாரம் மெத்தவுண்டு.

இவற்றைவிட மன்னர்பிரான் குடியேற்ற மந்திரியார் மூலம் சட்டவாக்கத்தைத் தடை செய்தலும் உண்டு. இலங்கை அரசாங்க சபைக்கு ஆள்புலப்புறத் துரிமைச் சட்டஞ் செய்யவோ, தன்

நாட்டு அரச யாப்பைத் திருத்தியமைக்கும் சட்டஞ் செய்யவோ அதிகாரம் இல்லை. அன்றிப் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கையின் பரிபாலனங் காரணமாக இயற்றும் சட்டங்களை மாற்றியமைக்கும் முகமாக இலங்கை அரசாங்க சபையால் சட்டஞ் செய்யவும் இயலாது.

முந்திய சட்டசபையின் வைகற் காலத்திலே கௌரவ அங்கத்தவர்கள் நிதிக்குழுவில் அமர்ந்து நிதி அலுவல்களைக் கண்காணித்துப் பேசினார்களேயல்லாமல் அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் 1931 ஆம் ஆண்டின்பின் அரசாங்க சபையில் அங்கத்தவர் பல வேறு நிர்வாக சபைகளின் அங்கத்தவர்கள் என்ற பெருமையில் திணைக்களங்களின் அதிபர்களோடு சேர்ந்து உபமானிய மதிப்புக்களைத் தயாரிக்கும் பொறுப்புடையவராயிருந்தனர். அதனால் அரசாங்கசபை அங்கத்தவருக்குப் பொறுப்போடு ஓரளவுக்கு அதிகாரமும் இருந்ததென்பர். ஆகவே 1931 ஆம் ஆண்டு முதலாக இலங்கையின் தேசிய வரவு செலவு முறையாகத் தெரியப்பட்ட அங்கத்தவர் ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் சம்பிரதாயமும் ஏற்படுவதாயிற்று. இவ்வாறமைந்த போதிலும் அரசாங்க சபைக்கு நிதியலுவலில் முழுப்பொறுப்பும் அமையவில்லை. ஆள்பதியின் பொறுப்பிலிருந்த பகிரங்க சேவையாளர் சம்பந்தமான நிதியலுவல்கள் அரசாங்க சபையைப் பொறுத்திருக்கவில்லை. அவர்கள் சம்பந்தமான நிதியலுவல்கள் ஆள்பதியின் அநுமதியில்லாமல் அரசாங்க சபையில் பேசப்படவும் இயலாதனவாகவே இருந்தன. அரசாங்க சபை நிராகரித்த சில மதிப்பீடுகளை ஆள்பதி உறுதிப் படுத்தியுபயோகமாக்கியும் கொள்ளும் அதிகாரம் அவருக்கிருந்தது அம்மதிப்புக்களைக் கொண்டு உத்தியோகத்தரின் சலுகைப்பணமாதியன கொடுக்கப்பட்டும் வந்தன. என்றாலும் வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கசபை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்வாக்களித்தால் அரசாங்க சபையை ஆள்பதி குலைத்து விடவேண்டிய விதிச்சட்டமும் இருந்தது. அரசாங்க சபையின் 17 ஆண்டு காலத்தில் வரவு செலவுத் திட்டம்என்றுமே நிராகரிக்கப்படவில்லை. அதனால் அரசாங்கசபை குலைக்கப்படவும் இல்லை.

மந்திரிமார் சபை

1. பிரதம காரியதரிசி

மந்திரிமார் சபையின் தலைவர் பிரதம காரியதரிசி எனப்படும் உத்தியோகத்தராவர். அவரைக் குடியேற்றச் செயலாளர் என்றே இதுகாறும் அறிந்தோம். அவர் அதிகபொறுப்பும் அதிகாரமும்

வாய்ந்தவர். இலங்கையில் ஆள்பதிக்கு அடுத்தபடியில் அவரே அதிகாரமுள்ளவராய் இருந்தார். ஆள்பதி இல்லாத சமயங்களில் பதிலாள்பதியாகக் கடமையாற்றும் அதிகார உரிமையும் அவருக்கே இருந்தது. அவர் ஏனைய மந்திரிமாருக்குப் பரிபாலன அலுவல்களில் ஆலோசனை கூறுபவராய் அவர்களுடைய உதவியாளராய் இருப்பர். அவருடைய பரிபாலனப்பொறுப்பில் பொறுப்புவாய்ந்த அலுவல்கள் இருக்கும்.

வெளி நாட்டலுவல்கள், அகக் குடியேற்றம், புறக்குடியேற்றம், தாயகத்தேற்றம், பிறநாட்டொப்புவிப்பு, நாடோடிக் குற்றவாளி, மாலீதீவு அலுவல்கள், வேற்றுநாட்டவர், அரசுத் தூதுவர், பாஸ் போட் எனப்படும் துறைச்செலவு, வர்த்தக ஒப்பந்தங்கள், வர்த்தகக் கப்பல் தொகை, கப்பற்சேதம், கப்பற் சேதமீட்டல் உரிமை, கலங்கரைவிளக்கங்கள், கப்பற் சேதங்காட்டுங்குறி, பகிரங்கசேவைகள் அதன் உத்தியோகத்தரின் லீவு, உத்தியோகத்தருக்கு அரசாங்கம் அளிக்கும் உறைவிட வசதிகள், அலுவலகங்கள், அரசாங்க ஏடுகள் ஆவணங்கள், நடைமுறைகள், தரைப்படை, கடற்படை முதலியன வுள்ள இலங்கைப் பாதுகாப்பு பாசறைகள், யுத்த வீரரின் நடுகற்கள் என்பனவாதிய அலுவல்கள் பிரதம காரியதரிசியின் பொறுப்பில் இருக்கும். பகிரங்கசேவை சம்பந்தமான பரிபாலன அலுவல்களுக்கு அவரே பொறுப்புள்ளவராயிருந்தார். அவருக்கு வருடந்தோறும் £ 3000 பொன் வேதனமளித்தல் வேண்டும் எனக் கழகத்துப் பணியினால் குறிக்கப்பட்டிருந்தது. இவ்வேதனத்தைக் கூட்டவோ குறைக்கவோ அரசாங்க சபைக்கு அதிகாரம் இருக்கவில்லை.

2. நிதிக்காரியதரிசி

இவ்வுத்தியோகத்தர் இலங்கை அரசாங்கத்தின் நிதி அலுவல்களுக்குப் பொறுப்பாயுள்ளவர். இவருடைய பரிபாலனத்தில் நிதி சம்பந்தமான ஏடுகள் ஆவணங்கள், காசும் வங்கி நிலுவைகளும், பொதுப்பணம், வசக்கட்டுப்பணம், கணக்குத்தடை, திணைக்களங்களின் நிதிநிலை பேற்பார்வை, திணைக்களங்களுக்குப் பணம் ஒதுக்குதல், பணமுதலீடுகள், நாட்டின் பொதுக்கடன், காசோலைகள், காசுமாற்றம், முடிக்குரிய காசு அலுவல்கள், நிதியியற் பிரமாணங்கள் வரிவிதித்தல், வருமானம், புகையிரதச் சீட்டு விற்பனை, அரசாங்க நிலங்களை மானியமாகக் கொடுத்தல், வரவு செலவுத் திட்டம், உபமானியத்திட்டம், அரசாங்க ஒப்பந்தங்கள், சுடன் சபைகள், அரசாங்க சேமிப்பு, அரசவங்கி, பண்டசாலை மேற்பார்வை, திணைக்களங்களுக்கான தேவைப்பொருள்கள், அரசாங்க அச்சகம்,

அரசாங்க உத்தியோகத்தருக்கான வேதனங்கள் படிகள், பிரயாணச் செலவுப் படிகள், நடுவர் சபையினர் உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகள் முதலானோரின் படிகள், விடுதலை நாள் பிரயாணங்கள், லீவு விபரங்கள், ஊழியர் கோப்புகள், அரசாங்க ஊழியருக்கான பாது காப்பு, இலைப்பாற்றுச் சம்பளம், விதவைகள் அனுதைகள் பென்சன், சகாயநிதி, முத்திரை, ஆதனவரிகள், பெறுமானம் மதிப்பிடல், கணக்குப் பரிசோதனை, வருமானவரி என்பனவும் பிறவும் இருக்கும்.

இத்தகைய பொறுப்பான அலுவல்களை இவ்வுத்தியோகத்தர் முப்பெரும் பிரிவுகளில் அமைத்து நடத்துவர். அவை அலுவல்களை நடத்துதல், ஆலோசனை கூறுதல், மேற்பார்வையிடுதல் என்பனவாம், அலுவல்களை நடத்துதல் என்னும் பிரிவில் அவருக்குப் பல கடமைகள் உண்டு. அரசாங்கத்தின் நிதி நிலைமையை விளக்கிக் கூறக்கூடிய முறையில் அறிக்கைகளைக் காலந்தோறுந் தயாரித்தல், மேலதிக பணத் தைச் சேமித்துவைத்தல், அரசாங்கத்துக்கு ஏற்படுங் கடன்கள், மது பரிபாலனம், ஆய வருமானம், உப்பு முதலியவற்றால் வரும் பணத்தின் தொகை வகைகளடங்கிய வரலாறுகள் தயாரித்தல் முதலிய னவாம். இன்னும் அரசாங்கத் திணைக்களங்களின் வரவு செலவு, மேலதிகமான செலவுத்திட்டந் தயாரித்தல், காசுத்தாள் அச்சிடல் முதலியனவும் இப்பிரிவில் அடங்கும்.

ஆலோசனை கூறுதல் என்னும் பிரிவில் வரிமுதலிய வருமான முறைகளில் மாற்றங்கள் திருத்தங்கள் செய்வித்தல், செலவுத்திட் டங்கள், கடன் வாங்குதல் முதலியவற்றிலும் உள்ளூர் ஆட்சி மன்றங் களின் வரவுசெலவு மேலதிகமான செலவு ஆதிய அலுவல்களிலும் ஆலோசனை கூறலுமாம்.

மேற் பார்வையிடுதல் என்னும் அலுவலில் சகல திணைக் களங் களின் வரவு செலவு ஆகிய அலுவல்களைக் கண்காணித்தல், ஒப்பந் தங்கள், குத்தகைகள் முதலியவற்றைக் கண்காணித்தல், உத்தியோ கத்தரின் சம்பளம், உபகாரச் சம்பளம், பிரயாணச் சலுகைகள் முதலியவற்றையும், புகையிரதப் பகுதியினரின் பிரயாணச் சீட்டின் விலை முதலியன தயாரித்தலைக் கண்காணித்தலுமாம். இவருக்கு ஆண்டு வேதனம் £2000 பொன் ஒதுக்கப்பட்டிருந்தது.

3. சட்டக்காரியதரிசி

இப்பெரியார் பொதுவாக நீதிபரிபாலனத்துக்குப் பொறுப்பாக இருப்பார். இவருக்குப் பழைய பெயர் சட்டத்துறை நாயகம் என் பதாம். இவருடைய கடமைகளுள் பின்வருவன பிரதானமானவை. அவை நீதிசம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுதல், நீதி

பரிபாலனஞ் செய்தல், முடியின் பெயரால் அழி வழக்குகள் பழி வழக்குகள் என்பனவற்றை நடத்துதல், அரசாங்க சபைத்தேர்தல்களை நடத்துதல், சட்டங்களை வரைதல், பராயமற்ற அநாதைப் பிள்ளைகளை பாதுகாத்துப் பராமரித்தல் என்பனவும் பிறவுமாம். இவருக்கு ஆண்டு தோறுல் £2000 பொன் வேதனம் வழங்க விதிக்கப்பட்டது.

இங்ஙனமாக அரசாங்க உத்தியோகத்தரான காரியதரிசிகள் மூவரும் முப்பெரும் பிரிவுகளைப் பரிபாலிக்க, பரிபாலனத்தின் பாற் படும் ஏனைய பகுதியில் உள்ள அலுவல்களைத் தெரியப்பட்ட உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளான மந்திரிமார் எழுவர் தத்தம் நிர்வாக சபை அங்கத்தவர்கள் உதவியுடன் பரிபாலிப்பார்கள். அவர்களுடைய பரிபாலனத்தில் உள்ள நிலைக்களங்களும் அவர்களுடைய கடமைகளும் வருமாறு.

1. உள்நாட்டு நிர்வாகசபை

பொலிசுப் பகுதி, குற்றவாளிகள், நாடோடிகள், இளம்பிள்ளைகளுக்குத் தீமை செய்வோர், உபத்திரவங்கள், பைத்தியக்காரர், சூதாடுவோர், பந்தயம் பணயம் வைப்போர், மிருகங்களை வதைப்போர், மிருகங்களைப் பிடிப்போர், அத்துமீறி வளவுள்புகும் மிருகங்கள், பகிரங்கக் கூட்டங்கள், யாத்திரைகள், ஊர்வலங்கள், ஆயுதங்கள், கொலைக்கருவிகள், வாணங்கள், வெடிமருந்துகள், மண்ணெண்ணெய் பெற்றோல், வண்டி வாகனப்போக்கு அவற்றின் தடை, பிரசித்த வீதிகளின் உபயோகம் அவற்றை விழாவுக்காக மூடுதல், பகிரங்க விடுமுறைகள், தனிப்பட்ட அச்சகங்கள், புத்தகப் பிரசுரங்கள், சமய சங்கங்கள், ஆலயப்பணிகள், சிறைச்சாலைகள், சீர்திருத்தச்சாலைகள், பாதுகாவல் நிலையங்கள், இளங் குற்றவாளிகளைத் திருத்துதல், மது பரிபாலனம், மதுவொழிப்பு, அரசாங்க ஆராய்ச்சிக் கூடம்.

2. விவசாய நிர்வாக சபை

முடிக்குரிய நிலங்கள், வேற்றுரித்தாக்கல், முடிக்குரிய காணிகளைத் திருத்துதல், ஒதுக்குதல், அவற்றை நிர்ணயித்தல், குடியேற்றத் திட்டங்கள், காணிப்பதிவு, அரசின் காடுகள், வனலிலங்குகள், வேட்டையாடு மிடங்கள், நீர்ப்பாசனம், பயிற்சாகுபடி நிபந்தனைகள், வெள்ளத்தடுப்பு, உலாந்தா எனப்படும் நில அளவை, அவதான நிலையம், விவசாயம், காட்டு மரங்கள், விவசாய ஆராய்ச்சி, கூட்டுறவு, மிருகவைத்தியம், பண்ணைகள், மிருகங்களின் பதிவு, லாயங்கள் பந்திகள் அரசாங்க பாற்பண்ணைகள், என்பனவும் பிறவும்.

3. உள்ளூராட்சி நிர்வாக சபை

மாநகரசபைகள், நகரசபைகள், பட்டின சங்கங்கள், கிராம சங்கங்கள், சுகாதார சங்கங்கள், சுரங்கங்கள், ரத்தினக் கற்கள் கிளறல். மண், மீன்பிடி, விடுகாலி நாய்களைச் சுடுதல், கிராமக் கோடுகள், வண்டி வாகனப் பதிவுகள், நடுகல் நினைவுத் தூண் மண்டப மமைத்தலுக்கு நிலம் வழங்குதல், பொதுசன தேவைக்கு நிலம் சுவீகரித்தல், படக்காட்சி நாடகம் என்பனவற்றின் தடைகள், உப்பு, உத்தரவுகள், காப்புறுதி, வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் என்பனவும் பிறவும்.

4. சுகாதார நிர்வாக சபை

வைத்திய சேவைகள், வைத்தியசாலைகள், அடைக்கலசாலைகள், ஆரோக்கியசாலைகள், பிரசவ விடுதிகள், மருந்துச்சாலைகள், மருத்துவப் பெண்கள், தாதிகள், ஆதுலர் சாலைகள். வைத்தியப் படிப்பும் ஆராய்ச்சியும். சுகாதார சேவைகள் சுகாதாரக் கல்வி, சமூக சுகாதாரம், பிள்ளைகள் பராமரிப்பு தொற்றுநோய்த்தடை பாதுகாப்பு, மயானங்கள், மருந்துச் சரக்குக் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், அபாயகரமான பொருள்கள் விற்பனை, சலவைச்சாலைகள், பொதுசன குளிப்பிடங்கள், பிரத்தியேக பாற்பண்ணைகள், கிணறுகள் கிடங்குகள். மலசலகூடங்கள் தண்ணீர் விநியோகம், சேரி ஒழிப்பு வீடமைப்பு, நோயுற்ற பிரயாணி களின் தடுப்புநிலையம் முதலியன.

5. தொழில் கைத்தொழில் வர்த்தக நிர்வாகசபை

கைத்தொழில் நலச்சேவை, கைத்தொழிற் சபைகள், கைத் தொழில் தகராறுகள், கூலி, கூலி நிர்ணயம், வேலைநேர நிர்ணயம், இந்தியத் தொழிலாளர், வேலைத்தளங்களின் மேற்பார்வை, பாது காப்பு, வீட்டு வேலைக்காரர் பதிவு, ஆதரவற்றோருக்கு உதவி, தர்ம சாலைகள், வேலையற்றோர் பதிவு, அவசரகாலத்தில் உணவுக்கட்டுப் பாடு, வர்த்தகம், வெளிநாட்டு வாணிபம், கைத்தொழிற் காட்சிகள், இலங்கைப் பொருள்களின், வெளிநாட்டுச் சந்தைகள், வர்த்தக சங்கங் களைப்பதிவு செய்தல். பிரசுர உரிமைகள் பதிவு செய்தல், கைத்தொழிற் பொருள்களின் பதிவு, வர்த்தக அடையாளங்கள், விளம்பரப் பலகை, ஆதனப் பதிவுகள், பிறப்பு விவாகம் இறப்புப் பதிவுகள், நாணுவித குறிப்புகள் திரட்டுதல், குடிசன மதிப்பு, நூல் வெளியீடுகளின் தணிக்கை, தொழிலாளர் நட்டஈடு செய்தல், விலைக்கட்டுப்பாடு, கைத்தொழிலபிவிருத்தியும் கட்டுப்பாடும், சீட்டுகள் முதலியன.

6. கல்வி நிர்வாக சபை

ஆரம்பக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, மாவட்ட கல்விக்கோடுகள், குடிசைத் தொழில், கைப்பணி, பாடசாலைத் தோட்டம், சுயமொழிகள், மொழி பெயர்ப்புகள், பகிரங்க சேவைக்குரிய பரீட்சைகள், சர்வகலாசாலைப் படிப்பு, நூதனசாலை, விஞ்ஞானப் பத்திரிகைகள், புதைபொருளாராய்ச்சி.

7. போக்குவரத்து வேலை நிர்வாகசபை

பகிரங்க வேலைகள், அரசாங்க வீதிகள் பாலங்கள், உள்நாட்டு நீர் வாய்க்கால்கள், ஆயங்கள், சுங்கத்தரிப்புகள். போக்குவரத்து வீதித்தடைகள், நெருப்பணைத்தல், இலங்கைப் புகையிரதப்பகுதி, மின்சாரத் திணைக்களம், துறைமுகங்கள், கப்பற்படையின் எண்ணெய்க் குதங்கள், தபால் தந்தி டெலிபோன், கடல் தந்தி, ஆகாயத் தந்தி, அரசாங்கத் தந்தி. தபாற்கந்தோர் சேமிப்பு.

ஏழு நிர்வாக சபைகளிலும் எந்த எந்தத் திணைக்களங்கள் அமையலாம் எனக் கூறிய டொனமூர்க் குழுனர், அத்திணைக்களங்கள் பிற்காலப் பரிபாலன வசதியை முன்னிட்டு மாற்றியமைக்கப்படினும் அமையுமெனத் தம் கருத்தையும் தெரிவித்துள்ளார்கள்.

இங்ஙனம் அமைந்த மந்திரிமார் சபையே பழைய சட்ட நிறைவேற்றுச் சபையின் கருமங்களைக் கொண்டு நடத்தும். மந்திரிமார் தத்தம் மேற்பார்வையில் இயங்கும் திணைக்களங்களின் பரிபாலனத்துக்கு வேண்டிய பணத்தைக் கோரும் செலவு விபரத்தை ஒவ்வோராண்டிலும் ஏப்ரல் மாதம் முடிவதற்குள் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களங்களின் வருடாந்த வருமானம் செலவினங்கள் என்பனவற்றை நிதிக்காரியதரிசி நுணுகி ஆராய்வார். அதன்பின் வரவு செலவுத்திட்டம் மந்திரிமார் சபையில் தயாரிக்கப்பட்டு அரசாங்க சபையில் சமர்ப்பிக்கப்படும். அது நிறைவேற்றப்படுமாயின் தயாரித்த திட்டத்தின்படி அலுவல்கள் நடைபெறும். வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கசபை ஏற்காவிட்டால் ஆள்பதி அதனைக் குலைத்து விடுவார். அதன்பின் புதிய சபைக்கான தேர்தல் நடைபெறும். அரசாங்கசபை அங்கத்தவராய பிரதிநிதிகள் நாட்டுக்குச் சேவை செய்பவராதலாலே அவர்களுடைய சேவைக் காலத்தில் அவர்களுடைய கைச்செலவுக்காக மாதாந்தம் 500 ரூபாவும் இலவசப் பிரயாண வசதிகளும் இலவச தபால் தந்தி சாதனங்களும் வழங்கப்பட்டன. மந்திரிமாருக்கு 1500 ரூபா வழங்கப்பட்டது.

பிரித்தானிய பாராளுமன்றத்தமர்ந்த மந்திரிமாருக்கும் இலங்கை அரசாங்க சபையிலமர்ந்த மந்திரிமாருக்கும் வேறுபாடுகள் இருந்தன அங்கே அவர்கள் கருத்தொத்த மனத்தினராய் ஒரே பூட்கையுடையவராய் ஒரே கட்சியமைவுடையவராய் எல்லோரும் ஒருவருக்கும், ஒருவர் எல்லோருக்கும் உதவியும் பொறுப்பும் உடைய வராய்க் கோபுரவலிவின் கற்கூப் போலவும் வண்டிற் சில்லின் ஆரக் கம்புகள் போலவும் அமர்ந்தனர். ஆனல் இங்கே மந்திரிமார் தெரியப்பட்ட வகையானே அவர்கள் வெவ்வேறு நோக்கமும் போக்கும் உடையவராய் பொதுவான கொள்கை எள்ளளவு மில்லா தவராய், மந்திரியாய் வந்தவர்கள் மற்றவரை முந்திடவும் எந்த விதந்தனினும் ஏற்றமதைத் தாம் விரும்பிக் கூட்டு முறையில்லாமல் ஓழுகினர். எனவேதான் அவர்கள் ஆளுக்கு ஆள் எதிராகவும் வாக் களித்தும் வந்தனர்.

பிரித்தானிய பாராளுமன்றத்துக்குப் பொறுப்பும் பணிவு முள்ள மந்திரிமார் தாம் கொண்டு வந்த பிரேரணைகள் பாராளு மன்றப் பொதுச்சபையிலே தோல்வி கண்டால் உடனடியாக விலகிக் கொள்ளும் சம்பிரதாயம் நிலவுகின்றது. ஆனல் இலங்கையில் அரசாங்க சபைகளின் காலத்திலே அப்படியான யாப்பு மரபு இருக்கவில்லை. எனவேதான் மந்திரிமார் எல்லோரும் ஒரேவழி கருத்தொத்துக் கொண்டு வந்த பிரேரணைகள் அரசாங்க சபையில் வீழத்தப்பட்ட போதிலும் அரசாங்கசபை கூலைக்கப்படாமலோ மந்திரிமார் விலகல் செய்யாமலோ நிலைமை நிலவியது. அத் தகைய சந்தர்ப்பங்கள் பலவாக இருந்தபோதிலும் ஈண்டு விளக் கத்துக்காக இரண்டொன்றைக் குறிப்பில் மிகையாகாது.

உள்நாட்டு மந்திரியாராயிருந்த திரு. D. B. யயத்திலகா பாதகவேயல் நடைமுறைக் கோவையின் திருத்தப் பிரேரணையை மந்திரிமாருடைய ஆதரவுடன் கொண்டு வந்தபோதிலும் அது 27-1-1932 இல் வீழ்த்தப்பட்டது. அதனல் மந்திரிமார் விலகவு மில்லை, சபை குலைக்கப்படவுமில்லை. அதுபோலவே 9-3-1932 இல் சம்பள நிர்ணயசபை நியமனப் பிரேரணையின்போதும், 20-2-40 இல் கைத்தொழில் சம்பந்தமான பிரேரணையின்போதும் மந்திரிமாரின் நோக்கம் ஈடேறவில்லை.

அத்தியாயம் 30

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்

(16-4-1851 — 26-11-1930)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பெரியார்களுள் பொன்னம்பலம் இராமநாதனும் ஒருவர். அவர் என்ன செய்தவர் என்றும், அவர் எப்படியான மனிதன் என்றும் எடுத்தியம்ப இயலாது. அவர் எல்லாமாய் வாழ்ந்த ஓர் அதி மனிதன் என்றே கருதக் கூடிய தாக அவர் வாழ்ந்தார்.

கல்விமான், இலக்கிய விற்பன்னர், தத்துவசாத்திரி, ஞானவான், இராசதந்தரி, சீர்திருத்தவாதி, வழக்கறிஞன், சட்டவறிஞர் நாயகம், சட்டத்துறை நாயகம், சட்டசபைப் பிரதிநிதி, மக்கள் தலைவன், பரோபகாரி, தாதா, சிந்தனையாளர் என்றெல்லாம் அவரைப்பற்றித் தனித்தனியாக நூல்கள் எழுதலாம். அவர் புலவர் போற்றும் புரவலராயும் வாழ்ந்து நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் அயராது துழைத்த ஒரு மகான். அவரைப்போன்ற இன்னொரு தலைவரை இன்றும் கண்டிலேம் எனப் பெரியவர் கூறுவர்.

இராமநாதன் 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆந் திகதி பிறந்தார். அவருடைய அண்ணன் குமாரசுவாமி, தம்பி அருணாசலம். அவர்கள் மூவரும் சட்டசபையை அலங்கரித்த பெரியார்கள். அவர்கள் மூவரும் புகழ்பூத்து விளங்கியதாலே அவர்களை ஈழத்துச் சிங்கங்கள் என ஆங்கிலேயர் புகழ்ந்தார்கள். அவர்களுக்கு வழிகாட்டியாயும் துணைவராயும் இருந்தவர் அவர்களுடைய தாய்மாமனாராய சேர். முத்துக்குமாரசுவாமி என்னும் பெரியாராவர்.

இராமநாதன் இளமையிலேயே ரோயல் கல்லூரியிற் சேர்ந்து கலாநிதி போக் என்னும் பேராசிரியர் மேற்பார்வையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். போக் அவர்களின் அபிமான மாணவரான இராமநாதனைப் பெற்றோர் 1865 ஆம் ஆண்டிற் சென்னை இராசதானிக் கல்லூரியிலே சேர்த்தார்கள். ஆனால் இராமநாதனுக்குச் சென்னைவாழ்க்கை ஒத்துக் கொள்ளாமையினால் அவர் மறுபடியும் 1869 ஆம் ஆண்டில் ரோயல் கல்லூரிக்கே மீண்டார். தமது அபி

மான மாணவனே மீளப்பெற்ற போக் அவர்கள் அவருக்கு ஆர்வத் தோடு கற்பித்தார். இராமநாதனுக்கு மொழிகள், தர்க்கம், தத்துவ சாத்திரம் ஆகிய துறைகளில் ஆர்வமும் ஆழமான பாண்டித்தியமும் ஏற்பட்டன.

ரூயல் கல்லூரியை விட்டுவிலகிய இராமநாதன் அக்காலத்தில் பறங்கியருள் பறங்கியர் என்றும் தலைசிறந்த வழக்கறிஞர் என்றும் புகழ்பெற்ற றிச்சாட் மோகனுடன் சேர்ந்து சட்டநூற் பயிற்சி பெறுவாராயினர். பல ஆண்டுகள் படித்துப் பழகவேண்டிய அத் தொழிலை இராமநாதன் தமது கடும் உழைப்பினாலும் உற்சாகத்தி னாலும் இரண்டு ஆண்டுகளிற் கற்று வழக்குரைத்தற்கான அனுமதி யைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராயினர். அவர் 1873 ஆம் ஆண்டில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணஞ்செய்து தொழிலில் ஈடுபடுவாராயினர். அக்காலத்தில் சட்டத்துறையில் மெத்தப்பெரிய விவேகிகளாய சேர். றிச்சாட் கெயிலி, சேர். சாமுவேல் கிரனியர், பிற்ஜிரேய் கெலி, சேர். றிச்சாட் மோகன், சேர். C. P. லேயாட் ஆகிய விற்பத்திமான்கள் இருந்தார்கள்.

இராமநாதனுடைய மாமனாராய சேர். முத்துக்குமாரசுவாமி 4-5-1879 இல் இறந்தபின் சட்டசபையில் அவருடைய இடத்தில் யாரை நியமிக்கலாம் என்று பல சங்கங்கள் யோசித்தன. அக்காலத் தில் பெயர் பெற்றுவிளங்கிய கிறிஸ்தவர் பிரிட்டோ என்னும் முதிய வழக்கறிஞருக்குச் சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர், ஐரோப் பியர் ஆகிய மக்களிடையில் அளவுகடந்த செல்வாக்கிருந்தது. அவர்கள் எல்லோரும் பிரிட்டோவை நியமித்தல் வேண்டும் என முதலில் விரும்பினர். அங்ஙனமே பலர் கூட்டங்கள் கூடியும் தீர் மானித்தனர். ஆனால் யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையிலே கறல் விசுவநாதபிள்ளையவர்கள் தலைமையிலே கூடிய கூட்டத்தில் இராமநாதனையே சட்டசபை அங்கத்தவராக ஆள்பதி நியமித்தல் வேண்டும் என்று ஆறுமுகநாவலர் தங்கருத்தைத் தெரிவித்தார். அதனால் எல்லோரும் இராமநாதனுக்கே சாதகமாக அபிப்பிராயந் தெரிவித்தமையால் அவர் 27-8-1879 இல் சட்டசபை அங்கத்தவராய் நியமிக்கப்பட்டார்.

இலங்கைவாழ் தமிழருக்கும் சோனகருக்கும் பிரதிநிதியான இராமநாதன் இலங்கையர் எல்லோருக்கும் நன்மை உண்டாகக் டிய அளவில் சட்டசபையில் தொண்டு செய்தார். அவருடைய சேவையைப் பாராட்டிய பிரித்தானிய அரசாங்கம் அவருக்கு 1889 ஆம் ஆண்டில் C. M. G. என்னும் பட்டத்தையும், 1903 ஆம்

ஆண்டில் K. C. பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தது. அவர் காலத்தில் K. C. பட்டத்துக்குப் பெரிய மதிப்பிருந்தது. அக்காலத்தில் அவரொருவரே அப்பட்டத்தைப் பெற்றிருந்தார்.

சட்டசபையில் இராமநாதனுடைய பேச்சுக்குத் தனிமதிப்பிருந்தது. ஐரோப்பியர் தமது ஓய்வு நேரங்களில் அவருடைய ஆற்றொழுக்குப் போன்ற பேச்சை வெகுவாக இரசிப்பது வழக்கம். ஐரோப்பிய அங்கத்தவரான கிறிஸ்ரி என்பாருடன் இராமநாதன் விவாதிப்பது பெரிய இலக்கிய விருந்தாக இருந்ததென்பர். அவர் இறைசேரித் தலைவன் ஒபிரயினுடன் சொற்போர் தொடுத்ததை அறிந்த ஆங்கிலேயர் அவரை உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் ஒப்புயர்வற்ற தலைவன் எனப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்கள்.

சேர். கிளிபேட் என்பார் குடியேற்றச் செயலாளராயிருந்த காலத்தில் இலங்கையில் தவறணைகளை நிறுவி, வருமானத்தை அதிகரிக்க முயன்றார். அதனை எதிர்த்த இராமநாதன் தமது வழக்கமான கண்டனக் குரலில் செயலாளரை ஒன்றன்பின் ஒன்றுகப்பல கேள்விகளும் விளக்கங்களும் கேட்டார். தவறணைகள் எந்த எந்த மாவட்டங்களிலும் எந்த எந்த ஊர்களிலும் நிறுவப்படும் என்பது அவருடைய கேள்விகளில் ஒன்று. அதற்கு விடை கூறுவதற்குக் கிளிபோட் தயங்கியபோது இராமநாதன், ''என் நண்பர் இதற்கு விடை கூறத் தயங்குவதைக்காண எனக்குத் திகைப்பாகவிருக்கிறது. அரசாங்கத்தின் குரல் எனவும், மதுபரிபாலனத் திருத்தத்துக்குப் பொறுப்பாளி என்றும், இலங்கைக்கு நன்மைசெய்யும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துபவர் என்றும் பெயர்பெற்ற இவர், தவறணைகளை நிறுவப்போகும் இடங்களை அறியாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது'' என்று கூறினர்.

இராமநாதன் சட்டசபையிலிருந்து இலங்கையருக்காகச் செய்து நிறைவேற்றிய அலுவல்கள் அளப்பரியவை. அவை சாதி, சமய, மொழி வேறுபாடு கருதாமல் இலங்கை வாழ் பொதுமக்களுக்குச் சேவை என்ற மனோபாவத்துடனே செய்யப்பட்டவையாகும். அவர் கொண்டுவந்த மாற்றங்கள், கட்டளைச் சட்டங்கள் என்பனவும் பிறவும் மாற்றியமைக்கப்பட்டமை மிகவும் அரிதாகவே உள்ளன. நீதிமன்றங்களில் திருத்தங்கள், பதிவுகள், கட்டளைச் சட்டப் பதிவுகள், ஆளுரிமைப் பதிவுகள், தபாற்கந்தோர் சேமிப்பு வசதிகள் ஆகியவும் பிறவும் இராமநாதன் ஆரம்பத்திற் செய்த சேவையின் பாற்படும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைச் சட்டங்களின் கோவைத் தொகுப்பினாலேயே இராமநாதனின் விவேகம் அதிகமாக விளங்குகின்றது. சேர். யோன் பியர் தலைமையிற் கூடிய சட்டத் தொகுப்புக் குழுவில் சேர். சமுவல் கிறனியர், வான் லங்கன் பார்க் ஆகியோரிலும் பார்க்க இராமநாதனின் முயற்சியே அதிகம் என்பர்.

இராமநாதன் சட்டசபை அங்கத்தவராய் இருந்து சேவை செய்த காலத்தில் ஆள்பதிகளுக்கு அரசியல் அலுவல்களில் அந்த ரங்க ஆலோசனைகள் கூறிவந்த பிரடறிக் டோன் ஹொஸ்ற் என்னும் ஆங்கிலேயர் இராமநாதனின் அங்கத்துவ மேன்மையை நன்கு பாராட்டி, அவரைப் போன்ற பிரதிநிதியொருவரை ஆசியாக் கண்டத்தில் காணவியலாது என்று எழுதியுள்ளார். இராமநாதன் 1879 ஆம் ஆண்டு தொடக்கம் 1892 ஆம் ஆண்டுவரை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாயிருந்து இளைப்பாற நேர்ந்தபோது, அவருடைய அளப்பரும் அறிவாற்றலை இழக்க விரும்பாத குடியேற்ற மந்திரியார் றிப்பன் பிரபு இராமநாதனைச் சட்ட அறிஞர் நாயக மாக நியமித்தார்.

அதனால் சட்ட சபையில் அவருக்குப் பாராட்டுரை வழங்கப் பட்டபோது, இராமநாதன் இலங்கையின் பிரகாசமான ஒளி விளக்கு என்றும், அவரிடம் காணப்பட்ட நல்லியல்புகள் வேறெ வரிடத்துங் காணப்படாதவை என்றும், அவருடைய புத்திக் கூர்மையையும் ஆராய்ச்சித் திறனையும் தாம் வெகுவாகப் பாராட்டு வதாகவும் ஆள்பதி அவர்கள் கூறினர். கண்டிச் சிங்களவர் பிரதி நிதியாய T. B. பாணபொக்கே, இராமநாதன் தங்களுக்கெல்லாம் வழிகாட்டி என்றும், தாங்கள் அவரையே பின்பற்றிச் சேவை செய்வதாகவுங் கூறினர்.

இராமநாதன் 14.12-1892 தொடக்கம் சட்ட அறிஞர் நாயக மாகக் கடமையாற்றிய காலத்திலே 3-5-1894 தொடக்கம் ஒரு வருடத்துக்கு அதிகமாகவும், 8-5-1896 தொடக்கம் நான்கு மாதங் களுக்கும், 21-3-1897 தொடக்கம் ஆறு மாதங்களுக்கும் சட்டத் துறை நாயகமாகப் பதில் கடமையாற்றியுள்ளார். அச்சேவையை ஆள்பதி வெகுவாகப் பாராட்டிப் பேசியுள்ளார்.

இராமநாதன் சட்ட அறிஞர் நாயகமாக இருந்த காலத்திலே அவருடைய தமையனார் குமாரசுவாமி அவருடைய இடத்தில் தமிழர் பிரதிநிதியாகச் சட்டசபையில் நியமிக்கப் பெற்றார். இலங்கைச் சட்டசபையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட திருத்தங் களுள், 1911 ஆம் ஆண்டின் திருத்தம் இலங்கைச் சரித்திரத்தில், அதுவும் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு திருப்பம் என்பர். அதிலே முதன்முதலாக இலங்கை வாசிகளால், அதுவும் படித்தவர் களால் பிரதிநிதியொருவர் தெரியப்படும் வாய்ப்பு ஏற்பட்டது. மாக்கஸ். பர்னாந்து என்னும் தலைசிறந்த வைத்திய சிகாமணி அப்பிரதிநிதித்துவத்தை அவாவி நின்றார். அவருக்குப் பெரியவர்

களிடத்திலே செல்வாக்கும் இருந்தது. ஆனால் இராமநாதன் அவர்களையே பிரதிநிதியாகத் தெரிதல் வேண்டும் என்று சிங்களப் பெரியார்கள் சிந்தித்தார்கள். திருவாளர் J. R. யயவர்த்தனவின் தந்தையார் முதலாய பெரியார்கள் இராமநாதனிடம் சென்று அவரைத் தேர்தலில் முன்நிற்குமாறு வேண்டினர்கள். அத்தேர்தலின்போது இலங்கை முழுவதுமே ஒரு தொகுதியாக இருந்தது. அத்தேர்தல் 18-12-1911 இல் நடைபெற்றது. இராமநாதனுக்கு இலங்கை முழுவதிலும் நல்ல ஆதரவிருந்தமையால் அவர் வெற்றியீட்டிப் படித்த இலங்கையரின் பிரதிநிதியானர்.

படித்த இலங்கையர் பிரதிநிதித்துவத் தேர்வு இரண்டாம் முறையாக 1916 ஆம் ஆண்டில் ஏற்பட்டபோது இராமநாதனுடன் பெரிய நியாயவாதியாய T S. யயவர்த்தனை என்னும் சிங்களப் பெரியார் போட்டியிட்டார். ஆனால் அப்போட்டியிலும் இராமநாதனே வெற்றிபெற்றுப் பிரதிநிதியானர். அதனால் படித்த இலங்கையரின் பிரதிநிதியாகப் பத்தாண்டுகள் அங்கத்துவம் வகிக்கும் மேன்மை இராமநாதன் ஒருவருக்கே கிடைத்தது. அதன்பின் அத்தகைய பிரதிநிதித்துவம் அரச யாப்பில் இடம் பெறுமையால் வேறெவருக்கும் அம்மேன்மை இல்லாது போயிற்று. இராமநாதன் படித்த இலங்கையர் பிரதிநிதியாயிருந்த காலத்திலேதான் சிங்கள முஸ்லிம் இனக் கலவரம் நடைபெற்றது அதிலே இராமநாதன் தலைசிறந்த தலைவர் என்னும் தகுதியைக் காட்டியுள்ளார்.

ஆள்பதி மனிங் அவர்கள் செய்த முதலாவது திருத்தத்தின் வண்ணம் 1920 ஆம் ஆண்டில் அமைந்த சட்டசபையில் ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு தொகுதியாக்கப்பட்டது. அதிலே வட மாகாணத்தின் பிரதிநிதியாக வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் தெரியப்பெறும் வாய்ப்பைச் செய்துவிட்டு, இராமநாதன் நியமன அங்கத்தவராயே பிரதிநிதித்துவம் பெற்றார். அக்காலத்திலேதான் 7-1-1921 இல் அவருக்குப் புதுவருட கௌரவமாக நைற் பட்டஞ் சூட்டப்பட்டது. பின்னர் 1924 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மனிங் டிவன்சயர் திருத்தத்தின் பயனாக வடமாகாணத்தில் ஐந்து தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது யாழ்ப்பாணம் வடக்குப் பகுதியின் பிரதிநிதியாக சேர். இராமநாதன், தெரியப் பெற்றார். அக்காலத்திலேதான் இலங்கைச் சர்வகலாசாலை அமைப்புக்குழு சேர். வால்ரர் புக்கானன டிடல் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் செயற்பட்டது. அதிலே சேர். இராமநாதன், மகாதேவா, பாலசிங்கம் ஆகியோர் இருந்தனர் இராமநாதன் ஒக்ஸ்போட், கேம்பிரிச் லண்டன், ஹாவாட் முதலாய எந்தச் சர்வ கலாசாலையிலேனும் விவேக முறுக்கேற்றப்படாதவராயிருந்த

போதிலும், அங்கே முறுக்கேறிய எந்தப் பட்டதாரியின் விவேகத்திற் குறைந்தவரல்லர். அவர் சட்ட அறிஞர் நாயகமாகக் கடமையாற் றிய காலங்களில் இலங்கையில் பெரிய வெள்ளைக்காரர் பிரதம நீதி யரசர்களாயிருந்தார்கள். உயர் நீதி மன்றங்களிலாவது, மேன்முறை மீட்டு மன்றங்களிலாவது அவர் பிரதம நீதியரசர்களை அஞ்சியொதுங் கியது கிடையாது. அவர்களைத் தமது நண்பர்களைப் போலவே கொண்டு கடமையாற்றினர்.

உயர் நீதிமன்ற வைகல்களின் பெரிய வழக்குகளில் எதிரி பக் கத்துக்குரிய நியாயவாதிகள் அரசாங்கச் சார்பான இராமநாதனை வெகுவாக அஞ்சினர். பிரதம நீதியரசர் பொன்சர் என்பார் இராம நாதனை வெகுவாக அஞ்சினர். இராமநாதனை அவசரமாகச் சட்ட அறிஞர் நாயகப் பதவியிலிருந்து விலகி மறுபடியும் அரசியலில் பிரவேசிக்கும் வண்ணம் மனம் மாற்றியவரும் பொன்சர் எனலாம். துணை நீதியரசராகவோ, சட்டக் காரியதரிசியாகவோ இராமநாதனை உயர்த்தினால் வெள்ளைக்காரருக்கு அவமானம் உண்டாகும் என்று அரசாங்கம் கருதிற்று. சேர். சார்ல்ஸ் லேயாட் என்னும் சட்டத் துறைநாயகம் விடுமுறையில் இங்கிலாந்துக்குச் சென்றபோது ஒரு வருட காலத்துக்கு மேலாக இராமநாதன் பதில் சட்டத்துறை நாயகமாகக் கடமையாற்றி எல்லோரையும் திகைக்க வைத்தார். ஓர் ஆசிய வாசி ஆளப்பிறந்த ஆங்கிலேயரை விஞ்சுவதை யார்தான் சகிப்பர்?

படித்த இலங்கையர் பிரதிநிதியாக இராமநாதன் இருந்த காலத்திற் செய்த சேவையை இன்றும்தான் சிங்கள மக்கள் வெகு வாகப் பாராட்டுகிறார்கள் சட்டசபையின் 1914 ஆம் ஆண்டின் வைகலின்போது பலமுறிகள் விவாதிக்கப்பட்டன. அப்போது உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் எல்லோரும் வெளியே சென்றுவிட்டார்கள். ஆனால் இராமநாதன் மாத்திரம் தமது ஆசனத்தில் அசையாமல் இருந்தார். அவருடைய நண்பர்கள் அவரிடம் ஏன் நீங்களும் வெளியேறுமல் இங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு இராமநாதன், ''நான் இங்கே இருப்பது இங்கே எடுக்கப்படும் ஒவ்வொரு முறியையும் எதிர்த்து வாக்களிப் பதற்காகவே நானும் வெளியேறினால் முறிகள் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவை என்றல்லவா பதியப்படும்.'' என்றார்.

இராமநாதன் ஆங்கிலேயரின் போக்கையும், அவர் தம் அரசாங்கத்தின் அமைப்பையும், எவருக்கும் அஞ்சாது வன்மையாகக் கண்டிப்பது வழக்கம். அதனால் அவரோடு வாதப்பிரதி வாதங்களில்

கலந்து கொள்வதை ஆள்பதிகளும் காரியதரிசிகளும் இன்பகரமான தாகக் கருதினர். புலமை மிக்க ஆள்பதி கிளிபேட்டும் அவருக்கு முன்னிருந்த ஹமில்ரன் கோடனும் இராமநாதனுடன் வாதம்புரிந்த வண்ணம் இலக்கியப் போக்காக உள்ளன. அவ்வண்ணமே கிறிஸ்ரி என்னும் ஐரோப்பிய அங்கத்தவருடன் இராமநாதன் சொற்போர் புரிந்தனர்.

இராமநாதன் ஐம்பது ஆண்டுகளாகச் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயும். உத்தியோக அங்கத்தவராயும், நியமன அங்கத்தவராயும், தெரியப்பெற்ற அங்கத்தவராயும் இருந்தார். அத்தகைய தகுதியும் மேன்மையும் இலங்கையில் வேறெவருக்கும் எக்காலத்திலும் இருந்ததில்லை. இது உண்மை. வெறும் புகழ் உரையல்ல.

இராமநாதன் இலங்கையில் 1820 ஆம் ஆண்டுக்கு முன்பின்னாக ஏற்பட்ட பழைய வழக்குகளையும், அவற்றின் விசாரணைகளையும், தீர்ப்புக்களையும் கருத்தூன்றிப் படித்துப் பெரும் புலமையும் ஆற்றலும் பெற்றுக் கொண்டார். இலங்கையில் சட்ட அறிக்கைகள் எழுதப்படும் வழக்கமும் அவராலேயே ஆரம்பிக்கப்பட்டதால் அவரை இலங்கைச் சட்ட அறிக்கையின் தந்தை என்று செல்லமாக அழைப்பார்கள்.

இராமநாதனுடைய சட்ட அறிக்கையையும், இலங்கையில் எழுந்த வழக்குகளின் விபரத்தையும் கண்ட உயர் நீதியரசரான ஆங்கிலேயர் இராமநாதனின் நுண்ணறிவை வெகுவாக மெச்சினர். அவருடைய நியாக சிந்தையும், பரோபகாரச் செயலும், உறுதியான உழைப்பும் அமைந்தவாற்றை வெகுவாக வியந்தார். இப்பயிற்சி விசேடத்தாலேயே இராமநாதனுக்குச் சட்ட அறிஞர் உத்தியோகமும், சட்டத்துறை நாயக உத்தியோகமும் இலகுவாக இருந்தன போலும்.

ஒருவருக்கு அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை, பெருந்தன்மை ஆகிய பண்புகள் ஒருங்கேயமைவது அருமை என்பர். இவையாவும் இராமநாதனிடத்தில் ஒருங்கமைந்திருந்தன. தங்க விக்கிரகம் போன்ற உருவம், தலையிலே தலைப்பாகை, நெற்றியிலே சந்தனப்பொட்டு, தாமரை இதழ்போன்ற வாயிற் புன்சிரிப்பு, நெஞ்சை அலங்கரிக்கும் நீண்ட உத்தரியம் இராமநாதனின் அழகை அதிகப்படுத்தின. அவருடைய அறிவுந் திருவும் உருவும் எவரையும் ணிய வைத்தன.

இளமைக் காலந்தொடக்கம் இராமநாதனுக்குக் கீழைத் தேயக் கலாசாரத்திலும், சைவசித்தாந்த நெறியிலும் பேரபி மானம் இருந்தது. அவர் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக வடமொழியை நன்கு கற்று, அருள் பரானந்த யோகி என்னும் பெரியாரிடம் தம் அறிவை வளம் படுத்திக் கொண்டார். அவர் திருவாசகத்தை அடிக்கடி மாணவ ருக்குக் கூறுவது வழக்கம்.

இராமநாதனுடைய ஞானவாழ்வின் அருமையை அறிந்த மைறன் பெல்ப்ஸ் என்னும் அமெரிக்கப் பெரியார், அவரை அமெரிக் காவுக்கு அழைத்து அங்கே சைவசமயத்தின் மேன்மையைப் பற்றிப் பேசுவித்தார். புலவர் போற்றும் புரவலராய் வாழ்ந்த ராமநாதனே புலவர் திலகமென வாழ்ந்த சோழவந்தான் அரசஞ் சண்முகனார் என்னும் பெரியார் பாடிப் புகழ்ந்துள்ளார். இலக்கிய நயஞ் செறிந்த அப்பாடல்களில் இரண்டை இங்குக் குறிப்பிடல் பொருத் தமாகும்.

கல்வியினுற் செல்வத்தா லீகையினு
லோகையினுற் கருணை தன்னுல்
நல்வினையால் யோகத்தான் ஞானத்தான்
மோனத்தா னலஞ்சேர் மாட்சி
சொல்வகையிற் பல்லோர்பாற் கேட்டதன்றி
நின்வயிற் போற் றெருக் கண்டார் யார்
செல்வமலி யிலங்கையில் வாழ் சுயராம
நாதனெனுந் திருப்பே ரோனே!

புகழ்பெற்ற சங்கரரும் பரதகண்டத்
தார்க் கன்றிப் புகன்ற தில்லை.
அகல்வானத் தாதவனும் நம்பகலில்
பார்த்தறியா அமெரிக்காவும்
தகவுடைய பிறநாடு நீ சென்று
ஞானமழை தழைப்பப் பெய்தாய்
மிகவுடைய நின்சீர்த்தி யெம்மனே
ரொருநாவால் விளம்பற் பாற்றே.

சேர். இராமநாதன் பல்லாயிரம் பொன் செலவு செய்து பெண்களுக்கும் ஆண்களுக்குமென இரு கலாசாலைகளைச் சுகாதார முள்ள சூழலில் பெரிதாகப் பல வசதிகளோடு அமைத்துள்ளார். இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் அவருடைய புண்ணியக் கண்கள் எனக் குறிப்பிடத் தகுந்தவை. இராமநாதன்

கல்லூரி 1913 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி காலை பத்து மணியளவில் ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் நோக்கம் பேசப்பட்டது. சைவப் பெண்கள் குருகுலவாசஞ் செய்து ஞான சாத்திரம், தர்மசாத்திரம், புராணேதிகாசங்கள் பயில்வதற்கு வசதி செய்வதென்பதே இலக்கு. திரிகரண சுத்தியும், காரிய சித்தியும் அருள்வாய் என்பதே அவருடைய கலாசாலைகளின் இலக்கு.

இராமநாதன் கொழும்பில் உள்ள பொன்னம்பலவாணேசுவரர் கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் அக்கோயிற்றிருப் பணிகளைச் சோழமன்னர் செய்த முறையில் கைதேர்ந்த சிற்பி களைக் கொண்டு பல்லாயிரம் பொன் செலவிற் புதுப்பித்துக் கட்டு வித்தார். தமது ஓய்வு நேரங்களில் ஞான நூல்களைக் கற்றுத் தமது சமஸ்தான வித்துவான்களோடு கலந்துரையாடி அவற்றுக்கு உரையும் வியாக்கியானமும் எழுதிப் பதிப்பித்தார். ஆத்திசூடி மந்திரவிளக்கம் முதல் பகவத்கீதை விளக்கம்வரை பல வியாக் கியானங்கள் எழுதியதோடு, கிறிஸ்தவ நூல்களாகிய மத்தேயு, யோண் சுவிசேசங்களுக்கும் பெரிய வியாக்கியானங்கள் எழுதி ஆங்கிலேயராற் பாராட்டப் பெற்றார்.

இலங்கையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் 170 பாடசாலை களைச் சைவம் வளர்க்கும் கலா மன்றங்களாகச் செய்த கைங்கரியத் திலும் இராமநாதனுக்கு நிரம்பிய பங்குண்டு. அவரே அச்சங்கத்தின் முதலாவது தலைவராயிருந்தார். அதற்கு 20 ஆண்டுகளுக்குமுன், சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட சைவ சித்தாந்த மகாசமாசத்தின் முதற் பெருந் தலைவரும் இராமநாதனேயாவர். ஆகவே ஈழத்தி லன்றி இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய தேசங்களிலேயும் சைவம் வளர்த்த பெருமை இராமநாதனுக்குண்டு

சேர். இராமநாதன் 26-11-30 இல் தமது எண்பதாவது வய தில் மறைந்தபோது சட்டசபைக் கூட்டத்திலே பிரதம காரியதரிசி பின்வருமாறு பேசினார். ''இச் சபையின் முதல்வர் என்ற முறையில் இன்று துக்ககரமான ஒரு செய்தியைச் சொல்லும் பொறுப்பு ஏற் பட்டிருக்கிறது. இந்த அரச சபையின் முதிர்ந்த அங்கத்தவரும், மதிப்புக்குரியவருமான பெரியாரின் மறைவைப்பற்றி முதலில் நான் கூறுவதை எண்ணி மிகவும் வருந்துகின்றேன்.

மதிப்புக்குரிய முதிர்ந்த தமிழ்ப் பிரபு என்று நாம் எல்லோரும் செல்லமாக அழைக்கும் எங்கள் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லை. அப்பெரியார் 27-8-1879 இல்

முதன் முதலாக இச்சபையில் அங்கத்துவம் வகிக்கத் தொடங்கினர். அன்று தொடக்கம் 1892 ஆம் ஆண்டுவரை தமிழர் பிரதிநிதியாக இச்சபையை அலங்கரித்தபின், 14 வருடங்கள் சட்ட அறிஞர் நாயகம் என்னும் உத்தியோகத்தைத் திறமையாகவும் கீர்த்தியுடனும் வகித்தார். அவர் திறமையுடன் பார்த்த அந்த உத்தியோகம் அவராற் சிறப்படைந்தது அவர் இடையிடையே சட்டத்துறை நாயகத்தின் வேலையையும் பார்த்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்

சட்ட அறிஞர் நாயக உத்தியோகத்திலிருந்து 1906 இல் இளைப்பாறிய அவர், 1911 தொடக்கம் 1921 வரை படித்த இலங்கையரின் தெரியப்பட்ட பிரதிநிதியாக இருந்து இலங்கையருக்கு அரிய சேவை செய்துள்ளார். அத்தகைய பிரதிநிதித்துவ மேன்மையும், அங்கத்துவச் சிறப்பும் அவரொருவருக்கே சிறப்பாயமைந்திருந்தன. அதன் பின்னர் உத்தியோகப் பற்றற்ற நியமன அங்கத்தவராய்ச் சட்டசபையைச் சிறப்பித்தார் பின்னர் 1924 தொடக்கம் 1930 வரை சட்டசபையில் யாழ்ப்பாணத்து வடபகுதியின் தெரியப் பெற்ற பிரதிநிதியாயிருந்து அளப்பரிய சேவை செய்தார்.''

இவ்வாருகப் பிரதமகாரியதரிசி பேசிய இரங்கற் பேச்சை முஸ்லிம் பிரதிநிதியாய N. H M. அப்துல்காதர் பின் மொழிந்தார். அவரைத் தொடர்ந்து சட்டசபைப் பிரதிநிதிகள் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கௌரவித்தார்கள். திரு. E. W. பெரேரா பேசியபோது இராமநாதனை இங்கிலாந்தின் கிளாட்ஸ்ரோன் என்பாரோடு ஒப்பிட்டு இலங்கைத் தேசிய தலைவராக இராமநாதன் விளங்கினர் என்றும் நிதி நிர்வாகக் குழுவிலேயே அமர்ந்து தொண்டாற்றினரென்றும், சிங்களவராய தம்மை 1915 இல் காப்பாற்றிய தயாள சீலர் என்றும் பாராட்டினர். பிரத்தியேக நலன்புரிமை வேறு பொது சன சேவை வேறு என்பதே இராமநாதனின் கொள்கை என்றும், அவர் மூர்க்கத்தனமும் விடாக்கண்டனுய குணமும் இன்றி விட்டுக் கொடுக்கும் நல்லியல்புள்ளவர் என்றும் பாராட்டினர்.

பின்னர் எல்லோரும் எழுந்து நின்று மௌனமாக அஞ்சலி செய்தபின், அவருடைய ஞாபகார்த்தமாகச் சபைக் கூட்டம் மூன்று தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. சேர். இராமநாதன் கடைசியாகக் கூட்டத்துக்குச் சமுகமளித்தமை 30-10-30 ஆம் நாளிலாகும். அன்று ''இலங்கையிலும் தயாரிக்கப்படும் சுடிவகைகள் கட்டுப்படுத்தப்பட்டு வெகுவாகக் குறைக்கப்படல் வேண்டும்.''என்று C. W. W கன்னங்கரா கொண்டு வந்த பிரேரணைக்குச் சாதகமாக வாக்களித்தார்.

இராமநாதன் குடும்பத்தார் கோல்புறூக் திருத்தம் நடை பெற்ற காலம் முதலாகவே அரசியலில் சேவை செய்துள்ளார்கள். முதன் முதலாகத் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதியாக 30-6-1835 இல் இராசவாசல் முதலியார் ஆறுமுகத்தாபிள்ளை குமார சுவாமி நியமிக்கப் பெற்றார். அவருக்குப் பின் அவருடைய மருமகன் எதிர் மன்னசிங்க முதலியாரும், அவருக்குப்பின் முன் சொன்ன குமாரசுவாமி முதலியார் மைந்தர் சேர். முத்துக்குமாரசுவாமியும், அவருக்குப்பின் அவர் மருகர் இராமநாதனும், அவருக்குப்பின் அவர் தமையன் குமாரசுவாமியும் நியமிக்கப் பெற்றார்கள்.

இராமநாதன் புலவராயும், புரவலராயும், சட்டவாதியாயும், கல்வி விற்பன்னராயும், பேச்சாளனுயும், எழுத்தாளனுயும், அரசியற் பண்டிதனுயும், வள்ளலாயும், தத்துவஞானியாயும், யோகியாயும் இலங்கையின் முடிசூடா மன்னனுய் இருந்தார். அவர் ஐம்பது ஆண்டுகள் அரசறிய அரசியற் சபையில் அரசியற்றொண்டு செய்தார். அவரைப்போன்ற ஓர் இலங்கையர் அவர் காலத்திலாவது அவருக்கு முன்பாவது அவருக்குப் பின்பாவது வாழவில்லை. அவருடைய பெருமைகளை வியந்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பாடிய பாடல் இது.

மன்னவையி லொருமணியாய்
மருவலர்தம் வயமிழக்க மழைபெய்மேகந்
தன்னிகர்பன் னூலுரைகள்
தந்தகட லத்துவித சைவஞானி
என்னலமும் பிறர் நலமா
யெவ்வுயிருந் தன்னுயிரா எண்ணும் மேதை
பொன்னியல்சேர் பொன்ராம நாதனெனும்
புரவலர்கோன் புகழ்மிக் கோனே.

அத்தியாயம் 31

முதலாம் அரசாங்க சபை

முதலாம் அரசாங்கசபைத் தேர்தல் 1931 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் நான்கு தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறவில்லை. யாழ்ப்பாண மகாசபையினரும், தமிழர் மகாசபையினரும், வாலிப மகாநாட்டினரும் டொனமூர் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாமையினால், அத் திருத்தத்தின் வண்ணம் அமையப்போகும் அரசாங்க சபையும் வேண்டாம் எனக் கூறியே அதனை ஒன்றியொதுக்கல் எனப்படும் பகிஷ்காரஞ் செய்தனர்.

அவர்களுள் வாலிப மகாநாட்டினர் சரித்திரப் பிரசித்தி பெற்றவர்கள். டொனமூர் அரசியற்றிருத்த சபையினர் இலங்கைக்கு வருவதற்கு முன்பின்னை டிவன்சயர் மனிங் திருத்தத்தின் பிரகாரம் சட்டசபை நடைபெற்ற காலத்திலே விவேகிகளான யாழ்ப்பாண வாலிபர்கள் சிலர் ஒன்றுகூடி வாலிபர் மகாநாடு என ஒரு முற்போக்கு இயக்கத்தை ஆரம்பித்துத் தீவிரமாக அரசியலிலும் ஈடுபட்டுத் தேசீயம் பேசிவந்தார்கள்.

ஆங்கிலேயரின் அதிகாரத்தை அகற்றுதல், ஆங்கில மோகத்தை நீக்குதல், சுயராச்சியம் பெறுதல், சுயமொழிகளை அரியணை யேற்றுதல், பொருளாதார வளத்தை அபிவிருத்தி செய்தல், மறந்துபோன தமிழ்க் கலைகளுக்கு மறுமலர்ச்சி செய்தல், மதுவிலக்கல், தீண்டாமை ஒழித்தல் ஆகிய பல துறைகளில் அவர்கள் உழைத்தார்கள். வாலிப மகாநாட்டினரின் முற்போக்குக் கொள்கையை முற்றுக விரும்பாத முதியவர் சிலரும் பழைய கொள்கையினர் சிலரும் வாலிப மகாநாட்டினரை வம்பர் மகாநாட்டினர் என வாய்கூசாது வைது வந்தார்கள்.

பெரியவர்கள் வாழ்த்த வேண்டிய வைபவத்தை வன்மையாக வைது வந்தபோதிலும், வாலிப மகாநாட்டினர் தங்கள் வருடாந்த விழாக்களை வெகு விமரிசையாகக் கொண்டாடி வந்தார்கள். டாக்டர் ஐசாக் தம்பையா, சுவாமி விபுலானந்தா, P. த. S. குலரத்தினம் போன்ற பெரியார்கள் இளைஞரின் முயற்சியைப் பாராட்டி அவர்கள் விழாக்களுக்குத் தலைமைதாங்கியும் சிறப்புச் செய்தார்கள். இளைஞர்கள் தென்னிலங்கையில் உள்ள பெரியார்களையும், பாரத நாட்டிலிருந்து பெரியார்களையும் இங்கே வரவழைத்துக் கௌரவித்த

வெளி, றிச்வே மண்டபம் ஆகிய இடங்களிற் பிரசாரக் கூட்டங்களை யும் நடத்தினர்கள். மகாத்மாகாந்தி, இராசகோபாலாச்சாரி, கலி யாணசுந்தர முதலியார், சத்தியமூர்த்தி முதலிய பெரியார்கள் கூட்டங்களிற் கலந்து வாலிபரின் முயற்சியை வெகுவாக ஆதரித் தார்கள்.

டொனமூர் அமைப்பை விரும்பாத வாலிப மகாநாட்டாரின் தீவிர எதிர்ப்பைக்கண்ட முற்போக்குள்ளம் படைத்த சிங்களவரும் அதனை எதிர்த்தார்கள். அதிகமாகக் கொழும்பிலேயே வாழ்ந்த அருணாசலம் மகாதேவா அவர்கள் கொழும்புத் தமிழர் பிரதிநிதி யாயே சட்டசபையில் இருந்தவர். அவர் அரசாங்க சபையில் யாழ்ப் பாணத் தொகுதியின் பிரதிநிதியாதல் வேண்டும் எனச் சிலர் விரும் பினர். அவர்கள் மகாதேவாவிடம் நீங்கள் ஏன் தேர்தலில் தலையிட வில்லை என்று கேட்டதற்கு அவர், யாழ்ப்பாணத்திலை தேர்தல் என்று தலைகாட்டினால் தலையுடைபடவேண்டி வரும் என்று தாம் அஞ்சு வதாகக் கூறினாராம். ஒன்றியொதுக்கலின்போது மக்களிடையே ஒற்றுமை நிலவிய காலம் அது.

யாழ்ப்பாணத்தார் தேர்தலிற்றலையிடாமையால் ஒன்றும் தலைமுழுகிப் போய் விடவில்லை. ஏனைய தொகுதிகளில் தேர்தல் வெகு கலகலப்பாக நடைபெற்றது. பொதுமக்களும் பங்கு பற்றிய தேர்வு ஆகையால் பெருமக்கள், நிலக் கிழார்கள், முதலாளிகள், செல்வந்தர்கள் முன் ஒருபோதும் தம் கையால் திறந்தறியாத ஏழைகள் வீட்டுப்படலைகளை வாக்குப்பிச்சை கேட்டுத் திறக்க வேண்டிய வராயினர். சர்வசன வாக்குரிமையால் கைக்கூலி முதலிய தீய பழக்கங்கள் இல்லாது போகலாம் என அரசியல் விற்பன்னர்கள் கருதினர்கள். ஆனால் பெருந்தொகையான மக்களுக்குக் கைக்கூலி கொடுக்க இயலாத போதிலும் கள்ளுச் சாராயம் கலன் கணக்கில் உபயோகப்பட்டன.

அரசியற் கட்சியமைப்பில் வாக்களிக்கும் வழக்கம் பழக்கத்தில் இல்லாமையால், தனிப்பட்டவரின் குணாதிசயங்களையும், அவருடைய ஆங்கிலப் பேச்சு, பாரம்பரியப் பெருமை, அவர் மடங்கள் குளங்கள் திருத்தப் பணம் கொடுத்தமை ஆகிய தன்மைகளே வேட்பாளரை அளவிடும் அளவைகளாயிருந்தன. வேட்பாளர் கூட்டங்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும், பத்திரிகைகளிலும் தம் கொள்கையையும் தம்மைத் தெரிந்தனுப்பினால் தாம் இன்னது செய்வார் என்றும் எடுத்துக் கூறினர்.

முதலாம் அரசாங்கசபைத் தேர்தலில் திருவாளர்கள் D. B. யயத்திலகா, Đ. S. சேனநாயக, S. W. R. D. பண்டாரநாயக, C. W. W கன்னங்கர, A. E. ராஜபக்சே முதலானோர் போட்டியின்றித் தெரியப்பட்டார்கள். ஏனைய தொகுதிகளில் எல்லாமாக 708318 வாக்காளர் வாக்களித்தனர் என்றும் இத்தொகை வாக்காளர் தொகையின் 57·96 வீதத்தினர் என்றும் அறியக்கிடக்கின்றது.

தேர்தல்கள் 23-6-31 இல் நிறைவேறியதும் பிரதிநிதிகள் 7-7-1931 இல் முதன்முதலாக அரசாங்கசபை மண்டபத்திலே கூடினர். அன்று காலை அரசாங்கசபை எழுதுவினைஞர் சபைப் பிரகடனத்தை வாசித்து மன்னரை வாழ்த்திவிட்டுச் சபையின் வாசக ரத் தெரியுமாறு சபையினரை வேண்டிக் கொண்டார். பெரும்பான்மையினராய சிங்களவர் டெடிகம தொகுதியின் பிரதிநிதியாய அலெக்சாண்டர் பிரூன்சிஸ் மொலமுரே அவர்களையும், சிறுபான்மையினர், நியமன அங்கத்தவராய சேர். ஸ்ரீவாட் சினிதர் K. C. என்ற பெரியாரையும் தெரிவு செய்ய முயன்றனர். இரகசிய வாக்களிப்பிலை திரு. மொலமுரே அவர்களுக்கு 35 வாக்குகளும், சினிதர் அவர்களுக்கு 18 வாக்குகளும் கிடைத்தன. எனவே மொலமுரே வாசகராகத் தெரியப்பட்டார். திருவாளர் A. F. மொலமுரே முன்னர் 1924 ஆம் ஆண்டுச் சட்டசபையிலும் இருந்தவர்.

வாசகர் ஆசனத்தை அலங்கரித்துப் பிரதிநிதிகளாய அங்கத்தவருக்கு நன்றி கூறி, அவர்களை விசுவாசப் பிரமாணஞ் செய்து கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். அதன்பின் அடுத்தநாள் 8-7-31 இல் அங்கத்தவர் அனைவரும் தங்களை ஏழு காரிய நிர்வாக சபைகளில் பிரித்துக் கொள்ளும் தெரிவு நடைபெற்றது. சபையோர் விருப்பத்தின் வண்ணம் ஒவ்வொரு காரிய நிர்வாக சபையிலும் எத்தனை அங்கத்தவர்கள் இருப்பது என்பது தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நிர்வாக சபைகளில் அமரவேண்டியவர் தொகை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

1.	உள்நாட்டு அலுவல்கள்	– 7
2.	காணி விவசாயம்	– 8
3.	உள்ளூர் ஆட்சி	– 8
4.	சுகாதாரம்	– 7
5.	தொழில், கைத்தொழில், வர்த்தகம்	– 8
6.	கல்வி	– 7
7.	போக்குவரத்து	– 8

கௌரவ அங்கத்தவர்கள் தங்களை ஏழு நிர்வாக சபைகளில் இரகசிய வாக்களிப்பாற் பிரித்துக் கொண்டபின், ஒவ்வொரு நிர்வாக சபைக்கும் ஒவ்வொரு தலைவரைத் தெரிய வேண்டியவராயினர். அவர்கள் அரசாங்க சபையின் நிர்வாகசபை மண்டபத்தில் ஒவ்வொரு நிர்வாக சபையினராகச் சென்று பிரதம காரியதரிசியின் தலைமையில் தலைவர்களை முறையாகத் தெரிந்தார்கள். அவர்கள் நிர்வாக சபைகள் தோறும் தெரிந்துகொண்ட தலைவர்கள் பெயர்கள் பின்வருமாறு. அவர்கள் பெயர்களின் முன் கௌரவ திரு எனப் படித்துக்கொள்க.

நிர்வாகசபைகள்		தலைவர்கள்
1. உள்நாட்டலுவல்கள்	—	D. B. ஜயத்திலக
2. காணிவிவசாயம்	—	D. S. சேனநாயக
3. உள்ளூர்ஆட்சி	—	C. V.பத்துவந்தொடாவ
4. சுகாதாரம்	—	T. B. பானபொக்க
5. தொழில், கைத்தொழில், வர்த்தகம்	—	பெரிசுந்தரம்
6. கல்வி	—	C. W. W. கன்னங்கர
7. போக்கு வரத்து	—	H.M. மாக்கான்மரக்கார்

இங்ஙனம் தெரியப்பட்ட தலைவர்களுள் திருவாளர்கள் பெரி சுந்தரம் அவர்களும், மாக்கான் மரக்கார் அவர்களும் சிறுபான்மை யினத்தவர். அவர்களுள் மாக்கன் மரக்கார் தாம் நிர்வாக சபைத் தலைவராகத் தெரியப்பட்ட சந்தர்ப்பத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித் தார். ''போக்குவரத்து நிர்வாகசபையின் தலைவரைத் தெரிவதற்காக நிர்வாகசபை மண்டபத்துள் பிரவேசித்த நான் எள்ளளவும் முன் னர் எதிர்பார்க்காத வண்ணம் அந்நிர்வாக சபையின் தலைவராகத் தெரியப்பட்டு வெளியேறினேன்''

இந்நிர்வாக சபைத் தலைவர்களை ஆள்பதி அங்கீகாரஞ்செய்து மந்திரிமார் சபையில் இருக்குமாறு சம்பிரதாய நியமனஞ் செய்தார். பின்னர் 10-7-31 இல் கூடிய சபையிலே ஆள்பதி தமது பிரசங்கத் தைச் செய்தார். அவர் பேசு முன் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் செய்தியையும், குடியேற்ற மந்திரியாரின் செய்தியையும் முறையாகப் படித்தார். மன்னர் பிரானின் ஆசிச் செய்தியின் சுருக்கம் பின்வருமாறு.

''இந்த அரசியற்றிட்டம் இலங்கைக்குப் பெருமளவில் சுய ஆட்சி முறையை நல்ல அமைப்பில் வழங்குகிறது. இதைப்போன்ற நல்ல திட்டம் எனது டொமினியன்கள் எனப்படும் ஆணிலப்பத நாடுகள் எவற்றுக்கேனும் கொடுக்கப்படாதமையால் இது எவ்வாற் றனும் நிகரில்லாதது என்பது என் கருத்து.''

குடியேற்ற மந்திரியார் எழுதியனுப்பிய செய்தி பின்வருமாறு படிக்கப்பட்டது. ''நான் குடியேற்ற மந்திரியாயிருந்த காலத்திலே ஏற்பட்ட திருத்தத்தின் பயனுக இவ்வரசாங்கசபை எனது உத்தியோக காலத்திலே நீறக்கப்பட்டதை அறிந்து வெகுவாக மகிழ்ச்சியடைகிறேன். இச்சபையினமைப்பு எனது நண்பர் டிரமன்சீல் அவர்களுடைய ஆலோசனையின் வண்ணமே ஏற்பட்டதாகும். நிர்வாக சபைகள் மூலம் பரிபாலிக்கும் முறையில் எனக்கு நிரம்பிய அநுபவம் உண்டு. எனவே அது நல்ல முறையென நான் உறுதியாகக் கூறுவேன். உங்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் நா நிரம்பிய அநுதாபம் உள்ள வனுகவே என்றும் இருந்தமைபோல இனிமேலும் தொடர்ந்து உடந்தையாக இருப்பேன்''

இவ்விரு செய்திகளையும் படித்தபின்னர் ஆள்பதி சேர் கிறேம் தோம்சன் தமது அரசாங்கப் பேச்சை நிகழ்த்தினர். அதில் அவர்,

''இலங்கையின் ஆள்பதி என்ற முறையில் அரசாங்க அலுவல்களை ஆலோசிக்கு முகமாகவும் அரும்பணி செய்யுமுகமாகவும் இலங்கைவாழ் பொதுமக்களால் சர்வசன வாக்குரிமைப் பலத்தால் தெரிந்தனுப்பப்பட்டவர்களாய உங்களை அன்புடன் இந்தச் சபையில் வரவேற்கின்றேன். உங்களைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆனல் இலங்கையின் வட பாகத்தின் நான்கு தொகுதிகளின் பிரதிநிதிகளுடைய ஆசனங்கள் வெற்றிடமாய் இருப்பதைப் பார்க்க எனக்கு அதிக விசனமாய் இருக்கிறது. இப்புதிய அரசியற்றிட்டத்தைப்பற்றி அவர்கள் பிழையாக விளங்கிக் கொண்டமையாற் போலும் அவர்கள் ஒன்றி ஒதுக்கல் செய்து கொண்டார்கள். இலங்கையின் குடிசனங்களில் முக்கியமான இச்சாகியத்தார் பிரதிநிதிகளை அனுப்பாதிருப்பது வருந்தவேண்டிய காரியமாகும். அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு ஏற்ற முறையில் நியமன நாளைக் குறித்து விடுவதற்கு நான் என்றும் ஆயத்தமுள்ளவனுய் இருக்கிறேன்.'' எனக் கூறினர்.

அரியணைப் பேச்சு நிறைவேறியதும் அரசாங்க சபையின் உதவி வாசகர், நிர்வாகசபையின் உதவித் தலைவர் ஆகிய இருவரும் தெரியப்பட்டனர். திருவாளர் மதவல அவர்களுக்கு 25 வாக்குகளும் திருவாளர் F. A. ஒபயசேகர அவர்களுக்கு 28 வாக்குகளும் அளிக்கப்பட்டமையால் திருவாளர் ஒபயசேகர உதவி வாசகராகத் தெரியப்பட்டார். நிர்வாக சபையின் உபதலைவர் பதவிக்காக திரு V S. விக்கிரமநாயக அவர்களுக்கும் திருக்கோணமலை–மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. M. M. சுப்பிரமணியம் அவர்களுக்கும் இடையில் போட்டி நிகழ்ந்தது அதிலே சுப்பிரமணியத்துக்கு 28 வாக்குகளும், திரு. விக்கிரமநாயக

வுக்கு 23 வாக்குகளும் கிடைக்க இரு அங்கத்தவர் வாக்களியாதிருந்தனர். எனவே திரு சுப்பிரமணியம் நிர்வாகசபையின் உதவித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் ஏழு நிர்வகா சபைகளும் A, B என்ற நிலையற் குழுக்களிற் பிரிக்கப்பட்டன. A பிரிவில் உள்நாட்டு நிர்வாகசபை, காணி விவசாய சபை, உள்ளூர் ஆட்சிச்சபை கல்விச்சபை என நான்கும், B பிரிவில் சுகாதாரசபை, தொழில், கைத்தொழில், வர்த்தகசபை, போக்குவரத்து வேலைச்சபை என்பனவும் அமைந்தன.

பிற்காலத்தில் சுதந்திர இலங்கையில் புகழ் பூத்து விளங்கிய பெரியார்களும் அரசாங்க சபையிலே இருந்தார்கள். தேசபிதா எனவும் சுதந்திரத்தின் சிற்பி எனவும் பாராட்டப்படும் அதிகௌரவ திரு. D. S. சேனநாயக விவசாய நிர்வாக சபையின் தலைவராய் இருந்தார். இலங்கையின் மூன்றுவது பிரதமராயும் இரும்பு மனிதன் எனப்பட்டவராயும் இருந்த அதிகௌரவ சேர். யோண்கொத்தலாவல தமது சிறிய தந்தையாராய சேனநாயகாவின் அரவணைப்பில் அவருடைய காணிவிவசாய நிர்வாக சபையிலே சாதாரண அங்கத்தவராய்க் குருநாக்கல் தொகுதியின் பிரதிநிதியாய் இருந்தார்.

சிறந்த எதிர்க் கட்சித் தலைவராயும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தாபகராயும், மக்கள் முன்னணியை உருவாக்கி மக்கள் பிரதமராயிருந்தவருமாகிய திரு. S. W. R. D. பண்டாரநாயக வியாங்கொடத் தொகுதியின் பிரதிநிதியாய், உள்ளூர் ஆட்சி நிர்வாக சபையிலே சாதாரண அங்கத்தவராய் இருந்தார். பொதுவுடைமைத் தந்தையும் அமைதியான முன்னேற்றவாதியும், சமூக சேவைத் திறன் படைத்தவருமாகிய வைத்திய கலாநிதி S. A. விக்கிரமசிங்க மொறவாக்கத் தொகுதியின் பிரதிநிதியாய் கல்வி நிர்வாக சபையிலே இருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான்கு தொகுதிகளிலும் ஒன்றி யொதுக்கல் காரணமாகத் தேர்தல் நடைபெறுதுபோக, மன்னார் முஸ்லீம் தீவுத் தொகுதியின் பிரதிநிதியாய்ப்போன திரு. S. M. ஆனந்தன் கல்வி நிர்வாக சபையிலேயே இருந்தார். கொழும்பு வடக்குத்தொகுதியின் பிரதிநிதியாய வைத்திய கலாநிதி இரத்தினசோதி சரவணமுத்து கல்வி நிர்வாக சபையிலேதான் இருந்தார்.

அரசாங்க சபையின் அமைப்பு

ஆள்பதி

மேன்மை தங்கிய சேர். கிறேம் தொம்சன் அவர்கள்

வாசகர்

கௌரவ. A. F. மொலமுரே

பிரதம காரியதரிசி

கௌரவ. சேர் பேஞட் போடிலியன்

சட்டக்காரியதரிசி

கௌரவ. E. J. யாக்சன்

நிதிக் காரியதரிசி

கௌரவ. சேர். வில்பிரட் வுட்ஸ்

உள்நாட்டு மந்திரி

கௌரவ. டொன்பாரன் ஜயத்திலக

உள்ளூராட்சி மந்திரி

கௌரவ. C. பத்துவந்தொடாவ

கல்வி மந்திரி

கௌரவ. C. W W. கன்னங்கரா

போக்குவரத்து மந்திரி

கௌரவ. H. M. மாக்கான் மரக்கார்

சுகாதார மந்திரி

கௌரவ. T. B. பானபொக்க

விவசாய மந்திரி

கௌரவ. D. S. சேனநாயக

தொழில் வர்த்தக மந்திரி

கௌரவ. பெரிசுந்தரம்

உப வாசகர்

திரு. F. A. ஒபயசேகர

நிர்வாகசபை உபதலைவர்

திரு. M. M சுப்பிரமணியம்

கௌரவ அங்கத்தவர்களும் அவர்கள் பிரதிநிதித்துவம் பெற்ற தொகுதிகளும்

தொகுதிகள்		பிரதிநிதிகள்
1.	டெடிகம	... A. F. மொலமுரே
2.	கழனியா	... D. B. யயத்திலக
3.	களுத்துறை	... C. பத்துவந்தொடாவ
4.	காலி	... C. W. W. கன்னங்கரா
5.	மட்டக்களப்பு தெற்கு	... H. M. மாக்கான் மரக்கார்
6.	கம்பளை	... T. B. பாணபொக்க
7.	மினுவாங்கொட	... D S. சேனநாயக
8.	ஹட்டன்	... பெரிசுந்தரம்
9.	அவிசாவல	... F. A ஒபயசேகர
10.	திருகோணமலை மட்டக்களப்பு	... M. M. சுப்பிரமணியம்
11.	சிலாபம்	... G. C. S. கொரியா
12.	ஹொறணை	... E W. பெரரா
13.	பலாங்கொட	... J. C. றத்வத்தை
14.	கட்டுகம்பளை	... R. S தெனக்கூன்
15.	கேகாலை	... E. A. P. விஜயரத்ன
16.	நுவரெலியா	... E. W. அபயகுணசேகர
17.	பண்டாரவளை	... பெலவிஸ்கோடன்
18.	குருநாகல்	.. J. L. கொத்தலாவல
19.	ரூவான்வெல	... * J. H. மீதேனியா
20.	கலகதெற	... P. B. நுகவெல
21.	நீர்கொழும்பு	... S. W. S. ராசபக்சே
22.	மத்துகம	... D. D. அதுலத்முதலி
23.	வியாங்கொட	... S. W. R. D. பண்டாரநாயக
24.	பாணந்துறை	... சுதந்தாபொன்சேக
25.	மொறட்டுவ	... W. A. De சில்வா
26.	மாத்துறை	... G. K. W பெரேரா
27.	வெலிகம	... D. வணிகசேகர
28.	கண்டி	... G. E. de சில்வா
29.	பதுளை	... D. H கொத்தலாவல

* மீதேனியா 20-10-1931 இல் இறந்துபோக அவரிடத்தில் திருமதி மொலமுரே

30. பிபில ... G. C. றம்புக்பொத
31. அம்பாந்தோட்ட ... V. S. விக்கிரமநாயக
32. கொழும்பு மத்தி ... A. E. குணசிங்க
33. கம்பகா ... D P. யயசூரிய
34. கொழும்பு வடக்கு ... Dr. R. சரவணமுத்து
35. கலவாக்கொல்லை ... S. P. வைத்திலிங்கம்
36. உடுகம ... H. W அமரசூரியா
37. பலப்பிட்டியா ... G R. de சொயிசா
38. மாத்தளை ... W T. B. கரலியட்ட
39. நாரம்மல ... G. E. மதவல
40. தும்பறை ... A. இரத்தினயக
41. மொறவாக்க ... Dr. S. A. விக்கிரமசிங்க
42. மன்னார் முல்லைத்தீவு ... S. M. ஆனந்தன்
43. கொழும்பு தெற்கு ... S. W தசநாயக
44. புத்தளம் ... சேர். ஹென்றிமெல்
45. அனுராதபுரம் ... H. R. பிரீமன்
46. இரத்தினபுரி ... D. J. விமலசுரேந்திர
47. யாழ்ப்பாணம் ...
48. காங்கேயன்துறை ... —
49. பருத்தித்துறை ... —
50. ஊர்காவற்றுறை ... —

—

கௌரவ நியமன அங்கத்தவர்கள்

1. மேஜர் J. W. ஒல்பீல்ட்
2. டாக்டர் சொக்மன்
3. திரு. T. L விலியேஸ்
4. ,, M J. கேரி
5. ,, I. X. பெரேரா
6. ,, M K. சால்டின்
7. சேர். ஸ்ரீவாட் சினிதர். K. C
8. திரு E. C. விலியேஸ்

முதலாம் அரசாங்க சபையில் கட்சி அமைப்பு இருக்கவில்லை. அங்கத்தவர் ஆள்புல அமைப்பிலேயே தெரிவு செய்யப்பட்டனர். இனவாரிப் பிரதிநிதித்துவமே இதுகாறும் சிறுபான்மையினருக்கு உகந்ததாயிருந்தது எனவேதான் அரசாங்கசபை அங்கத்தவரையும் இன அடிப்படையில் கணித்துப் பார்த்தவரும் இருந்தனர். அக்கணிப் பின்படி பார்க்கும்போது பின்வரும் விபரம் அறியக்கிடக்கிறது.

தெரிவு செய்யப்பட்டவர்

கரைநாட்டுச் சிங்களவர்	– 28
கண்டிச் சிங்களவர்	– 10
இலங்கைத் தமிழர்	– 3 *
இந்தியத் தமிழர்	– 2
முஸ்லிம்	– 1
மொத்தம்	46

நியமிக்கப்பட்டவர்

ஐரோப்பியர்	– 4
பறங்கியர்	– 2
இந்தியர்	– 1
முஸ்லிம்	– 1
மொத்தம்	8

அரசாங்க உத்தியோகத்தர்

ஐரோப்பியர் – 3

அரசாங்கசபை அங்கத்தவரை வர்க்க ரீதியில் கணித்தபோது அவர் விபரம் பின்வருமாறு என்பர்.

வழக்கறிஞர்	... 22
நிலக்கிழார்கள்	... 13
வர்த்தகர்	... 7

முதலாம் அரசாங்க சபையில் அமைக்கப்பட்ட மந்திரிமார் சபையிலே உத்தியோக அங்கத்தவரான ஆங்கிலேயர் மூவரும், முஸ்லிம் பிரதிநிதியொருவரும், இந்தியர் பிரதிநிதி ஒருவரும் சிங்களப் பிரதிநிதிகள் ஐவருமாகப் பதின்மர் இருந்தார்கள். அவர்கள் கருத்தொருமித்து ஆதரவுபட்டு ஒரே சிந்தனை ஒரே வேலை எனச் செயலாற்றாது தனித்தனிப் போக்குள்ளவராயே இருந்தனர். அவர்களிடையே இனவொதுக்கற் குணமும் வகுப்புக் காய்ச்சலும் இருந்தன.

---

* இலங்கைத் தமிழர் உண்மையில் எழுவர் இருந்திருக்கலாம். அவர்கள் 1931 தொடக்கம் 1934 வரை ஒன்றியொதுக்கல் செய்து விட்டு, 1934 ஆம் ஆண்டில் உபதேர்தலில் நாலு தொகுதிகளிலும் பிரதிநிதித்துவம் பெற்றுப் பின்னர் எழுவராயினர்.

''ஆச்'' என்னும் கோபுரவலீவில் நெருக்கியடுக்கப்பட்ட கற்கள் எல்லாம் ஒன்றுக்கு ஆதாரமாயும், ஒன்று எல்லாவற்றுக்கும் ஆதாரமாயும் இருப்பது போன்றதொரு தொடர்பில் இருப்பதே மந்திரம் எனப்படும். அத்தகைய முறையில் அமையாத மந்திரிமார் தம்முள் ஒட்டாமல் தனித் தனியாக நெல்லிக்காய்கள் போலவே இருந்தார்கள்.

முதலாம் அரசாங்கசபையை ஒன்றியொதுக்கல் செய்த வைத்திலிங்கம் துரைசுவாமி 8-5-1931 இல் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற பகிரங்கக் கூட்டத்தில் கூறியவை இங்கு குறிக்கற்பாலன ''எங்கலீ வகுப்புவாதிகள் என்றும், நாங்கள் வகுப்புவாத நன்மை யின் பொருட்டே அரசாங்கசபையை ஒன்றியொதுக்கல் செய்தோம் எனவும் கூறிகிறார்கள். அது அப்படியல்ல. நாங்கள் கோழைகள் அல்லர். நாங்கள் ஒரு பகுதியாரின் நன்மையைப் பார்ப்பவர் அல்லர் என்னுடைய அரசியல் வாழ்வில் நான் என்றைக்காவது வகுப்புவாதம் பேசியது கிடையாது. வகுப்புவாதச் சீர்திருத்தங் கேட்டதுங் கிடையாது. தமிழராய நாங்கள் முழு இலங்கைக்கு மாகவே, சாதிசமய வேறுபாடு கருதாது உழைத்தோம். எங்கள் பாதுகாப்பு சிங்களவருடைய பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்று திடமாகக் கூறுவேன். எங்கள் சுதந்திரம் சிங்களவருடைய சுதந் திரத்திலேயே தங்கி உள்ளது என உறுதியாகக் கூறுவேன். எங்கள் அரசியற்றிருத்தம் சிங்களவருடைய பூரண ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது பிரித்தாளும் பிரிவினீ எங்களீப் பெரியவராக்க மாட்டாது. எனவே நான் மறுபடியும் இலங்கைவாழ் இனத்தவர் எல்லோரும் ஒற்றுமையாக இருக்குமாறும் இனமத வேறுபாட்டிற் பிரியாதிருக்குமாறும் முழு இலங்கையர் சார்பிற் கேட்டுக் கொள் ளுகிறேன்.''

தமிழர் அரசாங்கசபையை ஒன்றியொதுக்கல் செய்த காலத்தில் அவர்களீத் தென்னிலங்கையரோடு ஒற்றுமைப்படுத்த அரசியற் பண்டிதர்கள் முயற்சி செய்தனர். அவர்களில் ஒருவர் விரக்தியோடு ''இந்தத் தேயிலீத் தோட்டங்களும் றப்பர்த் தோட்டங்களும் வந்தமையால்தானே உந்த வித்தியாசம் ஏற்பட்டது'' என்றுராம். வெளிநாட்டு மூலதனப் பெருக்கம் இலங்கையில் வேலீ செய்தமையால் சுதேசிகளுக்கு வசதியீனம் ஏற்பட்டது என்றார்கள். ஆனல் கண்டிச் சிங்களவர் தோட்டங்களில் நாளாந்த வேலீ செய்வதற்கு மறுத் தமையாற்றானே தென்னிந்திய மக்கள் பெருந் தொகையினராக இங்கே வரவழைக்கப்பட்டார்கள் என எமர்சன் ரென்னென் முதலிய அறிவாளிகள் கூறினர்கள். அன்றி அந்தக் காலத்தில் இந்தியத்

தொழிலாளர் ஆயிரக்கணக்காக இங்கே வராதிருந்தால் இன்று செல்வங் கொழிக்கும் கழனிகள் எல்லாம் கருங்காடுகளாகவே இருக்கும் என்றூர்கள்.

சட்டசபையின் இறுதிக் காலத்திலே சிங்களவருக்கும் தமிழருக்கும் அபிப்பிராய பேதம் அகலிக்கத் தொடங்கியது. அந்தக் காலத்திலே முற்போக்குள்ளம் படைத்த பலர் தேசிய உறவை உருவாக்கப் பெரிதும் உழைத்தார்கள். அவர்களுள் மாதர் சங்கத்தினர் செய்த முயற்சியைப் பராட்டாமல் இருக்கமுடியாது. திருவாட்டி S C போல் அம்மையார் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட மாதர் சங்கத்தில் அவர்கள் வீட்டுப் பிரச்சினைகளோடு நில்லாது நாட்டுப பிரச்சினைகள் சம்பந்த மாகவும் பேசத் தலைப்பட்டனர். இன மத, மொழி வேறுபாடுக ளற்ற தேசிய மனப்பான்மைக்காக அவர்கள் உழைத்தார்கள். பாண்ஸ் பிளேஸ் என்ற இடத்தில் திருவாட்டி நடராசா உபகரித்த இல்லத் தில் அவர்கள் கூடினர்கள். பின்னர் கின்சிலி வீதியில் கூடி தேசிய ஒருமைப்பாட்டுக்காக உழைத்தார்கள்.

டிவன்சயர் மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையில் 1924 ஆம் ஆண்டில் இருந்த தெரியப்பட்ட பிரதிநிதிகள் 23 பேருள் எண்மர் தமிழராய் இருந்தனர். ஆனல் டொனமூர் அமைப்பில் ஏற்பட்ட அரசாங்கசபையில் 1934 ஆம் ஆண்டிலே (யாழ்ப்பாணத் தொகுதிகளில் இடைக்காலத் தேர்தல் நடைபெற்ற பின்னர்) சபையில் இருந்த தெரியப்பட்ட பிரதிநிதிகள் 50 பேருள் 38 சிங்களவரும் 7 தமிழரும் இருந்தமை அவர்கள் முன்னர் வகித்துவந்த பிரதிநிதித் துவத்தின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தமையைக் காட்டுகிறது. சிங்களவர் தொகையில் அவர்கள் தொகை ஐந்தில் ஒன்றிலும் குறை வாகவே இருந்தது.

அத்தியாயம் 32

முதலாம் அரசாங்கசபையின் போக்கு

டொனமூர் திருத்தத்தின் பிரகாரம் முதலாம் அரசாங்கசபை 1931 ஆம் ஆண்டில் கூடியபின் பத்திரிகைகள் அதன் போக்கைப் பற்றிப் பலவாறுகத் தங்கள் கருத்துக்களைத் தலையங்கமிட்டு எழுது வனவாயின. சிலோன் பேற்றியற் என்னும் பத்திரிகை 3-10-1931 இல் வெளிவந்த இதழில் அரசாங்கசபை என்னும் தலையங்கத்தில் பின் வருமாறு எழுதிற்று. ''அரசாங்கசபை முறையாக அமைந்துள்ளது என்று ஆள்பதி கூறுகிறார். வாசகர் தெரியப்பட்டுக் கௌரவிக் கப்பட்டுள்ளார். சப்தரிஷிகள் எனப்படும் ஏழு ஞானிவர்கள் போல ஏழு நிர்வாக சபைகளின் தலைவர்களும் மந்திரிமாராக இருக் கிறார்கள். அவர்களுக்கு மேலாக மூன்று புத்திசாலிகளான மும் மூர்த்திகள் எனத் தக்கதாக மூன்று காரியதரிசிகளமர்ந்து ஏழு மந்திரிமாராய பாவைப்பிள்ளைகளின் கயிற்றை இழுத்து அசைக் கின்றார்கள். பாவைக்கூத்து நடைபெறுகிறது. இந்த அரசாங்கம் அனுமதி அலுவலிலும் ஆள்பதியின் சான்றுபகர் வல்லப அலுவலி லும் தோற்கடிக்கப்பட்ட போதிலும் ஆள்பதி சபையைக் குலைக்காமல் வைத்திருக்கிறார். அப்படியானால் ஏழு மந்திரிமாரும் அதில் ஒரு குறையும் இல்லை எனக் கூறுவர். அவர்கள் ஆள்பதியின் மேலதிக அதிகாரத்தைப்பற்றி உரத்துப் பேசிவிட்டு அமைதியாக இருப் பார்கள். அவ்வளவுந்தானே! அப்படியானால் தமிழர் மகாசபையினர் அரசாங்க சபையின் வாய்ப்பைப் பற்றிக் கிளர்ச்சி செய்வார்களா?''

சிலோன் இன்டிபென்டன்ற் என்னும் பத்திரிகை 13-2-1932 இல் வெளியிட்ட இதழில் பெரியதோர் எதிர் மறுப்பு என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதியது. ''குடியேற்ற மந்திரியார் அரசாங்கசபை, சம்பளத்தில் இறைவிதித்தலைச் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. அப்படியானால் அங்கத்தவர்கள் எல்லோரும் கௌரவமாக விலகல் செய்வார்களா, அல்லது தங்கள் உரிமைக்காகத் தலை தூக்கு வார்களா? அங்கத்தவர் ஒருவர் நான் ஏன் வெளியேறப் போகி றேன் என்றார். அப்படியானால் அக்கௌரவ அங்கத்தவர் அரசாங்க சபையில் அமர்ந்து ஆள்பதியிடமும் மூன்று காரியதரிசிகளிடமும் அவமானப்படட்டும். இன்னோர் அங்கத்தவர் நான் என்னுடைய தொகுதிக்கு ஏதாவது நன்மை பெறுதல் வேண்டும் என்றார். அப்படியானால் இப்பெரியார் தனது தொகுதி தனது நாட்டிலும்

பார்க்க மேலானது எனக் கருதுவார்போலும். திருவாளர்கள் S. W. R. D. பண்டாரநாயகவும் E A. P. விஜயரத்தினவும் அரசாங்க சபை முதல்வர் நாட்டபிமானம் இல்லாது நடந்து கொண்டமைக் காக அவரை வைதார்கள்.

ரைம்ஸ் ஒவ் சிலோன் என்னும் பத்திரிகை 19-3-1932இல் எழுதிய **தவருன வழியிலமைந்த யூகம்** என்னும் தலையங்கத்தில் பின் வருமாறு குறிப்பிட்டது. ''கௌரவ அங்கத்தவர்கள் டொனமூர்த் திருத்தமும் அரசாங்க சபையின் அமைப்பும் நன்முகவில்லை எனக் கருதுவார்களானால், அவர்கள் எல்லோரும் ஒரே முகமாக விலகல் செய்தல் வேண்டும். அப்படியானால் அவர்கள் மனமார நேர்மை யுள்ளவராவர். வெறும் விரோதத் தன்மையால் ஆவது ஒன்றுமில்லை.''

டெயிலி நியூஸ் பத்திரிகையும் 14-10-1932 இல் ''**சில நியாய விரோதங்கள்**'' என்னும் தலைப்பில் அரசாங்கசபையின் பிரதி கூலகங்களை எழுதியது. **சோல்ஜர்** என்ற பத்திரிகையும் 1932 ஆம் ஆண்டு கார்த்திகை மாத இதழில் **அரசியல் நிலைமை** என்னும் தலையங்கத்தின் கீழ் ''அரசாங்கசபை அமையமுன், டொனமூர் அரசியற்றிருத்தம் அருமையானது என்றும், அது மக்கள் கைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுத்தது என்றும் நிறைவு சொன்னவர்கள் எல்லாரும் இப்போது அது உதவாதது என்று குறை கூறுகிறார்கள். அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என்கிறார்கள். இன்று டொன மூர் அமைப்பின் ஒவ்வொரு அம்சமும் பிழையானது எனக் கண்டு கொண்டார்கள். முஸ்லிம் மக்களுக்கு இத்திருத்தத்தால் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களுடைய பொறுப்புக்களுக்கு இத் திருத்தத்தினமைப்பில் இடமில்லாது போயிற்று.''

பிரித்தானிய அரசயாப்பை ஓரளவுக்குத் தழுவியே அரசாங்க சபையின் நடைமுறைகள் தயாரிக்கப்பட்டபோதிலும், அரசயாப் பின் அத்தனை அம்சங்களும் அரசாங்க சபையின் நடைமுறைகளில் கையாளப்படவில்லை. அரசயாப்பில் பெரும்பாலானவை எழுதப் படாதவையாயும் வழக்கில் வந்த சம்பிரதாயங்களாயும் அங்கே நிலவின. ஆனால் இலங்கை அரசாங்க சபையில் பிரமாணங்கள் நடைமுறைகள் பெரும்பாலும் நிலையற் கட்டளைகளால் ஆளப்பட்டன.

அரசாங்க சபைக் கூட்டங்கள் பெரும்பாலும் ஒன்று விட்டொரு செவ்வாய்க்கிழமை மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாவதும், வெள்ளிக் கிழமை மாலை 7-30 மணியளவில் நடைபெறுவதும் வழக்கமாயிருந் தது. அரசாங்க சபையின் பிரதான அலுவல்கள் பின்வருமாறிருந்தன.

1. வருடாந்த ஒதுக்கீட்டு முறையைப் பற்றி ஆலோசித்தலும் உபமானியங்களைப் பற்றிப் பேசுதலும்.
2. மந்திரிமார் மத்திய அரசாங்கம் ஒதுக்கும் கடன்கள் மானியங்களுக்கான பிரேரணைகளைப் பிரேரித்தல்.
3. அரசாங்க முறிகள்
4. மார்ச்மாதத் தீர்மானங்கள் என்னும் பெயர் இடப்பட்ட சம்பள ஒதுக்குத் தீர்மானங்களும், மந்திரிமாரின் பிற தீர்மானங்களும்.
5. ஒழுங்குகளை அநுமதிக்குமுகமான பிரேரணைகள்.

அரசாங்கசபையிலே முதல்வராயும், மந்திரிமார் சபையின் உபதலைவராயும் இருந்த திரு. தொன்பாரன் யத்திலக 1931 ஆம் ஆண்டின் செப்ரம்பர் மாதத்திலே சபையின் முதலாவது ஒதுக்கீட்டு முறியைச் சமர்ப்பித்தார். அதனைத் திரு. D. S. சேனநாயக அனுமதித்தார்கள்.

பிரதிநிதிகள் கூடிய அரசாங்க சபையிலே முதன் முதலாகக் கொண்டுவரப்பட்ட ஒதுக்கீட்டு முறி அதுவேயாகும். அதிலே ரூபா 10, 32, 00000 செலவு காட்டப்பட்டது. அக்காலத்தில் (1931—1932) வருமானம் 83000000 ரூபாவாகவே இருந்தது. அதிலே சுங்கத்தீர்வை மாத்திரம் 4000000 ரூபாவாகும். ஏனைய பொது வரிகள் அக்காலத்தில் பிரமாதமாக இருக்கவில்லை. செலவு விடயத்தில் 11000000 ரூபா சுகாதாரப் பகுதிக்கும் 9000000 ரூபா விவசாயம் காணிப் பகுதிக்கும் 14000000 ரூபா கல்விப் பகுதிக்கும் காட்டப்பட்டது.

முதலாம் அரசாங்கசபைக் காலத்திலே 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலே இலங்கை அரச அடகு வங்கி ஆரம்பிக்கப் பட்டது. அதன் நிர்வாக கர்த்தாக்களாகத் திருவாளர்கள் கதிரவேற்பிள்ளை பாலசிங்கம், அருணாசலம் மகாதேவா, A. G. G. விஜயகூன் E. G. ஆதமலி, A. E. டி சில்வா, சேர். மாக்கஸ் பர்ணந்து ஆகியோர் ஆளுபதியால் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுள் மாக்கஸ் பர்ணந்து தலைவராய் இருந்தார்.

பொதுமக்களிடம் அதிக வட்டி வசூலித்த செல்வந்தரிடமிருந்து, ஈட்டிலிருந்த காணி நிலங்களை மீட்கப் பணம் உதவும் நோக்கமாகவே இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அன்றி பொதுமக்கள் அரசவங்கியில் கடன் பெற்ற பணத்தையும் தவணைப் பணமாகத் திருப்பிக்கொடுக்க வசதி செய்யப்பட்டது.

ஆள்பதி சேர். ஹூபேட் ஸ்ரான்லி 1927 ஆம் ஆண்டு தொடக்கம் 1931 ஆம் ஆண்டு வரையும் இங்கே இருந்தார். அவர் சிறந்த அறிவாளியாயும் அடக்கம் உள்ளவராயும் யாவரும் விரும்பத்தக்க முறையில் வாழ்பவராயும் இருந்தார். அவர் காலத்தில் இலங்கையருக்கு ஓரளவுக்குப் பொறுப்பாட்சி கிடைத்ததுமல்லாமல், முன்னர் கண்டி மன்னரிடம் ஆங்கிலேயர் கைப்பற்றிச் சென்ற சிங்காசனம், முடி, செங்கோல் ஆதியன 20-9-34இல் முறையாகத் திருப்பிக்கொண்டு வரப்பட்டன. அவை காட்சிப் பொருளாகவே வைக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் அவற்றை குளோ செத்தர் கோமகனார் கௌரவமாகத் திருப்பிக்கொண்டு வந்து அதற்குரிய பூமியில் வைத்துப் போனதில் இலங்கையருக்குப் பெருமை உண்டு. இங்கிலாந்தில் முடியாட்சி ஆரம்பிக்கு முன் தோன்றி, 2500 ஆண்டுகள் நிலவிய ஆட்சிச் சின்னங்கள் மீண்டும் தாயகத்தை அலங்கரிப்பது மகிழ்ச்சிக்குரிய காரியந்தானே.

ஸ்ரான்லி அவர்களுக்குப் பின்னர் சேர். கிறேம் தோம்சன் ஆள்பதியாய் வந்தார்கள். அவர் முன்னர் 1919 ஆம் ஆண்டு முதலாக இலங்கையில் மூவாண்டுகள் குடியேற்றக் காரியதரிசியாகக் கடமையாற்றியவர். பிரித்தானியப் பிரதமர் லொயிட் யோர்ச் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர்.

காய்தல் உவத்தல் இல்லாத நன்மனசுள்ளவராதலால் அவர் முன்னர் காரியதரிசியாகக் கடமையாற்றிய காலத்திலேயே ஆள்பதி மனிங் அவர்களுக்குத் தாராண்மைப் போக்கில் ஆலோசனை கூறியும் உள்ளார். அவர் பல மாதங்கள் பதில் ஆள்பதியாகக் கடமையாற்றி இராணிமாளிகையை அலங்கரித்துமுள்ளார்.

இப்போது அவர் ஆள்பதியாய் நியமனம் பெற்று வந்த காலத்திலே பழைய சட்டசபை கலைக்கப்பட்டுப் புதிய அரசாங்கசபை தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கையர் எழுவர் மந்திரிகளாய்ச் சட்ட நிர்வாக அலுவல்களை நடத்துபவராயும் இருந்தார்கள்.

அரசாங்கசபை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளாவதற்குள் 1932 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஹெறாஜனத் தொகுதியின் பிரதிநிதியாய திரு. E. W. பெரேரா தமது பெயர் பெற்ற பிரேரணைகளைப் பிரேரிப்பாராயினர். தனி அங்கத்தவர் தீர்மான வரிசையிலே அவர் திருத்தங்கோரி இத்தீர்மானங்களைக் கொண்டு வந்தார். இவை ஆள்பதியின் அதிகாரத்தையும், அரசாங்கக் காரியதரிசிகள் மூவரின் இரட்டை ஆட்சியையும் நீக்குவதை இலக்



ஈ. டபிள்யூ. பெரேரா
அவர்கள்



சேர். டொன். பாரன்
யயத்திலக அவர்கள்

காகக் கொண்டவையாகும். பெரேரா எல்லாமாக ஏழு தீர்மானங்களைக் கொண்டு வந்தார். அவற்றுள் இறுதியாக இருந்த தீர்மானம் நிர்வாகசபை முறையை நேற்றிக்கு நேராகத் தாக்கிற்று. ''நிர்வாகசபை முறையால் பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டமையால் பரிபாலன அலுவல்களில் தாமதங்கள் ஏற்படுவதால் அம்முறை எங்கள் நாட்டுக்கு ஏற்றதல்ல'' என்பதே அத்தீர்மானம். ஆனால் அதனைப் பிரேரிக்கு முன்னர் நண்பர்கள் அதனை நீக்கிவிட்டு ஏனைய ஆறு பிரேரணைகளையே பிரேரிக்க வைத்தார்கள்.

பெரேராவின் பிரேரணைகள் அரசியற்றிருத்தக் கிளர்ச்சியை உண்டாக்குமளவில் சென்றதால் ஆள்பதி சேர். கிறேம் தோம்சன் 17-2-33 இல் மந்திரிமார் சபையினரோடு சிநேகபூர்வமாகக் கலந்து பேசியபின் அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கு அது அகாலமென்றும், வேண்டுமானால் மந்திரிமார் தெரிவு, மந்திரிமாரின் நிர்வாகத்தில் உள்ள திணைக்களங்களில் மாற்றம் என்பன போன்ற திருத்தங்களைச் செய்துவிடலாம் எனக் கூறினர்.

மந்திரிமார் சபையின் உபதலைவரும் அரசாங்கசபை முதல்வரும் உள்நாட்டு மந்திரியுமான டொன்பாரன் ஜயத்திலக 21-4-33 இல் ஆள்பதிக்கு மந்திரிமார் சபையின் சார்பில் தமக்கு அத்தகைய சிறிய மாற்றங்கள் தேவையில்லையென்றும், தமக்கு அரசாங்கத்தை நடத்துவதற்கு முரணுகவும் முட்டுக்கட்டையாகவும் உள்ள அமைப்புக்களையே மாற்றிவிட வேண்டும் என்றும், அவற்றையே அரசாங்க சபையும் நாட்டு மக்களும் அவாவி நிற்கிறார்கள் என்றும், ஆள்பதியின் மறுப்புத் தங்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கி விட்டதென்றும் பதிலெழுதினர்.

பின்னர் மந்திரிமார் ஒரு திருத்தத்தைத் தயாரித்து, அரசாங்க சபை ஈரண்டு வருடகால நடைமுறையிலேயே உதவாதது எனத் தாங்கள் கண்டதாகவும், மந்திரிமார் சபை தனிச் சிங்கள மந்திரிமாரைக்கொண்டதாய், காரியதரிசிகள் மூவரையும் அகற்றிவிட்டு அவர்களிடத்தில் அரசாங்க சபைக்குப் பொறுப்பான தெரியப்பட்ட அங்கத்தவரையே இருத்துதல் வேண்டுமென்றும், அப்படியானால் முன்னர் நிலவிய இரட்டை ஆட்சியென்ற முட்டுக்கட்டை இருக்காதென்றும், மந்திரிமார் சபையை நிர்வாக சபைகள் தோறும் தெரியாமல் அரசாங்க சபையிலேயே தெரிதல் வேண்டும் என்றும், அதற்கு வழி அரசாங்கசபையில் செல்வாக்குள்ள ஒருவரை மந்திர முதல்வராகத் தெரியின் அவரே பின்னர் தம்மோடு ஒத்துழைக்கக் கூடிய ஏனைய மந்திரிமாரைத் தெரிந்துகொள்ள வேண்டும் எனவும் கூறினர். இன்னும் முன்னர் பெரேரா கொண்டுவந்த திருத்தத் தீர்மானங்களும் இவற்றில் அடங்குமெனவும் கூறினர்.

இங்ஙனம் அமைந்த மந்திரிமாரின் நிலைவேட்டை ஆள்பதி 19.6-33 இல் மந்திரிமாரோடு கலந்து ஆராய்ந்தார். முன்னர் நிர்வாக சபைகளின் அமைப்பை நீக்கவேண்டுமென்று பெரேரா கொண்டுவந்த தீர்மானத்தை அரசாங்கசபை ஏற்றுக்கொள்ளவில்லை யாதலால் இப்போது நிர்வாக சபைத் தலைவர்களைத் தெரிவு செய்யும் முறையில் மாற்றங்கோரும் மந்திரிமாரின் கோரிக்கையின் மர்மம் என்ன என்று ஆள்பதி கேட்டார்கள். அன்றி நிர்வாக சபைத் தலைவர்களைத் தெரியும் முறையில் மாற்றம் ஏற்படுவதை மந்திரிமார் சபையிலிருந்த சிறுபான்மை அங்கத்தவர் விரும்பவில்லை எனவே இவர்களுடைய கோரிக்கைக்கு இணங்காது புறக்கணிக்க ஆள்பதி தயங்கவில்லை.

இதன் பின்னர் டொனமூர் திருத்தத்தைத் திரு. பெரேரா பிரேரணையின் வண்ணம் மாற்றியமைத்தல் வேண்டும் என்றொரு பிரேரணையைச் சிலாபத்துப் பிரதிநிதி திரு. G. C. S. கொறியா 24-7-33 இல் பிரேரித்து நிறைவேற்றினர். நிலைமை வேறுவழியில் திரும்புவதைக்கண்ட ஆள்பதி மந்திரிமார் சபையினர் சமர்ப்பித்த நிலைவேடுகளை 16-8-33 இல் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பித் தமது அபிப்பிராயத்தை நிலைமையைக் கவனித்து எழுதுவதாக அறி வித்தார்.

அரசியற்றிருத்தஞ் சம்பந்தமாக ஆள்பதியின் ஆமை வேகத்தைக் கண்ட அரசாங்க சபையினர், அரசியற்றிருத்தஞ் சம்பந்தமாக அரசாங்கசபையின் பேராட் குழுவினர் ஐவர் உடனடியாகக் குடியேற்ற மந்திரியாரைக் கண்டு பேசுதல் வேண்டும் என்றொரு பிரேரணையை 16-9-33 இல் ஏகமனதாக நிறைவேற்றினர்கள். அதற்குக் குடியேற்ற மந்திரியார் அவ்வளவு குறுகிய கால அறிவித்தலில் தம்மைக் காணப் பேராட் குழுவினர் வருவதைத் தாம் ஏற்றுக் கொள்ளமுடியாது என 26-9-33 இல் தந்திமூலம் அரசாங்க சபைக்கு அறிவித்ததோடு தாம் ஆள்பதியின் விளக்கத்தை ஆறுதலாகப் படித்த பின்னரே அரசியல் மாற்றத்துக்கு ஆவன செய்யலாம் எனவும் அறிவித்தார்.

குடியேற்ற மந்திரியாரின் பதிலைப் படித்த மந்திரிமார் சபை யினர், தாங்கள் முன்னர் தயாரித்த நிலைவேட்டின்படி அமைந்த முறைகளை 15-11-33 இல் அரசாங்க சபையிற் பிரேரித்தார்கள். அவ்வேளை சிறுபான்மையினரின் பிரதிநிதிகளுள் ஒரே ஒருவர் வாக் களிக்க மறுத்துவிட ஏனைய 15 அங்கத்தவரும் பாதகமாக வாக்

களித்தனர். பெரும்பான்மையினராய 34 பேர் சாதகமாக வாக்களித்துப் பிரேரணையை நிறைவேற்றினர்கள். இதனால் முன்னர் கொறியா அவர்களால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை சபையின் அநுமதியுடன் பிறக்கீடு செய்யப்படலாயிற்று.

ஆள்பதி தோம்சன் அவர்களுக்கு நீண்ட காலமாக இருந்த வயிற்றுப்புண் இப்போது அதிகரித்தது. அத்தோடு குடியேற்ற மந்திரியார் இலங்கை அரசாங்க சபையின் மந்திரிமார் சமர்ப்பித்த கோரிக்கைகளை ஆராய்வதற்கு ஆள்பதியை நேரில் வருமாறு லண்டனுக்கு அழைத்திருந்தார். தோம்சன் லண்டனுக்கு மீண்ட போது, வழியில் கப்பலில் மரணமடைந்தார். அவருடைய பூதவுடல் ஏடனில் அடக்கஞ் செய்யப்பட்டது.

ஆள்பதி தோம்சனுக்குப் பின்னர் சேர். றெஜினல்ட் எட்வேட் ஸ்ரப்ஸ் ஆள்பதியாக வந்தார். இவரும் முன்னர் இலங்கையில் குடியேற்றக் காரியதரிசியாய் இருந்து அநுபவம் பெற்றவர். இவர் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் பெருஞ் சிறப்புடன் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தவர் இவர் இலங்கையில் குடியேற்றக் காரிய தரிசியாய் அமர்ந்து திறமையாய்க் கடமையாற்றினர் என்று சேர். பொன்னம்பலம் இராமநாதனும் சேர். சொலமன் டயஸ் பண்டார நாயகவும் பாராட்டியுள்ளார்கள்.

இப்போது ஆள்பதியாய் நியமிக்கப்பெற்று வந்த ஸ்ரப்ஸ் அவர்களின் முதலாவது வேலை டொனமூர்த்திட்டம் இலங்கையில் வேலை செய்யுமா என்பதை ஆராய்ந்து குடியேற்ற மந்திரியாருக்கு எழுதுவதே என இருந்தது. அவர் அரசாங்க சபையின் நடபடிக்கைகளை நன்கு அவதானித்து 21-2-1934 இல் தமது அறிக்கையைக் குடியேற்ற மந்திரியாருக்குச் சமர்ப்பித்தார். அதில் அரசாங்க சபையின் சிறுபான்மை இனத்தவர் சிங்கள மந்திரிமாரின் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என்றும், அவர்கள் கோரிக்கையைச் சிறுபான்மையினர் எதுவிதத்திலும் எதிர்ப்பார்கள் என்றும் எழுதியிருந்தார். அங்ஙனமே சிறுபான்மையினர் 8-6-1935 இல் தமக்குப் பெரும்பான்மையினரின் அதிகாரத்தால் ஏற்பட்ட சிறுமையைக் குடியேற்ற மந்திரியாருக்கு அறிவித்தார்கள்.

ஆள்பதி 21-2-1934 இல் குடியேற்ற மந்திரியாருக்கு எழுதிய அறிக்கையில் :

1. மூன்று காரியதரிசிகளையும் நீக்கிவிட்டு அவர்களுடைய துறைகளுக்கு நிர்வாக சபைகளை ஏற்படுத்துதல்.

2. மந்திரிமார் சபைக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி, அவர்கள் நீதிசம்பந்தமான அலுவல்களையும் நடத்த அருகராதல்.

3. நிர்வாக சபைகளின் தலைவர்களைத் தனித்தனியாகத் தெரியாமல் எல்லோரையும் அரசாங்கசபைக் கூட்டத்திலேயே சபாநாயகரைத் தெரிவது போலத்தெரிதல்.

4. பகிரங்க சேவைச்சபை எனப் டும் அரசாங்கசேவை ஆணைக் குழுவை நல்ல முறையில் மாற்றியமைத்தல்.

5. சில மசோதாக்கள், முறிகள், பிரேரணைகள் பிரேரிக்கப்படுமுன் ஆள்பதியின் அனுமதியைப் பெறுதல் வேண்டும் என்னும் நிபந்தனை நீக்கப்படுதல்.

6. ஆள்பதியின் மேலதிக அதிகாரங்கள் குறைக்கப்படுதல்.

என்றின்னோரன்ன திருத்தங்களை மந்திரிமார் கோரினர்கள் என்று ஆள்பதி எழுதினர்.

இவற்றோடு ஆள்பதி தமது அபிப்பிராயத்தையும் எழுதினர். அதில் ''இங்கேயுள்ள இப்போதைய நிலைமையில் மந்திரிமார் சபையிலும், அரசாங்க சபையிலும் அபிப்பிராய பேதங்கள் பிரிவினைகள் அதிகமிருப்பதால் பிரதியாளர் குழு எதனையும் வரவேற்றல் நல்லதல்ல'' எனக் குறிப்பிட்டார்.

இதனால் மந்திரிமார் வேண்டுகோளைக் குடியேற்ற மந்திரியார் இரண்டாம் முறையும் மறுத்துவிடவே அவர்கள் 31–7–34 இல் ஆள்பதி அவர்களிடம், ''டொனமூர் அமைப்பு எமக்குப் பயிற்சிக் காகவே தரப்பட்டது. அது எமக்கு உதவாதது. எவ்வாற்றானும் பிரயோசனப்படாதது என நாம் முன்னர் ஆறு பிரேரணைகள் மூலம் நிரூபித்துவிட்டோம். இப்போது அலுவலை நேரில் விளங்கவைப்பதற் காகக் குடியேற்ற மந்திரியாரை நாங்கள் கண்டு பேசுவதற்குரிய ஒழுங்கைச் செய்து தாருங்கள்'' என எழுதினர்கள். அன்றைய சந்தர்ப்பத்தில் மந்திரிமாருக்குத் தங்கள் மத்தியில் இருந்த சிறு பான்மையினத்து மந்திரிமார் முட்டுக்கட்டையாயிருந்தார்களாதலால் முதலில் மந்திரிமாரைத் தெரியும் முறையிலாவது மாற்றம் ஏற்பட்டால் அதுபெரிய பேறுகவே இருக்குமெனக் கருதினர்.

குட்டக் குட்டக் குனிகிறவனும் மடையன், குனியக் குனியக் குட்டுகிறவனும் மடையன் என்ற பிரகாரம் இதுகாறும் குனிந்து நின்ற சிறுபான்மையினர் இப்போது தலைநிமிர்ந்து நிற்பாராயினர். யாழ்ப்பாணத் தொகுதிகள் நாலிலும் தமிழர் முதலாவது அரசாங்க

சபையை 1931 தொடக்கம் 1934 வரை ஒன்றி ஒதுக்கி இருந்த காலத்திலே வடமாகாணம் பலவழிகளிலும் பின்தங்கிய நிலைமையிலேயே இருந்தது. காகம் இருக்கப் பனம்பழம் வீழ்ந்த நியாயம் காட்டி இவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்காமையால்தான் இன்னல்கள் உண்டாயின என்பாரும் உளர்.

யாழ்ப்பாணத்திலே இருந்த காட்டுக் கந்தோரும் உலாந்தாக் கந்தோரும் அகற்றப்பட்டன. கிளிநொச்சியில் இருந்த வைத்தியசாலை குலைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கச்சேரியும் ஓர் உதவி அதிபரின் கந்தோராக மாற்றி அமைக்கப்படும் அளவுக்குக் காரியங்கள் நடைபெற்றன. இன்னும் பகிரங்க வேலைப்பகுதிகள் வீதிகள் அமைத்தல் முதலிய வேலைகளை வெகுவாகச் சுருக்கிக்கொண்டன. மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வைத்திய உதவிகள் பெறுவது முயற்கொம்பாகவே இருந்தன. எனவே அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு வந்திருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழ்த் தலைவர்களை நோக்கி, ''நீங்கள் அரசாங்க சபையை ஒன்றியொதுக்கல் செய்து விட்டுக் கையாளப்போகும் மாற்றுவழி என்ன?'' என்று கேட்டார். அதனாலும் விழிப்புற்ற தமிழர் யாழ்ப்பாணத் தொகுதிகளில் இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்கு இணங்கினர்கள்.

யாழ்ப்பாணத் தமிழருக்கு ஞானோதயம் உண்டானதும் நான்கு தொகுதிகளிலும் உபதேர்தலுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராயிருந்த சுப்பையா நடேசன் காங்கேயன்துறைத் தொகுதியில் வெற்றி பெற்றார். அரச ஈட்டு வங்கியின் அதிபராயிருந்து அதனை விலகல் செய்துவிட்டு வந்த அருணாசலம் மகாதேவா யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற்றார். கேம்பிரிச் சர்வகலாசாலையில் முப்பெரும் பிரிவில் தீர்க்க சித்திபெற்றுச் சீமை அப்புக்காத்தாகி இலங்கைக்கு மீண்டு, தமிழர் ஒன்றியொதுக்கலைக் கைவிடச் செய்வதற்கு இரவு பகலாக உழைத்ததுமன்றி முன்னர் 1931 ஆம் ஆண்டில் மன்னார்த் தொகுதியில் தோல்விகண்ட திருவாளர் கணபதியார் காங்கேயர் பொன்னம்பலம் பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றி பெற்றார். தீவுப்பகுதியில் வைத்திலிங்கம் துரைசுவாமி போட்டியிட விரும்பவில்லை அவர் அரசாங்கசபையை ஒன்றியொதுக்கல் செய்தமை அதன் முழு வைகலுக்குமே எனக்கூறி விலகி நின்றார். அத்தொகுதியில் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை பிரதிநிதியானார்.

எனவே அரசாங்கசபையில் அதுகாறும் வெற்றிடமாயிருந்த ஆசனங்கள் தமிழர் பிரதிநிதிகளால் அலங்கரிக்கப்படலாயின. நால்வரும் அழகிய தலைப்பாகை, நீண்டகோட், உத்தரியம் என்பன

அணிந்து சபையைச் சிறப்பித்தார்கள். மகாதேவா காணி விவசாய நிர்வாகத்திலும், நடேசன் உள்ளூர் ஆட்சி நிர்வாகத்திலும். பொன்னம்பலம் கைத்தொழில் வர்த்தகம் தொழில் நிர்வாகத்திலும் நெவின்ஸ் சுகாதார நிர்வாக சபையிலும் இடம்பெற்றார்கள். நாலு ஊர் இராசாக்களும் நீனையாமல் ஒற்றுமையாய் இருந்த காலம் அது.

தேர்தல்மூலம் நால்வர் தெரியப்பட்டு அங்கத்தவரானமை சிறுபான்மையினத்தவருக்குப் பக்கப் பலமாயிருந்தது. எனவே அவர்கள் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க 8-6-35 இல் குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு விளக்கம் எழுதினார்கள். அதில் டொனமூர்த் திருத்தத்தைத் தாங்கள் ஆரம்பத்திலேயே விரும்பவில்லை என்றும், அதனால் ஒன்றியொதுக்கல் செய்தார்கள் என்றும், அதனால் பெரும்பான்மைச் சமூகத்தவர் சிறுபான்மை யினருக்குப் பாதகமாகவே அலுவல்களைக் கையாண்டு வருகி ருர்கள் என்றும், அரசாங்கசபை எவ்வாற்றானும் மாற்றியமைக்கப் பட நேர்ந்தால் எந்த ஒரு சமூகமும் இன்னெரு சமூகத்தை நலியச் செய்து ஒதுக்கித் தள்ளாதவாறு பாதுகாப்பளித்தல் வேண்டுமென் றும் குறிப்பிட்டார்கள்.

மந்திரிமார் சபையினர் விடாப்பிடியாக ஆள்பதியவர்களிடம் நிர்வாக சபைகள்மூலம் வேலை செய்யவியலாதென்றும் தாங்கள் கருதிய வண்ணம் அரசாங்க சபையிலே ஒரு மந்திர முதல்வர் தெரி யப்படவும், அவர் தம்மோடொத்துழைக்கக் கூடியவரைத் தம் மந் திர சபையில் நியமித்து அவர்களுக்குத் திணைக்களங்களை வகுத்தல் வேண்டும் எனவுங்கூறி நெருக்கினர்கள். ஆள்பதி அவர்களுக்கு நிர் வாக சபைகள்மூலம் மந்திரிமார் அலுவல்கள் தடைபட்டமை விளங் கிற்று. ஆனால் அம்முறையை நீக்குவதனால் சிறுபான்மையினத்த வரைப் பாதிக்கும். சிறுபான்மையினத்தவருக்குப் பாதுகாப்பளிக்கும் மேற்சபையொன்றை அமைக்கலாமோவென்றால் அதற்கும் ஒரு விசேட ஆணையாளரின் தகவுரை வேண்டும் என்றிவ்வாறு தயங்கிய காலத்தில் முதலாவது அரசாங்க சபையின் ஐந்தாண்டுக் காலமும் நிறைவெய்துவதாயிற்று.

முதலாம் அரசாங்க சபையிலே 1933 ஆம் ஆண்டிலே மந்திரி மார் சபையினர் இரண்டு நினைவேடுகளைத் தயாரித்து ஆள்பதியிடம் சமர்ப்பித்தார்கள். அவை அரசாங்க சபையின் அமைப்பிலே சில திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என அச்சபையிலே நிறைவேற்

றிய பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டன வாகும். அவ்வேளையில் மந்திரிமார் ஏகமனதாக இருக்காமல் கருத்து வேறுபாடுகொண்டிருந்தனர். அவர்களுள் மூவர் பிரத்தி யேகமாகத் தமது மறுப்பேட்டை ஆள்பதி ஸ்ரப்ஸ் அவர்களுக்குச் சமர்ப்பித்தார்கள். எனவே அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு ஆள்பதி ஸ்ரப்ஸ் நிர்வேடுகளைக் குடியேற்ற மந்திரிக்கு அனுப்பாம லும் ஆவன செய்யாமலும் அலுமாரியில் அடுக்கி வைத்தார்.

தாராண்மைப் போக்கில் மேலுந் திருத்தங் கோரி நிர்வேடு களைச் சமர்ப்பித்தவர்களுக்கு ஆள்பதியின் செய்கை ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனவேதான் தேசிய மகாசபையைச் சேர்ந்த சிங்கள வர் அடுத்த மந்திரிமார் சபைத் தேர்தலில் ஏகமனதான அபிப்பி ராயங்கொள்ளக் கூடிய மந்திரிமாரை-ஓரின மந்திரிமாரைத் தெரிவு செய்தல் வேண்டும், எனத் தீர்மானித்து வஞ்சினங்கொண்டார்கள்.

முதலாம் அரசாங்க சபைக் காலத்திலேயே இந்தியத் தொழி லாளரின் பிரச்சினை தோன்றிவிட்டது. டொனமூர்த் திருத்தக் குழு வினர் சர்வசன வாக்குரிமை வழங்கத் தீர்மானித்தபோது அவ்வாக் குரிமை இந்தியருக்குமா என்பதே சிங்களப் பெரியார்களைப் பாதித்த பிரச்சினையாகும். டொனமூர் காலத்துக்கு முன் 1921 ஆம் ஆண்டி லேயே 602500 இந்தியர் இலங்கையில் இருந்தனர். அவர்கள் முந்திய அரசாங்கங்களாலும் ஆள்பதிகளாலும் முதலாளிகளாலும் பலவித சலுகைகள் அளிக்கப்பட்டே இங்கே அழைக்கப்பட்டவர்கள்.

ஆனல் 1922 ஆம் ஆண்டின் பின் இங்கே வந்தவர்கள் இலங் கையில் உள்ள தொழிலாளருக்கு நிகராகச் சம உரிமை பெற்றே இங்கே வந்தார்கள். அதற்குக் காரணம் இந்திய அரசாங்கமே. இந்திய அரசாங்கம் 1922 ஆம் ஆண்டில் இயற்றிய வெளியேற்றச் சட்டம் 7 ஆம் பிரிவின் 10 ஆம் விதியின் வண்ணம் இந்தியாவிலிருந்து வெளியேறும் தொழிலாளருக்கு அவர்கள் குடியேறும் நாடுகளின் அரசாங்கம் அந்நாட்டுத் தொழிலாளர்களுடன் சமூக பொருளாதார சம உரிமை கொடுத்தாலன்றி அவர்கள் வெளியேறலாகாது.'' என் பதாம்.

இஃது இவ்வாருக 1923 ஆம் ஆண்டிலே இலங்கை அரசாங்கத் தின் பிரதியாளரும், தோட்ட முதலாளியின் பிரதிநிதியாளரும், திரு D, S. சேனநாயக அவர்களும் இந்தியாவுக்குச் சென்று இந்திய அர சாங்கத்துடன் ஒப்பந்தஞ்செய்தபின்னரே தொழிலாளர் தொடர்ந்து இங்கே குடியேறினர்கள்.

இந்தியத் தொழிலாளர் சர்வசன வாக்குரிமை பெறுவதைச் சிங்களவர் விரும்பாமையாற்றான் டொனமூர்க் குழுவினர் இந்திய ருக்கு வாக்குரிமை வழங்குவதில் சில நிபந்தனைகளை விதித்தார்கள். அதனல் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து இலங்கையில் வசித்தவருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. அப்படியாயின் இலங்கையில் குடி யேறிய இந்தியத் தொழிலாளரின் தொகையை வருட ரீதியில் கணித்த அரசாங்கம் தரும் விபரம் பின்வருமாறு.

ஆண்டுகள்		தொகை
1922	—	162707
1923	—	173115
1924	—	242776
1925	—	226909
1926	—	216267
1927	—	285137

இவர்கள் 1928 ஆம் ஆண்டில் இலங்கையில் 880000 பேர் இருந்தார்கள். அன்றி இவர்களுள் 1921 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்தவர் தொகை 493944 என்றும் இவர்களுள் 114830 பேருக் குக் கல்வியறிவு இருந்தது என்றும் அறியக் கிடக்கிறது.

முதலாம் அரசாங்க சபையின் ஆட்சிக் காலத்திலே அதன் அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டித்து ஓர் எதிர்க்கட் சித் தலைவர் என இருந்தவர் வைத்திய கலாநிதி தோழர் விக்கிரம சிங்க ஒருவரேதான். அவர் குடியேற்றக் காரியதரிசியின் போக்கை யும் அரசாங்க சபையின் முதல்வரின் போக்கையும் வன்மையாகக் கண்டித்துச் சபையில் ஒதுக்கீட்டு நிதி சம்பந்தமாக ஆணித்தரமாகப் பேசியுள்ளார். இங்கிலாந்தில் கல்வியின் பொருட்டுச் சராசரியாக ஒரு பிள்ளைக்கு 335 சிலிங் செலவிடப்படும்போது இங்கே இலங்கை யில் 30 சிலிங்தானும் செலவிடாமை வருந்தத்தக்கதென்றார். இலங் கைச் சர்வகலாசாலைக் கல்லூரியில் 1934 ஆம் ஆண்டிற்கூட பொரு ளாதாரத்துறை பயில வாய்ப்பில்லாமை எங்கள் தவக் குறைவே என்றும், நூறு ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்திலே தொழிற் சங்கங்கள் நடைபெற்று வந்தபோதிலும் இலங்கையில் அவை வளர்ச்சி பெறுமை விந்தையே என்றும் கூறினர். அவருடைய கர்ண கடூரமான கண்டனத்தைக் காதுவிறைக்கக் கேட்ட ஒருவர், அவர் அப்படியெல் லாம் பேசலாமா எனக் கூறியபோது தோழர் அவர்கள் பொதுச் சேவை யில் ஈடுபட்டவர் நேர்மையாய் ஒழுகுதல் வேண்டும் என மறுப்புக் கூறினர்.

டொனமூர் யாப்பிலிருந்த பிழைகளில் பெரும்பாலானவை மந்திரிமார் சபையிலும், நிர்வாக சபைகளிலுமே நிலவின என்பர். பரிபாலன அலுவல்கள் பெரும்பாலும் காலதாமதமாயே நடைபெற லாயின. நிர்வாகசபைகள் தரத்திலும் திறமையிலும் பேதப்பட்டன. காணி விவசாய நிர்வாகசபை மிகத்திறமையாகவே வேலை செய்தது என் பர். அதன் தலைவராயிருந்த மூத்த சேனநாயக மிகவும் திறமையாகவே வேலை செய்தார். ஏனைய நிர்வாகசபைகளின் தலைவர்கள் அவரைப் போன்று நிர்வாக சபைகளின் ஒத்துழைப்பைப் பெறவில்லை என்றும் கூறுவர். என்ரூலும் முந்திய சட்டசபையின் நிதிக் குழுவினர் அர சாங்க உத்தியோகத்தரின் ஆதரவைப் பெற்றதிலும் பார்க்க இந் நிர் வாக சபையினர் அரசாங்கக் காரியதரிசிகளின் உதவியை அதிகமா கப் பெற்றனர் என்றே அறியக் கிடக்கிறது.

முதலாம் அரசாங்க சபையின் மந்திரிமார் சபையினருக்குச் சில வசதியீனங்களும் இருந்தன. அவர்கள் ஒரினத் தன்மையிலோ அன்றி ஒரு பூட்கை அமைப்பிலோ அமையாதமை மாத்திரமன்றி, வேறு வசதிக்குறைவுகளும் இருந்தன. சில நிர்வாக சபைகள் அவற்றின் தலைவராய மந்திரிமாருக்கு விருப்பமில்லாத அலுவல்களையும் தீர் மானித்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும்படியாகத் தலைவர்களை வற்புறுத்தினர். சில சமயங்களில் ஏழு அல்லது எட்டு அங்கத்தவர் இருந்த ஒரு நிர்வாக சபையினர் தங்களுக்குள் ஓர் உபநிர்வாக சபையை நியமித்து அதன் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதும் உண்டு. அத்தருணங்களில் அந்நிர்வாகத்தின் தலை வராய மந்திரியார் தமது வீட்டாணையை உபயோகப்படுத்தாமையும் நிகழ்ந்ததுண்டு.

நிர்வாக சபைகளுக்குச் சட்டஞ்செய்தல், சட்டத்தை நிறை வேற்றுதல், நிதிசம்பந்தமான அலுவல்கள் என்ற முத்திறத்து அதிகாரம் இருந்தபோதிலும், அரசாங்கத்தின் முழு நிதி அலுவலையும் தனித்தனி நிர்வாக சபையினர் அறிய இயலாமலே இருந்தனர். அந்நிலைமையைக் குறித்து 1934 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் தோழர் விக்கிரமசிங்க பேசியும் உள்ளார். அன்றி திணைகளங் களின் அதிபர்களே வரவு செலவு அலுவல்களை மட்டிடமாட்டார்கள் ஆதலால் நிர்வாக சபைகளின் தலைவர்கள் ''ஆம் இல்லை'' என்று சொல்லுபவராகவே இருந்தார்கள் என்பர்.

அத்தியாயம் 33

இரண்டாம் அரசாங்க சபை

இரண்டாம் அரசாங்க சபைத் தேர்தல்கள் யாவும் 10-3-1936 இல் நிறைவுற்றன. தேர்தலுக்கு முன் திருவாளர்கள் D. B. யயத்திலக, D. S. சேனநாயக, யோண் லயனல் கொத்தலாவல, S. W. R. D. பண்டாரநாயக, வைத்திலிங்கம் துரைசுவாமி, H. R. பிறீமன், G. C. S. கொறியா ஆகிய பெரியார்கள் போட்டியில் லாமலே தெரியப்பட்டார்கள்,

ஐம்பது தொகுதிகளில் ஏழுதொகுதிகளிலும் போட்டியில்லாது போகவே, எஞ்சிய 43 தொகுதிகளிலும் 117 வேட்பாளர் போட்டியிட்டார்கள். கட்சியினங்கள் வேலை செய்யாவிட்டாலும் யயத்திலக சேனநாயக இரட்டையர்கள் தமக்குச் சாதகமான பிரதிநிதிகளுக்காக அதிகமாக வேலைசெய்தார்கள். அப்பொழுதுதான் தென்னிலங்கையில் ஆரம்பமாகி முற்போக்குத் திட்டங்களைக் கொண்டியங்கிய பூவரசம்பூ (சூரியமல்) இயக்கம் சமசமாசக் கொள்கைகளை மக்களிடையே புரட்சிகரமாகப் புகுத்துவதாயிற்று. பூவரசம் பூவியக்கம் 1933 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டபோது, அது பிரித்தானிய பேரரசுக்கு எதிராகவே பிரசாரஞ் செய்தது. அவ்வியக்கம் 1936 ஆம் ஆண்டுத் தேர்தற் காலத்திலே சமசமாசக் கட்சியாகப் பரிணமித்தது. அக்கட்சியின் கொடிக்கீழ் நான்கு தொகுதிகளில் மாத்திரமே கட்சித் தோழர்கள் வேட்பாளராய் முன்னின்றனர். வைத்திய கலாநிதி S. A. விக்கிரமசிங்க தமது மொறவாக்க தொகுதியிலும், பிலிப் குணவர்த்தனை குலைக்கப்பட்ட அரசாங்கசபையின் வாசகராயிருந்த போறஸ்ரர் ஓபயசேகரா அவர்களை அவிசாவல தொகுதியிலும், தோழர் லெஸ்லி குணவர்த்தனை சுசந்தாத பொன்சேக அவர்களைப் பாணந்துறைத் தொகுதியிலும், கலாநிதி N. M. பெரேரா திருமதி அதெலின் மொலமுரே அவர்களை றூவான்வல தொகுதியிலும் போட்டியிட ஒழுங்குகள் செய்தனர்.

சமசமாசக் கட்சியினர் நான்கே நான்கு தொகுதிகளில் போட்டியிட்ட போதிலும், அவர்களே முதன் முதலாகத் தங்கள் கட்சிப் பூட்கையை முறைப்படி வெளியிட்டவர்களாவர். தேசியவிடுதலையைக் குறிக்கோளாகக்கொண்டு, பொருளாதார, மாற்றங்கள் முன்னேற்றங்கள் சுபீட்சங்கள் என்பனவற்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால்,

தாங்கள் அரசாங்கத்தை அமைத்தால் என்ற கருத்தில் பள்ளிக் கூடப் பிள்ளைகளுக்கு இலவச மத்தியான உணவு, எட்டு மணித் தியால வேலை, இளைப்பாற்றுச் சம்பளம் முதலியனவும் அவர்களாற் குறிக்கப்பட்டன. இடதுசாரிகளுக்குரிய நிறம் சிகப்பாக இருந்த போதிலும் அது அவர்களுக்கென அக்காலத்தில் பதியப்படவில்லை. என்றாலும் விக்கிரமசிங்காவுக்குச் சிவப்பு நிறங் கிடைத்தது. பெரேரா வுக்கும் பிலிப்புக்கும் பச்சை நிறமும், லெஸ்லிக்கு மஞ்சள் நிற முங் கிடைத்தன.

பெரேராவும் பிலிப்பும் வெற்றியீட்டியபோதிலும், விக்கிரம சிங்காவும் லெஸ்லியும் தோல்வியுற்றனர். விக்கிரமசிங்கா முதலாம் அரசாங்க சபையில் தனியொருவராக அமர்ந்து ஏகாதிபத்திய வாதிகளையும் முதலாளிகளையும் வன்மையாக எதிர்த்து வந்தார். எனவே முதலாளிப் பெரியார்கள் எல்லோரும் தேர்தலின்போது அவருக்கு எதிராகவே வேலைசெய்தார்கள். என்றாலும் அவரை வென்ற R. G. கன்னங்கரா அவர்களுக்கு 20000 வாக்குகளும் அவருக்கு 18000 வாக்குகளுங்கிடைத்தமை இடதுசாரிகளின் மகத் தான முன்னேற்றத்தைப் படம்பிடித்துக் காட்டுவதுபோலவே இருந்தது.

தெரியப்பட்ட பிரதிநிதிகளுள் 25 பேர் முந்திய அரசாங்க சபையிலும் இருந்தவராவர். முதலாம் அரசாங்கசபையில் இடம் பெறாது பழைய சட்டசபையிலே இருந்த அங்கத்தவருள் நால்வர் இப்போதைய சபையிலே தெரியப்பட்டார்கள். இதில் தெரியப் பட்டிருந்த அங்கத்தவருள் 21 பேர் புதியவர். அவர்களுள் இடதுசாரி லிரட்டையர்கள் எனப்பட்ட என். எம். பெரேராவும் பிலிப் குண வர்த்தனா அவர்களும் இருவராவர். முதலாம் அரசாங்க சபையை அலங்கரித்தவருள் 24 பேர் இத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களுள் வைத்திய கலாநிதி S. A. விக்கிரமசிங்க அவர்களும் ஒருவர்.

இரண்டாம் அரசாங்க சபைத் தேர்விலே தோல்வி கண்ட கௌரவ பாலசிங்கம் சட்டசபையிலும் சட்டநிர்வாக சபையிலும் அரசாங்க ஈட்டு வங்கியிலும் நீண்டகால அநுபவமும் அங்கத்துவ மேன்மையும் பெற்றவர். அவருடைய அருமை பெருமைகளைப் பொதுமக்கள் அக்காலத்தில் அறிந்துகொள்ளாது போனமை தமிழர் தவக்குறைவே. முந்திய சட்டசபையின் மேதை யும், அரசாங்கசபையின் பாதுகாவலன் எனப் பெயர் பெற்றவரு மான E. W. பெரேரா தெரியப்படாமை நாடு முழுவதிலும் வெகு

வாக விசனிக்கப்பட்டது. தோழர் விக்கிரமசிங்காவைப் போலவே G. W. K. பெரேரா அவர்களும் அஞ்சாமை, நேர்மை ஆதியாம் பண்புகள் உள்ளவர். அவரும் இனமத வேறுபாடுகளை நீக்கித் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டப் பாடுபட்டுத் தோல்வி கண்டார். அவர் பெரியவர்களுக்குத் தலை வணங்காதமையால் தேர்தலில் தலை கவிழ்ந்தார் என்பர்.

இன்னுஞ் சில சம்பவங்களை இங்கே குறிப்பிட்டால் முஸ்லிம் மக்களும் பறங்கியரும் தத்தம் இனத்துப் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்ப இயலாத நிலையில் இருந்தனர் கொழும்பு வடக்குத் தொகுதியில் திருமதி. நேசம் சரவணமுத்துவும், காங்கேயன்துறையில் திரு. நடேசன் அவர்களும் தெரியப் பெற்றனர். இவ்விடங்களில் வகுப்புவாதக்குரல் வேலை செய்யவில்லை என்பர். இவ்விரு தொகுதி களிலும் முந்திய தேர்தலிலும் வகுப்புவாதப் பேச்சு வேலை செய்யவில்லை.

இத்தேர்தலின்போது 2096654 வாக்காளர் இருந்தனரா யினும் 1146683 பேரே வாக்களித்தனர். இத்தொகை 54·69 வீதம் எனக் கணிக்கப்பட்டது. வாக்களித்தோர் தொகை குறைவாகக் காணப்பட்டமைக்கு ஒரு காரணம் ஏழு தொகுதிகளில் போட்டி யில்லாமையால் தேர்தல் நிகழாமை என்றுங் கூறலாம். வாக் களித்தவர் தொகையின் வீதம் பாணந்துறையிலேதான் அதிகம் என அறியக்கிடக்கின்றது. அதேபோல் பிபிலே தொகுதியில் 27 77 வீத மக்களே வாக்களித்தனர் என அறியக்கிடக்கிறது.

தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் பெறுத சமூகங்களின் நன் மையைக் கருதி ஆள்பதி பின் சொல்லப்பட்ட பெரியார்களை நியமன அங்கத்தவராய் அநுமதித்தார்.

1. திருவாளர் M. J. கேரி
2. ,, F. A. கிரிபித்
3. ,, T. B. யயா
4. ,, F. A. பாவித்
5. ,, I. X. பெரேரா
6. ,, A. R. அப்துல்ராசீக்
7. ,, V. C. விலியேஸ்
8. ,, G. H H. வில்லே

இவ்வாறுகத் தெரியப்பட்ட பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளும் சேர்ந்தசபையிலே உத்தியோக அங்கத்தவராய பிரதம செயலாளரும், சட்டச் செயலாளரும், நிதிச் செயலாளரும்

சேர அரசாங்கசபை உருவாயிற்று அதிலே இருந்தவர்களை அக்காலத்தில் நிலவிய இனமத வேறுபாட்டுக் கண்கொண்டு பார்த்த போது இவ்வாறிருந்தனர்.

I. தெரியப்பட்ட அங்கத்தவர் விசை :

1.	கரைநாட்டுச் சிங்களவர்	...	31
2.	கண்டிச் சிங்களவர்	...	8
3.	இலங்கைத் தமிழர்	...	8
4.	இந்தியத் தமிழர்	...	2
5.	ஐரோப்பியர்	...	1

II. நியமன அங்கத்தவர் விசை :

1.	ஐரோப்பியர்	...	4
2.	முஸ்லிம்கள்	...	2
3.	இந்தியர்	...	1
4.	பறங்கியர்	...	1

III. அரசாங்க உத்தியோகத்தர் விசை :

1.	ஐரோப்பியர் (செயலாளர்)	...	3

சமயக்கண்கொண்டு பார்க்கையில்

1.	பௌத்தர்	...	33
2.	சைவர்	...	7
3.	கிறிஸ்தவர்	...	16
4.	இஸ்லாமியர்	...	2

இரண்டாம் அரசாங்க சபையின் நிர்வாக சபைகளின் தலைவர் களாய மந்திரிமாரைத் தெரிவதற்கான ஒழுங்கின் பூர்வாங்க ஏற் பாடுகளுக்கு முன், தோழர் N M. பெரேரா அவர்களுடைய முயற் சியால் கௌரவ அங்கத்தவர் பலர் ஓரிடத்திற் கூடினார்கள். அக் கூட்டத்தில் மந்திரிமார் தெரிவைப்பற்றிய பேச்சு வந்தபோது தமிழ்த் தலைவர் ஒருவர் எழுந்து "யயத்திலகாவும் சேனநாயகவும் மந்திரி மார் சபையில் இடம் பெறலாகாது" என்று முழுமூச்சுடன் பேசினார்; அதனால் அக்கூட்டம் வெறுப்புணர்ச்சியுடன் குலைந்தது. அது நிற்க.

இரண்டாம் அரசாங்கசபை அங்கத்தவர் முறையாகக் கூடிய கூட்டத்தில் நிர்வாகசபை தோறும் தலைவர் தெரிவு நடைபெறலா யிற்று. அதிலே முன் செய்துகொண்ட ஏற்பாட்டின் வண்ணம் மந்திரி மார் எல்லோரும் சிங்களவராயே தெரியப் பெற்றனர். ஓரின மந்திரி

மார் சபை என்றும் சர்வசிங்கள மந்திரிமார் சபை என்றும் வழங்கிய அம் மந்திரிமார் சபை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தெரியப் பட்டது என்று கௌரவ யயத்திலகா பின்னர் பெருமையோடு கூறினர். அத்தகைய தேர்வுக்கும் தமிழ்த் தலைவர் ஒருவரே வழி வகுத்துக் கொடுத்தார் என்பதும் நாளடைவில் தெரியவந்தது. அன்றி அத்தமிழ்ப் பெரியாரும் பிற்காலத்தில் தாம் வழிவகுத்ததை பற்றி எழுதியும் பேசியுமுள்ளார்.

ஓரின மந்திரிமார் என்னும் தலைவர்கள் :

1. உள்நாட்டு நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ D. B. யயத்திலகா
2. விவசாய நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ D. S சேனநாயக
3. கல்வி நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ C. W. W. கன்னங்கரா
4. தொழில் நிர்வாக சபைத்தலைவர்
   கௌரவ G. C. S. கொரியா
5. கூகாதார நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ Dr. W A. த. சில்வா
6. உள்ளூர் ஆட்சி நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ S. W. R. D. பண்டாரநாயக
7. போக்குவரத்து நிர்வாகசபைத் தலைவர்
   கௌரவ J. L. கொத்தலாவல

அரசாங்க சபையின் வைகல் ஆள்பதியால் கோலாகல வைப வங்களோடு திறந்து வைக்கப்பட்டபோது அவர் உற்சாக மூட்டக் கூடிய வார்த்தைகளைப் பேசினர். ''இலங்கையின் நன்மையைக் கருதும் ஏனைய நண்பர்களைப் போலவே நானும் இலங்கை வாசிகள் தாமே தமது அரசியற் பரிபாலன அலுவல்களை நடத்தும் நன் நாளை எதிர்பார்க்கின்றேன். அப்படியான காலத்திலே என்னுடைய உத்தி யோகத்தை வகிக்கப்போகின்றவருக்கு ஆணிலப்பத நாட்டின் ஆள் பதிநாயகத்தின் கௌரவம் இருக்கும் வாக்காளர் தமது பிரதிநிதி களைத் தெரியும் போது உத்தமமானவர்களையே தெரியுமளவுக்கு அவர்களுக்குக் கல் யறிவூட்டப்படல் வேண்டும். அவர்கள் தெரிந் தனுப்பும் பிரதிநிதிகள் ஒரு சமூகத்துக்கோ, ஒரு தொகுதிக்கோ சேவை செய்பவராயிராமல் நாடு முழுவதுக்கும் உழைக்கும் உத்தமராய் இருத்தல் வேண்டும்''

இங்ஙனமாக ஆள்பதி கோலாகல வைபவத்தில் பேசியவை ஒரு புறமாயிருப்பச் சபையில் அங்கத்துவம் வகித்த N. M பெரேரா கூறியது சபையைக் கலக்கிற்று. 'ஆள்பதி தம் மனம்போனவாறு இந்தச் சபையிலே பேசியமை அர்த்தமற்றதாகும். அவர் மந்திரிமாரின் அபிப்பிராயத்தை அல்லவோ இங்கே பேசியிருத்தல் வேண்டும். அரசாங்கத்தை அமைக்கப்போகும் மந்திரிமார் தமது வேலைத்திட்டத்தைப்பற்றி எழுதிக்கொடுப்ப அதனையே ஆள்பதி வாசித்தலே விட்டு அவர் தம் கருத்தை இங்கே பேசியவை அரசியல் யாப்புக்கும் சம்பிரதாயத்துக்கும் முரணான காரியமாகும்'' என்று பெரேரா அவர்கள் அரியணைப் பேச்சைப்பற்றி அன்று குறிப்பிட்டார்.

சிங்களப் பெரியார்கள் ஓரின மந்திரிமார் சபையைத் தெரிந்து கொண்டமை ஆள்பதியின் மனச்சாட்சியையும் ஓரளவுக்குத் தொட்டு விட்டது. ஆள்பதி 1936 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சென். அண்றூஸ் இராப்போசனத் திருநாளிற் கூறியவை குறிப்பிடத்தக்கவை

''நாட்டு மக்கள் தாங்கள் அரசியற் பரிபாலன அலுவல்களில் தலையாய கடமையைப் பொறுப்புணர்ச்சியோடு செய்யக்கூடியவர்கள் என்று காட்டிவிட்டார்கள். தங்கள் நாட்டின் கொள்கையைத் தாமே தீர்மானித்து அமைத்துக்கொள்ளும் அளவுக்கு அவர்களுடைய விவேகம் வளர்ந்துள்ளபோதிலும், துர்அதிட்டவசமாக நடைபெற்ற அசாதாரண நடபடிக்கை ஒன்று வருந்தத்தக்கதாக உள்ளது. அந்நடபடிக்கை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். அதுதான் ஓரின மந்திரிமார் சபைமூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு சிலர் செய்த செயலாகும்''

இரண்டாம் அரசாங்க சபையிலே தனிச் சிங்கள மந்திரிமார் சபை தெரியப்பட்டமைக்கு வருந்திய பெரியவர்கள், திருவாளர் பிறுன்சீஸ் த சொயிசா அவர்களுக்கு ஒரு மந்திரப்பதவி கிடையாமைக்கும் வருந்தினர். யயத்திலக அவர்களின் சுயநலப் போக்கு, பிற்போக்கானதாகும் என்றும், அது மணிக்கூட்டின் கம்பிகளைப் பின்நோக்கிப் பிடித்துவிட்டமைபோலும் என முற்போக்குவாதிகளால் விசனத்துடன் கண்டிக்கப்பட்டது. வகுப்புவாதப் போக்கில் அலுவல்களை நடத்தும் இவர்களால் சுதந்திரத்தை எட்டிப் பிடிக்க இயலுமா என அவர்கள கூறினர். ஓரின மந்திரிமார்சபை அமைப்பைப்பற்றி விசாரிப்பதற்கு ஓர் ஆணைச்சபையை இலங்கைக்கு அனுப்புதல் வேண்டும் என்றும் அக்காலத்தில் லண்டன் ரைம்ஸ் பத்திரிகை எழுதியது.

இங்ஙனமாக மந்திரிமார் சபையிலே சிறுபான்மையினத்தவர் இல்லாதுபோனலும் தமிழர் தன்மானத்துடன் அரசாங்க சபையிலே தலைநிமிர்த்தியிருந்துவர மதிப்புக்குரிய அலுவல் அப்போது முளைத்து வந்த இடதுசாரி இயக்கத்துச் சிங்களப் பெரியார்களான N. M. பெரேரா, பிலிப் குணவர்த்தன ஆகிய தோழர்களுடைய முயற்சியால் தமிழருக்கு அளிக்கப்பட்டது. மதிப்புக்குரிய வைத்திலிங்கம் துரைசுவாமி அரசாங்கசபை வாசகராய்த் தெரியப்பட்டமையே அந்த மதிப்பான அலுவலாகும். திரு. டி. எஸ். டி. பொன்சேகரா உதவி வாசகராயும், திரு. ஆர். எஸ். தென்னக்கூன் நிர்வாக சபைகளின் உதவித் தலைவராயுந் தெரியப்பட்டார்கள்.

இரண்டாம் அரசாங்க சபையிலே நடைபெற்ற வாசகர் தெரிவு வரலாற்றுப் பிரசித்தி பெற்றுவிட்டது. வாசகர் தெரிவின் போது திரு. A. E. இராசபக்சே திரு. பிரான்சிஸ் த. சில்வா அவர்கள் பெயரைப் பிரேரித்தார். அதனைத் திரு. ஸ்ரீபால சமரக்கொடி பின் மொழிந்தார். திரு. குணசிங்கா திரு. C. பத்துவந்தொடாவ அவர்களின் பெயரைப் பிரேரித்தார். திரு அபயகுணசேகர அதனைப் பின்மொழிந்தார். திரு. கேரி திரு. வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் பெயரைப் பிரேரித்தார் கலாநிதி N. M. பெரேரா அதனைப் பின்மொழிந்தார்.

மூவருடைய பெயர்கள் முறையாக முன்மொழியப்பட்டபடியால் அவர்கள் பெயர்கள் இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டன. அப்போது திரு. பிரான்சிஸ் த. சொயிசாவுக்கு 17 வாக்குகளும். திரு. பத்துவந்தொடாவைக்கு 14 வாக்குகளும், திரு. வைத்திலிங்கம் துரைசுவாமிக்கு 27 வாக்குகளும் கிடைத்தன அந்நிலைமை நிலையற்கட்டளை ஐந்தாம் பிரிவின் ஆறும் இலக்கத்து (A) பிரிவின் வண்ணம் அமையாமையால் மிகக்குறைந்த ஆதரவைப் பெற்றவரான பத்துவந்தொடாவையின் பெயரை நீக்கிவிட்டு மற்றவருடைய பெயர்களை மறுபடியும் வாக்களிப்புக்கு விட்டனர்.

அந்நிலையில் திரு. பிரான்சிஸ் த. சொயிசாவுக்கு 29 வாக்குகளும், திரு. வைத்திலிங்கம் துரைசுவாமிக்கு 29 வாக்குகளும் சமமாகக் கிடைத்தன. அதுவும் நிலையற் கட்டளை 5 (6) B பிரிவின் வண்ணம் அமையாதமையால் அவ்விருவர் பெயர்களையும் மறுபடியும் வாக்களிப்புக்கு விட்டனர். அச்சமயம் தோழர் பிலிப் குணவர்த்தன அவர்களுடைய முயற்சியால் திரு. அபயகுணசேகரா அவர்கள் மனந்திரும்பித் துரைசுவாமி அவர்கள் பக்கம் வாக்களித்தார். அதனால்



சேர். அன்றூ
கல்டிகோட் அவர்கள்
(ஆள்பதி 1937—1944)



சேர். வைத்திலிங்கம்
துரைசுவாமி அவர்கள்
(வாசகர் 1936—1947)





திரு. துரைசுவாமிக்கு 30 வாக்குகளும், திரு. பிரௌன்சிஸ் த. சொயிசா வுக்கு 28 வாக்குகளும் கிடைத்தன. எனவே துரைசுவாமி அவர்கள் வாசகராக முறையாகத் தெரியப்பெற்றார்.

திரு. வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் தமிழ்மரபும் சைவமரபும் சிறந்த தனிநாயக முதலியார் குடியிற்றோன்றியவர். அவரிடம் செந்தமிழன்பும் சிவநேயமும் அதிகமாக இருந்த என்பர். அவருக்கு யோகசுவாமி அவர்களுடைய அருளும் இருந்தது. சுவாமிகள் எனக்கு அடித்து அப்பம் நீற்றிய அற்புதத்தை என் னென்பேன் என்று துரைசுவாமி அவர்கள் அடிக்கடி கூறுவார்.

யோகசுவாமிகளும் துரைசுவாமியை ஆசீர்வதித்து, ''சிவமணங் கமழுது சேர். துரைசுவாமிக்கு. அவர் மனம் உருகுது அன்பு மிகப் பெருகுது. தன்னைத்தன்னுள் அறியும் தவமும் வாய்ச்சுப்போச்சுது. தன்னைப்போற் பிறரையும் நேசிக்கலாச்சுது. உற்றூர் பிறந்தார் ஊரார் ஒம்பிடலாச்சுது. உண்மை முழுதுமென்னும் உறுதியும் வாய்ச்சுப்போச்சுது.'' என்றும், ''சேர். துரைசுவாமி ஆர் நிகரு னக்குப் பார் சிவம் எங்கும்! ஆர் பகை? ஆர் நட்பு? செய்வது பூசை நினைப்பது மந்திரம். உய்ந்தாய் உய்ந்தாய். பலபடச் சொல்வதில் பலன் ஒன்றுமில்லை'' என்றும் திருமுகம் எழுதியுள்ளார்.

துரைசுவாமி அவர்கள் வாசகர் பதவியைச் சிறப்போடும் தகுதியோடும் வகித்தமையைச் சிங்களத் தலைவர்களே வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அவருடைய தோற்றப்பொலிவை அதிகப் படுத்தவும் அழகுபடுத்தவும் அவர் தலைப்பாகையை அலங்காரமாக அணிந்திருந்தார். சபையில் அரசாங்க மந்திரிமார் பேசும்போதும், அவர்களை எதிர்த்து இடதுசாரித் தலைவர்கள் பேசும்போதும், நடுவு நிலைமை வகித்து ஆங்கிலேயர் பேசும்போதும் துரைசுவாமி அவர்கள் புன்முறுவலுடன் அவர்கள் எல்லோரையும் கேட்டு உற்சாகப்படுத் துவர். துரைசுவாமி அவர்கள் அதிகம் பேசியதோ, அன்றி எவரையும் எச்சரிக்கை செய்ததோ கிடையாது. பெரிய யாப்பு நெருக்கடிகளும், யாப்புத் திருத்த அவசரப் பேச்சுக்களும் யுத்தகால நெருக்கடியும் சேர்ந்த காலத்தில் அவர் பதினெரு ஆண்டுகளாக வாசகர் பதவியை வகித்துள்ளார்.

அவர் சபையை ஒருதரம் நிமிர்ந்து பார்த்தாலே எந்த அங்கத் தவரும் அமைதியாயிருந்துவிடுவது வழக்கம். அவர் பேசவேண்டிய இடத்தில் சரியான வார்த்தையைக் குறிப்பறிந்து சுருக்கமாகப் பேசுவது வழக்கம். அவர் சபையின் சிட்டாசாரத்தையும், ஒழுங்

கையும் மிக நல்ல முறையில் நிலவச் செய்தார் என்று எல்லோரும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அறிவுந் திருவும் உருவும் அமைந்த துரைசுவாமிக்கு அது இயல்பாயமைந்த பண்பாகும்.

துரைசுவாமி 1874 ஆம் ஆண்டு யூன்மாதம் 8 ஆந் திகதி பிறந்தவர். கல்லூரிப் படிப்பிலும் விளையாட்டிலும் இணையில்லாது விளங்கிய அவர் கற்சத்தாவுக்குச் சென்று அங்கே விற்பத்திமான்களாய் விளங்கிய P. C. ரேய், சேர். ஜயதீஸ் சந்திரபோஸ் முதலாய பேராசிரியரிடம் கல்விகற்றுக் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் தீர்க்க சித்தியுடன் பட்டம் பெற்றுப் பாராட்டப் பெற்றார். அதன்பின் அவர் சட்டம் பயின்று 1902 ஆம் ஆண்டில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார்.

தேசாபிமானியாய சேர். இராமநாதனுடன் சேர்ந்து இலங்கை முழுவதுக்கும் தொண்டு செய்வாராயினர். அதனற் பிரபலிக்க முற்றிருந்த காலத்தில் திருத்தப்பட்ட சட்டசபையில் 1921 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களை அதிகப் படியான வாக்குகளால் வென்று, முழு வடமாகாணத்தின் பிரதிநிதியாய்ச் சட்டசபையை அலங்கரிப்பாராயினர். வடமாகாணத் தமிழரால் தெரியப்பெற்ற முதலாம் பிரதிநிதி என்ற சிறப்பும் அவருக்கிருந்தது.

சட்டசபையிலிருந்த காலத்தில் குடியேற்றச் செயலாளருடன் நேரிற் பல அலுவல்களைப் பேசி ஆவனசெய்து யாழ்ப்பாணத்தில் சைவப் பாடசாலைகள் அதிகரிக்க அதிக முயற்சி செய்தார். அதன் காரணமாகவேதான் அவருக்கு 1924 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடமாகாணம் மேற்குத் தொகுதிக்குப் போட்டியின்றித் தெரியப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது என்பர். அவர் சட்டசபை அங்கத்தவராயிருந்த காலத்தில், வடமாகாணப் பிரதிநிதியென்றே தமிழரின் பிரதிநிதியென்றே இருக்காமல் இலங்கை முழுவதுக்கும் சேவைசெய்யும் மனப்பான்மையுள்ளவராய் இலங்கைத் தலைவர்களுள் ஒருவராய் மதிக்கப்பட்டு மாண்புடன் விளங்கினர். அவர் இலங்கைக்குக் கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளின் ஆணிலப்பதம் எனப்படும் டொமினியன் அந்தஸ்து உடனடியாக வழங்கப்படல் வேண்டும் என்றும், இலங்கை அரசியற்சபை இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்தார். இவை வழங்கப்படாமையினாலேயே டொனமூர்த் திருத்தத்தையும், அரசாங்க சபையையும் அவர் ஒன்றியொதுக்கல் செய்தார். வாலிப மகாசபையினர் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தையும் துரைசுவாமியே வெற்றிகரமாகக் கொண்டு நடத்தினர்.

யாழ்ப்பாணத்தார் 1934 ஆம் ஆண்டில் ஒன்றியொதுக்கலைக் கைவிட்டு உபதேர்தல் நடத்துவித்த காலத்தில் துரைசுவாமி அவர்கள் போட்டியின்றித் தெரியப்படும் வாய்ப்பிருந்தபோதிலும் தம்கொள்கையினின்றும் வழுவாது ஒன்றியொதுக்கல் முதலாம் அரசாங்க சபையின் காலம் முழுவதுக்குமே எனக் கூறினர். அவர் பிரதிநிதியாகத் தெரியப்படாவிட்டாலும் அவர் அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சலியாதுழைத்து வந்தார்.

துரைசுவாமி அவர்கள் வாசகராகத் தெரியப்பெற்ற காலத்தை அடுத்து, ஆரும் ஜோர்ச் மன்னரின் முடிசூட்டுவிழா நடைபெற்றது. அவ்வைபவத்துக்கு இலங்கைப் பேராளர் சபைத் தலைவராகத் தெரியப்பட்டு துரைசுவாமி இங்கிலாந்துக்குப் போனர். அக்குழுவில் அரசாங்கசபை முதல்வரான D. B. யயத்திலகாவும் போயிருந்தார். அவ்வைபவத்திலே துரைசுவாமி அவர்களுக்கு மன்னர்பிரான் நைற் பட்டத்தை நேரில் அளித்துக் கௌரவித்தார்.

சேர். துரைசுவாமி அவர்கள் வாசகராகத் தெரியப்படு முன்னரே ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒன்றுய ஒப்சேவர் 26-2-36 இல் எழுதிய வாசகம் தேசிய மனப்பான்மை வாய்ந்தவரால் வெகுவாகப் பாராட்டப்பட்டது. ''திரு. மொலமுரே தென்னிலங்கையில் இருந்து தேசியப் பாலத்தை அமைத்துக்கொண்டு வடக்கு நோக்கிப் போதல் வேண்டும். திரு. வைத்திலிங்கம் துரைசுவாமி தேசியப் பாலத்தை அமைத்துக்கொண்டு தெற்குநோக்கி வருதல் வேண்டும். எப்போதாவது ஒருநாள் ஐக்கிய இலங்கை தேசியக்கட்சியினரால் உருவாக்கப்படலாம். அந்த நன்நாள் எந்நாளோ?'' என்பதே அப்பத்திரிகை எழுதிய வாசகமாகும்.

இலங்கையில் சேர். இராமநாதனுக்குப் பின்னர் தமிழரைப் பொறுத்தமட்டில் அரசியல் நிலைமை ஓரளவுக்கு அடிதலை மாறியே இருந்தது. அந்த நேரத்தில் துரைசுவாமி அவர்களே தேசிய மனப்பான்மை வாய்ந்த தமிழர் தலைவர் எனவும், இலங்கைப் பெரியார் எனவும் சிங்களப் பெரியார்களாற் கருதப்பட்டார் துரைசுவாமி அவர்களே வடமாகாணத் தொகுதியின் தெரியப்பட்ட முதலாம் தலைவர். அவரே தமிழரால் தெரியப்பட்ட பெருந் தலைவர். அவர் இரண்டுமுறை போட்டியில்லாமலே தெரியப்பட்ட பெரியார்.

சேர். துரைசுவாமியின் சேவை அரசியற் சபையோடு நின்று விடவில்லை. சைவவிருத்திச் சங்கத்திலும், சைவ பரிபாலன சபையிலும் அவர் தலைவராயமர்ந்து தொண்டு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்து இந்துக்கல்லூரி முதலாம் கலாசாலைகளின் பொது முகாமையாளராயும், தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தில் தலைவ ராயும் இருந்து சேவை செய்துள்ளார். இலங்கையில் என்றும் எல் லோராலும் விரும்பப்பட்ட தலைவர்களுள் சேர். துரைசுவாமி அவர் களும் ஒருவர்.

சேர் துரைச் சாமி சிவயோகர் மாசிடர்
பார்புரக்கு மன்றப் பழந்தலைவர்—நேர்மைமிகு
சைவத் தமிழர் சனநா யகமுதல்வர்
உய்வைப் புகழும் உலகு.

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அத்தியாயம் 34

இரண்டாம் அரசாங்க சபையின் போக்கு

இரண்டாம் அரசாங்க சபையின் இரண்டாம் கூட்டம் 31-3-1936 இல் நடைபெற்றது. அதிலே 17 பிரேரணைகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது. காலஞ்சென்ற மன்னர் பிரானுக்கு அஞ்சலியும், புதிய மன்னருக்கு வாழ்த்தும் நடைபெற்றன. அரசாங்க சபையில் 1936-1937 ஆண்டுகளுக்குரிய ஒதுக்கீட்டு முறியில் 99985008 ரூபா செலவழிக்கப் படுவதாகக் குறிக்கப்பட்டது. அதன் உத்தேச செலவுத் தொகை 119722673 ரூபா எனக் கணிக்கப்பட்டது வரவிலும் பார்க்கச் செலவுத்தொகை 25000000 ரூபா மேலதிகமாயிருப்பதாய் சபை முதல்வர் D. B. யயத்திலக குறிப்பிட்டார். மலேரியா ஒழிப்புக்காக லட்சக்கணக்கில் செலவிடவேண்டியிருந்தது. மலேரியாச் சுரத்தால் 81000 மக்கள் இறந்த காலம் அது.

பாராளுமன்ற ஆட்சி முறைக்கு ஓரினத்தன்மை இன்றியமையாதது எனக் கருதி அம்முறையை முன்னதாகவே பழக்குவதற்காகவே வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தை டொனமூர் திருத்த சபையினர் நீக்கினர். அங்ஙனம் அவர்கள் செய்தமைக்கு அநுகூலமாஞற்போலும் இரண்டாம் அரசாங்க சபையில் சிங்களவர் ஓரினத்தன்மையிலமைந்த சர்வசிங்கள மந்திரிமாரைத் தெரிந்தனர் என எண்ணவும் இடமுண்டு.

ஆஞல் வெள்ளைக்கார டொனமூர்க் குழுவினர் நினைத்ததைப் போலவும், சிங்கள மந்திரிமார் செய்ததைப் போலவும் பலன் உண்டாகவில்லை. ஓரினத்தன்மை என அவர்கள் நினைத்ததுவும் இவர்கள் செய்ததுவும் வகுப்புவாதத்தை மேலும் வளர்க்குமளவில் எதிர்ப்பலனையே கொடுத்தது. ஓரின மந்திரிமார் தாமும் பாராளுமன்ற மந்திரம் போன்ற நடைமுறையிற் கருமங்களைச் செய்யாது இனவேற்றுமையாகவே அலுவல்களைச் செய்தனர்.

இரண்டாம் அரசாங்க சபை சிறுபான்மையினருள் சிறப்பாகத் தமிழருக்கு இரண்டு பாடங்களைக் கற்பித்தது. பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தினாலும் தயவினாலும்தான் ஏதாவது அலுவலைப் பெறலாம் என்பதும், ஏதாவது அநுகூலம் ஏற்பட வேண்டுமாஞல் டொனமூர்த் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதுமாம். சிறுபான்மையினருக்குப் பாடங் கற்பித்து விட்டோம்

எனப் பெரும்பான்மைக் குருநாதர்கள் பெருமை பேசிக்கொண்டார்கள் ஆனால் பெரும்பான்மையினருக்கும் அவர்களுக்குக் குருநாதர்களான ஆள்பதி அவர்களும், குடியேற்ற மந்திரியாரவர்களும் நல்ல பாடம் படிப்பித்து விட்டார்கள். முன்னர் மந்திரிமார் சபையில் ஓரினத் தன்மையில்லாதமையில் ஏகோபித்த கோரிக்கையில்லாத காரணத் தால் மேலும் சீர்திருத்தஞ் செய்ய இயலாதென மறுத்த குடியேற்ற மந்திரியார், இப்பொழுது மந்திரிமார் ஏகோபித்த குரலில் சீர்திருத் தங்கோரிய போதிலும் அதற்குச் செவிசாய்க்காமலே இருந்தார். அதற்குங் காரணமில்லாமற் போகவில்லை. இம்முறை மந்திரிமார் 19-3-1937 இல் சீர்திருத்தங் கோரியபோது அரசாங்க உத்தியோ கத்தரான செயலாளர் மூவரும் அதற்கு முட்டுக்கட்டையாயிருந் தனர். எனவே செயலாளர் மூவரையும் நீக்குவதற்கு மந்திரிமார் வெகுவாக முயன்றார்கள். அதற்கு அடுத்த முட்டுக்கட்டையா யிருந்த ஆள்பதியின் மேலதிக அதிகாரத்தையும் நீக்குதல் வேண்டும் என முனைந்தார்கள்.

ஆள்பதியின் ஒதுக்கதிகாரங்கள் அத்தனையையும் நீக்குதல் வேண்டுமெனப் பெரும்பான்மையினர் முனைந்தபோதுதான் சிறுபான் மையினர், அவர் அதிகாரங்களை நீக்குதலாகாதெனக் கோரினர்கள். சிறுபான்மையினரின் வேண்டுகோளுக்கு அப்படியேயாகுக என ஆள் பதி ததாஸ்துக் கூறித் தகவுரை எழுதிக் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பினர்.

ஆள்பதி குடியேற்ற மந்திரியாருக்கு எழுதிய அறிக்கையில், ஆள்பதியவர்களின் அதிகாரம் இன்னும் பல ஆண்டுகளுக்குக் குறைக் கப்படலாகாது என்றும், அது கூட்டப்பட வேண்டும் என்றும் எழுதி னர். அரசாங்கக் காரியதரிசிகள் பரிபாலனத்துக்கு இன்றியமையா தவர்களாகவே அவர்களையும் நீக்குதலாகாதெனவே ஆள்பதி எழுதி னர். இன்னும் அன்றைய நிலைமையில் சுயாதீனமான பகிரங்க சேவைச்சபை அமைக்கப்பட இயலாது என்றும் எழுதினர். மந்திரி மார் தெரியப்படும் வழியை வேண்டுமானால் மாற்றியமைக்கலாம் எனக் கருதிய ஆள்பதி தாமாக ஒரு வழியையுங் குறிப்பிடவில்லை. டொனமூர் அறிக்கையைப் பொறுத்தவரையில் அது இலங்கையில் முற்றுக வேலை செய்யவில்லை என்றும் வேறொரு திட்டத்தை அமைப் பதற்கு ஓர் ஆணைக்குழுவை மந்திரியார் அனுப்பிவைத்தால் நன்மை யாகும் என்றும் குறிப்பிட்டார்.

மந்திரிமார் சபையினர், நிர்வாக சபைகளின் ஆட்சி முறையை நீக்கிவிட்டாலே போதும் என்றும், அவ்விடத்தில் எவ்விதமாயேனும் ஒரு மந்திர முறையில் ஓர் ஆட்சிக்குழு அமைந்தாற் போதும் எனவும்

தமக்குள் முடிவு செய்தனர். ஆனல் நிருவாக சபைகள் தோறும் உள்ள ஏனைய அங்கத்தவர் அதன் மூலம் தாம் இதுகாறும் அநுபவித்து வந்த செல்வாக்கை இழப்பதற்கு விரும்பமாட்டார்கள் என்றும், சிறுபான்மையினரும் நிர்வாக சபையிலாவது தங்கள் செல்வாக்கைக் காட்டலாமாகையால் அவர்களும் மாற்றத்தை விரும்பமாட்டார்கள் என்றும் கருதினர்கள். எனவே மந்திரிமார் அரசாங்க சபை அங்கத்தவருக்கே தெரியாமல்தாம் மறைவாகத் தயாரித்த சீர்திருத்த மசோதாவை 1937 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விவாதத்துக்கு எடுத்தார்கள்.

அந்த நேரத்திலே குடியேற்ற மந்திரியார் ஒம்சிகோர் என்ற பழைய பெயர் உள்ள ஹார்லி பிரபு, ஆள்பதி அண்றூ கால்டிகொட் அவர்களுக்கு ஓர் அரச கட்டளையை அனுப்பிவைத்தார். அதில் தான் இது காறும் இலங்கை அரசயாப்பில் திருத்தஞ் செய்வதைப் பற்றிக் கருதிவந்ததாகவும், அதனைத் திருத்துவதற்கு உதவியாக ஆள்பதி இலங்கையில் உள்ள எல்லா இனத்தவருடைய தலைவர்களையும் அவரவர் அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் ஐயந்திரிபற அறிந்து அவற்றோடு ஆள்பதியவர்களின் அபிப்பிராயத்தையும் அனுப்புமாறும் பணித்தார். அதிலே கவனிக்கப்பட வேண்டிய அலுவல்களுள் முக்கியமாகப் பின்வருவன இடம் பெற வேண்டும் என்றும் எழுதியிருந்தார்.

1. ஆள்பதியின் சிறப்பதிகாரங்கள்.
2. மந்திரிமாரை தெரிவுசெய்யும் முறை.
3. மந்திரிமாரிடையேயுள்ள தொடர்பு.
4. அரசாங்கசபையின் நிர்வாக சபைகள்.
5. சிறுபான்மை இனத்தவரின் பிரதிநிதித்துவம்.
6. வாக்குரிமை

ஆள்பதியின் சிறப்பதிகாரத்தைப் பற்றிக் குடியேற்ற மந்திரியார் தமக்கு முன் இருந்த மந்திரிமாரின் கருத்தையே கொண்டிருந்தார். அது ஆள்பதியின் அதிகாரத்தைக் குறைப்பதற்குக் காலம் சரியில்லை என்பதே. ஆனல் ஆள்பதியின் அதிகாரத்தை முறையாக வரையறை செய்து கொள்ள வேண்டும் என்னும் தம் கருத்தையுந் தெரிவித்தார்.

குடியேற்ற மந்திரியாரின் அரசகட்டளையின் வண்ணம் ஆள்பதி நாட்டிலுள்ள பல்வேறு இனத்தவருடைய அபிப்பிராயங்களைப் பிரதியாளர் குழு, தகவுரை, விண்ணப்பம், விஞ்ஞாபனம் என்பன மூலம் அறிந்து தம்முடைய அபிப்பிராயத்தையும் தகவுரையையும் எழுதி

'சிந்திருத்த அரசுச்செய்தி' என்ற தலையங்கத்தில் 13-6-1938 இல் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பிவைத்தார். அதனை 10-11-1938 இல் மந்திரியார் பிரித்தானிய பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தார்.

ஆள்பதி அண்றூ கல்டிகெட் அனுப்பிய சீர்திருத்த அரசுச் செய்தி, இதுகாறும் குடியேற்ற மந்திரிமாருக்கு இலங்கையரால் அனுப்பப்பட்ட நினைவேடுகள் போலல்லாது, ஆள்பதியவர்களால் தயாரிக்கப்பட்டதாயும் இலங்கைவாழ் சமூகத்தவர் எல்லோருடைய அபிப்பிராயங்களையுங் கொண்டதாயும் இருந்தது. அது ஓராள் ஆணைச்சபையின் அறிக்கையெனவுங் கூறப்பட்டது. அதிற் குறிப்பிடப்பட்ட தகவுரையின் சுருக்கம் வருமாறு.

1. ஆள்பதியின் சிறப்பதிகாரம் நீக்கப்பட அக்காலம் சரியில்லை.
2. ஆள்பதியின் சிறப்பதிகாரம் இருக்கும்வரை மேற்சபை போன்ற இரண்டாம் சபைகள் தேவையில்லை.
3. எதிர்காலத்தில் மேற்சபைபோன்ற தாபனங்கள் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக ஏற்படலாம்.
4. பிரதிநிதிகள் ஆள்புலவாரியாகவே தொகுதிகள்தோறும் தெரியப்படல் வேண்டும்.
5. தொகுதி நிர்ணயசபையொன்றினால் தொகுதிகள் மீளப் பிரிக்கப்பட்டுச் சிறுபான்மையினருக்கு மேலதிக தொகுதிகள் வழங்கப்படல் வேண்டும்.
6. ஐம்பதுக்கைம்பது எனப்படும் சமபல பிரதிநிதித்துவ முறையில் வேலை இல்லை, அது விரும்பத்தக்கதன்று.
7. ஆள்பதியால் அரசாங்க சபைக்கு எட்டு அங்கத்தவர் நியமிக்கப்படும்முறை மேலும் நடைமுறையிலிருத்தல் வேண்டும்.
8. நிர்வாக சபைகள் முறை நன்றாக வேலை செய்யாமையாலும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்காமையாலும் அவற்றை நீக்கி விடலாம்.
9. நிர்வாக சபைகளின் இடத்தில் ஒரு மந்திரசபை அமைக்கப்படலாம்.
10. மந்திரிமாருக்குப் பொறுப்பும் வேலையும் அதிகரிக்குமாயின் அவர்களுக்கு உதவி மந்திரிமாரை நியமிக்கலாம்.

இவ்வாறு தகவுரை எழுதியனுப்பிய ஆள்பதி அண்றூகல்டிகொட் ஆள்பதி ஸ்ரப்ஸ் அவர்களுக்குப் பிறகு இலங்கையில் ஆள்பதியாகக் கடமையாற்றியவராவர். இவர் மலாயாவிலும் ஹொங்கோங்கிலும்

முறையே பிரதம காரியதரிசியாயும். ஆள்பதியாயும் இருந்து அரிய பணி செய்தவர். இவருக்கு மலாயா, சீனு ஆகிய தேசங்களிலே அரிய நண்பர்கள் இருந்தமைபோல இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப் பாணத் தமிழரிடையேயும் பல நண்பர்களிருந்தார்கள். இலங்கையில் ஏற்பட்ட அரசியற் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கவல்ல அநுபவ சாலி எனக் கருதியே இவரை, ஓம்சிகோர் என்னும் குடியேற்ற மந்திரியார் இலங்கைக்கு அனுப்பிவைத்தார். இவர் குடியேற்ற நாடுகளில் எல்லாமாக 37 ஆண்டுகள் சேவைசெய்த பெருமை யுள்ளவர். எதனையும் ஆறுதலாக ஆராய்ந்து மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருகப் பாயும் என்ற பிரகாரங் கடமையாற்று பவர். எதனையும் அவசரமாகச் செய்யும் இயல்புள்ள உத்தியோகத் தரிடம் அவசரப்படேல் என்ற கருத்துள்ள சொல்லை அடிக்கடி கூறுவாராம். இவர் 17-10-1944 இல் இலங்கையை விட்டுப்போகும் வரை இலங்கையின் ஆள்பதியாக இருந்தார்.

ஆள்பதி தயாரித்த சீர்திருத்தச் செய்தியை 1938 ஆம் ஆண் டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் கிடைக்கக்கூடியதாகக் குடி யேற்ற மந்திரியாருக்கு அனுப்பிவைத்தார். அதனைச் சோல்பரிப் பிரபு முதலாய அரசியற் பண்டிதர்மார் வெகுவாகப் பாராட்டி னர்கள் என்பர். அத்தகைய அரிய சிறப்பு வாய்ந்ததான அந்தச் சீர்திருத்த அரசுச் செய்தி இலங்கையிலும் பிரசுரிக்கப்பட்டு அரசாங்க சபையில் பல நாள்களாக ஆராய்ந்து விவாதிக்கப்பட்டது. எங்கள் பிரதிநிதிகள் மணித்தியாலக் கணக்காகப் பேசியதும் அவ்விவாதப் பிரதிவாதங்களிலேதான். தோழர் ஸ்ரீபால சமரக்கொடி தொண்டை வரண்டுபோகவும், நாத் தழும்பேறவும் தேசியம் பேசிக் களைத்ததும், பண்டாரநாயக அவர்களும், பொன்னம்பலம் அவர்களும் வகுப்பு வாத ரீதியில் பேசியதும், நடேசபிள்ளையவர்கள் 150 பக்கங்களுக்கு மேற்பட்ட நீண்ட பேச்சுப் பேசித் தமிழர் பண்பாட்டையும் கலா சாரத்தையும் சால்பையும் விளங்க வைத்ததும் அக்காலத்திலேதான்.

சீர்திருத்தஞ் சம்பந்தமாக அரசாங்க சபையிலே 21 பிரேரணை களும் ஒரு பொதுப் பிரேரணையும் பிரேரிக்கப்பட்டுப் பேசப்பட்டன. குடியேற்ற மந்திரியார் கற்பித்தவண்ணம் இலங்கைவாழ் சனசமூகங் களின் பூரண ஆதரவை அரசுச்செய்தி பெறவில்லை என்பதை ஆள்பதி ஒப்புக்கொண்டார்கள். சிறுபான்மையினருக்கு மேலதிக தொகுதிகள் அளிக்கும் அலுவலில் உடன்பாடு பெற இயலாமையால் ஆள்பதி கல்டிகொட் அவர்களின் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பர். இன்னும் மந்திரசபையில் சிறுபான்மையினர் இடம்பெறலும், உதவி மந்திரிமார் நியமிக்கப்படுதலுமாகிய அலுவல்களும் உடன்பாடு பெறுதலையாகவே இருந்தன.

அரசாங்க சபைகளின்போது சிங்களப் பெரியார்கள் இடையிடையே வகுப்புவாத நெறியிலும் போனார்கள் என்பதற்குப் பல சான்றுகள் சரித்திர ரீதியில் உண்டு. அவை சட்டவாக்கத்திலும் பரிபாலன முறையிலும் ஆங்காங்கே நடைபெற்றனவாகும். அவை 1931 ஆம் ஆண்டின் பௌத்த பரிபாலனக் கட்டளைச் சட்டமும், 1940 ஆம் ஆண்டின் மீன்பிடிக் கட்டளைச் சட்டமும், 1942 ஆம் ஆண்டின் அநுராதபுரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும், 1942 ஆம் ஆண்டின் பஸ்வண்டி உத்தரவுக் கட்டளைச் சட்டமும் பிறவுமாம். அவை அவ்வப்போது தமிழர், முஸ்லிம்கள், இந்தியர், ஐரோப்பியர் ஆகிய பிற சாகியத்தாராய சிறுபான்மையினருக்குப் பாதகமாகக் கொண்டு வரப்பட்டமை எல்லோருக்குந் தெரிந்த உண்மையாகும்

ஆனல் இரு அரசாங்க சபைகளிலும் வகுப்புவாதப் போக்கில் லாமல் பரஸ்பர நல்லுறவோடு இருசாராரும் வாக்களித்து வேற்றுமை பாராட்டாதிருந்த சம்பவங்களும் பலவாக உள்ளன. அவை பெரும் பாலும் இரண்டாவது அரசாங்க சபையின் பிற்பகுதியிலேயே நடை பெற்றன. திருவாளர் பேணுட் அலுவிகாரா மந்திரிமார் சபையினர் இரண்டாவது மகாயுத்த காலத்தில் பாதுகாப்பு வசதிகளே நல்ல முறையில் அமைக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள்மீது கண்ட னத் தீர்மானம் கொண்டுவந்தபோதும், அதன் திருத்தப் பிரேரணை களின்போதும் பிரதிநிதிகள் வகுப்புவாதமின்றியே வாக்களித்துள் ளனர். அவ்வப்போது சிறுபான்மையினர் வகுப்புவாதம் கருதாது பெருந்தன்மையாய் வாக்களித்தார்கள் என்றே பாராட்டப்பட்டனர்.

நாட்டின் நலன்கருதி நல்லவர்களாய் வாக்களித்த சிறுபான்மை யினர் 1945 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியிலும் ஒற்றுமையாகவே வெள்ளை அறிக்கையை ஏற்று வாக்களித்தனர். வெள்ளை அறிக்கைக்கு எதிராக இரண்டே இரண்டு இந்தியரும் ஒரே ஒரு சிங்களவருமாக மூவர் மாத்திரம் வாக்களித்தனர். ஏனைய 51 பிரதிநிதிகள் சாதகமாக வாக்களித்துள்ளார்கள். அதற்குப் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்க் காங்கிரசின் போக்கில் பாதைப்பிரிவு ஏற்பட்டமையும், முன்னமே சிறுபான்மையினத்தவர் ஒருவர் சிங்களவரின் தனிச் சிங்கள மந்திரிமார் சபையில் இடம் பெற்றிருந்தமையும் என்பர்.

அரசாங்க உத்தியோகத்தர் என்றும், மூன்று காரியதரிசிகள் என்றும் விளங்கிய மூன்று மந்திரிமாரும் ஓரளவுக்கு அதிகாரமுள்ள வர்களாகவே இருந்தார்கள். பிரதமகாரியதரிசி என்பவர் ஆண்பதிக்கு அடுத்தாற்போல அதிகார பீடத்தில் இருந்தமையோடமையாது,

பகிரங்க சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் மேலாளான அதிகாரத்தில் இருந்தார். நிதிக்காரியதரிசி என்பார், திறைசேரிக்குப் பொறுப்பாளியாக இருந்து அதிகாரஞ் செய்தார். ஆனால் இவ்வதிகார புருடர்கள் ஏனைய ஏழு மந்திரிமாருடன் 1941ஆம் ஆண்டு தொடக்கம் நல்ல மனப்பான்மையுடன் பல வழிகளிலும் ஒத்துழைத்தார்கள் என்பர்.

டொனமூர்த் திருத்த அமைப்பில் ஆள்பதிக்கு அதிக அதிகாரங்கள் இருந்தன. அவருக்குப் பெரிய அதிகாரமான வீட்டாணை எனப்படும் மறுப்பாணை இருந்தது. ஆனால் அவர் இரு அரசாங்க சபைகளின் பரிபாலன கால எல்லையாகிய 1931 தொடக்கம் 1947 ஆம் ஆண்டுவரை என்றைக்காயினும் தமது வீட்டாணையை உபயோகித்த தில்லைன அறியக் கிடக்கின்றது.

டொனமூர்த் திருத்தத்தைப்பற்றி திரு. S. நமசிவாயம் தாம் எழுதிய சட்டத்துறை என்ற நூலில் எழுதியமை இங்கு கவனிக்கற் பாலது. ''அகற்ற முடியாத பேரரசுவாதிகளின் சட்ட நிறைவேற்றுத் துறையாலும் நம்மவர் செய்த தவிர்க்க இயலாத எதிர்ப்பாலும் விரக்தியடைந்த நிலையிலிருந்து ஓரளவுக்கு விமோசனமளித்த அமைப்பு டொனமூர்த் திருத்தமெனலாம்'' என்பது நமசிவாயம் அவர்களின் கருத்து. இன்னும் டொனமூர்த் திருத்தத்தில் உள்ள பிழைகள் எத்தன்மையனவாயினும் அத்திட்டம் இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்தில் ஏற்பட்ட திட்டங்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்ததாகும். அது 16 ஆண்டுக் காலமாக நடைமுறையிற் சாதகமாக வேலைசெய்தது. அக்காலத்தில் யுத்தகால நெருக்கடி ஏற்பட்ட போதிலும் எவ்வித முடக்கமும் ஏற்படாமல் வேலைசெய்தது. அக்காலத்தில் பகிரங்கசேவை இலங்கையர் மயமாக்கப்பட்டும். சமூக முன்னேற்றம் ஏற்பட்டும் நன்மை கிடைத்தது. அரசாங்கசபைக் காலத்தில் நடந்த நிர்வாக சபைகளின் பரிபாலன முறையைத் தகுதி வாய்ந்த வெற்றி என்றே நமசிவாயம் அவர்கள் கருதுகின்றார். அரசாங்க சபையின் ஆட்சியும் அதற்குச் சட்டத்துறையதிகாரமும் நிர்வாகத்துறையதிகாரமும் வழங்கப்பட்டமை யாப்புப் பரநெறி என்றும் அவர் குறித்துள்ளார்.

டொனமூர் திருத்தத்தைப் பற்றி சேர் D. B. யயத்திலகா 17–12–1938 இல் பாணந்துறையில் கூடிய தேசிய மகாசபைக்குத் தலைமைதாங்கிக் கூறியவை இங்கு கவனிக்கற்பாலன. டொனமூர்த் திட்டத்தில் நல்ல அம்சங்கள் பலவுள. அவை உலகில் வேறெந்தக் குடியேற்றத்திலும் இருக்காதவை. வகுப்புவாதப் பிரதிநிதித்துவம்

நீக்கப்பட்டமையும், சர்வசன வாக்களிக்கப்பட்டமையும், சட்ட நிர்வாகத்துறை இலங்கை மக்களுடைய பிரதிநிதிகளுக்கு வழங்கியமையும் நல்லவையாகும். ஆனால் சட்டசபைக்குப் பொறுப்பில்லாத அரசாங்க உத்தியோகத்தர் மூவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டமையும், ஆள்பதி அவர்களுக்கு வரம்பிகந்ததும் கட்டுப்பாடில்லாததுமான மேலதிக அதிகாரம் வழங்கப்பட்டமையும் சட்டத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் முரணுகவே இருந்தன.

சட்டசபைக்குக் கட்டுப்படாத அரசாங்க உத்தியோகத்தர் மந்திரிமாரின் போக்குள்ளவராயிருந்தமை. மாத்திரமன்றி, ஓர் உள் மந்திரம் போலவும் செயலாற்றி இன்னும் மேலதிக அதிகாரம் பெறுவதற்குப் பல முறை முயல்வாராயினர். அன்றி ஆள்பதியின் மேலதிக அதிகாரத்தை இன்னும் அதிகரிக்கவும் அவர்கள் முயன்றுள்ளார்கள். பணிக்குழுவாட்சியாளரின் இம் முயற்சியால் அவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஓர் இரட்டை ஆட்சி முறையை உருவாகக்கச் செய்த சூழ்வினை காரணமாக அரசாங்க சபையில் காரசாரமான பேச்சுக் கலப்புகள் நடைபெற்றதும் உண்டு.

டொனமூர் அமைப்பில் இருந்த பிழைகள் போதாவென்று, அரசாங்க உத்தியோகத்தரும் தம் கடமையைச் செவ்வனே செய்யாமையானும், அத்திருத்தம் நல்ல முறையில் நடைபெறவியலாது போயிற்று.

முன்னர் முதலாவது அரசாங்கசபைக் காலத்திலேயே பகிரங்க சேவையில் இலங்கையரல்லாதார் சேர்க்கப்படுவதாயின் மந்திரிமாரின் சபையின் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்ற நிலைமை ஓரளவுக்கு வேர் கொள்வதாயிற்று. அந்நிலைமை இரண்டாவது அரசாங்க சபைக்காலத்திலே பலமாயிருந்தது. என்றாலும் இலங்கையில் பல துறைகளிலும் முன்னேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் பயிற்றப்பட்ட நிபுணர்கள் பலர் இலங்கையரல்லாதவராயே இருந்தனர்.

முன்னர் 1931 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பெரிய உத்தியோகங்கள் ஐரோப்பியராலேயே வகிக்கப்பட்டன. மேல் மாகாணம் மத்திய மாகாணம் முதலிய இடங்களின் கச்சேரி அதிபர்கள் 1941 ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயராயே இருந்தனர்.

இரண்டாவது அரசாங்க சபையிலும் பார்க்க முதலாவது அரசாங்க சபையிலேயே மந்திரிமார் சபையினரின் போக்கு வெகுவாகக் கட்டுப்படக்கூடியதாயிருந்தது. நிர்வாக சபையின் அறிக்கை

யொன்றை நிராகரிக்கும் அளவுக்குக்கூட அரசாங்கசபை முயன்ற காலமும் நிலவியது. ஆனல் இரண்டாவது அரசாங்கசபையில் மந்திரி மாரின் தீர்மானம் தடையில்லாமல் நிறைவேற்றப்படக்கூடிய நிலைமை நிலவலாயிற்று. மந்திரிமார் சபையினரை ஊசி வழிசெல் லும் நூல்போல அரசாங்கசபை பின்தொடரலாயிற்று.

இக்காலத்திலே அரசாங்கசபையின் நிர்வாக அலுவல்கள் வெகு சுமுகமாக நடைபெறலாயின. அதற்குக் காரணங்கள் இல்லா மற்போகவில்லை. முதலாவதாக அரசாங்க சபையினர் மந்திரிமாரின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாயிராமல் ஒத்துழைத்தமை இரண் டாவதாக ஆள்பதி தமது மறுப்பைத் தெரிவிக்காமையும் அவரே வேண்டிய ஆலோசனைகளைத் தெரிவித்தமையும். மூன்றுவது நிணைக் களங்களின் அதிபர்கள் மந்திரிமாரின் திட்டங்களை நடை முறையிற் கொண்டுவரத் தம்மாலான அளவில் ஒத்துழைத்தமை எனவே நிர்வாக சபைகள் அரசாங்கசபைக்குப் பரிபாலன அறிக்கைகள் சமர்ப் பிப்பதையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டன. அறிக்கை களைக் கேட்கும் சந்தர்ப்பம் இல்லையே எனத் தகநாயக அடிக்கடி தென்னலிராமனைப் போலக் கோமாளிப் பேச்சுப் பேசியதும் இக் காலத்திலேதான்.

நிர்வாக சபைகள் நிர்வாக அலுவலை வெகுவாகக் குறைத்து ஆலோசனை கூறுவதையே அதிகமாகச் செய்வனவாயின. அதனல் மந்திரிமாருக்கு வேலையாய்ப்பாயிற்று அவர்கள் தலைவர்கள் என் பதை மறந்து மந்திரிமார் எனத் தலைதூக்குவாராயினர். காணி விவ சாய மந்திரியார், கையில் இரும்புலக்கை கொண்டு ஆட்சி செய்தார் என்று அதன் நிர்வாகத்தில் இருந்த வெள்ளையரான பிரீமன் எழுதி யுள்ளார். அக்கருத்தைத் தகநாயக அவர்களும் தெரிவித்துள்ளார்.

முதலாம் அரசாங்க சபையிலே ஓரினத்தன்மை அமையாதமை யால் அலுவல்கள் தடைப்பட்டன எனக் கூறிய பெரியார்கள் இரண்டாம் அரசாங்க சபையிலே ஓரின மந்திரிமாரைத் தெரிவு செய்தபின்னும் தங்களுள் ஒற்றுமை இல்லாது இடர்ப்பட்ட சந்தர்ப் பங்களும் உண்டு. அவ்வேளைகளில் மந்திரிமார் ஒருவரை ஒருவர் வன்மையாகத் தாக்கிப் பேசியதும் ஒருவர் மற்றவருடைய முயற்சிக்கு மாறுகவாக்களித்தமையும் உண்டு. உதாரணமாக 10-2-38 இல் சுகாதார மந்திரியார் கல்வி மந்திரியாருக்கு எதிராயும், உள்ளூர் ஆட்சி மந்திரியார் உள்நாட்டு மந்திரியாரின் பௌத்தமத பரிபாலன அலுவலுக்கு எதிராயும், தொழில் மந்திரியார் சனசமூக நிலையக் கட் டளைச் சட்டஞ் சம்பந்தமாக எதிராய் இருந்தமையையும், அவர்கள்

வெளிவெளியாக அரசாங்க சயையில் பேசியவற்றையும் எடுத்துக் காட்டலாம். இன்னும் விவசாய மந்திரியார் 1940 ஆம் ஆண்டின் ஆயுள்வேத வைத்திய மசோதாவை விரும்பாமையும், சுகாதார மந்திரியார் கைத்தொழில் மந்திரியாரை 1942 ஆம் ஆண்டில் தாக்கிப் பேசியதையுங் காட்டலாம்.

ஆனல் மந்திரிமார் சபையினர் இடையிடையே மந்திரம் போல ஒருவழி ஒழுகிய சந்தர்ப்பங்கள் நிலவாமற் போகவுல்லை. பிறேஸ் கேடில் என்ற அவுஸ்திரேலிய இடது சாரியின் அலுவலிலும், இந்தியரை வெளியேற்றுதல் வேண்டும் என்ற கொள்கையிலும், முல்லோயாத் தோட்டத்துக் கோவிந்தன் மேல் பொலிசார் துப்பாக்கி பிரயோகித்த அலுவலிலும் மந்திரிமார் ஒருத்தொருமித்து ஆதரவு பட்டே இருந்தார்கள். அதனைக் காங்கேயன்துறைப் பிரதியாய நடேசபிள்ளை, யுத்தகால மந்திரத்தின் சர்வாதிகாரப்போக்கு எனக் காரசாரமாகச் சபையிற் பேசிக் குறிப்பிட்டதும் உண்டு. யுத்தகாலத்தில் மந்திரிமார் சபையில் பிரதம தளபதியும், பாதுகாப்புத் தலைவரும் இடம் பெற்றதால் ஐந்து உத்தியோகத்தரும் ஏழு உத்தியோகப் பற்றற்றவரும் இருந்தனர் என்பதும் இங்கே குறிப்பிடற்பாலது.

இரண்டாம் அரசாங்க சபையின் காலத்திலே இரண்டுமுறை யாப்பு நெருக்கடிகள் ஏற்படலாயின. அவை பிறேஸ் கேடில் நாடு கடத்தும் அலுவலும், முல்லோயாத் தோட்டத்துக் கோவிந்தன் மீது துப்பாக்கிப் பிரயோக அலுவலுமாம். முல்லோயாத் தோட்டத்திலே தொழிலாளரிடையே ஏற்பட்ட குழப்பத்தை அடக்குவதற்குச் சென்ற பொலிசுக்காரர், கோவிந்தன் என்னும் தொழிலாளியைத் துப்பாக்கியாற் சுட்டு வீழ்த்தினர். அக்குழப்பஞ் சம்பந்தமாகக் கண்டிப் பொலிசு நீதிமன்றத்திலே பல வழக்குகள் தொடரப்பட்டன. அதே சமயத்தில் குழப்பத்தின் காரணம் முதலியவற்றை ஆராய்ந்து முடிபு காணுவதற்கு அரசாங்க சபையால் ஓர் ஆணைச்சபையும் நியமிக்கப்பட்டிருந்தது. எனவே நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளுக்குத் தவணை கோரப்படும்போது அவற்றை எதிர்க்காதிருக்குமாறு பொலிசுக்காரருக்கு உத்தரவிடுமாறு பொலிசு மேலதிகாரிகளுக்கு உள்நாட்டு மந்திரியார் கனம் D. B. யயத்திலகா அவர்கள் கட்டளையிட்டார்கள்.

பொலிசதிகாரி மந்திரியாரின் கட்டளைக்குக் கீழ்ப்படியாது நடந்ததுமல்லாமல், மந்திரியாரின் கட்டளை யாப்பு மரபுக்கு விரோதமானது எனக் காரணமுங் காண்பித்தார். மந்திரியார் கட்டளை, யாப்பின் 45 ஆம் இலக்கத்து விதியின் பிரகாரம் உள்

நாட்டு நிர்வாக சபையினருடைய ஆதரவையும் ஆள்பதி அவர் களுடைய அங்கீகாரத்தையும் முறையாகப் பெறவில்லை என்று எடுத்துச்காட்டினர். பொலிசதிகாரியின் போக்கு முறையானது என்றே ஆள்பதியும் கருதினர்கள். எனவே 27-2-1940 இல் தனிச் சிங்கள மந்திரிமார் எழுவரும் விலகல் செய்தார்கள்.

கனம் மந்திரியார் தமது கட்டளையை ஒரு வேண்டுகோளாகக் கேட்டிருந்தால் அத்தகைய நெருக்கடி ஏற்பட்டிருக்கமாட்டாது என்று ஆள்பதி கருதினர்கள். ஆனல் மந்திரியாருக்கு உதவியாக நின்ற ஏனைய மந்திரிமார் 45 ஆம் இலக்க விதி என்றுமே நடை முறையில் கொண்டுவரப்படவில்லை என்றும், அவ்வழக்கம் யாப்பு மரபாய் சம்பிரதாயமாய்விட்டமையால் கனம் உள்நாட்டு மந்திரி யார் தமது நிர்வாக சபையினரின் ஆதரவையோ, ஆள்பதி அவர் களின் அங்கீகாரத்தையோ பெறவில்லை என்றும் கூறினர்.

ஆள்பதியின் போக்கும், அவர் பொலிசதிகாரியின் செயல் முறையானதெனக் கூறியமையும், பிழையானவை எனத் திரு.D. B யயத்திலகா 5-3-40 இல் ஆள்பதியைக் கண்டித்து ஒரு பிரே ரணையைத் தயாரித்தார். ''வழக்கற்றுப்போன 45 ஆம் இலக்கவிதி நாளடைவில் இறந்துவிட்டது. அதனைப் புறக்கணித்து ஆயிரம் முறை நான் கட்டளைகள் விதித்துள்ளேன். அவ்வப்போது அரசாங்க சபையினரையாவது ஆள்பதி அவர்களையாவது நான் ஆலோசிக்கவே யில்லை. என்னைப்போன்றே ஏனைய மந்திரிமாரும் பலமுறைகளிற் கட்டளைகளை விதித்தார்கள். இன்று ஆள்பதி அவர்கள் 45 ஆம் விதியை இறுகப்பிடித்துக் கொண்டால் எங்களால் ஒன்றுஞ் செய்ய இயலாது. டொனமூர்த்திட்டம் வேலைசெய்யாது என்பது மாத்திர மல்ல, அதனை வேலைசெய்தும் பிரயோசனமில்லை என்றே நான் கருதுகின்றேன்'' என்று D. B. யயத்திலக அவர்கள் குறிப்பிட் டார்கள்.

இந்நெருக்கடி, ஓரளவுக்கு ஆள்பதி விட்டுக்கொடுத்தமையால் தீர்த்து வைக்கப்பட்டது. மந்திரிமார் கட்டளையிடுவதற்குமுன் அர சாங்கசபையின் ஆதரவும் ஆள்பதி அவர்களின் ஆங்கீகாரமும் தேவைதானு என்பதை ஓர் ஆணைச்சபை தீர்மானிக்கும்வரை அன்றிருந்த நிலைமையை மந்திரிமார் மேற்கொண்டு நடத்தலாம் என ஆள்பதி ஒத்துப்போகவே, நிலைமை அமைதியானதும் மந்திரி மார் விலகலை நீத்துப் பழமைபோல் பதவியேற்பாராயினர்.

பொலிஸ் மேலதிகாரியாயிருந்த வெள்ளைக்காரனுய பாங்ஸ் அன்று நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்துக்குத் தாம் பாத்திரவாளி யல்ல என்றும், பொலிசுப் பகுதிக்கு மந்திரியாயிருந்த கௌரவ திரு. D. B. யயத்திலக அவர்களே பொறுப்பாளி என்றும் கூறியமை மந்திரிமார் கூட்டத்தில் பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அவர்கள் எழுவரும் ஏகமனதாய் விலகல் செய்துவிட்டுக் காலி முக மைதானத்தில் பெரிய கூட்டத்தையும்கூட்டி நாட்டுமக்களுக்கு அலுவல்களை விளக்கினர்கள். திரு. D. S. சேனநாயக வெள்ளை யருக்கும் பேரரசுவாதிகளுக்கும் எதிராகச் சில வார்த்தைகளும் பேசிவிட்டார். இதனை அறிந்த குடியேற்ற மந்திரியார், குற்றம் பாங்ஸ் மேலதே எனக்கூறி மந்திரிமாரைத் திருப்திப்படுத்தி அவர் களுடைய விலகலைப் பிறக்கீடு செய்வித்து நிலைமையை ஒழுங்கு செய்தார் என்பர்.

அடுத்த யாப்பு நெருக்கடியின் வரலாறு இது அவுஸ்தி ரேலிய வாசியாய லிஸ்ரர் பிறேஸ் கேடில் என்னும் இளைஞர் இடது சாரிப் போக்குள்ளவராய்த் தோட்டத் தொழிலாளரிடையே தோழமையூண்டு அந்நெறியைப் பரப்புவதில் ஈடுபடுவாராயினர். அவர் செய்கையை விரும்பாத ஆள்பதி, பிரதம காரியதரிசியின் ஆலோசனையின் வண்ணம் எப்பொழுதோ 1896 இல் வழக்கத்தில் இருந்த ஒரு சட்டப்பிரகாரம் அவரை இலங்கையைவிட்டு 24 மணிநேரத்தில் வெளியேறுமாறு நாடுகடத்தல் உத்தரவிட்டார். பிறேஸ் கேடில் அவர் கட்டளையைப் பொருட்படுத்தாதிருந்தமையால், அவரைக் கைதுசெய்ய அவர்மீது விரிவுக்கட்டளை பிறப்பிக்கப் பட்டது. அவர் அதனையும் புறங்கண்டு தலைமறைவில் அன்று வெளிப்பட்டு நீதிமன்றத்தில் விடுதலை வழங்கப்பட்டார்.

பிறேஸ் கேடில் சம்பந்தமாக ஏற்பட்ட யாப்பு நெருக்கடியில் மூன்று அலுவல்கள் சுட்டிக்காட்டப்பட்டன. முதலாவது பிரதம காரியதரிசி மந்திரியார் ஒருவரின் ஆளெல்லையில் அத்துமீறிப் பிரவேசித்து அலுவல் செய்தமை. இரண்டாவது காலங்கடந்து செல்வாக்கற்றுப்போன கழகத்துப்பணி மந்திரிமாரின் ஆலோசனை யில்லாமல் பரிபாலன அலுவலுக்குப் பயன்படுத்தப்பட்டமை. மூன்றுவது திணைக்களத் தலைவர்களுக்கும் மந்திரிமாருக்கும் உள்ள தொடர்பைச் சிக்கலாக்கியமை.

நாடு கடத்துதல் வெளிநாட்டமைச்சின் அலுவலா, உள் நாட்டமைச்சரின் அலுவலா, என்பதே பிரச்சினைக்குரியதாய் இருந் தது. அது உள்நாட்டமைச்சின் அலுவலாயிருந்தபோதிலும், அதனை வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பான பிரதம காரியதரிசி அத்து மீறிச் செய்தமை யாப்புக்கு முரணுயிற்று.



டி. எஸ். சேனநாயக அவர்கள்



இலங்கை அரசயாப்பின் மாற்றங்கள் திருத்தங்கள்யாவும் லண்டனில் உள்ள குடியேற்ற மந்திரியாரின் அலுவலகத்திலேயே செய்யப்பட்டன. அரசாங்க சபையின் ஆயுட்காலத்தை நீடித்த ஒரே ஒரு மாற்றத்தைத்தவிர ஏனைய மாற்றங்களை மந்திரிமார் ஏகோபித்த கருத்தில் எதிர்த்தே வந்தார்கள்.

குடியேற்ற நாடுகளில் ஆங்கிலேயரின் அதிகாரத்தை நீக்கிய 1931 ஆம் ஆண்டின் உவெஸ்ற் மினிஸ்ரர் சாசனம் இலங்கையில் தொழிற்படாமையால் இலங்கை 1931 ஆம் ஆண்டின்பின் அரசாங்க சபைக் காலத்திலும் குடியேற்ற நாடாகவே இருந்து வந்தது. கட்டளைச் சட்டங்கள் வெளியதிகாரம் இல்லாதவையாகவே இருந்தன. அன்றி 1865 ஆம் ஆண்டின் குடியேற்ற வாய்ப்புச் சட்டம் இலங்கையைக் கட்டுப்படுத்தியே வைத்திருந்தது. அதனால் இலங்கைக் கட்டளைச் சட்டத்துக்கு மேலாணையுள்ள சட்டங்களைப் பிரித்தானிய பாராளுமன்றம் பிறப்பிக்க அதிகாரமுள்ளதாகவே இருந்தது. இன்னும் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கையின் பொருட்டு நிறைவேற்றும் சட்டங்களுக்கு மேலாணையுள்ள சட்டங்களை இலங்கை அரசாங்கசபை இயற்ற இயலாததாய் இருந்தது.

இவற்றால் இலங்கை அரசாங்கசபை 1941 ஆம் ஆண்டிற் கூடத் தன் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு அதிகாரமில்லாததாய் அது கூட இங்கிலாந்திலிருந்தே செய்யப்படவேண்டியதாய் இருந்தது. அன்றி இலங்கையின் பாதுகாப்பு வெளி நாட்டலுவல் என்பனவும் ஆங்கிலேயர் கையிலேயே இருந்தன. பிரித்தானியா 3–9–1939 இல் இரண்டாவது மகாயுத்தத்தில் இறங்கியபோது, ஆள்பதி அரசாங்க சபையை அவசரமாகக் கூட்டி இலங்கை பிரித்தானியாவுக்கு உதவியாய் இருத்தல் வேண்டும் என்பதைச் சாதாரணமாகக் றினரேயல்லாமல் கருத்தறிந்தோ கலந்துரையாடியோ தீர்மானித்தாரல்லர். அவர் செயல்கள் உத்தரவாதஞ் செய்யும் தெறுபொருள் செயல்களாகவே நிலவின.

இவற்றுக்கு மேலாக பிரித்தானிய முடிக்கு இலங்கை மீது இருந்த வரம்பிகந்த ஆற்றலால் அது கழகத்துப் பணிமூலம் சட்டஞ் செய்யும் பேரதிகாரம் படைத்திருந்தது. அதனால் இலங்கையர் யப்பானியரிடம் மலிவான பருத்திப் புடைவை வாங்க இயலாது, ஆங்கிலேயரின் லங்காசயர் துணிகளை வாங்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள். இந்நிலைமையை அநுபவத்திலே கண்டுதான் திரு. D. S. சேனநாயக அவர்கள் ''எங்களுக்குப் பொறுப்புகள் உண்டு என்று நாம் கருதுமாறு சொன்னார்கள். நாம் எம் நாட்டு

மக்களுக்கு ஏதாவது சேவை செய்வதாகில் ஆள்பதி அவர்களையும் குடியேற்ற மந்திரியாரையும் கேளாமல் யாதொன்றும் செய்ய இயலாதிருக்கிறோம்'' என்றார். இதனையே அதிகாரம் இல்லாத பொறுப்பு என்று கன்னங்கரா அவர்கள் கூறினர்கள்.

இரண்டாம் அரசாங்கசபை 1936 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு இடையில் இருமுறை அதன் ஆயுட்காலம் நீடிக்கப் பட்டதால் அது 4–7–1947 வரை நிலவிற்று. அதில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் 11 ஆண்டுகளாக வாசகராய் இருந்தார். அன்றி சேர். அருணாசலம் மகாதேவா அவர்கள் 1942 ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரையும் உள்நாட்டு மந்திரியாராய் இருந்தார்.

அத்தியாயம் 35

இரண்டாம் மகாயுத்த காலம்

அரசியற் சீர்திருத்தப் பேச்சு முடிந்தபோது இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்தகாலத்தில் அடுத்த தேர்தலை அன்றைய அரசமைப்பில் நடத்துவதற்கு மந்திரிமார் இணங்கவில்லை. எனவே ஆள்பதி 15-10-1940 இல் அரசாங்க சபையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கவும், அதற்குள் யாப்புத்திருத்தத்துக்கான ஆணையாளர் குழுவினரை நியமிக்குமாறும் குடியேற்ற மந்திரியாருக்குத் தகவுரை எழுதினர்.

குடியேற்ற மந்திரியார் பிரித்தானிய அரசாங்கத்தின் வாக்குறுதியை மந்திரிமாருக்கு அறிவிக்குமாறு ஆள்பதிக்கு எழுதினர். அதில் யுத்த நெருக்கடி ஒய்ந்ததும் இலங்கைக்கு அரசியற்றிருத்தஞ் செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இச் செய்தி 1-9-41 இல் மந்திரிமார் சபையிற் படிக்கப்பட்டது. அரசாங்கசபையிலே 26-3-1942 ஆம் நாள் கூட்டத்திலே இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் குடியேற்ற மந்திரியாருக்கு அவ்வேண்டுகோள் அனுப்பப்பட்டது. அவர் 26-5-1943 இல் அனுப்பிய பதிலில் மகாயுத்தம் கழிந்தபின் இலங்கையரசயாப்பு முற்றுகத் திருத்தப்படலாம் என்றும், அந்த நேரத்தில் இலங்கைக்கு உள் நாட்டலுவல்களில் சுயவாட்சி வழங்கப்படலாம் எனவும் எழுதினர்.

இதனால் இலங்கைக்கு ஆணிலப்பதம் எனப்படும் டொமினியன் தகுதி கிடைக்காது என்றும் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் பிரித்தானிய அரசாங்கத்தின் பிடியிலேயே இருக்கும் என்றும் புலப்பட்டது. அன்றி இலங்கை பிரித்தானிய பேரரசின் பாதுகாப்புக்கான கேந்திரத்தானங்களில் ஒன்றுகையால் அதன் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை நிலையங்கள் வெள்ளையர் பொறுப்பிலேயே நிலவும் என்பதும் வெளிப்படையாயிற்று.

அன்றி, ஆள்பதியின் மேலாணையால், அவர் இலங்கையில் உள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அதிகாரமுள்ளவராயிருப்பர். பிரித்தானிய அரசாங்கத்தின் நன்மையின் பொருட்டு நிதி, வர்த்தகம், போக்குவரத்து வசதிகள் தொடர்புகள் என்பனவற்றையும் அவர் கண்காணிப்பர். மகாயுத்தம்

முடிவுற்றபின் இலங்கை அரசயாப்புத் திருத்தம் சம்பந்தமாக ஆணையாளர் குழுவினரோ, மகாநாட்டினரோ ஆராயும்போது இலங்கை மந்திரிமார் தயாரித்துச் சமர்ப்பிக்கும் திட்டங்கள் உரிய முறையிற் பரிசிலனை செய்யப்படும் எனவும் குடியேற்ற மந்திரியார் எழுதினர்.

இதற்குள் அரசாங்க சபையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டலாயின. இதுகாறும் சபை முதல்வராயும், மந்திரிமார் சபையின் உப தலைவராயும், உள்நாட்டு மந்திரியாயும் இருந்த கௌரவ டொன் பாரன் யயத்திலக தானிகராக இந்தியாவுக்குப்போனர். அவருடைய தலைமைப் பீடத்தை கௌரவ D. S. சேனநாயக அலங்கரிப்பாராயினர். இதுகாறும் தனிச் சிங்கள மந்திரிசபையாயிருந்த கூட்டத்தில் அருணசலம் மகாதேவா உள்நாட்டு மந்திரியாகத் தெரியப் பெற்றுப் பொறுப்பேற்றார். யயத்திலகா விலகல் செய்த கழனியாத் தொகுதியில் பழைய அரசியல் விற்பன்னராய E. W. பெரேரா அவர்களை இடைக்காலத் தேர்வில் வென்று திரு. J. R. யயவர்த்தனே அங்கத்தவராயினர். இன்னும், 1943 ஆம் ஆண்டில் பலாங்கொடைத் தொகுதியின் இடைக்காலத் தேர்வில் பழைய வாசகர் மொலமுரே வெற்றியீட்டினர். பிபிலே தொகுதியில் தகநாயக பிரதிநிதித்துவம் பெற்றார்.

திரு. D. S. சேனநாயக முதல்வரானதும் தமது அந்தரங்க நண்பர்களான ஒலிவர் குணத்திலக, ஐவர் ஜெனிஸ் அவர்கள் கைவன்மையால் ஒரு யாப்பு வரைவை மந்திரிமார் சபையின் பெயரால் தயாரித்தார். அங்ஙனம் தயாரிக்கப்பட்ட யாப்புவரைவை 2-2-1944 இல் ஆள்பதி சேர். அண்றுகல்டிகொட் அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். அதிலே ஆள்பதியின் அதிகாரத்துக்கு முரண்படாத வகையில் இலங்கையருக்கு உள்நாட்டு வெளிநாட்டலுவல்களில் பொறுப்பாட்சி கோரப்பட்டது. அவர் கோரிக்கை ஓரளவுக்கு ஆணிலப்பத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தது எனலாம்.

இந்த யாப்பு வரைவைப் படித்த ஆள்பதி இது, 1943 ஆம் ஆண்டின் குடியேற்ற மந்திரியாரின் பிரகடனத்திற்கு முரணானது எனக் கூறவே, மந்திரிமார் யாப்பு வரைவை பிறக்கீடு செய்து கொண்டனர். இது நடந்து ஒரு மாத காலங்கழியுமுன், குடியேற்ற மந்திரியார் இலங்கை அரச யாப்பைத் திருத்துவதற்கு ஓராணைச் சபையை அனுப்புவதாக அறிவித்தார். ஆணைச் சபையினர் ஹேர்வால் ரும்ஸ் போதம் என்னும் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் 1944 ஆம் ஆண்டிறுதியில் வந்தார்கள்.

இலங்கைத் தேசிய மகாசபையினர் 1942 ஆம் ஆண்டில் கல்யாணபுரத்தில் நடத்திய தமது ஆண்டு விழாவிலே தேசிய விடுதலையே தமது நோக்கம் என ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதில் அங்கத்தவராயிருந்த திரு. D. S. சேனநாயக இலங்கையின் நோக்கம் ஆணிலப்பதமே எனத் திருத்தப் பிரேரணையைப் பிரேரித்தார். அவருடைய திருத்தப் பிரேரணையை அங்கு கூடிய இளம் அங்கத்தவர் தீவிரமாக எதிர்க்கவே பிரேரணை வீழ்த்தப்பட்டது. அந்த விரக்தியில் சேனநாயக தேசிய மகாசபையை விட்டு விலகி வெளியேறுவராயினர். தேசிய மகாசபை இளைஞர்களுடைய செல்வாக்கிலேயே நடைபெறலாயிற்று. அவ்விளைஞர்களுள் டட்லி சேனநாயகவும் J. R. யயவர்த்தனவும் இருவர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

திரு. D S. சேனநாயக அரசாங்கசபை முதல்வராய பின் செய்த முயற்சியின் பயனாக இலங்கைக்கு ஆணிலப்பதம் கிடைக்கலாம் என்பது துணிபாயிற்று. அதனைச் சேனநாயக ஏற்றுக்கொண்டதும் முன்னர் அவரையும் அவர் கொள்கையையும் விரும்பாதவர்கள் பலர் அவர்பக்கம் திரும்பி அவரை ஆதரிப்பாராயினர்.

ஆனல் சிங்களப் பொதுமக்களின் பற்றுக்கோடான பௌத்த சங்கம் ஆணிலப்பதத்தை விரும்பவில்லை. சங்கத்தார் ஆங்கில முடியின் தொடர்பை முற்றாக நீக்குதல் வேண்டும் என்றே கருதினர். ஆங்கில மன்னர் அல்லது இராணி கிறித்தமதப் பாதுகாவலர் (F. D.) ஆனமையால் அவர் பௌத்தமத பாதுகாவலராயிருப்பதில் சங்கத்தாருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இலங்கை மன்னரைப்போல ஆங்கில மன்னர் பௌத்த மத பாதுகாவலராயமைய மாட்டார் என்பது பௌத்தருடைய கருத்து. அவர்களுக்குத் தேசிய சுதந்திரமே நோக்காக இருந்தது.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 1947 ஆம் ஆண்டின் இலங்கைச் சுயவாட்சி விதி இலங்கைக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கவில்லை. தேசிய விடுதலையைத் தரவுமில்லை. அது எவ்வாற்றானும் இலங்கையை இறைமை உள்ள ஒரு நாடாகக் கணிக்கவும் இல்லை. பிரித்தானிய பேரரசின் வேறான ஒரு நாடாக இலங்கையைக் கணிக்கவும் இல்லை. அந்த விதி இலங்கை பிரித்தானிய பேரரசில் சுயவாட்சியுள்ள ஒரு நாடு என்ற தகுதியையே வழங்கிற்று. அதனால் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கைக்குச் சட்டஞ் செய்யும் அதிகாரத்தைக் கைவிட்டது. ஆனல் இலங்கை அரசின் ஆள்பதிநாயகத்தை நியமிக்கும் அதிகாரம் வெள்ளையரின் அரசாங்கத்திடமே இருந்தது. இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் இருந்த தொடர்பு மாற்றப்படவில்லை.

பிரித்தானிய அரசின் யூனியன் யாக் என்ற கொடி இலங்கையில் வணக்கத்துக்குரியதாகவே இருந்தது. எனவேதான் கல்யாணபுரத்து ராஜ மகாவிகாரை வீதியில் பௌத்த சங்கத்தார் இலங்கை ஆளுரிமையுள்ள சுதந்திரநாடாக இருத்தல் வேண்டும் எனப் பிரகடனஞ் செய்தனர்.

இக்காலத்தில் இலங்கையில் ஒன்றன்பின் ஒன்றுகத் துன்பங்கள் பல சம்பவித்தன. வர்த்தக மந்தமும், வயல்கள் தோட்டங்களில் வறட்சியும், விளைவின்மையும், மலேரியாச்சுர நோயின் அதிகரிப்பும் நாட்டு மக்களை வெகுவாகப் பாதித்தன. இவற்றுல் துயரப்பட்ட மக்களுக்கு இரண்டாவது மகாயுத்த நெருக்கடியும் இடர் செய்வ தாயிற்று.

இத்தகைய இடர்கள் ஒருபுறமாக நாட்டை நலிவு செய்த போதிலும், அரசாங்கம் பரோபகாரமான பல அலுவல்களைச் செய்யத் தலைப்பட்டது. முன்னர் 1931 ஆம் ஆண்டில் கல்வியின் பொருட்டு 12000000 ரூபா செலவானவிடத்தில் 1945 ஆம் ஆண்டில் 34000000 ரூபா செலவானது. அங்ஙனமே வைத்தியசாலைகளுக்கு 10000000 செலவானவிடத்தில் 15000000 செலவானது. சமூக சேவைகளின் பொருட்டு 128000 ரூபா செலவானவிடத்தில் 1210000 ரூபா செலவானது.

முன்னர் சர்வகலாசாலையொன்றை அமைத்தல் வேண்டுமென்று அருணுசலம் கண்ட கனவு 1942 ஆம் ஆண்டில் நனவாயிற்று. அதனை அடுத்து விலைமதிக்கமுடியாத முத்து எனப்படும் இலவசக் கல்வித் திட்டம் 1945 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாக நடை முறையில் வந்தமையால் பாலர் வகுப்புமுதல் பல்கலைக்கழகப் பட்டதாரி வகுப்பீருகவுள்ள படிப்புகள் அத்தனையும் இலவசமாக இலங்கைப் பிள்ளைகளுக்குக் கிடைத்தமை பெரிய வரப்பிரசாத மாயிற்று.

சமூக கைத்தொழில் சம்பந்தமான சட்டவாக்கங்கள், தொழி லாளர் நட்டவீட்டு விதிகள், தொழிற்சாலை, ஆலைகள், வேலைத் தளங்கள் சம்பந்தமான விதிகள், சாய்ப்புச் சட்டங்கள், சம்பள நிர் ணய சபைகள் என்பனவாதிய நற்கருமங்களோடு உள்ளூர் ஆட்சி முறையில் புனர்நிர்மாண அலுவல்கள், பெரிய அளவில் நீர்ப்பா சனத் திட்டங்கள், விவசாயக் குடியேற்றத் திட்டங்கள், விற்பனவு வசதிகள், சந்தைப்படுத்தல் சகாயங்கள் என்பனவாதிய அலுவல் களும் செய்யப்பட்டன. இன்னும் விவசாயத் துறையிலும், கைத்

தொழிற்றுறையிலும் இலங்கையரை ஊக்குவிப்பதற்கான மூலதன உதவிகள், கடனுதவிகள் என்பனவும் பல அளவையில் செய்யப் பட்டதால் பொதுமக்களுக்குப் பெரிய அளவில் அரசியலறிவு ஏற்பட லாயிற்று. பொதுமக்களிடம் வாக்குக்கேட்டுப் போகும் வேட்பாள ராய பெரியார்கள் அவர்களுக்கான பொது நன்மையான அலுவல் களைப் பெரிய அளவில் செய்தளிக்க வேண்டியவராயினர்.

திருவாளர் பண்டாரநாயக தமது சிங்கள மகாசபையை 1937 ஆம் ஆண்டில் ஆரம்பித்து மக்கள் இனவாரியாகவே இருத்தல் வேண்டும் எனப் பிரசாரஞ் செய்து வந்தார். தோழர் பீற்றர் கெனமன் இடதுசாரிகள் வரிசையை விட்டு விலகிப் பொதுவுடை மைக் கட்சியை வளர்ப்பதற்கு அதன் கிரந்த என்னும் பத்திரிகையை நடத்தித் தேசியம் வளரப் பிரசாரஞ் செய்து வந்தார். அரசாங்க சபை முதல்வரான திரு. D. S. சேனநாயக அடுத்த அரசியல் திருத் தத்தின் பின் அமைக்கப்படவிருந்த பாராளுமன்ற அரசமைப்பில் உத்தேச பிரதமர் என்னும் எண்ணத்தில் ஒரு தேசீயக் கட்சியை ஆரம்பித்தார். தமிழர் தலைவர்களாய மகாதேவாவும் நடேசனும் அக்கட்சியில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே தமிழரென்று சொல்லித் தலை நிமிர்ந்து நிற்றல் கருதித் தமிழருக்கு ஒரு மகா சபையைப் பொன்னம்பலம் ஆரம்பித்து அரசியல் விசார ணைக்குழுவினர் முன்வாக்குமூலமளிக்கவும் ஆயத்தமானார்.

மகாயுத்தம் கிழக்கு நாடுகளில் வேகமாகப் பரவியதோடு சிங்கப் பூரை யப்பானியர் 12-4-42 இல் கைப்பற்றி றங்கூனையும் பிடித்துக் கொண்டனர். அதனால் இலங்கைக்குப் பாதுகாப்பு வசதிகள் செய் யப்பட்டன. சேர். யெவ்றி லேற்றன் 5-3-1942 இல் கொழும்பில் வந்திறங்கினார். அவர் இலங்கையிலுள்ள சகல அலுவல்களுக்கும் பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டதோடு, தலையாய தளபதியாயும் தரைப்படை கடற்படை ஆகாயப்படை ஆகிய முப்படைகளுக்கும் பொறுப்பாளியாயும் இருந்தார். ஆள்பதியும் மந்திரிமாரும் அவர் ஏவலின் வழியே கடமை செய்யவேண்டியவராயினர், அவர் வந்து ஒரு மாத காலமாவதற்குள் 5-4-1942 இல் கொழும்பில் குண்டு வீசப்பட்டது.

பேல் ஹாபர் எனப்படும் முத்துத் துறைமுகத்திற் குண்டு வீசிய அதேநாசகாரி விமானமூலம் தேவந்துறைக்குத் தெற்கே 150 மைல் தூரத்திலிருந்து யப்பானியர் கொழும்பு மீது குண்டு வீசினர். அதனால் இரு வர்த்தகக் கப்பல்களும். இரத்மலானையிற் பல கட்டடங்களும்

நாசமாயின. பின்னர் 9 ஆம் திகதி திருகோணமலையில் குண்டுவீசிய வர்கள் ஆங்குள்ள சீனன்வாடியின் எண்ணெய்க் குதத்துக்கும் தீக் கொளுவினர். ஆங்கிலேயருடைய கேமிஸ், வம்பயர் என்னும் யுத்தக் கப்பல்களும் கடலில் அமிழ்த்தப்பட்டன.

இரண்டாம் அரசாங்க சபைக் காலத்தில் இடதுசாரி ஐக்கம் நன்கு வளர்ந்து முன்னேறியது. நாடெங்கும் கிளைச்சங்கங்கள் உண் டாக்கப்பட்டுக் கட்சியின் லட்சியங்கள் பிரசாரக் கூட்டங்கள் மூலமும் பத்திரிகைகள் சிறு பிரசுரங்கள் மூலமும் பரப்பப்பட்டன. புரட்சிகர மான போக்குள்ள தீரர்களும் தியாகிகளும் அதிலேயிருந்தபோதிலும் மாற்றங்கள் சாவதானமான முறையிலே நடைபெறவே திட்டங்கள் அமைக்கப்படலாயின. அரசாங்க சபையின் உள்ளேயும் வெளியேயும் இடதுசாரிகள் முற்போக்குத் திட்டங்களைப்பற்றிப் பேசுவாராயினர்

ஆள்பதிக்கு 1938 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட மேலதிக அதிகாரங்கள் அரசாங்கசபையை வெகுவாகக் கட்டுப்படுத்தின. பேரரசு வாதிகளுக்கு அப்படியேயாகுக என்று கூறிப் பந்தம் பிடித்த வகுப்பு வாத இனவாத வைரிகளைப்போலன்றி, இடதுசாரிகள் அம்மாதிரி யான அதிகார அளிப்பை வன்மையாக எதிர்த்தார்கள். அந்த நேரத்திலேதான் திருவாளர் A. இரத்தினயக்கா இரண்டாவது அரசாங்கசபைக் கூட்டங்களைத் தாங்கள் ஒன்றியொதுக்கல் செய்தல் வேண்டுமென்னும் ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தலுங் கொடுத் திருந்தார். அப்பிரேரணையை வெகுவாக ஆதரித்து அதற்கநுசரணை யாக நாடெங்கும் பிரசாரக் கூட்டங்களை இடதுசாரிகள் தீவிரமாக நடத்தினர்கள். இப்பிரசாரக் கூட்டங்களில் அதிகமாகப் பங்குபற்றிப் பேசித்திரிந்த பெரியார்களின் திருநாமங்களை அறைவதானல் டட்லி சேனநாக்க, ஸ்ரீ பால சமரக்கொடி, யயவீரகுருப்பு எனலாகும். பிரித்தானிய பேரரசை எதிர்த்துப் பிரசாரஞ் செய்த இடதுசாரிகளுக் குப் பெயர் கிளம்பிற்று. அதனல் 1940 ஆம் ஆண்டில் எதிர்பார்க் கப்பட்ட மூன்றுவது அரசாங்கசபைத் தேர்தல் நிகழ்ந்திருந்தால் நாட்டில் இடதுசாரிகளே பெரும்பான்மையினராகத் தெரியப்பட் டிருப்பர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

அவர்கள் 1940 ஆம் ஆண்டில் தேர்தலுக்கு முன்னடியே ஆயத் தஞ் செய்திருந்தனர். தொகுதிகள் தோறும் தகுந்த தலைவர்களை நிய மித்து அவர்களுக்கு ஆதரவளிக்கப் பொதுமக்களைப் பழக்குவதற்குப் பிரசாரக் கூட்டங்களை நடத்தினர்கள். ஆங்கிலேயரின் சூறையாடற் குணத்தை அம்பலமாக்கினர்கள். தொகுதிகள்தோறும் அவர்கள் நியமித்த வேட்பாளர் வருமாறு :-

	தொகுதிகள்	—	வேட்பாளர்
1.	மொறவாக்க	—	S. A. விக்கிரமசிங்க
2.	மாத்துறை	—	பேணுட் சொயிசா
3.	வெலிகம	—	வில்சன் சில்வா
4.	காலி	—	W. தகநாயக
5.	பலப்பிட்டியா	—	வில்லியம் சில்வா
6.	மத்துகமம்	—	M. G. மென்டிஸ்
7.	களுத்துறை	—	C. D. F குணவர்த்தனு
8.	பாணந்துறை	—	லெஸ்லி குணவர்த்தனு
9.	ஹொறணை	—	வில்மட் பெரேரா
10.	மொறட்டுவா	—	ரெயிஸ். த. மெல்
11.	அவிசாவலை	—	பீலிப் குணவர்த்தனு
12.	கொழும்பு தெற்கு	—	கொல்வின் R. த. சில்வா
13.	கொழும்பு மத்தி	—	ரேபேட் குணவர்த்தனு
14.	மினுவாங்கொட	—	எட்மன் சமரக்கொடி
15.	நீர்கொழும்பு	—	கலாநிதி ஹெக்டர் பர்ணந்து
16.	சிலாபம்	—	C. W. W. சேகர
17.	டெடிகம	—	றெஜி பெரேரா
18.	றுவான்வல	—	N. M. பெரேரா
19.	பலாங்கொடை	—	W. A. V. யயத்திலக
20.	பிபிலே	—	திருமதி சிலிமா N. M. பெரேரா
21.	பதுளை	—	J. C. T. கொத்தலாவல
22.	தலவாக்கொல்லை	—	M. வேலுச்சாமி
23.	கண்டி	—	H. A. C. விக்கிரமரத்னு

இவர்களுவிட யாழ்ப்பாணத் தொகுதிகளில் தோழர்கள் சிற்றம்பலம், தருமகுலசிங்கம், அப்புக்காத்தர் பாலசுந்தரம் ஆகியோரின் பெயர்களும் அடிபட்டன. அவற்றைப் பற்றிய முடிபான தகவல் உடனடியாக கிடைக்கவில்லை.

இதற்குள்ளாக 1939 ஆம் ஆண்டில் செப்ரம்பர் மாதத்தில் மகாயுத்தமாரம்பித்தமையால் தேர்தல் நடைபெறுதென்ற நிலைமையும் ஏற்பட்டது. கட்சியில் சேர்ந்திருந்த இளைஞர் பலர் பட்டாளத்தில் சேர்ந்துவிட்டமையால் கட்சிப் பலங்குறையவாரம்பித்தது. யுத்தகாலத்தில் அவசரகால நெருக்கடிகள் நிலவியபோது கட்சியினர் இரகசியமாகவே கருமமாற்றினர்.

கட்சியுள் தவிர்க்க முடியாத ஒரு பிளவு ஏற்பட வேண்டிய நிலைமை உண்டாயிற்று. தோழர் லெஸ்லி குணவர்த்தனை 1940 ஆம் ஆண்டு பெப்ருவரிமாதக் காரியநிர்வாக சபைக் கூட்டத்திலே ஏறக்குறை 40 பேர் மத்தியிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைப் பிரேரித்தார். அவருடைய பிரேரணையைக் கலாநிதி விக்கிரமசிங்க, தோழர் M. G. மென்டிஸ் முதலாய ஐந்து பேர் மாத்திரம் எதிர்த்தனர். பிரேரணையை எதிர்த்த ஐவரையும் உடனடியாகக் கட்சியினின்றும் நீக்கிவிடுமாறு கட்சியின் தலைமைப்பீட அதிகாரம் பிறப்பிக்கப் பட்டது. இவ்வித மேலிட உத்தரவைப் பொதுக் கூட்டத்தில் கலந்து பேசுதல் வேண்டும் எனச் சிலர் கிளர்ச்சி செய்யவே, கிளர்ச்சியாளரையும் விலத்திவிடுமாறு மேலிடம் ஆணை பிறப்பித்தது.

இங்ஙனம் பிரிக்கப்பட்டவர்கள் கொழும்புத் தொழிலாளர் சங்கம் என்னும் தொழிற்சங்கத்தை உண்டாக்குவாராயினர். தொழிலாளர்களுடைய முடிசூடா மன்னனாய் விளங்கிய A. E. குணசிங்கா அவர்கள் தமது தொழிற்சங்கத் திருப்பணியைக் கைவிட்ட காலமாதலால், அவர் பக்கத்திலிருந்த மலையாளிகள் முதலானோர் புதிய தொழிற்சங்கத்தில் சேர்ந்து B C. C. ஆலையில் முதலாவது தொழிற் சங்க ஆரம்பக் கூட்டம் நடைபெறலாயிற்று. கலாநிதி விக்கிரமசிங்கா சனசாகித்திய என்னும் தொழிலாளர் இலக்கியப் பத்திரிகை ஆரம்பித்து வார வெளியீடாகப் பிரசுரித்தார்.

சமசமாசக் கட்சியினர் தோட்டப் பகுதிகளில் தங்கள் தொழிற் சங்க முயற்சிகளை ஆரம்பித்து நடத்தியபோது முல்லோயாச் சம்பவம் ஏற்பட்டது. அங்கே 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வேலை நிறுத்தமும் கலவரமும் ஏற்பட்டன. தோட்டப்பகுதிகளில் ஒன்றன்பின் ஒன்றாக வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் இடதுசாரிகளைக் கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பித்தது. தோழர்கள் N. M. பெரேரா, பிலிப் குணவர்த்தனை, கொல்வின் R. த. சில்வா, எட்மன் சமரக்கொடி முதலானோர் கைதுசெய்யப்பட்டதும், லெஸ்லி தலைமறைவாயிருந்து அலுவல்களை நடத்தி வந்தார். அவரை அகப்படுத்துவதற்கு ஆங்கிலேய பொலிசாரால் இயலவில்லை. அவருடைய அழகான நிழற்படத்தைப் பொலிசு நிலையங்களில் தொங்கவிட்டு அவரைத் தேடுவாராயினர்.

ஜனசாகித்திய பத்திரிகை அரச துரோகஞ் செய்து விட்டது என்று குற்றஞ் சாட்டிய அரசாங்கம், அதன் ஆசிரியர் பெனற் சில்வாவையும் தோழர் விக்கிரமசிங்காவையும் கைதுசெய்து மாத்துறை நீதிமன்றத்தில் விளங்கியபின் அவர்களைப் பிணையில் விட்டது. அதனை

யடுத்து ஐக்கிய சோசலிசக்கட்சியொன்று உருவாக்கப்பட்டதும், M. G. மெனடிஸ், W. அரியரத்தின C. சங்கர் முதலானோர் அதில் பணி புரிந்தனர். அவர்களுக்கு நாட்டில் அதிக ஆதரவு இருந்தது. அதனால் தொழிற்சங்க அலுவல்களும் நல்ல முறையில் நடைபெற்ற காலத்தில் எப்படியாவது விக்கிரமசிங்கவைச் சிறையிலிடுவதை நோக்கியிருந்த அரசாங்கம் தொழிற்சங்கத் தகராறுகளைச் சாட்டாகக்கொண்டு, விக்கிரமசிங்காவையும் பெனற் சில்வாவையும் குற்றவாளிகளெனக்கண்டு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதித்தது.

பொதுவுடைமையாளருக்கு தேயிலை, றப்பர் தொழிலாளரிடையேயும், சீவல் தொழிலாளரிடையேயும் ஆதரவிருந்தது. அதனாற் போலும் பெரும்பாலான தொழிற் சங்கங்கள் ஒரு கொடிக் கீழ் ஒற்றுமைப்பட்டு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன இயக்கத்தில் சங்கமித்திருந்தன. தோழர் விக்கிரமசிங்க அவர்களின் முயற்சியால், தோழர் W. தகநாயக இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முதலாவது தலைவராகத் தெரியப்பெறும் பெருமையைப் பெற்றார். அக்காலத்திலேதான் மிகவும் குறைந்த விலையில் ஒரு சதத்துக்கு கம்கரு என்னும் சமசமாசக் கட்சிப் பத்திரிகையும், நவசக்தி என்னும் பொதுவுடைமைப் பத்திரிகையும் வெளியாயின.

முன்னர் 22-6-1941 இல் ஹிட்டலர் ருசியாவைத் தாக்கியமையாலும், பின்னர் டிசம்பர் மாதத்தில் யப்பானியர் மகாயுத்தத்தில் ஈடுபட்டதாலும் இலங்கையில் நிலைமை வெகுவாக மாறிற்று. பொதுவுடைமைவாதிகள் இலங்கையின் யுத்த நடவடிக்கைகளுக்குத் தம்மாலான உதவி ஒத்துழைப்பைக் கொடுக்கத் தலைப்பட்டனர். ஆனால் சமசமாசக் கட்சியினர் அது பேரரசு யுத்தந்தானே எனக் கூறித் தம் எதிர்ப்பைக் காட்டியே வந்தனர்.

இதற்குள் முன்னர் சிறையிலிருந்த சமசமாசக் கட்சிப் பிரமுகர்கள் சிறைச்சாலை ஊழியரிடையே மெல்ல மெல்லத் தம் கொள்கைகளைப் பிரசாரஞ் செய்து அவர்கள் மதிப்பையும் உதவியையும் பெறுவாராயினர். ஒரு நாள் அவர்கள் சிறைக் காவலாளியையும் உடன் கொண்டு சிறையை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர். அதனால் என்ன செய்வதென்றறியாத அரசாங்கம் நாட்டில் உள்ள சமசமாசக்கட்சித் தோழர்களைக் கைது செய்து சிறைச்சாலைகளை நிரப்பித் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டது.

தப்பியோடிய சமசமாசக் கட்சியினர் முன்னர் பஞ்சபாண்டவர் அஞ்ஞாதவாசத்தின்போது மாறு வேடம் பூண்டு வாழ்ந்தமை போல மாறுவேடமும் வேறு நாமமும் தரித்து யாழ்ப்பாணத்துக்கு

வந்து, கீரிமலையில் தீர்த்தமாடிச் சிறுப்பர் மடத்தில் ஆற அமர இருந்து இடியப்பமும் அருந்திக் கள்ளத்தோணியிலேறிப் புண்ணிய பூமியாய பரதகண்டத்தை அடைந்தார்கள். இந்தியாவில் அவர்கள் வெவ்வேறு நாமங்களோடு வெவ்வேறு வேலைகளும் பார்த்து வந்தார்கள்.

ஆள்பதி சேர் அண்றூ கல்டிகொட் அவர்களுக்குப் பின் சேர் ஹென்றி மொங்மேசன் மூர் ஆள்பதியாய் வந்தார். இவர் முப்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் குடியியற் சேவையிற் கடமையாற்றி யவர். கேம்பிரிச் சர்வகலாசாலையிற் பட்டம் பெற்று விற்பத்தி மாஞய் விளங்கியவருக்கு அரசியற் பரிபாலன அலுவல்களில் நிரம்பிய ஆற்றல் இருந்தது. அவர் இலங்கையை ஆண்ட ஆள்பதிகளுள் கடைசி ஆள்பதியாவர். முன்னர் 1798 ஆம் ஆண்டில் வந்த ஆள்பதி நோத் அவர்களிலிருந்து மேசன் மூர்வரை இலங்கையை 29 ஆள் பதிகள் ஆண்டனர். இலங்கையை ஆண்ட கடைசி ஆள்பதி என்ப தோடு இலங்கையில் உள்ள இராணி மாளிகையை அலங்கரித்த முதலாவது ஆள்பதிநாயகம் என்ற மகிமையும் சேர் மொங் மேசன் மூர் அவர்களுக்குண்டு. குடியேற்றநாடாய் இருந்து சுதந்திரநாடாய் மாறிய வேளையிலும் உத்தியோகத்தமர்ந்து அரசபணியலுவல்களைச் செய்தவர் மேசன் மூர் அவர்களேயாவர்.

சேர். மொங்மேசன்மூர் ஆள்பதியாகப் பதவி யேற்று வந்தபோது நைஜீரியா, கெனியா, சீராலோன் முதலாய நாடுகளில் அரசியற் பரிபாலன அலுவல்களைக் கண்டுவந்தார். அவருக்கு இலங்கை அரசியல் விவகாரங்களிலும் 1910 ஆம் ஆண்டு தொடக்கம் 1919 ஆம் ஆண்டுவரையும் இங்கிருந்த அநுபவமும் இருந்தது. அன்றிக் குடி யேற்ற மந்திரியாரின் உதவியாளராயும் இருந்தவருக்கு எல்லா அலுவல்களும் அறிமுகமாயே இருந்தன. அவற்றோடு குடியேற்ற மந்திரி ஒலிவர் ஸ்ரான்லி இலங்கையரசியற் பிரச்சினைகளைப்பற்றி முன்னறிவூட்டியும் அனுப்பினர்.

மேசன் மூர் வந்த காலத்திலேயே இலங்கைக்குச் சுதந்திரங் கிடைக்கப்போகிறதென்ற நற்சகுனங்கள் நிலவின. முன்னர் மந்திரி மார் கேட்ட அத்தனை கோரிக்கைகளையும் தகவுரை செய்யா விட்டாலும், தாராண்மைப்போக்கில் ஓரளவு சுதந்திர நிலைமை கிடைக்கக் கூடியதாக ஆள்பதி கல்டிகொட் தகவுரை கூறினர் என்பது வெளிப் டையாயிற்று. முன்னர் 1941 ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தங்கள் ஏற்படத்தான் வேண்டும் எனப் பிரகடனஞ் செய்த பிரித்தானிய அரசாங்கம், 1943 ஆம்

ஆண்டில் மே மாதத்தில் தங்கள் இரண்டாவது பிரகடனத்தில் மகா யுத்தம் ஓய்ந்ததும் இலங்கைக்குச் சுயவாட்சி வழங்குமளவில் அரசியலமைப்பு ஆராயப்பட்டுத் திருத்தப்படலாம் என அறிவித்தனர். தென்கிழக்காசிய இராணுவபீடத் தலைவராயிருந்த மவுண்பேற்றன் பிரபுவும் இலங்கையின் சுதந்திரத்தில் அபிமானம் உள்ளவராயிருந்தார் எனவே பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கசபை மந்திரிமாரை யாப்புத் திருத்தத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவித்தனர்.

மந்திரிமார் சபையினரின் யாப்பு வரைவு 2-2-44 இல் ஆள்பதி கல்டிகொட் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அவர் அதனைக் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்புவதன்முன் அதன் உள்ளுடன் என்ன என்பதைச் சிறுபான்மையினர் அறிய அவாக்கொண்டனர். இந்நிலையில் என்ன செய்யலாம் என ஆள்பதி இருதலைக் கொள்ளியின் எறும்புபோல நின்ற காலையில் குடியேற்ற மந்திரியார் இலங்கைக்கு ஓர் அரசியல் விசாரணைச் சபையினரை அனுப்புவதாகவும் அவர்கள் மந்திரிகளின் யாப்பு வரைவை நுணுக்கமாக ஆராய்வார்கள் என்றும், அவ்வேளையில் சிறுபான்மைச் சமூகத்தவரின் அபிப்பிராயங்களை உசாவுவார்கள் என்றும், அரச யாப்பு எதுவும் மூடுமந்திரமாக அமைக்கப்படமாட்டாதெனவும் அறிவித்தார்.

மந்திரிமார் தங்கள் யாப்பு வரைவை அப்படியே ஆளபதி அனுப்புவதையும் அதை அப்படியே குடியேற்ற மந்திரியார் ஏற்றுக் கொள்வதையுமே அவாவி நின்றராகையால் சோல்பரி விசாரணைச் சபையை விரும்பவில்லை. எனவே அவர்கள் தங்கள் யாப்பு வரைவைப் பிறக்கீடு செய்து விசாரணைச் சபையினரையும் உத்தியோகபூர்வமாக ஒன்றியொதுக்கல் செய்துவிட்டு ஒப்பாசாரத்துக்காகத் தனிப்பட்ட முறையில் உணையாளருடன் அளவளாவி அரசியல் பேசினர்கள்.

ஹேர்வால் ரும்ஸ் போதம் என்னும் பழைய பெயருள்ள சோல்பரிப் பிரபுவின் தலைமையில் இலங்கைக்கு வந்த அரசியற் குழுவில் சேர் பிரடறிக் றீஸ் என்பாரும், சேர் பிரட்டறிக் பறேஸ் என்பாரும் இருந்தனர். றீஸ் அவர்கள் தென் வேல்ஸ் சர்வகலாசாலையின் அதிபதியாயும், பறேஸ் அவர்கள் தேசிய புகையிரதச் சேவையாளர் சம்மேளனத்தின் தலைவராயும் இருந்தவர்கள். சோல்பரி அவர்கள் பிரித்தானிய அரசாங்கத்தில் மந்திரியாயும் இருந்தவர். அவர் ஆணைச்சபைகளில் தலைவராயமர்ந்து அநுபவம் பெற்ற அறிவாளி என்பர்.

டொனமூர் அமைப்பை இலங்கையர் ஏன் விரும்பவில்லை என்பதற்குப் பல காரணங்கள் பேசப்படுகின்றன. இலங்கையில் உள்ள எல்லாச் சமூகத்தவரும் இறுதியில் இத்திருத்தத்தை எதிர்த்தார்கள்.

1 இதனை முன்னமே எதிர்த்த தமிழர் தமக்குப் வகுப்புவாதப் பிரதிநிதித்துவ அமைப்பில் இருந்தசெல்வாக்கு இத்திட்டத்தால் குறைந்தமையால் இதனை விரும்பவில்லை.

2. கண்டிச் சிங்களவர் தங்கள் மத்தியில் பெருகிவரும் இந்தியத் தமிழரின் வாக்குரிமைப் பலத்தால் தங்கள் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்துவிடும் என அஞ்சி இத்திட்டத்தை விரும்பவில்லை.

3. ஆங்கிலேயரின் செல்வாக்கு மேலும் இலங்கையில் அதிகரித்துக் கொண்டு போவதற்குச் சாதகமாயமைந்த இந்தத்திட்டத்தை முற்போக்குவாதிகளான சமசமாஜத் தோழர்களும் பொதுவுடைமைத் தோழர்களும் இளைஞர்களும் விரும்பவில்லை.

4. இதற்கு முன் இருந்த அமைப்புக்களைப் போலவே இதுவும் ஆங்கிலேயரின் குடியேற்றம் இலங்கை என்பதைக் காட்டிற்றேயல்லாமல் இலங்கைக்குச் சுயநிர்ணய முறைகளையோ அதைப் போன்றவற்றையோ அளிக்கவில்லை. சேர் இராமநாதன் பூரண சுய ஆட்சியையும், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ஆணிலப்பதம் என்னும் டொமினியன் அந்தஸ்தையுமே கோரினர்கள்.

5. இலங்கையருக்கு நிரம்பிய அதிகாரத்தைக் கொடுத்த இத்திட்டம் போதிய பொறுப்பை அளிக்கவில்லை. பொறுப்பில்லாத அதிகாரத்தை ஆளதிகாரமாக்குவதையே சிங்களப் பெரியார்கள் அவாவி நின்றார்கள்.

6. சட்ட நிர்வாகசபையில் பிழைகள் அதிகமாயிருந்தன. அதற்குப் பதிலாக மந்திரசபை அமைக்கப்பட்டால் கூட்டுப் பொறுப்பு ஏற்பட்டு ஒருவர் எல்லோருக்கும், எல்லோரும் ஒருவருக்கு என்ற அமைப்பு ஏற்படும் என எதிர்பார்த்தனர்.

7. நிர்வாகசபைகள் அலுவல்களை ஆராய்வதற்கு அதிக நேரம் எடுத்தமையால் அரசாங்கம் தடைப்பட்டது.

8. ஏழு நிர்வாக சபைகளுக்கும் எவ்வித தொடர்பும் இன்றியே நடைபெற்றன.

9. ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் அவற்றுக்கு எவரும் பொறுப்பில்லாத நிலைமை நிலவிற்று.

10. அரசாங்க உத்தியோகத்தரான மூன்று காரியதரிசிகளும் தாங்கள் மந்திரிமார் சபையினர் என்பதை நினையாமல், மந்திரத்தின் உள்மந்திரம் போல மேலதிகாரங்களைக் கைப்பற்றி நிர்வாகஞ் செய்தனர்.

11. அம்மூவரும் அரசாங்க சபைக்கு பொறுப்பில்லாதவராயிருந்தது மல்லாமல், ஆங்கிலேயரின் நன்மைக்காகவும், பிரித்தானிய பேரரசின் நலத்துக்காகவுமே உழைத்தனர். அதனால் ஏழுமந்திரிமாருக்கும் இவர்களுக்குமிடையில் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டதும் உண்டு.

12. நிர்வாக சபைகளின் பத்துப் பிரிவுகளையும் இணைக்கும் மேலதிகாரம் என ஒன்று இருக்கவில்லையாதலால் அப்பத்துப் பேரும் தனித்தனியாகவே நடந்தனர்.

13. ஆள்பதி அவர்களின் மேலதிகாரம், சிறப்பதிகாரம், ஒதுக்கதிகாரம் என்பன அளவுகடந்தமையை சிங்களவர் விரும்பவில்லை.

14. அரசாங்கத்தின் முதுகெலும்பு எனத் தகும் பகிரங்க சேவையாளர் மூன்று காரியதரிசிகளாற் கண்காணிக்கப்பட்டமையை இலங்கையர் விரும்பவில்லை. பகிரங்க சேவைச்சபை சுதந்திரமாக அமைந்து அவர்களைப் பரிபாலித்தலே முறையாகும் என விரும்பினர்.

அத்தியாயம் 36

ஆள்பதிகளும் அவர்தம் அதிகாரமும்

இலங்கையில் ஆங்கிலேயருடைய பரிபாலனத்தின்போது நிலவிய ஆட்சிமுறையை ஆவ்வக் காலத்து நடைமுறைகளைக் கொண்டு மதிக்கும் போது பின்வருமாறு கணிக்கலாம், முதலில் 1798 ஆம் ஆண்டு தொடக்கம் 1833 ஆம் ஆண்டுவரையும் தனியாட்சி நிலவியது. அதன் பின் கோல்புறூக் கெமறன் அரசியற்றிருத்தத்தின் விளைவாக 1833 ஆம் ஆண்டு தொடக்கம் பனிக்குழுவாட்சி என்னும் அதிகாரிகள் ஆட்சி நடைபெற்றது. பின்னர் அம்முறையில் ஏற்பட்ட திருத்தங் காரணமாக 1921 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதிநிதிகளாட்சி நிலவியது. அதனைத் தொடர்ந்து டொனமூர்த் திருத்தத்தின் விளைவாக 1931 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கசபை மூலம் ஓரளவு பொறுப்பாட்சி நிலவியது. பின்னர் 1947 ஆம் ஆண்டு முதலாகச் சோல்பரி அரசியற் றிருத்தத்தின் விளைவாகப் பாராளுமன்ற அமைப்பிலே 4-2-1948 தொடக்கம் சுதந்திராட்சி நடைபெறுகிறது.

ஆரம்ப காலத்திலே ஆள்பதி ஆங்கிலேய அரசரின் பிரதிநிதியாகவே இருந்தார். பின்னர் இலங்கை முடிக்குரிய நாடாகப் பதியப்பட்டுக் கோல்புறூக் திருத்தம் ஏற்பட்டபின் ஆள்பதியின் அதிகாரம் சிறிதளவு குறைக்கப்படலாயிற்று அவர் ஆங்கிலேய அரசப்பிரதிநிதி எனவே மதிக்கப்பட்டார்

இலங்கையை ஆட்சி செய்த ஆள்பதிகளுள் அதி கௌரவப் பட்டம் பெற்று மாட்சிமை தங்கிய மன்னரவையிலும் மகாராணியாரவையிலும் கோமறைக் கழகவுறுப்பினராக மதிக்கப் பெற்றவர்களும் இருந்தார்கள். அவர்கள் சேர். தோமஸ் மெயிற்லன், சேர் ரேபேட் வில்மட் ஹோல்டன், ஸ்ரூவாட் மக் கென்சி, வைக்கவுண் ரொறிங்ரன், விலியம் ஹென்றி கிரகரி, சேர். வெஸ்ற் றிச்வே, வைகவுண் சோல்பரி ஆகியோராவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய சட்டசபையின் பிரதம புருடராய் விளங்கியவர் ஆள்பதி அவர்களே. அவரே அரசாங்கமாகிய கோபுரவளிவின் பிரதான கல். அவரே சட்டசபையின் தலைவராயும் வாசகராயும் இருந்தார். அவருக்கு ஆதரவாளர் இருவர் என்றும் அவர் சொற்படி நடக்கவும் அவர் நன்மையைக் காப்பாற்றவும் ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் குடியேற்றச் செயலாளரும் சட்டத்துறை நாயகமுமாவர்.

ஆள்பதியின் அதிகாரமும் செல்வாக்கும் அவரவர் காலத்துக்குத் தக்கதாக வெவ்வேறு அமைப்பினையுடையதாக இருந்தன. ஆரம்ப காலந் தொடக்கம் 1830 ஆம் ஆண்டுவரையும் ஆள்பதியே இலங்கை முழுவதுக்கும் பிரதம படைத் தலைவராகவும் சட்டத்துறை, சட்ட நிறைவேற்றுத்துறை ஆகிய பகுதிகளின் பிரதம அதிகாரியாகவும் இருந்தார். அவர் பெரும்பாலும் வல்லாளனாகவே இருந்தார். அவரே சிவில் நீதிப் பகுதியின் தனிப்பெருந் தலைவராக இருந்தார். அன்றி கண்டிப் பகுதிகளில் கிறிமினல் பகுதிகளுக்கும் தலைவராய் இருந்தார். நாட்டுமக்கள் அரசுக்குச் செய்யும் இராசகாரியம் என்ற சேவைக் கடமையைக் கொண்டு, அவர் எவரையும் சேவை செய்யும் வண்ணம் கட்டளையிட்டு நெருக்கவும், அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயிக்கவும் விரும்பினால் அதைக் கொடுக்கவும், விரும்பாவிட்டால் அதனை மறுக்கவும் அதிகாரம் உள்ளவராய் இருந்தார். இலங்கையின் வர்த்தகப் பகுதியைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்துக்கு இருந்த ஏகபோக உரிமையினால் ஆள்பதி அளவுகடந்த செல்வாக்குள்ளவராயிருந்தார். அவர் எந்த நீதிமன்றத்திலும் எத்தகைய குற்றத்திற்காகவேனும் எவராலும் சாட்டப்படாதவராயும் இருந்தார். அவர் தாம் நினைத்த மாத்திரத்தில் எவரையேனும் சிறை செய்யவோ நாடுகடத்தவோ அதிகாரம் வாய்ந்திருந்தார். அவருடைய செயலுக்கு விளக்கமோ காரணமோ எவருங் கேட்க இயலாத நிலைமை நிலவியது.

அத்தகைய ஆள்பதியின் அதிகாரங்கள் 1830 ஆம் ஆண்டுக்குப் பின் குறைக்கப்பட்டன. அவர் எவரையும் சிறை செய்யவோ நாடு கடத்தவோ இருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. அதன்பின் 1832 ஆம் ஆண்டு தொடக்கம் இராசகாரிய முறையும், ஏகபோக வர்த்தக உரிமையும் நீக்கப்பட்டன. உயர் நீதிமன்றத்தின் நடைமுறையினால் அவருடைய நீதாசன அதிகாரம் நீக்கப்பட்டது. சட்டக் கழகமும் சட்ட நிருவாகக் கழகமும் ஏற்படுத்தப்பட்டதால் அவர் அக் கழகங்களோ ஆலோசித்தே காரியங்களைச் செய்யவேண்டியவராயினர்.

காலப் போக்கில் ஏற்பட்ட பிரயாணப் போக்கு வரத்து வசதிகள் காரணமாக ஆள்பதியினுடைய அதிகாரங்கள் குறைய வாரம்பித்தன. போக்கு வரத்து வசதிகள் நல்ல முறையில் ஏற்பட்டதால் குடியேற்ற நாடுகளின் மந்திரியார் ஆள்பதிகளைக் கட்டுப்படுத்த வழிகள் உண்டாயின. புகைக்கப்பல்கள் 1841 ஆம் ஆண்டு தொடக்கம் ஓடத் தொடங்கியதால் லண்டனிலிருந்து ஒரு மாத காலத்தில் தபால்கள் இலங்கைக்குக் கிடைக்கக் கூடியதாய் நிலைமை இருந்தது. சுவெஸ் கால்வாய் வெட்டப்பட்டபின் மூன்று வாரங்க

ளில் தபால்கள் கிடைக்கக் கூடியதாய் இருந்தது. பின்னர் 1870 ஆம் ஆண்டளவில் கடலடியில் கேபிள் தந்திக் கம்பிகள் அமைக்கப்பட்ட தால் குடியேற்ற நாடுகளின் மந்திரியார் ஆள்பதியுடன் நேரடியாகப் பேசக்கூடியதாய் இருந்தது. இங்ஙனம் அமைக்கப்பட்ட இவையாவும் ஆள்பதியின் அதிகாரங்களை ஓரளவுக்குக் குறைத்தனவேனும் அவர் அரசாங்கமாகிய கோபுரவளைவின் பிரதான கல்லாக இருந்தார். அவரே அரசாங்கத்திற்கு மூலபுருடர். நல்லாட்சிக்கும் வல்லாட்சிக் கும் அவரே நாயகம். அவரே அரசாங்கத்தின் குரல். அவரே சட்டக் கழகத்தின் தலைவர்.

இலங்கையில் ஏற்பட்ட பிரயாணவசதிகள் காரணமாக அவர் தமது கீழ் உத்தியோகத்தருடன் நெருங்கிய தொடர்புகொள்ள வசதியாய் இருந்தது. இவற்றைவிட எவ்வளவுக்குத்தான் குடியேற்ற நாடுகளின் மந்திரியார் ஆள்பதிக்கு மேற்பட்ட உத்தியோகத்தராய் இருந்தாரேனும் அவர் கொழும்பிலிருந்து 7000 மைல் தூரமுள்ள லண்டனில் வாழ்ந்தமையால். இலங்கையில் இலங்கையரோடு நேரில் தொடர்பு கொண்டு வாழ்ந்த ஆள்பதியே அதிகாரமுள்ளவராய் இருந்தார். ஆங்கிலேயர் பரிபாலன காலத்தில் இலங்கையில் ஆட்சி செய்த 29 ஆள்பதிகளுள் இரண்டே இரண்டு ஆள்பதிகளே ஆட்சித் திறனில்லாதவர்கள் எனக் குடியேற்ற மந்திரிகளால் திருப்பியழைக் கப்பட்டார்கள். அல்லாமலும் குடியேற்ற மந்திரியார் இலங்கையின் நல்லாட்சிக்கு 1829 ஆம் ஆண்டில் கோல்புறூக் குழுவினரதும். 1927 ஆம் ஆண்டில் டொனமூர் குழுவினரதும் ஆலோசனையைக் கேட்டமை தவிர ஏனைய காலங்களில் ஆள்பதிகளுடைய ஆலோ சனைகளையே கேட்டு ஆவன செய்து வந்தார்கள் என்பதால், இலங் கையில் ஆள்பதியின் அதிகாரம் அதிகம் என்றே கூறவேண்டும்.

ஆள்பதியின் கடமையைக் குறித்து 2-7-1907 இல் ஆள்பதி பிளாக் எழுதியவை கவனிக்கற் பாலது.

''இத்தீவின் ஆள்பதி என்ற முறையில் நான் இந்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்குஞ் சென்று ஆங்காங்குள்ள மக்களை நேரில் கண்டுள் ளேன். அவர்கள் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற என்னால் ஆவன செய்துள்ளேன். இன்னும் ஆண்டுதோறும் எனக்கு வரும் 12000 கடிதங்களுக்குக் கவனஞ் செலுத்தியும் உள்ளேன். ஆகவே இத்தீவின் ஆள்பதியின் கடமைகள் மிக முக்கியமானவை. அவை ஆள்பதியின் முழுச் சக்தியையும் வேண்டி நிற்பவை. இவற்றோடு ஆட்சியில் கொள்கைப் பிரச்சினைகளைக் கவனிக்கவும் மாற்றங்களைச் செய்யவேண்டியும் இருந்தது.''

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் குறூ–மக்கலம் திருத்தத்தின் பின்னரும் ஆள்பதியின் நிலை பலபடிகளிலும் முன் போலவே இருந்தது. என்றாலும் சில சம்பிரதாயங்கள் மரபுகளில் மாற்றங்கள் ஏற்படலாயின. நாட்டின் நிலைபேறான நல்லரசுக்கு ஆள்பதி எதுவிதத்திலும் இன்றியமையாதவர் என்றதாலும், அவரே அரசுக்குப் பொறுப்பானவர் என்றதாலும் மரபுகள் சம்பிரதாயங் களில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் ஆள்பதி குறைந்த அதிகார வலுவுள்ளவராய போதிலும் பிரதான அம்சமாகவே அவரிருந்தார்.

ஆள்பதி நடைமுறைக்குக் கொண்டுவர விரும்புவனவற்றை யெல்லாம் சட்டசபையில் எடுத்துரைக்கும்போது, சட்ட நிறைவேற்று சபையின் அறிவுரையிலும் தகவுரையிலும் குடியேற்ற மந்திரியின் அநுமதியிலும் அதிகமாகத் தங்கியிருக்கவேண்டியவராஞர். அதனல் குறூ மக்கலம் திருத்தம் முதலாக ஆள்பதி மனிங் அவர்களின் முத லாவது திருத்தமீருகவுள்ள 1912–1921 காலத்தில் ஆட்சி செய்த ஆள்பதிகள் சட்டசபை வைகல்களில் நடைபெற்ற விவாதப் பிரதி வாதங்களிலும், சட்டநிறைவேற்று சபையின் அலுவல்களிலும் நிரம் பிய கவனஞ் செலுத்திப் பங்குபற்றி வந்தனர்.

இக்காலத்திலேதான் அநுபவம் குறைந்த ஆள்பதி சாமஸ் ஆட்சி செய்தார். அவர் காலத்திலே தான் தொல்லைகள், குழப்பங்கள், கல கங்கள் நடைபெற்றன. ஆனல் அவருக்குப் பின்வந்த ஆள்பதி அண் டர்சன் பழைய வடுக்களை நீக்க அரும்பாடுபட்டும், பொதுமக்களை ஆங்கிலேயர் ஆட்சியில் நம்பிக்கை வைக்கச் செய்வதற்கு முயற்சி செய்தும் ஆட்சி செய்தார். எனவேதான், சட்டசபையின் உத்தி யோகப் பற்றற்ற அங்கத்தவர் யாவரும் ஒன்று சேர்ந்து அரசாங்கத் தின் போக்கை எதிர்க்காமல், சிலர் ஆள்பதியின் பக்கஞ் சாருவாரா யும் இருந்தனர். அங்ஙனம் அவர்கள் ஆள்பதியின் பக்கஞ் சார்ந் தமை ஆள்பதியின் அதிகாரத்தைக் கருதியே எனவுட கூறுவர். அஃது அவ்வாறுயினும் ஆள்பதி உத்தியோகப் பற்றற்றவர் பக்கஞ் சார்ந்து அவர்கள் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து விட்டுக் கொடுத்தமையும் உண்டு. அதுவும் குடியேற்ற நாட்டு மந்திரியார் கற்பித்தவண்ணம் ''உத்தியோகப் பற்றற்றவர் கோரிக்கை போரசுக் கொள்கையைப் பாதிக்காமல் இந்நாட்டு உத்தம பரிபாலனத்துக்கு உகந்ததாயும் இன்றியமையாததாயும் இருக்குமெனக் கண்டால், ஆள் பதி அதனை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். என இருந்தமையால்'' எனவுங் கூறுவர்.

ஆள்பதி மக்கலம் இந்தியாவில் இராசப் பிரதிநிதிகள், ஆள் பதிகள், இளவரசர்கள், மன்னர்கள், பிரதானிகள், பொதுமக்கள் என் றித் திறத்தவர் கோலாகலமாகக் கூடும் தர்பார் எனப்பட்ட ஆலோசனைக் கூடத்தை இலங்கையிலும் கூட்டினர். அதனல் 1908, 1909, 1910, 1912 ஆகிய ஆண்டுகளில் தர்பார் கூடின. அதன் பிரகாரம் பொதுமக்களுடன் ஆள்பதி தொடர்பு கொண்டு பிர தானிகள் மூலம் அவர்களுடைய அபிலாசைகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டதென்றும், அவற்றுக்குரிய முறையில் சட்டசபையில் சட் டஞ் செய்ய வசதியாகும் என்றும் கருதினர். அன்றி அம்முறை தமக்குப் பின்வரும் ஆள்பதிகளுக்கும் சாதகமாயிருக்கும் என மக்க லம் கருதினரேனும் அம்முறை அவர் காலத்திலே ஆரம்பித்து அவர் காலத்தோடேயே நின்றுவிட்டது. அது நிற்க.

இக்காலத்து ஆள்பதிகள் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிக ளோடு கலந்து பேசி இருபகுதியாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய பல அலுவல்களைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார்கள். அன்றி 1917 ஆம் ஆண்டில் ''யுத்தக்கடன் எடுப்பு'' சம்பந்தமான அலுவலில் உத்தி யோக அங்கத்தவர் மூவருடன் உத்தியோகப் பற்றற்றவர் அனைவரை யும் ஆள்பதி நியமித்துக் கருமமாற்றிய நல்ல முறையைப் பாராட்டிக் கௌரவ தமிழ் அங்கத்தவர் 13-6-1917 இல் பேசியுள்ளார்.

அவர் பேசியபோது இலங்கை அரசாங்கம் இவ்வலுவலைச் சன நாயக ரீதியில் நடத்தியதென்றும், இந்திய அரசாங்கத்தில் இராசப் பிரதிநிதி தன் விருப்பத்துக்கே நடத்தினர் என்றும் குறிப்பிட்டமை இங்கே கவனித்தற்பாலது.

இதே போன்று வேறொரு சந்தர்ப்பத்தில் இலங்கையர் பிரதிநிதி யொருவர் 11-12-1918 இல் பேசியபோது தாம் ஆள்பதி மனிங் அவர்களிடம், ''ஐயா இலங்கை அரசியல் அலுவல் காரணமாக இங்குள்ள பிரதம காரியதரிசி, நிதியாளர் முதலியோரின் ஆலோ சனையை விட்டு, இந்நாட்டுப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்குத் தக்கதாக அரசகருமங்களைச் செய்வீராக'' என முறையிட்டபோது அங்ஙனமே செய்வதாக ஆள்பதி கூறியதாகப் பாராட்டிப் பேசினர்.

இக்காலத்திலே ஆள்பதிகளின் வரம்பிகந்த அதிகாரத்தை மட்டுப்படுத்தவோ தடைசெய்யவோ பல சங்கங்கள் இங்கிலாந்தி லும் இலங்கையிலும் கூட்டப்பட்டன. ஆள்பதி மக்கலத்தின் போச்சையே பொதுமக்கள் வெறுத்து விண்ணப்பங்கள் எழுதிக் குடியேற்ற மந்திரியாருக்கு அறிவித்தார்கள். இங்ஙனம் எழுதப்பட்ட

நிருபங்களில் ஒன்று மக்கலம் செய்த தகவுரைக்கு மாருனது. மக்கலம் இலங்கையர் அபிப்பிராயத்தை சட்டசபையில் கூறுவதற்கு ஒரு படித்தவரை நியமிக்கலாம் எனக் குடியேற்ற மந்திரிக்குத் தகவுரை எழுதினுர். அதையிட்டுத் திருப்தியடையாத பொதுமக்கள் இலங்கையர் பிரதிநிதியைத் தேர்தல் மூலம் தெரிதல் வேண்டும் என்றும், நியமன முறையில் இடம் பெறலாகாது என்றும் குடியேற்ற நாட்டு மந்திரியாருக்கு விண்ணப்பித்தார்கள். எனவே தான் குடியேற்ற மந்திரியார் படித்த இலங்கையர் பிரதிநிதியொருவர் தெரியப் படலாம் எனத் திருத்தஞ் செய்துவிட்டார்.

இங்ஙனம் குடியேற்ற மந்திரியார் செய்த திருத்தங் காரணமாகத் தமது அதிகாரங் குறைந்துவிட்டது என்றே ஆள்பதி மக்கலம் கவலைப்பட்டார். ''மக்கள் சமர்ப்பித்த கோரிக்கையை ஏற்று இனப்பாகுபாடு காட்டாது ஆங்கிலம் பயின்ற எல்லாச் சமூகத்தினருக்கும் பொதுவான பிரதிநிதித்துவம் தேர்தல் மூலம் அளித்தமையால் நான் படுகுழியில் வீழ்த்தப்பட்டவன் போலாகின்றேன்'' என்று ஆள்பதி மந்திரியாருக்கு எழுதியதும் ஈண்டுக் குறிக்கற்பாலது.

மக்கலத்துக்குப் பின்வந்த ஆள்பதி பொதுசன அபிப்பிராயத்துக்கும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவருக்கும் செவிகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாயிற்று. திருத்தப்பட்ட சட்டசபையில் தெரியப்பட்டுவந்த பிரதிநிதிகள் தங்கள் வாக்காளரின் நன்மை கருதிச் சட்டசபையில் பேசுவாராயினர். பொன்னம்பலம் இராமநாதன் சிங்கள முஸ்லிம் கலகத்தின்பின் தமக்குச் சிங்கள மக்கள் எழுதிய பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களைச் சட்டசபையில் சமர்ப்பித்து ஆள்பதியின் அலுவல்களை வன்மையாகக் கண்டித்தார். மக்கள் பிரதிநிதி என்றமையால் அவர் அங்ஙனம் பேச அவருக்கு பரிபூரண உரிமை இருந்தது. அது அவருடைய கடமையாயும் இருந்தது. ஆகவே ஆள்பதியின் பொறுப்பு முன்னர் போல இராணிமாளிகையில் சுகபோகங்களில் இருக்காது மக்களின் குறை நிறைகளை ஆராயும் பொறுப்பான வேலையாய் இருந்தது.

இன்னும் ஆள்பதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமைக்குச் சான்றுக இன்னேர் அலுவலையும் இங்கே குறிக்கலாம். ஆள்பதி முன்னர் தமக்கு விருப்பமானவரை நியமன அங்கத்தவராக நியமிக்கலாம் என இருந்தமை. இப்போது சங்கங்கள் தெரியும் அங்கத்தவரையே நியமிக்க வேண்டும் என்றும், ஆள்பதி தாமாக நியமிக்கின்றபோதிலும் ஒருவரைத் திரும்ப நியமிக்காமல் வெவ்வேறு பேர்வழிகளை நியமித்தல் வேண்டும் என்ற விதியும்

ஏற்பட்டது. இன்னும் ஆள்பதியின் கையொப்பம் பெற்ற பின்பே சட்டங்கள் நடைமுறைக்கு வரலாம் என்பது முன்னரும் இன்றும் விதி. ஆனால் முன்னர் ஆள்பதி வர்த்தமானியில் பிரசித்தங் கொடுத்த பின்புதான் சட்டம் நடைமுறைக்கு வரலாம் என இருந்த விதி மக்கலம் காலத்தில் விலக்கப்பட்டது.

சட்டசபையில் பிரேரணைகள் கொண்டுவருபவர்கள் அப்பிரேரணை சம்பந்தமாக ஆள்பதியின் அநுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்ற ஒழுக்கப் பிரமாணம் இருந்த போதிலும், ஆள்பதியிடம் அநுமதி பெறுமல் உத்தியோகப் பற்றற்றவர் பிரேரணைகளைக் கொண்டு வந்தபோது ஆள்பதி அவற்றைத் தடைசெய்யவில்லை. அவை பொதுநன்மை பயப்பனவாயின் அவற்றுக்கு அவர் ஆதரவளித்தே வந்தார். உதாரணமாக ஒரு பிரேரணையை இங்கே குறிப்பிடின், 19-11-1919 இல் திரு. கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம் "சிங்களம் தமிழ் ஆகிய சுதேச மொழிகளின் அபிவிருத்தியின் பொருட்டு நூலாசிரியரை ஊக்குவிப்பதற்கு உதவும் முகமாக வருடந்தோறும் 5000 ரூபா ஒதுக்கப்படல் வேண்டும்" எனப் பிரேரித்தவற்றை ஆள்பதி தன்னைக் கேளாமல் இதனைக் கொண்டுவந்தார் எனச் சீறுமல் அதற்குத் தம்மாலான உதவியைச் செய்வாராயினர். ஆனால் கரையோரப் புகைவண்டிப் பாதையோரமாக ஒரு நடைபாதையும் இருத்தல் வேண்டும் என ஐரோப்பியர் பிரதிநிதி பிரேரித்தபோது ஆள்பதி ஒழுங்குப் பிரமாணத்துக்கு அது அமையவில்லை எனக் கூறினர் என்று அறியக் கிடக்கிறது.

இனி மனிங் அரசியல் அமைப்பில் ஆள்பதியின் நிலைமையைப் பற்றியும் இங்கே ஆராய்தல் அவசியமாகிறது. ஏனெனில் இத்திட்டத்தில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தெரியப்பட்டவராயிருந்தமையோடு அவர்கள் பெரும்பான்மையினராயும் இருந்தார்கள். இவ்வமைப்பில் ஆள்பதியின் பொறுப்பு வேறுவிதமாக அமைவதாயிற்று. சட்டசபைக் கூட்டங்களைக் கோலாகலமாகக் கூட்டிவைக்கும் தலைவராக அவர் இருந்த போதிலும், அதன் நாளாந்த வைகல்களில் அக் கூட்டங்களுக்குத் தெரியப்பட்ட ஓர் உபதலைவரே தலைமைதாங்க வழி பிறந்தது. எனவே ஆள்பதி சட்டசபையில் பிரசன்னமாயிருக்கத் தேவையில்லாது போயிற்று.

இதன்பின் ஆள்பதி வழிகாட்டியாயும், ஆலோசனை கூறுபவராயும், உற்சாகப்படுத்துபவராயும் எச்சரிக்கை செய்பவராயும் இருந்தார். சட்டசபைக் கூட்டங்களிற் கலந்துகொள்ள அவருக்கு வாய்ப்பில்லாதபோதிலும், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரே

பெரும்பான்மையினராயிருந்தபோதிலும், ஆள்பதியவர்களே நாட்டின் நல்லாட்சிக்கும், ஒழுங்குக்கும், அமைதிக்கும் பொறுப்பாளியாக இருந்தார். ஆள்பதி உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவருக்கு ஆட்சி முறையைக் காட்டிக் கொடுத்தவராய் இருந்தார்.

இந்நிலையில் ஆள்பதியின் அதிகாரம் சட்ட வரம்புக்குட்பட்ட மன்னரின் அதிகாரம் போலவே இருந்தது. அவர் இலங்கை எங்கும் சுற்றிப் பார்த்து நாட்டின் நலன் விசாரிப்பவராயும் இருந்தார். அவ்வமையங்களில் நாட்டு மக்கள் தமக்களித்த வரவேற்பில் சமர்ப்பிக்கப் பட்ட விண்ணப்பங்களையும் பரிசீலனைசெய்து ஆவனசெய்ய வேண்டிய வராயினர். மனிங் திருத்தத்தின் பிரகாரம் ஆள்பதி சட்ட நிறை வேற்று சபையில் எவ்வித தொடர்புடையவர் என்பனவாதிய அலுவல்கள் 11-9-1920 இல் ஒரு பத்திரத்தில் குறிக்கப்பட்டன. சட்ட நிறை வேற்றுசபை ஆள்பதிக்கு ஆலோசனை கூறுவதற்கே நிறுவப் பட்டதாகவும், அதன் அங்கத்தவரை ஆள்பதி ஆலோசனை கேட்டல் வேண்டும் என்றும், சட்ட நிருபணசபை அங்கத்தவர் எவரையேனும் ஆள்பதி தடைசெய்து வைக்கலாம் என்றும், அங்ஙனம் தடைசெய் தமையை உடனே தகுந்த காரணங்களோடு குடியேற்ற மந்திரியாருக்கு அறிவித்தல் வேண்டும் என்றும், ஆள்பதி விரும்பினால் அவ்விடத்துக்கு வேறொரு அங்கத்தவரை நியமிக்கலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டன. ஆள்பதி தமக்கு ஆலோசனை கூறும் சட்ட நிறைவேற்று சபையில் உத்தியோக அங்கத்தவரான பிரதம காரியதரிசி, சட்டக் காரியதரிசி, மேல் மாகாண அதிபர் ஆகிய மூவரோடு வேறும் சிலரை நியமிக்கலாம் எனவும் அந்நியமனங்கள் குடியேற்ற மந்திரியாரால் ஆங்கீகரிக்கப்படல் வேண்டும் எனவும் நிலைமை இருந்தது.

அன்றிச் சட்டநிறைவேற்று சபைக்கு ஆள்பதியே தலைமை தாங்குதல் வேண்டும் எனவும், அவரே சபையைக் கூட்டும் உரிமையும் உடையவர் என்றும், அதன் கூட்ட எண் மூவருக்குக் குறையாதிருத்தல் வேண்டும் எனவும் இருந்தது. எனவே ஆள்பதியும், அவரின் பிரதம காரியதரிசியும், சட்டக் காரியதரிசியும் பிரதானமானவராயிருந்தனர் என்பர். சட்ட நிறைவேற்று சபையின் ஆலோசனையை ஆள்பதி காரணங்காட்டிப் புறக்கணிக்கலாம் என இருந்தபோதிலும், ஆள்பதி ஸ்ரான்லி, 'நான் ஆலோசனை இல்லாமல் ஆட்சி செய்ய இயலாதவனாய் உள்ளேன்'' என எழுதியுள்ளார். அதற்குக் காரணம் சட்ட நிறைவேற்று சபையில் இருந்த உத்தியோக அங்கத்தவர் பலர் பழுத்த அநுபவம் வாய்ந்தவராய் இருந்தமையேயாம். உதாரணமாக ஒருவரைக் குறிக்கின், 1908 ஆம் ஆண்டு தொடக்கமாக அச்சபையில் இருந்த மேல் மாகாண அதிபர் பிறேசர் என்பாரைக் குறிப்பிடலாம்.

நாட்டின் நல்லாட்சிக்குப் பொறுப்பான ஆள்பதி சட்ட சபைக்குத் தலைமை தாங்க இயலாது போனதும், அவர் கடமைகள் கடுமையாக இருந்தமையும் ஆள்பதி கிளிபோட்டுக்கு ஒரு மாதிரியா கவே இருந்தது. எனவேதான் அவர் தமது பதவிக் காலம் முடிவடை யுமுன் விலகிப்போனர் என்பர். மனிங்.டிவன்சயர் திருத்தத்தின்பின் ஆள்பதி நிதிக்குழுவின் ஆலோசனையைக் கேட்டு நடக்கவேண்டிய வராயிருந்தார். ஆனல் நிதிக்குழுவுக்கும் அவருக்கும் நேரடியான தொடர்பில்லாவிட்டாலும் அக்குழுவோடு நேரடியான தொடர்புள்ள பிரதம காரியதரிசியின் சாதுரியத்திலேயே ஆள்பதி தங்கி இருக்க வேண்டியவராஞர்.

ஆள்பதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரவலுவை அவர் தமது எண்ணம்போல உபயோகிக்க முடியாது. சட்டசபையில் உத்தி யோகப் பற்றற்றவர் கடுமையாக இருந்தபோது மாத்திரம் அவர் தமது அதிகார வலுவை உபயோகிக்கலாம். அவருக்கு 11-9-1920 இல் வெளியான அரசகட்டளையின் வண்ணம் பின்வரும் பத்துவகையான மசோதாக்களுக்குச் சம்மதம் அளிக்கக் கூடாது என்னும் கட்டுப்பாடு ஏற்பட்டது. அவை :

1. விவாகரத்துக்கான மசோதா.
2. ஆள்பதி அவர்களுக்குப் பொன்னே, பொருளோ, நிலமோ உபகரிக்க எழுந்த மசோதா.
3. இலங்கை நாணக முறையைப் பாதிக்கும் மசோதா. அல்லது வங்கிக் காசுத்தாள் சம்பந்தமான மசோதா
4. வங்கிகளை நிறுவுதல், மாற்றுதல், அதிகாரமளித்தல், நீக் குதல் என்றித்தரத்து மசோதா.
5. சுங்க வரியில் மாற்றம் செய்யவரும் மசோதா,
6. மாட்சிமை மிக்க மன்னர் பிரானின் உடன்படிக்கைக்கு முரணன மசோதா.
7. மாட்சிமை மிக்க மன்னர் பிரானின், தரை, கடல், ஆகாயம் எனவுள்ள படைகளின் சம்பந்தமான மசோதா.
8. பிரித்தானிய அரசின் கப்பற்போக்கு வர்த்தகம் வணிகம் சம் பந்தமான அலுவல்களைப் பாதிக்கும் மசோதா.
9. ஐரோப்பியரல்லாதாருக்குரிய கட்டுப்பாடுகள் நிபந்தனைகளை ஐரோப்பியருக்கும் விதிக்க முனையும் மசோதா.
10. மாட்சிமை மிக்க மன்னர் பிரானுல் முன்னர் சம்மதமளிக்க மறுக்கப்பட்ட ஏற்பாடுகளைக் கொண்ட வேறு மசோதா.

இன்னும் 1923 ஆம் ஆண்டுக் கோமறைக் கழகக் கட்டளைச் சட்டப்படி வழங்கப்பட்ட அதிகார வலுக்களும் ஆள்பதிக்கு உண்டு. சட்டசபையில் பன்னிரண்டு உத்தியோக அங்கத்தவர் இருக்கலாம் என்பது விதி. அதன் பிரகாரம் படைத்தளபதி, பிரதம காரியதரிசி, சட்டத்துறை நாயகம், இறை சேரித் தலைவர், தனதிகாரி ஆகிய ஐவரும் கட்டாயம் இடம் பெற வேண்டியவர்கள். இவர்களைவிட ஏனையோரை ஆள்பதி நியமிக்கலாம் என்பது அவருடைய வலு. இந் நியமனங்கள் குடியேற்ற மந்திரியாரின் ஆங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் என்பதும் விதியாயினும் அது ஒப்பாசாரமானதாயே இருந்தது. எனவே உத்தியோக அங்கத்தவர் 12 பேருள் 7 பேரை நியமிக்கும் அதிகாரம் ஆள்பதியினுடையதேயாம். இன்னும் நாட்டின் நல்லாட்சிக்கு உகந்தது எனக் கருதப்படும் மசோதாக்கள் உத்தியோக அங்கத்தவரின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றாலே அவை சட்டமாகப்போதும் என்பதும் அரசகட்டளையாற் றுபிக்கப்பட்டிருந்த வலுவாகும். எனவே உத்தியோக அங்கத்தவருள் முன் சொன்ன ஐவரும் எதிர்த்தாலும் ஆள்பதி தாம் நியமித்த எழுவருதவிகொண்டு அலுவல்களைச் செய்யும் செல்வாக்கு நிலவியது என்றே கருதவேண்டும்.

இன்னும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் மூவரை நிய மிக்கும் செல்வாக்கும் ஆள்பதிக்கிருந்தது. ஆகவே ஆள்பதிக்குச் சட்டசபையில் சமுகமளிக்கும் உரிமை இல்லாவிட்டாலும் அவருக்கு ஆதரவளிக்கும் உத்தியோக அங்கத்தவர் 12 பேரும், நியமன அங்கத் தவர் 3 பேரும், ஐரோப்பியர் 3 பேரும், பறங்கியர் இருவரும் என இருந்த 20 பேர்வரை ஆதரவளித்தே வந்தார்கள். இந்த 20 பேர் உதவியாலே அவர்களைத் தெரிவுக் குழுக்களில் தந்திரமாக நியமித்து ஆள்பதி தமது செல்வாக்கைக் காட்டி வருவாராயினர்.

இங்ஙனமாக ஆள்பதி ஆங்கிலேய அரசப் பிரதிநிதியாக இருந் தமையால் அவர்அரசாங்க விழாக்களிலும், கோலாகல வைபவங் களிலும் கொண்டாட்டங்களிலும் கூடிய பங்கு பெறுவாராயினர். அவர் மன்னருடைய பெயரால் தகுதிவாய்ந்த மக்களுக்குப் பட்டங்கள் பரிசுகள் வழங்குவதும், பிறநாட்டு அரசர், மந்திரிமார், பிரதானிகள் இலங்கைக்கு வந்ததால் அவர்களை உபசரிப்பதும் வழக்கமாய் இருந்தன.

பின்னர் டொனமூர் அரசியற்றிருத்தத்தின் பிரகாரம் அர சாங்க சபை தாபிக்கப்பட்ட பின் ஆள்பதியின் அதிகாரங்கள் பொறுப்புக்களிற் சில மாறுதல்கள் அடைந்தன. ஆள்பதி அரசாங்க சபையின் வைகலை ஆரம்பித்து வைக்கவும், அதில் நியமன அங்கத்

தவரை நியமிக்கவும், சபை முதல்வர், மந்திரிமார் முதலானோரை ஆங்கீகரிக்கவும்; சபையின் நடைமுறைகளைக் கண்காணிக்கவும், சட்டங்களுக்கு ஒப்பாசாரச் சம்மதமளிக்கவும், தடைசெய்யவும், வேண்டிய நேரத்தில் சபையைக் குலைக்கவும் அதிகாரமிருந்தது. அவர் ஆலோசனை கூறுபவராயும் உதவியாளராயும் மேலதிகாரியாயும் கடமையாற்றினர்.

இன்னும் இலங்கை அரசியற் பரிபாலனத்தின் பகுதிகளில் உத்தியோகத்தரை நியமிக்கவும், உயர்த்தவும், மாற்றவும், நீக்கவும், இளைப்பாற்றவும் ஆள்பதிக்கு விசேட அதிகாரங்கள் இருந்தன. என்றாலும் அவர் பகிரங்கசேவைச் சபையின் ஆலோசனையின் வண்ணமே இவ்வாறு செய்தல் வேண்டுமெனவும் இருந்தது.

எவ்வாறாயினும் ஆள்பதி தமது ஆங்கீகாரத்தை அளிக்கக் கூடாத அலுவல்களும் இருந்தன. விவாகரத்து கைக்கூலி, பகிரங்கசேவையில் உள்ள உத்தியோகத்தைப் பாதிக்கும் அலுவல்கள், நீதி சம்பந்தமான அலுவல்கள் சமய சம்பந்தமான சச்சரவுகள் என்பனவாதியவற்றில் ஆள்பதி தமது ஆங்கீகாரத்தை வழங்குதலாகாது.

இன்னும் ஆள்பதி மசோதாக்களுக்கு ஆங்கீகாரங் கொடுக்கவும், கொடாது விடவும், மன்னர்பிரானின் ஆராய்வுக்கெனத் தவணையிடவும், சட்டங்களை நடைமுறைக்கு முன் ஆறு மாதகாலம் தடை செய்யவும், அரசியற் சபையில் மீள ஆலோசிக்குமாறு திருப்பியனுப்பவும் அதிகாரமுள்ளவராவர். ஆள்பதி குடியேற்றநாட்டு மந்திரியாருக்குக் கட்டுப்பட்டவராதலால் எவ்விடயம் பற்றியும் குடியேற்ற மந்திரியாருக்குத் தெரிவித்தல் வேண்டும். இன்னும் அரசியற் குழப்பங்கள், கிளர்ச்சிகள் எதிர்க்கிளர்ச்சிகள், கலகங்கள் முதலியன தோன்றுங் காலங்களில் ஆள்பதியே அரசியற் பொறுப்பு முழுவதையும் ஏற்று நடத்துவர். ஆனால் அக்காலவெல்லையில் நடக்கும் நடப்டிக்கையின் பூரண வரலாற்றைக் குடியேற்ற மந்திரியாருக்கு விபரமாக அறிவிப்பார்.

இங்ஙனம் டொனமூர் அரசியற்றிட்டத்தில் அவர் சட்டத் திட்டங்களுக்கு அமைய நடக்கவேண்டிய உத்தியோகத்தராஞர். அவர் அரசியற்றிட்டத்தைக் காவல் காப்பவராகவே இருந்தார். அரசாங்க சபை அங்கத்தவர் தவறுன வழியிற் போனால் ஆள்பதி குறுக்கிட்டு அவரை திருத்துவார். அன்றி அரசாங்கசபையோ மந்திரிமார் சபையோ அவசரமாக ஏதாவது செய்துவிடாமல் தடை சொல்லுபவராகவும் அவரிருந்தார். மந்திரிமார் தமது அதிகாரத்தை அத்து

மீறிப் பிரயோகிக்காமலும், துர்ப்பிரயோகஞ் செய்யாமலும் கண் காணிப்பதற்கு ஆள்பதிக்கு மேலதிக ஒதுக்கதிகாரம் வழங்கப்பட்டது. இவ்வதிகாரத்துக்கு அரண் செய்யவே மூன்று காரியதரிசிகளுக்கும் பெரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டு மந்திரிமார் சபையில் இடம் வழங்கப்பட்டனர்.

எனவே அரசாங்கசபை அங்கத்தவர்களுக்குப் பேசுவதற்கும் அவர்களை அழைத்து ஆலோசனை கூறுவதற்கும் ஆள்பதிக்கு அதிகார உரிமை வழங்கப்பட்டது. அத்துடன் முன்னர் அவர் சம்மதங் கொடுக்க மறுத்து ஒதுக்குவதற்குரியதான பத்துவகையான மசோதாக்களில் ஒன்பதாவது பிரிவைச் சேர்ந்த ஐரோப்பியரல்லாதாருக்குரிய கட்டுப்பாடுகள் நிபந்தனைகளை ஐரோப்பியருக்கும் விதிக்க முனையும் மசோதாவை நீக்கிவிட்டு மேலும் ஆறு வகைப்பட்ட மசோதாக்கள் அவற்றின் நிரையில் டொனமூர்த் திருத்தக் குழுவினரால் சேர்க்கப்பட்டன. அவை பின்வருமாறு:-

1. ஒரு சமூகத்தவருக்கோ, சமயத்தவருக்கோ இல்லாத சலுகையை வேறொருவருக்கு வழங்கும் மசோதா.
2. அரசாங்க ஊழியருடைய உரிமைகளையோ சலுகைகளையோ பாதிக்கும் மசோதா.
3. இலங்கையின் நிதிநிலைமையைப் பாதிக்கும் மசோதா.
4. இலங்கையின் பாதுகாப்பு, இராணுவம் அல்லது பொது மக்கள் பாதுகாப்பு சம்பந்தமான மசோதா.
5. வெளிநாட்டு வர்த்தகம், துறைமுகங்கள், கப்பற்போக்கு, இராணுவம், பேரரசு ஆகியவற்றைப் பாதிக்கும் மசோதா.
6. இலங்கையின் நீதி பரிபாலனத்தைப் பாதிக்கும் மசோதா.

இம்மசோதாக்கள் யாவும் ஆள்பதியின் ஒதுக்கதிகாரத்துக் குட்பட்டவை. இன்னும் தீமையுடையது எனில் அவர் கருதும் மசோதாக்களையும் அவர் ஒதுக்கிவைக்க அவருக்கு அதிகாரம் வழங்கப் பட்டது. அரசாங்கசபையில் நிறைவேற்றிய அத்தகைய மசோதாக்களை அவர் தடுத்து வைப்பதற்கும் அவருக்கு ஆறு விதமான வழிகள் குறிக்கப்பட்டன. அவை பின்வருமாறு:

1. அம்மசோதாவுக்கு நேர்முகமாக இசைவு தருதல்.
2. மன்னர் பிரானின் இசைவுக்குச் சமர்ப்பித்தல்.
3. மசோதாவைப் புனராலோசனைக்கு மறுபடியும் சபையில் விடுதல்.

4. அது முக்கியமானதெனக் கூறிச் சபையின் மூன்றில் ஒரு பகுதியாரின் சம்மதம் பெறல் வேண்டுமென உறுதிப்படுத்தல்.

5. இசைவு கொடுத்துவிட்டு அது ஆறு மாத காலத்துக்குள் நடை முறைக்கு வரலாகாது எனத் தடுத்தல்.

6. தமது இசைவு கொடுத்தலை முற்றுக மறுத்தல்.

ஆள்பதி தமக்கு மேலதிகாரியின்றித் தாமாகவே இவ்வதிகாரங் களைப் பிரயோகிக்கலாம். ஆனால் தமது முடிபைப்பற்றிய விபரங் களைக் குடியேற்ற மந்திரியாருக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டி யதும் அவருடைய கடமையாகும். இன்னும் அரசாங்கசபை நிறை வேற்றத் தவறினால் தாமே அவற்றைச் சட்டமாக்கவும் அவருக்கு அதிகாரம் இருந்தது. நிர்வாக சபைகளின் நிர்மானங்களையும் அவர் அறியவேண்டியவர். சட்டத்துறையில் அவருக்கு இருந்த அதி காரங்கள் சட்ட நிறைவேற்றுத் துறையிலும் வழங்கப்பட்டன. இன் னும் அரசாங்க உத்தியோகத்தர் எனப்பட்ட மூன்று காரியதரிசி களின் அலுவல்களுக்கும் ஆள்பதியே பொறுப்பானவர் என இருந்த போதிலும் அவர்கள் அரசாங்கசபைக்கே பொறுப்பானவரா யிருந்தனர்.

பேரரசின் நலம், நாட்டின் பாதுகாப்பு, குற்றவாளிகள் தண் டனை பெற்றவருக்குக் கருணை காட்டுதல், திணைக்களங்களின் பத் திரங்களைப் பார்வையிடுதல், அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்தல், அந்நிலையில் திணைக்களங்களைத் தனது பொறுப்பில் ஏற்று நடத்துதல் என்பனவாதிய ஆள்பதியின் அதிகாரங்களுள் சேர்ந்த வையாகும்.

எனவே தான் இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியைப் பற்றி விபரமாக அறிவதற்கு ஆள்பதிகள் வரலாறு அத்தியாவசியமாய் அமைந்தது என்பர். இலங்கை குடியேற்ற நாடாக இருந்த தானத் திலிருந்து பூரண சுதந்திர நாடாக உள்ள தானத்தை அடையும் காலம்வரை ஆட்சி செய்த ஆள்பதிகள் பல திறப்பட்டவராவர். சிலர் இலக்கிய கருத்தாக்களாயும், சிலர் அரசியற் பண்டிதராயும் சிலர் யுத்த வீரராயும் சிலர் ஆட்சித் திறன் மிக்கவராயும், சிலர் தாராண்மையாளராயும், சிலர் அடக்குமுறையாளராயும், சிலர் படைப்பாலனஞ் செய்தவராயும் இருந்தனர். சிலர் பெரிய இடத் திலிருந்து வந்தவராயும் சிலர் சின்ன உத்தியோகத்திலிருந்து பதவி உயர்ந்துவந்தவராயுமிருந்தனர். அவர்கள் எல்லோரும் இலங்கை சமூக காலாச்சார அரசியல் பொருளாதார அபிவிருத்தியடையத் தம்மால் ஆனவண்ணம் உழைத்தவராவர்.

இலங்கையை ஆட்சி செய்த ஆள்பதிகளின் பெயர்களையும் அவர்கள் பதவி வகித்த கால எல்லையையும் அறிந்து கொள்ளுதல் நல்லதாகும். அவர்கள் பெயர்களின்முன் மேன்மை தங்கிய எனக் கூறி வாசித்தல் சம்பிரதாயமும் கௌரவமுமாகும்.

1.	பிரடறிக்நோத்	...	1798-1805
2.	சேர் தோமஸ் மெயிற்லன்	...	1805-1811
3.	சேர் ரூபேட் பிரவுண்றிக்	...	1812-1820
4.	சேர் எட்வேட் பாண்ஸ்	...	1820-1822
5.	சேர் எட்வேட் பஜற்	...	1822-1822
6.	சேர் எட்வேட் பாண்ஸ்	...	1822-1831
7.	சேர் R. வில்மட் ஹோட்டன்	...	1831-1837
8.	J. A. ஸ்ரிவாட் மெக்கன்சி	...	1837-1841
9.	சேர் கொலன் கம்பல்	...	1841-1847
10.	ரொறிங்ரன் பிரபு	...	1847-1850
11.	சேர் ஜோச் அன்டர்சன்	..	1850-1855
12.	சேர் ஹென்றிவாட்	...	1855-1860
13.	சேர் சார்ள்ஸ் மெக்காதி	...	1860-1863
14.	சேர் ஹேர்குலிஸ் ரொபின்சன்	...	1865-1872
15.	சேர் விலியம் கிரிகொரி	...	1872-1877
16.	சேர் யேம்ஸ் லொங்டன்	...	1877-1883
17.	சேர் ஆதர் ஹமில்டன் கோடன்	...	1883-1890
18.	சேர் ஆதர் ஹவ்லொக்	...	1890-1895
19.	சேர் யோசப் வெஸ்ற் றிச்வே	...	1895-1903
20.	சேர் ஹென்றி பிளாக்	...	1903-1907
21.	சேர் ஹென்றி மக்கலம்	...	1907-1913
22.	சேர் ரூபேட் சாமோர்ஸ்	...	1913-1916
23.	சேர் யோண் அன்டசன்	...	1916-1918
24.	சேர் விலியம் மனிங்	...	1918-1925
25.	சேர் கூ. கிளிபேட்	...	1925-1927
26.	சேர் ஹென்றி ஸ்ரான்லி	...	1927-1931
27.	சேர் கிறேம் தொம்சன்	...	1931-1933
28.	சேர் றெஜினோல்ட் ஸ்ரப்ஸ்	...	1933-1937
29.	சேர் அன்றூ கல்டிகொட்	...	1937-1944
30.	சேர் ஹென்றி மொங்மேசன்மூர்	...	1944-1948

ஆள்பதிகளாய் அமர்ந்தவர்களுக்கு உதவியாளராயும், அரசாங்கத்தின் உயிர் நாடியாயும் இருந்துவந்த குடியேற்றச் செயலாளர் என்றும் பிரதம காரியதரிசிகள் என்றும் வழங்கிய உத்தியோகத்தர்களின் பெயரும் அவர் தம் கால எல்லைகளும் பின்வருமாறு.

1.	கிளே ஹோன்	...	1798
2.	வில்லியம் பொயிட்	...	1800
3.	R. அர்புத்நொட்	...	1801
4.	யோண் ரெட்னி	...	1806
5.	P. அன்ஸ்னுதர்	...	1833
6.	சேர் எமர்சன் ரென்னென்ற்	...	1845
7.	சேர் சார்ள்ஸ் மக்காதி	...	1851
8.	W. C. கிப்சன்	...	1860
9.	சேர் ஹென்றிரேணர் ஏவிங்	...	1860
10.	சேர் யோண் டக்லஸ்	...	1873
11.	சேர் ஆதர் நோனுஸ்பேச்	...	1878
12.	சேர் சிசில் கிளிமென்ரி சிமித்	...	1885
13.	சேர் எட்வேட் நுவல்வாக்கர்	...	1887
14.	சேர் எவரூட் பேடினன்ட் தேண்	...	1901
15.	சேர் அலெக்சாண்டர் அஸ்மோர்	...	1904
16.	சேர் ஹ கிளிபோட்	...	1907
17.	சேர் றெஜினோல்ட் எட்வேட் ஸ்ரப்ஸ்	...	1913
18.	சேர் கிறேம் தொம்சன்	...	1913
19.	சேர் சிசில் கிளிமென்ரி	...	1922
20.	சேர் ஆதர் ஜோர்ச் பிளச்சர்	...	1926
21.	சேர் பேணெட் போடிலியன்	...	1929
22.	சேர் கிறேம் ரைறல்	...	1936
23.	சேர் மாக்ஸ்வெல் வெடபோன்	...	1940
24.	கை. ஸ்ரான்லி வுட்மன்	...	1942
25.	ரெபேட் ஹரி டிறேற்றன்	...	1943—1947

இலங்கையில் காலத்துக்குக் காலம் பிரதமநீதியரசர்களாய்க் கடமை யாற்றிய பெரியார்களையும் அவர்களுடைய உத்தியோக கால எல்லையையும் அறிந்து கொள்வது ஈண்டுப் பொருத்தமாகும்.

1.	சேர் கொட்றிங்ரன் E. கறிங்ரன்	...	1802
2.	E. H லஷிங்ரன்	...	1806
3.	சேர் அலெக்ஸ்சாண்டா யோன்ஸ்ரன்	...	1811
4.	சேர் காடிங் கிபாட்	...	1819
5.	சேர் றிச்சாட் ஒட்லி	...	1827
6.	சேர் சார்ள்ஸ் மார்ஷல்	...	1833
7.	சேர் விலியம் றௌள	...	1836
8.	சேர் அன்ரனி ஒலிமன்ற்	...	1838
9.	சேர் விலியம் ஒக்லி கார்	...	1854
10.	சேர் W. காப்பென்ரர் ரூே	...	1856
11.	சேர் எட்வாட் கிறீசி	...	1860
12.	சேர் விலியம் ஹெக்கற்	...	1877
13.	சேர் யோண் பட்பியர்	...	1877
14.	சேர் றிச்சாட் கேலி	...	1879
15.	யாக்கோபுஸ் பீற்றுஸ் வெற்	...	1882
16.	சேர் றூஸ் லொக்காட் பேண்சைப்	...	1883
17.	சேர் யோண் வின்பீல் பொன்சர்	...	1893
18.	சேர் சார்ள்ஸ் பீற்றர் லேயாட்	...	1902
19.	சேர் யோசேப் ரேணர் ஐற்சின்சன்	...	1906
20.	சேர் அல்பிறட் ஜோச்லாசலஸ்	...	1911
21.	சேர் அலெக்சாண்டர் வுட்றென்ரம்	...	1914
22.	சேர் அன்ரம் பேற்றம்	...	1918
23.	சேர் சார்ள்ஸ் ஏணஸ்ற்	...	1925
24.	சேர் ஸ்ரான்லி பிசர்	...	1926
25.	சேர் பிலிப் மக்டனல்ட்	...	1930
26.	சேர் சிட்னி சொலமன் ஆபிரகாம்	...	1937
27.	சேர் யோண் ஹோவாட்	...	1940
28.	சேர் எட்வின் விஜயவர்த்தனே	...	1949

ஆசீர்வாதம் அச்சகம் 32, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

வினாக்கள்

1. 1796 இல் இலங்கையில் அரசியல் மாற்றங்களை விளைவித்த (a) உள்நாட்டு, (b) பிறநாட்டுக் காரணங்களைச் சுருக்கமாக எழுதுக.

2. இலங்கையின் ஒல்லாந்தரின் பிரதேசங்கள் மிகவும் இலகுவாகப் பிரித்தானியர் கைக்கு மாறியது எங்ஙனம் என்பதையும் ஏன் என்பதையும் கூறுக.

3. ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த இலங்கைப் பகுதிகள் ஏன், எவ்வாறு பிரித்தானியர் கைக்குள் வந்தன ?

4. ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுவது அவசியம் எனக் கருதியதேன் ? அவர்கள் இலங்கையைக் கைப்பற்றுவதற்குச் சாதகமான காரணிகள் யாவை ?

5. இரட்டை ஆட்சிக் காலத்தில் சென்னை வர்த்தக சங்கத்தினர் செய்த மாற்றங்களை இலங்கையர் விரும்பாதமைக்குக் காரண மென்ன ? இலங்கையரைத் திருப்திப்படுத்த ஆங்கிலேயர் செய்த திருத்தங்கள் யாவை ?

6. ஆங்கிலேயரின் ஆட்சியின் ஆரம்பத்தில் கிளேகோன் செய்த சேவை எத்தகையது? நாளடைவில் அவரை ஆள்பதி வெறுத்தமைக்குக் காரணமென்ன ?

7. ஆள்பதி நோத் காலத்தில் கரையோர மாகாணங்களில் நிலவிய ஆட்சி முறைபற்றிச் சுருக்கமாக ஆராய்க.

8. பிலாமைத் தலாவையின் நம்பிக்கைத் துரோகத்தையும், ஆள்பதி நோத் அவர்களின் பேதைமையையும் பற்றி என்ன அறிவீர் ?

9. வீதிகளை அமைத்தும், கோட்டைகளைக் கட்டியும், பிரதானிகளின் அதிகாரத்தைக் குறைத்தும் ஆங்கிலேயர் தங்கள் அதிகாரத்தைக் கண்டியில் நிலைநாட்டினார்கள். இக் கூற்றை விளக்குக.

10. இலங்கை ஒரு முடிசார் குடியேற்றமாயமைவதற்கு அலெக்சாண்டர் யோண்ஸ்ரோன் ஆற்றிய சேவையை ஆராய்க.

11. இலங்கையில் கி.பி. 1801–1818 என்ற காலத்தில் கண்டியரைப் பொறுத்தவரையில் பிரித்தானியரின் இராசதந்திரம் தோல்வியுற்றமைக்குரிய காரணங்களைக் கூறுக.

12. (1817–1818) கண்டியப் புரட்சிக்குக் காரணங்களைக் கூறுக அது தோல்வியுற்றமைக்குக் காரணமென்ன ?

13. கண்டியரசுடன் பிரித்தானியர் 1795–1815 வரை கொண்ட பூட்கை எத்தன்மையது?

14. 1817–1818 இல் நடைபெற்ற நாட்டுக் கலகத்தைப்பற்றி ஒரு சுருக்கமான கட்டுரை வரைக. இக்கலகம் ஏற்பட்ட தற்கான காரணத்தை விளக்குக.

15. கண்டி இராச்சியத்தைப் பொறுத்த வரையில் ஆள்பதி நோத் தின் கொள்கை யாது?

16. இராசகாரிய முறை என்றால் என்ன? இம் முறையை அகற்று வதைச் சிங்களமக்கள் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எதிர்த்ததேன்? கோல்புறூக் குழுவினர் இம்முறை அகற்றப் படுதல் வேண்டும் என்று கூறியபோது அவர்கள் தங்கருத்தை மாற்றியதேன்?

17. 1815 ஆம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கை என்பது யாது? அதன் பிரதான உட்பிரிவுகள் யாவை? அவற்றின் முக்கியத்து வத்துக்குக் காரணங்கள் தருக.

18. ''அதிகாரிகளின் அழைப்பை ஏற்று வந்த எம்மைப் பொது சனங்களும் வரவேற்றார்கள்'' என ஆள்பதி பிறவுண்றிக் கண்டி யைப் பிடித்தபோது கூறியவை எவ்வளவு தூரம் உண்மை என்பதை விளக்குக.

19. ''எகிலப்பொலையையும் மொலிகொடையையும் நம்பாதீர்கள்'' எனக் கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கூறியதன் விளைவு என்ன என்பதை ஆராய்க.

20. 1803 இல் கண்டியைக் கைப்பற்றுவதற்கான பிரித்தானியரின் படையெடுப்பு தோல்வியுற்றமைக்கும், 1815 இல் வெற்றி பெற்றமைக்கும் உரிய காரணங்களை எழுதுக.

21. ஆங்கிலேயர் 1815–1818 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத் தில் கரையோரப்பகுதியைப் பரிபாலித்த முறையிலும் கண்டிப் பகுதியைப் பரிபாலித்த முறையிலும் உள்ள வேறுபாடுகள் யாவை?

22. சேர். தோமஸ் மெயிற்லாந்து ஆள்பதியாக இருந்தமைபற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுக.

23. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு ஆள் பதி மெயிற்லாந்து கையாண்ட வழிவகைகள் யாவை?

24. கட்டாய சேவை எனப்படும் இராசகாரியமுறை இலங்கையில் நிலவிய தன்மையையும் அதனை ஆங்கிலேயர் நீக்கிய வழியை யும் விபரிக்க.

25. சேர். ரேபேட் பிறவுண்றிக் ஆள்பதியின் பரிபாலனத்தைப்பற்றி எழுதுக.

26. 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குத் துணையாய் ருந்த காரணங்கள் யாவை?

27. பிரித்தானியர் ஆதிக்கத்தைக் கண்டிப் பகுதியில் நிலைநாட்டுவதற்கு ஆள்பதிகள் பிறவுண்றிக்கும் பாண்ஸ்சும் எடுத்த முயற்சிகளை ஆராய்க.

28. கோல்புறூக்-கெமறன் விசாரணைக் குழுவின் முக்கிய சிபார்சுகள் யாவை? இச்சீர்திருத்தங்கள் எமது நாட்டின் பிற்காலச் சரித்திரத்தை எவ்வாறு மாற்றியமைத்தன?

29. இராசகாரிய அல்லது கட்டாயச் சேவை முறைகளை நீக்க வேண்டுமெனச் சிபார்சு செய்தற்குக் கோல்புறூக் காட்டிய காரணங்கள் யாவை?

30. பிரித்தானியர் கட்டாய ஊழிய முறையை முற்றுகவே நீக்கியதன் பயனாக எத்தகைய பொருளாதார சமூக மாற்றங்கள் ஏற்பட்டன?

31. கோல்புறூக் திருத்தம் பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கு முக்கியமாயமைந்தவாறு எங்ஙனம் என்பதை ஆராய்க.

32. நீதிபரிபாலனம் சம்பந்தமாக கெமறன் செய்த சிபாரிசுகள் யாவை? அவை எவ்வாறு நடைமுறையில் வந்தன?

33. சைமன் காசிச்செட்டியாரை ஆங்கிலேயர் பெரிய விவேகி எனப் பாராட்டினர்கள். அதற்குத் தக்கதாகச் செட்டியார் செய்த சேவை என்ன?

34. கோல்புறூக் அமைத்த இரு சபைகளின் அமைப்பையும் அவற்றின் கடமைகளையும் ஆராய்க.

35. ஐக்கிய இலங்கை ஓராட்சிக்குள் அமைவதற்கான வழிவகைகள் 1815, 1833 ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் வந்தவாற்றை விளக்குக.

36. 1848 ஆம் ஆண்டுக் கலவரங்களை உண்டாக்கிய நாட்டு நிலைமைகள் யாவை? இவற்றின் விளைவுகள் யாவை?

37. 1848 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எதிர்க்கிளர்ச்சியின் காரணிகள், முன்னர் 1817 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சியினும் பார்க்க வேறுனவை. ஆராய்க.

38. ஆள்பதி வைக்கவுண் ரொறிங்ரன் காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் அடிப்படை, உடன் காரணங்கள் யாவை?

39. 1833 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருத்தங்கள் 1848 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலகத்துக்குக் காரணமான சூழ்நிலையை உண்டாக்கியது எவ்வாறெனக் கூறுக.

40. இலங்கையில் 1834—1839 வரையில் அமைக்கப்பட்ட கல்வி முறையையும் அது ஏன் எவ்வாறு அடுத்த ஐம்பதாண்டுக் காலத்தில் மாற்றியமைக்கப்பட்டதென்பதையும் விளக்குக.

41. 1848 ஆம் ஆண்டிலும் 1915 ஆம் ஆண்டிலும் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்த வேண்டிய அளவுக்கு நாட்டில் நிலவிய ஒழுங்கீனம் என்ன ?

42. ஆள்பதி வாட் காலத்தில் திட்டமிட்டுச் செயலாற்றப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவை?

43. சேர். ஹென்றி வாட் ஆள்பதியாக இருந்ததைப்பற்றி எழுதுக.

44. (a) மெயிற்லந்து (b) வாட் என்பவர்கள். பிரித்தானிய பரிபாலனத்தை வலுப்படுத்துவதற்குக் கையாண்ட முறைகளை ஆராய்க.

ஆள்பதி வாட் அவர்களுடைய ஆட்சிக்காலம் பிரித்தானியரின் பரிபாலனக் கொள்கையில் ஒரு திருப்புமையம். இதனைப்பற்றி உமது கருத்து என்ன ?

45. ''சிலோன் லீக்'' எனப்படும் இலங்கையர் சங்கம் நிறுவப்பட்ட வைபவத்தையும் அச்சங்கம் இலங்கையருக்குச் சேவை செய்த விபரத்தையும் விளக்குக.

46. பரிபாலனத்தின் பொருட்டு இலங்கை ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்ட விபரத்தைச் சுருக்கி எழுதுக.

47. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவசமயத்தாரிடையும் பௌத்தரிடையும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சிக்குக் காரணிகள் யாவை? அவற்றின் காரணர்கள் யாவர் ?

48. ஆறுமுகநாவலர் தமிழுக்கும் எங்கள் நாட்டுக்கும் செய்த சேவை என்ன?

49. ஜோச்வால் அல்லது சாள்ஸ் லோறன்ஸ் கிளர்ச்சியாளருக்கு வழி காட்டி என்பதை ஆராய்க.

50. சிறு குறிப்பெழுதுக :-

அனகாரிக தர்மபால
இராசாங்க ஆசிய சங்கம்
மிசனரிமாரின் கல்வித் தொண்டு

51. இலங்கையிற் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டதென்பர். அவ்வாறுயின் அதற்கான மாற்றங்களும் அதனால் ஏற்பட்ட பெறுபேறுகளும் எவை என ஆராய்க.

52. சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் நடுத்தர வகுப்பினரின் தோற்றத்துக்குக் காரணங்கள் கூறுக. இவ்வகுப்பினர் அரசாங்கத்தின் மேல் தமது செல்வாக்கை எவ்வாறு செலுத்தினர்?

53. 1820—1890 இடையில் தெருக்களும் புகைவண்டிப் பாதைகளும் அபிவிருத்தியடைந்த விதத்தைப் புறவரிப் படமொன்றின் உதவியுடன் விபரிக்க.

54. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி எழுபத்தைந்து வருட உள்ளூர்த் தலைமைக்காரரின் அதிகாரங்களையும் கடமைகளையும் விபரிக்க.

55. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்வி வளர்ச்சியின் பிரதான பருவங்களை ஆராய்க.

56 பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்களும் புகைவண்டிப் பாதைகளும் பெருகியதற்கு முக்கிய காரணங்கள் யாவை?

57. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிராமவாசிகளின் சீர்திருத்தத்துக்காக அரசாங்கம் கையாண்ட கொள்கை முறையை ஆராய்க.

58 பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரை நூற்றாண்டில் இலங்கையில் விவசாயிகள் கமச் செய்கையை வளம்படுத்தப் பிரித்தானிய தேசாதிபதிகள் மேற்கொண்ட கொள்கையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

59. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் வியாபார நடவடிக்கைகள் விருத்தியடைந்த விதங்களை விபரிக்க.

60. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் மலைநாட்டுப் பொருளாதாரம் எவ்வகையில் மாற்றமடைந்தது?

61. 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் முக்கியத்துவம் சிறப்பாகப் பிரிட்டிஷாருக்குப் பொருளாதாரத் துறையிலாகும். இதனை ஆராய்க.

62. இலங்கையின் தோட்டச் செய்கை விருத்தியடைந்தமையால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார விளைவுகள் யாவை?

63. கோப்பிச் செய்கை இலங்கைவாழ் மக்களுக்கு நன்மை தந்த விதத்தையும் தீமை பயத்த வண்ணத்தையும் ஆராய்க.

64. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிராம மக்களுக்கு அரசாங்கம் செய்த சேவைகளை விளக்குக.

65. இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தைந்து வருடங்களில் மத்திய வகுப்பினர் அரசியற்றிட்டவமைப்புக்காகத் தொடர்ந்து கிளர்ச்சி செய்தமைக்குக் காரணம் என்ன ?

66. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற் கால் நூற்றாண்டிலும் ஏற்பட்ட பிரதான சமயங்களின் அபிவிருத்திகளைப் பற்றி விபரமாக எழுதுக.

67. புகைவண்டிப்பாதைகள் அல்லது வீதிகள் அமைக்கப்படுவதற்குச் சேனபத்தியம், பொருளாதாரம், பரிபாலனம் உடந்தையாயிருந்தமை எவ்வாறென விளக்குக.

68. இலங்கையில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணமென்ன என்றும் அதன் விளைவு என்ன எனவும் எழுதுக.

69. ஆள்பதி மக்கலம் காலத்தில் ஏற்பட்ட அரசியல் திருத்தங்கள் யாவை? அவற்றுக்காக இலங்கையர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியை ஆராய்க.

70. இலங்கையில் 1890 ஆம் ஆண்டுக்கும் 1913 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பரிபாலன அமைப்புக்கள் ஏன் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டன என விளக்குக.

71. ஆள்பதி மனிங் செய்த முதற்றிருத்தத்தை ஒருவரும் விரும்பவில்லை. அப்படியாயின் அதனை எல்லோரும் ஏற்றுக்கொண்டதேன்? அதில் இருந்த குறை நிறைகள் எவை ?

72. சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கித் தருக. அன்னார் இலங்கை அரசியல் வளர்ச்சியில் ஆற்றிய முக்கிய பங்கு என்ன ?

73. மனிங் திருத்தத்துக்கு மாறுக மக்கள் கூறிய குறைகள் யாவை? அவை 1924 ஆம் ஆண்டுத் திருத்தத்தில் எவ்வளவுக்கு நிறைவு செய்யப்பட்டன?

74. மனிங்-டிவன்சயர் அரசியலமைப்பின் பிரதான அம்சங்கள் யாவை? அது ஏன் பொருத்தமற்றதாகக் கருதப்பட்டது?

75. மனிங்-டிவன்சயர் திருத்தத்தின் வண்ணம் (1924) ஆள்பதியின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதனை ஆராய்க.

76. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? அவை அரசியல் வளர்ச்சிக்கு அநுகூலமாக இருந்தனவா?

77 இலங்கையில் 1890 தொடக்கம் 1930 வரை இலங்கையர் அரசியற்றிருத்தங் கோரியமைக்கு ஆதரவாயிருந்த சமூக பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிடுக.

78. மனிங் திருத்தத்துக்கும் டொனமூர் திருத்தத்துக்கும் உள்ள வேறுபாட்டைக் காரணங் கூறி விளக்குக.

79. இலங்கை அரசியற் சபைகளில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவமாக மாற்றியமைக்கப் படநேர்ந்த காரணங்களையும் வளர்ச்சிக்கிரமத்தையும் ஆராய்க

80. டொனமூர் திருத்த சபையினர் செய்த திருத்தங்கள், மொன்ராகு-செப்ஸ்போட் திருத்தங்களோடு எவ்வகையில் ஒற்றுமை வேற்றுமைப்படுகின்றன என்பதை ஆராய்க.

81. இலங்கையில் 1832—1930 இடையில் உள்ளூர் ஆட்சித் தாபனங்களைப்பற்றி என்ன அறிவீர்?

82. டொனமூர் குழுவினர் சர்வசன வாக்குரிமை வழங்கியதேன்? அதனால் சுதந்திரம் பெறுவதற்குச் சிறிது முன்னர் ஏற்பட்ட பலன்கள் எவை?

83. டொனமூர் திருத்தக் குழுவினர் சட்டசபைக்குச் சட்ட நிறை வேற்று சபைக்குமிடையில் நிலவிய முரண்பாட்டைத் தீர்த்து வைக்கச் செய்த வழியென்ன?

84. டொனமூர் குழுவினர் 1924 ஆம் ஆண்டுத் திருத்தத்தில் கண்ட பெரிய பிழைகள் யாவை? அவற்றை நீக்குவதற்கு அவர்கள் தகவுரை கூறிய வழிகள் யாவை?

85. டொனமூர் குழுவினர் வாக்குரிமை சம்பந்தமாகவும், பிரதிநிதித்துவம் சம்பந்தமாகவும் தகவுரை கூறியவற்றை ஆராய்ந்து குறிப்பிடுக.

86. ''டொனமூர் திருத்தம் தகுதி வாய்ந்த ஒரு வெற்றி. அது தகுதியற்ற தோல்வியல்ல'' இதனைப்பற்றி என்ன சொல்லுவீர்?

87. டொனமூர் குழுவினர் இரண்டாவது சபையொன்றை நிறுவுவதற்குத் தகவுரை கூறுதமை ஏன்?

88. டொனமூர் விசாரணைச் சபையினர் நிருவாக சபை முறைக்கு ஏன் ஆதரவு கொடுத்தனர் ?

89. சுதந்திரத்திற்கு முன் வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்ததன் பயனாக ஏற்பட்ட முக்கியமான பொருளாதார சமூக மாற்றங்கள் யாவை ?

90. பெரும்பான்மையினராய சிங்களவருடன் சிறுபான்மையினர் கொண்ட தொடர்பு முறையே அரசியலமைப்புகளை ஆக்குவதற்குப் பிரச்சினையாயிருந்தது என்பதை விளக்குக.

91. சேர். பொன். அருணாசலம் அல்லது சேர். பாரன் யயத்திலக அல்லது திரு. டொன் ஸ்ரீபன் சேனநாயக அவர்களுடைய வாழ்க்கைச் சுருக்கத்தை எழுதி அதில் வரும் பிரதான அம்சங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

92. எமது நாட்டில் சரித்திரத்தில் பின்வரும் ஆண்டுகளில் எவையேனும் நான்கின் முக்கியத்துவத்தை விளக்கிச் சிறு குறிப்புக்கள் எழுதுக : *1821, 1848, 1875, 1910, 1915, 1924, 1931.*

93. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கின் சரித்திர முக்கியத்துவத்தைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதுக.

a. நாயக்க மன்னருட் சிறந்தவன்
b. கண்டிக் கலகம் *(1817-1818)*
c. இலங்கைத்தேசிய காங்கிரஸ்
d. சமவாய சம்பந்த மகாநாடு
e. இராசகாரியமுறை

94. டொனமூர் குழுவினருக்கு முன்னர் கோரப்பட்ட அரசியற் றிட்டங்கள் யாவை ? கோருதற்குரிய காரணங்களை ஆராய்க டொனமூர்க் குழுவினருடைய சிபார்சுகள் தேவையைத் திருப்திப்படுத்தியனவா ?

95. டொனமூர் அரசியற் சட்டம் ஒரு பூரண சுயாட்சியிலும் பார்க்க எவ்வெவ் வழிகளிற் குறைபாடுடையதாயிருந்தது என்பதை எடுத்துக்காட்டுக.

96. இலங்கையில் இனவாரியான பிரதிநிதித்துவத்தின் வரலாற்றைப் படிப்படியாக எழுதுக. அத்தகைய பிரதிநித்துவத்தை நீக்கும் யோசனைக்குச் சார்பாக டொனமூர் குழுவினர் காட்டிய காரணங்கள் எவை ?

97. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினது சரித்திர முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதுக.

a. இலங்கைச் சிவில் சேவை
b. கொழும்புத்துறைமுகம்

c. டொனமூர் அரசியற்றிட்டத்தில் அரசவுத்தியோகத்தர்
d. சேர். பொன்னம்பலம் இராமநாதன்

98. டொனமூர் ஆணைக்குழுவினர் சர்வசன வாக்குரிமை வழங்கப் பட வேண்டும் என எக்காரணங்களுக்காகச் சிபார்சு செய் தனர்? அவர்கள் எதிர்பார்த்தது எவ்வளவு தூரம் பூர்த்தி யாயது?

99. நிர்வாகசபை அமைப்புமுறை தோல்வியுற்றதெனக் கருதிய மைக்குரிய காரணமென்ன?

100. 1931 ஆம் ஆண்டின் அரசியற் சீர்திருத்தங்கள் 1947 ஆம் ஆண்டு அரசியற் சீர்திருத்தங்களிலிருந்து எவ்வாறு வித்தியாசப் படுகின்றன?

101. இலங்கைச் சரித்திரத்தில் பின்வரும் ஆண்டுகளில் எவையே னும் நான்கின் முக்கியத்துவத்தைக் குறிப்பெழுதி விளக்குக:
1802, 1810, 1853, 1873, 1912, 1919, 1948.

102. இலங்கையில் 1947 ஆம் ஆண்டு வரையில் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை விபரித்து எழுதுக.

103. இருபதாம் நூற்றாண்டில் இலங்கை படிப்படியாகச் சுதந்திரம் பெற்றவகை எவ்விதமென விளக்குக.

104. 1948 ஆம் ஆண்டுவரை இலங்கையின் சட்டசபைகளில் விளங் கிய சமுதாயவாரிப் பிரதிநிதித்துவத்தின் வரலாற்றை எழுதுக.

105. தேர்தல் மூலம் பிரதிநிதிகள் அரச சபையில் அங்கம் வகிக்கும் அளவில் பிரதிநிதித்துவ முறை வளர்ந்த படிக்கிரமத்தை ஆராய்க.

106. இலங்கையின் தலைநகராகக் கொழும்பு அமைந்துள்ளதைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

———

கலைச்சொற்குறுதி

அரசகரும மொழித் தீணைக்கள வெளியீடு

அகக்குடியேற்றம்-Immigration
அச்சுலகு-The Press.
அபேட்சகர் Candidate
அடங்காப்பிடாரி-Outlaw
அரசு-State
அரசாங்கம்-Government
அரசுச்செய்தி-Despatch
அரியணைப்பேச்சு-Throne Speech
அளவையாளர் நாயகம்-Surveyor General
அரச தூதுவர்-Envoy
அழிவழக்கு-Criminal Case
அமைச்சு-Ministry
அடக்குமுறை-Repression
அறிக்கை-Notice
அறிவித்தல்-Notification
அலுவலகம்-Office
அனுமதி-Allowance
ஆணைக்குழு-Commission
ஆணையாளர்-Commissioner
ஆள்பதி-Governor
ஆள்பதிநாயகம்-Governor General
ஆள் எல்லை-Jurisdiction
ஆஞரிமைக்கட்டளை-Writ of Hebeas Corpus
ஆள்புரம்-Territory
ஆணிலப்பதம்-Dominion Status
இடவர்-Leftest
இராசதந்திரி-Diplomate
இணக்கசபை-Consiliation Board
இறைசேரி-Treasury
இனவாதம்-Communalism
இடைவகுப்பினர்-Middle class
இகலாட்டு-Controversy
இரட்டையாட்சி-Dyarchy
இயக்கம்-Movement
இலட்சியபுரி இராமராட்சி--Utopia
இலச்சினை-Insignia
இறை-Sovereign
இறைமை-Sovereignity
எதிர்விதித்தல்-Over rule
எழுதுவினையர்-Clerks
எழுச்சி-Uprising
ஒன்றியொதுக்கல்-Boycott
ஒரினத்தன்மை-Homogeneity
கட்டழைப்பு-Summons
கட்டளை-Warrant
கட்டளைச்சட்டம்-Ordinance
கழகத்துப்பணி-Order in Council
கணையம்-Mace
காரணிகள்-Factors
கிளர்ச்சி-Agitation
கிளர்ச்சியாளர்-Insurgent
குடியேற்றம்-Colony
குடியேற்றமந்திரியார்-Secretary of state for Colonies
குடி-Citizen
குடியியற் சேவை-Civil Service
குடியாட்சி-Democracy
குடியரசு-Repuplic
குடியியற் பாலனம்-Civil administration
குடிப்போர்-Cvil War
குலைவு-Dissolution
கைவசப் புரம்-Pocket Borough
கோமகன்-Duke
கோமறைக்கழகம்-Privy Council
சட்டத்துறை-Legislature

சட்டவாக்கம்-Legislation
சட்டவியல்-Jurisprudence
சட்டவரைவாளர்-Legal Draftsman
சட்டஅறிஞர் நாயகம் Solicitor General
சட்டத்துறைநாயகம் Attorny-General
சட்டசபை-Legislative Council
சட்ட நிறைவேற்று சபை Executive Council
சட்டக்கோவை-Code Legal
சட்டவாட்சி-Rule of Law
சட்டவனுமதி-Sanction
சம்மேளனம் Federation Union
சமவாய சம்பந்தயாநாடு Convention
சமவுடைமை Socialism
சர்வதேசியம்-Internationalism
சான்றுபகர்தல்-Certification
சில்லோராட்சி-Oligarchy
சின்னம்-Symbol
சீர்திருத்தவாதி Reformist
சுங்கத்தலைவர்-Custom Collector
சுதந்திரம் Liberty
தண்டச்சட்டம் Penal Law
தனியுடைமை Private Ownership
தன்னாட்சி-Self Government
தனியாட்சி-Autocracy
தாராண்மை Liberalism
திட்டமிடல்-Planning
திணைக்களம்-Department
தீவிரவாதி-Extremist
துரோகி-Traitor
துணைநீதிபதி-Justice Puisne
தூதராலயம்-Embassy
தெரிகுழு-Select Committee
தொறுபொருள் Indemnity
நடுநிலைமை-Neutrality
நடுவகுப்பு-Middle class
நடைமுறை-Procedure
நாட்டினம்-Nationality
நாட்டினவுணர்ச்சி-Nationalism
நாட்டுரிமையாக்கல் -Nationalization
நிபுணன் Expert
நினைவேடு Memorandum
நியமனம்-Nomination
நிறைவேற்றம் Executive
நிலையற்குழு-Standing Committee
நீதித்துறை Judiciary
நீலவேடு Blue Book
பகிரங்கசேவை-Public service
பணிக்குழுவாட்சி Bureaucracy
பழைமைபேண் Conservertive
பரதேச-Foreign
பரன்-Baron
படைப்பாலனம்-Military rule
படைமன்று-Court martial
பகுத்தறிவாளர்-Rationalist
பதிவாளர்-Registrar
பதிலரையன்-Viceroy
பரநெறி, புறநெறி-Heresy
பாதகம்-Crime
பாழ்புரம்-Rotter Borough
பாலனம்-Administration
பிரகடனம்-Declaration
பிரச்சினை-Problem
பிரசித்தம்-Proclamation
பிரமாணம் -Regulation Principle
பிரதிநிதி-Representative
பிரதிநிளர்-Deligate
பிரதம செயலாளர் -Chief Secretary
பிரேரணை-Motion
பிரேரித்தல்-Proposal
பிறக்கீடுசெய்தல்-Withdraw

புரட்சி–Revolution
புறக்குடியேற்றம்–Emigration
பேரரசு–Empire
பேரரசுவாதம்–Imperialism
பேராளர்–Deligate
பொதுமன்னிப்பு –General Amnesty
பொதுநலவாயம் –Commonwealth The
பொதுமக்கள்சபை –House of Commons
பொறுப்பாட்சி –Responsible Government
பொதுக்கட்டளை –General Warrant
போலியுரித்தாளி–Pretender
மந்திரம்–Cabinet
மந்திரிமார் சபை –Board of Ministers
மன்றுபடுத்தல்–Promulgate
மனு–Petition
மாற்றுத்தரவு–Revoke
மிதவாதிகள்–Moderates
மீதிவலு–Residuary Power
முழுவுரிமை–Monopoly
முன்மொழிவு–Proposal
மேற்சபை–Senate upper house
மேன்முறையீட்டுமன்று –Court of Appeal
வல்லாளன்–Despot
வல்லாட்சி–Despotism
வமிசம்–Dynasty
வாசகர்–Speaker
விழுமியோர்–Nobility
விருது–Honour
விஞ்ஞாபனம்–Memorial
விசாரணை–Inquiry
விவாதம்–Debate
வீட்டாணை–Veto Power
வீழ்த்தல்–Overthrow
வெளிப்பகர்ப்பு–Manifests
வெறுங்காணி–Waste Lands
வேள்–Earl
வேத்தியல் ஆணைக்குழு –Royal Commission
வைகல்–Session

எடுத்தாண்ட ஆங்கில நூல்கள்

1. Ceylon — S A Pakeman
2. Ceylon — A. J. Fresidder
3. Ceylon — Henry Marshall
4. Story of Ceylon — Ludowyke
5. Ceylon Under British Occupation — Dr. Colvin R. de Silva
6. Ceylon Under the British — G. C. Mendis
7. Ceylon Under the Western Rule — L. H Perera
8. Ceylon Under British Rule — A. Mills
9. Ceylon Today and Yesterday — Dr. Mendis
10. Ceylon a Divided Nation — Farmer
11. Ceylon and Her Citizens — I. D. S Weerawardena
12. Government and Politics in Ceylon — I D S. Weerawardena
13. An Introduction to Civics and Government — Dr A.J. Wilson
14. Government and Economics — Dr. A. J. Wilson
15. Path to Independence — Sir. Charles Jeffries
16. British Governors of Ceylon — Hulugalle
17. Among Those Present — D. B Dhanapala
18. Life and Times of Wejewardena — Hulugalle
19. Recollections — Sir. Wijakoon
20. The Life of Lorenz — B. R. Blaze
21. Freedom what Then — Harindra Corea
22. Legislatures of Ceylon — Namasivayam
23. Parliamentary Government in Ceylon — Namasivayam
24. Hnndred Days in Ceylon — Armand de Souza

25. Our Legislature —J. R Weinman
26. Sir Alexander Johnston's Papers —Dr. H W. Thambiah Q.C.
27. Commonwealth in Asia —Sir Ivor Jennings
28. Ceylon and Kotelawela —Wickramaratne
29 Three Prime Ministers of Ceylon —J. L. Fernando
30. Revolt in the Temple
31. National Congress Reports
32. Donoumore Report
33. Soulbury Report
34. Administrative Reports
35 Historical Journals
36. Social Studies Journals
37. Young Socialist Journals
38. New Lanka Journals
39. Hansard Legislature Council
40. Hansard State Council
41 Hansard Parliament
42. Towards a new Era
43. Constitution and Public Finance
44. Ceylon Year Book.

